# TAMIL CHRISTIAN DEVOTIONALS

## Jesus Soldier

June 2025



www.jesussoldierindia.com என்ற

தமிழ் கிறிஸ்தவ இணையதளத்தில்

வெளியிடப்பட்ட தியானங்கள் தொகுத்து

இப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளது

ஜுன் 2025

# பொருளடக்கம்

1. கர்த்தருடைய வசனம்
2. இழப்புக்களின் மத்தியில்
3. தேவ பிரசன்னம்
4. கர்த்தருடைய கரம்
5. கர்த்தருடைய வழிகள்
6. தேவனை சார்ந்திருத்தல்
7. கிறிஸ்துவைப் போல
8. தேவ கிருபை
9. சோர்ந்து போகிறவனுக்கு
10. காலங்கள்
11. எருசலேம் பயணம்
12. மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும்
13. நல்ல மேய்ப்பன்
14. உன்னதப்பாட்டின் உன்னதங்கள்
15. வாழ்க்கை படகு
16. சீஷத்துவம்
17. தேவனுடைய மனுஷன்
18. தேவனுடைய மனுஷன் (பாகம் -2)
19. தேவனுடைய மனுஷன் (பாகம் -3)
20. கிறிஸ்துவின் நற்கந்தம்
21. பரிசுத்தம்
22. தேவனுக்காக காத்திருத்தல்
23. கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்
24. தேவ ஆளுகை
25. தேவ பெலன்
26. தேவன் - சிருஷ்டிகர்த்தர்
27. அவரை அறிகிற அறிவினாலே
28. தேவ அடைக்கலம்
29. கபடற்றவர்கள்
30. கர்த்தர்மேல் நம்பிக்கை
31. காயங் கட்டுகிற தேவன்
32. சூழ்நிலைகலை மாற்றுக்கிற தேவன்
33. கலங்கின நேரங்களில்
34. பயப்படாதே
35. கனிகொடுத்தல்
36. மனுஷருள்ளத்திலிருப்பதை
37. கூடாத காரியம்

38. நன்றியறிதல்
39. ஆவியோடும், உண்மையோடும்
40. பெலவீனத்திலே
41. துர் உபதேசங்கள்
42. என்னத்தைக் கேட்கிறார்
43. உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும்
44. என்னை நினைவுகூரும்படி
45. அதிகாய் பிராயசப்பட்டேன்
46. மறவாதே
47. காணாதிருந்தும்
48. காலங்கள் கடந்து போனாலும்
49. நல்ல போர்ச்சேவகன்
50. அவாந்தர வெளி
51. அவரே இராஜா
52. துன்ப நேரத்தில்
53. உலகத்தாரல்ல
54. தேவனின் தெரிந்தெடுப்பு
55. தலைவர்களை உருவாக்கும் தலைவர்கள்
56. சூனேமியாள் (பாகம் - 1)
57. சூனேமியாள் (பாகம் - 2)
58. குயவன்
59. காரியம் மாறுதலாய் முடியும்
60. எல்லாவற்றையும் விட்டு
61. பேதுரு
62. பாலகன் பிறந்தார்
63. சகலமும் நன்மைக்கே
64. கர்த்தரின் ஆசிர்வாதம்
65. கர்த்தரின் வழி
66. கர்த்தரால் வரும்
67. அவரே தீர்வு
68. மெய்யான காவலாளர்
69. இவர் யாரோ
70. வழுவாதபடி
71. ஓய்ந்திருந்தார்
72. ஆதாரம்
73. மேடு பள்ளங்கள்
74. நிலையில்லா வாழ்வு
75. கொஞ்சத்திலே
76. பரலோகத்திலே
77. இமைப்பொழுதிலே
78. பெத்லகேம் செல்வோம்

79. இருளிலிருந்து வெளிச்சத்திற்கு
80. அங்கிகரிக்கப்படுதல்
81. கொரோனா காலத்தில்
82. திருச்சபை ஒழுங்கு
83. இருதயத்தின் சஞ்சலம்
84. ஜீவனுள்ள தேவன்
85. நினைக்கிறதற்கும் அதிகமாய்
86. ஐசுவரியம்
87. விசுவாசத்தின் அடையாளங்கள்
88. மேன்மையில் இருந்து
89. பாரமற்ற இருதயம்
90. பரத்திலிருந்து கொடுக்கப்படாவிட்டால்
91. தேவ வார்த்தை
92. எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்
93. மறைவானது ஒன்றுமில்லை
94. சகலமும் நன்மைக்கு ஏதுவாக
95. உண்மையுள்ளவனென்றெண்ணி
96. உமது கரத்திலே வாங்கி
97. கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்படவேண்டும்
98. ஆவியை விடாதிருக்கிறதற்கு
99. என்னைக் காண்கிற தேவன்
100. உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் [பாகம் 2]

101. நல்ல பங்கு
102. சீர்ப்படுத்துவார்
103. தேவ அன்பு
104. பொல்லாத இருதயம்
105. உத்தம் இருதயம்
106. பேதுருவின் மாமி
107. விடையறியா காலங்கள்
108. சத்துருவின் பிடியிலிருந்து
109. பாவ மன்னிப்பின் மேன்மை
110. காணிக்கை
111. ரூத்தின் மாமியாகிய ராகாப்
112. அப்போஸ்தலனாகிய பவுல்
113. நன்மைக்கு ஞானிகள்
114. எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும்
115. சரீரமும், ஆவியும்
116. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 1 (லோத்து)

117. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 2 (சவுல்)
118. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 3 (சவுல் தொடர்ச்சி)
119. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 4 (யூதாஸ்காரியோத்து)
120. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 5 (சிம்சோன்)
121. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 6 (சிம்சோன் தொடர்ச்சி)
122. காலடி தெரியாமல் போனாலும் கர்த்தர் என் முன்னே உண்டு
123. கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 1 - சகேயு
124. கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 2 சிறைச்சாலைக்காரன்
125. கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 3 - சமாரிய ஸ்திரீ
126. கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 4 - மனந்திரும்பின கள்ளன்
127. ஏதாகிலும் செய்யக்கூடுமானால்
128. தேவனிடத்தில் ஐசுவரியம்
129. நற்கிரியைகளைக் கண்டு
130. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 1
131. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 2
132. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 3
133. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 4
134. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 5
135. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 6
136. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 7
137. இழந்துபோனதைத் தேடவும்
138. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை

# 1. கர்த்தருடைய வசனம்



ஆதியிலே கர்த்தருடைய வசனம் (வார்த்தை) சகலத்தையையும் சிருஷ்டித்தது. அந்த வார்த்தை நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகியோருடன் உறவாடியது. வாக்குதத்தங்களை வாக்குபண்ணியது. மோசே, யோசுவா ஆகியோரை வாக்குதத்தங்களை நோக்கி நடத்தியது. சாமுவேல், தாவிது ஆகியோரை ஆளுகை செய்து ஆள வைத்தது. ஏசாயா, எசேக்கியேல் ஆகியோருக்கு வெளிப்பட்டது. ஆனால், அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணுகிறார் **(யோவான் 1:14)**.

ஏனெனில், அவர்கள் நம்மை அல்லாமல் பூரணராகாதபடி விசேஷித்த நன்மையானதொன்றைத் (வார்த்தை மாம்சமாகி) தேவன் நமக்காக முன்னதாக நயமித்திருந்தார் **(எபிரேயர் 11:40)**. ஆதலால், நாம் அவருக்குள் இருக்கிறோம், பிழைக்கிறோம், அசைகிறோம். அவராலன்றி, நம்மால் ஒன்றும் செய்ய கூடாது. பழைய ஏற்பாட்டில் தேவன் தமது ஆளுகையை மனிதர்கள் மத்தியில் வெளிப்படுத்தினார், ஆனால் புதிய ஏற்பாட்டில், அவர் நமக்குள்ளே ஆளுகை செய்கிறார். அந்த வார்த்தை (வசனம்) நறுமணமாய் நம்மில் இருந்து மற்றவருக்கும் வீச வேண்டும். அல்லேலுயா! ஆமென்.

## 2. இழப்புகளின் மத்தியில்



இழப்புகள் என்பது நம்மால் தாங்கிக்கொள்ள முடியாத ஒன்றாகும். அதிலும், யோபுவை போல ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு காரியத்திலும் இழப்புக்கள் ஏற்படும் பொழுதும், அடி மேல் அடி விழும் பொழுதும் நாம் நிலைகொலைந்து போகிறோம். யோபுவும், அப்படியே நிலைகொலைந்தே சாம்பலில் உட்கார்ந்தார் (யோபு 2 :8). அவருடைய பல கேள்விகள் எனக்கு ஏன் இந்த துன்பம் என்று கேட்பதாகவே இருந்தது. நாமும் அப்படியே பல வேளைகளில் தேவனிடத்தில் கேட்கிறோம்.

ஆனால், யோபுவுக்கு எப்படி அதற்கு பதில் வரவில்லையோ, நமக்கும் தேவன் அநேக நேரங்களில் ஏன் என்ற நமது கேள்விக்கு பதில் அளிப்பதில்லை. ஏனெனில், திரை மறைவில் தேவனுக்கும், சாத்தானுக்கும் இடையே நடந்ததை யோபு ஒருபோதும் அறியவில்லை. தேவனும் அதை அவருக்கு அறிவிக்கவில்லை.

ஆனால், வேளை வந்தபொழுது தேவன் தமது வல்லமையை யோபுவின் வாழ்க்கையில் வெளிப்படுத்தினார். சாத்தான் யோபுவின் வாழ்க்கையில் எல்லாவற்றையும் ஒரே நாளில் எடுத்துக்கொண்டான். ஆனால் தேவன் அவை ஒவ்வொன்றையும் அவருக்கு இரட்டதனையாய் திருப்பித்தந்தார். ஏனெனில், யோபுவுக்கு

ஒரு நிச்சயம் இருந்தது, அது "அவர் என்னை கொன்றுபோட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாய் இருப்பேன்" (யோபு 13 :15) என்பதே. ஆம், அவர் வாழ்க்கையீல் இழக்க அவர் உயீரை தவிர வேறெதுவும் இல்லை, அவர், மனைவிகூட "தேவனைத் தூஷித்து ஜிவனை விடும்" (யோபு 2 :9) என்று கூறிவிட்டாள். ஆனால், அந்த சூழ்நிலையில் மத்தியிலும் அவர் தமது நம்பிக்கையை விடவில்லை. ஏனெனில், "என் மிட்பர் உயிரோடிருக்கிறார்" (யோபு 19 :25) என்பதை அவர் அறிந்திருந்தார். அதுமாத்திரமல்ல, நித்திய வாழ்வைக்குறித்தும் அவருக்கு நம்பிக்கை இருந்தது (யோபு 19 :26,27).

அதனால்தான், தான் இவ்வுலகத்தில் எல்லாவற்றையும் இழந்த பின்பும், தான் நத்திய வாழ்வை இழந்து போகமாட்டேன் என்ற நம்பிக்கை அவருக்குள் இருந்தது. எனவே, தேவன் இவ்வுலகத்திற்குரியவைகளையல்ல, மேலானவைகளையே தேடின யோபுவிற்கு, ஆவிக்குரிய ஆசிர்வாதங்களையும், பூமிக்குரிய நன்மைகளையும் அளவில்லாமல் அளித்தார். இறுதியில் யோபு ஒன்றையும் இழந்து போகவில்லை, தோற்றுபோனவன் பிசாசே. எனவே, நாமும் தேவனை மேலானவைகளுக்காக தேடுவோம். அப்பொழுது நமக்கு சகலமும், சம்பூரணமாய் கூடக் கொடுக்கப்படும்.நாம் ஆசிர்வதிக்கப்பட்டவர்களாய் மட்டுமல்ல, பிறருக்கு ஆசிர்வாதமாயும் இருப்போம்.

இவற்றை நான் வேத வசன போதனையாக மட்டுமல்ல, வாழ்வில் அனுபவிக்கிறவனாகவே எழுதுகிறேன். எனவே, கிறிஸ்துவுக்குள்ளான சகோதர,
சகோதிரிகளே நீங்களும் இப்படியே கர்த்தருக்குள் நிலைதிருப்பீர்களாக. கிறிஸ்துவை அறியாதவர்களாய், இப்படிபட்ட நம்பிக்கை இல்லாமல் வாழ்வில் தவித்துகொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவை அறிவிப்போம். அவர்களையும் துன்ப இருளில் இருந்து விடுதலை செய்வோம். மாரநாதா! அல்லேலுயா, ஆமென்.

# 3. தேவ பிரசன்னம்



இவ்வுலகத்தில் மனிதர்கள் எத்தனையோ காரியங்களையும், பொருள்களையும், மனிதர்களையும் நோக்கி ஓடுகிறார்கள். பிற மனிதர்களுடைய அன்பிற்காகவும், ஐக்கியத்திற்காகவும், மேலும் பல பொருள்களை அடைவதற்காகவும் பிரயாசபடுகின்றனர். ஏனெனில், அவைகள் தங்கள் வாழ்க்கையில் தங்களோடு இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். இவையாவும் நல்லதே. ஆ னால், ஒரு மனித வாழ்க்கை பயணத்திற்கு இன்றியமையாதது **தேவ பிரசன்னமேயாகும்**.

இவ்வுலகில் நாம் விரும்புவது எதுவும் நம்மிடத்தில் இருந்தாலும், இல்லாவிட்டலும் தேவ பிரசன்னம் நமக்கு அவசியம் தேவை. ஏனெனில், தேவ பிரசன்னமே நாம் வாழும் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தை கொடுக்கிறது. தேவ பிரசன்னமே, தேவ சத்தத்தை அனுதினமும் கேட்பதற்க்கும், தேவ உறவை ஒவ்வொரு நொடிபொழுதும் உணர்வதற்க்கும் நமக்கு வழிசெய்கிறது.

ஆதாம், ஏவாளோடு தேவ பிரசன்னம் பரிபூரணமாய், பிரத்தியட்சமாய் இருந்தது. ஆனால், அவர்களோ அதை இழந்து

போனார்கள். அப்போஸ்தலர்கள் தேவ பிரசன்னத்தால் நிரம்பி இருந்தனர். ஏனெனில், கிறிஸ்து அவர்களோடு வாழ்ந்தார், அனுதினமும் அவர்களோடு பேசினார், உண்டார், உறங்கினார், பல காரியங்களை அவர்களுக்கு கற்றுக்கொடுத்தார். பூமியில், அதுவும் மாம்ச சரீரத்தில் இருக்கும்பொழுது, தேவனோடு இவ்வளவு ஐக்கியமாய் இருப்பது அவர்களுக்கு கிடைத்த பாக்கியம்.

ஆனால் கிறிஸ்து பரமேற வேண்டிய வேளை வந்தபொழுதோ, பரிசுத்த ஆவியானவரின் முலமாய் தமது பிரசன்னத்தை அவர்களுக்கு வெளிபடுத்தினார். பெந்தெகொஸ்தே நாளில் சிஷர்கள் ஆவியை பெற்றபொழுது, அவர்கள் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு தங்களோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையை வல்லமையாய் வெளிபடுத்தினர். " வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்" (அப் 3:6) என்று அப்.பேதுருவால் தைரியமாய் கூற முடிந்தது.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதிரிகளே கிறிஸ்துவின் பிரசன்னத்தை ஒவ்வொரு நொடிபொழுதும் நம் வாழ்வில் காண வாஞ்சிப்போமாக. ஆண்டவரின் பிரசன்னத்தோடு நம் வாழ்க்கையில் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கும்பொழுது, நம் வாழ்வில் நாம் ஒருபோதும் இடறி விழமாட்டோம். பிற மனிதர்களின் ஐக்கியத்தை காட்டிலும், வாழ்வில் நாம் பெற்றிருக்கும் அல்லது பெற வாஞ்சிக்கும் எந்த பொருட்கள் தரும் சந்தோஷத்தை காட்டிலும், தேவ பிரசன்னம் நமக்கு அளவில்லாத சமாதானத்தையும், சந்தோஷத்தையும் எப்பொழுதும் தரும்.

கிறிஸ்துவின் வருகையில் நாம் வாஞ்சிப்பதும் இந்த தேவ பிரசன்னத்தையே. ஆம், **கிறிஸ்து வரப்போவது நம்மை அவரோடு எப்பொழுதும் வைத்துக்கொள்ளவே**. அதிலும், மரணத்தை காணாமல் மகிமை அடைந்த சரீரத்தோடு, அவரண்டை சேர்வது மேலான பாக்கியம். அப்படிபட்ட மேலான பாக்கியத்தை பெற, நாம் அப்.பவுலை போல எப்பொழுதும் தேவ பிரசன்னத்தால் நிரம்பி இருக்க வேண்டும். அப்.பவுல் கைது செய்யப்பட்டு பலவித துன்பத்திற்குள்ளாக சென்ற வேளையிலும் அவரோடு இருந்த தேவ பிரசன்னம் சொல்லிமுடியாது. பின்வரும் வசனத்தை தியானித்து பாருங்கள்.

"மிகுந்த கலகம் உண்டானபோது, பவுல் அவர்களால் பீறுண்டுபோவானென்று சேனாபதி பயந்து, போர்ச்சேவகர் போய், அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டுபோகும்படி கட்டளையிட்டான். **அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று** : பவுலே, திடன் கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்தது போல ரோமாவிலும் சாட்சிகொடுக்க வேண்டும் என்றார்" (அப் 23: 10,11).

பவுல் ஒருபக்கம் மரணபோராட்டத்தில் இருந்தார், கிறிஸ்துவை போல பவுலையும் கொலை செய்து விடவேண்டும் என யூதர்கள் எண்ணினர் (அப் 23: 12). அப்படிபட்ட சூழ்நிலையின் மத்தியிலும், கர்த்தராகிய இயேசு, அண்ட சராசரங்களையும் தமது கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கிறவர், சகல ஜீவராசிகளுக்கும் ஜீவனை கொடுத்து வாழ வைத்து கொண்டிருப்பவர், **அந்த ஒரு மனிதனின் (பவுல்) அருகே வந்து நின்று** அவனோடு பேசுவதே, தேவ பிரசன்னத்தின் மகிமையும் மகத்துவமாகும். ஆம், பவுலுக்கு ஆண்டவர் ஏதோ உறக்கத்தில் தரிசனம் தரவில்லை, தமது வார்த்தையை மட்டும் அனுப்பவில்லை. அதிலும் மேலாக, பவுல் அருகே வந்து நின்று ஒரு தாயைப் போல அவரை தேற்றுகிறார், திடப்படுத்துகிறார்.

இப்படிபட்ட அனுபவமே நமக்கும் தேவை. தேவனோடு அவருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவரோடு நித்திய காலமும் இருப்பது போலவே, **இவ்வுலகில் வாழ்கின்ற இந்த நாட்களிலேயே, பவுலை போல நாமும் தேவ பிரசன்னத்தை அனுபவிப்போமானால், அதுவே இவ்வுலகில் நாம் பெறும் மேலான பாக்கியமாகும்**. கர்த்தர்தாமே அப்படிப்பட்ட கிருபையை நம் ஒவ்வொருவருக்கும் அருள்வாராக. அல்லேலுயா, ஆமென்.

## 4. கர்த்தருடைய கரம்



**கர்த்தருடைய கரம்** இஸ்ரவேல் மக்களை எகிப்தில் இருந்து கானானுக்கு நடத்தி சென்றது. கர்த்தருடைய கரத்தினால் நடத்தபடுவது என்பது தேவனுடைய முழு ஆளுகைக்குள் நாம் இருப்பதை குறிக்கிறது. ஆம், கர்த்தருடைய கரத்தினால் நடத்தப்படும் பொழுது நமது சுயசித்தத்திற்கு அங்கு இடமில்லை. நம்முடைய வழிகளுக்கும், எண்ணங்களுக்கும் மேலாக தேவனுடைய வழிகளும், எண்ணங்களும் (சித்தங்களும்) நம்முடைய வாழ்வில் நிறைவேறும். இஸ்ரவேல் மக்களை ஆண்டவர் நடத்தி சென்ற பாதையை அவர்களால் விளங்கி கொள்ள முடியவில்லை. சிவந்த சமுத்திரம் போன்ற தடைகளும், மாரா போன்ற கசப்புகளும், அவர்கள் பாதையில் வந்தபொழுது அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் தேவனே அவர்களை அவ்வழியில் கரம்பிடித்து நடத்தி சென்றார். மேலும் எதிரிகள் அவர்களை எதிர்த்த போதும், அவர்கள் விரும்பின இறைச்சி கிடைக்காத போதும், அவர்கள் செல்கின்ற பாதை தேவனால் வழிநடத்தப்படுகின்ற பாதை என்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எகிப்தில் தொடங்கி அவர்கள் வழிபிராயணத்தில் எத்தனையோ அற்புதங்களை தேவன் மோசே மூலமாக செய்தபொழுதும், அவர்கள் தேவனுக்கும், மோசேக்கும் கீழ்படியவில்லை. அதைக் காட்டிலும் தாங்கள் விட்டு வந்த எகிப்திற்கே திரும்ப வேண்டும் என்பது அவர்கள் எண்ணமாயிருந்தது.

நம்முடைய வாழ்க்கை பயணத்திலும், கர்த்தருடைய கரம் நம்மோடிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பாவத்தில் இருந்து நம்மை மீட்டெடுத்து நித்திய ஜீவவாழ்வை நோக்கி தேவன் நம்மை நடத்திக் கொண்டருக்கிறார் என்பதையும் நாம் அறிவோம். தேவன் வனாந்திரத்தில் இஸ்ரவேல் மக்களை போஷித்து, பாதுகாத்து வந்தது போல நம்மையும் இவ்வுலக வாழ்வில் போஷித்து, பாதுகாத்து வருகிறார். ஆண்டவர் இஸ்ரவேல் மக்களை போஷித்து காபாற்றினது வனாந்திரத்தில் வாழ்வதற்காக அல்ல, வாக்குத்தத்த தேசமாகிய கானானை சென்று அடைவதற்காகதான். நம்மையும் தேவன் இவ்வுலகில் சகல நன்மைகளையும் கொடுத்து காப்பாற்றுவது பரம கானானாகிய பரலோகத்திற்கு வழிநடத்தி செல்வதற்கே. இப்படிப்பட்ட ஓர் உன்னதமான வாழ்க்கை பயணத்தில் நம்மைதேவன் வழிநடத்தி வருகிற வேளையில் நமக்கும் சிவந்த சமுத்திரம் போன்ற தடைகளும், மாரா போன்ற கசப்பான அனுபவங்களும் ஏற்படுகிறது.

ஆனால் நாம் கர்த்தருடைய கரத்தை உறுதியாய் பிடித்துக்கொள்வோமானால், தேவன் நிச்சயமாக இப்படிப்பட்ட ஒவ்வொரு சூழ்நிலையிலும் நம்மை வழுவாது கரம்பிடித்து நடத்திசெல்வார். ஏனெனில் **"நான் உன்னை விட்டுவிலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை"** (எபி 13:5) என்று அவர் சொல்லியிருக்கிறாரே. மேலும் இஸ்ரவேல் மக்களை போல நாமும் சில காரியங்களை இச்சித்து பாதை விலகி போகும் பொழுதும், நம்மை கரம்பிடித்து **"வழி இதுவே இதிலே நடவுங்கள்"** (ஏசா 30:21) என்று வழி நடத்துகிறவரும் அவரே. பிரதான மேய்ப்பராகிய அவர் பின்னே அவர் சத்தத்துக்கு செவிக்கொடுத்து செல்வோமானால் நாம் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவோம் (யோ 10:3,9). அவர் கரத்தில் உள்ள கோலும், தடியும் நம்மை தேற்றும் (சங் 23:4).

அவரே நம்மை நீதியின் பாதையில் நடத்துகிறவர் (சங் 23:3). "நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்த பாதையில் மரணம் இல்லை" (நீதி 12:28). உன்னதப்பாட்டு 5:4 கூறுகிறது "என் நேசர் தமது கையைக் கதவுத் துவாரத்தின் வழியாய் நீட்டினார், அப்பொழுது என் உள்ளம் அவர் நிமித்தம் பொங்கினது". ஒரு வேளை **நீங்கள் கர்த்தருடைய அன்பை அறிந்திருந்தும் அவரை விட்டு விலகி (வழி விலகி) இருப்பீர்கள் என்றால், அவருடைய கரம் உங்களை நோக்கி நீட்டப்படுகிறது**, அவர் உங்களை விட்டு போகும்முன்னே அவர் கரத்தை பற்றிக்கொள்ளுங்கள். வெளிப்படுத்தல் 3:20 கூறுவது போல "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்" என்று **உங்கள் இதய கதவை தட்டிக்கொண்டிருப்பதும் தேவனுடைய கரமே**. இப்பொழுதே அவர் கரத்தை பற்றி பிடித்துக்கொள்ளுங்கள், அவரே நம்மை நித்திய ஜீவகரையில் சேர்ப்பவர். ஆமென்.

# 5. கர்த்தருடைய வழிகள்

## ஆபிரகாம் – லோத்து வாழ்க்கையிலிருந்து




ஆபிரகாம்,லோத்து இவ்விருவருடைய வாழ்க்கை பயணமும் ஒரே இடத்தில் இருந்தே ஆரம்பிக்கிறது(ஆதி 11:27). ” கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ” (ஆதி 12:1). என்றார். மேலும் “நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்” (ஆதி 12:2). என்றும் கூறி ஆசிர்வதித்தார்

கர்த்தர் அழைத்த அழைப்பை ஏற்று தேவனை முழு நிச்சயமாய் விசுவாசித்து, வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவர் என்று எண்ணி அவர் தன் சுயதேசத்தை விட்டு புறப்பட்டார். எபி 11:8 கூறுகிறது “ விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்”. இவ்வாறு கீழ்ப்படிந்து, கர்த்தருடைய வழிக்கு தன்னை ஒப்புவித்து அவருடைய சித்தத்திற்கு ஆபிரகாம் கீழ்ப்படிந்தார். “கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்; லோத்தும் அவனோடேகூடப் போனான்” (ஆதி 12:4).

இங்கு ஆண்டவர் ஆபிரகாமுக்கு மட்டும் தான் வாக்குத்தத்தங்களை கொடுத்து அழைத்தார், ஆனால் லோத்தும் ஆபிரகாமோடே கூட சென்றார். இங்கு லோத்து ஒரு சரியான தெரிந்தெடுப்பை செய்தார். ஆபிரகாமுடைய விசுவாசத்தை பின்பற்றி தானும் அவரோடே தேவனுடைய வழியில் செல்ல தன்னை அர்ப்பணித்தார்.

ஆதி 13:2 கூறுகிறது " ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயிருந்தான்". மேலும் ஆதி 13:5 கூறுகிறது "ஆபிராமுடனே வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன". இங்கு நாம் காண்கிறபடி கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னபடி அவரை ஆசீர்வதித்து, அவர் பரதேசியாய் கூடாரவாசியாய் அலைந்து திரிந்தாலும், சகல ஆஸ்திகளையும் உடையவராக அவரை தேவன் ஆசீர்வதித்தார். அந்த ஆசீர்வாதம் லோத்துவுக்கும் தொடர்ந்தது. தேவன் ஆபிராகாமுக்கு சொன்னபடியே "நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி 12:2) என்பது நிறைவேறியது. ஆபிரகாம் தனக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களை லோத்துவோடு பகிர்ந்து கொள்ள தயங்கவில்லை.

ஆனால் "அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக்கூடாதிருந்தது; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமறபோயிற்று. ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று" (ஆதி 13 :6,7). இங்கு நாம் காண்கிறபடி தேவன் அவர்களுக்கு கொடுத்த ஆசீர்வாதமே, அவர்களுக்கு பிரச்சனை வர காரணமாயிருந்தது. இதற்கு காரணம் தேவனுடைய ஆசீர்வாதம் அல்ல, அதை முறையாக பயன்படுத்த தெரியாத மனிதர்களால் தான்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் சத்தியம் என்னவென்றால் நாம் தேவனை விசுவாசித்து அவரோடு நடக்கும்பொழுதும், அல்லது அவரது தரிசனத்தை பெற்ற தேவபிள்ளைகளோடு கூட சேர்ந்து நாம் நடக்கும்பொழுதும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்முடைய வாழ்க்கையில் பலிக்கின்றன. ஆனால் தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களை, தாலந்துகளை சரியாகப் பயன்படுத்த நமக்கு தெரியாத பொழுது அல்லது பயன்படுத்தாத பொழுது அதுவே நம்முடைய வாழ்க்கையில் பிரச்சனைகளை கொண்டு வருகிறது.

இங்கு, ஆபிரகாம் தேவ ஞானமாய் செயல்பட்டு இப்பிரச்சனையை சரிசெய்தார். ஆதி 13 :8,9 வசன்ங்கள் கூறுகிறது "என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான்".

இங்கு தேவன் ஆபிரகாம் மூலமாய் லோத்துவுக்கு, ஒரு தெரிந்தெடுப்பை கொடுக்கிறார். ஆபிரகாம் ஆரானை விட்டு புறப்பட்டபொழுது அவரோடு தேவன் செய்த உடன்படிக்கையை, அவருடைய வாக்குத்தத்தை விசுவாசித்து ஆபிரகாமோடு புறப்பட்ட லோத்து, இப்பொழுது தனக்கு தேவன் கொடுத்த ஆசிர்வாதங்களையும், ஐசுவரியங்களையும் காப்பாற்றிக்கொள்ள தேவனுடைய வழியை விட்டு விலகி செல்ல முடிவெடுத்தார்.

லோத்து ஒரு நிமிடம் சிந்தித்திருப்பார் என்றால், தான் ஏன் தன் சுயதேசத்தை விட்டு வந்தோம், தனக்கு இருக்கும் ஐசுவரியங்கள் யாரால் உண்டாயிற்று, ஆபிரகாமோடு இருக்கும் பொழுது தனக்கும், தனக்கு சொந்தமான யாவற்றிக்கும் இருக்கும் பாதுகாப்பு, எல்லாவாற்றிக்கும் மேலாக ஆபிரகாமோடு தேவனுடய வழியில் சென்று வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்தல், போன்ற இவை ஒன்றையும் லோத்து சிந்திக்கவில்லை.

அவர் கண் முன் இருந்ததெல்லாம் அவருடைய ஐசுவரியமும், அதை எப்படி தான் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமுமே.

இதனால் “அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும்முன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது. அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு, கிழக்கே பிரயாணப்பட்டுப்போனான்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள்” (ஆதி 13:10,11).

இங்கு நாம் காண்பது முழுக்க முழுக்க லோத்துவினுடைய தெரிந்தெடுப்பு. அவன் தன் கண்ணுக்கு எது சிறந்ததாகப்பட்டதோ அதை தெரிந்தெடுத்தான். இதுவரை ஆவிக்குரிய கண்களோடு தேவ தரிசனத்தை நோக்கி ஆபிரகாமோடு நடந்த லோத்து, இப்பொழுது மாம்ச கண்களோடு தன்னுடைய சுய இச்சையை நோக்கி நடந்தான். அது அவனை தேவனோடும், தேவ பிள்ளைகளோடும் இருந்த ஐக்கியத்தை விட்டு பிரித்தது.

**இங்கு, ஒருவேளை மேலோட்டமாக பார்க்கும் பொழுது, லோத்து சிறந்ததை தெரிந்து கொண்டு சோதோம் கொமோராவில் தங்கினதை (settle ஆனதை) போல தோன்றலாம். இனி அவன் ஆபிரகாமை போல அலைந்து திரிய தேவையில்லை. தேவ தரிசனத்தையும், ஆசிர்வாதங்களையும் பெற்ற பலரும் லோத்தை போலவே தங்களுடைய வாழ்க்கையில் ஒரு நிலையை அடைய (settle ஆக) முயற்சிக்கிறார்களே தவிர தேவனோடு தொடர்ந்து நடக்க விருப்பமில்லாமல் இருக்கிறார்கள்.**

**ஆனால், மறுமுனையில் ஆபிரகாம் தொடர்ந்து தேவ தரிசனத்தில், கர்த்தருடைய வழிகளில் நடந்து கொண்டிருக்கிறார். இங்கு ஆபிரகாம் மூலமாய் நாம் கற்றுக் கொள்ளும் பாடம், முதலாவது தனது சகோதரனோடு தேவையில்லாத பிரச்சனையை தவிர்க்க முற்பட்டார். நாம் சகோதரர், நமக்குள் வாக்குவாதம் வேண்டாம்** (**ஆதி** 13:8) **என்றார். இரண்டாவதாக தெரிந்தெடுக்கும் உரிமையையும் லோத்துவுக்கே கொடுத்தார்** (**ஆதி** 13:9).

**இங்கு அவர் விட்டுக்கொடுத்து போவதை நாம் காணலாம், ஆனால் உண்மையில் அவர் தேவ தரிசனத்தோடு நடந்தார். ஆதி** 13:14-17 **வசனங்கள் கூறுகிறது** "லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்தபின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும். நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன் என்றார்".

இங்கு ஆபிரகாம் கர்த்தருடைய வழியில் தன்னை நிலைநிறுத்தி கொண்டபொழுது, தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை மறுபடியும் ஆபிரகாமுக்கு உறுதிப்படுத்தினார். ஆபிரகாம் லோத்தை போல கண்ணால் கண்டதை தரிசித்து நடவாமல், தேவனை விசுவாசித்து நடந்தார்.

தேவன் தனக்கு வாக்குபண்ணின தேசத்தையும், சந்ததியையும் தன்னுடைய மாம்ச கண்களால் காணாதிருந்தும், விசுவாசக் கண்களால் அவற்றை கண்டு தேவ பாதையில் தொடர்ந்து முன்னேறிச் சென்றார். தேவனும் தம்முடைய வாக்குத்தத்தில் உண்மையுள்ளவராய், ஆபிரகாமுக்கு தாம் வாக்குத்தத்தம் பண்ணின அனைத்தையும் நிறைவேற்றினார். அது மாத்திரமல்ல ஆபிரகாம் தேவன் செயல்படும் நேரத்திற்காக பொறுமையுடன் காத்திருந்தார். ஆனால் லோத்தோ "யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்" (ஆதி 13:12,13).

இங்கு வேதம் மிக தெளிவாகவும், அழகாகவும் கூறுகிறது, சோதோமின் ஜனங்கள் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளாய் இருந்தார்கள் என்று. லோத்துவுக்கு வெளிப்படையாய் சோதோமின் நிலையை ஆண்டவர் காண்பித்திருந்தும், தன்னுடைய சுயசித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்து, தன்னுடைய ஆஸ்திக்காகவும், தன் கண்கண்ட நல்ல நிலங்களுக்காகவும், தேவனுக்கு விரோதமானவர்கள் என்று தெரிந்திருந்தும் அவர்களோடு

ஐக்கியம் கொள்ள லோத்து தயங்கவில்லை. தேவ தாசனாகிய ஆபிரகாமோடு ஐக்கியமாய் இருந்து சகலவற்றையும் பெற்ற லோத்து, இப்பொழுது அனைத்து ஆசிர்வாதங்களையும் பொல்லாதவர்கள் முன் சென்று வைத்து, அவர்களோடு ஐக்கியப்பட்டான்.

தன்னுடைய மந்தை மேய்ப்பர் மூலமாய் உண்டான ஒரு சிறு பிரச்சனைக்காக ஆபிரகாமை விட்டு பிரிந்த லோத்து, அதே செல்வத்தோடு அன்னிய இராஜாக்களின் மூலமாக சிறைபிடிக்கப்பட்டான். ஆதி 14:12 கூறுகிறது "ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய லோத்து சோதோமிலே குடியிருந்தபடியால், அவனையும், அவன் பொருள்களையும் கொண்டுபோய்விட்டார்கள்". இங்கு அவன் சிறைபிடிக்கப்பட காரணம் சோதோமிலே அவன் குடியிருந்ததே ஆகும். தேவ தாசனாகிய ஆபிரகாமோடு, சமாதானமாய் தங்கியிருந்த லோத்து, சிறு சச்சரவை பொறுத்துக் கொள்ள மனதில்லாமல், அவன் ஐக்கியத்தை விட்டு பிரிந்து, இப்பொழுது சகலவற்றையும் இழந்து நிற்கிறான். இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம் தேவனோடு அவர் வழிகளில் நடக்கும் பொழுது பாதை குறுகளாய் (கடினமாய்) இருந்தாலும் அதுவே நம்மை ஜீவ வழிக்கு கொண்டு செல்லும், ஆனால் கேட்டுக்கு போகிற வாசல் வழி விரிவாயும், விசாலமாயும் தோன்றும், அதன் முடிவோ மரணம் (இழந்து போகுதல்) (மத் 7:13,14). இங்கு நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு காரியம் தேவனோ, ஆபிரகாமோ லோத்தை சோதோமிலே கூடாரம் போட தடுக்கவில்லை. ஏனெனில் பரம ஈவை (தேவ ஐக்கியத்தை) லோத்து ருசிப்பார்த்திருந்தும், அவன் மறுதலித்து போனபடியால் அவனை தேவன் தடுக்கவில்லை (எபி 6:4-6). இப்படிப்பட்ட காரியங்களை பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலின் இராஜாவாகிய சவுலின் வாழ்க்கையிலும், புதிய ஏற்பாட்டில் யூதாஸ் காரியோத்தின் வாழ்விலும் காணலாம். அவர்கள் செய்ய நினைத்ததையும் தேவன் தடுக்கவில்லை.

ஆனால் இங்கு லோத்துவுக்கு மறுபடியும் ஒரு வாய்ப்பை தேவன் வழங்கினார். ஆதி 14:13-16 வசனங்களில் "தப்பியோடின ஒருவன் எபிரெயனாகிய ஆபிராமிடத்தில் வந்து அதை அறிவித்தான்; ஆபிராம் தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே அப்பொழுது குடியிருந்தான். தன் சகோதரன் சிறையாகக் கொண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோது, அவன் தன் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கும் ஆயுதம் தரிப்பித்து, தாண் என்னும் ஊர்மட்டும் அவர்களைத் தொடர்ந்து, இராக்காலத்திலே அவனும் அவன் வேலைக்காரரும் பிரிந்து, பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து, அவர்களை முறியடித்து, தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபாமட்டும் துரத்தி, சகல பொருள்களையும் திருப்பிக்கொண்டுவந்தான்; தன்

சகோதரனாகிய லோத்தையும், அவனுடைய பொருள்களையும், ஸ்திரீகளையும், ஜனங்களையும் திருப்பிக்கொண்டுவந்தான்".

இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம், ஆபிரகாம் லோத்து சிறை பிடிக்க பட்டதை கேள்விப்பட்டபொழுது சற்றும் தாமதிக்காமல், லோத்து தனக்கு செய்த எதையும் யோசிக்காமல், அவனையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, தன்னுடைய ஜனங்களையும் பொருள்களையும் (ஆயுதங்கள்) அர்பணிக்க தயங்காதிருந்தான். தீமைக்கு நன்மை செய்யும் எண்ணமும், தனக்குரியதை இழந்தாவது அவனை மீட்க வேண்டும் என்ற எண்ணமும், பாவிகளாய் தேவனுக்கு துரோகிகளாய், அவரை விட்டு பின்வாங்கி போன நம்மையும், நாம் வாழும் இந்த பூமிக்கு நம்மை போல வந்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து, நம்மை மிட்டெடுத்த கிறிஸ்துவின் செயலுக்கு ஒர் நிழலாட்டமாய் இருக்கிறது. அதுமாத்திரமல்ல ஆபிரகாம் லோத்தை மட்டும் காப்பாற்றவில்லை, சோதோம் நாட்டையும் காப்பாற்றினான்.

இதனால் "உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்" (ஆதி 14:18-20). இந்த மெல்கிசேதேக்கை பற்றி எபி 7:3 கூறுகிறது "இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்". இங்கு ஆபிரகாமுடைய மனநிலையும், அவனது செயலும் மறுபடியும் தேவனால் மெச்சப்பட்டு, மேற்கண்ட வசனத்தின்படி கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாய் இருக்கும் மெல்கிசேதேக்கு மூலமாய் தம்முடைய ஆசிர்வாதத்தை வழங்கினார்.

அதுமாத்திரமல்ல "சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான். அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன். வாலிபர் சாப்பிட்டதுபோக, என்னுடனே வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்னும் புருஷருடைய

பங்குமாத்திரமே வரவேண்டும்; இவர்கள் தங்கள் பங்கை எடுத்துக்கொள்ளட்டும் என்றான்” (ஆதி 14:21-24).

**இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம், எந்த இடத்திற்காக, வளத்திற்காக சோதோமை நோக்கி லோத்து சென்றானோ, அதே, சோதோமின் இராஜா ஆபிரகாமுக்கு சகலத்தையும் கொடுக்க முன்வருகிறான். ஆனால், ஆபிரகாமோ இந்த சோதோம் மட்டுமல்ல வானத்தையும் பூமியையும் உடையவராகிய தேவன் தன் வாழ்க்கையில் எதை தனக்கு தர விரும்புகிறாரோ அதை தவிர வேறு எதையும் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. தனக்கு ஒரு ஆசிர்வாதம் கிடைக்க வேண்டுமென்றால் அது தேவனால், தேவனுடைய வேளையிலேயே தர படவேண்டும் என்றும், தன்னுடைய சுய பெலனாலோ, மற்ற மனிதராலோ தனக்கு எதுவும் தேவையில்லை என்பதையும் அறிக்கையிட்டார்.**

**இதனால்** “இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்” (ஆதி 15:1).

**ஆனால் இவ்வளவு காரியங்கள் நடந்தபின்பும், சோதோம் மக்களும் தங்கள் பாவத்தில் இருந்தது மனந்திரும்பவில்லை, லோத்துவும் அவ்விடத்தை விட்டு வெளியே வரவில்லை. லோத்து ஆபிரகாமோடே கூட இருக்க கேட்டு இருந்தால், நிச்சயமாக ஆபிரகாம் லோத்தை சேர்த்து கொண்டிருப்பார். ஆனால் தேவன் மூலமாய் அவருக்கு இப்படி ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்ட பொழுதும், அவர் அதை அசட்டை செய்தார். முடிவு, சோதோமையும் அதன் குடிகளையும் அழித்துதான் லோத்தை மீட்டெடுக்க வேண்டி இருந்த்து.**

**இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம், தேவன் நமக்கு மனந்திரும்ப வாய்ப்புக்களை கொடுக்கும் பொழுது, அதை பயன்படுத்தி கொள்ள தவறுவோமானால், அதன் முடிவு எண்ணிப்பார்க்க முடியாததாயிருக்கும்.**

**ஆதியாகமம்** 18 **ஆம் அதிகாரத்தில் ஆபிரகாமை சந்திக்க மூன்று புருஷர்கள் வந்தார்கள். இவர்களை ஆபிரகாம் தன் வீட்டிலே வரவேற்று, அவர்களுக்கு உணவளித்தான். ஆதி** 18:5 **கூறுகிறது** “நீங்கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக் கொஞ்சம் அப்பம் கொண்டுவருகிறேன்; அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம்; இதற்காகவே அடியேன் இடம்வரைக்கும் வந்தீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: நீ சொன்னபடி செய் என்றார்கள்”. இந்த மூன்று புருஷர்களும், இரு காரியங்களை பூமியில் நிறைவேற்ற வந்தனர். ஒன்று ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்ததை உறுதிப்படுத்த, மற்றொன்று சோதோமை அழிக்க.

இம்மூவரில் ஒருவர் கர்த்தர் என்பதை ஆதி 18:9-15 வசனங்களில் காணலாம். இங்கு கர்த்தர் ஆபிரகாமிற்கு தரிசனமாகி இரு காரியங்களை அவனுக்கு வெளிப்படுத்தினார். ஒன்று "கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை" (ஆதி 18:14) என்பதும், ஆதலால் சாராள் நிச்சயமாய் ஒரு குமாரனை பெறுவாள் என்பதையும். இங்கு கர்த்தர் ஆபிரகாமுடைய விசுவாசத்தை மாத்திரமல்ல, விசுவாசத்தில் தடுமாறி கொண்டிருந்த சாராளையும் பெலப்படுத்த தாமே தரிசனமாகி வாக்குத்தத்ததை உறுதிப்படுத்தினார்.

**ஆதி** 18:17-19 **வசனங்கள் கூறுகிறது** "அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும், நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்".

மேற்கண்ட வசனங்கள் தேவனே ஆபிரகாமை குறித்து கொடுத்த சாட்சி. இது எவ்வளவு மேன்மையானது. ஆபிரகாம் தான் மாத்திரமல்ல, தன்னுடைய சந்ததியையும் தேவனுக்குள்ளாக நடத்துவான் என்று தேவனே சாட்சி பகர்கிறார். முக்காலங்களையும் அறிந்த, ஆளுகின்ற தேவன் ஆபிரகாமை குறித்து இப்படியாய் சாட்சி கொடுத்து, அதனால் தான் செய்ய போகிறதை (சோதோமின் அழிவு) ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? (ஆதி 18:18) என்கிறார்.

இங்கு நாம் கற்றுக்கொள்கிற பாடம், நாம் தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவர்களாக, தேவ நீதியை பின்பற்றுகிறவர்களாக, உலக ஐசுவரியங்களையோ, சுய பெலனையோ சாராமல் தேவனையே சார்ந்து கொள்ளும் பொழுது, தேவனே நாம் இருக்கும் இடத்திற்கு நம்மை தேடி வருகிறார், தன்னுடைய வாக்குத்தத்தங்களை நமக்கு உறுதிப்படுத்துகிறார், தான் செய்ய போகும் காரியங்களை நமக்கு அறிவிக்கிறார்.

சோதோமை ஆண்டவர் அழிக்க போகிறார் என்பதை அறிந்த ஆபிரகாம், தன்னுடைய சகோதரன் லோத்துவிற்காக மாத்திரமல்ல, அங்குள்ள கொஞ்ச நீதிமான்கள் நிமித்தம்மாவது அதை அழிக்காதபடி, தேவனிடத்தில் விண்ணப்பித்தான்.

ஆனால் ஆபிரகாம் கேட்டது போல சோதோமில் பத்து நீதிமான்கள் கூட இல்லை. ஆகிலும் ஆபிரகாமின் வேண்டுதலின்படி, லோத்தை தேவன் சோதோமின் அழிவில் இருந்து காப்பாற்றினார். இங்கு நாம் கற்றுக்கொள்ளுகிற பாடம், பாவம் நிறைந்து, அழிவுக்கு நேராய் வைக்கப்பட்டுள்ள இந்த உலகத்தில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படும்படியாய் ஜெபிக்க வேண்டியது நம்முடைய கடமை.

அப்பொழுது, தேவன் தம்முடைய நீதியின்படியும், நம்முடைய விண்ணப்பத்தின் படியும் காரியங்களை நிறைவேற்றுவார்.

ஆதி 19:1-3 வசனங்கள் கூறுகிறது “அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களைக் கண்டு, லோத்து எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து: ஆண்டவன்மார்களே, அடியேனுடைய வீட்டு முகமாய் நீங்கள் திரும்பி, உங்கள் கால்களைக் கழுவி, இராத்தங்கி, காலையில் எழுந்து பிரயாணப்பட்டுப் போகலாம் என்றான். அதற்கு அவர்கள்: அப்படியல்ல, வீதியிலே இராத்தங்குவோம் என்றார்கள். அவன் அவர்களை மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டான்; அப்பொழுது அவனிடத்திற்குத் திரும்பி, அவன் வீட்டிலே பிரவேசித்தார்கள். அவன் புளிப்பில்லா அப்பங்களைச் சுட்டு, அவர்களுக்கு விருந்துபண்ணினான், அவர்கள் புசித்தார்கள்”.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது, கர்த்தர் லோத்தை காண வரவில்லை, இரண்டு தூதர்கள் மட்டுமே வந்தார்கள். வந்த அவர்களை, லோத்து வரவேற்றும் அவனோடு தங்க அவர்கள் விரும்பவில்லை. பின்பு வருந்தி அழைத்தபொழுது சென்றார்கள். இங்கு நாம் கற்றுக் கொள்ளும் பாடம் தேவனோடு எப்பொழுதும் நெருங்கி வாழும் ஆபிரகாமோடு தேவன் உறவாட விருப்பமுள்ளவராய் இருக்கிறார்.

ஆனால் அனலுமின்றி, குளிருமின்றி வாழும் வாழ்க்கையை உடைய லோத்தை போன்றவர்களின் வாழ்வில் தேவன் இடைப்பட்டாலும், தேவனோடு ஒரு ஆழமான உறவு இப்படிப்பட்டவர்களுக்கு கிடைக்காமற் போகிறது. இவர்கள் தேவ கிருபையையும், தயவையும் தங்கள் வாழ்வில் பெற்றிருந்தாலும், தேவ பிரசன்னத்தையும், தேவ ஆளுகையையும், தேவ வழிநடத்துதல்களையும் தங்கள் வாழ்வில் உணராதவர்கள். ஆனால் ஆபிரகாம் போன்றோர் தேவனை நோக்கி கூப்பிட்டபொழுது, நீ சொன்னபடியே செய் (ஆதி 18:5) என்று மறு உத்தரவு வந்தது.

தொடர்ந்து ஆதி 19ஆம் அதிகாரத்தில், நாம் பார்க்கும் பொழுது சோதோம் மக்களின் பொல்லாப்பையும், லோத்துவின் செயல்களையும் நாம் காணலாம். லோத்து நீதிமானாய் வாழ நினைத்தாலும், அவர் தன்னுடைய சொந்த அறிவையும், பெலனையுமே சார்ந்திருந்தார் (ஆதி 19:6,7).

இறுதியில் அவருடைய அறிவு, பெலன் எல்லாம் ஒன்றுமில்லாமல் போனது. ஆதி 19:9 கூறுகிறது “அதற்கு அவர்கள்: அப்பாலே போ; பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது? இப்பொழுது அவர்களுக்குச் செய்வதைப்பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்புச் செய்வோம் என்று சொல்லி, லோத்து என்பவனை மிகவும் நெருக்கிக் கதவை உடைக்கக் கிட்டினார்கள்”.

**இங்கு நாம் காண்பது, எந்த சோதோமை கண்டு ஆசையாய், தன்னுடைய மிகுந்த ஐசுவரியங்களோடு வந்து தங்கினாரோ, அதே சோதோமின் மக்களால் "பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது" என்ற பதிலை பெற்றார். இதில் நாம் கற்றுக்கொள்கிற பாடம், நம்முடைய தாலந்துகளை, ஐசுவரியங்களை உலக மக்களோடு நாம் ஐக்கியப்பட்டு, அதை அவர்களோடு பகிர்ந்து கொள்ளும் பொழுது, அதை அநுபவிக்கிற வரைக்கும் நம்மோடு இருக்கும் மக்கள், பின்பு நன்றி கெட்டவர்களாய் நம்மையே பரதேசி என்று சொல்லும் நிலைக்கு நாம் தள்ளப்படுவோம். மேலும் அவனை மனதின் பிரகாரம் மாத்திரமட்டுமல்ல, சரீர பிரகாரமாகவும் காயப்படுத்த அவர்கள் நெருக்கினார்கள். இதுவே தேவ ஐக்கியத்தை, தேவ பிள்ளைகளின் ஐக்கியத்தை விட்டு உலகத்தோடு ஐக்கியப்படும் ஒருவனுடைய முடிவு.**

**ஆனால், லோத்துவின் வாழ்வில் இன்னும் தேவதயவும், இரக்கமும் வெளிப்பட்டது. ஆதி** 19:10 **கூறுகிறது** "அப்பொழுது அந்தப் புருஷர்கள் தங்கள் கைகளை வெளியே நீட்டி, லோத்தைத் தங்கள் அண்டைக்கு வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு, கதவைப் பூட்டி", மேலும் ஆதி 19:15,16 வசனங்களில் "கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள். அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள்". இங்கு எப்படியாய் தேவன் லோத்துவையும், அவன் குடும்பத்தையும் இரக்கமாய் காப்பாற்றுகிறார் என்பதை நாம் காணலாம்.

ஆனால் தேவன் இவ்வுளவாய் இரங்கியும், லோத்துவின் மனைவி கீழ்படியாமல் பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள் (ஆதி 19:26), சோதோம் அழிக்கப்பட்டது.

ஆதி 19:27-29 வசனங்களில் "விடியற்காலத்தில் ஆபிரகாம் எழுந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய், சோதோம் கொமோரா பட்டணங்களின் திசையையும், சமபூமியாகிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்த்தான்; அந்தப் பூமியின் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று. தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்".

இங்கு வேதம் தெளிவாக கூறுகிறது, லோத்தின் மேல் பாராட்டப்பட்ட இரக்கம், தேவன் ஆபிரகாமை நினைத்தாலேயே. ஆபிரகாமுக்கு லோத்து தீங்கு செய்திருந்தும், லோத்து நன்றாய் இருக்க வேண்டும் என்பதே ஆபிரகாமின் எண்ணமாய் இருந்தது. இங்கு நாம் கற்றுக் கொள்கிற பாடம், இவ்வுலக மக்களின் மூலமாக, தேவ பிள்ளைகளாகிய நமக்கு எந்த நன்மையும் வரப்போவதில்லை, அவர்கள் தேவ பகைஞராய் தேவனுக்கும், நமக்கும் விரோதமான காரியங்களையே செய்கின்றனர். ஆகிலும் நாம் அவர்களுக்காக தேவனிடத்தில் வேண்டும் பொழுது, அவர்கள் மீதும் தேவ இரக்கம் பாராட்டப்படும். இது ஆபிரகாமின் வாழ்க்கையில் அவனிடத்தில் காணப்பட்ட உயரிய பண்புகளில் ஒன்றாகும். நாமும் இப்படியாக காணப்படவே தேவன் விரும்புகிறார்.

மேலும், அந்நிய இராஜாக்கள் லோத்தை சிறைபிடித்து சென்ற பொழுது லோத்துவிற்காகவும், அதில் உள்ள நீதிமான்களுக்காகவும் ஜெபிக்க மாத்திரமே செய்தார். இங்கு நாம் கற்றுக் கொள்ளும் பாடம், தேவன் தம்முடைய நீதியை நிறைவேற்றும் பொழுது (சுனாமி போன்ற அழிவுகள், பஞ்சங்கள் போன்றவை), நாம் அமைதியாக ஜெபிக்க வேண்டுமே ஒழிய தேவனையும் மிஞ்சிய நீதிமான்களாய் செயல்படுதல் கூடாது. இங்கு தான் சென்று காப்பாற்றாமல் இருந்தாலும், தேவன் நிச்சயமாய் லோத்தை காபாற்றுவார் என்று ஆபிரகாம் விசுவாசித்தார்.

இவைகளுக்கெல்லாம், நேர் எதிர்மறையாக லோத்துவும், அவன் குடும்பத்தினரும் செயல்பட்டனர். அழிவில் இருந்து தேவன் அவர்களை தப்புவிக்க நினைத்தபொழுதும், அவர் தன் சொந்த அறிவையும், பெலனையுமே சார்ந்திருந்தார், தேவ வார்த்தைக்கு கீழ்படியாமல், அவருக்கே ஆலோசனை கூறினார் (ஆதி 19:19,20).

ஆனால், அப்பொழுதும் தேவன் அவருக்கு இரக்கம் பாராட்டி அவரை காப்பாற்றினார் (ஆதி 19:21,22). ஆனாலும் கீழ்படியாமையினாலே, அவர் மனைவி உப்புத்தூண் ஆனாள். இப்படிப்பட்ட காரியங்களை நாம் இப்பொழுதும் நம் காலத்திலும் காணலாம். தேவன் இரக்கமாய் எத்தனையோ வழிகளில் தம்மை இவ்வுலக மக்களுக்கு வெளிப்படுத்தி இருந்தும், இன்னும் மனிதர்கள் பணத்தையும், சுய பெலனையும் தங்களுடைய அறிவையுமே சார்ந்திருக்கிறார்களே தவிர தேவ சத்ததிற்கு செவி சாய்க்காமல் இருக்கிறார்கள். இவ்வளவு காரியங்கள் நடந்த பின்பாவது லோத்து ஆபிரகாமிடம் சென்றிருக்கலாம். ஆனால் அவனோ அப்படி செய்யவில்லை (ஆதி19:30).

ஆபிரகாம் தன் பிள்ளைகளுக்கு “கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்” (ஆதி 18:19) என்று அவனை குறித்து கர்த்தர் சாட்சிக்கொடுத்தார். அதுபோலவே ஈசாக்கு,

யாக்கோபு, யோச்சேப்பு, தாவீது என்ற அவன் சந்ததியார் தேவனுடைய வழியில் நடந்தார்கள்.

ஆனால் லோத்தோ தன் பிள்ளைகளுக்கு அப்படி கற்பிக்கவில்லை, அதன் விளைவு அவர்கள் சோதோமின் வழியை பின்பற்றி மோவாப், அம்மோன் என்னும் தேவனுக்கு பிரியமில்லாத சந்ததியை பிறப்பித்தார்கள் (ஆதி 19:31-38)..

இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம் ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பி பொறுமையோடு நீதியாய் தேவனுடைய வழிகளில் நடந்தான். அவன் கடந்து சென்ற பாதைகள் குறுகலானதாய், வனாந்திரமானதாய் காணப்பட்டாலும் முடிவில் தேவன் அவனுக்கு தம்முடைய வாக்குத்தத்ததையும், ஆசிர்வாதங்களையும் தான் கூறியபடியே வழங்கினார். அதனால் இந்நாள் வரைக்கும் அவனுடைய சந்ததியார் (இஸ்ரவேலர்) இப்பூமியில் ஒரு ஜாதியாய் (நாடாய்) வாழ்கின்றனர். மனுகுலத்தின் இரட்சிப்பும் அவன் சந்ததி மூலமாகவே உண்டாயிற்று.

ஆனால் லோத்தின் சந்ததியோ இடம் தெரியாமல் அழிந்து போயிற்று. அவன் சந்ததியார் தேவனுக்கு விரோதமாகவே வாழ்ந்தனர். II பேதுரு 2:7,8 வசனங்கள் கூறுகிறது "அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு; நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க".

**இங்கு நாம் காண்கிறபடி தேவன் அவரை நீதிமான் என்றே நியாயந்தீர்க்கிறார், அவர் இரட்சிக்கப்பட்டார் என்றும் வசனம் கூறுகிறது. அது உண்மையே. ஆனால் அவரால் அவருடைய நீதியால் அவரை இரட்சித்துக்கொள்ள முடிந்ததே தவிர தன்னுடைய சந்ததியையோ, தன்னை சார்ந்திருந்தவர்களையோ அவரால் இரட்சிக்க முடியவில்லை.**

**ஆனால் ஆபிரகாமோ தனக்கும், தனக்கு பின்வரும் தன் சந்ததிக்கும், தன்னை சார்ந்திருந்தவர்களுக்கும் ஆசிர்வாதமாய் இருந்தார். தேவன், தன்னை ஆபிரகாமின் தேவன் (யாத் 3:6) என்று கூறினார். அவர் தேவனுடைய சிநேகிதன் (யாக் 2:23) எனப்பட்டார். நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவும் ஆபிரகாமின் சந்ததியிலேயே வந்தார்.**

**ஆதியாகமத்தில் லோத்தை பற்றி விஷேசமாக எதுவும் கூறப்படவில்லை. ஆனால் தேவன் லோத்தை மறக்கவில்லை. லோத்து வாழ்வில் என்னென்ன தவறு செய்தாரோ, அதை அப்படியே தலைக்கீழாக தேவன் ரூத்தின் வாழ்க்கையில் மாற்றினார்.**

**மோவாப்பிய பெண்ணாகிய ரூத், ஆபிரகாமின் சந்ததியில் வந்தவனாகிய எலிமெலேக்கின் மகன், மக்லோனை மணந்தாள். ஆனால் அவனோ**

**இறந்து போனான். எலிமெலேக்கின் மனைவியும், ரூத்தின் மாமியுமாகிய நகோமி மோவாப்பை விட்டு இஸ்ரவேல் தேசத்தில் உள்ள பெத்லகேமிற்கு திரும்பினாள். இங்கு ரூத் ஓர் சரியான முடிவை எடுத்தால். தான் தன் மாமியாராகிய நகோமியோடு பெத்லகேம் சென்றாள், தான் உணவிற்கு கூட கஷ்டப்பட வேண்டியிருக்கும், தன்னுடைய மாமியாரையும் தானே காப்பாற்ற வேண்டும், எல்லாவற்றிற்கும் மேலாக பெத்லகேம் ஓர் அந்நிய தேசம் என இவை எதைப் பற்றியும் அவள் கவலைப்படவில்லை.**

**அவள் இருதயத்தில் இருந்தத்தெல்லாம்** "நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள். அவள் தன்னோடேகூட வர மனஉறுதியாயிருக்கிறதைக் கண்டு, அப்புறம் அதைக்குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை" (ரூத் 1:16-18).

**இங்கு ரூத் நகோமியை மட்டும் பிடித்துக் கொள்ளவில்லை, கர்த்தரையும் பற்றிக்கொண்டாள். தேவ ஐக்கியத்தில் இருந்தும், ஆபிரகாமின் ஐக்கியத்தில் இருந்தும் பிரிந்து உலகப்பொருளுக்காக வாழ்ந்து, இறுதியில் தேவனுக்கு பிரியமில்லாத ஒரு சந்ததியை லோத்து ஏற்படுத்தினான்.**

**ஆனால், உலகமாகிய மோவாப்பை விட்டு, தான் துன்ப பட வேண்டிருக்கும் என தெரிந்திருந்தாலும், கர்த்தரையும், நகோமியையும் பற்றிக் கொண்ட ரூத், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தோன்றிய தாவீதின் சந்ததியில் அங்கமானாள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், தாவீதும் பெத்லகேமில் பிறக்க அவளும் ஒரு காரணமானாள்.**

**ரூத்தை பற்றி போவாஸ் கூறும் பொழுது** "உன் புருஷன் மரணமடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்" (ரூத் 2:11,12).

அவன் கூறியபடியே போவாஸ் ரூத்தை மணந்து தாவீதின் சந்ததியில் தானும் ஒரு அங்கமானான். லோத்து தன் வாழ்க்கையில் எதை எல்லாம் தவறாய் செய்தானோ, அவன் சந்ததியில் வந்த ரூத் அதை அப்படியே சரிப்படுத்தி மறுபடியும் தேவ சந்ததியில் தன்னை இணைத்துக் கொண்டாள். இதில் நாம் கற்றுக் கொள்ளும் பாடம் தேவன் நம்மை ஒருபோதும் மறப்பதில்லை. பாவிகளாய், தேவனுக்கு துரோகிகளாய் இருந்த நம் முன்னோர்களின் சந்ததியில் வந்த நம்மையும் தேவன் இரட்சித்திருப்பது, நாமும் தேவ சந்ததியில், தேவ குடும்பத்தில் பங்குள்ளவர்களாக மாற வேண்டும் என்பதற்கே.

இதுவரையில், நாம் பார்த்த காரியங்களின் சாராம்சம் என்னவென்றால், தேவனுக்கு பயந்து தேவ வழியில் வாழ்ந்த ஆபிரகாமின் வாழ்க்கையில் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களும், ஆசிர்வாதங்களும், அதே நேரத்தில் கர்த்தருடைய வழியை விட்டு விலகி போன லோத்தின் பரிதாப முடிவும், ரூத்தின் மூலமாக தேவன் மறுபடியும் லோத்தின் சந்ததியில் இடைப்பட்டு அவனை தேவ சந்ததியில் ஓர் அங்கமாக்கினதையும் கண்டோம்.

இவை யாவும் மனித வாழ்வில் தேவ ஆளுகையையும், அவருடைய இரக்கத்தையும், காலாகாலங்களாய் தேவன் தம்முடைய திட்டத்தை எவ்வாறு நேர்த்தியாய் மனிதர்களின் வாழ்க்கையில் செயல்படுத்தி வருகிறார் என்பதையும் நமக்கு அறிவிக்கின்றன.

தேவன் தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதித்து, அநேகருக்கு பிரயோஜனமாக்குவாராக ஆமென், அல்லேலூயா.

# 6. தேவனை சார்ந்திருத்தல்

## (73 ஆம் சங்கீதத்திலிருந்து)



இந்த தியானத்தை வாசிக்கும் முன்பு, தயவுசெய்து **73ஆம் சங்கீதத்தை** ஒருமுறையாவது தியானிக்கும்படியாய் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சங்கீதம் முழுவதும், இவ்வுலகில் வாழும் ஒரு தேவ பிள்ளையின் வாழ்க்கையும், உலக மக்களின் வாழ்க்கையும் ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது. இச்சங்கீதம் ஆசாப்பின் சங்கீதம் என்று கூறப்பட்டுள்ளது. இங்கு ஆசாப்பின் பார்வையில், உலக மக்களின் வாழ்க்கை, ஒரு தேவ பிள்ளையின் வாழ்வை காட்டிலும் செழிப்பானதாயும், ஆசிர்வாதமானதாயும், பாதுகாப்பு நிறைந்ததாயும் காணப்படுகிறது. அதனால், அவர்களுடைய வாழ்க்கை பெருமையினாலும், தங்களை படைத்த இறைவனையே மட்டுபடுத்துவதாகவும் காணப்படுகிறது (சங் 73:3-12).

இன்று, இவ்வுலகில் வாழும் தேவ பிள்ளைகளாகிய நம்முடைய பார்வையும், உலக மக்களின் வாழ்க்கையை காணும்பொழுது இப்படியாகவே காணப்படுகிறது. உலகில் உள்ள எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள், தங்களை சிருஷ்டித்த சிருஷ்டிகரை குறித்து எந்த அறிவும் இல்லாமல், அதை அறிந்து கொள்ள விருப்பமும் இல்லாமல், உலகத்தின் காரியத்தின் பின்னே ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

எத்தனையோ மிகப்பெரிய வியாபாரிகளும், அரசியல்வாதிகளும், சினிமா நட்சத்திரங்களும், விளையாட்டு வீரர்களும், தங்கள் செல்வத்தையும், அதிகாரத்தையும், அழகையும், உடல் பெலத்தையும் நம்பி அவற்றை பெருமையாய் எண்ணி, அதையே தங்கள் உலகம் (வாழ்க்கை) என்று கருதி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

தேவனை பற்றியோ, சத்திய வழியை பற்றியோ எந்த எண்ணமும் இன்றி வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்கள் வாழ்க்கையை நாம் காண்கையில், அவர்கள் வாழ்க்கையில் எந்த இடையூறும் இன்றி, அவர்கள் எதற்காக ஓடுகிறார்களோ அது

அவர்களுக்கு வாய்ப்பதையும், அதனிமித்தம் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சுக ஜீவிகளாய் வாழ்ந்து மனதின் பிரகாரமாகவோ, சரீர பிரகாரமாகவோ எந்த உபத்திரவமும் இன்றி வாழ்வதையும் காண்கிறோம்.

இதனால் அவர்கள் தேவனை மட்டுபடுத்துவதுடன், தங்கள் செல்வத்தை, அதிகாரத்தை, புகழை தக்க வைத்துக்கொள்ள, மற்ற மனிதர்களுக்கு தீங்கிழைப்பதையும் நாம் காண்கிறோம். **"மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக"** என்று II தீமோ 3:1 கூறுகிறது. அது **"எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும்"** இருப்பார்கள் என்றும் II தீமோ 3:2 கூறுகிறது.

அதே நேரத்தில் ஒரு தேவ பிள்ளையின் வாழ்வை குறித்து 73ஆம் சங்கீதத்தில் ஆசாப் கூறும்பொழுது **"நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம்பண்ணி, குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன். நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும், காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன்"** என்கிறார் (சங் 73:13,14).

இங்கு ஆசாப் கூறுகிறபடி, இப்பொழுது நம் வாழ்க்கையிலும் காணப்படுகிறது. நாம் நீதியாய் வாழ்வதினாலும், சத்தியத்தை பின்பற்றுவதினாலும் நமக்கு இவ்வுலகத்திலிருந்தும், இவ்வுலக மக்களிடமிருந்தும் எந்த நன்னையும் கிடைப்பதில்லை. அதற்கு பதிலாக தேவையில்லாத பிரச்சனைகளும், வாழ தெரியாதவர்கள், பிழைக்க தெரியாதவர்கள் என்ற பட்டமே தேவ பிள்ளைக்கு கிடைக்கிறது.

இங்கு நாம் காண்கிறபடி, ஒருபக்கம் தன் சுய பெலத்தை, ஞானத்தை, அதிகாரத்தை, அழகை நம்பி, இவ்வுலக வாழ்க்கையை வாழும் மக்கள், மறுபக்கத்தில் தேவனை சார்ந்து வாழும் தேவ பிள்ளைகள். மேலோட்டமாக, இவ்வுலக நடைமுறையை பார்க்கும் பொழுது, தங்களையே சார்ந்துகொள்ளும் உலக மக்கள், தேவனை சார்ந்துகொள்ளும் தேவ பிள்ளையை விட உயர்ந்து, செழித்து இருப்பதை போல காணப்படலாம்.

ஆனால் அதே சங்கீதத்தில் **"இதை அறியும்படிக்கு யோசித்துப்பார்த்தேன்; நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது. நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர். அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப்போகிறார்கள்! பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள்" (சங் 73:16-19)** என்று ஆசாப் கூறுகிறார்.

இதிலிருந்து, தேவன் நீதியுள்ளவர் என்பதையும், துன்மார்க்கரின் வாழ்வை சடுதியில் முடிய பண்ணுகிறார் என்பதையும், அவர்கள் ஒரு நிமிஷத்தில் பாழாய் போவார்கள் என்பதையும் நாம் காணலாம். நாம் வாழுகிற இக்காலத்திலும் துன்மார்க்கமாய் ஜீவித்த மக்களின் பரிதாப முடிவை நாம் கண் கூடாக காண்கிறோம். அவர்களுடைய செல்வமோ, பதவியோ, பட்டமோ, அழகோ, உடல் பலமோ அவர்களுக்கு உதவாமற் போய் அழிந்துபோவதை நாம் கண்டுகொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், சில துன்மார்க்கரை அவர்கள் மரணத்திற்கு பிறகு நியாயந்தீர்க்க அவர்களை தேவன் விட்டுவைத்திருக்கிறார். இதுவே லாசரு-ஐசுவரியவான் வாழ்க்கையில் நடந்தது. எனவே, தேவனையே சார்ந்திருக்கும் ஒரு தேவ பிள்ளை எந்நிலையில் இருந்தாலும், அவனை இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் பாதுகாத்து வழிநடத்த தேவன் வல்லவராயிருக்கிறார். அதனால்தான் சங்கீதம் 73:23,24 வசனங்களில் **"ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்; என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர். உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்"** என்று ஆசாப் கூறுகிறார்.

மேலும் **"இதோ, உம்மைவிட்டுத் தூரமாய்ப்போகிறவர்கள் நாசமடைவார்கள்; உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர். எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்"** என்றும் சங்கீதம் 73:27,28 வசனங்களில் கூறுகிறார். **எனவே**, **ஒரு தேவ பிள்ளை இவ்வுலகத்திலும்**, **மறு உலகத்திலும்**, **தேவனை அண்டி வாழ்வதே** (**சார்ந்து வாழ்வதே**) **நலமான ஒன்றாகும்**. **மேலும்**, **ஒரு தேவ பிள்ளை அனுபவிக்கும்** "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" **(ரோ 8:18)** என்று வேதம் கூறுகிறது. மேலும் **"உத்தமனுக்குக் கர்த்தர் துணை" (II நாளா 19:11)** என்றும், **" நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்" (சங் 37:37)** என்றும் வேதம் கூறுகிறது.

மேலும் **"உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசா 26:3)** என்றும் வேதம் கூறுகிறது. எனவே இவ்வுலக மக்களின் போக்கை பாராமல், தேவனையே நோக்கிப் பார்த்து, அவரையே சார்ந்திருந்து, நம் வாழ்க்கையை நடத்துவோமானால், இம்மைக்கும், மறுமைக்கும் வேண்டிய சகலவற்றையும் தேவன் நமக்கு தந்தருளுவார். அவருக்கே மகிமையுண்டாவதாக. ஆமென்.

# 7. கிறிஸ்துவைப்போல




இவ்வுலகில் வாழும் நம் ஒவ்வொருவரின் நோக்கமும் நாம் கிறிஸ்துவைப்போல மாற வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாய், திட்டமாய் இருக்கிறது. நம் ஆதி பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும் இழந்து போன தேவ சாயலை, தேவ மகிமையை, நாம் மறுபடியும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய அநாதி திட்டமாய் இருக்கிறது. நாம் எவ்வளவுதான் பரிசுத்தமாய் வாழ முயற்சித்தாலும், நீதியாய் வாழ முயற்சித்தாலும் நாம் கிறிஸ்துவைப்போல மாற, வாழ முயற்சிக்காவிடில் ஒரு பலனும் இல்லை. ஏனெனில் நம்மில் உள்ள அநேகர் தங்கள் சுய நீதியை, பரிசுத்தத்தை சார்ந்திருந்தும் அதனால் அவர்களுக்கு தேவனிடத்தில் ஒரு பிரயோஜனமும் இல்லை.

பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த பரிசுத்தவாங்களிடம் தேவ சுபாவங்கள், தேவ மகிமைகள் வெளிப்பட்டது. ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தார், மோசேயின் முகம் தேவ மகிமையால் பிரகாசித்தது. ஆவியானவர் அவர்களின் மூலமாய் சில குறிப்பிட்ட கிரியைகளை நடப்பிக்க அவர்கள் மேல் வந்தார். ஆனால் புதிய ஏற்பாட்டில் ஆவியானவர் நமக்கு கொடுக்கப்பட்டிருப்பதோ ஏதோ ஒரு காரியத்தை நடப்பிக்க அல்ல, நம்மில் கிறிஸ்துவை உருவாக்கி, அவரைப்போல் நம்மை மாற்றி, முடிவில் அவர் வரும்போது, மகிமை அடைந்த சரீரத்தை நாம் பெற்றுக்கொள்ளும்படியாய் நம்மை ஆயத்தப்படுத்தவே.

கிறிஸ்துவைப்போல மாறுவது என்றால், கிறிஸ்துவின் சிந்தை, கிறிஸ்துவின் சுபாவங்கள் நம்மில் வெளிப்பட வேண்டும். பவுல் அப்போஸ்தலன் இதை சொல்லும்பொழுது, “ஆனபடியினாலே நாங்கள்

சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது” (II கொ 4:16). மேலும் அவரால் “நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்” (I கொ 11:1) என்று தைரியமாய் கூற முடிந்தது.

ஆனால் ஒரு பக்கம் ஆவியானவர் நாம் கிறிஸ்துவில் வளர உந்திக்கொண்டிருக்கும் போது, அதற்கு விரோதமாய் நமது மாம்சமும், மனதும் போராடுகிறது. ஏவாள் கனியை கண்டபோது அது “புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு” (ஆதி 3:6) தன்னுடைய மாம்சமும், மனமும் விரும்பினதை செய்து, தேவ மகிமையை இழந்துபோனாள். இன்று நாமும் அதேபோல் மாம்சத்தோடும், மனதோடும் போராடிகொண்டுக்கிறோம். இதை பவுல் கூறும்பொழுது “அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை” (ரோ 7:18) என்கிறார்.

ஆனால் நாம் கிறிஸ்துவுக்கும், ஆவியானவருக்கும் நம்மை ஒப்புக்கொடுக்கும் பொழுது, கிறிஸ்துவே நம்மில் இருக்கும் மாம்சத்தின் கிரியைகளை அகற்றிவிடுவார். ஏனெனில் வேதம் கூறுகிறது “கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்” (கலா 5:24) என்று. நம்மில் இருக்கும் மாம்ச கிரியைகளை அழிப்பது மாத்திரமல்ல, நாம் அவரை போல மாற, நம்மை அவரோடு இணைத்துக்கொள்கிறார். யோவான் 15:5 இல் ஆண்டவர் கூறுகிறார் “நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது” என்றார். இதுவே நாம் முழுவதும் தேவனால் நடத்தப்படுகிற அனுபவமாகும். ஏனெனில் அவரால் அன்றி நம்மால் ஒன்றும் செய்யக்கூடாது. மேலும் பவுல் அப்போஸ்தலன் ரோமர் 11:17 வசனத்தில் நாம் ஒலிவமரமாகிய கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு, அவருடைய வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருக்கிறோம் என்று கூறுகிறார்.

அப்போஸ்தலர் நடபடிகளில் ஸ்தேவானைப் பற்றி பார்க்கிறோம். அப்போஸ்தலர் 6:5 கூறுகிறது அவர் விசுவாசத்தாலும் பரிசுத்த ஆவியானவராலும் நிறைந்திருந்தார் என்று. மேலும் அப்போஸ்தலர் 6:8

கூறுகிறது “ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்” என்று. மேலும் அப்போஸ்தலர் 6:10 கூறுகிறது “அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று” என்று. இதன்மூலம் அவர் முழுவதும் தேவ ஆவியால் நிறைந்து, தேவ வல்லமையை, சித்தத்தை தன் வாழ்வில் வெளிப்படுத்துகிறவராய் இருந்தார் என்று நாம் காண்கிறோம்.

இதனால் அவர் முகம் தேவதூதன் முகம் போல் பிரகாசமாய் இருந்தது (அப் 6:15). ஆதலால் அவர் கைது செய்யப்பட்டு ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக நிறுத்தப்பட்டபொழுதும் தைரியமாய் கிறிஸ்துவை பிரசங்கித்தார். அப்போஸ்தலர் 7:54-60 வசனங்கள் கூறுகிறது “இவைகளை அவர்கள் கேட்டபொழுது, மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள். அவன் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு: அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான். அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள். அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்”.

இங்கு நாம் காண்கிறபடி ஸ்தேவானின் செயல், பேச்சு எல்லாம் தேவ ஆவியால் நடத்தப்படுகிறதையும், ஆனால் மற்ற மனிதர்களின் செயலோ அவர்கள் மாம்சமும், மனதும் என்ன சொல்கிறதோ அதற்கு ஏற்றார் போலவும் காணப்படுகிறது. தேவ ஆவியினால் நடத்தப்பட்ட ஸ்தேவனால் மகிமையான காரியங்களை காணமுடிந்தது. கிறிஸ்துவை போலவே ஜெபிக்கவும், தன் ஆவியை தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கவும் முடிந்தது. அவனை வரவேற்க கிறிஸ்து ஆயத்தமாய் இருப்பதை நாம் காணலாம். நாமும் ஸ்தேவானை போல கிறிஸ்துவின் சிந்தை உடையவர்களாய், பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவில் வளருவோமானால், நமக்கு எதிராக போரடுகிற எந்த மாம்ச

வல்லமையையும் நம்மால் மேற்க்கொள்ளமுடியும், ஒன்றும் நம்மை சேதப்படுத்த முடியாது.

அதுமாத்திரமல்ல ஸ்தேவானின் முகம் தேவதூதன் முகம் போலிருந்தது போல, அவனை வரவேற்க கிறிஸ்து ஆயத்தமாயிருந்தது போல, நம்முடைய சரீரமும் மகிமையடைந்த சரீரமாய் மாற்றப்பட்டு, மத்திய ஆகாயத்தில் கிறிஸ்து நமக்காய் எதிர்கொண்டு வருவார், நாமும் அவரிடத்தில் சேர்க்கப்படுவோம். கிறிஸ்துவும் இதற்காகவே பிதாவிடம் வேண்டினார். யோவான் 17:21 கூறுகிறது "நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றார். மேலும் ரோமர் 12:5 கூறுகிறது நாம் "கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" என்று.

மேலும் I கொ 3:16 கூறுகிறது " நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" என்று. மேலும் பவுல் எபேசியர் 5:30-32 வசனங்களில் "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்" என்றார்.

எனவே நமது மாம்சத்தையும், மனதையும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவருக்கு கிழ்படிந்து இருக்க வேண்டும். அப்பொழுது நாம் அவரில் ஒரு அங்கமாய் இருப்போம். அவரும் நம்மில் நிறைந்திருப்பார். ஏனெனில் எபேசியர் 5:26,27 வசனங்கள் கூறுகிறது "தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்".

எனவே கிறிஸ்து தம்மை பலியாக ஒப்புக்கொடுத்ததே, நம்மை அவரைப் போல் மாற்றி, ஆதாம் ஏவாள் இழந்துபோன தேவ மகிமையை நமக்கு மறுபடியும் அளித்து, தம்மோடு நம்மை சேர்த்துக்கொள்வதற்கே. மேலும் "நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும்" (எபே 4:11) என்று

பவுல் கூறுகிறபடி, நாம் ஒவ்வொரு நாளும் பூரணத்தை நோக்கி வளருகிறவர்களாய் இருக்க வேண்டும்.

அப்பொழுது ஒரு நாள், கிறிஸ்து வரும்போது "கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்" (I கொ 15:51-54). அப்பொழுது "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (I கொ 15:55) என்று நாம் முழுங்குவோம். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (I கொ 15:57). "கர்த்தராகிய இயேசுவே, வாரும்" (வெளி 22:20) ஆமென், அல்லேலூயா.

.

# 8. தேவ கிருபை

## (வேத தியானம் லூக்கா 15:11-32)



மேற்க்கண்ட வேத பகுதியை நாம் தியானிக்கும் பொழுது, மனம் திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் தேவன் எவ்வளவாய் மகிழுகிறார் என்பதையும், ஒவ்வொரு மனிதனும் அவருடைய பிள்ளையாய் அவரிடத்தில் வரவேண்டும் என்பதிலும் எவ்வளவு கரிசையாய் இருக்கிறார் என்பதையும் நாம் காணலாம். ஆண்டவர் இந்த சம்பவத்தை கூறுவதற்கு முன்பு காணாமற்போன ஒரு ஆட்டிற்காக மேய்ப்பன் எவ்வளவு கரிசனையாய் இருக்கிறான் என்பதை பற்றியும், காணாமற்போன ஒரு வெள்ளிக்காசை ஜாக்கிரதையாய் தேடி கண்டுபிடித்த ஸ்திரீயை குறித்தும் கூறுகிறார்.

இங்கு ஆண்டவரும், பரலோகமும், அதிலுள்ள தூதர்களும் மகிழுகிற ஒரு காரியம் உண்டென்றால் அது பாவத்தில் வாழ்ந்த ஒரு மனிதன் மனதிரும்பி அவருடைய இராஜ்யத்திற்கு திரும்புவதே ஆகும். இந்த வேத பகுதியில் மனதிரும்பி வந்த மகனை பற்றி மட்டும் அல்லாமல், தகப்பனுடைய தோட்டத்தில் வேலைச்செய்து அவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து இருந்த மூத்த குமாரனை குறித்தும் நாம் காண்கிறோம். இந்த மகன், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து அவருடைய பணியை செய்யும் தேவ பிள்ளைக்கு ஒப்பாய் இருக்கிறான். இவர்கள் இருவர் இடையேயும் விளங்கிய தேவ கிருபையை குறித்து நாம் இப்பொழுது தியானிப்போம்.

முதலாவது மூத்த குமாரனுக்கும், இளைய குமாரனுக்கும் இடையே இருந்த வேற்றுமையான குணாதிசயங்களை நாம் காணலாம். இருவரும் தகப்பனுடைய ஆஸ்திக்கு பங்குள்ளவர்களாய் இருந்தனர். இருவரும் அதின் மேல் உரிமை பாராட்டவும் அதை பயன்படுத்தவும் விரும்பினர். ஆனால் அதை அவர்கள் செய்த விதத்தில் தான் வித்தியாசம் இருந்த்து. மூத்த குமாரன் தகப்பனுடைய வயலில் வேலைச் செய்தான் (லூக் 15:25). தகப்பன் தனக்கு கொடுத்த ஆஸ்தியை பெருகச் செய்ய நினைத்தான். அதுமாத்திரமல்ல அதற்காக தகப்பனுடைய ஆலோசனையை பெற்று அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்திருந்தான் (லூக் 15:29). தனக்கு தகப்பன் தந்த ஆசிர்வாதங்கள் பலுகி பெருகி அது மற்றவருக்கும் ஆசிர்வாதமாய் இருக்க வேண்டும் என்று எண்ணினான். எல்லாவற்றிற்கும் மேலாக தகப்பனோடு இருந்து அதை அநுபவிக்க அவன் விரும்பினான்.

இதைப்போல், ஒரு தேவ பிள்ளையும் தேவன் தனக்கு தந்த தாலந்துகளை அவருக்காக பயன்படுத்தி தேவ இராஜ்யம் (தகப்பனுடைய வயல்) விருத்தியடையும் படியாய் உழைக்கிறான். அதன் மூலம் தான் தேவனால் ஆசிர்வதிக்கப்பட்டவனாய் (தகப்பனுடைய ஆஸ்தியை உடையவன்) மாத்திரமல்ல, தான் ஆசிர்வாதமாய் மற்றவருக்கும் இருக்கிறான். மேலும் அவன் தேவனோடு இருக்கிறான். இங்கு நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான காரியம், தேவனுடைய ஆசிர்வாதங்கள், அவர் நமக்கு தரும் தாலந்துகள் இவை எல்லாவற்றையும் விட தேவ ஐக்கியமே ஒரு தேவ பிள்ளைக்கு தேவையான ஒன்றாகும். தேவ ஐக்கியம் இல்லாமல் தேவன் தந்த ஆசிர்வாதத்தால் மாத்திரம் ஒரு மனிதன் நீண்ட காலம் மகிழ்ச்சியாய், ஆசிர்வாதமாய் வாழமுடியாது.

இதையே நாம் இளைய குமாரனிடத்தில் காண்கிறோம். அவனும் தகப்பனுடைய ஆசிர்வாதங்களை அநுபவிக்க (பயன்படுத்த) விரும்பினான். ஆனால் தகப்பனுடைய ஐக்கியத்தையோ, அவனுடைய ஆலோசனையையோ அவன் தேடவில்லை. தன் சுய பெலத்தால், சுய ஞானத்தால் அவற்றை உபயோகிக்க நினைத்தான். இதனால் அவன் தகப்பனை விட்டு பிரிந்தான்.

இங்கு நாம் காண்கிறது என்னவென்றால், ஆண்டவர் தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய ஆசிர்வாதங்களை, நன்மைகளை, தாலந்துகளை தருகிறார். கடவுள் எனக்கு இவ்வுலகத்தில் ஒன்றையும் தரவில்லை என்று ஒரு மனிதனும் கூற முடியாது. ஆனால் அதை எவ்வாறு ஒரு மனிதன் பயன்படுத்துகிறான் என்பதையே தேவன் பார்க்கிறார். மேலும் தேவனுடைய ஐசுவரியங்கள் பூரணமான ஒன்றாகும். எத்தனை மனிதருக்கும், எவ்வளவு வேண்டுமானாலும் அவரால் கொடுத்துக் கொண்டே இருக்க முடியும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவர், அவனுடைய வாழ்க்கையில் தந்திருக்கும்

ஒவ்வொரு ஆசிர்வாதத்திற்கும், தாலந்திருக்கும் மனிதன் எந்த வகையிலும் தகுதியானவன் அல்ல. ஆனால் தேவன் தம்முடைய சாயலில் அவனை சிருஷ்டித்தபடியால், தம்முடைய ஆசிர்வாதத்திற்கு (ஆஸ்திக்கு) அவன் சதந்தரவாளியாய் (உரிமையானவனாய்) இருக்கிறான் என்பதை வெளிப்படுத்த அவற்றை கொடுக்கிறார். தேவன் தந்த ஞானத்தினால் தான் மனிதன் இப்பூமியில் இத்தனை பெரிய காரியங்களை செய்திருக்கிறான். அது அவனுக்கும், மற்ற மனிதருக்கும் ஆசிர்வாதமாய் இப்பூமியில் காணப்படுகிறது.

தகப்பனை விட்டு பிரிந்து சென்ற இளையக்குமாரன் எல்லாவற்றையும் தந்த சொந்த வழியிலேயே செலவழித்தான். தன் தகப்பனுடைய சொத்து (தேவ ஆசிர்வாதங்கள்) முழுவதையும் இழந்தான். இப்பொழுது அவன் நம்பி இருந்த உலகம், தன்னுடைய ஆசிர்வாதங்களை எல்லாம் வீணாய் செலவழித்த இந்த உலகம் அவனுடைய வாழ்க்கையை கசப்பாக்கிற்று.

**"தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி, அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான்" (லூக் 15:14,15).** இங்கு அவன் பார்வைக்கு சுகமாய், சுதந்தரமாய் காணப்பட்ட உலகம், அவனுக்கு குறைவுண்டாக்கிறதாய் காணப்பட்டது. தகப்பனுடைய பரிபூரண ஆசிர்வாதத்தினால் நிறைந்திருந்த அவன் இப்பொழுது அந்த தேசத்தில் (தகப்பன் இல்லாத தேசம்) குறைவுப்பட தொடங்கினான்.

ஒருவேளை இப்பொழுது அவனுக்கு புத்தி தெளிந்திருந்தால், அவன் தன் தகப்பன் வீட்டிற்கு திரும்பி இருக்கலாம். ஆனால் தகப்பனுடைய ஆஸ்தியை இழந்த அவன், தன் சுயபெலத்தால் எப்படியாவது அந்த தேசத்தில் (மாம்ச உலகத்தில்) யாரையாவது அண்டி வாழ்ந்து விடலாம் என்று எண்ணினான். அவனுக்கும் ஒரு இடம் கிடைத்தது. ஆனால் அது அவன் வாழ்வை அர்த்த மற்றதாக்கிற்று. தகப்பனுடைய ஆஸ்திக்குரியவனாய் வாழ்ந்த அவன், இப்பொழுது பன்றிகளோடு நாற்றத்தில் வாழ வேண்டியிருக்கிறது. இதுவே தகப்பனை (தேவனை) விட்டு பிரிந்து இந்த உலகத்தோடு வாழ விரும்பும் ஒருவனுடைய முடிவு.

மேலும் **"அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை" (லூக் 15:16).** இதுவே உலகத்தோடு வாழ்பவனின் மிகவும் மோசமாகவும் நிலையாகும். தகப்பன் (தேவன்) தந்த அந்தஸ்தோடு, ஐசுவரியத்தோடு வாழ்ந்தவன், இப்பொழுது எல்லாவற்றையும் இழந்து தரங்கெட்ட ஒரு வாழ்க்கையை வாழுகிறான்.

வாழ்க்கையின் மிக தாழ்வான ஒரு பகுதியில் உதவி செய்யவோ, ஆறுதல் கூறவோ யாரும் அற்ற நிலையில் இருந்த **“அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி; எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்” (லூக் 15:17-20).**

இங்கு அவன் தன் தகப்பனிடத்தில் திரும்ப தன் இருதயத்தை திருப்பினாலும்,
அவன் தன் பாவத்தின் அகோரத்தின் நிமித்தம் தன் தகப்பனுடைய ஐக்கியத்தை பெற தான் தகுதியற்றன் என்ற மனநிலையோடு இருக்கிறான். பாவத்தில் வாழ்ந்த நாமும், தேவனால் மீட்கப்பட்ட பொழுது, அவருக்கே கீழ்ப்படிகிற அடிமைகளாக நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் அவருக்கே ஒப்புகொடுத்தோம். ஆனால் தேவனோ எதிர்ப்பார்பதெல்லாம் நாம் பாவத்திற்கு விலகி அவருக்கு பயந்து இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, நாம் அவரோடு ஐக்கியமாயிருக்க வேண்டும், அவரோடு உறவாட வேண்டும் என்பதே.
தேவன் தூதர்களை தமக்கு பணிவிடை ஆவிகளாக உருவாக்கினார். ஆனால் மனிதனையோ தமது சாயலில், தமது ரூபத்தில், தம்மோடு உறவாடும்படியாய் உண்டாக்கினார். இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று புத்தி தெளிந்தபோது, எழுந்து புறப்பட்டு என்கிற வார்த்தைகளாகும். தேவன் அவனுக்கு மனந்திரும்ப ஒரு வாய்ப்பை கொடுத்த பொழுது (புத்தி தெளிந்தபோது), அவன் தான் இருக்கும் இடத்தை விட்டு எழுந்து புறப்பட்டான்.
பாவியான ஒரு மனிதன் பாவ சேற்றில் உழன்றுக் கொண்டிருக்கும்போது, தேவன் ஏதோ ஒரு விதத்தில் மனந்திரும்ப ஒரு வாயப்பை தருகிறார். அதை பயன்படுத்தம் பொழுது மட்டுமே தேவன் கிரியை செய்ய முடியும். இதுவே பேதுரு மற்றும் யூதாஸின் வாழ்வில் நிகழ்ந்தது.

தன் இடத்தை விட்டு எழுந்து புறப்பட்ட இளையக்குமாரன் தகப்பனிடத்தில் வந்தான். **“அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்” (லூக் 15:20).** இங்கு அவன் தகப்பனுடைய பார்வையில் பட்டவுடனே (அவனுடைய எல்லைக்குள் வந்தவுடனே), தகப்பன் ஓடிச்சென்று அவனை அரவணைத்துக்கொள்கிறான். இதுவே

மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் (தேவனிடத்தில்) உண்டாகும் ஒரு சந்தோஷமாகும். இங்கு தேவன் நியாயாதிபதியாய் நின்று கொண்டு நம் பாவத்தை மன்னித்து நம்மை தம்மோடு சேர்த்து கொள்பவராய் மட்டுமல்ல, நாம் மனந்திரும்பி தம்மிடம் வரவேண்டும் என்று மிகுந்த ஆவல் உள்ளவராய் நமக்காய் காத்துக்கொண்டிருக்கிறார். அதற்காகவே **"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோ 3:16).**

பரலோகத்தில் எவ்வளவோ தேவதூதர்களும், பரிசுத்தவாங்களும் இருந்தாலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறது (லூக் 15:7). இதைப்போல் தேவன் உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் வரவேண்டும் என்றே எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார். அதனாலேயே தேவன் கிருபையின் காலமாகிய இக்காலத்தை இம்மட்டும் வைத்திருக்கிறார். ஆகிலும் அதற்கு ஒரு முடிவு உண்டு. அதற்கு முன்பாக எழுந்து புறப்பட்டு ஆண்டவரிடம் வந்து விடவேண்டும்.

மேலும் **"குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்" (லூக் 15:21).** இங்கு இளையக்குமாரன் தான் செய்த காரியங்கள் தன் தகப்பனுக்கு விரோதமானது மட்டுமல்ல அது தேவனுக்கு விரோதமானது என்பதையும் அறிக்கையிட்டான். பாவத்தில் இருந்து இரட்சிப்பை பெற நினைப்பவனும் தன் பாவத்தால் தான் அழிவது மாத்திரமல்ல, அது தேவனுக்கு விரோதமானது, தேவனை வருத்தப்படுத்தக்கூடியது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும், அறிக்கையிட வேண்டும்.

**"அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள்.**
**கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்" (லூக் 15:22-24).** இங்கு இளையக்குமாரன் தகப்பனுடைய மன்னிப்பை பெற்று, அவரது அடைக்கலத்திற்குள் தனக்கு ஒரு இடம்

கிடைத்தால் போதும் என்று எண்ணினான். ஆனால் தகப்பனோ அவனுக்கு, அவன் இழந்து போன மகிமையை (தன் குமாரன் என்ற அந்தஸ்தை) மறுபடியும் தருகிறார். இதைப் போலவே தேவன் ஒரு பாவியை மன்னித்து சேர்த்து கொள்ளும் பொழுது, அவனை வெறும் நியாயாதிபதியை போல மன்னித்து சேர்த்துக்கொள்ளாமல், தகப்பனாய் அவனை அரவணைத்து சேர்த்துக்கொள்கிறார். பாவ மன்னிப்பை பெற்ற மனிதனின் உள்ளத்தில் உண்டாகும் சந்தோஷத்தை பார்க்கிலும், பாவியை மன்னித்து பாவத்தை நீக்கிப்போட்ட தேவனே அவனிலும் அதிகமாய் மகிழுகிறார். நாம் தேவனோடு ஐக்கியமாய் இருக்க விரும்புவதை காட்டிலும், அவர் நம்மோடு ஐக்கியமாய் இருக்க அதிகம் விரும்புகிறார்.

இவ்வுலக காரியங்களில் நம் மனதை செலுத்தி அல்லது சக மனிதர்களோடு நேரத்தை செலவிட்டு அவரை நினையாமல் சில வேளைகளில் நாம் இருந்தாலும், அவரோ எப்பொழுதும் எல்லா வேளையிலும் நம் மேல் நினைவாய் இருக்கிறார். ஏனெனில் வேதம் கூறுகிறது **" அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" (அப்போ 17:28)** என்று. நம்மை தம்மோடு சேர்த்து கொள்வது மாத்திரமல்ல ஆதியில் நம் முற்பிதாக்களான ஆதாம், ஏவாள் இழந்து போன தேவ மகிமையை நமக்கு திரும்பவும் அளிக்கிறார். இவற்றால் தேவ கிருபை எவ்வாறு நம் மேல் பொழியப்படுகிறது என்பதை நாம் உணர்ந்துக்கொள்ளலாம்.

இப்பொழுது மூத்த குமாரனை குறித்து தியானிப்போம். ஒரு புறத்தில் பாவத்தில் வாழ்ந்து தேவ கிருபையை உணராமல் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்னொரு புறத்தில் தேவனோடு வாழ்ந்தும், தேவ வார்த்தைகளுக்கு கீழ்படிந்திருந்தும், தேவ கிருபையை பலர் இன்னும் சரியாய் விளங்கி கொள்ளவில்லை. அதையே மூத்த குமாரனின் வாழ்க்கையில் காண்கிறோம். **லூக் 15:25-28 வசனங்களில் "அவனுடைய மூத்தகுமாரன் வயலிலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது, கீதவாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு; ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து: இதென்ன என்று விசாரித்தான். அதற்கு அவன்: உம்முடைய சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான். அப்பொழுது அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான்".** இங்கு நாம் காண்கிறபடி மூத்தகுமாரன் தகப்பனின் வயலில் தகப்பனுக்காக வேலைச்செய்தான். தகப்பனுக்கு கீழ்படிந்து தகப்பனோடிருந்தான். தான் தகப்பனுக்கு கீழ்படிந்து இருப்பதால் தன்னை மாத்திரமே தகப்பன் நேசிப்பார் என்று எண்ணினான். தன் கிரியைகளின் நிமித்தமே தகப்பன் தன்னை நேசிக்கிறார் என்றும், தன்

தமையன் (இளையக்குமாரன்) தகப்பனுக்கு பிரியமில்லாத காரியத்தை செய்கிறபடியால் தகப்பன் அவனை வெறுக்கிறார் என்றும் நினைத்தான்.

இப்படியே நாமும், பல வேளைகளில் நம்முடைய பயபக்தியான வாழ்க்கையினால்தான் தேவன் நம்மை நேசிக்கிறார் என்றும், அப்படி பயபக்தியில்லாதவர்கள் தேவ அன்பை பெற பாத்திரவான்கள் அல்ல என்றும், எனவே நாமே தேவ பார்வையில் உயர்ந்தவர்கள் என்றும் எண்ணிக்கொள்கிறோம். ஆனால் தேவன் நம்மை எப்படி நேசிக்கின்றாரோ அப்படியே எந்த மனிதனையும், அவன் எந்நிலையில் இருந்தாலும், அவனை அவ்வாறே நேசிக்கிறார். ஏனெனில் அவரே நம் அனைவரையும் சிருஷ்டித்தவர். அவரே நம்முடைய தகப்பன். இதை உணராத மூத்தக்குமாரன் கோபமடைந்து, தகப்பனிடத்தில் செல்ல மனதில்லாதிருக்கிறான். ஆனால் **"தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான்" (லூக் 15:28).** இதுவே தேவனுக்கு கீழ்படிந்து இருக்கும் ஒரு தேவபிள்ளையின் மேன்மையாகும். சில வேளைகளில் வாழ்க்கையில் உண்டாகும் வேதனைகளினால், இழப்புக்களினால் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் நாம் சோர்ந்து போகும்பொழுது, தேவனை நோக்கி பார்க்க முடியாத பொழுதும், தேவனே நம்மை தேடி வந்து ஆறுதல்படுத்துகிறார். நம்மை விடுவிக்கிறார். இதுவே இளையக்குமாரனுக்கும், மூத்தக்குமாரனுக்கும் உள்ள வித்தியாசம், இளையக்குமாரன் பாடுகள் பட்டு வேதனை அடைந்தாலும், அவன் புத்தி தெளிந்து தகப்பனிடம் வந்தபொழுதே தகப்பன் அவனை சந்தித்து ஆறுதல்படுத்தி உயர்த்தினார். ஆனால் ஒரு தேவபிள்ளையோ, தேவனுடைய பார்வையில் எப்பொழுதும் இருக்கிறபடியால், அவனுக்கு ஒரு தீமையும் அணுகாமல் பாதுகாக்கிறார். அவன் அவரை நோக்கி பார்க்க முடியாதபடி துயரத்தில் இருந்தாலும் அவர் அவனை தேடி வருகிறார்.

மேலும் **லூக் 15:29,30 வசனங்களில் "அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை. வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே என்றான்".** இங்கு மூத்தக்குமாரன் தன்னுடைய நீதியை வெளிப்படுத்துவதை காணலாம். தான் நீதிமானாய் வாழ்வதாகவும், தன்னுடைய தமையனோ பாவத்தில் வாழ்வதாகவும், ஆனால் அவனுக்கு கிடைத்த ஆசிர்வாதங்கள் கூட தனக்கு கிடைக்கவில்லை என்று தகப்பனிடத்தில் முறையிட்டான். நாமும் இப்படியே தேவனிடத்தில் சில

வேளைகளில் நமக்கு நியாயமாய் கிடைக்க வேண்டிய ஆசிர்வாதங்கள் கூட கிடைக்காத போது, அதே வேளையில் இவ்வுலகத்திற்க்கேற்றார் போல் வாழும் மக்களுக்கு எந்தவித தடையும் இன்றி ஆசிர்வாதங்கள் கிடைக்கும் பொழுது முறுமுறுக்கிறோம்.

ஆனால் அதற்கு தகப்பனுடைய பதிலோ **"மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது" (லூக் 15:31)** என்பதாகும். ஆம், தேவனும் இதையே நம்மிடம் கூறுகிறார். அவருடையதெல்லாம் நம்முடையதாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் தேவன் தம்மை எஜமானாக, இராஜாவாக வெளிப்படுத்தினார். ஆனால் புதிய ஏற்பாட்டில் அவர் நம்முடைய தகப்பனாய் இருக்கிறார். நம்முடைய உலக பிரகாரமான எஜமானும், இராஜாவும் நமக்கு தேவையானதை எல்லாவற்றையும் தரலாம். ஆனால் எஜமானுடைய, இராஜாவுடைய ஆஸ்தியின் மேல் நாம் உரிமை பாராட்டமுடியாது. ஆனால் தகப்பன் நமக்கு கொடுக்கும் ஆசிர்வாதங்கள் மாத்திரமல்ல, தகப்பனுக்குரியது அனைத்தும் நமக்குரியதாயிருக்கிறது. எனவே தேவனிடத்தில் இருந்து ஏதோ சில ஆசிர்வாதங்களை மாத்திரம் நாம் பெறுவதோ, உரிமை பாராட்டுவதோ அல்ல, தேவனுடைய அனைத்து ஆசிர்வாதங்களும், அவருடைய வாக்குத்தத்தங்களும் நமக்கு உரியதயிருக்கிறது.

இதற்கும் மேலாக **"நீ எப்போதும் என்னோடிருக்கிறாய்" (லூக் 15:31)** என்று தகப்பன் கூறியது போல, நாம் தேவனோடும், அவர் நம்மோடும் இருக்கிறார். இதுவே நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் அநுபவம். இனி நான் அல்ல கிறிஸ்துவே என்னில் எல்லாம் என்ற நிலையாகும். அவருடைய அச்சையடையளங்கள் நம்மில் காணப்படுகிற வாழ்க்கையாகும். அவர் தலையாய் நாம் ஒவ்வொருவரும் அவயவங்களாய் காணப்படுகிற அநுபவமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக தனிப்பட்ட முறையில் நாம் தேவனோடு கொள்கிற ஐக்கியமும், வாழ்கையில் ஒவ்வொரு நொடிபொழுதும் அவர் நம்மோடு இருக்கிறார் என்ற நிச்சயமும், அவர் நமக்கு தரும் எல்லா ஆசிர்வாதங்களிலும் மேலானதாகும். இதையே தகப்பனும் மூத்தக்குமாரனுக்கு எடுத்துக் கூறினான்.

மேலும் இறுதியாக **"உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்; ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்கவேண்டுமே என்று சொன்னான்" (லூக் 15:32).** இங்கு தகப்பன் இளையக்குமாரன் தீய வழியில் சென்றிருந்தாலும், அவன் மூத்தக்குமாரனின் சகோதரன் என்பதையும், அவன் மீண்டும் தகப்பனிடம் வந்தது தனக்கு மாத்திரமல்ல மூத்தக்குமாரனாகிய அவனுக்கும் மகிழ்ச்சியான செய்தியே என்றும்,

தகப்பனுக்கு குமாரர்கள் செய்யும் பணிவிடையைக்காட்டிலும், அவர்கள் இருவருடைய ஐக்கியத்தையும், சகோதரர் மத்தியிலே ஐக்கியத்தையுமே தான் விரும்புவதாகவும், தனக்கு மிகுந்த சந்தோஷத்தை தருவதும் அதுவே என்பதை வெளிப்படுத்துகிறார்.

தேவனும் இதையே நம்மிடம் கூறுகிறார். நாம் அவருக்கு எவ்வளவு பிரயோஜனமானவர்கள் என்பதையோ, மற்ற மனிதர்களின் வாழ்க்கையால் அவருடைய நாமம் எப்படி மகிமைபடுகிறது என்பதை காட்டிலும், ஒவ்வொருவரும் மனந்திரும்பி உண்மையான தேவனுடைய அன்பை உணர்ந்து அவரோடு ஐக்கியமாய் இருப்பதையே அவர் மிகவும் விரும்புகிறார், அதுவே அவருக்கு மிகுந்த சந்தோஷத்தை தருகிறது என்பதையும் வெளிப்படுத்துகிறார்.

மேலும் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்கள் ஒவ்வொருவரும் சகோதரரே என்பதையும், எனவே ஒவ்வொருவரும் மனந்திரும்பி தேவனிடம் வரவேண்டும் என்பதே ஒரு தேவபிள்ளையின் வாஞ்சையாய் இருக்க வேண்டும் என்பதும், அவ்வாறு சக மனிதர்களை தேவனிடத்தில் வழிநடத்துவதே நாம் தேவனுக்கு செய்யும் மேலான ஊழியம் என்றும், அதுவே அவரையும், நம்மையும், மற்றெல்லாரையும், தேவதூதரையும், பரலோகத்தையும் சந்தோஷப்படுத்தும் என்றும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றே நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இச்சம்பவத்தை நமக்கு வேதத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு ஆண்டவர் கூறிய ஒவ்வொரு காரியத்தையும் எழுதினால், எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன் (யோ 21:25) ஆமென்.

# 9. சோர்ந்து போகிறவனுக்கு



**“சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து” (ஏசா 40:29).**

மேற்க்கண்ட வேத வசனத்தில், சோர்ந்து போகிறவனுக்கு என்ற வார்த்தை அவன் ஏற்கெனவே சோர்ந்து போன நிலையில் தற்போது உள்ளான் என்பதை வெளிப்படுத்துகிறது. அப்படிப்பட்ட ஒரு மனிதனுக்கு கர்த்தர் பெலன் கொடுக்கிறார்.

இங்கு நாம் காண்கிறபடி, ஒருவன் சோர்ந்து போனதால் தேவன் அவனை தள்ளிவிடுகிறதில்லை. பெரும்பாலும் நமக்கு விசுவாச பரீட்சை ஏற்படும்பொழுது, போராட்டங்களை நம்மால் தாங்கி கொள்ள முடியாது என்று நமக்கு தோன்றுகிறபோது, அல்லது அடியின் மேல் அடி விழும்பொழுது, நாம் எப்பேற்பட்ட விசுவாசம் உள்ளவர்களாய் இருந்தாலும் சோர்ந்து போகிறோம்.

வேதத்தில் உள்ள அநேக பரிசுத்தவாங்களும் இப்படிப்பட்ட வேளைகளுக்குள் கடந்து சென்றிருக்கின்றனர். 1 இரா 19:1-5 வசனங்களில் “எலியா செய்த எல்லாவற்றையும், அவன் தீர்க்கதரிசிகளெல்லாரையும் பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி அனைத்தையும், ஆகாப் யேசபேலுக்கு அறிவித்தான். அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால்,

தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச்சொன்னாள். அவனுக்கு அது தெரிந்தபோது எழுந்து, தன் பிராணனைக் காக்க யூதாவைச்சேர்ந்த பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப்போய், தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான். அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான்".

இங்கு நாம் கர்த்தருக்காக வைராக்கியம் பாராட்டி "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1 இரா 17:1) என்று ஆகாப் இராஜாவுக்கு முன்பாக முழங்கின எலியா தீர்க்கதரிசி, சகல இஸ்ரவேலர் முன்பும் பாகாலின் நானூற்றைம்பது தீர்க்கதரிசிகளின் முன்பும், வானத்திலிருந்து அக்கினி இறங்கி தன்னுடைய பலியை தேவன் அங்கிகரித்ததின் மூலம், "கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்" (1 இரா 18:39) என்று இஸ்ரவேல் மக்களை முகங்குபுற விழவைத்து, பாகாலின் நானூற்றைம்பது தீர்க்கதரிசி,களை வெட்டிப் போட்டு, தேவ வல்லமையை தன் வாழ்க்கையில் வெளிக்காட்டிய எலியா தீர்க்கதரிசி, தேவனால் அற்புதவிதமாய் போஷிக்கப்பட்டு (1 இரா 17:6,16), மரித்துபோன விதவையின் மகனை உயிரோடு எழுப்பிய எலியா தீர்க்கதரிசி (1 இரா 17:21,22), இப்பொழுது ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி, போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும், நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொன்னார்.

ஒரு பக்கம் விசுவாசத்தினால் அற்புதமான காரியங்களை செய்த எலியா தீர்க்கதரிசி இங்கு தான் சாக வேண்டும் என்று கூறுவதையும், தான் நல்லவன் அல்ல என்று கூறுவதையும் நாம் பார்க்கும்பொழுது, அவர் எவ்வளவாய் சோர்ந்து போய் இருந்தால் அவர் இவ்வாறு கூறமுடியும் என்பதை நிதானித்துக் கொள்ளலாம். ஆனால் இங்கு நாம் காண்கிற சோர்வு தேவன் மேல் அவர் வைத்திருந்த விசுவாசத்திலும், அன்பிலும் உண்டான தளர்வினால் ஏற்பட்ட ஒன்றல்ல. அல்லது சூழ்நிலையை குறித்த பயத்தினாலோ, மனுஷரை (ஆகாப், யோசபேல்) குறித்த பயத்தினாலோ உண்டானதல்ல.

இங்கு நாம் காண்கிற எலியாவின் சோர்விற்கு காரணத்தை அவரே தேவனிடம் 1 இரா 19:10,14 ஆகிய வசனங்களில் இருமுறை கூறுகிறார். "அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது

உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்" (1 இரா 19:10).

இங்கு எலியாவின் ஏக்கமெல்லாம் தான் தேவனுக்காக இவ்வளவு பக்தி வைராக்கியமாய் வாழ்ந்தும், தன் அரசனும், மக்களும் தேவனுடைய உடன்படிக்கையை தள்ளிவிட்டதினாலும், அவருடைய பலிபீடத்தை இடித்து அவருடைய தீர்க்கதரிசிகளை கொன்று, தன்னையும் கொல்ல தேடுகிறதினால், மேலும் மேலும் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாய் வாழ்வதை கண்டு தன்னுடைய ஊழியத்தை தொடர மனதில்லாமல் ஏற்பட்ட சோர்வினால் உண்டானதே தன்னை எடுத்துக்கொள்ளும்படியாய் அவர் தேவனிடம் கேட்ட வேண்டுதலாகும்.

இங்கு உண்டான சோர்வு, அவிசுவாசத்தினால் உண்டான சோர்வு அல்ல, அல்லது தேவனுக்காக போராட மனதில்லாததினால் உண்டான சோர்வு அல்ல, அல்லது தேவனால் இனி எதுவும் செய்ய முடியாது என்ற உணர்வினால் ஏற்பட்ட சோர்வு அல்ல, தன்னால் தேவனுக்கு ஒரு பிரயோஜனமான வாழ்வு வாழமுடியவில்லையே என்ற எண்ணமும், ஜனங்களின் குளிர்ந்து போன வாழ்க்கை நிலையுமே அவரை இப்படி வேண்டுதல் செய்ய வைத்தது.

எனவே தேவன் அவரை தைரியப்படுத்தி, அவர் செய்ய வேண்டிய வேலைகளை அவருக்கு கூறி, "ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்" (1 இரா 19:18) என்று கூறி அவரை ஆறுதல்படுத்தி, அவருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யும்படியாய் அவரை பெலப்படுத்தினார்.

இதையே நாம் ஏசா 40;29 வசனத்திலும் காண்கிறோம். எனவே சோர்ந்து போன வேளையில் தேவனால் பெலப்பட, நாம் சோர்ந்து போனோம் என்பதை முதலாவது தேவனிடம் அறிக்கையிட வேண்டும். அப்பொழுது "நம்முடைய பெலவினத்திலே அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும்" (2 கொரி 12:9). ஆனால் அதே நேரத்தில், தேவன் மேல் உள்ள விசுவாச குறைவினாலோ, சூழ்நிலைகளை குறித்த பயத்தினாலோ சோர்ந்து போய், போராட மனமற்றிறுப்பவனுக்கு வேதம் கூறும் ஆலோசனை "ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது" (நீதி 24:10).

இங்கு நாம் காண்கிறது என்னவென்றால், ஒரு தேவ பிள்ளை சோர்ந்து போவதற்கு காரணம் அவிசுவாசம் அல்ல, அது தேவன் மேல் அவனுக்கு

இருக்கும் ஒரு அன்பினாலும் ஏற்படலாம் என்பதையும், அதை அவரிடம் தெரிவிக்கும் பொழுது, ஒரு தாய் தன் பிள்ளையை கரடான பாதையில் சுமந்து செல்வது போல் சுமந்து செல்வார் என்பதை வெளிப்படுத்துகிறது.

இதுவே யோபுவின் வாழ்விலும் நடந்தது. அவருடைய பல்வேறு வார்த்தைகள் தேவனை கேள்விக்கேட்பது போல இருக்கிறது. அவருடைய நண்பர்களும் அவருடைய வார்த்தைகள் அவிசுவாசத்தினால் உண்டானது என்று எண்ணினர். ஆனால் தேவன் யோபுவின் இருதயத்தை அறிவார். ஆதலால், அவரை ஆறுதல்படுத்தி ஆசிர்வதித்தார்.

எனவே நாம் சோர்ந்து போகும் வேளையில், அது எதினால் உண்டானது என்பதை நாம் முதலாவது புரிந்து கொள்ள வேண்டும். எது எப்படி இருந்தாலும் நம்முடைய சோர்வுகளை எல்லாம் தேவனுக்கு தெரியப்படுத்தும் பொழுது, அவர் அதைப் பொறுப் பெடுத்துக்கொள்வார். தேவன் நம்மிடம் எதிர்பார்பது எல்லாம் அவர் அதைப் பொறுப் பெடுத்துக்கொள்வார் என்ற அறிவு நமக்கு இருக்க வேண்டும் என்பதே. தேவன் தாமே, நம் ஒவ்வொருவரையும், ஆறுதல்படுத்தி, தேறுதல்படுத்தி நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக, ஆமென்.

# 10. காலங்கள்

## என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது (சங் 31:15)



காலங்கள் தேவனுடைய கரத்திலிருக்கிறது என்பது முக்காலங்களையும் அவர் ஆளுகிறவர் என்பதை வெளிப்படுத்துகிறது. ஒரு சாதாரண மனிதனால் இறந்த காலத்தில் நடந்து முடிந்த காரியங்களை மாற்றவோ, எதிர்காலத்தில் நடக்க இருக்கும் காரியங்களை நிருணயம் பண்ணவோ முடியாது. நிகழ்காலத்தின் மீதும் அவனுக்கு முழு ஆளுகையில்லை. இதை நாம் அன்றாடம் நமது வாழ்க்கையில் காண்கிறோம்.

நம்மால் அநேக நேரங்களில் குறிப்பிட்ட வேலைகளை அதற்கு குறித்த நேரத்திற்குள் செய்து முடிக்க முடிவதில்லை. குறித்த நேரத்தில் நாம் செல்ல வேண்டிய இடத்திற்கு நாம் செல்ல முடிவதில்லை. காரணம், காலம் (நேரம்) நமக்காக நிற்கப்போவதில்லை. நாம் தான் நேரத்தோடு இசைந்து சென்று வேலைகளை முடிக்க வேண்டும். எனவே காலங்கள் (நேரங்கள்) தான் நம்மை ஆளுகின்றன. ஆனால் தேவனுடைய காரியத்தில் அவர்தான் காலத்தை ஆளுகிறவர்.

தேவன் நிகழ்காலத்திற்க்கும், எதிர்காலத்திற்கும் பயன்படும் வகையில் கடந்த கால நிகழ்வுகளை மாற்றமுடியும், அமைக்க முடியும் என்பதை நாம்

புரிந்துகொள்ள வேண்டும். மற்றொரு விதத்தில் சொல்ல போனால் மூன்று காலங்களிலும் நடக்கும் வெவ்வேறு நிகழ்வுகளை ஒன்றிணைக்க, அவர் எந்த காலத்தில் நடக்கும் எந்தவொரு நிகழ்வையும் அதற்கேற்ற விதமாய் மாற்றமுடியும். அப்படியாய் தேவன் கிரியை செய்த அநேக காரியங்கள் வேதத்தில் உள்ளது. அவற்றை இப்பொழுது காண்போம்.

யோசேப்பின் வாழ்க்கையில், அவருடைய தகப்பன் யாக்கோபு மரித்தபின்பு, அவருடைய சகோதரர்கள் அவரிடத்தில் வந்து கடந்த காலத்தில் தாங்கள் செய்த தீமையை மன்னிக்க வேண்டும் என்று கேட்டு கொண்டபோது, **"யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" (ஆதி 50:19,20).**

இங்கு நாம் காண்பது, யோசேப்பு கடந்த கால நிகழ்வுகளை ஏதோ நடந்து விட்ட தவறுகளாக பாராமல், அதிலும் தேவன் தம்முடைய திட்டத்தையே நிறைவேற்றினார் என்று கூறுகிறான். ஏனெனில் இவையாவும் நடப்பதற்கு முன்பதாகவே **ஆதி** 37:5-11 வசனங்களில், எதிர்காலத்தில் நடக்க இருக்கும் காரியங்களை குறித்து சொப்பனத்தின் மூலம் யோசேப்பிற்கு தேவன் அவற்றை வெளிப்படுத்தினார். ஆனால், அவை நடப்பதற்கான எந்த சூழ்நிலையும் அந்நேரத்தில் இல்லை. ஆகிலும் முக்காலத்தையும் ஆளுகிற தேவன், ஒவ்வொரு காலத்திலும் அதற்கேற்றவிதமாய் சூழ்நிலைகளை மாற்றி இறுதியில் தாம் கூறியவற்றை நிறைவேற்றினார்.

யோசேப்பு இஸ்மவேலர் கையில் விற்கப்பட்டதும் **(ஆதி** 37:28), போத்திபாரின் வீட்டிலிருந்து சிறைசாலைக்கு கொண்டு போகப்பட்டதும் **(ஆதி** 39:20), பானபாத்திரக்காரன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டதும் **(ஆதி** 40:23), பார்வோனுக்கு உண்டான சொப்பனமும் **(ஆதி** 41:1), பானபாத்திரக்காரனுக்கு யோசேப்பின் நினைவு வந்ததும் **(ஆதி** 41:9), சகல தேசங்களிலும் உண்டான பஞ்சமும் **(ஆதி** 41:57), தேவனுடைய திட்டத்தின்படியே சொப்பனத்தின் மூலம் யோசேப்பிற்கு சொல்லப்பட்ட எதிர்கால நிகழ்விற்கு நேராய் நடந்தது.

இக்காலங்களுக்கு ஊடாய் தேவன் யோசேப்பை பல்வேறு காரியங்களில் பழக்குவித்தார். இறுதியில் அவனை ஒரு நல்ல தலைவனாக, தேவ மனிதனாக நிறுத்தினார். இதைப்போன்ற காரியத்தையே நாம் மோசேயின் வாழ்விலும் காண்கிறோம். மோசேயின் பிறப்பு முதல் அவருடைய முடிவு வரை தேவனுடைய திட்டம் அவருடைய வாழ்க்கையில் நிறைவேறுதை நாம் காணலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக **ஆதி 3:15** இல் தேவன் சொன்ன **“உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்”** என்ற வார்த்தையின் ஊடாகவே வேதத்தின் அனைத்து நிகழ்வுகளையும் தேவன் அமைத்திருக்கிறார். இங்கு காலங்கள் என்றவுடன் வெறும் காலநேரத்தின் (Time) மீது மட்டும் தேவன் ஆளுகை செய்கிறார் என்று நாம் நினைத்துவிடக்கூடாது. ஏனெனில் கால சூழ்நிலைகளின் மேலும், அண்ட சராசரங்களின் மீதும் (Universe) அவர் ஆளுகை உடையவராய் இருக்கிறார்.

இதையே நாம் யோசுவாவின் வாழ்க்கையிலும் காண்கிறோம். **யோசுவா 10:12-14** வசனங்களில் **“கர்த்தர் எமோரியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கிற அந்நாளிலே, யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக: சூரியனே, நீ கிபியோன்மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கின்மேலும், தரித்துநில்லுங்கள் என்றான். அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் தரித்தது, சந்திரனும் நின்றது; இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா; அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு பகல்முழுதும் நடுவானத்தில் நின்றது. இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்தநாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப் பின்னுமில்லை; கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார்”**. இங்கு நாம் காண்கிறபடி சூரியன் தரித்தது, சந்திரன் நின்றது, சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு பகல்முழுதும் நடுவானத்தில் நின்றது போன்ற வார்த்தைகள் கால சூழ்நிலைகளின் மேலுள்ள தேவனுடைய ஆளுகையை வெளிப்படுத்துகிறது.

இதையே நாம் எசேக்கியாவின் வாழ்க்கையிலும் காணலாம் **(2 இரா 20:11)**. மேலும் **யோபு 38:31-33** வசனங்களில் **“அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக்கூடுமோ? அல்லது மிருகசீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ? இராசிகளை அதினதின் காலத்திலே வரப்பண்ணுவாயோ? துருவச்சக்கர நட்சத்திரத்தையும் அதைச் சேர்ந்த நட்சத்திரங்களையும் வழிநடத்துவாயோ? வானத்தின் நியமங்களை நீ அறிவாயோ? அது பூமியையாளும் ஆளுகையை நீ திட்டம்பண்ணுவாயோ?”**, இங்கு தேவனுடைய ஆளுகையை நாம் காணலாம்.

நாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத எத்தனையோ விண்மீன் மண்டலங்களையும், நம்முடைய பூமியின் கால நிலைகளுக்கே அப்பாற்ப்பட்ட மற்ற கால நிலைகளையும் ஆளும் தேவன், காலத்திற்கு அப்பாற்ப்பட்டவர். அவருக்கு முன்பாக மனிதராகிய நாம் ஒன்றுமில்லை.

அவரே சகலவற்றையும் சிருஷ்டித்தவர். அவர் கரங்களில் நம்முடைய காலங்கள் (இம்மைக்குரிய வாழ்க்கை மற்றும் மறுமைக்குரிய வாழ்க்கை) இருக்கிறது. எனவே நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் சகலவற்றையும் ஆளுகிற அவரையே சார்ந்து கொள்வோம், ஆமென்.

# 11. எருசலேம் பயணம்

**எருசலேமே, உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று (சங் 122:2)**



**இந்த சிந்தனை ஆவிக்குரியரீதியில் வளருவதற்கே அன்றி, யாரையும், எதையும் குற்றப்படுத்த அல்ல.**

**எருசலேம் பயணம்:**

கிறிஸ்தவர்களில் அநேகர் ஒரு தடவையாவது எருசலேம் சென்று வர வேண்டும் என விருப்பம் உள்ளவர்கள். இதில் தவறேதும் இல்லை. ஆனால் நாம் யாரோடு எருசலேம் செல்ல போகிறோம் என்பதே கேள்வி. ஏனென்றால் அநேக சுற்றுலா அமைப்பாளர்கள் எருசலேமிற்கு நம்மை அழைத்து செல்ல முடியும். அதே நேரத்தில் கிறிஸ்துவும் நம்மை எருசலேமிற்கு அழைத்து செல்வதாக வாக்களித்திருக்கிறார். ஆயிர வருட அரசாட்சியில் அவர் எருசலேமில் இருந்து அரசாளுவார். அதுமாத்திரமல்ல ஆயிர வருட அரசாட்சிக்கு பின்பும், புதிய வானம், புதிய பூமியிலும், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரமே காணப்படுகிறது (**வெளி** 21:1,2). எனவே தேவ பிள்ளைகள் அனைவரும் ஒரு நாள் எருசலேமிலே இருக்க போவது உறுதி.

இப்போழுது இவ்விரண்டில் (சுற்றுலா அமைப்பாளர்கள் அல்லது ஆண்டவர்) எதை நாம் தெரிந்து கொள்வது என்பதே கேள்வி. எனவே இவ்விரண்டு வழிகளையும் நாம் ஒப்பிட்டு பார்ப்போம்.

சுற்றுலா அமைப்பாளர்கள் நாம் விரும்பின நேரத்தில் நம்மை அழைத்து செல்வார்கள். ஆனால் ஆண்டவரோ அவர் நினைத்த வேளையிலேயே

வந்து நம்மை கூட்டிச்செல்வார். எனவே இங்கு நமக்கு பொறுமை அவசியமாய் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் சுற்றுலா அமைப்பாளர்களுக்கு நாம் கட்டணம் (கிரயம்) செலுத்த வேண்டும். ஆண்டவரோ தம்மையே கிரயமாக கொடுத்து நம்மை தகுதிப்படுத்தியிருக்கிறார். நாம் செல்வதற்கு நமது அரசாங்கத்திடமும், இஸ்ரவேல் அரசாங்கத்திடமும், பாஸ்போர்ட், விசா போன்ற காரியங்களில் அனுமதி பெற வேண்டும். ஆனால் ஆண்டவரோ இரட்சிப்பு என்னும் காரியத்தின் மூலம் நமக்கு பாஸ்போர்ட், விசா எல்லாம் கொடுத்துவிட்டார்.

மேலும் சுற்றுலா அமைப்பாளர்கள் நம்மை ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் மட்டும்தான் அங்கு தங்க வைக்கமுடியும். ஆனால் ஆண்டவரோ நாம் என்றென்றும் எருசலேம் குடிமக்களாய் இருக்க, நம்மை அங்கு கொண்டு செல்ல இருக்கிறார். அங்கு நாம் எப்பொழுதும் ஆண்டவரோடு இருப்போம். மேலும், சுற்றுலா அமைப்பாளர்கள் நம்மை எருசலேம் அழைத்து செல்லும்பொழுது, விமானத்தில் மும்பாய் (via Mumbai) போன்ற நகரத்தின் வழியாக நம்மை அழைத்து செல்வர். ஆனால், ஆண்டவரோ நம்மை பரலோகத்தின் வழியாக (via Heaven) (பரம) எருசலேம் அழைத்துச் செல்வார். இப்பொழுது நமது மாம்ச சரீரம் மாத்திரமே எருசலேம் செல்ல முடியும். ஆனால், ஆண்டவர் நம்மை இப்படியே கூட்டி செல்லாமல், மகிமையுள்ள மறுரூபமான சரீரத்தை நமக்கு கொடுத்து அதனையே கூட்டி செல்வார்.

மேலும் சுற்றுலா அமைப்பாளர்கள், நாம் நம்மோடு சிலரையும் அழைத்து சென்றால், நமக்கு கட்டண சலுகைகளை கொடுப்பர். ஆனால் ஆண்டவரோ, நாம் பெற்ற இரட்சிப்பை மற்றவருக்கும் அறிவித்து அவர்களையும் (பரம) எருசலேம் பயணத்திற்கு தகுதியுள்ளவர்களாக்கும் பொழுது, நம்மோடு அனைவரையும் இலவசமாகவே (பரம) எருசலேமிற்கு கூட்டிச்செல்வார். அதே நேரத்தில் அநேகரை ஆண்டவர் அண்டை கூட்டி வந்ததற்கு நமக்கு பல பரிசுகளையும் தருவார். ஏனெனில் **"அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள்" (தானி 12:3)** நிச்சயமாகவே பலனடைவார்கள்.

எனவே, ஆண்டவர் நமக்கு எருசலேம் செல்வதற்காண வாய்ப்புகளையும், சூழ்நிலைகளையும் தருவாரானால், நாம் தாராளமாக செல்லலாம். ஆகிலும் நமது இக்கால எருசலேம் பயணம், நமது வருங்கால எருசலேம் பயணதிற்கு ஆவிக்குரியரீதியில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாத வரையில் அதனால் பிரயோஜனமில்லை.

எனவே இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்னவென்றால், நாம் இப்பொழுது இருக்கிற எருசலேமிற்கு சுற்றுலா அமைப்பாளர்கள் மூலமாக போவதை பார்க்கிலும், வரப்போகிற மகிமையான எருசலேமிற்கு பிரஜைகளாய் மற்றவரையும் ஆயத்தப்படுத்தி அழைத்து செல்லும் பரலோக

சுற்றுலா அமைப்பாளர்களாகவே நாம் இருக்க ஆண்டவர் விரும்புகிறார். நமக்கும் அதுவே விருப்பமாக இருக்கட்டும். அப்படியென்றால் நாம் இப்பொழுது வேறு எந்த நாட்டிற்கும், இடத்திற்கும் செல்ல வேண்டாமா? தாராளமாக செல்லலாம். ஏனென்றால் அவை எல்லாம் இன்னும் சிறிது காலத்தில் அக்கினிக்கு இரையாக போகின்றன **(2 பேதுரு 3:7)**. எனவே ஆண்டவர் அனுமதித்தால் நாம் அவற்றை போய் பார்க்கலாம். ஏனென்றால் நம்மால் அவற்றை பிறகு காண இயலாது.

எனவே சுற்றுலா அமைப்பாளர்களுடன் எருசலேம் சுற்றுலா போவதை காட்டிலும், அதே பணத்தை, நேரத்தை ஆண்டவருக்காக செலவிட்டு அநேகரை (பரம) எருசலேம் பயணத்திற்கு (குடி பெயர்தலுக்கு) தகுதியுள்ளவர்களாக்குவதே, நம் வாஞ்சையாய் இருக்கட்டும். எனவே உலகமெங்கிலும் செல்வோம், அனைவரையும் எருசலேம் நோக்கி திருப்புவோம்.

இறுதியாக, இக்கால எருசலேம் பயணத்தின் மூலம், ஒரு நாள் நாம் இதே இடத்தில் மகிமையுள்ள மறுருபமான சரீரத்தோடு, எவ்வித கவலையுமின்றி, சமாதானமாய் ஆண்டவருடைய ஆளுகையில் அவரோடு இருப்போம் என்ற எண்ணமே நமக்கு இந்நகரத்தை பார்க்கும் பொழுது உண்டாக வேண்டும். அப்பொழுதே, நமது இக்கால பயணம், நம்மை மறுபடியும் எருசலேமிற்கு ஆண்டவரோடு போக வேண்டும் என்ற விருப்பத்தையும், உத்வேகத்தையும் உண்டாக்கும், ஆமென்.

## 12. மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும்

**மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம் (சங்118:8)**




நாம் பிறந்ததில் இருந்து, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும், ஒரு சில மனிதரை சார்ந்தே நம் வாழ்க்கை பயணம் செல்கிறது. பெற்றோர், உடன் பிறந்தோர், ஆசிரியர்கள், நண்பர்கள், உற்றார் உறவினர், கணவன், மனைவி, பிள்ளைகள், வேலை ஸ்தலத்தில் உள்ளோர் என்று ஒவ்வொரு மனிதனின் / மனுஷியின் வாழ்க்கையும் இப்படிப்பட்ட மனிதர்களை சார்ந்தே / நம்பியே கடந்து செல்கிறது.

தேவன் அப்படியே நம் வாழ்க்கை முறையை உண்டாக்கியிருக்கிறார். **லூக் 2:52** கூறுகிறது இயேசுவானவரும் மனுஷர் தயவில் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் என்று. மேலும் கிறிஸ்துவும் தம் பணியை செய்ய சீஷர்களையே (மனிதர்களையே) நம்பி அவர்களிடம் அதை ஒப்புவித்தார் **(மத் 28:19,20)**. எனவே மனிதர்களை சாராமல் / நம்பாமல் ஒருவராலும் வாழ்க்கையில் எதையும் செய்ய முடியாது என்பது உண்மை.

ஆனால் **ஏசா 2:22** கூறுகிறது **"நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்"** என்று. மேலும் மேற்கண்ட **சங் 118:8** வசனத்திலும் **"மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்"** என்று காண்கிறோம். மேலும் **யோ 2:23-25** வசனங்களில் **"பஸ்காபண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை"**.

இங்கு நாம் காண்கிறபடி கிறிஸ்துவும் **"மனிதர்களை நம்பி இணங்கவில்லை"** என்று வாசிக்கிறோம். எனவே ஒருபுறம் அவர் சில மனிதரை தமது சித்தத்தை செய்ய ஏற்படுத்தினாலும், அவர் பொதுவாக மனிதரை நம்பி அவர்கள் சொல்லுக்கும், செயலுக்கும் இணங்கவில்லை. ஏனெனில் 24 வசனம் கூறுகிறது **"இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால்"** என்று, மேலும் 25 வசனம் கூறுகிறது **"மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை"** என்று. அவர் தேவனாக இருக்கிறபடியால், மனுஷர் உள்ளத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தபடியால் அவரால் எந்த எந்த காரியங்களில் மனுஷரை சார வேண்டும், எவ்வெவற்றில் அவர்களை சார கூடாது என்பதை அறிந்திருந்தார்.

ஆனால் சாதாரண மனிதராகிய நம்மால் இவ்வாறு மற்ற மனிதரை ஆராய்ந்து அறிவது கூடாத காரியம். இப்படிப்பட்ட வேளைகளில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையே **சங் 118:8** இல் காண்கிறோம். நாம் மனிதரை நம்பாமல், நம் வாழ்க்கையில் உடல் ரீதியாகவும், உள்ள ரீதியாகவும் ஒரு அடி கூட முன் செல்ல முடியாது. நம் ஆசிரியர் கூறியதை நம்பிதான் நம் அறிவை வளர்த்து கொண்டோம், வாழ்க்கையில் முன்னேறுகிறோம். தினமும் பேருந்து ஓட்டுநரை நம்பிதான் நாம் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்கிறோம். எனவே அவர்களை நம்பாமல், நம்மால் வாழமுடியாது. ஆனால் அதே நேரத்தில் நாம் நம்பின எதிர்பார்ப்புக்கு ஏற்றார் போல் மற்ற மனிதர்கள் நூறு சதவிகிதம் எல்லா நேரத்திலும் செயல்படுவார்களா என்பதே கேள்வி? இதன் பதில் இல்லை என்பதே ஆகும்.

நமக்கு மிகவும் நெருக்கமானவர்கள், குடும்பத்தார் முதற்கொண்டு எந்த மனிதரும் நாம் நினைத்தாற் போல் செயல்படுவதில்லை. ஏனெனில்

ஒவ்வொரு மனிதரின் வாழ்வும் அவர்களை மையப்படுத்தி வாழப்படுவதே தவிர நம்மை மையப்படுத்தியது அல்ல. ஒரு ஒட்டுநரை நம்பி நாம் பேருந்தில் ஏறினாலும், பேருந்து வழியில் பழுதடைந்து நின்றால் அதற்காக ஒட்டுநர் நம்மை கொண்டுபோய் சொன்ன இடத்தில் சேர்க்க முடியவில்லையே என்று கவலைப்பட போவதில்லை. நமக்கு, நோய்க்கு மருந்து தரும் மருத்துவரும் அப்படியே. நம்முடைய ஆசிரியர்களும் அப்படியே.

இப்படியே நாம் பார்க்கபோனால், நாம் சார்ந்து இருக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் ஒரு குறிப்பட்ட அளவே நாம் சார்ந்து கொள்ளகூடியவர்களாயிருக்கிறார்கள். மேலும் நாம் நம்மையே சார்ந்து வாழவும் முடியாதவர்களாய் இருக்கிறோம். ஏனெனில் அநேக நேரங்களில் நமக்கு நன்மையானது இன்னது என்று தெரிந்தும் நாம் நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளையே செய்கிறோம். இதையே **ரோ 7:15-25** வசனங்களில் நாம் காண்கிறோம்.

எனவே நாம் முழுமையாய் நம்பகூடிய, சார்ந்துகொள்ளகூடிய, எல்லாவற்றிக்கும் மேலாக பற்றிக்கொள்ளகூடிய ஒருவர் உண்டென்றால் அவர் தேவன் ஒருவரே. எனவே தான் **சங் 118:8** இல் **"கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்"** என்று கூறப்பட்டுள்ளது. ஆம், ஏதோ இம்மைக்கான தேவைகளுக்காய் மாத்திரம் அவரை நம்புகிறவர்களாய் அல்ல, இம்மைக்கும், மறுமைக்குமான வாழ்க்கை முழுவதிலும் ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு காரியத்திலும் அவரையே பற்றிக்கொண்டவர்களாய் இருப்பதே நலமாகும்.

ஏனென்றால் அவரே நமது கடந்தகால, நிகழ்கால மற்றும் வருங்கால வாழ்க்கை காரியங்கள் முழுவதையும் அறிந்தவர், அவற்றை ஆளுகைசெய்பவர். மனுஷர் உள்ளத்திலிருப்பதை அறிந்தவர் மாத்திரமல்ல, மனுஷரின் பாதைகளை வகுப்பவரும் அவரே. "இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல் அழைப்பவரும்" அவரே. "நம்மை நித்திய ஜீவகரையில் சேர்ப்பவரும்" அவரே. அவரை நம்பி வாழும் வாழ்க்கை இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட, அற்புதமாய் நடத்தப்படும் வாழ்க்கையாகும். **அப் 17:28** கூறுகிறது **"ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்"** என்று.

மேலும் **சங் 22:10** கூறுகிறது **"கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன்; நான் என் தாயின் வயிற்றில் இருந்ததுமுதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்"** என்று. எனவே இப்படியாய் நாம் தேவனை நம்ப / சார்ந்துகொள்ள / பற்றிக்கொள்ள, நமக்கு தேவனோடு பிரியாத நல்ல ஐக்கியம் வேண்டும். வேறு எந்த மனிதரோடு கொண்டுள்ள ஐக்கியத்தை காட்டிலும், தேவ ஐக்கியத்தை நாம் அதிகமாய் தேடினால் மனிதர் நம்மை

கைவிடும் நேரங்களிலும், அவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். எனவே தேவனையே சார்ந்துகொள்வோம். மனிதரையும் தேவன் தந்தருளும் எல்லைக்குள்ளே சார்ந்துகொள்வோம். ஏனெனில் (அவரே) **"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி 13:8)** ஆமென்.

குறிப்பு: **சங்கீதம் 118:8 என்னும் இவ்வசனம் வேதத்தின் மைய வசனமாகும். நம் வாழ்க்கையிலும் தேவனே மையமாய் இருப்பாரானால் நாம் ஒருபோதும் தனித்துவிடப்படுவதில்லை.**

# 13. நல்ல மேய்ப்பன்

## நானே நல்ல மேய்ப்பன் (யோ 10 : 11)




பரிசுத்த வேதாகமத்தில் சபையானது பல பெயர்களை பெற்றிருந்தாலும், அவற்றில் முக்கியமானது தேவனுடைய மந்தை (ஆட்டு மந்தை) என்பதாகும். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்களும் தேவ மந்தையாகவே காணப்படுகின்றனர். குறிப்பாக ஆட்டு மந்தையானது தன்னிசையாக செயல்பட கூடியதாயிராமல், எப்பொழுதும் ஒரு மேய்ப்பனுடைய கண்காணிப்பின் கீழ், அவனுடைய போஷிப்பின் கீழ், பாதுகாப்பின் கீழ் செயல்படகூடியதாக உள்ளது. அதுபோலவே தேவனுடைய ஜனங்களும் எப்பொழுதும் தேவனுடைய ஆளுகையின் கீழ், பாதுகாப்பின் கீழ், போஷிப்பின் கீழ் செயல்படகூடியவர்கள்.

ஆகிலும், பழைய ஏற்பாட்டில் தேவன் தம்முடைய ஜனங்களை மேய்க்கும்படியாக மோசே, தாவீது போன்ற சில தேவ மனிதர்களை தெரிந்தெடுத்தார். புதிய ஏற்பாட்டிலும் மேய்ப்பர் ஊழியத்தை ஏற்படுத்தி அதின் மூலம் சபை மேய்ப்பர்கள் (ஆயர்கள்) வழியாக தம்முடைய சபையை போஷித்து, பாதுகாத்து நடத்தி வருகிறார். இப்பொழுது ஒரு மேய்ப்பனின் குணநலங்களை குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **யோவான் 10ஆம்** அதிகாரத்தில் கூறியதை காண்போம். **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை நல்ல மேய்ப்பன் என்று கூறுகிறார் (யோ 10 : 11).** மேலும் பிரதான

மேய்ப்பரும் அவரே. எனவே அவர் கூறும் மேய்ப்பனின் குணநலங்களை காண்போம்.

**"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்" (யோ 10:1,2)**, மேற்கண்ட வசனங்களில் நாம் காண்கிறபடி, ஆடுகளின் மேய்ப்பனே அவற்றை நேரடியாக சந்திக்க கூடியவனாயிருக்கிறான். நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மை நேரடியாக நம்முடைய வாழ்க்கையில் சந்தித்து, நம்மை தம்முடைய மந்தையாக சேர்த்துகொண்டார்.

தேவனுடைய நற்செய்தியை அறிவித்து மக்களை சபையாக கூட்டிச் சேர்க்கும் மேய்ப்பர் ஊழியத்தை செய்வோரும் அப்படியாகவே மக்களை நேரடியாக (வெளிப்படையாக) சந்தித்து, எந்த ஊள் நோக்கமும் இல்லாமல் அவர்களுடைய ஆத்தும இரட்சிப்பிற்காகவே அவர்களை ஆண்டவரண்டையில் சபையாக கூட்டி சேர்கின்றனர். ஆனால் வேறுவிதமாய் மக்களை தம் பக்கம் இழுக்கும் நோக்கத்துடன் செயல்படும் மனிதரோ, கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள் (யோ 10:2). எனவே இவர்கள் நல்ல மேய்ப்பர்களாயிராமல், கள்ள மேய்ப்பரும், ஆடுகளையே கொள்ளையிடுகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

**"வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்" (யோ 10:3,4,5).** மேற்கண்ட வசனங்களில் நாம் காண்கிறபடி, ஆடுகளின் மந்தை அண்டை வந்த நல்ல மேய்ப்பர் அவற்றை பேர் சொல்லி அழைக்கிறார். அவைகளும் அவருடைய சத்தத்தை அறிந்து அவருக்கு பின்செல்லுகின்றன. இவ்வாறாக ஆண்டவரும் நம்மையும் பெயர்சொல்லி அழைத்து நீ என்னுடையவன் என்று நம்மை சேர்த்துக்கொண்டார்.

நாமும் அவருடைய சத்தத்தை அறிந்தவர்களாய் இருப்போமானால், அவருடைய சத்தத்திற்கு (வார்த்தைக்கு) மாத்திரம் செவிக்கொடுத்து அவர் பின்சென்று, மற்ற உலக சத்தங்களை நம்மை விட்டு விலக்கிப்போடுவோம்.

பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை போலவே, அவருடைய ஊழியர்களான மேய்ப்பர்களும், தங்களுக்கென்று தேவன் கொடுத்த மந்தையின் நிலையை நன்கு அறிந்தவர்களாய், மந்தையின் தேவைகளை உணர்ந்தவர்களாய், பெயர் சொல்லி அழைப்பதுபோல, தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு ஆத்துமாவின் மேலும் கரிசனை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அதேவேளையில், மந்தையோடு இப்படிப்பட்ட ஒரு நெருங்கிய உறவும், கரிசனையும் இல்லாமல் அவற்றை மேய்க்க முற்படுகிறவர்களை விட்டு அவை ஓடிப்போம்.

**"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோ 10:10)**, மேற்கண்ட வசனத்தில் நாம் காண்கிறபடி, நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மந்தைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் (மறுபிறப்படைந்து பெற்ற புதிய ஜீவன்), அது பரிபூரணப்படவும் (கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சி) வந்தேன் என்கிறார். அதுபோலவே தேவ ஊழியக்காரரான, மேய்ப்பர்களும் தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட மந்தை ஆவிக்குரிய ஜீவனோடு காணப்படவும், கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியாகிய பூரண புருஷர்களாய் மாறவும் தக்கதாய் அவற்றை மேய்க்க வேண்டும். ஆனால் பொல்லாத மேய்ப்பகளின் மூலமாகவோ, ஆடுகளின் ஜீவன் (சபை ஆத்துமாக்களின் ஜீவன்) கொள்ளையாடப்பட்டு, பரீபூரணப்படுவதற்கு பதிலாக (கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சி), உலக வேஷத்தை தரித்துக் கொண்டவர்களாய் மாற்றப்படுகின்றனர்.

எல்லாவற்றிற்க்கும் மேலாக **யோ 10:11 இல் "நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்"** என்று ஆண்டவர் கூறியுள்ளபடி, நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய ஆடுகளாகிய நமக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தார். இவ்வாறாக ஊழியத்தை செய்கிற மேய்ப்பர்களும் தங்களிடம் தேவன் தந்த மந்தையை பாதுகாத்து, அவற்றின் ஜீவனை காப்பாற்ற தம் ஜீவனையும் (எல்லாவற்றையும் இழக்க) கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஊழியத்தை செய்த அநேக தேவ பிள்ளைகளை நாம் சபை வரலாற்றில் காண்கிறோம். அவர்களுடைய தியாகமான ஊழியத்தினால் இன்று எத்தனையோ இடங்களில் தேவனுக்கு மகிமையாய் சபைகள் எழும்பியிருக்கிறதை நாம் காணலாம். இவ்வாறாக அவர்கள் ஊழியத்தை செய்வதற்கு காரணம், அவர்களின் பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மந்தைக்காக தன் ஜீவனையே கொடுத்திருக்கிறார்.

ஆனால், வெறும் கூலிக்காகவே (ஆதாயத்திற்காகவே) மந்தையை மேய்க்க வந்த பொல்லாத மேய்ப்பன், ஓநாய் (பாடுகள், கள்ள உபதேசம்) வருகிறதை

கண்டு ஆடுகளை (சபையை) விட்டு ஓடிப்போகிறான் (கவலைப்படாதிருக்கிறான்). **"அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்" (யோ 10:12,13).**

எனவே சபை ஊழியத்தை (மேய்ப்பர் ஊழியத்தை) செய்ய அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் அழைப்பின் மேன்மையை உணர்ந்து, தாங்கள் தங்களுக்காக சபையை மேய்க்காமல், தங்களிடத்தில் கணக்கு கேட்கப்போகிற பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காகவே, சபையாகிய மந்தையை மேய்த்து, ஆண்டவர் வருகையில் அவரண்டை சபையை ஒப்படைக்கிறவர்களாய் காணப்பட வேண்டும். **"அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோ 10:16).**

மேலும் மேய்ப்பர் ஊழியமாகிய சபை ஊழியத்தில் மற்ற ஊழியங்களாகிய சுவிசேஷம் சொல்வதும், போதகம் செய்வதும் அடங்கியிருக்கிறது. மேலும் சபையை குறித்த ஒரு தீர்க்கதரிசன பார்வை, மேய்ப்பர் ஊழியத்தை செய்பவர்க்கு தேவையாயிருக்கிறது. இவை எல்லாவற்றையும் ஒருங்கே செய்யும் பொழுது, அது அப்போஸ்தல ஊழியத்திற்கு வழியாகவும் இருக்கிறது.

எல்லாவற்றிற்க்கும் மேலாக ஒரு நல்ல மேய்ப்பனுக்கு **"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்" (சங் 23:1)** என்ற தாவீதின் அனுபவம் வேண்டும். ஏனெனில் இந்த தாவீதையே **"கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை (தாவீதை), தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக, (கர்த்தரே) அழைத்துக்கொண்டுவந்தார்" (சங் 78:71)**. எனவே நல்ல மேய்ப்பனானவன், தன்னுடைய கையில் கொடுக்கப்பட்ட மந்தையை உண்மையுடன் மேய்த்து பிரதான மேய்ப்பராகிய ஆண்டவரண்டை கூட்டிச்சேர்ப்பானாக. **"அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" (1 பேதுரு 5:4)**. வேதத்தில் ஆண்டவர் பல இடங்களில் மேய்ப்பகளை குறித்து கூறியுள்ளார், **"அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்" (யோ 21:25)** ஆமென்.

## 14. உன்னதப்பாட்டின் உன்னதங்கள்



**(1) என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள். அவர் லீலிபுஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார் (உன் 2:16)**

நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். (யோ 17:21)

நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். (யோ 17:23)

நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன். (எபே 5:30-32)

**(2) என்னை இழுத்துக்கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம். (உன் 1:4)**

இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். (யோ 10:16)

அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: எங்கே, ஆண்டவரே, என்றார்கள். அதற்கு அவர்: பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும் என்றார். (லூக் 17:37)

நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். (யோ 12:32)

**(3) நான் சாரோனின் ரோஜாவும், பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பமுமாயிருக்கிறேன். (உன் 2:1)**

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.
இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். (II கொ 2:14,15)

**(4) நேசம் மரணத்தைப்போல் வலிது; நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது. (உன் 8:6)**

நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். (யோ 10:15)

**(5) நான் நித்திரைபண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது; கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக் கேட்டேன். (உன் 5:2)**

இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான். (வெளி 3:20)

## 15. வாழ்க்கை படகு




கடல் என்னும் இவ்வுலகில், வாழ்க்கை என்னும் என் படகில் அநேகரோடு பயணித்து கொண்டிருந்தேன். திடீரென்று பலத்த புயல் விசீயது, இருள் சூழ்ந்தது, எந்த திசையிலும் எந்த கரையும் தென்படவில்லை. ஐயோ! ஆண்டவரே புயல் விசுகிறதே (நாச மோசங்கள்) என்றேன், ஆண்டவர் அமைதியாய் இருந்தார். எல்லாம் இருளாய் (பயங்கரங்கள்) இருக்கிறதே என்றேன், ஆண்டவர் அமைதியாய் இருந்தார். எந்த கரையும் (வழியும்) தென்படவில்லையே என்றேன், ஆண்டவர் அமைதியாய் இருந்தார். எனக்கு அருமையானவர்களை காப்பாற்றும் என்றேன், ஆண்டவர் அமைதியாய் இருந்தார். மற்ற மனிதர்கள் கடலில் (உலகத்தில்) குதித்து ஓடிவிட்டனரே என்றேன், ஆண்டவர் அமைதியாய் அது அவர்கள் வழி என்றார்.

என்னை வேறு படகில் மாற்றுமே என்றேன், ஆண்டவர் அமைதியாய் இதுதான் உன் படகு (வாழ்க்கை) என்றார். என் படகு (வாழ்க்கை) மூழ்கபோகிறது, நான் மடிய போகிறேன் என்றேன். ஆண்டவர், நானும் உன்னோடு உன் படகில் இருப்பதை ஏன் மறந்தாய் என்றார். நானோ என்னால் இதை எதிர்கொள்ள (தாங்க) முடியவில்லை என்றேன். ஆண்டவர், நான் தான் படகை ஓட்டுகிறேன், பயப்படாதே என்றார். எனக்கு அருமையானவர்கள் படும் வேதனைகளை கண்டேன். அவர்களை அணைத்து கொண்டு, ஆண்டவரண்டையில் (அவர் பாதத்தில்)

உட்கார்ந்தேன். சிறிது நேரத்தில் ஒளி வந்தது, இருள் மறைந்தது, தென்றல் விசீயது, புயல் அடங்கினது. ஆண்டவர் என் படகை நித்திய ஜீவ கரையில் சேர்த்தார்.

எனக்கு அருமையானவர்களை முதலாவது கரையில் இறக்கினேன். மிகவும் சோர்ந்து போனேன். ஆண்டவர் தம் கரத்தை நீட்டினார். அவர் கரத்தை பற்றி கொண்டு கரையில் இறங்கினேன். தூரத்தில் கடலில் குதித்தவர்கள் மாண்டு போயிருப்பதை கண்டேன். ஆண்டவரே ஏன் இதெல்லாம் நடந்தது என்றேன், ஆண்டவர் அமைதியாய் என்னை பின்பற்றி வா என்றார். இந்த போராட்டத்தில் (வாழ்க்கை படகில்) இருந்து என்னை காப்பாற்ற ஆண்டவர் பட்ட காயங்களை அப்பொழுதுதான் கண்டேன். கண்ணீரோடு அவர் பின் எனக்கு அருமையானவர்களோடு சென்றேன். பரலோக தேசத்தில் என் மோட்ச வீட்டை நோக்கி.

## 16. சீஷத்துவம்




கிறிஸ்தவ மார்க்கம், சீஷத்துவத்திற்கு நேராய் நம்மை நடத்துகிற மார்க்கம். கிறிஸ்துவாகிய தம்மை பின்பற்றுகிற சீஷர்களையே ஆண்டவர் தேடுகிறாரேயன்றி, தம்மை அப்பத்திற்காக தேடுகிற பக்தர்களை அவர் தேடவில்லை. தம்மை பின்பற்றி, தம்முடைய பரிசுத்தத்திற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு **(எபி 12:10)** நம்மை இரட்சிக்கிறாரேயன்றி வெறும் கோட்பாடுகளையோ, சடங்குகளையோ பின்பற்ற (அல்லது செய்ய) நம்மை அழைக்கவில்லை. இப்படியாக அழைக்கப்படுகிற சீஷனுடைய தன்மைகள், தகுதிகள் சிலவற்றை பின்வருமாறு காண்போம்.

**லூக் 14:27** கூறுகிறது **"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்"**, மேலும் **மத் 16:24**, **"அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்"** என்று கூறுகிறது. மேலும் **லூக் 14:33** கூறுகிறது **"அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்"**.

மேற்கண்ட வசனங்களின் மூலம் ஆண்டவரை பின்பற்றுகிறவனே அவருடைய சீஷனாயிருப்பான் என்றும், அவரை பின்பற்றுகிறவன் தன்னையும், தனக்கு உண்டான எல்லாவற்றையும் வெறுத்துவிட வேண்டும் என்றும் காண்கிறோம்.

**லூக் 14:26** ஆம் வசனம், அவைகள் எவை என்று நமக்கு விளக்கமாக கூறுகிறது **"யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும்,**

தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக் 14:26). இப்படியாய் ஆண்டவரை பின்பற்றுகிறவர்களுக்கு ஆண்டவர் கொடுக்கும் வாக்குத்தத்தம் "என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்தியஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்" (மத் 19:29) என்பதே.

மேலும் யோ 8:12 கூறுகிறது "மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்". ஆம் அவரை பின்பற்றும் பொழுது (சீஷனாயிருக்கும் பொழுது) நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வோம் என்பதை நாம் மேற்க்கண்ட வசனங்களில் காணலாம். இப்படியாய் ஆண்டவருடைய சீஷனாயிருக்கிறவனுடைய, தகுதிkaகள் சிலவற்றை மாற் 3:14,15 வசனங்களில் நாம் காணலாம். "அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார்" (மாற் 3:14,15).

1. தம்மோடு கூட இருக்கவும்: கிறிஸ்துவின் சீஷன் எப்போழுதும் ஆண்டவரோடு ஐக்கியமுடையவனாய் காணப்படுவான். "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" (1 யோ 1:3).

2. பிரசங்கம் பண்ணும்படியாக: ஆண்டவருடைய வார்த்தையை எங்கும் அறிவிக்கிறவனாய் காணப்படுவான். "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (2 கொ 2:14). "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்" (மத் 28:19,20). "அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக் 24:47).

3. வியாதிகளை குணமாக்குகிற, பிசாசுகளை துரத்துகிற அதிகாரம்: "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப்

**பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்" (மாற் 16:17,18).**

மேற்கண்ட **மத் 28:19,20** வசனங்களில் நாம் காண்கிறபடி, ஒரு சீஷனுடைய பணி, சீஷர்களை உருவாக்குவதே ஆகும். மேலும் **யோ 12:26** கூறுகிறது **"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**. இங்கு நாம் காண்கிறபடி ஒருவன் ஆண்டவருக்காக ஊழியம் செய்கிறவனாய் (மேற்க்கண்ட விதங்களில்) காணப்படுவானானால், அவன் ஆண்டவரை பின்பற்றுகிறவனாய் (சீஷனாய்) இருக்க வேண்டும். அவரை பின்பற்றாமல் அவருடைய ஊழியத்தை செய்ய முடியாது. மேலும் **மாற்கு 3:14** இல் நாம் காண்கிறபடி அவன் ஆண்டவரோடு கூட இருப்பான். எல்லாவற்றிற்க்கும் மேலாக பிதாவானவர் நம்மை கனம் பண்ணுவார். தேவனுக்கு பிரயோஜனமான கனத்திற்குரிய பாத்திரங்களாய் நம்மை மாற்றுவார்.

இப்பொழுது நாம் ஒரு சீஷனுடைய **தன்மைகள்** சிலவற்றை காண்போம்.

**1 கொ 11:1** கூறுகிறது **"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்"**, கிறிஸ்துவை பின்பற்றுகிறவன் தன்னை பிறர் பின்பற்றதக்க மாதிரியுடையவனாய், கிறிஸ்துவின் அண்டை நடத்துகிறவனாய் இருக்க வேண்டும். இதையே நாம் **2 தெச 3:9** ஆம் வசனத்திலும் காணலாம் **"உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம்"**.

மேலும் **எபி 13:7** கூறுகிறது **"தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்"**. இங்கு நாம் காண்கிறபடி ஒரு தேவ பிள்ளையிடத்தில் இருக்கிற விசுவாசம் மற்றவரும் பின்பற்றதக்க விதமாய் காணப்படவேண்டும். மேலும் **வெளி 14:4** கூறுகிறது **"ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்"**. இங்கு நாம் காண்கிறது, தேவனுக்கு முதற்பலன்களாக மீட்டுக்கொள்ளபட்டவர்கள், அவர் எங்கே போனாலும் அவரை பின்பற்றுக்கிறவர்களாய் இருக்கிறார்கள் என்பதே.

இறுதியாக **எபே 5:1** கூறுகிறது **"ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி"**, இங்கு நாம் காண்கிறபடி எல்லாவற்றிற்க்கும் மேலாக, தேவனுக்கு பிரியமான

பிள்ளைகளாய், அவரை பின்பற்ற வேண்டும். வெறும் தேவனை பற்றிய அறிவினாலோ, அச்சத்தினாலோ அல்லது அவரால் எல்லாம் செய்ய / தர முடியும் என்பதினாலோ அல்ல, அவர்மீது உள்ள பிரியத்தினால் அவரை பின்பற்றுகிறவர்களாய் நாம் காணப்படவேண்டும்.

ஏனெனில் **மத் 10:42** இல் **“சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்”** என்று கூறியுள்ளபடி, நம் மூலம் தேவனுடைய ஆசிர்வாதம் மற்றவர்களுக்கு செல்லும் வாய்க்கால்களாய் தேவன் நம்மை மாற்றுவார். தேவன்தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதிப்பாராக. நம் ஒவ்வொருவரையும் தம்முடைய (பூரண) சீஷராய் மாற்றி நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக. அல்லேலூயா, ஆமென்.

# 17. தேவனுடைய மனுஷன்

## (எலியாவின் வாழ்க்கையிலிருந்து - பாகம் 1)



**எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது (யாக் 5:17,18).**

மேற்க்கண்ட வசனத்தில் நாம் கவனிக்க வேண்டிய இரண்டு காரியங்கள் (1) எலியா தீர்க்கதரிசியிடம் இருந்து வெளிப்பட்ட தேவ வல்லமை. (2) நம்மைப்போல பாடுள்ள மனுஷன். இவை இரண்டும் வித்தியாசமான வாழ்க்கை அனுபவங்கள். முதல் அனுபவம் தேவ வல்லமையால் நிரம்பி இயற்கைக்கு மேற்ப்பட்ட காரியங்களை செய்தல், அதே நேரத்தில் இரண்டாம் அனுபவம் இவ்வுலகத்தில் உள்ள சாதாரண மனிதனை போல வாழ்க்கையின் போராட்டங்களை எதிர்கொள்தல். இன்றைய தேவ பிள்ளைகளின் வாழ்விலும் விஷேசமாக ஆண்டவருடைய ஊழியத்தை செய்கிறவர்களின் வாழ்க்கையிலும் தேவன் இவ்விதமான இரண்டு அனுபவங்களையும் தருகிறார்.

ஒரு புறத்தில் அபிஷேகத்தால் நிரம்பி, தேவ பிரசன்னத்தையும் அவர் நடத்துதல்களையும் உணர்ந்து வாழ்க்கையில் அற்புதங்களை பெற்று வாழ்கிற வாழ்க்கை, அதே நேரத்தில் சாதாரண இவ்வுலக காரியங்களில் மற்ற மனிதர்களோடும், வாழ்க்கையின் சூழ்நிலைகளோடும் போராடுகிற போராட்டம். இவ்விரண்டையும் சமநிலையோடு எதிர்கொள்கிற பக்குவம் ஒரு தேவ பிள்ளைக்கு தேவை. அதற்காகவே நாம் உள்ளான மனிதனில் ஒவ்வொரு நாளும் வளர வேண்டும். இல்லையேல் தேவ பிரசன்னத்தில் இருக்கும் பொழுது வாழ்க்கையை மகிழ்ச்சிக்குறியதாக எண்ணி நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் தேவனுக்கு அர்ப்பணிப்போம். ஆனால் வாழ்க்கையின் போராட்டங்களை காணும்பொழுது வாழ்க்கையை கசப்பாக எண்ணி, நாம் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் சோர்வுக்குள்ளாவோம்.

இப்படிப்பட்ட அனுபவங்கள் எலியா தீர்க்கதரிசியின் வாழ்க்கையில் ஏற்பட்டது. அவற்றை நாம் காண்போம். 1 இரா 17:1 கூறுகிறது **"கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்"**. இங்கு வேதம் எலியாவை அறிமுகப்படுத்தும் பொழுது, அவர் மூலமாய் வெளிப்பட்ட தேவ வல்லமையை வெளிப்படுத்துகிறது. **"என் வாக்கின்படியே"** என்ற வார்த்தையானது தேவனால் அவருடைய ஊழியக்காரனுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை குறிக்கிறது. அதே வேளையில், அடுத்த சில வசனங்களிலேயே, அவர் தன் பாதுகாப்பிற்காகவும், உணவிற்க்காகவும் ஒரு இடத்தை விட்டு மற்றொரு இடத்திற்கு செல்ல வேண்டியதாயிருந்தது.

காகங்கள் கொண்டு வரும் உணவை உண்டு, ஆற்றின் தண்ணீரை குடித்து தனிமையாய் வாழவேண்டிய சூழ்நிலைவந்தது. ஆற்றின் நீர் வற்றி போனபின்பு தேவன் அவரை சாறிபாத் ஊர் விதவையின் வீட்டில் வைத்து போஷித்தார். இங்கு தேவனால் அற்புதவிதமாய் போஷிக்கபட்டாலும், சாதாரண மனிதனுக்கு இருக்கும் ஒரு நிலையான வாழ்க்கைக்கூட இல்லாமல், தேவன் சொன்ன இடத்திற்கெல்லாம் அவர் செல்ல வேண்டியிருந்தது. இங்கு நாம் கற்றுக்கொள்கிற ஒரு பாடம், தேவனை அறியாத மக்கள் வாழ்க்கையின் தேவைகள் எதற்கும் கவலைபடாமல், வாழ்க்கையை அனுபவித்து சுகமாய் ஓரிடத்தில் வாழ்க்கையில், தேவ வல்லமையை தங்கள் வாழ்வில் வெளிப்படுத்தும் தேவபிள்ளைகளையோ தேவன் இப்படியாய் சில போராட்டங்களுக்குள்ளாக அனுமதிக்கிறார்.

உதாரணமாக, துன்மார்க்க ஜீவியம் செய்யும் எத்தனையோ பேர் மாடமாளிகைகளை கட்டி வாழ்ந்திருக்கையில், தேவ சபையை நடத்தும் மேய்ப்பர் ஊழியத்தை செய்யும் தேவ பிள்ளைகள் தேவனை ஆராதிக்க ஓர் நிலையான இடம் இல்லாமல் கஷ்டப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் சிலகாலம் தேவன் அவர்களை இவ்வித பாதையில் நடத்துகிறார். எனவே இப்படிப்பட்ட போராட்டங்கள் ஏற்படும் பொழுது சரீரத்தில் ஒரு

வேளை சோர்வு ஏற்படலாம். ஆனால் ஆவியில் ஒருபோதும், ஒரு தேவபிள்ளை சோர்ந்துபோகக்கூடாது. அதையே நாம் எலியாவின் வாழ்விலும் காண்கிறோம்.

அநேகநாள் சென்றபின்பு (மூன்று வருடம்) மறுபடியும் தேவன் எலியாவின் மூலமாய் தன் வல்லமையை வெளிப்படுத்தினார். தேவன் நம்மை சில காலம் அமைதியாய் இருக்க சொன்னால், அமைதியாக இருக்கிற அக்காலம் தேவன் நம்மை அடுத்த நிலைக்கு ஆயத்தப்படுத்துகிற காலம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அமைதியாய் இருந்த அந்த காலத்திலும் தேவன் எலியாவின் மூலமாய் சாறிபாத் விதவையின் மகனை உயிரோடு எழுப்பி தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு காரியம் 1 இரா 17:20 வசனம். இவ்வசனம் கூறுகிறது **"என் தேவனாகிய கர்த்தாவே, நான் தங்கியிருக்க இடங்கொடுத்த இந்த விதவையின் மகனைச் சாகப்பண்ணினதினால் அவளுக்குத் துக்கத்தை வருவித்தீரோ என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு;"**. இங்கு நாம் தேவன் எவ்வளவாய் எலியா தீர்க்கதரிசிக்கு தாழ்மையை கற்றுக் கொடுத்திருந்தார் என்பது விளங்குகிறது.

தேவனே தன்னை போஷிக்கிறார் என்றும், இவ்விதவை அதற்கு ஒரு வாய்க்காலாய் இருக்கிறாள் என்றும் உணர்ந்த அவர், **"தீர்க்கதரிசியான என்னை போஷித்த இந்த விதவைக்கு உதவும்"** என்று கூறாமல் **"நான் தங்கியிருக்க இடங்கொடுத்த இந்த விதவை"** என்று கூறுவதிலிருந்து, தான் எவ்வளவு பெரிய தீர்க்கதரிசியாய் இருந்தாலும், தன்னை போஷிக்கிறவர் கர்த்தர் என்றும், அவருடைய திட்டத்தில் இருக்கிற (விதவை) ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள் என்பதையும் கற்றுக்கொள்ள தேவன் உதவிசெய்தார்.

நாமும் கூட நம் வாழ்க்கையில் தேவனிடத்தில் இருந்து பெரிய (ஆவிக்குரிய) அனுபவங்களை பெற்றிருந்தாலும், நம் வாழ்க்கையில் நம்மோடு இடைப்படுகிற ஒவ்வொரு சாதாரண மனிதர்களும் தேவ பார்வையில் முக்கியமானவர்கள் என்றும், நாம் பெற்ற அனுபவங்களினால் அல்ல தேவன் நம்மை நேசிப்பதாலேயே நம்மையும் போஷிக்கிறார், நடத்துக்கிறார் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இறுதியாக சாறிபாத் விதவை எலியாவை குறித்து கூறின சாட்சியை 1 இரா 17:24 காணலாம் **"அப்பொழுது அந்த ஸ்திரீ எலியாவை நோக்கி: நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள்"**.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒன்று எலியா பாடுள்ள மனுஷராய் இருந்தாலும் தேவனுடைய மனுஷராய் இருந்தார். கர்த்தரின் வார்த்தை அவர் மூலமாய் வெளிப்பட்டது. இதுவே ஒவ்வொரு தேவ பிள்ளையின் அனுபவமாய் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட எலியா தீர்க்கதரிசி மூலம் தேவன் சர்வ இஸ்ரவேலர் முன்பும் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். பாடுள்ள மனிதராய் இருந்த எலியாவை தேவனுடைய

மனிதன் என்பதை எல்லாரும் அறிந்து கொள்ளும்படியாய் செய்தார். இதை நாம் அடுத்த பாகத்தில் (பாகம் 2) தியானிப்போம். ஆண்டவர்தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதிப்பாராக. நம் ஒவ்வொருவரையும் தேவ மனிதர்களாய் நிலை நிறுத்துவாராக. அல்லேலுயா, ஆமென்.

# 18. தேவனுடைய மனுஷன்

## (எலியாவின் வாழ்க்கையிலிருந்து - பாகம் 2)



இந்த தியானத்தின் முதலாம் பாகத்தில் தேவன் எவ்வாறு எலியாவின் மூலம் செயல்ப்பட்டார் என்பதையும், போராட்டமான வாழ்க்கையின் நடுவிலும் தேவன் எவ்விதமாய் அவரை போஷித்து அவர் மூலமாய் அற்புதங்களை செய்து அவரை தேவனுடைய மனிதராய் நிறுத்தினார் என்பதையும் தியானித்தோம்.

இவ்வாறு சாறிபாத் விதவைக்கு முன் எலியாவை தேவனுடைய மனிதராய் நிறுத்தின தேவன் **(1 இரா 17:24)**, சர்வ இஸ்ரவேலர் முன்பும் தாமே மெய்யான தேவன் என்பதையும், எலியா தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷன் என்பதையும் வெளிப்படுத்தினார். அதை நாம் இப்பொழுது தியானிப்போம். **1 இரா 18:1** கூறுகிறது **"அநேகநாள் சென்று, மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி: நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன் என்றார்"**. இங்கு தேவன் அவரை மறுபடியும் தன்னுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யும்படியாய் அழைத்தார், அதுவும் அவருடைய ஜீவனுக்கே ஆபத்தாய் இருக்கிற சூழ்நிலைக்குள்ளாகவே அவரை நடத்தினார். இங்கு எலியா தன்னுடைய ஜீவனை குறித்தும் கவலைப்படாமல், இராஜாவை குறித்தும் பயப்படாமல் தன் ஊழியத்தை தொடர்ந்தார்.

**1 இரா 18:17,18** வசனங்களில் **"ஆகாப் எலியாவைக் கண்டபோது, ஆகாப் அவனை நோக்கி: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா**

**என்றான். அதற்கு அவன்: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்",** இங்கு எலியா எதிர்ப்பார்த்தபடியே ஆகாப் இராஜா எலியாவுக்கு எதிராய் வந்தான். ஆனால் எலியாவோ அவனுக்கு பயப்படாமல், அவனுடைய செய்கைகள் தேவனுக்கு விரோதமானவை என்பதை தைரியமாய் சொன்னான். 1 இரா 18:21 வசனத்தில் **"அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான், ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை",** இங்கு எலியா கர்த்தருக்காக வைராக்கியம் பாராட்டி தேவனுடைய மந்தையாகிய இஸ்ரவேலை தேவனிடம் திருப்பும்படியாய், கர்த்தரையே முழுமனதோடு பின்பற்றும்படியாய் அறைகூவல் விடுக்கிறார்.

இன்று கிறிஸ்துவினுடைய மணவாட்டியாக உள்ள சபைக்கும் இந்த அறைகூவலே விடுக்கப்படுகிறது. உலகத்தின் கவர்ச்சிகளும், ஆடம்பரங்களும், தேவனை மேன்மைப்படுத்துவதைவிட மனிதனை மேன்மைப்படுத்துவதும், பரிசுத்த அலங்காரத்திற்கு பதிலாக உலக அலங்காரங்களும், சகோதர (சக விசுவாசிகள்) சிநேகத்திற்கு பதிலாக உலக சிநேகமும், ஆராதனைக்கு பதிலாக ஆட்டம் பாட்டங்களும், தேவ வசனத்திற்கு (போதனைக்கு) பதிலாக கலப்பான (உலக) போதனைகளும், தேவனுக்கே விரோதமான அருவருப்புகளும் இன்று உலகமெங்கும் உள்ள திருச்சபைகளில் காணப்படுகிறது. தேவனுக்கும், உலகபொருளுக்கும் ஊழியஞ்செய்ய எண்ணி, உலகத்தை கலக்குவதற்கு பதிலாக, உலகத்தால் கலக்கப்பட்டு, தன்னிடம் கொடுக்கப்பட்ட மந்தையை சிதறிப்போக செய்த மேய்ப்பர்கள் இன்று அநேகர். ஆகிலும் எலியாவை போல சில (தேவ) மனிதர்களை ஆண்டவர் இன்றும் பயன்ப்படுத்தி, அவர்களின் மூலமாய் ஒரு கூட்ட மக்களை தம்முடைய வருகைக்கென ஆயத்தப்படுத்தி வருகிறார்.

மேலும் 1 இரா 18:24 வசனத்தில் **"நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுங்கள்; நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன்; அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான்; அதற்கு ஜனங்களெல்லாரும் இது நல்ல வார்த்தை என்றார்கள்",** மேற்க்கண்ட வசனத்தில் கர்த்தரே மெய்யான தெய்வம் என்பதை விளங்க செய்வதற்காக எலியா கூறும் காரியத்தை காணலாம். இங்கு நாம் கவனிக்க வேண்டியது "அதற்கு ஜனங்களெல்லாரும் இது நல்ல வார்த்தை என்றார்கள்" என்ற வார்த்தையாகும். இந்த வார்த்தை இஸ்ரவேல் ஜனங்களுடைய அறியாமையையும், அவர்கள் எவ்வளவாய் தேவனை விட்டு விலகிபோயிருந்தார்கள் என்பதையும் நமக்கு தெளிவுப்படுத்துகிறது.

ஆபிரகாமின் காலமுதல், அவர்களுடைய அந்த கால கட்டம் வரையிலும் எவ்வளவோ அற்புதங்களையும், அதிசயங்களையும் தேவன் அவர்களுக்கு செய்திருக்கிறார். அவர்களை போஷித்து நடத்தியிருக்கிறார். மோசே

மூலமாய் நியாப்பிரமாணத்தை கொடுத்திருக்கிறார், எல்லாவற்றிற்கும் மேலாக சாலோமோன் கட்டின தேவனுடைய ஆலயம் பிரத்தியட்சமாக அவர்களுக்கு முன் இருந்தது. பலமுறை அவர்கள் வழிவிலகி போனபொழுதெல்லாம் அவர்களை அவர் மீட்டிருக்கிறார். ஆனால் அந்த தேவனே மெய்யான தேவன் என்பதை அவர்களுக்கு மறுபடியும் நிருபித்துக்காட்ட வேண்டியிருந்தது. எலியாவின் வார்த்தைகளை கேட்டு மனந்திரும்பாமல் தேவனா, பாகாலா யார் பெரியவர் என்று அவர்கள் அறிய நினைத்தது அவர்கள் இருதயம் எவ்வளவாய் கடினப்பட்டிருந்தது என்பதை நமக்கு தெளிவுப்படுத்துகிறது. ஆகிலும் தேவன் இந்த முறையும் கிருபையாய் அவர்களுக்கு தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். இதனால் **"அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்" (1 இரா** 18:38,39).

தேவனை விட்டு மக்களை வழிதப்ப பண்ணின பாகாலின் ஊழியர்களை எலியா உடனே வெட்டிப்போட்டார் (**1 இரா** 18:40). இங்கு நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு சத்தியம், தேவனுடைய மந்தையை (சபையை) சுத்திகரிக்கும் பொழுது, அதற்கு இடறலாய் இருப்பவர்களை அதை விட்டு அகற்றிவிட வேண்டும். அதில் ஒரு சிறிதேனும் அசதியாயிருக்கக்கூடாது. அதற்கு பிறகு தேவன் எலியாவிடம் சொல்லியிருந்தபடியே மழையை பெய்யப்பண்ணினார் (1 இரா 18:45,46). இப்படியாய் மகிமையான ஒரு ஊழியத்தை நிறைவேற்றின பின்பு, எலியா மறுபடியும் தன் ஜீவனுக்காக ஓட வேண்டிருந்தது.

**1 இரா** 19:2-5 வசனங்களில் **"அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச்சொன்னாள். அவனுக்கு அது தெரிந்தபோது எழுந்து, தன் பிராணனைக் காக்க யூதாவைச்சேர்ந்த பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப்போய், தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான். அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான்"**, மேற்க்கண்ட வசனத்திலிருந்து இந்த முறை எலியா மிகவும் சோர்ந்து போனார் என்பதை காணலாம். ஆவியிலும், சரீரத்திலும் அவர் கலைத்துப்போய் இருந்தார். ஆகிலும் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவருக்கு போஜனம் கொடுத்து அவரை தொடர்ந்து ஊழியத்தை செய்ய ஏவினார். ஆகிலும் அவருடைய் மனதில் (ஆவியில்) ஏற்ப்பட்ட சோர்வை நீக்க தேவனே அவரிடம் வந்தார்.

**1 இரா 19:13,14** வசனங்களில் **“அதை எலியா கேட்டபோது, தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து, கெபியின் வாசலில் நின்றான். அப்பொழுது, இதோ, எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்கிற சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள், நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்”.** “இங்கே உனக்கு என்ன காரியம்” என்கிற தேவனுடைய வார்த்தையானது, நீ உன் ஊழியத்தை நிறுத்தி விட்டது என்ன? என்று தேவன் அவரிடம் கேட்பதாக உள்ளது. அதற்கு எலியாவின் பதில் மிகவும் அருமையானதாகும். இதுவே அவர் தேவனுடைய மனிதன் என்பதற்கு ஒரு முத்திரையாக உள்ளது. இங்கு அவர் கூறுகிற மூன்று காரியங்கள் (1) தான் தேவனுக்காக வெகு பக்தி வைராக்கியமாய் இருக்கிறது (2) இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய உடன்படிக்கையை தள்ளிவிட்டது (3) மற்ற தீர்க்கதரிசிகளை கொன்று தன்னையும் கொல்ல தேடுதல்.

இங்கு அவர் தன்னுடைய சரீர அலச்சல்களை குறித்து கவலைப்படாமல், ஊழியத்தில் தனக்கு உண்டான பாடுகளை குறித்து கவலைப்படாமல், இஸ்ரவேல் மக்கள் தேவனைவிட்டு விலகி போனார்களே, தேவனுக்கு உண்மையாயிருந்த தீர்க்கதரிசிகளையும் கொன்று போட்டார்களே, இவ்வாறு அரசன் முதல் மக்கள் வரை அனைவரும் தேவனை விட்டு விலகி போனார்களே, தான் தேவனுக்காக இவ்வளவு வைராக்கியமாய் ஊழியம் செய்தும் மக்களின் மனது இவ்வளவு கடினமாய் இருக்கிறதே, கர்த்தருடைய வார்த்தையை கூறின காரணத்தினால் தன்னையும் கொல்ல தேடுகிறார்களே என்று தன் வியாகுலத்தையே அவரிடம் கூறினார்.

இதைகேட்ட ஆண்டவர் அவருக்கு பதிலாக கூறிய வார்த்தை **1 இரா 19:18 “ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்றார்”** என்பதே. இதுவே இன்றைய காலகட்டத்திலும் நடந்து வருகிறது. தேவ ஜனங்களிடத்தில் காணப்படும் குளிர்ந்துபோன நிலையை எண்ணி உண்மையான தேவனுடைய ஊழியர்கள் பலர் தேவனிடம் கண்ணீர் வடிக்கின்றனர். தாங்கள் உண்மையாய் ஊழியம் செய்தும், சத்தியத்தை சொல்லியும், அதை கேட்க மனதில்லாமல் உலகத்தோடு கலந்து, கிறிஸ்து மூலமாய் உண்டான தேவனுடைய உடன்படிக்கையை தள்ளிப்போடுகிற கிறிஸ்தவர்களை குறித்தும், தங்களின் கள்ள (கலப்பட) உபதேசத்தினால் மக்களை வஞ்சித்து சபையை சிதறடிருக்கிற கள்ள ஊழியர்களை குறித்தும் தேவனிடம் போராடுகின்றனர். ஆனால் அவர்களுக்கு தேவனின் பதில் எலியாவிடம் கூறியது போலவே, தேவனுக்காக வாழ்கிற ஒரு கூட்ட மக்கள் உலகமெங்கும் இருக்கிறார்கள் என்பதே.

மேலும் 1 இரா 19:15,16 வசனங்களில் **"அப்பொழுது கர்த்தர் அவனைப் பார்த்து: நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப்போய், ஆசகேலைச் சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, ஆபேல்மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு"**, இங்கு நாம் காண்கிறபடி தேவன் எலியாவை உற்சாகப்படுத்தி தன்னுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யும்படியாய், அவருக்கு பின்பாக ஊழியத்தை தொடர்ந்துசெய்ய ஊழியரை எழுப்பும்படியாய் கூறுகிறார்.

தேவனிடம் இருந்து ஆறுதலான வார்த்தைகளை பெற்ற எலியா, பின்பு எந்தவித தயக்கமும், பயமும் இன்றி தன்னுடைய ஊழியத்தை தொடர்ந்தார். இங்கு நாம் உணர்ந்து கொள்ளவேண்டிய ஒரு மேலான காரியம், ஓர் உண்மையான ஊழியன், ஊழியத்தினிமித்தமும், தன்னுடைய சரீர பாடுகளின் நிமித்தமும் கலங்கி நிற்கும் பொழுது, தேவனே நேரடியாக வந்து அவர்களை தேற்றுகிறார் என்பதை நாம் அறியலாம். பாடுள்ள மனிதராய் இருந்த எலியா தேவனுடைய மனுஷன் என்பதற்கு தேவனே அத்தாட்சியாய் இருக்கிறார் என்பதை இது விளக்குகிறது.

இதன் பிறகு அவர் சோர்ந்து போகவில்லை, தொடர்ந்து தன்னுடைய ஊழியத்தை தேவனுடைய மனுஷன் என்ற அதிகாரதோடு செய்தார். அதை நாம் அடுத்த பாகத்தில் (பாகம் 3) காணலாம். தேவன்தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதிப்பாராக. எலியாவை போன்ற ஊழியர்களை இந்த கடைசி காலங்களில் எழுப்புவாராக. அல்லேலுயா, ஆமென்.

# 19. தேவனுடைய மனுஷன்

## (எலியாவின் வாழ்க்கையிலிருந்து - பாகம் 3)



தேவனுடைய மனுஷன் என்னும் இத்தொடர்தியானத்தில், தேவன் பாடுகள் மத்தியிலும் எலியாவை எவ்வாறு தேவனுடைய மனுஷனாய் விளங்க பண்ணினார் என்பதை தியானித்தோம். மனிதர்களை எண்ணியும் சூழ்நிலைகளை எண்ணியும் அவர் சோர்ந்து போனபொழுது, தேவனே அவரை தேற்றி, அவர் மூலமாய் அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தார். ஒரு சாதாரண தேவ பிள்ளையின் ஆவிக்குரிய வாழ்விலும், இப்படிப்பட்ட போராட்டங்கள் எழும்பொழுது, அவற்றை மேற்கொண்டு தேவனுக்கு உண்மையாய் வாழ எலியாவின் அனுபவங்கள் நமக்கு ஒரு பாடமாய் இருக்கிறது.

இந்த 3ஆம் பாகத்தில், எலியா எவ்வாறு தேவனுடைய மனுஷன் என்ற அதிகாரத்தை வெளிப்படுத்தினார் என்பதையும், ஒரு தேவனுடைய மனுஷனுக்கு கிடைக்கும் மகிமையான (மறுருபமான) முடிவையும் குறித்து நாம் தியானிப்போம். **1 இரா 21ஆம்** அதிகாரம், இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாப், நாபோத் என்பவனுடைய திராட்சத் தோட்டத்தை, அவனை கொன்று எவ்வாறு எடுத்துக்கொண்டான் என்பதை கூறுகிறது. ஆகாபும், அவன் மனைவியாகிய யேசபேலும் தேவனுக்கு விரோதமாயும், மனுஷருக்கு விரோதமாயும் காரியங்களை செய்த பொழுது, தேவன் மறுபடியும் எலியாவை ஆகாபினிடத்தில் அனுப்பினார். இந்த முறை, எலியா சற்றும் பயப்படாமல், ஆகாபினிடத்திற்கே சென்று **"கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய்"** என்று உரைத்தார் (1 இரா 21:20).

ஆகாப் இராஜாவாய் இருந்தும், தன்னை எதிர்க்கும் எவரையும் அழித்துவிடும் மனம் உடையவர்களாய் அவனும், அவன் மனைவியும் இருந்தும், 1 இரா 21:20 கூறுகிறபடி, **"அப்பொழுது ஆகாப் எலியாவை நோக்கி: என் பகைஞனே, என்னைக் கண்டுபிடித்தாயா என்றான்"**, இராஜா எலியாவை பகைஞனாய் நினைத்தும், சற்றும் பயப்படாமல் அவனிடத்திற்கே சென்று தேவனுடைய வார்த்தையை அறிவித்தார். ஆகாபின் மேலும், யேசபேலின் மேலும் வரும் தேவனுடைய நியாயத்திர்ப்பை கூறினார். இவ்வளவுகாலமாய் ஆகாபுக்கு பயந்து, மறைந்து வாழ்ந்த எலியா இப்பொழுது தேவ பெலத்தோடு, தேவ மனுஷனாக தன்னை அவனுக்கு முன் நிறுத்தினார்.

இதற்கு முக்கிய காரணம் 1 இரா 19:14-18 வசனங்களில் காண்கிறபடி, தேவன் அவரை நேரடியாக வந்து தேற்றினதே ஆகும். இங்கு நாம் அறிந்து கொள்கிற ஒரு சத்தியம், ஒரு தேவ பிள்ளை, தேவனால் தேற்றப்படும் பொழுது, பொல்லாத மனிதர்களையும், சத்துருவாகிய பிசாசானவனையும் எதிர்த்து நிற்கிற பெலனை பெற்றுக் கொள்கிறான். குறிப்பாக தேவ ஊழியர்கள், ஊழியத்தில் கனிகள் இல்லாமல் இருக்கிற சூழ்நிலைகளில் தேவனால் தேற்றப்படும் பொழுது, சத்துருவின் கோட்டைகளை தகர்த்து எறியும் வல்லமையை பெற்றுக்கொள்கின்றனர்.

எனவே ஒரு தேவ பிள்ளைக்கு முக்கியமானது தேவ உறவே ஆகும். தேவ பிரசன்னத்தில் பெற்றகொள்கிற பெலன் சத்துருவை எதிர்த்து நிற்காதபடி செய்துவிடும். அதையே நாம் ஆகாபின் காரியத்திலும் காண்கிறோம். பகைஞனே என்று ஆரம்பித்த ஆகாப், எலியாவின் வார்த்தையினால் அடங்கி தேவனுக்கு முன்னால் தன்னை தாழ்த்தினான். ஊழியத்திற்கு எதிர்த்து நிற்கிற எந்த வல்லமையும், ஒரு தேவபிள்ளை தேவ பிரசன்னத்தினால் (உறவினால்) நிறைந்து இருக்கும்பொழுது ஒன்றும் இல்லாமல் போகும். அதே நேரத்தில், ஆகாபின் காரியத்தில் உண்டானது போல, மனமாறுதலையும் உண்டாக்குகிறது. ஆகிலும் ஆகாப் முழுமையாய் தேவனிடத்தில் திரும்பவில்லை. அதை நாம் பின்வரும் அதிகாரத்தில் (1 இரா 22) காணலாம்.

இது எவ்வளவாய் ஆகாபின் இருதயமும், யேசபேலின் இருதயமும் கடினப்பட்டிருந்தது என்பதை காண்பிக்கிறது. ஆகிலும் இப்படிப்பட்ட கடின மனதின் முன்னும், பயமில்லாமல் தேவ மனுஷனாய் தன்னை வெளிப்படுத்தின் எலியாவுக்கு, தேவன் எவ்வளவு இரக்கமுள்ளவர், கிருபையுள்ளவர் என்பதையும் தேவனே அவருக்கு விளங்க செய்தார் (1 இரா 21:29).

இதன் பிறகு 2 இரா 1ஆம் அதிகாரத்தில் ஆகாபின் குமாரனான அகசியாவின் காலத்தில் எலியாவின் ஊழியத்தை காண்கிறோம். இங்கும், 2 இரா 1:2-4 **"அகசியா சமாரியாவிலிருக்கிற தன் மேல்வீட்டிலிருந்து கிராதியின் வழியாய் விழுந்து, வியாதிப்பட்டு: இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் போய் விசாரியுங்கள் என்று ஆட்களை அனுப்பினான். கர்த்தருடைய தூதன்**

**திஸ்பியனாகிய எலியாவை நோக்கி: நீ எழுந்து, சமாரியாவுடைய ராஜாவின் ஆட்களுக்கு எதிர்ப்படப்போய்: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீங்கள் எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்கப்போகிறீர்கள்? இதினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல், சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை அவர்களோடே சொல் என்றான்; அப்படியே எலியா போய்ச் சொன்னான்"** வசனங்களில் நாம் காண்கிறபடி, அகசியாவும் தன் தகப்பனை போல தேவனை விட்டு விலகி பாகாலை தேடினான். இதனால் அவனுக்கு வரும் முடிவை எலியாவை கொண்டு தேவன் அறிவித்தார். அதை கேட்ட அகசியா, தன் தகப்பனான ஆகாபை போல தன்னை தாழ்த்தாமல் எலியாவை பிடித்து வர ஆட்களை அனுப்பினான். 2 இரா 1:7-17 வசனங்கள், எலியா எவ்வாறு தன்னை தேவ மனுஷனாய் வெளிப்படுத்தினார் என்பதற்கு மற்றுமொரு சாட்சியாய் உள்ளது.

**"தேவனுடைய மனுஷனே, ராஜா உன்னை வரச்சொல்லுகிறார்"** என்று கூறின தலைவனிடம், **"நான் தேவனுடைய மனுஷனானால், அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பதுபேரையும் பட்சிக்கக்கடவது"** என்று கூறினார். **"உடனே அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பதுபேரையும் பட்சித்தது"**. இங்கு நாம் கற்றுகொள்கிற பாடம் இத்தலைவனை போல, மனுஷ அதிகாரத்திற்கு கீழ்படிந்து, தேவனையும், தேவ பிள்ளைகளையும் எதிர்த்து நிற்போரின் முடிவை நாம் காணலாம்.

ஒருபுறம் எலியா தேவனுடைய மனுஷன் என்பதற்கு இது சாட்சியாய் உள்ளது, அதே நேரத்தில் உலக வல்லமைகளுக்கு கீழ்படிந்து அல்லது அதை நம்பி, தேவ வல்லமைக்கு எதிர்த்து நிற்போரின் முடிவுக்கும் இது சாட்சியாய் உள்ளது. இன்றைய காலகட்டத்திலும், உலக வல்லமைகளை நம்பி அல்லது அதற்கு கீழ்படிந்து தேவ பிள்ளைகளையும், தேவ ஊழியர்களையும், ஊழியத்தையும் எதிர்க்கிற மக்கள் உண்டு. அவர்கள் ஒவ்வொருவர் முடிவும் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டு போவதே ஆகும். தேவ பிள்ளைகளை தொடுகிற எவரையும் தேவன் மடங்கடிக்காமல் விடமாட்டார். இதுவும் நாம் தேவ பிள்ளை (தேவ மனுஷன்) என்பதற்கு ஒரு சான்றாகும்.

ஆகிலும் தேவ வல்லமைக்கு கீழ்படிந்து, தேவ பிள்ளைகளின் அதிகாரத்தை உணர்கிறவர்களுக்கு தேவன் கிருபை அளிக்கிறார். அதையே நாம் முன்றாவது தலைவனின் காரியத்தில் 2 இரா 1:13,14 வசனங்களில் காண்கிறோம். மேலும் 2 இரா 1:15-17 **"அப்பொழுது கர்த்தருடைய தூதன் எலியாவை நோக்கி: அவனோடேகூட இறங்கிப்போ, அவனுக்குப் பயப்படாதே என்றான்; அப்படியே அவன் எழுந்து அவனோடேகூட ராஜாவினிடத்திற்கு இறங்கிப்போய், அவனைப் பார்த்து: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீ எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்க ஆட்களை அனுப்பினாய்; ஆதலால் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். எலியா சொன்ன கர்த்தருடைய வார்த்தையின்படியே அவன் இறந்துபோனான்"**, மேற்கண்ட வசனங்களில்

நாம் காண்கிறபடி எலியா அகசியாவிடமும் நேரடியாக சென்று தேவ எச்சரிப்பை அறிவித்தார். அதன்படியே அவன் இறந்து போனான். எலியாவை ஒருவராலும் தொடகூட முடியவில்லை. ஏனெனில் அவர் தேவனின் கண்மணியாய் இருந்தார். தேவ பிள்ளைகளுக்கு (தேவ மனுஷனுக்கு) தேவனுடைய பாதுகாப்பு எப்பொழுதும் உண்டு.

**2 இரா 2ஆம்** அதிகாரத்தில் தேவ மனுஷனாகிய எலியா பரலோகத்திற்கு எடுத்துகொள்ளபடுவதை நாம் காணலாம். பழைய ஏற்பாட்டில் எத்தனையோ தேவ பிள்ளைகள், ஊழியர்களுக்கு கிடைக்காத பாக்கியத்தை தேவன் எலியாவிற்கு தந்தார். **2 இரா 2:11 "அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில், இதோ, அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்"**, மேற்கண்ட வசனத்தில் நாம் காண்கிறபடி, மரணத்தை காணாமல், மாம்ச அழிவை காணாமல், அக்கினி ரதமும், அக்கினிக் குதிரைகளின் மூலமும் பரலோகத்திற்கு ஏறிப்போவது மகிமையான ஒரு காரியமாகும்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய மற்ற சில சத்தியங்கள், **2 இரா 2:7,8 "தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஐம்பதுபேர் போய், தூரத்திலே பார்த்துக்கொண்டு நின்றார்கள்; அவர்கள் இருவரும் யோர்தான் கரையிலே நின்றார்கள். அப்பொழுது எலியா, தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான்; அது இருபக்கமாகப் பிரிந்தது; அவர்கள் இருவரும் உலர்ந்த தரைவழியாய் அக்கரைக்குப் போனார்கள்"**, வசனங்களில் நாம் காண்கிறபடி, யோர்தான் நதியை தன் சால்வனையினால் பிளந்து போட்டார். இது அவருக்குள் இருந்த ஆவியின் வல்லமையை வெளிப்படுத்துகிறது. இதனால் தான் **2 இரா 2:9 "அவர்கள் அக்கரைப்பட்டபின்பு, எலியா எலிசாவை நோக்கி: நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுமுன்னே நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன, கேள் என்றான். அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என்றான்"**, வசனத்தில் நாம் காண்கிறபடி எலிசா தீர்க்கதரிசி உம்மிடத்தில் உள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய் வேண்டும் என்று கேட்டார், அதனை பெற்றுக் கொண்ட எலிசாவும் தேவனுக்கு வல்லமையான ஒரு ஊழியராய் விளங்கினார். இக்காலகட்டத்தில் வாழ்கிற நாமும், இவ்வாறாகவே தேவ பிள்ளைகளாக வாழ்வோமானால், எலியாவுக்கு கிடைத்ததை காட்டிலும், மகிமையான விதத்தில் நாம் பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். காரணம், புதிய ஏற்பாட்டில், நாம் தேவ மனிதர்களாய், ஊழியர்களாய் மாத்திரமல்ல தேவ பிள்ளைகளாய் இருக்கிறோம். நம்மை வரவேற்க கிறிஸ்து நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார்.

தேவனுக்கு சித்தமானால், மரணத்தை காணாமலேயே இரகசிய வருகையில் நாம் மறுரூபமான சரீரத்தோடு கிறிஸ்துவை மத்திய ஆகாயத்தில் சந்திக்கலாம். அவரோடு கூட ஆளுகை செய்யலாம். மகிமையான வாடாத கிரீடத்தை பெறலாம். எனவே தேவனுடைய மனுஷனாய் வாழ்ந்து, பரலோகத்திற்கு ஏறிப்போன எலியாவின் வாழ்க்கை

மகிமையானதாய் காணப்பட்டாலும், அதைக்காட்டிலும் மகிமையான வாழ்வை தேவன் நமக்கு தந்திருக்கிறார். எனவே எலியாவை போல தேவ மனிதராய் (பிள்ளையாய்) வாழ்ந்து, மகிமையான வாடாத கிரீடத்தை பெற்றுக் கொள்வோம், அல்லேலூயா, ஆமென்.

# 20. கிறிஸ்துவின் நற்கந்தம்

**நான் சாரோனின் ரோஜாவும், பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பமுமாயிருக்கிறேன். (உன் 2:1)**




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை வேதம் சாரோனின் ரோஜா என்று வர்ணிக்கிறது. சாரோன் என்பது ஒரு சமவெளி பூமியாகும். அங்கு பூத்து குழுங்கி வாசனை வீசும் ரோஜா மலராய் நமது ஆண்டவர் இருக்கிறார். இந்த ரோஜா மலரின் வாசனையால் சாரோன் சமவெளி நிறைந்திருந்தது. நமது வாழ்வும் சாரோன் சமவெளியை போல கிறிஸ்துவாகிய ரோஜா நம்மில் வளர்ந்து பெருகவும் (நாம் சிறுகவும்) **(யோ 3:30)**, அவருடைய மணம் நமது வாழ்வில் வீசப்படவும் வேண்டும்.

இதையே நாம் **2 கொ 2:14-16** வசனங்களிலும் காண்கிறோம். **"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம்".**

கிறிஸ்துவை நமது வாழ்வின் செயல்கள் மூலமாய் மற்றவர்கள் காணும்படியாய், நமது வாயின் வார்த்தைகளின் மூலமாய் மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படியாய் காணப்படுவதே அவரது வாசனையை

வீசுவதாகும். **15ஆம் வசனத்தில்** கூறப்பட்டுள்ளப்படி **"கிறிஸ்துவின் நற்கந்தமாய்"** ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாழ வேண்டும்.

ஆதி அப்போஸ்தல காலத்தில் சபையில் இருந்த விசுவாசிகள் இவ்வாறு காணப்பட்டதாலேயே அவர்களை கிறிஸ்தவர்கள் **(அப் 11:26)** என்று அழைத்தனர். கிறிஸ்துவின் நற்கந்தமாய் நாம் இருக்கும்பொழுது, இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவ வாசனையாகவும், அதாவது சபையை கட்டி எழுப்புகிறவர்களாய், உடன் விசுவாசிகளுக்குள் கிறிஸ்துவின் ஜீவனை கடத்துக்கிறவர்களாய், அவர்களை பெலப்படுத்துகிறவர்களுமாய் இருப்போம். அதே நேரத்தில் கெட்டுபோகிறவர்களுக்குள்ளே மரணவாசனையாகவும், அதாவது கிறிஸ்துவை விசுவாசியாதவர்களாய், நித்திய ஜீவனுக்கு அபாத்திரராய், கிறிஸ்துவுக்கு எதிர் நிற்கிறவர்களாய் காணப்படுகிறவர்களை கடிந்துக் கொண்டு, நித்திய நியாயத்திர்ப்பும், நரக ஆக்கினையுமே அவர்களுக்கு முடிவாயிருக்கிறது என்பதை அறிவிக்கிறவர்களுமாய் நாம் இருப்போம்.

இப்படிப்பட்ட ஊழியத்தையே புதிய ஏற்பாடு முழுவதும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து முதற்கொண்டு, அப்போஸ்தலர்கள் மற்ற சுவிசேஷகர்கள் வரை செய்தனர். கிறிஸ்துவின் வார்த்தையை (சத்தியத்தை) மனோ வாஞ்சையாய் கேட்டவர்களுக்கு, ஆழமான, இரகசியமான சத்தியங்களையும், அதே நேரத்தில் சத்தியத்திற்கு எதிர்த்து நின்றவர்களுக்கு, நித்திய நியாயத்திர்ப்பையும் பலனாக அறிவித்தனர். **ரோ 6:22,23** வசனங்களிலும் பவுல் அப்போஸ்தலர் இதனையே வலியுறுத்துகிறார். **"இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்".**

பழைய ஏற்பாட்டிலும் கிறிஸ்துவின் நற்கந்தமாய் யோசேப்பு, தானியேல் போன்றோர் காணப்பட்டனர். அவர்கள் எங்கு இருந்தாலும், அவர்களோடு இருந்த ஆண்டவரால் அவர்கள் அறியப்பட்டனர். கிறிஸ்துவுக்கு நம்மை ஜீவபலியாய் ஒப்புக்கொடுக்கும் பொழுது **(ரோ 12:1)**, அவரது நற்கந்தமாய் நாம் மாறுகிறோம். இதையே பவுல் **கலா 2:20** கூறுகிறார் **" கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்"** என்றும் மேலும் **கலா 6:17இல் "கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்"** என்றும் கூறுகிறார்.

எனவே கிறிஸ்துவின் நற்கந்தமாய், சாரோனின் ரோஜாவின் வாசனையை வீசுகிறவர்களுமாய் வாழ்வோம். ஏனெனில் **எபே 5:2** கூறுகிறது **"கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில்**

**அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்"**, என்று. ஆமென், அல்லேலூயா.

## 21. பரிசுத்தம்

**அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன் (ஏசா (6:5).**




மேற்கண்ட ஏசாயா தீர்க்கதரிசியின் அறிக்கையே நம்முடைய அறிக்கையாகவும் இருந்திருக்கும். அன்று பரலோக பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட்ட நெருப்புத் தழலால் ஏசாயா தீர்க்கதரிசி சுத்தீகரிக்கப்பட்டது போல, இன்று நாம் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்ததால் சுத்தமாக்கப்பட்டிருக்கிறோம் **(1 பேதுரு 1:19)**, தேவனுடைய பிள்ளைகளாய், அவருக்கென ஊழியம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவின் இரத்தம் நம்மை முற்றிலுமாய் பாவத்திலிருந்து விடுவித்திருக்கிறது. பாவ மன்னிப்பின் நிச்சயத்தை நாம் பெற்றிருக்கிறோம். அதே நேரத்தில் மேற்கண்ட வசனத்தில் மற்றொரு காரியமும் கூறப்பட்டிருக்கிறது அது **அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்** என்பதாகும்.

இன்றைய காலகட்டத்திலும் நம்முடைய அனுபவமும் இதுவேயாகும். நாம் தேவனால் சுத்திகரிக்கப்பட்டிருந்தாலும், பாவம் நிறைந்த இந்த உலகத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாவத்தில் இருந்து விடுதலை பெற்றாலும், பாவத்தின் சூழலில் இருந்து நாம் இன்னும் விடுதலைப் பெறவில்லை. அதனாலேயே **கலா 5:17** இல் கூறப் பட்டுள்ளப்படி **"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது"**, நமது மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் போராடுகிறது. நாமும் பல வேளைகளில் நமது வார்த்தையிலும், சிந்தனையிலும்,

பார்வையிலும், செயலிலும் பாவத்தில் வீழ்ந்துவிடுகிறோம். ஆகிலும் தேவ கிருபை நாம் அதற்காய் வருத்தப்பட்டு அறிக்கையிட்டு மனம் திரும்பும் பொழுது நமது பாவங்களை மன்னிக்கிறது.

ஆகிலும் நாம் நம்மை சுற்றியுள்ள உலகத்தை காணும் பொழுது, அங்கு நடக்கும் பொல்லாத பாவகாரியங்களும், பிசாசின் கிரியைகளும், தேவனுக்கு விரோதமான செய்கைகளும், தேவ பிள்ளைகளை துன்புறுத்துகின்ற காரியங்களும், தேவன் ஏன் இதை எல்லாம் அனுமதித்துயிருக்கிறார் என்று எண்ண தோன்றுகிறது. மனிதர்களின் இருதயம் கடினப்பட்டு, தேவனுக்கு கீழ்படியாமல், அற்ப காரியங்களுக்காய், பொருளுக்காய், பதவிக்காய், சுகபோகத்திற்காய், தன்னையும் அழித்துகொண்டு, மற்ற மனிதர்களையும் அழிவின் பாதைக்கு கொண்டு செல்வோர் ஏராளம்.

ஆனால் இதில் எதைக்குறித்தும் உலகம் (உலக மக்கள்) கவலைப்படாமல் இன்னும் எவ்வாறு பாவத்தில் ஈடுபடலாம் என்பதிலும், பாவத்தில் வாழ்வோரை கண்டிப்பதற்கு பதிலாக அவற்றை ஊக்குவிப்பதையும், அதற்காய் உலக அரசாங்கங்களே சட்டத்தை இயற்றுவதையும் காணலாம். இன்னும் சிலபேர் இப்படிப்பட்ட பாவகாரியங்களில் வாழ்ந்து கொண்டே தேவனையும் பிரியப்படுத்தலாம் என்று முயற்சிப்பதும், அதையும் நியாயப்படுத்திடும் தேவ சபையில் இருக்கும் சிலரையும் நாம் காணும்பொழுது, தேவன் ஏன் மொனமாயிருக்கிறார் என்று நாம் எண்ணலாம்.

ஆகிலும், **பிரசங்கி 12:14** கூறுகிறபடி **"ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்"**, தேவன் ஒவ்வொரு காரியத்திற்கான நியாயத்திர்ப்பையும் நிறைவேற்றியே தீருவார். சுட்டெரிக்கப்பட்டு போவதே இவை ஒவ்வொன்றின் முடிவாகும் **(எபி 6:8)**. தேவன் சகலத்தையும், சகலரையும் நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார், ஒருவராகிலும் தப்பி போவதில்லை. தேவன் நம்மை இப்படிப்பட்ட சூழலில் வைத்திருப்பதன் காரணம், இப்படிப்பட்ட உலகத்தில் இருந்தே நாம் மீட்கப்பட்டது போல அவர்களும் மீட்க படமுடியும் என்பதற்காகவே. எனவே நாம் நம்மையும் பரிசுத்தமாய் காத்துக்கொண்டு, மற்றவர்களுக்காகவும் காரியங்களை செய்ய வேண்டும். அதுவே நம் ஒவ்வொருவருக்கும் தேவன் கொடுத்த ஊழியமாகும்.

ஆனால் அதே நேரத்தில் மரணத்துக்கு எதுவான பாவத்தை செய்யும் பொழுது, **1 யோ 5:16** இல் கூறப்பட்டுள்ளபடி **"மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல்செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன்"**, அவர்களுக்காக நாம் வேண்டுதல் செய்ய முடியாது.

வேதத்தில் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம் செய்கிறவன் மன்னிக்கப்படான் என்று ஆண்டவர் கூறியுள்ளார், **“எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை” (மத் 12:32)**. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான காரியங்களை செய்வது மட்டுமல்ல, ஆவியானவரின் கிரியை அல்லாததை ஆவியானவரின் கிரியை என்று சொல்வதும் அல்லது அதை ஆமோதிப்பதும் ஆவியானவருக்கு விரோதமான செய்கையே ஆகும். இப்படிப்பட்ட பரிசுத்த குலைச்சலே இன்று சபைகளில் காணப்படுகிறது. பிசாசிற்கு இடம் கொடுத்து, தங்கள் தேவ அழைப்பில் இருந்து விழத்தள்ளப்பட்டவர்களால் வஞ்சகமாய் நடைபெறும் இப்படிப்பட்ட காரியங்களால் அநேக தேவ பிள்ளைகள் வழிவிலகி போகின்றனர். எனவே ஒரு தேவ பிள்ளை உலகத்தில் இருக்கிற அசுத்ததிலிருந்து தன்னை காத்துக்கொள்வது போல, ஆவியானவருக்கு விரோதமான இப்படிப்பட்ட காரியங்களிலிருந்தும் தன்னை விலக்கி காத்துக்கொள்ள வேண்டும்.

மேலும் வேற்றுமையான உபதேசத்தை போதித்து, அறிவியலையும் (உலக ஞானம்), மற்ற மார்க்கங்களையும் (விக்கிரக வழிபாடு) தேவ சபையில் கலக்க நினைப்போருக்கும் சபையில் இடம்கொடாமல், தேவ பிள்ளைகள் தங்களை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும், **“ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால், அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும்பற்றி நோய்கொண்டவனுமாயிருக்கிறான்; அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சம்சயங்களுமுண்டாகி, கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு” (1 தீமோ 6:3-5)**. இவ்வாறு பலவிதங்களில் பிசாசானவன் இந்த கடைசி காலத்தில் தேவ பிள்ளைகளாகிய நம்மை தாக்கினாலும், ஆண்டவரோ இவை எல்லாவற்றையும் மேற்கொள்ளும்படியான கிருபையை அளித்து நம்மை தமக்குமுன் மாசற்றவர்களாய் நிறுத்துவார்.

மேலும் இப்படிப்பட்ட காரியங்களில் இருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள ஒரு எளிய வழி அவரை அறிகிற அறிவிலே ஒவ்வொரு நாளும் நாம் பெருகுவதே ஆகும், **“தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது” (2 பேதுரு 1:3,4)**. தேவ வார்த்தையாகிய வேதத்தை தியானிப்பதும், தேவ

பிரசன்னத்தை, அவருடைய ஐக்கியத்தை ஜெபத்தில் உணர்வதும் நாம் தேவனுக்கு செய்யும் எந்தவொரு ஊழியத்தை காட்டிலும், மிக மிக முக்கியமானதாகும். இப்படியாய் தேவ உறவில் நம்மை காத்து கொள்வோம், மற்றவரையும் தேவ உறவிற்க்குள்ளாய் வர வழி நடத்துவோம். தேவன்தாமே நம்மை சகல தீமைக்கும் விலக்கி பாதுகாத்து தம்முடைய நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக. ஆமென், அல்லேலூயா.

## 22. தேவனுக்காக காத்திருத்தல்

**நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும் (நீதி 13:12).**




நமது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், நாம் ஏதோ ஒரு எதிர்பார்ப்போடு சில காரியங்களுக்காக காத்திருக்கிறோம். சிறுபிள்ளைகள் தங்கள் படிப்பை குறித்தும், வாலிபர்கள் தங்கள் எதிர்காலத்தை குறித்தும், பெரியவர்கள் குடும்பத்தை குறித்தும் பொதுவாக சில எதிர்பார்ப்புகள் உள்ளவர்களாய் உள்ளனர். இன்னும் தனிப்பட்ட மனிதர்கள் தங்களின் வியாதிகள், பிரச்சனைகள் இவைகளில் இருந்தும் ஒரு விடுதலையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இவைகள் யாவும் உலக பிரகாரமான, மாம்ச சம்பந்தமான காத்திருக்குதல் ஆகும்.

இவற்றில் நாம் ஒரு விரும்பின முடிவை / பதிலை / விடுதலையை பெற்றுக்கொள்ளும் பொழுது நம் மனம் பெரும் மகிழ்ச்சி அடைகிறது. உதாரணமாக வறுமையின் மத்தியில் ஒரு தகுந்த வேலையை பெறுவது / நீண்ட நாள் வியாதியிலிருந்து விடுதலை பெறுவது / வெகுநாள் கழித்து ஒரு பிள்ளையை பெறுவது போன்ற காரியங்கள் மகிழ்ச்சியை தருகிறது. இதை அநுபவித்து பார்த்தவர்களுக்கே அது ஜீவ விருட்சம் போல் இருப்பது புரியும்.

ஆகிலும் இப்படிப்பட்ட பாதையின் வழியாய் கடந்து போகும்பொழுதே இவ்வுலக வாழ்க்கையின் எதார்த்ததை தேவன் நமக்கு புரியவைக்கிறார். இப்படிப்பட்ட காரியங்களில் இருந்து நாம் விடுபடும்பொழுது மிகுந்த மகிழ்ச்சி அடைவது மட்டுமின்றி, நம்மை தேவன் எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதையும், எப்படி அற்புதமாய் நம்மை விடுவித்தார் என்பதையும் நாம் உணர்ந்து கொள்கிறோம். இப்படிப்பட்ட பாதையின் ஊடாய் கடந்து

செல்லும் மற்றவருக்கும் தேவ அன்பினை அறிவிக்கும் சாட்சிகளாய் நாம் மாற்ற படுகிறோம். தேவன் சகலவற்றையும் அதின் அதன் காலத்தில் நேர்த்தியாய் செய்கிறார் என்பதையும், தேவன் சகலவற்றையும் நன்மையாகவே நம் வாழ்கையில் அனுமதிக்கிறார் என்பதையும் நாம் புரிந்து கொள்கிறோம்.

இதனையே நாம் பரிசுத்த வேதாகமத்தில் ஆபிரகாம், யோசேப்பு ஆகியோரின் வாழ்க்கையில் காண்கிறோம். குறிப்பாக **ஆதி 50:19,20** வசனங்களில் யோசேப்பு தன் சகோதரர்களிடம் **"யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்"**, என்பதின் மூலம் தன் குடும்பத்தோடு சேர்த்து அநேக மக்களை பஞ்சத்தில் இருந்து காக்கும்படிக்கே தேவன் சகவற்றையும் தன் வாழ்வில் அனுமதித்தார் என்பதை உணர்ந்துகொண்டார்.

ஆனால் வசனம் சொல்கிறபடி நெடுங்காலமாய் காத்திருத்தல் இருதயத்தை இளைக்கப்பண்ணும். இதையே நாம் யோசேப்பின் வாழ்க்கையிலும் அவர் பின்வருமாறு கூறுவதிலிருந்து காணலாம் **"இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி, நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும். நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை என்றும் சொன்னான்" (ஆதி 40:14,15)**.

யோசேப்பு இவ்வாறு கூறினாலும் தேவன் நிச்சயமாகவே தன் வாழ்க்கையில் கிரியைச்செய்வார் என்ற விசுவாசத்தோடு அவசரப்படாமல் / குறுக்கு வழிகளை நாடாமல் தேவனுக்கு காத்திருந்தார். ஆதலால் ஏற்ற நேரத்தில் அதே பானபாத்திரகாரன் மூலம் தேவன் கிரியைச்செய்தார் (**ஆதி 41:9**). ஆனால் ஆபிரகாமின் வாழ்க்கையிலோ அவர் அவசரப்பட்டு சாராளின் சொல்லை கேட்டு செயல்பட்டார். ஆகிலும் தேவன் தமது ஆசிர்வாதத்தை சரியான நேரத்தில் ஆபிரகாமிற்கு கொடுத்தார். ஆனால் ஆபிரகாமின் செயலால் ஆகார் மற்றும் இஸ்மவேலின் மூலமாக தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்ப்பட்டது. இன்றும் அது தொடர்கிறது.

நெடுநாள் காத்திருப்பதால் நமது இருதயம் சோர்ந்து போகலாம். நாம் வேதனைப்பட்டு கலங்கலாம். இன்னும் எத்தனை நாள் இந்த வேதனை என்று ஆண்டவரிடம் கூட மன்றாடலாம். ஆனால் ஒரு போதும் தேவ சித்ததிற்கு எதிராக, தேவன் காட்டாத வழிகளில் செயல்பட கூடாது. அதனால் ஏற்படும் நஷ்டம் நமது ஆசிர்வாதத்தை கூட பாதிக்கும்.

மேலும் ஆவிக்குரிய ரீதியிலும் காத்திருத்தல் காணப்படுகிறது. தேவனும் பாவியான ஒரு மனுஷனின் இருதய கதவை தட்டிக்கொண்டிருக்கிறார். என்றாவது ஒரு நாள் இந்த மனிதன் தனக்கு கதவை திறப்பான் என்றும், என்றாவது ஒரு நாள் நாம் கனிகொடுப்போம் என்றும் தேவன்

பொறுமையாய் காத்திருக்கிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தாம் செய்து முடித்த கிரியையின் பலனை இன்றும் எதிர்ப்பார்பவராய் நமது ஆண்டவர் இருக்கிறார். அதனாலேயே பாவியான ஒரு மனிதன் மனம் திரும்பும்பொழுது பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது **(லூக் 15:7)**. மேலும் ஆண்டவர் கூறிய "மனந்திரும்பின மைந்தன்" உவமையிலும் நாம் இதனையே காண்கிறோம் **(லூக் 15 அதி)**. மேலும் **லூக் 19:10** கூறுகிறபடி இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார். இன்றும் அவர் ஆத்துமாக்களை தம் ஊழியர்கள் (நம்மூலம்) தேடிக்கொண்டிருக்கிறார்.

அதே நேரத்தில் நாமும் ஆண்டவருடைய வருகைக்காய் காத்திருக்கிறோம். மரணத்தின் மூலமாவது, மறுரூப மகிமையின் மூலமாவது நாம் ஆண்டவரை சந்திக்க காத்துக்கொண்டிருக்கிறோம். உண்மையிலேயே இது நடக்கும்பொழுது ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவை நாம் முழுமையாய் பெற்றுக்கொள்வோம். நமது ஆவிக்குரிய, சரீர சோர்வுகள் யாவும் அகன்றுபோகும். எனவே நாம் ஆண்டவருடைய வாஞ்சையை பூர்த்தி செய்து, அவரண்டை சேர்ந்து, கனிகளை கொடுத்து அவருடைய வருகைக்கு காத்திருக்கும்பொழுது, நிச்சயமாகவே அவர் நமக்காக வருவார். நம்மை தம்மண்டை சேர்த்துக்கொள்வார். எனவே இப்படிப்பட்ட மேன்மையான பாக்கியத்திற்கு காத்திருக்கும் நாம், இவ்வுலக காரியங்களிலும் அவரையே சார்ந்திருந்து அவருக்கே காத்திருப்போம். நிச்சயமாகவே முடிவு உண்டு; நம் நம்பிக்கை வீண் போகாது **(நீதி 23:18)**. ஏனெனில் **"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" (ஏசா 40:31).** ஆமென், அல்லேலூயா.

## 23. கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்

**குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (1 பேதுரு 1:19).**




மேற்கண்ட வசனத்தில் கூறப்பட்டுள்ளபடி கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்டதாலேயே, இன்று நாம் பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர்களாய், கிறிஸ்துவில் ஐக்கியம் கொள்கிறவர்களாய், நித்திய வாழ்வைக்குறித்து நிச்சயம் உடையவர்களாய் வாழமுடிகிறது. **யோ 3:16** கூறுகிறபடி **"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"**, இங்கு அவரை தந்ததின் நோக்கமே அவருடைய இரத்தம் நமக்காய் ஊற்றப்பட வேண்டும் என்பதற்காகவே.

**எபிரெயர் 9:12** கூறுகிறது **"வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்டை உண்டுபண்ணினார்"**, என்று. எனவே நித்திய மீட்பாகிய இரட்சிப்பு நமக்கு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகவே வருகிறது. மேலும் **1 யோ 1:7** கூறுகிறது **"அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்"**, என்று. மனுகுலத்திற்காய் சிந்தப்பட்ட விலையேறப்பெற்ற

கிறிஸ்துவின் இரத்தத்தை இன்று பிரயோஜனப்படுத்தாதவர்களாய், தங்கள் வாழ்க்கையை பலர் வாழ்ந்து முடித்திருக்கின்றனர். உலகத்தில் உள்ள பணம், பொன் போன்றவற்றை எல்லாம் மதிப்புமிக்கதாக எண்ணி அவற்றை இரவும், பகலும் தேடும் மனிதர்கள், தங்களை தேடி வந்து தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்ததையே ஊற்றிக் கொடுத்த கிறிஸ்துவை குறித்து அக்கறை அற்றவர்களாய் உள்ளனர்.

**மத்தேயு 26:28** கூறுகிறது **"இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது"**. ஆனால், இன்று உலக மக்களால் அதிகமாய் வீணடிக்கப்படுவது கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தமே ஆகும். மனிதர்கள் தெரிந்தோ, தெரியாமலோ அவருடைய கிரயத்தின் மதிப்பை உணராதவர்களாய், தங்கள் வாழ்வையே வீணடிக்கின்றனர். **1 கொ 6:20** கூறுகிறது **"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்"**, என்று.

இதில் மேலும் வேதனை தருகிற ஒரு காரியம் **எபிரெயர் 10:29** கூறப்பட்டுள்ளபடி **"தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்"**, இங்கு நாம் காண்கிறது அவருடைய பலியின் மேன்மையை அறிந்தும் உணராதவனுடைய முடிவாகும்.

இன்று உலகம் முழுவதும் ஆண்டவர் நமக்காய் இரத்தம் சிந்தின காரியங்கள் நினைவு கூறப்படுகின்றன. மேற்கூறப்பட்டுள்ள வசனங்களின் செய்திகள் பல்வேறு விதங்களில் அறிவிக்கப்படுகின்றன. ஆனால் மனிதர்களின் மனமோ இன்னும் கடினமாகவே உள்ளது. மனிதர்களின் ஞானம் பல்வேறு காரியங்களில் அபரிதமாய் வளர்ந்து இருந்தாலும், கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை உணராமல், ஜீவனிள்ளாதவைகளின் மேலும், மாயையானவைகளின் மேலும் மனிதர்களின் நம்பிக்கை காணப்படுகிறது. இதிலும் கொடுமையானது, கிறிஸ்துவின் இரத்ததால் கழுவப்பட்டோம் என்று கூறியும், அதன் மேன்மையை உணராதவர்களாய் வாழ்வதாகும்.

எனவே இன்றே நாம் மனந்திரும்புவோமாக, உலகத்தில் உள்ள எந்த ஒரு பொருளை காட்டிலும் விலையேறப்பெற்றது கிறிஸ்துவின் இரத்தமாகும், அதன் மேன்மையை உணர்ந்தவர்கள் ஒருபோதும் பாதை மாறிப்போக மாட்டார்கள். எனவே கிறிஸ்துவை அறிவிக்கும் போது அங்கு முக்கியமாக கூறப்பட வேண்டியது அவருடைய விலையேறப்பெற்ற இரத்தமே ஆகும்.

ஏனெனில் **வெளி 19:11-13** வசனங்கள் கூறுகிறது **"பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்**

**பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார். அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே".** ஆமென், அல்லேலூயா.

## 24. தேவ ஆளுகை

**உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் (தானி 4:25).**




இன்று பெரும்பாலான மனிதர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை குறித்து, ஆளுகைகளை குறித்து பெருமையோடு காணப்படுகின்றனர். மேலும் மேலும் அதிகாரங்களை பெற துடிக்கின்றனர். ஆனால் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் எதற்கு என்பதை அறியாமல், தங்களின் சுயலாபத்திற்காய் அதை பயன்படுத்த துடிக்கின்றனர். இன்னும் சில மனிதர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் மூலம் தேவ இராஜ்யத்தையே எதிர்க்கின்றனர். வேதாகமத்திலும், உலக வரலாற்றிலும் இப்படிப்பட்ட மனிதர்களை நாம் காணலாம். ஆகிலும் மேற்கண்ட **தானி** 4:25 வசனம் கூறுகிறபடி உன்னதமான தேவனே ஆளுகை செய்கிறவர் என்பதையும், தம்முடைய சித்தப்படி மனிதர்களுக்கு ஆளுகைகளை கொடுக்கிறார் என்பதையும் நாம் காணலாம். எனவே சரீர பிரகாரமாக நாம் சில மனிதர்களின் ஆளுகைகளின் கீழ் இருந்தாலும், நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய அனைத்தையும் ஆண்டு நடத்துகிறவர் தேவனே என்பதை நாம் உணர வேண்டும். இதனையே நமது ஆண்டவரும் பின்வரும் **யோ** 19:10,11 வசனங்களில் கூறியுள்ளார், “ **அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா**

என்றான். இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்".

பிலாத்துவை போல தனது இராஜ்யத்தை குறித்து மேன்மை பாராட்டின நேபுகாத்நேச்சாரிடம் தேவன், தாமே சகலத்தையும் ஆண்டு நடத்துகிறவர் என்பதை விளங்க பண்ணினார். இதனை பின்வரும் வசனங்களில் காணலாம் "பன்னிரண்டு மாதம் சென்றபின்பு, ராஜா பாபிலோன் ராஜ்யத்தின் அரமனைமேல் உலாவிக்கொண்டிருக்கும்போது: இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான். இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும்போதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே, ராஜ்யபாரம் உன்னைவிட்டு நீங்கிற்று. மனுஷரினின்று தள்ளப்படுவாய்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய்; மாடுகளைப்போல் புல்லை மேய்வாய்; இப்படியே உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறாரென்பதை நீ அறிந்துகொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உன்மேல் கடந்துபோகும் என்று உனக்குச் சொல்லப்படுகிறது என்று விளம்பினது" தானி (4:29-32).

தேவன் இவ்வாறு தமது வல்லமையை வெளிப்படுத்தியிருந்தும் தேவனுக்கு எதிர்த்து நின்ற பெல்ஷாத்சார் என்னும் நேபுகாத்நேச்சார் குமாரனின் ஆளுகைக்கு ஒரே இரவில் தேவன் முடிவுண்டாக்கினார். இதனை நாம் தானி 5:22-28,30 வசனங்களில் காணலாம் "அவருடைய குமாரனாகிய பெல்ஷாத்சார் என்னும் நீரோவென்றால், இதையெல்லாம் அறிந்திருந்தும், உமது இருதயத்தைத் தாழ்த்தாமல், பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக உம்மை உயர்த்தினீர்; அவருடைய ஆலயத்தின் பாத்திரங்களை உமக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்; நீரும், உம்முடைய பிரபுக்களும், உம்முடைய மனைவிகளும், உம்முடைய வைப்பாட்டிகளும் அவைகளில் திராட்சரசம் குடித்தீர்கள்; இதுவுமன்றி, தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும், உமது வழிகளுக்கு எல்லாம் அதிகாரியுமாகிய தேவனை நீர் மகிமைப்படுத்தாமல் காணாமலும் கேளாமலும் உணராமலும் இருக்கிற வெள்ளியும் பொன்னும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தீர். அப்பொழுது அந்தக் கையுறுப்பு அவரால் அனுப்பப்பட்டு, இந்த எழுத்து எழுதப்பட்டது. எழுதப்பட்ட எழுத்து என்னவென்றால்: மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் என்பதே. இந்த வசனத்தின் அர்த்தமாவது: மெனே என்பதற்கு, தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார் என்றும், தெக்கேல் என்பதற்கு, நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய் என்றும், பெரேஸ் என்பதற்கு, உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்றும் அர்த்தமாம் என்றான். அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலைசெய்யப்பட்டான்".

மேற்கண்ட வசனங்களின் மூலம் நாம் கற்றுகொள்ளும் சத்தியம் என்னவென்றால் தேவனே சகலத்தையும் ஆண்டு நடத்துகிறவர் என்பதையும், தேவ பிள்ளைகளை இவ்வுலக அதிகாரங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்றும், தேவனை எதிர்த்து நிற்கும் எந்த அதிகாரத்திற்கும் தேவன் முடிவுண்டாக்குவார் என்பதுமாகும். எனவே இப்பொழுதும் தேசத்தை யார் ஆள போகிறார்கள் என்று நமது இந்திய மக்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் இக்கட்டத்திலும், தேவபிள்ளைகளாகிய நாம் வேத சத்தியத்தின்படி அமைதியோடு தேவனையே சார்ந்திருப்போம். ஏனெனில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியபடி **"பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" (யோ 19:11)**. ஆதலால் மனித அதிகாரங்களை நாம் சார்ந்துகொள்ளவோ அல்லது அதற்கு அடிமைபடவோ / பயப்படவோ தேவையில்லை. ஆமென், அல்லேலூயா.

# 25. தேவ பெலன்

**சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார் (ஏசா 40:29).**




நாம் அநேக நேரங்களில் நமது ஆவியிலும், சரீரத்திலும் பெலவீனப்பட்டு போகிறோம். யோபுவின் வாழ்க்கையில் ஏற்ப்பட்டதுபோல சத்துருவினால் உண்டாகும் சோதனைகள் நிமித்தமும், வேதனைகளின் நிமித்தமும் நம்முடைய ஆவி சோர்ந்துபோகிறது. அதன் விளைவாக நமது சரீரமும் சோர்ந்துபோகிறது. எலியா தீர்க்கதரிசியின் வாழ்க்கையிலும், இத்தகைய ஆவிக்குரிய, சரீர சோர்வே காணப்பட்டது (1 இரா 19).

சில நேரங்களில் சரீரத்தில் உண்டாகும் பாடுகள், சோதனைகள் நிமித்தம் நாம் ஆவிக்குரிய வாழ்வில் சோர்ந்து போகிறோம். எப்படியிருப்பினும் இத்தகைய சோர்வுகள் நமது ஆவிக்குரிய மற்றும் சரீரத்திற்குரிய இவ்வுலக வாழ்க்கையில் வெற்றியோடு வாழமுடியாதபடி நம்மை பெலவீனப்படுத்துகிறது.

இத்தகைய பெலவீன சூழ்நிலைகளில் தேவ பெலன் நமக்கு தேவையாய் இருக்கிறது. 1 சாமு 30 அதிகாரத்தில் தாவீது மற்றும் அவன் மனுஷருடைய, மனைவி, பிள்ளைகள் மற்றும் பொருட்கள் அனைத்தையும் அமலேக்கியர் கொள்ளை அடித்து சென்றபொழுது (1 சாமு 30:1-3), **“தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள்”** (1 சாமு 30:4). மேலும் **“தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்”** (1 சாமு 30:6).

இங்கு தாவீது சரீரத்திலும் பெலனில்லாமல், ஆவியிலும் நெருக்கப்பட்டார். ஆகிலும் 1 சாமு 30:6 கூறுகிறது **“தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே**

**தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்"**. ஆம் இங்கு கர்த்தருக்குள் அவர் தன்னை திடப்படுத்தி கொண்டபொழுது, சோர்ந்துபோன ஆவியிலும், சரீரத்திலும் பெலனைப்பெற்றுக்கொண்டார். இங்கு நாம் அறிந்துகொள்ளும் வேத சத்தியம் என்னவென்றால் தேவ பெலன் நம்மேல் வரும்பொழுது, அது நம்முடைய ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் முழுவதையும் பெலனடைய செய்கிறது. சில வேளைகளில் பவுலின் வாழ்க்கையில் உண்டானது போல, அவருடைய சரீர உபாதை நீங்காவிட்டாலும், அதை தாங்கி கொள்ளும்படியான தேவகிருபை அவருக்கு கொடுக்கப்பட்டது (2 **கொ** 12:9).

உலக வரலாற்றில் எத்தனையோ தேவபிள்ளைகள் சரீரத்தில் பெலவீனத்தோடு காணப்பட்டாலும், அதன் மத்தியிலும் வல்லமையாய் தேவ ஊழியத்தை செய்ய காரணம் அவர்கள் மேல் இருந்த தேவபெலனே ஆகும். அதுவே நமது ஆவியையும், ஆத்துமாவையும், சரீரத்தையும் உயிர் அடையச்செய்கிறது. மேலும் சில நேரங்களில் நம்முடைய பெலவீனங்களுக்கு நாமே காரணமாகிவிடுகிறோம். நாம் நமது ஆவிக்குரிய வாழ்வில் பாவத்திற்கு இடம் கொடுக்கிறபொழுது, அது முதலில் நமது ஆவியை பாதிக்கிறது, பிறகு அது நம்முடைய சரீரத்திலும் பெலவீனத்தை ஏற்ப்படுத்துகிறது.

**மத்** 9:1-7 வசனங்களில் தம்மிடம் சரீர சுகத்திற்காக கொண்டுவரப்பட்ட திமிர்வாதக்காரனை நோக்கி ஆண்டவர் **"மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்"** (**மத்** 9:2). இங்கு சரீரத்தில் உள்ள பெலவீனத்திற்கு அவனுடைய ஆவிக்குரிய வாழ்வில் இருந்த பாவம் காரணமாயிருந்தது. எனவே தேவ பிள்ளைகளாகிய நாம் நமது சரீரத்திலோ, ஆவியிலோ பெலவீனத்தை உணரும் போது, நம்மை நாமே தற்பரிசோதனை செய்து கொள்வது மிகவும் முக்கியமாகும்.

எது எப்படியிருப்பினும் கிறிஸ்து நமக்கு தேவபெலனாயிருக்கிறார் (1 **கொ** 1:24). ஆகவே **"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு"** (**பிலி** 4:13). ஆமென், அல்லேலூயா.

# 26. தேவன் - சிருஷ்டிகர்த்தர்

**ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி 1:1)**




மேற்கண்ட (ஆதி 1:1) என்ற வசனத்திலிகுந்து நமது பரிசுத்த வேதாகமம் துவங்குகிறது. **ஆதியாகமம் 1ஆம்** அதிகாரம் முழுவதும் தேவன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காரியத்தையும் எவ்வாறு சிருஷ்டித்தார் என்பதை விளக்குகிறது. தேவன் நினைத்திருந்தால் அனைத்தையும் ஒரே நொடி பொழுதில் சிருஷ்டித்திருக்க முடியும். ஆனால் அவரோ நேரமெடுத்து ஒவ்வொன்றையும் சிருஷ்டித்தார். ஒவ்வொரு நாள் முடிவிலும் தாம் சிருஷ்டித்ததை நோக்கிப்பார்த்து நல்லது என்று கண்டார். (ஆதி 1:10,12,18,21,25). இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியம் என்னவென்றால், தேவன் சகலற்றையும் ஒன்றன் பின் ஒன்றாக ஒழுங்கும் கிரமுமாய் சிருஷ்டித்தார். தான் சிருஷ்டித்த ஒவ்வொன்றை குறித்தும் மகிழ்ந்தார் (சங் 104:31). சிறு பூச்சி புழுவில் இருந்து பெரிய விலங்குகள் வரை, செடிகொடிகள், சூரியன், சந்திரன், சமுத்திரம், மலைகள் என்று சிறிய காரியனானாலும், பெரிய காரியமானாலும், ஒவ்வொன்றையும் ஒரு நோக்கத்தோடு, அவை அனைத்தும் ஒரு ஒழுங்கை பின்பற்றும்படியாய் சிருஷ்டித்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக மனிதனை தன் மனதில் வைத்தே இவை எல்லாவற்றையும் அவனுக்காகவே உண்டாக்கினார். மனிதன் தேவனுடைய சிருஷ்டிப்பில் ஒரு பகுதி மாத்திரமல்ல, மொத்த சிருஷ்டிப்பும் அவனை சுற்றியே இருந்தன. தேவன் படைத்த ஒவ்வொன்றும் மனிதனுடைய பிரயோஜனத்திற்காக சிருஷ்டித்தார். மேலும் அனைத்தின் மேலும் அவனுக்கு அதிகாரத்தையும் கொடுத்தார் (ஆதி 1:28, சங் 115:16). தேவன் பூமியை சிருஷ்டித்து எத்தனையோ ஆண்டுகள் கடந்த பின்பும்,

இன்றும் இந்த பூமி இளமையாகவே காணப்படுகிறது. பூமியின் இயற்கை (தேவ செயலின்) அழகு இன்றுவரை குறையவே இல்லை. மனிதன் உருவாக்கினவைகள் நாட்கள் ஆக ஆக மகிமையிழந்து முடிவில் ஒன்றும் இல்லாமல் போகும். ஆனால் தேவனுடைய சிருஷ்டிப்பின் அழகோ இன்றும் மாறாமல் இருக்கிறது. மனிதர்களுக்கு வேண்டியவைகளை இன்றும் அளவில்லாமல் கொடுத்துக்கொண்டேயிருக்கிறது. இதைக்குறித்து **சங்கீதம் 104** விளக்குகிறது. அதை நாம் பின்வருமாறு தியானிக்கலாம்.

**சங் 104:5-9** வசனங்களில் **"பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார். அதை வஸ்திரத்தினால் மூடுவதுபோல ஆழத்தினால் மூடினீர்; பர்வதங்களின்மேல் தண்ணீர்கள் நின்றது. அவைகள் உமது கண்டிதத்தால் விலகியோடி, உமது குமுறலின் சத்தத்தால் விரைந்துபோயிற்று. அவைகள் மலைகளில் ஏறி, பள்ளத்தாக்குகளில் இறங்கி, நீர் அவைகளுக்கு ஏற்படுத்தின இடத்தில் சென்றது. அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக்கொள்ளாதபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர்"**, இங்கு, பூமியை எவ்வாறு சிருஷ்டித்து, அதிலிருந்த தண்ணிரை எவ்வாறு ஒழுங்குப்படுத்தினார் என்பதை காணாலாம். அவைகள் மலைகள், பள்ளதாக்குகள் வழியாய் சென்று கடலில் கலக்கும்படியாய் செய்து, அதன்மூலம் மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மரங்கள் ஆகிய அனைத்திற்கும் வேண்டிய நீர் தேவையை சந்திக்கும்படி செய்கிறார்.

ஆனால் இவை எல்லாம் தானாய் உருவாகி, தானாய் நடைபெறுகிறது என்று சொல்லுகிறவர்கள் எவ்வளவு அறிவீனமானவர்கள் என்பதும், சத்துரு உலக ஞானம் என்பதின் மூலம் இப்படிப்பட்ட மனிதரின் மனக்கண்களை குருடாக்கி வைத்திருப்பதையும் காணலாம். ஆம் தேவனுடைய கிருபை, வல்லமைகளை உணர்ந்து கொள்ள நம் மாம்ச கண்கள் மாத்திரமல்ல நம் மனகண்களும் தெளிவாய் இருக்க வேண்டும்.

மேலும் **சங் 104:13** கூறுகிறது **"உமது கிரியைகளின் பலனாலே பூமி திருப்தியாயிருக்கிறது"**, என்று. ஆம் இன்று வரை மனிதர் முதல் விலங்குகள், பறவைகள், செடிகொடிகள் வரை தேவன் அனைத்தையும் திருப்தியாக போஷித்து வருகிறார். மனிதன் தான் உழைக்காமல், விளை நிலங்களையும் மற்ற இயற்கையின் காரியங்களையும் அழித்து வருகிறான். மேலும் **சங் 104:14,15** வசனங்கள் கூறுகிறது **"பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி, அவர் மிருகங்களுக்குப் புல்லையும், மனுஷருக்கு உபயோகமான பயிர்வகைகளையும் முளைப்பிக்கிறார். மனுஷனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராட்சரசத்தையும், அவனுக்கு முகக்களையை உண்டுபண்ணும் எண்ணெயையும், மனுஷனுடைய இருதயத்தை ஆதரிக்கும் ஆகாரத்தையும் விளைவிக்கிறார்"**, இங்கு ஆண்டவர் எதோ மனிதனுக்கு உணவை மட்டும் தருகிறவர் அல்ல, அவன் உள்ளத்திற்கும், உடலிற்க்கும் வேண்டிய அனைத்தையும் பூமியில் இருந்து தந்து மகிழ்ச்சியாக்குகிறவராய் இருக்கிறார்.

மேலும் **சங் 104:20-23** வசனங்களில் **"நீர் இருளைக் கட்டளையிடுகிறீர், இராக்காலமாகும்; அதிலே சகல காட்டு ஜீவன்களும் நடமாடும். பாலசிங்கங்கள் இரைக்காக கெர்ச்சித்து, தேவனால் தங்களுக்கு ஆகாரம்**

**கிடைக்கும்படித் தேடும். சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்கி, தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளும். அப்பொழுது மனுஷன் சாயங்காலமட்டும் தன் வேலைக்கும், தன் பண்ணைக்கும் புறப்படுகிறான்"**, தேவன பகலையும் இரவையும் படைத்து, அதை எவ்வாறு ஒழுங்கும் கிரமுமாய், மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் பயனுள்ளதாக வைத்திருக்கிறார் என்பதை காணலாம்.

எனவே **சங்** 104:24 கூறுகிறது **"கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது"**, ஆம் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் தேவனுக்கு சொந்தமானது. ஒருபுறம், மனிதன் பாவம் செய்து அதன்மூலம், முழுமனுக்குலமே பாவத்திற்க்குட்பட்டு, மனிதன் தானாய் தனக்கு ஏற்படுத்தி கொண்ட இராஜ்யங்களை பிசாசானவன் தன்னுடைய கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கலாம். பூமியை தீட்டுப்படுத்தி, குற்றமற்ற இரத்தம் சிந்துதல்களையும், அக்கிரம கிரியைகளையும் பூமியில் நடப்பித்திருக்கலாம். இவையெல்லாம் மனிதன் பாவத்திற்கு (சாத்தானுக்கு) தன்னை விற்றுப்போட்டதால் உண்டானது. ஆனாலும் இன்றும் பூமியில் முளைக்கும் ஒவ்வொறு செடிகொடிக்குள்ளும் தேவனுடைய ஜீவன் இருக்கிறது. இப்பூமியில் உள்ள அனைத்தும் அவருடையவைகளே.

மேலும் சமுத்திரத்தில் தேவனுடைய கிரியை எவ்வாறு காணப்படுகிறது என்பதை **சங்** 104:25-30 காணலாம் **"பெரிதும் விஸ்தாரமுமான இந்தச் சமுத்திரமும் அப்படியே நிறைந்திருக்கிறது; அதிலே சஞ்சரிக்கும் சிறியவைகளும் பெரியவைகளுமான எண்ணிறந்த ஜீவன்கள் உண்டு. அதிலே கப்பல்கள் ஓடும்; அதிலே விளையாடும்படி நீர் உண்டாக்கின திமிங்கிலங்களும் உண்டு. ஏற்றவேளையில் ஆகாரத்தைத் தருவீர் என்று அவைகளெல்லாம் உம்மை நோக்கிக் காத்திருக்கும். நீர் கொடுக்க, அவைகள் வாங்கிக்கொள்ளும்; நீர் உம்முடைய கையைத்திறக்க, அவைகள் நன்மையால் திருப்தியாகும். நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும்; நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும். நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்"**.

எனவே இவ்வாறு அருமையாய் படைத்த மனிதனையும், அவனுக்காக உண்டாக்கின பூமியையும், தேவன் தீட்டுப்பட்டுபோக விடமாட்டார். **சங்** 104:35 கூறுகிறது **"பாவிகள் பூமியிலிருந்து நிர்மூலமாகி, துன்மார்க்கர் இனி இராமற்போவார்கள். என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அல்லேலூயா"**, ஆம் பாவிகளையும், துன்மார்க்கரையும் இப்பூமியில் இருந்து அகற்றி போட்டு, தம்முடைய மக்களோடு ஆண்டவர் இப்பூமியில் 1000 வருடம் ஆட்சிசெய்வார். அதன் பிறகு **சங்** 104:30 கூறப்பட்டுள்ளபடி **"நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்"**, அவர் பூமியின் ரூபத்தையும், புதிதாக்குவார். புதிய வானத்தையும், புதிய பூமியையும் உண்டாக்கி தம்மக்களோடு எந்நாளும் அரசாளுவார். அங்கு பாவத்திற்க்கோ, பாவிக்கோ

இடமில்லை. பொய்க்கு பிதாவான பிசாசும் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவான்.

எனவே தேவன் படைத்த இந்த அருமையான பூமியிலே வாழ்கின்ற நாம் இந்த பூமியில் தேவன் படைத்த ஒழுங்கின்படி வாழ்ந்து, தேவன் நமக்கென்று படைத்த எல்லாவற்றையும் பிரயோஜனப்படுத்தி, புதிய வானம், புதிய பூமியிலும் வாழ பங்குள்ளவர்களாய் காணப்படுவதற்கு இப்பூமிக்குரிய வாழ்விலேயே நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வோம். ஆமென், அல்லேலூயா.

## 27. அவரை அறிகிற அறிவினாலே

**நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் (2 தீமோ 1:12)**




வேதாகமத்தில் 2 பேதுரு புத்தகம் முழுதும் பிதாவாகிய தேவனையும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிகிற அறிவினாலே ஒரு தேவபிள்ளை பெற்றுக் கொள்ளகூடிய ஆசிர்வாதங்களை விளக்குகிறது. அதனை நாம் பின்வருமாறு தியானிப்போம்.

2 பேதுரு 1:2-11 வசனங்கள் கூறுகிறது **“தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே**

**தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்".**

மேற்கண்ட வசனங்களில் **வசனம் 2** கூறுகிறது அவரை அறிகிற அறிவினால் நமக்கு கிருபையும், சமாதானமும் பெருகுகிறது என்று. மேலும் **வசனம 3** கூறுகிறது, தேவபக்தியான வாழ்க்கைக்கு தேவையான யாவற்றையும், இவ்வுலக வாழ்க்கைக்கு தேவையான யாவற்றையும் அவரை அறிகிற அறிவினாலே நாம் பெற்றுக் கொள்கிறோம் என்று. அதுமாத்திரமல்ல **வசனம் 4** கூறுகிறதுபோல உலகத்தில் உள்ள பொல்லாத காரியங்களுக்கும், செயல்களுக்கும் தப்பி, திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவரகளாகும் பொருட்டு அருமையான் வாக்குத்தத்தங்களும் அவரை அறிகிற அறிவினாலே நமக்கு கொடுக்கப்படுகிறது.

அவரை அறிகிற அறிவினால் மேற்கூறப்பட்டுள்ள அருமையான காரியங்களை நாம் பெற்றுக்கொள்ளும் பொழுது, அதனால் நம் வாழ்க்கையில் கீழ்காணும் கனிகளை உடையவர்களாய் மாறுவோம். (1) விசுவாசம் (2) தைரியம் (3) ஞானம் (4) இச்சையடக்கம் (5) பொறுமை (6) தேவ பக்தி (7) சகோதர சிநேகம் (8) அன்பு. **வசனம் 8** கூறுகிறபடி, இவ்வகை சுபாவங்கள் நமக்குள் பெருகினால், அதுவே நாம் அவரை அறிகிற அறிவில் விருத்தியடைந்துள்ளோம் என்பதற்கு சாட்சியாகும். **வசனம் 9** கூறுகிறபடி, மேற்கண்ட காரியத்தில் ஒருவன் குறைவுபடும் பொழுது ஒருவன் தான் தேவனால் சுத்திகரிக்கப்பட்டவன் (இரட்சிக்கப்பட்டவன்) என்பதையே மறந்து, கண் சொருகிப்போன குருடனை போலாகிறான். எனவே நாம் ஜாக்கிரதையாய் வாழும் பட்சத்தில், கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும் **(வசனம் 10,11)**.

மேலும் **2 பேதுரு 2:20-22** வசனங்கள் கூறுகிறது **"கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான்**

**கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது".**

மேற்க்கண்ட வசனங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளும் சத்தியம் என்னவென்றால், அவரை மனதார அறிந்து உணர்ந்த பிறகும், ஒருவன் பின் வாங்கிப்போனால் அவனுடைய பின்னிலைமை இரட்சிக்கப்படுவதற்கு முன்பிருந்த முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். ஏனெனில் தேனால் நாம் வாழ்க்கையில் பெற்ற ஆசிர்வாதங்கள், அற்புதங்கள் ஆகியவற்றால் உண்டாகிற மாற்றத்தை காட்டிலும், அவரை அறிகிற அறிவினால் உண்டாகிற மாற்றம் மேன்மையானதாகும். அதிலிருந்தும் ஒருவன் பின்வாங்கிபோவானானால் அவனை பிறகு மீட்டெடுப்பது முடியாத காரியமாகும்.

இப்பொழுது நாம் தேவனை அறிகிற அறிவு என்றால் என்ன என்பதை குறித்து தியானிப்போம். நாம் என்று தேவனுடைய வார்த்தையை (சத்தத்தை) கேட்டு இரட்சிக்கப்பட்டோமோ அன்றிலிருந்தே அவரை அறிகிற அறிவு நமக்குள் தோன்ற ஆரம்பிக்கிறது. தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமம் மூலம் அவரை அறிகிற அறிவில் பெருகுகிறோம். **ரோமர் 10:17** கூறுகிறது **"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்"** என்று. மேலும் தேவனோடு நாம் கொண்டுள்ள ஐக்கியத்தின் மூலம், தனிப்பட்ட உறவின் மூலம் அவரை அறிகிற அறிவில் பெருகுகிறோம்.

அவருடைய சித்தத்தை அறிந்து அதன்படி நம்முடைய வாழ்க்கையை நடத்தும் பொழுது, தேவன் நம்முடைய வாழ்க்கைக்காக வைத்துள்ள திட்டத்தை அறிந்தவர்களாக காணப்படுகிறோம். வேதாகமத்தில் தேவ மனிதர்களான யோசேப்பு, தாவீது, யோபு போன்றோர் தேவனை குறித்த அறிவில் தேறினவர்களாக காணப்பட்டனர். மற்றவர்கள் அவர்களை புரிந்து கொள்ளாத பொழுதும், அவர்களுடைய வாழ்க்கையில் எதிர்மறையான காரியங்கள் நடந்தபொழுதும், அவர்களோ தேவனை அறிந்திருந்தபடியால் அமைதியாக தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்பணித்து வாழ்ந்தனர். அவர்களுடைய வாழ்க்கையின் முடிவு மிகவும் சம்பூரணமுள்ளதாய் இருந்தது.

பவுல் கூறுகிறார் **"அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும், நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (2 தீமோ 1:12).** ஆம் நாம் தேவனோடு ஐக்கியமுடையவர்களாய், நம் வாழ்க்கையை அவர் கரத்தில் ஒப்புவித்து, அவருடைய சித்தத்தை அறிந்து, அவரை அறிகிற அறிவில் வளர்ந்து, ஒவ்வொரு நாளும் வாழ்வோமானால் நிச்சயமாகவே மேற்க்கண்ட அனைத்து ஆசிர்வாதங்களையும் இம்மையிலும், மறுமையிலும் பெற்று மகிழ்ச்சியோடு வாழலாம். ஆமென், அல்லேலூயா.

# 28. தேவ அடைக்கலம்

**அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம் (உபா 33:27)**




நம் வாழ்க்கையில் அநேக நேரங்களில் பிசாசினாலும், மற்ற மனிதர்களினாலும், சூழ்நிலைகளினாலும் நாம் தாக்கப்படும் பொழுது, நாம் எந்த திசையில் போவது, எப்படி இந்த பிரச்சனையில் இருந்து விடுபடுவது என்று தெரியாமல் தவிக்கும்பொழுது, நம்முடைய வேதனையான சூழ்நிலையில் யாருடைய துணையுமின்றி நாம் நிற்கும்பொழுது, நம்மால் எதிர்க்க முடியாது என்ற சூழ்நிலை வரும்பொழுது, நாம் செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று தேவனுடைய அடைக்கலத்திற்க்குள் வந்துவிடுவதே ஆகும்.

சத்துருவானவன் நமக்கு எதிர்த்து நின்றாலும், சக மனிதர்கள் நம்மை எதிர்தாலும் அல்லது நாம் நினைத்ததற்கு மாறாய் செயல்பட்டாலும், சூழ்நிலைகள் எதிராய் இருந்தாலும், நாம் எப்பொழுதும் வந்தடையதக்க அடைக்கலம் தேவனே ஆகும். ஏனெனில் அவர் அநாதி தேவன். மேலும் வேதம் கூறுகிறது **"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்" (சங் 46:1)** என்று. ஆம் நம்முடைய ஆபத்து காலத்தில் அவர் நமக்கு அடைக்கலமாய் மாத்திரமட்டுமல்ல, நம்முடைய பிரசன்னைகளை எதிர்கொள்ளக்கூடிய பெலனையும் நமக்கு தருகிறவராய், நமக்கு துணையாளராய் இருக்கிறார்.

மேலும் **சங் 18:2** கூறுகிறது **"கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்"**, உலகத்தில் பணம், பொருள், மனிதர்கள் போன்ற எத்தனையோ காரியங்கள் நமக்கு பாதுகாப்பையும், பெலனையும்,

துணையையும் தருவதாய் கூறலாம். ஆனால் சங்கீதக்காரன் கூறுவது போல நாம் நம்பியிருக்கிற துருகம் அவராகவே இருக்கவேண்டும். ஏனெனில் அவரே உயர்ந்த அடைக்கலமானவர். எப்பேர்பட்ட பெரிய பிரச்சனைகள், போராட்டங்கள் வந்தாலும் அதையும் தாண்டி நம்மை காக்க வல்ல உயர்ந்த அடைக்கலமானவர் அவரே.

மற்ற காரியங்கள் எல்லாம் ஓரளவுக்கு நமக்கு பாதுகாப்பையும், பெலனையும், துணையையும் தரலாம். ஆனால் அவரே அநாதியானவர். நித்திய கன்மலையாகிய தன்னுடைய அடைக்கலத்திலே நம்மை பாதுகாக்கிறவர், அவருடைய நித்திய புயங்களே நமக்கு ஆதாரம். மற்ற ஆதாரங்கள் எல்லாம் மண்ணின் மேல் கட்டிய வீட்டை போன்றது. பெரு வெள்ளம் வந்து காற்று அடிக்கும்பொழுது ஒன்றுமில்லாமல் போகும். ஆனால் நித்திய கன்மலையாம் கிறிஸ்துவின் அடைக்கலத்திலே இருக்கும்பொழுது எந்த பெருவெள்ளமும், புயல் காற்றுமான போராட்டங்களோ, பிரச்சனைகளோ நம்மை ஒன்றும் செய்யமுடியாது. பக்தனாகிய நோவா கிறிஸ்துவாகிய அடைக்கல பேழைக்குள் தன்னையும் தன் குடும்பத்தையும் காத்துக்கொண்டார். பெருவெள்ள அழிவுக்கு தப்பினார்.

மேலும் **ரூத் 2:12** கூறுகிறது **"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு(ரூத்) அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக"**. ஆம் தன்னுடைய மிகவும் மோசமான, துக்ககரமான ஆதரவற்ற சூழ்நிலையிலே இஸ்ரவேலின் தேவனை பற்றி பிடித்து கொண்ட மோவாப்பிய பெண்ணாகிய ரூத், அவருடைய அடைக்கலத்திற்குள் வந்தபொழுது, நிறைவான பலனாக தேவன் கிறிஸ்துவின் மீட்பின் திட்டத்திற்குள் ரூத்தை கொண்டுவந்தார். தேவ மனிதாரகிய தாவீதும் தன்னுடைய வாழ்க்கையின் அநேக சூழ்நிலைகளில் தேவ அடைக்கலத்தையே சார்ந்து கொண்டார். அதனை நாம் அவருடைய சங்கீதங்களிலே காணலாம்.

இப்பொழுதும் சபையாகிய நாம் பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துவின் அடைக்கலத்திற்குள் இருக்கிறோம். அவருடைய கரத்தில் (அடைக்கலத்தில்) இருந்து ஒன்றும் நம்மை பிரிக்க முடியாது. ஏனெனில் நமக்காக அவர் தமது ஜீவனையே கிரயமாக தந்து நம்மை தமக்காக தெரிந்துகொண்டிருக்கிறார். நாமாக அவருடைய அடைக்கலத்திற்குள் இருந்து வெளியே வந்தால் ஒழிய அவர் ஒருபோதும் தம்முடைய அடைக்கலத்திற்குள் இருந்து நம்மை விட்டுவிடமாட்டார்.

இப்படிப்பட்ட அடைக்கலத்திற்குள் இருக்கிற நாம் மற்ற மனிதர்களும் கிறிஸ்துவின் அடைக்கலத்திற்குள் வந்துவிடவேண்டும் என்ற வாஞ்சையோடு அவர்களுக்கும் இரட்சிப்பின் சுவிசேஷத்தை சொல்லவேண்டும். இந்த பொல்லாத உலகத்தின் மத்தியில் கிறிஸ்துவின் அடைக்கலத்திற்குள் நாம் வாழும்பொழுது, ஒரு நாள் கிறிஸ்து வருவார், அவர் வந்து நம்மை நித்திய அடைக்கலமாம் பரலோகத்திற்கு அழைத்து செல்வார். ஆமென், அல்லேலூயா.

## 29. கபடற்றவர்கள்

**ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள் (மத் 10: 16).**




மேற்கண்ட **மத் 10: 16** வசனம் கூறுகிறது போல ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கும் ஒரு முக்கியமான சுபாவம் கபடற்ற தன்மையாகும். கபடற்ற தன்மையை பல விதங்களில் நாம் காணலாம். பொதுவாக கபடற்ற தன்மை என்பது எந்த காரியத்தை குறித்தும், மனிதரை குறித்தும் இருதயத்தில் எந்தவித ஊள்நோக்கமும் இல்லாமல், தெளிந்த சுத்தமான மனத்தோடு பிறரோடு பழகுவதும், காரியங்களை செய்வதுமாகும். உதாரணமாக ஒரு சிறுபிள்ளை செய்யும் காரியங்களையோ, மற்ற மனிதரோடு பழகும் செயலையோ எந்தவித ஊள்நோக்கமும் இல்லாமல் கபடற்ற தன்மையோடு செய்கிறது. எனவே தான் ஆண்டவர் பரலோக இராஜ்யம் அப்படிபட்டவர்களுடையது என்றார்.

**அப் 4:13 கூறுகிறது "பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள்"** , பேதுருவும், யோவானும் பேதைமை உள்ளவர்களாக காணப்பட்டனர் என்று. ஒருவிதத்தில் படிப்பற்ற பேதைகளாய் அவர்கள் காணப்பட்டாலும், அதுவே அவர்களை வேறு எதையும் சார்ந்து கொள்ளாமல், வாழ்க்கையின் சூழ்நிலைகளை எண்ணாமல் எல்லாவற்றையும் விட்டு ஆண்டவரை பின்பற்ற செய்தது. **"ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே", (யோ 6:68)** என்று பேதுருவை கூறசெய்தது. அந்த

ஜீவ வசனங்களே பேதுருவை **அப்போஸ்தலர் 4ஆம்** அதிகாரத்தில் தைரியமாக பேச்செய்தது.

மேலும் வசனம் சொல்கிறது அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்றும் யூத ஆசாரியர்கள் அறிந்துகொண்டனர். இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் சத்தியம் என்னவென்றால், நம்முடைய பேதைமையை மற்ற மனிதர்கள் அறியாமையாய் கண்டாலும், சுத்த இருதயத்தோடு இருக்கும் பேதைமையை கபடற்ற தன்மையாகவே தேவன் காண்கிறார். சுருக்கமாக சொன்னால், நாம் பெரிய புத்திசாலிகளாக, படிப்பாளிகளாக எல்லாவற்றையும் அறிந்தவர்களாக, நம்முடைய புத்தியை பயன்படுத்தி காரியங்களை செய்கிறவர்களாக இருப்பதைவிட, எதையும் அறியாத பேதைமை தன்மையில் இருந்தாலும், அதனுள் இருக்கும் கபடற்ற தன்மையையே ஆண்டவர் பெரியதாக பார்க்கிறார். அப்படிபட்டவர்களுக்கு வேண்டிய கிருபைகளை தேவனே தருகிறார். எனவேதான் உலகபிரகாரமாக புத்திசலுகளாய், திறமைசாலிகளாய் இல்லாதோரையும் கொண்டு தேவன் வல்லமையான காரியங்களை செய்கிறார். அவர் எதிர்பார்பதெல்லாம் அவரை சார்ந்து செயல்படும் கபடற்ற ஒரு இருதயத்தையே ஆகும்.

கபடற்ற மனத்தோடு இருப்பவர்கள் நிச்சயமாகவே சுத்த மனசாட்சியை உடையவர்களாய் இருப்பார்கள். பவுல் சொல்கிறார் **அப் 23 : 1 இல் " இந்நாள்வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன்"**, என்றார். மேலும் **அப் 26 : 16 இல் "நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்"**, என்றார். ஆம், இப்படியாக அப்போஸ்தலனாகிய பவுல் சுத்த மனச்சாட்சியோடு, கபடற்ற தன்மையில் காணப்பட்டதாலேயே அவருடைய ஊழியம் மகிமையாய் இருந்தது.

மேலும் பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த யோசேப்பு, ரூத் போன்றோரின் வாழ்க்கையில் இப்படிப்பட்ட கபடற்ற தன்மை காணப்பட்டதாலேயே அவர்கள் வாழ்க்கையில் இன்னல்கள் பல நேரிட்டாலும் இறுதியில் அவர்களுடைய முடிவு சம்பூரணமாய் இருந்தது. இக்காலத்தில் இருக்கும் ஊழியர்கள் ஆனாலும் சரி, விசுவாசிகள் ஆனாலும் சரி, சுத்த இருதயத்தோடு, கபடற்ற மனத்தோடு தேவனுக்கு முன்பாக இவ்வுலக வாழ்க்கையை வாழ்வதையே தேவன் எதிர்பார்க்கிறார்,

ஆனால் அதற்கு பதிலாக பலர் தங்களின் புத்தியையும், திறமையையும், சூழ்நிலையையும் சார்ந்து கிறிஸ்தவ வாழ்வு வாழ முறப்படுகின்றனர். சிலர் ஊழியத்தையும் செய்ய விழைகின்றனர். இன்னும் சிலர் தங்களின் பொல்லாத யோசனையினால் தேவ பக்தியை ஆதாய தொழிலாகவும் மாற்றிவிட்டனர். இதனால் உலக மனிதர்களுக்கும், தேவ பிள்ளைகள் என்று கூறிகொள்கிற இவர்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போகிறது. ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவின் மேல் அஸ்திபாரம் போடவில்லை.
ஆனால் கபடற்ற மனத்தோடு ஆண்டவரையே சார்ந்திருக்கிறவர்கள், அவரையே நம்பி அவர்மேல் தங்கள் அஸ்திபாரத்தை போடுகின்றனர். உலக பிரகாரமாக மற்றவர்கள் கண்களுக்கு இவர்கள் பேதைகளாய், பிழைக்க தெரியாதவர்களாய் காணப்பட்டாலும் நாள் ஒன்று வரும், அன்று

சகலமும் வெளிப்படுத்தப்படும். என் புறாவே (கபடற்றவளே), என் உத்தமியே என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை அழைப்பார். ஆமென், அல்லேலூயா.

# 30. கர்த்தர்மேல் நம்பிக்கை

**கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். (எரே 17:7)**




இவ்வுலகில் நாம் வாழும் அனுதின வாழ்க்கையில், நம் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்திற்கு வேண்டிய தேவைகள் பல காணப்படுகின்றன. சிலர் அழிந்து போகிற பொன், பொருள், சுயபெலன், மனுஷ தயவு ஆகியவற்றை மட்டும் சார்ந்து தங்கள் வாழ்க்கையை இந்த அநித்தியமான சரீரம் அழிந்துபோகும் வரை வாழ்ந்துவிடலாம் என்று எண்ணுகின்றனர். இவர்களுக்கு நித்திய வாழ்வை குறித்தோ அழிந்துபோகிற இந்த சரீரம் மறுரூபமாகி மகிமையை அடைய வேண்டும் என்ற எண்ணமோ, தங்கள் ஆவி, ஆத்துமாவை குறித்த கரிசனையோ இல்லாமல் செத்த மனசாட்சியோடு சுயநீதியோடு வாழ்கின்றனர்.

ஆனால் தங்கள் நித்திய வாழ்வை குறித்த கரிசனை உடையவர்கள், சரீர மீட்பை குறித்த அறிவுடையவர்கள், நிச்சயமாக கர்த்தர் மேல் தங்கள் நம்பிக்கையை வைத்தே இவ்வுலக வாழ்வை வாழ முடியும். சுய நீதியையோ, மற்ற மனுஷரையோ, பொருட்களையோ சார்ந்து வாழ்வோர் ஒருபோதும் நித்திய வாழ்வை பெற்றுக்கொள்ள முடியாது. **எரே 17:5 இல் "மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"**, என்று கூறப்பட காரணம் நாம் தேவனுடைய கரத்தை விடுகிற அதே நேரத்தில் சாத்தான் நமது கரத்தை பிடித்துக்கொள்கிறான். நாம் தேவனுடைய பாதுகாப்பை விட்டு விலகுகிற அதே நேரத்தில் சத்துருவின் வலைக்குள் சிக்கிகொள்கிறோம், நமது கால்கள் தேவனுடைய பாதையை விட்டு விலகுகிற அதே நேரத்தில் பாதாளத்தின் பாதையை நோக்கி செல்கிறோம். சவுலை விட்டு தேவனுடைய ஆவி நீங்கினபோது, பொல்லாத ஆவி அவனை பிடித்துக் கொண்டது **(1 சாமு 16:14)**.

மேலும் **"எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?" (எரே 17:9)** என்று வசனம் கூற காரணம், தேவன் இல்லாத இருதயத்திற்குள் சத்துரு உட்புகுந்து விடுகிறான். சத்துரு நமது இருதயத்திற்குள் புகுவதற்கு நமது மாம்சத்தையே உபயோகிக்கிறான். மாம்சத்திற்கு சில மாயையான இன்பங்களை தருவதன் மூலமாக, நம் சரீரத்தின் போக்கில் நமது ஆவி, ஆத்துமாவை செயல்பட வைக்கிறான். இதன் மூலம நமது மாம்சமும், மனதும் இச்சித்தவைகளை செய்து, பிற மனுஷர் மேலும், நமது மாம்ச பலத்தின் மேலும் நம்பிக்கை வைத்து தேவனை விட்டு விலக செய்கிறான். இவ்வாறே ஏவாள் வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள். கண்களின் இச்சையும் (பார்வைக்கு இன்பம்), மாம்சத்தின் இச்சையும் (புசிப்புக்கு நல்லது), ஜீவனத்தின் பெருமையும் (புத்தியைத் தெளிவிக்கிறது) அவளை விழதள்ளிற்று **(ஆதி 3:6)**.

ஆனால் **"கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்", ஏரே (17:7,8)** என்று வசனம் கூறுவது போல நாம் நம்பியிருக்கிற துருகம் அவராகவே இருக்கவேண்டும், அப்பொழுது மேற்கூறப்பட்டுள்ள ஆசிர்வாதங்கள் நமக்கு கிடைக்கும். முதலாவதாக தண்ணீரண்டையிலே நாட்டப்படுவோம். இங்கு கூறப்பட்டுள்ள சத்தியம், கர்த்தரை நாம் நம்பிக்கையாக கொண்டிருக்கும் போது நாம் செழித்து இருக்கும்படியாக, நம்முடைய ஆவிக்குரிய, சரீரத்திற்குரிய தேவைகள் யாவும் சந்திக்கப்படும்படியாக, கர்த்தருக்குள்ளான ஒரு திருப்தியுள்ள வாழ்வு வாழும்படியாக, தேவ பாதுகாப்பின், போஷிப்பின் வட்டத்திற்குள் நாம் வாழமுடியும்.

இரண்டாவதாக, வேர் விடுகிற அனுபவம். இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியம், நாம் செழித்து இருப்பது மாத்திரமல்ல, நாம் விருத்தியடையும்படியான ஆசிர்வாதத்தையும் தேவன் அளிக்கிறார். நம்முடைய ஊழியத்திலும், உலக பிரகாரமான வேலைகளிலும், குடும்பத்திலும், தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்விலும் வேர்விட்டு விருத்தியடையும்படியாய், நம்முடைய எல்லைகள் பெரிதாகும்படியாய் செய்கிறார். மூன்றாவதாக, உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிற அனுபவம். இங்கு நாம் அறிந்து கொள்கிற சத்தியம், தேவனை நம்பிக்கையாக கொண்டிருக்கும் பொழுது நாம் நம் வாழ்க்கையில் எதிர்மறையான சூழ்நிலைகள் இருக்கும்பொழுதும், நாம் தவித்து போகும்படியான காரியங்கள் நிகழும்பொழுதும், தேவன் மேல் இருக்கிற நம்பிக்கையின் நிமித்தம் நாம் எப்பொழுதும் போல் நிறைவுள்ளவர்களாய் காணப்படுவோம்.

இறுதியாக, மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிற அனுபவம். ஒருவேளை நம் வாழ்க்கையில் சில

குறைவுகள், இழப்புக்கள் ஏற்படினும் நமது வாழ்வு தேவனுக்கு முன்பாக எப்பொழுதும் போல கனிகொடுக்கிறதாய் காணப்படும். வாழ்க்கையில் ஏற்பட்ட வறட்சியான அனுபவங்கள் நம்மை கனியற்றவர்களாய் மாற்ற முடியாது. அது மேலும் நாம் தேவனுக்குள்ளாய் வேர் ஊன்றவே செய்யும். இதையே நாம் யோபு, யோசேப்பு போன்றோரின் வாழ்க்கையில் காண்கிறோம். அவர்கள் வாழ்ந்திருந்த காலத்திலும், இழப்புக்கள், வேதனைகளை, எதிர்மறையான சூழ்நிலைகளை, மனித எதிர்ப்புகளை கண்ட நேரத்திலும் தேவன் மேல் வைத்த நம்பிக்கையினிமித்தம் கனியுள்ளவர்களாய் காணப்பட்டனர். யோபு **"அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15)** என்று அறிக்கையிட்டார். யோசேப்பை குறித்து **ஆதி 49:22 கூறுகிறது "யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்"** என்று.

எனவே கர்த்தரையே நாம் நம் நம்பிக்கையாக கொண்டிருப்போம். ஒரு நாள் அவர் வருவார் அவர் வந்து நம்மை தம்மோடு அழைத்து செல்வார். இந்த நம்பிக்கையில் நிலைத்திருப்போம். மாரநாதா, அல்லேலூயா, ஆமென்.

# 31. காயங் கட்டுகிற தேவன்

**நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசா 53:5)**



நம் வாழ்வில் நமது சரீரத்திலும், ஆத்துமாவிலும் காயங்கள் உண்டாகிறது. ஒன்றில் ஏற்படும் காயம் மற்றொன்றையும் பாதிக்கிறது. நமது சரீரத்தில் ஏற்படும் காயங்களுக்கு மருந்தை நாம் இவ்வுலக வைத்தியர்களிடம் இருந்து பெற்றுக்கொள்கிறோம். அதன் மூலம் நமது சரீரத்தில் தேவ தயவினால் சுகம் உண்டாகிறது.

ஆனால் நமது ஆத்துமாவிலும், ஆவிக்குரிய வாழ்விலும் உண்டாகும் காயங்களுக்கு எந்த மனிதராலும் மருந்து தர முடியாது. அது சத்துருவினால் உண்டான காயமாக இருந்தாலும், அல்லது நாம் நமது சுயத்தை சார்ந்ததினால் உண்டான காயமாய் இருந்தாலும், அல்லது தேவனால் அனுமதிக்கப்பட்ட காயமாய் இருந்தாலும், அதை ஆற்ற நம்மாலோ, மற்ற மனிதராலோ முடியாது. எப்படியிருப்பினும், நமது சரீரத்திலோ, ஆத்துமாவிலோ, எதில் காயம் உண்டானாலும் அதைக் குறித்து தேவன் கரிசனை உள்ளவராய் இருக்கிறார். நமது சரீரத்தில் உண்டாகும் காயங்களை (வியாதி, பலவீனம், பாடுகள்) தேவன் பலவிதங்களில் மற்ற மனிதரையோ, மருந்தையோ, அல்லது ஒரு அற்புதத்தையோ செய்து குணமாக்குகிறார்.

இதனால் நமது சரீரத்திலும் ஆத்துமாவிலும் உண்டான வேதனை நீங்கி நாம் சொஸ்தமடைகிறோம். இதனை ஆண்டவர் இப்பூமியில் சுற்றி திரிந்த

காலத்திலும் பல மனிதர்களுக்கு செய்தார், **"பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்" (மத் 4:23).**

ஆனால் ஆத்துமாவில் உண்டாகும் வியாதிக்கு, சுகத்தை பெற்றுக்கொள்ள நமக்கு விசேஷமான ஒன்று தேவைப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்கள் பாவம்செய்ததினால் உண்டான காயத்தை குறித்து, **ஏரே 30:12, 13** வசனங்களில், **"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் புண் ஆறாததாயும் உன் காயம் கொடிதாயும் இருக்கிறது. உன் காயங்களைக் கட்டும்படி உனக்காக ஏற்படுவாரில்லை; உன்னைச் சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களுமில்லை".** மேலும **ஏரே 8:21, 22** வசனங்களில், **"என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களினால் நானும் காயப்பட்டேன்; கரிகறுத்திருக்கிறேன்; திகைப்பு என்னைப் பிடித்தது. கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்?"**, என்றும் அங்கலாய்கிறார்.

இப்படிப்பட்ட காயங்களை ஆற்றும்படிக்கே, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் காயங்களை ஏற்றுக்கொண்டார். **ஏசா 53:5** கூறுகிறது, **"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்".** இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியம், அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம் என்பதாகும்.

அவர் அடிக்கப்பட்டு காயப்பட்டதால் நாம் நமது காயங்கள் நீங்கி குணமாகிறோம். இதுவே தேவ திட்டம். முந்தின மனுஷனாகிய ஆதாமின் மீறுதலினால் உண்டான காயத்தை, பிந்தி வந்தவராகிய கர்த்தராகிய இயேசுவின் காயத்தின் தழும்புகள் குணமாக்கிற்று. இதுவே முழுமனுக்குலத்திற்கும் உண்டான நற்செய்தி. இதை அறிவிக்கவே ஆண்டவர் நம்மை தெரிந்துகொண்டிருக்கிறார். ஏனெனில் நம்மை அவர் குணமாக்கியிருக்கிறார். இந்த நற்செய்தியாகிய வார்த்தைகளை கேட்டு விசுவாசிக்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும், ஆவியையும் அது சொஸ்தமாக்குகிறது.

நமது சரீரத்தில் உண்டாகும் காயங்கள் சில நாட்கள் தான் நமக்கு வேதனையை தரும். ஆனால் நமது ஆவியில் காயத்தோடு காணப்படுவோமானால், அது நமது நித்திய வாழ்வை பாதிக்கும். மேலும் நாம் பெற்று கொண்ட சுகத்தை காத்துக்கொள்ளவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். எனவே சரீரத்திலோ, ஆவியிலோ, எதில் காயம் உண்டானாலும், நமது பரம வைத்தியராகிய, பரிகாரியாகிய அவரையே சார்ந்து கொள்வோம். அவர் காயங் கட்டுவார், குணமாக்குவார். அப்பொழுது நாம் சரீரத்திலும், ஆவியிலும் ஆரோக்கியத்தோடு மறுரூபமடைந்து நித்திய காலமாய் வாழுவோம். ஆமென், அல்லேலூயா.

# 32. சூழ்நிலைகளை மாற்றுக்கிற தேவன்

**காரியம் மாறுதலாய் முடிந்தது (எஸ்தர் 9:1)**




நம் வாழ்கையில் நாம் சந்திக்கிற அநேக சூழ்நிலைகள், சில வேளைகளில் நம்மை நிலைகுலைய செய்துவிடுகிறது. வியாதியின் ஊடாய் கடந்து செல்லும்பொழுதும், பிரச்சனைகளின் ஊடாய் கடந்து செல்லும்பொழுதும், ஊழியத்தில் தோய்வுகள் ஊண்டாகிறபொழுதும், நம்முடைய ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் சோர்ந்து போகிறது. சில துன்பமான சூழ்நிலைகள் தொடர்ந்து வரும்பொழுதும், ஒன்றன்பின் ஒன்றாக பிரச்சனைகளும், போராட்டங்களும், வியாதிகளும் உண்டாகும் போதும், நமக்கும் நம்மை சார்ந்திருப்பவர்களுக்கும் உண்டாகிற வேதனைகளை காணும்பொழுதும், இத்துன்ப சூழ்நிலை எப்பொழுது மாறுமோ என்று ஏங்கி தவிக்கிறவர்களாய் நாம் காணப்படுகிறோம்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையே எஸ்தர் புத்தகத்தில் காணப்படுகிறது. **எஸ்தர் 8:6** கூறுகிறது **"என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? என்றாள்"** , ஆம் இங்கு மரணபோராட்டத்தை கண்ட எஸ்தரும், மொர்தெகாயும் மற்றும் யூத மக்களும் அதை சகிக்க முடியாதவர்களாய் காணப்பட்டனர். பிரச்சனையில் இருந்து தப்பிக்க முடியாத, தவிர்க்கமுடியாத அந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து வெளிவரமுடியாதவர்களாய் தவித்தனர்.

ஆனால் **எஸ்தர் 9:1** கூறுகிறபடி **"காரியம் மாறுதலாய் முடிந்தது"** . ஆம் பொல்லாத பிசாசினாலும், மனிதர்களினாலும், சூழ்நிலைகளினாலும், நம்முடைய பாவத்தினாலும், அறியாமையினாலும், தேவ திட்டங்களினாலும், நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கப்பட்ட சில

இக்கட்டான சூழ்நிலைகளில் நாம் போராடி கொண்டிருந்தாலும், இனி தப்பிக்க வழி இல்லை, இனி ஓரடி கூட முன்னெடுத்து வைக்க வாய்ப்பில்லை, எந்த மனிதராலும், எப்படி முயற்சித்தாலும் எதுவும் நடக்க போவதில்லை என்ற சூழ்நிலையின் மத்தியிலும், சரியான நேரத்தில் தேவன் கிரியைசெய்து, நம்முடைய சூழ்நிலைகளை மாற்றி, காரியம் மாறுதலாய் அமையும்படியாய் ஆண்டவர் செய்வார்.

வேதாகம் முழுவதும், பழைய ஏற்பாட்டில் இருந்து, புதிய ஏற்பாடு வரை, ஏன் இன்றைய காலகட்டத்திலும் கூட தேவன் இவ்வாறாய் செயலாற்றுகிறவராய் இருக்கிறார். ஆதியாகமத்தில், யோசேப்பின் வாழ்க்கையில் இருந்த இக்கட்டான சூழ்நிலைகளை தேவன் ஒரேநாளில் மாற்றிப் போட்டார். யோபுவின் வாழ்க்கையிலும் தேவன் இவ்வாறே கிரியை செய்தார். புதிய ஏற்பாட்டில் கானா ஊர் கல்யாணத்தில் தண்ணீரை திராட்சரசமாய் மாற்றின் காரியம், நாயீன் ஊர் விதவையின் மகனை உயிரோடு எழுப்பிய காரியம், மரித்த லாசருவை உயிரோடு எழுப்பிய காரியம், இன்னும் 38 ஆண்டுகள் வியாதியாய் கிடந்தவன் பெற்றுக்கொண்ட விடுதலை, இவை யாவும் ஒரு சில மணித்துளிகளில் தேவன் கண்ணீரை ஆனந்த களிப்பாய் மாறப்பண்ணின சூழ்நிலைகள் ஆகும்.

மேலும் **“இரையாதே அமைதலாயிரு” (மாற் 4:39)** என்று சொல்லி கொந்தளிப்பான சூழ்நிலையை அமைதியான சூழ்நிலையாய் மாற்றினார். ஆம், இன்றும் எத்தனையோ தேவ பிள்ளைகள் தங்கள வாழ்வில் கடந்து செல்லும் இக்கட்டான சூழ்நிலைகளை தேவன் சரியான நேரத்தில் மாற்றுகிறவராய், விடுதலை தருகிறவராய் இருக்கிறார். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று கூறப்பட்டுள்ளபடி வேதனையான சூழ்நிலைகள் வந்தாலும், அவர் நம்மை தீமையினின்று காக்கிற தேவனாய் இருக்கிறார். ஆம் காரியங்கள் மாறுதலாய் நடக்கும்பொழுது, நாம் நம்மை நடத்துகிற தேவனின் வல்லமையையும், அன்பையும் உணர்ந்து கொள்கிறோம். இன்னும் அவரை கிட்டிசேர்கிறோம். நமக்கு மிகுந்த மகிழ்ச்சியும், தேவன் நம்மை இவ்வுலகத்தில் வைத்திருக்கிற நோக்கத்தையும் புரிந்துகொள்கிறோம். மேலும் சத்துருவை எதிர்த்து போராட கூடிய பெலனையும் பெற்றுக்கொள்கிறோம். நம்மை போல் இக்கட்டான சூழ்நிலையில் கடந்து போவோரை ஆறுதல்படுத்தவும், அவர்களை விடுவிக்கவும் செய்ய வேண்டிய காரியங்களை அறிந்துக்கொள்கிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக **“இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.” (1 கொரி 15:51,52).** **“அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின” (வெளி 21:4).** ஆம் நாம் இப்பொழுது இருக்கிற சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும், இனி நாம்

இந்த உலகத்தில் சந்திக்க போகிற சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும், அவை எல்லாவற்றையும் நன்மையாக்கும் தேவன் ஒருவர் நமக்கு இருக்கிறார். ஆகவே நாம் எதைக்குறித்தும் கவலைப்படாமல், அவரையே சார்ந்துகொள்வோம், விடுதலைபெறுவோம், மறுரூபமாவோம், ஆமென், அல்லேலூயா.

## 33. கலங்கின நேரங்களில்



நம்முடைய வாழ்க்கையில் மிகவும் துயரமான நேரங்களில், கண்ணீரின் பள்ளத்தாக்கை நாம் கடந்து செல்லும்பொழுது, நாம் செய்வதறியாது நிலைதடுமாறிப்போகிறோம். **"மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும்" என்று நீதி** 12:25 கூறுகிறது. மேலும் **"இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும்" என்று நீதி** 14:10 கூறுகிறது. இதனால் நாம் ஆவியிலும், ஆத்துமாவிலும் சோர்ந்து போகிறோம். மேலும் " **மனுஷனுடைய ஆவி அவன் பலவீனத்தைத் தாங்கும்; முறிந்த ஆவி யாரால் தாங்கக்கூடும்?" என்று நீதி** 18:14 கூறுகிறது.

எனவே இதனால் நாம் சரீரத்திலும் பெலவீனமடைந்து சோர்ந்து போகிறோம். தாவீது தன் துயரத்தை குறித்து கூறும்பொழுது " **தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது, என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது; என் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது; என்னை மரணத்தூளிலே போடுகிறீர்." (சங்** 22:14,15) என்கிறார். யோபும் தன் துயரத்தை குறித்து கூறும்பொழுது **"எனக்குச் சுகமுமில்லை, இளைப்பாறுதலுமில்லை, அமைதலுமில்லை; எனக்குத் தத்தளிப்பே நேரிட்டது." (யோபு** 3:26) என்கிறார். மேலும் யோபு **"என் சஞ்சலம் நிறுக்கப்பட்டு, என் நிர்ப்பந்தம் எல்லாம் தராசிலே வைக்கப்பட்டால் நலமாயிருக்கும். அப்பொழுது அது கடற்கரை மணலைப்பார்க்கிலும் பாரமாயிருக்கும்; ஆகையால் என்**

**துக்கம் சொல்லிமுடியாது." (யோபு 6:2,3)** என்கிறார். இவர்களை போல் வேதாகமத்தில் பல தேவ பிள்ளைகள் தாங்க முடியாத வேதனைகளுக்குள்ளாக கடந்து சென்றுள்ளனர்.

1 சாமு முதலாம் அதிகாரத்தில் அன்னாளை குறித்து நாம் காண்கிறோம். **1 சாமு 1:10 கூறுகிறது "அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி"** என்று. அவளே தன வாயால் "**நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ; நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை; நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன். உம்முடைய அடியாளைப் பேலியாளின் மகளாக எண்ணாதேயும்; மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம்பண்ணினேன்" (1 சாமு 1:15,16)** என்று அறிக்கையிட்டாள். ஈசாக்கை ஆண்டவர் பலியிட சொன்னபொழுதும் ஆபிரகாம் இப்படிப்பட்ட மனகிலேசத்திற்குள்ளாய் கடந்துபோயிருப்பார். சிறைசாலையில் யோசேப்பு வாடிய பொழுதும் இப்படிப்பட்ட வேதனைக்குள்ளாய் கடந்துபோயிருப்பார்.

மேலும் புதிய ஏற்பாட்டில் லாசரு மரித்தபொழுது மார்த்தாளும், மரியாளும் ஆண்டவருக்கு முன்பாக கண்ணீர் விட்டனர். **யோ 11:33-35 கூறுகிறது "அவள் அழுகிறதையும் அவளோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து: அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள். இயேசு கண்ணீர் விட்டார்."** என்று. ஆம் இன்றும் இப்படிப்பட்ட துயரமான சூழ்நிலைக்களுக்குள்ளாய் கடந்து போகிற மக்கள் உண்டு. ஆறுதல் அடைய முடியாதபடி பலவிதமான வேதனைகள், வியாதிகள், இழப்புக்கள் வழியாய் கடந்துபோகிற மக்கள் உண்டு. சமீபத்தில் நேபாளத்தில் நிகழ்ந்த பூமி அதிர்ச்சியினால் எத்தனையோ மக்கள் ஒரே நேரத்தில் மாண்டுபோயினர். லட்சக்கணக்கான மக்கள் தங்கள் உயிரையும், உடைமைகளையும், உற்றார் உறவினர்களையும் இழந்து தவிக்கின்றனர். இன்னும் இலங்கையிலும், பல தேசங்களிலும் நடக்கும் துயரங்களால் பாதிக்கப்படுகின்ற மக்களை பற்றி நாம் அனுதினமும் கேட்டுக்கொண்டுதானிருக்கிறோம்.

இப்படிப்பட்ட துயரங்களுக்குள்ளாய் செல்லும் நமக்கு ஒரே ஆறுதல் ஆண்டவருடைய பாதபடி மட்டுமே. மேலும் **யோ 11:35 கூறுகிறது** போல ஆண்டவரும் நம்மோடு கூட அழுகிறார். நமக்கு ஏற்படும் துன்பங்களை அவர் அனுமதித்திருந்தாலும், நம்மோடு கூட அவரும் வேதனைப்படுகிறார். நாம் துயரத்தில் இருந்து மீள வேண்டும் என்பதே அவர் விருப்பம். அதை அவர் செய்ய வல்லவராயும் இருக்கிறார். நாம் செய்யவேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான், ஆண்டவருடைய சித்ததிற்கு நம்மை ஒப்புக்கொடுப்பதே ஆகும்.

கெத்செமனே தோட்டத்தில் **"அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது." (லூக் 22:44).** இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அவர் கூறியது **"பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று**

**ஜெபம்பண்ணினார்."** (லூக் 22:42). ஆம் நம்முடைய துயர சூழ்நிலைகளுக்குள்ளாய் நிற்க முடியாதபடி நாம் தவிக்கலாம். ஆகிலும் அதன் மத்தியிலும் ஆண்டவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்பதே சிறந்ததாகும்.

நமக்கு அதற்கான காரணம் தெரியாமலிருக்கலாம். ஆகிலும் அவர் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து அவர் பாதபடியில் காத்திருப்பதே சிறந்ததாகும். அதுவே நமக்கு ஆறுதலையும், விடுதலையையும் தரும். தேவன் தாமே தம்முடைய அன்பினாலும், அரவணைப்பினாலும் நம்மை ஆற்றி தேற்றி வழிநடத்துவாராக. துன்பமில்லா நித்திய ஜீவகரையில் சேப்பாராக. ஆமென், அல்லேலூயா.

**"கலங்கின நேரங்களில் கைதூக்கி எடுப்பவரே**
**கண்ணீரின் பள்ளதாக்கில் என்னோடு இருப்பவரே"**
**(பாடல் லேவி - ஜான் ஜெபராஜ்)**

## 34. பயப்படாதே




நம் வாழ்க்கையில் நாம் அநேக காரியங்களை குறித்து கவலைப்பட்டு கலங்குகிறோம். என்ன ஆகுமோ, என்ன நடக்குமோ, எப்படி நடக்குமோ என்று தவிக்கிறோம். வியாதியினால், வறுமையினால், பிற மனிதர்களினால், சாத்தானால், இன்னும் பிற சூழ்நிலைகளினால் ஏற்படுகின்ற பயம் நம்மை சில வேளைகளில் நிலைகுலைய செய்துவிடுகிறது. தேவனை குறித்தோ, மற்ற எதை குறித்தோ சிந்திக்க முடியாதபடி பயம் நம்மை சில நேரங்களில் ஆட்கொள்கிறது. குறிப்பாக நமக்கோ அல்லது நம்மை சார்ந்தவர்களுக்கோ உண்டாகிற வியாதியினால் ஏற்படுகிற பயம் நம்மை வேதனையிலும், பயத்திலும் தள்ளுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் முழுமனதோடு வேதத்தை வாசிப்பதோ, ஜெபிப்பதோ முடியாமல் போகிறது. இப்படிப்பட்டதொரு பொல்லாத சூழ்நிலையில் தேவன் என்ன செய்வார் என்பதையும், நாம் என்ன செய்யவேண்டும் என்பதையும் பின்வருமாறு காண்போம்.

வேதாகமத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தேவ பிள்ளைகள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை நாம் முதலாவது காண்போம். **1 சாமுவேல் 30 அதிகாரத்தில்** தாவீது மற்றும் அவருடைய மனுஷர் அனைவரது மனைவி, பிள்ளைகளையும் அவர்களது உடைமைகளையும் அமலேக்கியர் கொள்ளை அடித்து சென்ற பொழுது **"தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள்" (1 சாமு 30:4)**.

மேலும் **"தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்"** (1 சாமு 30:6). இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான சூழ்நிலை தாவீதின் மனதையும், சரீரத்தையும் வெகுவாய் பாதித்தது.

ஒருபுறம் அவனது சொந்த மனைவி, பிள்ளைகள், உடைமைகளை இழந்த சூழ்நிலை; அழுகிறதற்கு பெலனில்லாமல் போகும் மட்டும் அழுததினால் சரீரத்தில் உண்டான சோர்வு மற்றும் உடன் இருந்த மனிதர்களினாலேயே உண்டான நெருக்கம். இவை எல்லாவற்றின் மத்தியிலும் தாவீது ஒன்றை மாத்திரம் செய்தார். அவர் தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டார். இதனால் பயந்து போகாமல், திட்டமிட்டு செய்ய வேண்டிய காரியங்களை செய்தார். இழந்துபோன அனைத்தையும் மீட்டு கொண்டதுமல்லாமல் தன் எதிரிகளை கொள்ளையும் இட்டார் (1 சாமு 30:19,20). யூதாவின் மூப்பருக்குச் சிலவற்றை அனுப்பி **"கர்த்தருடைய சத்துருக்களின் கொள்ளையில் உங்களுக்கு உண்டாயிருக்கும் ஆசீர்வாத பாகம் என்று சொல்லச்சொன்னான்"** (1 சாமு 30:26). ஒரு பயங்கரமான இழப்பின் சூழ்நிலை முடிவில் ஒரு ஆசிர்வாதமான சூழ்நிலையாக மாறியது. இதற்கு காரணம் தாவீது தன்னை தேவனுக்குள் திடப்படுத்தி கொண்டதேயாகும். நாமும் நமது சூழ்நிலைகளில் அமைதியாக தேவனுக்குள் நம்மை திடப்படுத்திக் கொண்டு, செய்ய வேண்டிய காரியங்களை செய்வோமானால் நமது சூழ்நிலையை தேவன் நிச்சயம் ஆசிர்வாதமாக மாற்றுவார்.

இதுவே யோபுவின் வாழ்விலும் நடந்தது. அவருடைய சூழ்நிலையும் அவரது மனதையும், உடலையும் நெருக்கி இருந்தது. அவரது மனைவி, நண்பர்களே அவரை ஏளனமாக பேசினர். தேவனை குறித்தும், மற்ற எதை குறித்தும் சிந்திக்க கூட முடியாதபடி இருள் மூடியிருந்தது. அதன் மத்தியிலும் அவர் ஒரு அறிக்கை செய்தார். அது **"அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு** 13:15) என்பதாகும். ஆம் எது நடந்தாலும், என்னால் எதுவும் இயலாமல் போனாலும், நான் மரித்தே போனாலும், அவரை மாத்திரமே நம்பி இருப்பேன் என்ற ஒரு மேலான விசுவாசம் அவருடைய வாழ்க்கையை இரட்டிபான ஆசிர்வாதமுள்ளதாய் மாற்றிற்று. தன் துயர சூழ்நிலையிலும், தன் நண்பர்களுக்காய் தேவனை நோக்கி வேண்டினார். கர்த்தர் அவருடைய சூழ்நிலையை அற்புதமாய் மாற்றினார். **"யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்"** என்று **யோபு** 42:10 கூறுகிறது.

நாம் மேற்கண்ட இரண்டு தேவ மனிதர்களும் ஒன்றையே செய்தனர். அவர்களுடைய இருதயத்தின் ஆழத்தில் தேவன் மேல் ஒரு அசைக்கமுடியாத விசுவாசம் இருந்தது. அது அவர்களை அந்த பொல்லாத சூழ்நிலைகளை தாங்கிகொள்ளவும், தேவனுக்குள்ளாய் தங்களை

திடப்படுத்தி கொள்ளவும், தேவன் தங்களுக்கு சொன்ன காரியங்களை செய்யவும் அவர்களை பலப்படுத்தினது. அதுவே அவர்களுக்கு ஆசிர்வாதத்தையும் கொண்டு வந்தது. மேலும் சாமுவேலின் தாயாகிய அன்னாள், எசேக்கியா இராஜா போன்றோரின் வாழ்க்கையிலும் நிகழ்ந்தது இதுவே. அவர்களது சரீர பெலவீனத்திலும், வியாதி படுக்கையிலும் அவர்கள் கர்த்தருடைய சமூகத்திலேயே தங்கள் கண்ணீரை சிந்தினர். இங்கு நாம் அறிந்துகொள்ளும் சத்தியம், தேவ சமூகத்தில் நாம் நமது கண்ணீரை சிந்தும் பொழுது அல்லது நமது விண்ணப்பதை தெரிவிக்கும் பொழுது, அவரால் உண்டாகிற ஒரு விசுவாசமும், சமாதானமும் நம்மை நிறைக்கிறது. இதுவே நாம் நமது துக்கத்தில் அமிழ்ந்துபோகாமல் தொடர்ந்து செயல்படவைக்கிறது.

புதிய ஏற்பாட்டு காலத்தில் பவுல், பேதுரு ஆகியோரின் அனுபவத்தை காணும் பொழுது, அது இன்னமும் மேன்மையுள்ளதாய் காணப்படுகிறது. **அப்போஸ்தலர் 12ஆம் அதிகாரத்தில்** ஏரோது பேதுருவை கட்டி காவலில் வைத்திருந்தபொழுது **"அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள். ஏரோது அவனை வெளியே கொண்டுவரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்"** என்று **அப்** 12:5,6 வசனங்கள் கூறுகிறது. மறுநாள் காலையில் தன் நிலை எப்படியிருக்கும் என்று பேதுரு அறிந்திருந்தும், அமைதியாக அவரால் உறங்கமுடிந்தது.

ஒரு புறம் சபையார் அவருக்காக ஊக்கத்தோடு ஜெபித்து கொண்டிருந்தனர். ஆனால் கிறிஸ்துவோடு கூட இருந்து, அவருடைய பாடு, மரணம் மற்றும் உயிர்தெழுதல் அனைத்தையும் கண்டிருந்த பேதுருவினால், தனது வாழ்வில் நடக்கும் அனைத்தும் தேவ சித்தத்தின்படியே, தேவ ஆளுகைக்குள்ளாய் நடக்கிறது என்றும், எனவே எதைக்குறித்தும் பயப்படவும், கவலைப்படவும் தேவையில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். நமக்கும் தேவனோடு ஒரு நல்ல ஐக்கியம் இருக்குமானால், தேவனை அப்பா பிதாவாக நாம் காண்போமானால், நாமும் பேதுருவை போல் அமைதியாக இருப்போம். தேவன் அந்த நடு இரவிலும், சத்துருவின் கண்களை மறைத்து பேதுருவை அற்புதமாய் வெளியே கொண்டு வந்ததுபோல், நமக்கு எதிராய் இருக்கிற பிசாசின் கண்களுக்கு நம்மை விலக்கி காத்துக் கொள்வார். நமது வேதனையில் இருந்து விடுதலையை தருவார்.

**அப்போஸ்தலர் 16ஆம் அதிகாரத்தில் 23-26 வசனங்களில்**, பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் உட்காவலைறையிலே அடைப்பட்டு, கால்கள் தொழு மரத்தில் மாட்டிவைக்கப்பட்ட நிலைமையிலும் அவர்களால் ஜெபம் பண்ணி தேவனை துதித்துப்பாட முடிந்தது. இது விசுவாசத்தின், தேவ ஐக்கியத்தின் ஒரு மேலான அனுபவமாகும். இதனால் தேவன் செய்த கிரியை வல்லமையானதாகும். சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள்

அசையும்படியாக பூமியையே அசைத்து, பவுல், சீலாவின் கட்டுகளை மட்டுமல்ல அனைவரது கட்டுகளும் கழன்று போகும்படியாய் தேவன் செய்தார். மேலும் இந்நிகழ்வினால் சிறைச்சாலைகாரன் வாழ்விலும், குடும்பத்திலும் இரட்சிப்பு உண்டானது **(அப் 16:31-34)**. ஒரு பயங்கரமான இரவு சூழ்நிலை, விடியற்காலையில் ஆசிர்வாதமான ஒன்றாக மாறியிருந்தது **(அப் 16:35-40)**.

நாமும் பயங்கரமான சூழ்நிலையாகிய இருண்ட வேளைகளுக்குள்ளாய் கடந்து போய்கொண்டிருக்கலாம். ஆனால் பேதுருவைபோல, பவுலைபோல அமைதியாக நம்மால் செயல்பட முடியுமானால், தேவன் விடுதலையை அந்த வினாடியே கட்டளையிடுவார். சத்துருவின் கண்கள் மறைக்கப்படும், பூமி அதிரும், கட்டுகள் அறுந்து போகும், தேவன் நம்மூலமாய் இரட்சிப்பையும், ஆசிர்வாதத்தையும் நமக்கும், பிறருக்கும் கொண்டு வருவார். ஆகவே அவரையே சார்ந்திருப்போம். அவர் நிச்சயம் நம்மை கைவிடவே மாட்டார். ஆமென், அல்லேலூயா.

## 35. கனிகொடுத்தல்

**கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான் (எரே 17:7,8)**




இவ்வுலகத்தில் வாழும் மக்களை இரண்டு வகையாக பிரிக்கலாம். ஒரு சாரார் தங்கள் வாழ்க்கையை குறித்த தேவ நோக்கத்தை உணர்ந்தவர்களாக, அதற்கேற்றபடி தங்கள் வாழ்க்கையை நடத்துகிறவர்களாக, வாழ்க்கையின் எந்த ஒரு காரியத்திலும், அது ஆவிக்குரிய காரியமானாலும் சரி, இவ்வுலகத்திற்குரிய காரியமானாலும் சரி, தேவனையே சார்ந்து, அவரையே நம்பி வாழ்கின்றனர். தங்கள் வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு காரியமும், தேவ சித்தப்படியும், அவரின் திட்டப்படியும், அவருடைய ஆளுகைக்குட்பட்டும் நடக்கிறது என்பதை அறிந்திருக்கின்றனர். ஆதலால் அவர்கள் இவ்வுலகத்தில் வேறு எதையும் சாராமல், அவரையே சார்ந்து ஜீவிக்கின்றனர். இவ்வுலகத்தின் எந்தவொரு காரியமும், மாற்றங்களும், அவர்களின் வாழ்க்கையின் ஓட்டத்தை மாற்றவோ, தடைப்பண்ணவோ முடியாது. எனவே அவர்கள் மற்ற எதை குறித்தும் கவலைபடமாட்டார்கள். வேதாகமத்தில் பல தேவ மனிதர்களின் வாழ்க்கையில் நாம் இப்படிப்பட்ட காரியங்களை காணலாம் (உதாரணமாக: யோசேப்பு, மோசே, தாவீது, எலியா, ஏசாயா, எரேமியா, பவுல் போன்றோர்). இப்படிப்பட்டவர்களையே பாக்கியவான் என்று **எரேமியா 17:7** கூறுகிறது. மேலும் **எரே 17:8** இன்படி, இப்படிப்பட்ட மக்கள் வாழ்க்கையின் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும்

தேவனுக்கேன்று கனிகொடுக்கிறவர்களாய் காணப்படுவார்கள். அவர்களின் மூலமாய் தேவதிட்டம் குறித்த காலத்தில், குறித்த நேரத்தில் நிறைவேறியே தீரும். அதை எந்த வல்லமையினாலும் தடுக்க முடியாது. ஏனெனில் அவர்கள் ஜீவ தண்ணீராம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் நாட்டப்பட்டவர்கள் **(எரே 17:8) (யோ 4:14).**

**"யோசேப்பு <u>கனிதரும்</u> செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்" (ஆதி 49:22).** ஆம் யோசேப்பு தன் வாழ்க்கையில் எத்தனையோ விதமான சூழ்நிலைகளுக்குள்ளாய் தன் வாலிப நாட்களிலேயே கடந்து சென்றார். தன் தாய், தகப்பன், சகோதரரோடு ஒரு அமைதியான வாழ்க்கையை வாழ்ந்தார். தன் சகோதரரின் வாழ்க்கை தரம் எப்படியிருந்தாலும், தன் சிறு வயதில் இருந்தே தேவனையே தன் நம்பிக்கையாக கொண்டிருந்து, தேவன் தனக்கு வெளிப்படுத்தின காரியங்கள் நிச்சயமாக நிறைவேறும் என்று அவர்மேல் நம்பிக்கை கொண்டிருந்தார். சூழ்நிலைகள் யாவும் அதற்கு விரோதமாய் இருந்தாலும், போத்திபாரின் வீட்டிலும், சிறைச்சாலையிலும், உண்மையாய் தன் பணிகளை செய்தார். தேவ திட்டத்திற்கு எதிராய் இருக்கிற சூழ்நிலையில் தான் ஏன் வாழவேண்டும் என்று அவர் நினைக்கவில்லை.

ஏனெனில் எப்படிப்பட்ட எதிர்மறையான சூழிநிலையிலும் அவர் கனிதரும் செடியாய் இருந்தார். ஏற்றகாலத்தில் தேவன் அவரை உயர்த்தி, அவரால் அநேகர் போஷிக்கப்படும்படியாய், விசேஷமாக இஸ்ரவேல் குடும்பத்தார், சந்ததியாய் போஷிக்கப்படும்படியாக அவரை வைத்தார். இவ்வாறாகவே மற்ற தேவ மனிதர்களும் கனிதருகிறவர்களாய் இருந்தனர். அதே வேளையில், இவ்வுலகதில் இன்னொரு சாராரான மனிதர்களும் உண்டு. **"மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 17:5).** இவர்கள் தேவனை அறியாதவர்களாகவும் அல்லது அறிந்தும் அவருக்கு கீழ்படியாதவர்களாகவும், மற்ற மனுஷரை சார்ந்து கொண்டு அல்லது தங்கள் ஆஸ்தி, பெலன், அறிவு ஆகியவற்றை சார்ந்து கொண்டு, தேவ திட்டத்தை பற்றி அறிவில்லாமல், தாங்களாகவே தங்களுக்கு என்று சில காரியங்களை நியமித்து கொண்டு, அவற்றை அடையவும், அநுபவிக்கவுமே தங்கள் வாழ்க்கையின் காலங்களை செலவிடுகின்றனர்.

வேதாகமத்திலும் பழைய ஏற்பாட்டில் சவுல், அப்சலோம், நேபுகாத்நேச்சார், புதிய ஏற்பாட்டில் பரிசேயர், சதுசேயர் போன்றோர் தங்களைகுறித்த தேவ நோக்கத்தை அறியாமல், தாங்களாகவே சில காரியங்களை சார்ந்து கொண்டு, கனியற்ற சபிக்கப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். உலகின் இக்காலகட்டத்திலும் இப்படிப்பட்ட மனிதர்களே வாழ்கின்றனர். ஒரு பக்கம் தேவனுக்காய், தேவ திட்டத்திற்காய், தேவ இராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காய், தேவனையே சார்ந்து இரவும் பகலும் ஓடும் மக்கள். மற்றொரு புறம், இவ்வுலகத்தை ஆதாயப்படுத்தி கொள்ளும்படியாய், தங்கள் நித்திய ஜீவ வாழ்க்கையையும் நஷ்டப்படுத்தி, இவ்வுலகத்தின் மக்கள் மேலும், செல்வம், புகழ், பதவி, அதிகாரம் ஆகிய இவைகளின் மேலும் தங்கள் நம்பிக்கையை வைத்து அதற்காக ஓடும் மக்கள்.

இவை எல்லாவற்றிற்கும் தேவன் ஒரு முடிவை வைத்திருக்கிறார். ஏனெனில் **"என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்" (யோ 15:2).** எனவே தேவனுக்கென்று நற்கனி தரும் மரங்களாய் நாம் வாழ்வோம். அவரையே சார்ந்துகொள்வோம். ஆமென்.

## 36. மனுஷருள்ளத்திலிருப்பதை

**மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை (யோவான் 2:25).**




இவ்வுலகத்தில் மனிதனால் எத்தனையோ காரியங்களை கண்டுபிடிக்க முடிந்தாலும், ஆகாயத்தில் உள்ளவைகளையும், ஆழ்கடலின் அடியில் இருப்பதையும் ஆராய முடிந்தாலும், மனித உடலின் ஒவ்வொரு பாகத்தையும் ஆராய முடிந்தாலும், மனிதனின் உள்ளத்திலிருப்பதை மற்றொரு மனிதனால் அறிந்து கொள்ளமுடியாது. நம்முடைய சொந்த குடும்பத்தில் உள்ளவர்களின் மனநிலையை கூட நம்மால் கணிக்க இயலாது. எந்த கருவியும் மனதின் சிந்தனையை துல்லியமாக கூற இயலாது.

ஏனெனில் **"எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?"** என்று **(எரே 17:9)** கூறுகிறது. மேலும் **"மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,"** என்று **ஆதி 6:5** கூறுகிறது. நன்மை, தீமை இன்னதென்று அறிந்து

கொள்ளும் இருதயம், நன்மையை காட்டிலும் தீமையையே செய்ய தீவிரிக்கிறது. இதற்கு காரணம் **"அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்." (எபே 2:3).** ஏனெனில் ஆண்டவர் சொன்னபடி **"உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (லூக் 12:34).**

ஆம் தேவனுடைய சித்தத்தையும், ஐக்கியத்தையும், அவருடைய ஆசிர்வாதத்தையும் காட்டிலும், உலக பொருளும், உலக இன்பங்களும், உலக ஐக்கியங்களும் நமக்கு பெரியதாய் இருக்கும் பொழுது, நாம் நமது மாம்சமும், மனதும் விரும்பினவைகளை செய்கிறோம். பரலோக பொக்கிஷத்தை காட்டிலும், உலக காரியங்களை நாம் பெரியதாக நினைத்து அதின்மேல் நமது சிந்தையை, இருதயத்தை வைக்கும் பொழுது, நமது வாழ்க்கை முழுவதுமே அவற்றால் ஆட்கொள்ளபடுகிறது. இதனால் நம்மை குறித்த தேவசித்தத்தையும், திட்டத்தையும் நாம் மறந்து போனவர்களாய் உலகத்தின் பின்னே ஓடிகொண்டிருக்கிறோம். எத்தனையோ ஊழியங்களும், பிரசங்கங்களும், அற்புதங்களும் நடந்தாலும் மனுஷருடைய மனம் மாறாமல் இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

ஆண்டவர் சொன்னபடி **"நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்" (லூக் 6:45).** இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒரு சத்தியம் இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும் என்பதாகும். எனவே பொல்லாத இருதயத்தில் இருந்து வரும் பேச்சுகள் பொல்லாதவைகளானதும், அடங்காததுமாயும் இருக்கிறது. எனவே **"நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!" (யாக் 3:6).** அநேக நேரங்களில் நம்மாலேயே நம்முடைய சிந்தையை கட்டுப்படுத்த முடியாதவர்களாய் போகிறோம். எனவே இப்படிப்பட்ட இருதயத்தை பற்றி நன்கு அறிந்தவரால் மட்டுமே அதை சரிசெய்ய முடியும்.

அதற்காகவே அவர் நமக்காக சிலுவையில் பலியானார். **எபி 9:14** கூறுகிறது **"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்தக்கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!".** **மேலும்** **"உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது."**, என்று **ரோ 2:29** கூறுகிறது. இப்படியாக ஆண்டவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு, ஆவியானவராலே

இருதயத்தில் விருத்தசேதனம் பண்ணப்பட்டோமானால், **1 கொரி 2:16** கூறுகிறபடி **“எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது”** என்று உறுதிப்படுத்தி கொள்ளலாம்.

நம்முடைய இதய கதவின் வாசற்படியில் நின்று தட்டுகிறார் **(வெளி 3:20)**. அவருக்கு திறப்போமானால் **அப்போ 4:32** கூறுகிறபடி **“விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்.“**, ஆம் கிறிஸ்துவின் சிந்தையாகிய அந்த ஒரே இருதயமே நம் அனைவருக்குள்ளும் இருக்கும். அது தேவ சித்தத்தை, தேவ திட்டத்தை நிறைவேற்ற இணைந்து செயல்படும். ஆமென், அல்லேலூயா.

# 37. கூடாதகாரியம்

Heb. 6:4-6
"it is impossible for those who have once been enlightened, who have tasted the heavenly gift, who have shared in the Holy Spirit, who have tasted in the goodness of the word of God and the powers of the coming age, if they fall away, to be brought back to repentance, because to their loss they have crucified the Son of God all over again and subjected him to public disgrace"

பரிசுத்த வேதாகமம் கூறுகிறது **"தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை" (லூக் 1:37)**, என்று. ஆனால் அதே நேரத்தில் செய்ய முடியாத, கூடாதகாரியம் என்று கூறப்பட்டிருக்கும் ஒரு செயல் இருக்குமானால் அது **எபிரெயர் 6:4-6** வசனங்கள் வரை கூறப்பட்டிருப்பதாகும், **"ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்"**. பாவத்தில் வாழும் மனிதனை காட்டிலும், பாவ சேற்றில் இருந்து மீட்டெடுக்கப்பட்டும் மறுபடியும் தானாகவே அதில் விழுந்து போன மனிதனுடைய நிலைமை மிகப்பரிதாபம். மேற்க்கண்ட வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் மிக முக்கியமானதாகும். அவற்றை நாம் இப்பொழுது தியானிப்போம்.

1. **ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும்:** மனந்திரும்பின ஒரு பாவி, பாவ இருளிலிருந்து, கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி தன் மேல் பட்டபடியால் வெளிச்சத்திற்கு வருகிறான். இனி அவன் ஒருபோதும் இருளுக்கு உரியவன் கிடையாது. மேலும் அவனிடத்தில் உள்ள ஒளியை பிரகாசிப்பதின் மூலம் அவன் மற்றவரையும் இருளிலிருந்து மீட்கிறான். விசேஷமாக ஆண்டவருக்காக ஊழியம் செய்யும் பொழுது, நாம் பிரகாசிக்கிற நட்சத்திரங்களாய் காணப்படுவோம். மோசேயின் முக பிரகாசத்தை பார்க்கிலும் மேன்மையான பிரகாசத்தை கர்த்தர் நமக்கு தருகிறார். ஆனால் இப்படிப்பட்ட அனுபவத்தை பெற்ற பின்பும் மறுதலித்து

போனால் அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியமாகும்.

**2. பரமஈவை ருசிபார்த்தும்:** தேவன் நமக்கு பாராட்டின ஈவு மிகப்பெரியதாகும். எப்பேர்ப்பட்ட மோசமான பாவியையும் அவருடைய ஈவு மீட்டெடுக்கிறது. நமக்கே தெரியும் நாம் எப்படிப்பட்ட பாவ வாழ்க்கை வாழ்ந்தோம் என்றும், இப்பொழுது நாம் இருக்கும் சூழ்நிலைக்கு நாம் சற்றும் தகுதியானவர்கள் அல்ல என்றும் நாமே அறிவோம். இந்த அறிவு மனந்திரும்பின ஒவ்வொருவருக்கும் உண்டு. அதுமாத்திரமல்ல தேவன் நமக்கு இப்பொழுது தந்திருக்கும் தாலந்துகள், வரங்கள், நன்மைகள் யாவும், தகுதியற்ற நமக்கு அவருடைய பரமஈவால் கொடுக்கப்பட்டதாகும். இப்படிப்பட்ட பரமஈவின் அனுபவத்தை ருசிபார்த்த பின்பும் மறுதலித்து போனால், அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியமாகும்.

**3. பரிசுத்த ஆவியைப் பெற்றும்:** நாம் இரட்சிக்கப்பட்டதால் பெறும் மிகபெரிய சிலாக்கியம், பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்வதாகும். அவரால் நடத்தப்படுவதாகும். அவருடைய சமாதானத்தால், சந்தோஷத்தால் நிறைந்திருப்பதாகும். நம்முடைய சிந்தனை, செயல் யாவும் ஆவியானவரால் நிரப்பபட்டு, கட்டுபடுத்தப்பட்ட அனுபவமாகும். இப்படிப்பட்ட அனுபவத்தை பெற்றும் மறுதலித்து போனால், அப்படிப்பட்ட மனிதரை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியமாகும்.

**4. தேவனுடைய நல்வார்த்தை:** தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. அவருடைய வார்த்தையை, சத்தத்தையே நாம் கேட்டிருக்கிறோம். அதுவே நம்மை இரட்சித்தது. தேவ வார்த்தையே நம் இருதயத்தில் கிரியைச்செய்து நம்மை இரட்சித்தது. அந்த வார்த்தையே நாம் தேவனை அறிந்து கொள்வதற்கும், அவருக்கு பிரியமான வாழ்க்கை எதுவென்று உணர்ந்து கொள்வதற்கும் நமக்கு உதவினது. மேலும் தேவனுடைய சித்தத்தையும், நம்மை குறித்த தேவ திட்டத்தையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் அறிந்துகொள்வதற்கும் தேவனுடைய வார்த்தை நமக்கு உதவினது. ஆனால் இதை எல்லாம் அறிந்த பின்பும், மறுதலித்து போனால், அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியமாகும்.

இப்படியாய் மறுதலித்து போனவர்கள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தங்களுக்காய் சிந்தின இரத்தத்தின் மேன்மையை உணராதபடியால், அவரை தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறவர்களாய் காணப்படுகின்றனர். இதுவே அவர்களின் முந்தின நிலையை காட்டிலும் மோசமான, கேடுள்ள ஒரு நிலையாகும். இக்காரியங்களை குறித்து **எபிரெயர் 10:26-29** வசனங்கள் மேலும் பல சத்தியங்களை நமக்கு தருகிறது. அவற்றை நாம் அடுத்த தியானத்தில் தொடர்ந்து தியானிபோம். மேற்க்கண்ட சத்தியங்களை, நாம் நம் மனதில் இருத்தி, ஒருபோதும் நமக்கு இப்படிப்பட்ட நிலைவராதபடி ஜாக்கிரதையாய் இருந்து, தேவ கிருபையையும், தயவையும், பாதுகாப்பையும் பெற்று, அவருக்கு பயனுள்ளவர்களாய் வாழ்வோம். ஆமென், அல்லேலூயா.

## 38. நன்றியறிதல்

### நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள் (கொ 3:15)




கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் அப்போஸ்தலராகிய பவுல் பல காரியங்களை குறிப்பிட்டு சொல்லி கொண்டு வரும் வேளையில், மேற்காணும் நன்றியறிதல் பற்றியும் குறிப்பிடுகிறார். இந்த வார்த்தை பார்பதற்கு சாதாரணமாயிருந்தாலும், பல வேத சத்தியங்கள், இந்த சிறிய வார்த்தையாகிய நன்றியறிதல் என்பதற்குள்ளாக அடங்கியிருக்கிறது. இந்த நன்றியறிதல் என்னும் குணம் இல்லாததினாலேயே இன்று பலர் தேவனுக்கு எதிராகவும், சக மனிதர்களுக்கு எதிராகவும் பல காரியங்களை செய்கின்றனர். நன்றியறிதல் என்னும் இக்குணம் எவ்வளவு முக்கியமானது என்பதை பின்வருமாறு காண்போம்.

முதலாவது நன்றியறிதல் உள்ளவர்கள் தேவனுக்கு முன்பாகவும், சக மனிதர்களுக்கு முன்பாகவும் எவ்வாறு இருப்பார்கள் என்பதை காண்போம். நன்றியறிதல் உள்ள மனதில் இருந்தே மெய்யான துதி ஸ்தோத்திரங்கள் வெளிவரும். தேவன் செய்த, செய்கின்ற, செய்ய போகின்ற ஒவ்வொன்றையும் குறித்து நன்றியறிதலுள்ள மனதுடனே இருப்பவர்களே அவரை மெய்யாய் ஸ்தோத்தரித்து உயர்த்துவார்கள். மற்ற மனிதர்களுக்கும் அவர் செய்த நன்மைகளை அறிவிப்பார்கள். இக்கட்டு காலங்களில், நெருக்கங்கள் ஏற்பட்டாலும் பின்வாங்கி போகமாட்டார்கள். தேவனுக்கு

பிரியமில்லாத காரியங்களை செய்யமாட்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அவரில் மெய்யாய் அன்பு கூறுவார்கள்.

மேலும் இக்குணத்தால், சக மனிதர்களுடனும் நல்ல ஐக்கியத்தை உடையவர்களாய் இருப்பார்கள். மற்றவர்கள் செய்த நன்மைகளுக்கு நன்றியறிதலாய் தாங்களும் சக மனிதர்களுக்கு தங்களால் இயன்றமட்டும் உதவுவார்கள். ஆனால் நன்றியறிதல் குணம் இல்லாதவர்கள் ஆண்டவரும், மற்ற மனிதர்களும் தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்து, துணிகரமாய் அவர்களுக்கு எதிராகவே காரியங்களை செய்வார்கள். இந்த குணம் இல்லாதவர்களிடத்தில், ஆவியின் கனிகளையோ, வரங்களையோ காணமுடியாது.

தங்கள் நிலைமை முற்காலத்தில் எப்படியிருந்தது, எப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் தேவகிருபையினால், மனுஷர் தயவினால் தாங்கள் கடந்துவந்தோம் என்பதை, நன்றியறிதல் உள்ள இருதயமே நினைவில் வைத்திருக்கும். அவ்வாறு நன்றியறிதல் இல்லையெனில், வீண்பெருமையும், சுய நலனுமே அவர்களிடத்தில் மேலோங்கி நிற்கும்.

எனவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்காகவும் சிலுவையில் அறையப்பட்டு, பாடுபட்டு, மரித்து, அடக்கம்பண்ணபட்டு, மூன்றாம் நாள் உயிரோடெழுந்து, அவர் நிறைவேற்றி முடித்த அவருடைய கிரியையை நன்றியறிதலுள்ள இருதயத்தில் இருத்தியிருப்போமானால், நாம் அவருக்கென்று கனி கொடுக்கிறவர்களாய் காணப்படுவோம். மேலும் நம்முடைய சக மனிதர்களுக்கும் நம்மால் மிகுந்த பலன் உண்டாகும். தேவன் தாமே நம் ஒவ்வொருவருக்கும் இக்கிருபையை தருவாராக. ஆமென், அல்லேலூயா.

## 39. ஆவியோடும், உண்மையோடும்

**உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார் (யோ 4:23,24).**




மேற்க்கூறப்பட்ட வசனத்தில் ஆண்டவரை நாம் ஆராதிக்க வேண்டும் என்றால், தொழுது கொள்ள வேண்டும் என்றால், இரண்டு காரியங்கள் கூறப்பட்டுள்ளது. ஒன்று ஆவியோடு, மற்றொன்று உண்மையோடு. அதற்கான காரணங்களும் இவ்விரு வசனத்திலேயே கூறப்பட்டுள்ளது. முதலாவது தேவன் ஆவியாயிருக்கிறபடியால், ஆவியாயிருக்கிற தேவனை நாம் மாம்ச சிந்தையோடு, மாம்ச பெலத்தால் ஆராதிக்கவோ, தொழுது கொள்ளவோ முடியாது. உலகத்தில் அநேக மக்கள் தாங்கள் நம்புகிற தெய்வங்களை தங்கள் மாம்ச பெலத்தால், சில காரியங்களை செய்து தொழுது கொள்கின்றனர். ஆனால் நம் ஆண்டவரோ, நாம் நம் ஆவியால், அவரைப் பற்றிய சிந்தையோடு, அவரோடு ஐக்கியப்பட்டு அதன்மூலம் நம் சரீரத்தையும் கட்டுப்படுத்தி அவரை ஆராதிக்க விரும்புகிறார்.

உலக மக்கள் தங்கள் சரீரத்தை கட்டுபடுத்துவதன் மூலம் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை மேம்படுத்த நினைக்கின்றனர். ஆனால் ஆவியாயிருக்கிற நம் ஆண்டவரோ, அவரோடு நாம் ஆவியில் ஐக்கியபடுவதின் மூலம், நம் மாம்ச சரீரத்தையும் பாவங்களற சுத்திகரித்து, நாம் தம்மை தொழுதுகொள்ள செய்கிறார். எனவே சரீர பிரகாரமாக நாம் செய்யும் பக்திக்குரிய செயல் அல்ல, ஆவிக்குரிய பிரகாரமாக நாம்

ஆண்டவரிடத்தில் கொண்டுள்ள பயபக்தியே நாம் தேவனை ஆராதிக்க நம்மை தகுதியுள்ளவர்களாக்குகிறது.

அடுத்ததாக கூறப்பட்டுள்ள காரியம் உண்மை ஆகும். இன்று பல ஆவிக்குரிய சபைகளில் ஆவியோடு ஆராதிப்பதை குறித்து போதிக்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் உண்மையோடும் ஆராதிக்க வேண்டியதை பற்றி அதிகமாக போதிக்கபடுவதில்லை. ஒருவர் ஆவியானவரால் நடத்தப்பட்டு உண்மையாய் ஆராதிப்பாரானால், அவருடைய வாழ்க்கையில் உண்மை தன்மை காணப்படவேண்டும். உண்மையாயிருத்தல் என்று கூறும்பொழுது ஆவிக்குரிய காரியங்களில் மட்டுமில்லாமல், இவ்வுலக காரியங்களிலும் உண்மையாயிருத்தல் வேண்டும். ஏனெனில் **"அநீதியான உலகப்பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?" (லூக் 16:11)** என்று ஆண்டவரே கூறியிருக்கிறார்.

வேதத்தில் தேவனை உண்மையாய் ஆராதித்த தேவமனிதர்கள் ஒவ்வொருவரும் ஆவிக்குரிய காரியங்களில் மட்டுமல்ல, உலக பிரகாரமான காரியங்கள் ஒவ்வொன்றிலும் மனுஷர் முன்பாகவும் உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள். ஆபிரகாம், யோசேப்பு, தாவீது, யோபு, தானியேல் என பல பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் அவர்கள் ஆவியோடும், உண்மையோடும் எவ்வாறு தேவனை தொழுது கொண்டார்கள் என்பதை நாம் காணலாம். ஆனால் அதே வேளையில் பொருளாசையை சார்ந்து, வாழ்க்கையில் உண்மையில்லாமல், ஆனால் ஆவிக்குரியவர்களாய் தங்களை அடையாளபடுத்த நினைத்தவர்களின் முடிவை நாம் அப்போஸ்தலர் 5ஆம் அதிகாரத்தில் அனனியா, சப்பீராள் வாழ்க்கையில் காணலாம்.

வேதனைக்குரிய காரியம் என்னவென்றால் இன்றும் நம் சபைகளில் இப்படிப்பட்டவர்கள் காணப்படுவதே ஆகும். இதன் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படுகிறது **(2 பேதுரு 2:2)**. உலகபிரகாரமான வாழ்க்கையில் உண்மையற்றவர்களாய் காணப்படுகிற சபை மக்களாலும், தேவ ஊழியத்தை ஆதாய தொழிலாக்கி தேவனுக்கு உண்மையற்றவர்களாய் இருக்கிற ஊழியர்களாலும் அநேகர் இடறல் அடைகின்றனர். எனவே நமது வாழ்க்கையில் எந்த நிலையிலும் உண்மையை காத்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஏனெனில் நாம் ஆவியோடு ஆராதிப்பதை தேவன் மட்டுமே பார்க்க முடியும். ஆனால் உண்மையாய் வாழ்வதை நம் சகமனிதர்களும் காணமுடியும். அவர்கள் சமாரிய ஸ்தீரியை போல் அந்நியர்களாய் இருந்தாலும், நமது உண்மையான வாழ்க்கையின் மூலம் ஆண்டவரிடத்தில் அவர்களும் வழிநடத்தப்படுவார்கள். எனவே உண்மையாய் தேவனை ஆராதிக்க, தேவ ஜனமாயிருக்க, ஒருவர் எத்தேசத்தாராய் இருந்தாலும் எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்தாலும், எந்தவித பேதமும் இன்றி, தேவன் எதிர்ப்பார்பதெல்லாம் இந்த இரண்டு காரியங்களை மட்டுமே ஆகும். சமாரிய ஸ்தீரி அன்று இந்த சத்தியத்தை கேட்டு ஆண்டவரை ஏற்றுக்கொண்டால் மற்றவர்களும் ஆண்டவரை அறிந்துகொள்ள செய்தால்.

நம்மையும் தேவன் இவ்வாறே தேடி வந்தார். எனவே நாமும் சமாரிய ஸ்திரியை போல நம்மை தேவனிடத்தில் ஆவியோடும், உண்மையோடும் அர்பணித்து மற்றவர்களையும் அவரிடத்தில் வழிநடத்துவோமாக. ஆமென் அல்லேலூயா.

# 40. பெலவீனத்திலே




நம் வாழ்வில், நாம் சில நேரங்களில் பெலவீனப்பட்டு போகிறோம். சில நேரங்களில் ஆவிக்குரிய வாழ்விலும், சில நேரங்களில் சரீர பிரகாரமாகவும் பெலவீனப்படுகிறோம். பெலவீனத்தால் உண்டாகும் சோர்வினாலும் இன்னும் மற்ற உபாதைகளினாலும் நம் ஆவிக்குரிய வாழ்விலும், சரீர பிரகாரமான வாழ்விலும் நாம் தளர்ந்து போகிறோம். சில நேரங்களில் ஆவிக்குரிய வாழ்வில் உண்டாகும் பெலவீனத்தால் சரீரமும், சரீரத்தில் உண்டாகும் பெலவீனத்தால் ஆவிக்குரிய வாழ்வும் பாதிக்கப்படுகிறது. எனவே இவ்விரு வாழ்விலும் நாம் பெலனோடு காணப்படுவது அவசியம்.

நாம் ஏன் பெலவீனப்படுகிறோம் என்பதை முதலாவது காண்போம். சில வேளைகளில் நம்முடைய தவறுகளால் நம் வாழ்வில் பெலவீனங்கள் ஏற்படுகிறது. உதாரணமாக, நமது சரீரத்திற்கு ஏற்காத உணவை இச்சித்து உண்பதின் மூலம் பெலவீனம் ஏற்படுகிறது. ஆவிக்குரிய வாழ்விலும் நமக்கு ஏற்காதவற்றை இச்சித்து அவற்றை ஆவிக்குரிய வாழ்வில் அனுமதிப்பதின் மூலம் பெலவீனம் ஏற்படுகிறது. ஆனால் சில நேரங்களில் சத்துருவாகிய பிசாசானவன் நம் சரீரத்திலும், ஆவிக்குரிய வாழ்விலும் பெலவீனத்தை கொண்டு வருகிறான். இன்னும் சில நேரங்களில் தேவ சித்தத்தின்படி நம் வாழ்க்கையில் அனுமதிக்கபடும் சில காரியங்களின் மூலம், நம் சரீரத்திலும், ஆவிக்குரிய வாழ்விலும் சோர்வு உண்டாகிறது.

எனவே முதலாவது நாம் கண்டபடி, நம்முடைய பெலவீனத்திற்கு நாமே காரணமானால், நாம் உடனடியாக அதற்கான தீர்வை தேட வேண்டும். குறிப்பாக, நம் ஆவிக்குரிய வாழ்வில் நம்மை விழ செய்கிற,

பெலவீனப்படுத்துகிற காரியங்கள் எவை என்று அறிந்து அவற்றை விட்டுவிலகி, புதுபெலனை தேவனிடத்தில் கேட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். சிம்சோனின் வாழ்விலும், தாவீதின் வாழ்விலும் அவர்கள் பாவத்திற்குட்பட்டு பெலன் இழந்து சோர்ந்து போன நேரத்தில் அவர்கள் மனந்திரும்பி தேவனை நோக்கி கூப்பிட்டபோது கர்த்தர் அவர்களுக்கு வேண்டிய பெலனை தந்தார். பத்சேபாளிடத்தில் தாவீது பாவத்திற்குட்பட்ட பின்பு நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து அவன் பாவத்தை உணர்த்தின் போது பாடின சங்கீதத்தில், "உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்." (சங் 51:12) என்று கூறுகிறார்.

இரண்டாவது, சத்துருவினால் உண்டாகும் பெலவீனம். யோபுவின் வாழ்விலும், எலியாவின் வாழ்விலும் சத்துருவினால் உண்டான தாக்குதலினால் இருவரும் சோர்ந்து பெலன் இழந்து போனார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் நாம் அமைதியாக கர்த்தருக்கு காத்திருப்போமானால், "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" (ஏசா 40:31) என்ற வாக்குத்தத்தம் நம் வாழ்க்கையில் நறைவேறும்.

மூன்றாவதாக தேனால் அனுமதிக்கப்படும் பெலவீனம். ஆபிரகாம், அன்னாள், பவுல் ஆகியோரின் வாழ்க்கையிலும் பெலவீனங்கள் காணப்பட்டது. அதற்காக அவர்கள் தேவனிடத்தில் மன்றாடினர். தேவனோ தமது சித்தத்தின்படியே அவர்கள் வாழ்க்கையில் கிரியை செய்தார். பவுலுக்கோ, "அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்", (2 கொ 12:9) என்று சொல்லி பெலவீனத்தை நீக்காமல் அதை தாங்கி கொள்ளும் பெலனை தந்தார்.

மேலும் நமது பெலவீன நேரங்களில் நாம் அந்நிலையிலேயே இருக்காமல் புதுபெலனை பெற்றுக் கொள்ளவேண்டும். இல்லையேல் அப்பெலவீனமே நம் சரீரத்தையோ, ஆவிக்குரிய வாழ்வையோ முற்றிலுமாக அழித்து போட்டுவிடும். எனவே சிறு சிறு பெலவீனங்கள், சோர்வுகள் வரும்போதே அதற்கு தீர்வுகாண வேண்டும். எது எப்படியிருப்பினும் கர்த்தரே, "சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்." (ஏசா 40:29), ஆமென், அல்லேலூயா.

## 41. துர்உபதேசங்கள் (Cults)




சத்தியத்தை மக்களுக்கு சொல்லி அவர்களை ஆண்டவருடைய மந்தையில் சேர்க்கிற பணியை மிகுந்த பாரத்தோடும், பிரயாசத்தோடும், தியாகத்தோடும், பல நிந்தனைகள், உபத்திரவங்கள் மத்தியிலும் பலர் செய்து கொண்டு வருகிற இக்காலத்தில், இப்படியாய் சேர்க்கப்பட்ட மந்தையை மிக எளிதாக மந்தையை விட்டு விலகிபோக செய்து அவற்றின் ஜீவனை (நித்திய ஜீவன்) பறிக்கிற பொல்லாத ஒநாய் கூட்ட மக்கள் உள்ளனர். இப்படிப்பட்ட ஒநாய் கூட்ட மக்கள் பலவிதம். இவர்களே துர் உபதேசகாரர்கள்.

இவர்கள் ஆடுகளை போலவே நடித்து தங்களின் துர் உபதேசங்களால் விசுவாசிகளின் மனதை மயக்கி, ஆதியில் சாத்தானின் வஞ்சகத்தால் ஆதாம் ஏவாள் தேவ மகிமையை இழந்தது போல், தங்களின் வஞ்சக பேச்சினால், உபதேசத்தினால் தெரிந்துகொள்ளப்பட்ட விசுவாசிகளையும் விழுந்து போக செய்வார்கள். "ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்" (2 கொ 11:3). இவர்களுக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் பவுல் முதலிய பல அப்போஸ்தலர்கள் தங்கள் நிருபங்களில் எச்சரித்து உள்ளனர் (அப் 20:29) (1 திமோ 4:1).

ஏனெனில் சபை ஏற்பட்ட காலத்திலேயே துர் உபதேசகாரர்களும் உண்டாயினர். இவர்களை பற்றி சற்று விரிவாக பார்ப்போம். துர் உபதேசக்காரர்கள் என்று நாம் சொன்னவுடன் நமது நினைவிற்கு

வருவது (1) யேகோவா சாட்சிகள் (2) இயேசு மட்டும் (3) ஏழாம் நாள் ஓய்வுகாரர்கள் போன்றோரே. இவற்றை தவிர இன்னும் பல துர் உபதேசங்கள் உள்ளன. இவை எல்லாம் கிறிஸ்தவ தேசங்கள் என்று அறியப்பட்ட தேசங்களில் இருந்து உருவாகி வந்தவைகளே. அமெரிக்காவில் Freemasons, The Church of Scientology போன்ற பல துர் உபதேச ஸ்தாபனங்கள் உள்ளன. இவைகள் ஏற்பட காரணம் என்ன என்பதை ஆராய்வோம்.

இவற்றில் பல ஒரு தனி மனிதனின் தவறான உபதேசத்தினால், அவனை பின்பற்றி பலர் சென்றதினால் உண்டானவைகளே ஆகும். சத்துருவானவன் சில மனிதர்களை வஞ்சித்து, தவறான உபதேசங்களை அவர்கள் மனதில் செலுத்துகிறான். இதற்கு காரணம் அவர்கள் தங்கள் வாழ்வில் பிசாசிற்கு இடம் கொடுத்ததே ஆகும். மேலும் இவர்கள் மூலம், விசுவாசத்தில், சத்தியத்தில் உறுதி இல்லாத மற்ற மக்களையும் வஞ்சித்து அவர்களின் மூலம் ஓர் துர் உபதேச கூட்டத்தை எழுப்புகிறான். மேலும் அதை பல தேசங்களில் பெருக செய்கிறான். இவை எல்லாவற்றிற்கும் மூல காரணம் விசுவாசிகள் சரியான சத்தியத்தை அறியாமல் இருப்பதே, சிலர் சத்தியத்தை அறிந்திருந்தாலும் பணம், புகழ், அதிகாரம் போன்ற சில காரியங்களுக்கு அடிமைப்பட்டு விழுந்து போகின்றனர்.

இதில் நாம் கவனிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், நாம் சத்தியத்தை (இயேசுவை) மக்கள் அறிய வேண்டும் என்று பிராயசப்படுகையில், துர் உபதேசகாரர்களும் தாங்களும் துர் உபதேசம் பரவ வேண்டும் என பல காரியங்களை தந்திரமாய் செய்கின்றனர். இவர்கள் ஊழியம் செய்வதே சபை மக்கள் மத்தியில் தான். குறிப்பாக இவர்களுடைய இலக்கு பெண்கள் மற்றும் வாலிப வயதினரே. இதில் மற்றொரு கவனிக்க தக்க காரியம், தேவனுக்காக வல்லமையாக ஊழியம் செய்த ஊழியர்களே நாளடைவில் துர் உபதேசகாரர்களாக மாறியுள்ளனர். இதனால் இவர்களுடைய ஊழியத்தில் பங்கு பெற்று சத்தியத்தை கேட்ட மக்களும் பாதிக்கப்படுகின்றனர். சபையை எதிர்க்க பெலனில்லாத சத்துருவானவன் இப்படி சில மனிதர்கள், சில சூழ்நிலைகளில் தனிப்பட்ட வாழ்வில் தவறி போகும் வேளையில், அவர்களை அடிமைப்படுத்தி, அவர்களின் மூலமாக வஞ்சனையாய் சபையை சீர்குலைக்க பார்க்கிறான்.

எனவே ஒரு தேவ ஊழியரின் மூலம ஓர் உபதேசத்தை கேட்கும்பொழுது அது வேத சத்தியத்தோடு ஒத்து போகிறதா என்று முதலாவது தேவ பிள்ளைகள் ஆராய வேண்டும். ஏனெனில் ஆண்டவரே கூறியுள்ளார், "ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்" (மத் 10:16). இன்று பல தேவ ஊழியர்கள் எழும்பின நம் தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட துர் உபதேசகாரர்கள் பெருகியுள்ளனர். தனி ஊழியம் (Independent Ministry) என்று கூறிக்கொண்டு

எந்த சபையையும் சாராமல் தாங்கள் கூறுவதே சரியான உபதேசம் என்று கூறி மக்களை வஞ்சிப்பவர் ஏராளம் உண்டு.
குறிப்பாக தொலைக்காட்சியில் செய்தி கொடுக்கும் பலர் இப்படிப்பட்ட கூட்டத்தை சேர்ந்தவர்களே. இப்படிப்பட்டவர்களை பற்றி வேதம் கூறுகிறது, "அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" (பிலி 3:19).

இதில் முக்கியமான ஒரு துர் உபதேசம் தேவனுக்கும், உலகபொருளுக்கும் ஒரே நேரத்தில் ஊழியம் செய்யமுடியும் என்று போதிப்பதே ஆகும். குறிப்பாக வாலிபர் மத்தியில் இரட்சிப்பு, தேவனோடு உள்ள உறவு, சபை ஐக்கியம், சத்தியத்தை பற்றிய தெளிவு ஆகிய இவை எவை பற்றியும் கூறாமல், அவர்களை உலக பிரகாரமாக ஆடி பாட வைத்து, இதுவே தேவ ஆராதனை என்று கூறுவது ஓர் துர் உபதேசமாகும். இதனால் தேவ பயம், சத்தியத்திற்குரிய தெளிவு எதுவும் இல்லாமல் உலகமக்களை போலவே வாழ்ந்துகொண்டு, எல்லாவற்றையும் அநுபவித்து கொண்டு ஆவிக்குரியவர்களாயும் வாழ முடியும் என வாலிப சமுதாயத்தினர் நினைக்கின்றனர். இதனால் இன்று பல சபை ஐக்கியங்களும், குடும்ப ஐக்கியங்களும் சிதறி போய் கொண்டிருக்கின்றன.

மேலும் சிலர் தொலைக்காட்சி மூலமாக ஒரு குறிப்பிட்ட ஊழியரின் உபதேசத்தை / பிரசங்கத்தை கேட்டு தான் இரட்சிக்கப்பட்டதாகவும். எனவே தினமும் தொலைக்காட்சி மூலம் அந்த குறிப்பிட்ட ஊழியரின் உபதேசத்தை கேட்டு அதன் மூலமாகவே எந்த சபை ஐக்கியமும் இன்றி தான் விசுவாசியாக இருப்பதாகவும் கூறுகின்றனர். ஆனால் வேதம் கூறும் கிறிஸ்தவ வாழ்க்கை இதுவல்ல. இரட்சிப்பின் நிச்சயம், சபை ஐக்கியம், சத்திய தெளிவு, பாடுகளை சகித்தல், தேவ ஊழியத்தை செய்தல் போன்ற இவைகள் இல்லாமல், வெறும் தொலைக்காட்சி பெட்டி முன் உட்கார்ந்து தினமும் சில ஜெபங்களை, ஸ்தோத்திரங்களை செய்வது ஒருவரை தேவ மனிதராக மாற்றாது.

ஒருவர் இரட்சிக்கப்பட / சத்தியத்தை கேட்க இப்படிப்பட்ட தொலைக்காட்சி ஊழியங்கள் பயன்படலாம். ஆனால் தேவ சபை ஐக்கியத்திற்கு, வேத சத்தியத்துக்கு மாற்றாக தொலைக்காட்சி பிரசங்கங்கள் இருக்ககூடாது. தொலைக்காட்சி பிரசங்கம் செய்வோரும் மக்களை தேவனை நோக்கி, சபை ஐக்கியத்தை நோக்கி நடத்துகிறவர்களாக இருக்க வேண்டுமே ஒழிய தங்களை நோக்கி / தங்கள் தொலைக்காட்சி ஊழியத்தை நோக்கி நடத்த கூடாது. இல்லையேல் இவற்றின் மூலமும் பல துர் உபதேச கூட்டங்கள் எழும்பும். வேத சத்தியத்தையும், தேவ உறவையும், சபை ஐக்கியத்தையும், சுவிசேஷ பாரத்தையும் நோக்கி நடத்தாமல் ஒரு குறிப்பிட்ட மனிதனின் உபதேசத்தையும், ஆராதனை அமைப்பையும் நோக்கி நடத்தும் எந்த ஊழியமும் துர் உபதேச ஊழியமே.

இறுதியாக, சத்துருவானவன் எப்படி வஞ்சகமாய் செயல்படுகிறான் என்பதை கீழ்காணும் You Tube வீடியோவில் காணலாம்.

https://www.youtube.com/watch?v=ZXRMWdVgfyk

இங்கு மேலோட்டமாக நாம் காணும் பொழுது ஒரு பெண், மிகவும் தைரியமாக கடவுளை பற்றியும், கிறிஸ்துவின் வருகையை பற்றியும், தமிழ்நாட்டில் பிரபலமான சினிமா நடிகர்களான ரஜினிகாந்த், கமலஹாசன், இயக்குனர் பாரதிராஜா ஆகியோருக்கு கூறுவதை காணலாம். அப்படிபேசும் பெண், மேற் கூறிய நடிகர்கள் இணைந்து நடித்த ஒரு பழைய படத்தை, மறுபடியும் வெளியிடும் விழாவில், அதை தயாரித்து வெளியிடும் நபரின் மகளாகும். இதை பார்க்கும் பலர் இப்படி சினிமா துறையில், சினிமா நடிகர்களோடு நெருங்கி இருக்கும் இப்படிப்பட்ட மக்களின் விசுவாசத்தையும், பேசும் தைரியத்தையும் கண்டு, சினிமாவில் இருந்து கொண்டே இப்படி ஆண்டவருக்கு வல்லமையாய் ஊழியம் செய்ய முடியும் என்று நினைக்கலாம்.

ஆனால் அதே You Tube பக்கத்தில் Comment பகுதியில், அந்த பெண் தான் ஒரு யேகோவா சாட்சிகளின் கூட்டத்தை சேர்ந்தவள் என்று பகிரங்கமாய் கூறியுள்ளார். மேலும் யேகோவா சாட்சிகளின் வலைதள பக்க தொடர்பையும், தன்னுடைய Facebook பக்க தொடர்பையும் கொடுத்துள்ளார். இவர்களால் சத்திய தெளிவில்லாத பல விசுவாசிகள் வஞ்சிக்கபடுகின்றனர். குறிப்பாக பெண்களும், வாலிப பிள்ளைகளும்.

மேலும் பல சினிமா நடிகர்கள் தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டதாக கூறும் சாட்சிகளை, பல ஊழிய மேடைகளில் நாம் காணலாம். ஆனால் இப்படியாக இரட்சிக்கப்பட்டு விட்டதாக கூறின மக்களில் பலர், மறுபடியும் சினிமா துறைக்கு செல்வதையும், இன்னும் பலர் தற்போது தமிழ்நாட்டில் நடைபெறும் தேர்தலில் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக, அவர்கள் கொடுக்கும் பணத்திற்காக, பொய்களையும், தரம் தாழ்ந்த பேச்சுகள் பேசுவதையும் நாம் காணலாம். இவர்களுக்கு தேவ பக்தி உள்பட எல்லாமே ஆதாய தொழிலாகும் “கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு” (I **தீமோ** 6:5). இவர்களை பயன்படுத்தி கிறிஸ்தவ ஊழியம் செய்வோரும் அப்படிப்பட்டவர்களே.

எனவே துர் உபதேசங்கள் பலவிதங்களிலும், நம் விசுவாசத்தில் இருந்து நாம் விழுந்து போக நம்மோடு போராடுகின்றன. ஆனால் தேவ ஐக்கியத்தில், சத்திய தெளிவோடு நாம் இருப்போமானால் நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் இப்படிப்பட்டவைகளிலிருந்து நாம் காத்து கொள்ளலாம். பிரதான மேய்ப்பராகிய கிறிஸ்து இயேசுவினிடத்தில் இருந்து எதுவும் நம்மை பிரிக்க இயலாது. ஆமென், அல்லேலூயா.

# 42. என்னத்தைக் கேட்கிறார்




மீகா 6:6,7 வசனங்களில் "என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்துகொள்வேன்? தகனபலிகளைக்கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக்கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின்பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின்பேரிலும், கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்கவேண்டுமோ?" என்று கூறப்பட்டுள்ளது.

பாவ உணர்வினால் உந்தப்பட்டு, என் பாவம் போக, பாவத்தினால் உண்டான கஷ்டம் தீர நான் என்ன செய்ய வேண்டும் என்பதே அநேக மக்களின் கேள்வியாய் இருக்கிறது. குறிப்பாக நம் இந்திய மக்களில் பெரும்பாலோனோர், தங்கள் பாவத்தை தீர்க்க மேற்க்கண்ட வசனங்களில் கூறியிருப்பதை போல, பல காரியங்களை செய்ய முற்படுகின்றனர். குறிப்பாக கடவுளுக்கு ஏதாவது காணிக்கை (பலி) செலுத்தியோ, தங்கள் உடலை வருத்தியோ தங்கள் பாவத்தை போக்க முற்படுகின்றனர்.

இன்னும் மீகா 6:7 இல் கூறப்பட்டுள்ளபடி, சிலர் குறிகாரரின் பேச்சை கேட்டு நர பலி செலுத்துவதையும் நாம் காணலாம். இப்படிப்பட்ட கொடூரமான காரியங்கள் எல்லாம் தேசத்தில் நடைபெறுவதற்கு காரணம் மக்களின் அறியாமையும், சத்தியத்திற்கு கீழ்படியாத தன்மையும் ஆகும். தங்கள் பாவங்கள் போக வேண்டும் என்று முயற்சி

செய்யும் இவர்கள் இருளில் இருப்பதற்கு காரணம் என்ன என்பதை சிந்திப்போம். இதற்கு முதலாவது காரணம், இப்படிப்பட்ட மக்கள் தங்கள் பாவங்கள் போக வேண்டும் / மன்னிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்களேயன்றி பாவத்தில் இருந்து விடுபட வேண்டும், மெய்யான சத்திய வழியை அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை.

பாவத்தை குறித்த எந்த வெறுப்பும் இவர்களிடத்தில் இல்லை, அது தவறு என்று தெரிந்தும் அதை செய்துவிட்டு, அதனால் உண்டான பாவத்தை தீர்க்க வேறு சில காரியங்களை செய்து கொள்ளலாம் என்பதே அவர்களின் எண்ணம். கடவுள் பரிசுத்தர், பாவத்தின் சம்பளம் மரணம் (ரோ 6:23) போன்ற சத்தியங்களை எல்லாம் அறியாமல், வீணான விக்கிரகங்களை தெய்வங்கள் என்று எண்ணியிருப்பதே அவர்கள் இருதயம் இருளைடைந்து இருப்பதற்கு காரணமாகும்.

மேலும் மீகா 6:10,11 வசனங்களில் "துன்மார்க்கனுடைய வீட்டிலே துன்மார்க்கத்தினால் சம்பாதித்த பொக்கிஷங்களும், அருவருக்கப்படத்தக்க குறைந்த மரக்காலும் இன்னும் இருக்கிறதல்லவோ? கள்ளத்தராசும் கள்ளப் படிக்கற்களுள்ள பையும் இருக்கும்போது, அவர்களைச் சுத்தமுள்ளவர்களென்று எண்ணுவேனோ?", என்று கூறப்பட்டுள்ளபடி துன்மார்க்கமாய் ஜீவித்தும், கள்ளத்தராசை வைத்து அதிகமான பொருளை சம்பாதித்து ஆடம்பரமாய் வாழ்ந்தும், இருதயத்தில் எந்த குற்ற உணர்வும் இல்லாமல், வெறும் பாவ பரிகாரம் செய்தால் போதும் என்ற மனநிலையில் இருப்போரை, கர்த்தர் ஒருபோதும் சுத்தமுள்ளவர்களாய் எண்ணமாட்டார்.

மேற்கூறப்பட்ட இக்காரியங்கள் விசுவாசிகளுக்கும் பொருந்தும். ஏனெனில் இன்றும் சிலர், தேவனால் கிருபையாய் அருளப்பட்ட பாவ மன்னிப்பாகிய ஈவின் மேன்மையை உணராமல் தங்கள் மனம் போல் வாழ்ந்து கொண்டு, ஏதோ காணிக்கை கொடுப்பதின் மூலமும், சில பக்தியான செயல்களை செய்வதின் மூலமும் தாங்கள் சுத்தவான்களாய் மாறிவிடுவோம் என்று நினைக்கின்றனர். இதற்கு மற்றொரு காரணம், விசுவாசிகளை கண்டித்து மேய்க்க வேண்டிய போதகர்கள், தேவ பக்தியை ஆதாய தொழிலாக்கி கொண்டதினால், விசுவாசிகளின் நிலைமையும் தரம் தாழ்ந்து காணப்படுகிறது.

ஆனால் கர்த்தர் நம்மிடத்தில் என்ன எதிற்பார்கிறார் என்பதை மீகா 6:8 இல் காணலாம் "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்". இதில் முதலாவதாக ஆண்டவர் நன்மை இன்னதென்று அவர் நமக்கு உணர்த்தியிருக்கிறார். சத்தியமாகிய இயேசு கிறிஸ்துவை நாம் அறிந்து உணர்ந்திருக்கிறோம். ஒருவேளை ஆண்டவரை பற்றி கேள்விபடாதவர்களாய் இருந்தாலும், பொதுவாக, நன்மை எதுவென்பதை அறிந்துகொள்ளும் புத்தியை ஆண்டவர் அனைவருக்கும் தந்திருக்கிறார். குற்றமுண்டு, குற்றமில்லை(ரோ 2:15) என்று தீர்க்கிற மனசாட்சியை அனைவருக்கும்

கொடுத்திருக்கிறார். இதனால யாருக்கும் போக்கு சொல்ல இடமில்லை. மீகா 6:8 இல் கூறப்பட்டுள்ளபடி நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, தேவனுக்கு முன்பாக மனதாழ்மையாய் நடப்பதையே அவர் நம்மிடம் கேட்கிறார் / எதிர்பார்க்கிறார்.

எனவே பாவ மன்னிப்பின் நிச்சயமில்லாதவர்களுக்கு, பாவ பரிகாரியாகிய கிறிஸ்துவை அறிவித்து, அவர்கள் பாவத்தை போக்க அவர்களிடத்தில் இறைவன் எதை எதிர்பார்க்கிறார் என்பதை அறிவிக்க வேண்டியது பாவ மன்னிப்பின் நிச்சயத்தை பெற்ற ஒவ்வொருவரின் கடமையாகும். இதை நாம் துரிதமாக செய்யாவிட்டால், தேசத்தில் இருளில் இருக்கும் மக்கள், இன்னும் அதிகமான இருளுக்குள்ளாக சென்று தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் இழந்து விடுவார்கள். தேசத்தில் ஒரு ஏழுப்புதல் ஏற்பட ஆண்டவர் எதிர்பார்க்கிற / கேட்கிற இக்காரியத்தை முழுமூச்சுடன் அறிவிப்போமாக. ஆமென், அல்லேலூயா.

## 43. உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக்கொண்டாலும்




மத்தேயு 16:26 வசனங்களில் "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" என்று கூறப்பட்டுள்ளது.

மேற்க்கண்ட இந்த வாக்கியத்தை, ஆண்டவர் ஒருவன் தன்னைப் பின்பற்றி வரவிரும்பினால் என்ன செய்ய வேண்டும் என்று கூறும்பொழுது இவ்வாறாக கூறினார். உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்துவது என்பது ஒருவன் இவ்வுலகில் தான் செய்ய நினைத்ததை, அடைய நினைத்ததை, சாதிக்க நினைத்ததை, செய்து முடித்துவிட்ட நிறைவை பெற்றுக்கொள்வதாகும். உதாரணமாக, ஒருவன் தன் திறமையினால் தான் அடைய நினைத்த புகழின் உச்சியை அடைந்து விட்ட அனுபவமாகும். இப்படிப்பட்ட அனுபவத்தை பெற்று வாழும் மக்கள், இவ்வுலகில் அநேகர் உள்ளனர்.

எண்ணிமுடியாத செல்வத்தை சேர்த்த செல்வந்தர்கள், அரிய பெரிய காரியங்களை கண்டறிந்த மாமேதைகள், பெரும் அரசியல் அதிகாரங்களை பெற்று கோடிக்கணக்கான ஜனங்கள் உள்ள தேசத்தை ஆட்சி செய்பவர்கள், கலை, விளையாட்டு போன்ற துறைகளில் பெரும் சாதனை படைத்தவர்கள் போன்றோர் உலகம் முழுவதையும் தாங்கள் ஆதாயப்படுத்தி (ஜெயித்து) விட்டதாக கருதுகின்றனர். இப்படி அவர்கள் தங்கள் வாழ்வில் பெறுகிற உயர்வு பாவமல்ல. ஆனால் அதனால் உண்டாகிற சில விளைவுகள் மனிதர்களை பாதை மாற செய்கிறது.

என்னதான் தாங்கள் தங்கள் வாழ்வில் சாதித்திருந்தாலும், அவையாவும் இவ்வுலக வாழ்விற்கு மாத்திரமே பிரயோஜனப்படுமே தவிர, மறு உலக வாழ்விற்கு அதனால் ஒரு பிரயோஜனமுமில்லை என்பதை பலர் உணர்வதில்லை. இன்னும் சிலர், இயற்கைக்கு மேலான ஒரு வல்லமை உண்டென்பதை உணராமல், தங்கள் சுயபெலத்தால், சாதுரியத்தால் எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என்று சுயசார்ப்பு நிலையை அடைகின்றனர். இதனால் மறுவாழ்வை (நித்திய ஜீவன்) குறித்து கவலைப்படாமல், தாங்கள் செய்ய நினைக்கிறதை, சாதிக்க நினைக்கிறதை அடைய இரவும், பகலும் பிரயாசபடுகின்றனர்.

இன்னும் சிலர், தாங்கள் எல்லாவற்றையும் அடைந்து விட்டதாகவும், இனி தங்களுக்கு மிஞ்சி எதுவும் இல்லை என்றும் நினைக்கின்றனர். இது அவர்களை சுயநீதியை சார செய்கிறது, இதில் சிக்குண்ட சிலர் நானே கடவுள் என்று கூறி அநேக மக்களை வஞ்சித்ததை நாம் உலக வரலாற்றில் கண்டுள்ளோம். இவ்வாறாக ஒருவன் தன் சரீர பிரகாரமான வாழ்க்கைக்காக எல்லாவற்றையும் ஆதாயப்படுத்தி கொண்டாலும், தன் ஆவிக்குரிய வாழ்க்கைக்குரிய ஜீவனை (நித்திய ஜீவன்) பெறாமல் இழந்து போவானானால் அவனுக்கு ஒரு லாபமுமில்லை (ஆதாயமுமில்லை) என்று ஆண்டவர் கூறிகிறார் (மத் 16:26).

ஏனெனில் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தை மனுஷன் கொடுப்பான்? என்று ஆண்டவரே அதற்கான பதிலையும் கொடுக்கிறார். ஆம் இதுவே வாழ்வின் எதார்த்தம். இவ்வுலகில் எல்லாவற்றையும் பெற்றும், ஜீவனை (நித்திய ஜீவன்) இழந்துபோனால், ஐசுவரியவான்-லாசரு சம்பவத்தில் காணப்படுவதை போல, பரிதபிக்கதக்க நிலையே ஏற்படும் (லூக் 16:19-31). சற்று யோசித்து பாருங்கள், பேரோடும் புகழோடும் கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் அதிகாரத்தோடு வாழும் ஒருவன், மறு வாழ்வில் தனிமையில் கொடிய வேதனைப்படுவது எவ்வளவு பரிதாபத்திற்குரிய வாழ்வாகும்.

அப்படியானால், வாழ்க்கையில் உயர்வை அடைவது அல்லது அதற்காக பிரயாசப்படுவது தவறா, இல்லை. மேற்கூறியபடி உயர்வை அடைவது தவறில்லை. அதன் மத்தியில் ஒருவருடைய மனநிலை, வாழ்க்கை நிலை எப்படி இருக்கிறது என்பதே முக்கியமாகும். உதாரணமாக, ஆபிரகாம், யோபு ஆகியோரின் இவ்வுலக வாழ்க்கை நிலை நிறைவுள்ளதாய் காணப்பட்டது. ஆனால் அவர்கள் அதனோடு திருப்தியடைந்து நின்றுவிடவில்லை.

எபி 11:8-10 கூறுகிறது “விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்;

ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்."

**மேலும்** எபி 11:15,16 **வசனங்களில்** "தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே." **இங்கு நாம் காண்கிறபடி, இவ்வுலக ஆஸ்தியும், சவுக்கியமும் உண்டாயிருந்தாலும் ஆபிரகாமுடைய நோக்கம் எல்லாம் பரம தேசத்தை குறித்தே காணப்பட்டது. இவ்வாறாக பரலோக வாழ்வை குறித்த ஒரு விருப்பத்தோடு இருப்பவர்களுக்கு, நிச்சயமாகவே நித்திய வாழ்வை தேவன் தந்தருளுவார்.**

**மேலும்** பிலி 3:9-11 **வசனங்களில்** "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்." **என்று கூறியிருக்கிறபடி, அப். பவுல் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு உயிர்தெழுதலில் பங்கடைய (நித்திய ஜீவனை பெற) அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டு, குப்பையுமாக எண்ணுகிறார்.**

**இப்படிப்பட்ட மனநிலையே நம் ஒவ்வொருவரிலும் காணப்படவேண்டும். அப்பொழுது மட்டுமே நம் வாழ்வு நிறைவுள்ளதாய் காணப்படும். தேவன் தாமே இப்படிப்பட்ட வாழ்க்கையை நம் ஒவ்வொருவருக்கும் அருள்வாராக. ஆமென், அல்லேலூயா.**

## 44. என்னை நினைவுகூரும்படி

### என்னை நினைவுகூரும்படி (லூக் 22:19)




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமக்காக நம்மிடம் கேட்ட காரியம் ஒன்று உண்டானால் அது மேற்கூறப்பட்டபடி அவரை நினைவுகூரும்படி அவர் சொன்னதே ஆகும். ஆண்டவர் சுவிசேஷத்தை அறிவிக்க, சீஷராக்க என பல கட்டளைகளை நமக்கு கொடுத்திருந்தாலும், அவர் தமக்காக நம்மிடம் கேட்ட ஒரு காரியம் உண்டானால அது அவரை நினைவுகூரும்படி சொன்னதே ஆகும்.

சகலத்தையும் படைத்து ஆளும் தேவனுக்கு நாம் கொடுக்க கூடிய / செய்யகூடிய ஒரே காரியம் அவரை நினைவுகூருவது ஆகும். நம்மோடு மிக நெருக்கமாக, ஐக்கியமாக இருப்போரை பற்றி மட்டுமே நம்முடைய இருதயம் / சிந்தை நினைவில் வைத்திருக்கும். எப்பொழுதோ ஒரு முறை பார்ப்பவரை, அவரை காணும்போது மட்டும்தான் அவரை பற்றி எண்ணி அவரை விசாரிப்போம். ஆனால் நமக்கு அன்புக்குரியவர்கள் பற்றிய சிந்தையோ நம்முள் எப்பொழுதும் இருக்கும். அதுபோல, ஆண்டவரோடு நமக்கு ஒரு ஐக்கியம் இருக்குமானால் அவர் படைத்து இருக்கும் இயற்கை, நம் வாழ்வில் / பிறர் வாழ்வில் நடைபெறும் அற்புத செயல்கள் ஆகிய இவை ஒவ்வொன்றை பார்க்கும்பொழுதும், தேவனுடைய கிரியையை நாம் நினைவுகூருவோம்.

ஆண்டவருக்கு பிரியமற்ற காரியத்தை செய்ய முற்படும் பொழுது, அவரை பற்றிய சிந்தை நமக்கிருக்குமானால், நம்மால் பாவம் செய்ய முடியாது. நினைவுகூருதல் என்பது ஏதோ மறந்ததை நினைவில் கொண்டு வருவதாக இல்லாமல், நம் மனதில் ஆழ பதிந்திருப்பதை ஒவ்வொரு நேரமும் நினைவுகூருவதே ஆகும். நம் மனதில்

பதிந்திருக்கும், தேவ வார்த்தைகள், அவருடைய வாக்குத்தத்தங்கள் இவை ஒவ்வொன்றையும் நினைவுகூர்ந்தால் நம் வாழ்வு செம்மையானதாய் காணப்படும். வேண்டாத சிந்தனைகள் எழாது. எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவரிடத்தில் நாம் கொண்டுள்ள அன்பின் ஆழம் நாம் அவரைப் பற்றி கொண்டுள்ள நினைவின் மூழமாகவே வெளிப்படும். நாம் அவரை பற்றிய சிந்தையுள்ளவர்களாய் இருப்பதனால், மற்ற மனிதர்கள் நம்மை காணும்பொழுது அவர்களுக்கு கிறிஸ்துவை பற்றிய சிந்தை உண்டாகும்படி நம்முடைய வாழ்வு காணப்படும்.

கிறிஸ்து நம்முள் இருக்கிறார் என்பதை பிறர் அறிய வேண்டும். நம்முடைய அகத்தில் தேவன் இருப்பாரானால், நம்முடைய புறத்தில் அது வெளிப்பட்டே தீரும். ஆண்டவருடைய பிரசன்னத்தில் இருந்த மோசேயின் முகம் பிரகாசித்தது. ஆனால் அதை காட்டிலும் அதிகமாக கிறிஸ்து தம்மை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எனவே அதைப் பற்றிய உணர்வு / நினைவு நிச்சயமாகவே பிறர் காணும் விதமாய் நம்மில் வெளிப்பட வேண்டும். ஆண்டவரைப் பற்றிய உணர்வு / நினைவு உள்ளவர்கள், நிச்சயமாகவே நித்திய வாழ்வு, இரட்சிப்பு, பாவம், உயிர்தெழுதல் ஆகிய காரியங்களை பற்றியும் உணர்வுள்ளவர்களாய் இருப்பார்கள். அவரைப் பற்றிய சிந்தையும், நினைவும் எந்த அளவிற்கு அதிகமாகிறதோ, அந்த அளவிற்கு, பூரண புருஷராகும்படி கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு ஏற்ப நாம் வளர்ச்சியடைவோம். அவரைப்பற்றிய நினைவு நாம் அவரையே சார்ந்திருக்க செய்யும். சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும், யார் என்ன பேசினாலும், யாரிடம் போவோம் ஆண்டவரே என்று பேதுரு கூறியபடி, அவரையன்றி நமக்கு வேறொரு கதியும் இருக்காது. கிறிஸ்துவை பற்றிய சிந்தை மட்டுமில்லாமல், கிறிஸ்துவின் சிந்தையே (பிலி 2:5) நம்முள் காணப்பட கர்த்தர் தாமே கிருபை செய்வாராக. ஆமென், அல்லேலூயா.

## 45. அதிகமாய் பிரயாசப்பட்டேன்




**நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல. ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது.** (1 **கொ** 15:9,10)

மேற்கண்ட வசனங்களில் பவுல் தன்னுடைய ஊழிய பாரத்தை குறித்து கூறுகிறார். அவர் மேற்கூறியபடி அப்போஸ்தலரெல்லாரிலும் பவுல் சிறியவராயிருந்தாலும், தேவனுக்காக அவருடைய ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் பிரயாசப்பட்டதினால், ஆண்டவரோடு மூன்றரை வருடம் உடன் இருந்த அப்போஸ்தலர்களை காட்டிலும் பவுலின் மூலமாய் தேவ வல்லமை அதிகமாய் வெளிப்பட்டது. இதற்கு வெளிப்படையான சான்று வேதத்தில் உள்ள பவுலின் நிருபங்களே ஆகும். அப்போஸ்தலர்களில் பிரதானமானவரான பேதுருவே **"எல்லா நிருபங்களிலும் இவைகளைக்குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்."** (2 **பேதுரு** 3:16) என்று பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ சத்தியங்களை குறித்து ஆச்சரியப்படுகிறார்.

அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் சபையை துன்ப படுத்த, பாழாக்க மிகுந்த பிரயாசத்தோடு செயல்பட்ட சவுலாகிய பவுல், **"அவனைக்**

**கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள். தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங்கொண்டாடினார்கள். சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்.“** (அப் 8:1-3), பின்பு அதே சபையை வளர்தெடுக்கும் தகப்பனாய் மாறினார் **“கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்.“** (1 கொ 4:15).

பவுல் இதை சாட்சியாக **கலா** 1:23,24 வசனங்களில் கூறியுள்ளார், **“முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே, தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்பதைமாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து, என்னைப்பற்றித் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.“**, இன்னும் தான் எவ்விதமாய் பிரயாசப்பட்டேன் என்பதை பவுலே பின்வரும் வசனங்களில் கூறுகிறார், **“அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது.“** (2 கொ 11:23-28).

ஒருவேளை பவுல் பதினோராம் மணிநேரத்தில் வேலை அமர்த்த பட்டவர்கள் போல மற்ற அப்போஸ்தலர்களுக்கு பின்பு ஊழியத்திற்கு வந்திருந்தாலும், தேவனுக்காக அவர்பட்ட பிரயாசம், மற்றவர்களை காட்டிலும் நிறைவான, மேன்னையான ஒரு ஊழியத்தை செய்யும்படியாய் அவரை ஏவியது. இப்படிப்பட்டவர்களையே தேவன் இன்றும் தேடுகிறார். தேவன் பவுலை அழைத்தபொழுது, அவர் தன்னுடையதெல்லாவற்றையும் தேவனுக்காக அர்பணித்து (கல்வி, செல்வம், பெலன்), சுவிசேஷத்திற்காக பிரயாசப்பட்டார்.

இன்றும் எத்தனையோ முகம் அறியாத தேவ பிள்ளைகள், சிறிய அளவில், ஒரு கூட்ட மக்களுக்கு என்று ஊழியம் செய்தாலும், மிகுந்த பிரயாசத்தோடு அதனை செய்கின்றனர். நாம் தேவனுக்காக செய்யும் / சாதிக்கும் காரியங்களை காட்டிலும், நமது இருதயத்தில் அவரை பற்றிய வாஞ்சை, அவருக்காய் வாழ வேண்டும் என்கிற பிரயாசம் எவ்வளவாய் இருக்கிறது என்பதையே தேவன் காண்கிறார். ஒருவேளை ஊழிய பாதையில் ஏற்ற தாழ்வுகள் வந்தாலும், அவருக்காக படுகிற பிரயாசம் ஒவ்வொரு நாளும் அதிகரிக்க வேண்டுமே ஒழிய குறையக் கூடாது.

இப்படியாக உண்மையான பிரயாசத்தோடு செய்யும் ஊழியமே ஆண்டவரால் எத்தன்னையுள்ளதென்று பரிசோதிக்கபடும் பொழுது நிலைநிற்கும், **"ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்." (1 கொ 3:12-15).** மற்றபடி, பாரமில்லாமல் எவ்வளவு பெரிய காரியத்தை / ஊழியத்தை தேவனுக்கு செய்தாலும் அதனால பலன் ஒன்றுமில்லை, எல்லாம் அக்கினியால வெந்து அழிந்துபோம். தாலந்துகள் பற்றிய உவமையில், தான் பெற்ற தாலந்தை பிரயாசத்தோடு பயன்படுத்தி பெருக செய்தவனையே ஆண்டவர் மெச்சி கொள்கிறார். அவனுக்கு இன்னும் பிற தாலந்துகளையும் கொடுக்கிறார். ஆனால் பிரயாசப்பட விரும்பாத மனுஷனையோ கடிந்து கொண்டு, அவனிடம் உள்ள தாலந்துகளை தேவன் எடுத்து போடுகிறார் **(மத் 25:14-30)**. இது நமக்கு மிகவும் எச்சரிப்பான ஒரு காரியமாகும்.

ஆனால், கவலைதரும் விதமாக இன்று உலகமெங்கிலும் செய்யப்படும் தேவ ஊழியங்கள் பல, தேவனுக்காக பிரயாசப்படுவதை விட சுய லாபங்களுக்காக, சுய பெருமைக்காக செயல்படுகின்றன. திரளான மக்கள் மத்தியில் ஊழியம் நடைபெற்றாலும், அங்கு தேவ ஊழியத்தின் மூலம் தங்கள் சுய ராஜ்யத்தை கட்டவே பலர் பிரயாசப்படுகின்றனர். இதுவே ஊழியங்களும், சபைகளும் பெருகியும் தேசத்தில் ஒரு மாற்றம் / ஏழுப்புதல் இல்லாமல் இருப்பதற்கு காரணமாகும். ஆனால் சரித்திரத்தில் தேவனுக்கு வல்லமையாய் ஊழியம் செய்த தேவபிள்ளைகள் பலர், தங்களுக்குரிய எல்லாவற்றையும் விட்டு, மொழி புரியாத, பல எதிர்ப்புகளும், இன்னல்களும், அசௌரியங்களும் நிறைந்த இடங்களுக்கு சென்று மொழியை கற்று, மக்களோடு மக்களாக பழகி, பலவித துன்பங்கள், இழப்புகளையும் சகித்து, மிகுந்த பிரயாசத்தோடு ஊழியம் செய்துள்ளனர்.

இப்படிபட்டவர்களாலேயே இந்தியா போன்ற ஆசிய நாடுகளிலும், ஆப்பிரிக்க கண்டத்திலும் சுவிசேஷம் பரவியது. டேவிட் லிவிங்ஸ்டன், சாது சுந்தர் சிங், சீகன் பால் போன்ற எண்ணற்ற தேவ ஊழியர்கள் பட்ட பிரயாசங்கள்

நம்மை மெய்சிலிர்க்க செய்யும். பவுலை போல இவர்களும் பாடுகள், எதிர்ப்புகள், வியாதிகள், இழப்புகள் என்று எல்லாவற்றையும் சந்தித்தே ஊழியம் செய்தனர். அதனால் உண்டான பலனை நாம் இன்று கண்கூடாக கண்டுகொண்டிருக்கிறோம். உதாரணமாக ஒன்றை கூற வேண்டுமானால், பல தேவ பிள்ளைகள் மிகுந்த பிரயாசத்தோடு, வேதாகம மொழிபெயர்ப்பு பணியில் ஈடுபட்டு, இரவும் பகலும் உழைத்ததினாலேயே இன்று நமது மொழியில் வேதாகமம், நம் கையில் இருக்கிறது. இவர்கள் இப்படி பிரயாசப்படாதிருந்தால் கோடிக்கணக்கான மக்களின் நிலை என்னவாக இருந்திருக்கும், சற்று சிந்தித்து பாருங்கள். மகத்தான ஊழியத்தை செய்த இவர்கள் யாவரும், தங்களை மறைத்து தேவ நாமம் மகிமைபட வேண்டும், வேத வசனம் எவ்விடமும் செல்ல வேண்டும் என்றே பிரயாசப்பட்டனர்.

ஆனால் இன்றோ இதற்கு மாறாக, தேவனுக்காக ஏதோ ஒரு சிறிய காரியத்தை செய்துவிட்டு, அதன்மூலம் தங்களை வல்லமையுள்ள மனிதர்களாக பலர் காண்ப்பிக்கின்றர். இப்படிப்பட்டவைகள் அக்கினியால் சோதிக்கப்படும் பொழுது ஒன்றுமில்லாமல் வெந்துபோம். மேலும் **"பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்."** என்று **2 தீமோ 2:6** கூறுகிறது. ஆம் உண்மையான பிரயாசத்தோடு தேவனுக்காக வாழ்கிறவர்களுக்கே தேவன் முதற் பலனான ஆசிர்வாதத்தை தருவார். **"ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே." (எபி 6:10).** எனவே ஆண்டவருக்காக உண்மையான பிரயாசத்தோடு வாழ்வோம், நிறைவான பலனை இம்மையிலும், மறுமையிலும் பெற்றுக் கொள்வோம். **"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது." (வெளி 22:12), "ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்." (வெளி 22:20)**, அல்லேலூயா.

## 46. மறவாதே

**என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே (சங் 103:2)**




மேற்கண்ட வசனத்தில் சங்கீதக்காரன், என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி என்று கூறினபின், அவர் செய்த சகல உபகாரங்களுக்காகவும் அவரை துதி என்று கூறாமல், மறவாதே என்று கூறுகிறான். ஏனெனில் ஆண்டவர் செய்த நன்மைகளுக்காக அந்நேரத்தில் அவரை துதிப்பது மிக எளிது. ஆனால் அதை என்றும் மறவாமல் இருப்பதுதான் கடினமாகும். ஆண்டவரும் நம்மிடையே இதைத்தான் எதிர்பார்க்கிறார். வேதத்தில் பல இடங்களில் ஆண்டவர் செய்த நன்மைக்காய் அவரை துதித்து பாடின மக்கள் சீக்கிரத்தில் அதை மறந்து, அவருக்கு விரோதமாய் முறுமுறுத்து பாவம் செய்தனர்.

ஆதியாகமத்தில் ஆண்டவர் நம் முற்பிதாக்களான ஆதாம், ஏவாளை உருவாக்கி, பூமியனைத்தையும் ஆளக்கடவர்கள் என்று கூறினபொழுது எல்லாம் நன்றாகவே இருந்தது **(ஆதி 1:26)**. ஆனால் தேவன் தங்களுக்கு கொடுத்த ஆளுகையை மறந்து, பிசாசின் வார்த்தைகளுக்கு செவிகொடுத்த பொழுது, பாவத்திற்குள்ளானார்கள். யாத்திராகமத்தில் இஸ்ரவேல் மக்களும் இவ்வாறே செய்தனர். எகிப்தில் எவ்வளவோ அற்புதங்களை ஆண்டவர் செய்தும், சிவந்த சமுத்திரத்தை இரண்டாக பிளந்தும், அவற்றை எல்லாம் மறந்து, சிறு சிறு காரியங்களுக்காக ஆண்டவரிடம் முறுமுறுத்தனர்.

புதிய ஏற்பாட்டின் காலத்திலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எவ்வளவோ அற்புதங்களை செய்து தம்மை வெளிப்படுத்தினார். ஐந்து அப்பம், இரண்டு மீன்களை கொண்டு ஆயிரகணக்கானோரை ஆண்டவர் போஷித்திருந்தும் **(மத் 14:15-21)**, பின்னொரு சமயத்தில் இதே போன்றதொரு

சூழ்நிலையில் **"அதற்கு அவருடைய சீஷர்கள்: இவ்வளவு திரளான ஜனங்களுக்குத் திருப்தியுண்டாகும்படி வேண்டிய அப்பங்கள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி அகப்படும் என்றார்கள்" (மத் 15:33)**, இதற்கு காரணம், ஆண்டவர் முன்பு செய்த நன்மையை / அற்புதத்தை அவர்கள் மறந்து போனார்கள். இங்கு மறதி என்பது ஏதோ மூலையில் ஏற்படும் ஞாபக மறதி அல்ல, இம்மட்டுமாய் நம்மை போஷித்து, அற்புதஞ் செய்து வழிநடத்தி வந்த தேவன், இனிமேலும் நடத்துவார் என்ற உணர்வு இல்லாததே காரணமாகும். நம் வாழ்விலும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றன.

கற்பாறையான இடத்தில் விதைக்கப்பட்ட விதையை போல உபத்திரவமும், துன்பமும் வாழ்வில் உண்டானவுடனே, ஆண்டவர் செய்த நன்மைகள் யாவும் மறந்துபோகின்றன **(மத் 13:20,21)**. இன்றும் சில நேரங்களில், முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்ட விதையை போல உலக கவலையும், ஐசுவரியத்தின் மயக்கமும் உண்டானவுடனே **(மத் 13:22)**, ஆண்டவரோடு உள்ள ஐக்கியம், அவருடைய வார்த்தைகள், வாக்குத்தத்தங்கள் யாவும் மறந்து போகிறது. இதனால் உபத்திரவ நேரங்களில் நிலை நிற்க முடியாதபடி சோர்ந்து போகிறோம், பாவ சோதனையில் வெற்றி பெற முடியாமல் வீழ்ந்து போகிறோம்.

**2 பேதுரு 1:9** கூறுகிறது **"அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான்"**, ஆம் தேவன் நம்மை மன்னித்து மீட்டெடுத்த சூழ்நிலையை, தமது கிருபையை நமக்கு பாராட்டி, அந்தகாரத்தில் இருந்து நம்மை ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு நடத்தி வந்த **(1 பேதுரு 2:9)** பாதைகளை நாம் மறக்க கூடாது. அப்பொழுது மட்டுமே பாவ சோதனைகளை மேற்கொண்டு, உபத்திரவ நேரங்களில் நிலைநின்று அவருடைய புண்ணியங்களை மற்றவர்களுக்கு அறிவிக்க முடியும். தேவன் அளித்த நன்மைகளை மறக்காதவர்களே அவருக்கு சாட்சிகளாய் நிற்க முடியும், அவருக்கு ஊழியம் செய்ய முடியும். தேவ ஆசிர்வாதங்களை, வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்க முடியும். என் ஆத்துமாவே, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே, ஆமென், அல்லேலூயா.

## 47. காணாதிருந்தும்

**அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள். (1 பேதுரு 1:8,9)**




மேற்கண்ட வசனங்கள், நம்முடைய வாழ்க்கையின் யதார்த்த நிலையை விளக்குகிறது. நாம் தேவனை ஆவியில் அவர் நம்மோடிருக்கிறார் என்ற உணர்வினை பெற்றிருக்கிறோமே தவிர, நம்மில் ஒருவரும் தேவனை நமது மாம்ச கண்களால் கண்டதில்லை. நம்மை சுற்றி உள்ள மக்களில் அநேகர், காணக்கூடிய பணம், பொருள், அதிகாரம் ஆகிய இவைகளை சார்ந்து வாழ்ந்து கொண்டிருக்கையில், நாமோ காணக்கூடாத இறைவனை சார்ந்தே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவ்வுலக வாழ்க்கைக்காக, இவ்வுலக பொருள்களை நம்பி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மத்தியில், நித்திய வாழ்க்கைக்காக, பரலோக தேவனை சார்ந்து வாழ்கிறோம்.

இது இவ்வுலக மக்களின் பார்வைக்கு பயித்தியக்காரத்தனமாயிருக்கிறது, ஆனால் நமக்கோ, இதுவே நம் இவ்வுலக வாழ்க்கையின் நோக்கமாயிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார் **(யோ 20:29)**. மேலும் **ரோ 8:24,25** கூறுகிறது, **"அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்."** என்று. மேலும் **எபி 11:1,2** வசனங்கள் கூறுகிறது, **"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சிபெற்றார்கள்."** என்று. மேலும் **எபி 11:27** கூறுகிறது, **"விசுவாசத்தினாலே அவன் (மோசே) அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப்**

**பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்.**“, ஆம் காணக்கூடாத இறைவனை காண விசுவாச கண்கள் நமக்கு தேவை.

சற்று யோசித்து பாருங்கள், இறைவன் மாம்சமான யாவரும், தங்கள் மாம்ச கண்களால் காணக்கூடியவராய் ஒரு நொடிபொழுது தோன்றுவாராயின், உலக மக்கள் அனைவரும் அவர் முன் முகங்குப்புற விழுந்து பணிவர். ஆனால் அவரோ, விசுவாச கண்களால் காணக்கூடியவர்களுக்கே, தம்மை வெளிப்படுத்துகிறார். அதனாலேயே **யாக் 2:5** கூறுகிறது, **“என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா?“** என்று.

உண்ண உணவும், உடுத்த உடையும், தங்கியிருக்க சரியான இடமும் இல்லாமல் சாலையோரங்களில் வாழும் எத்தனையோ மக்களை நாம் தினந்தோறும் காண்கிறோம். நாம் ஆடம்பரத்திற்காகவும், களியாட்டத்திற்காகவும் செலவழிக்கும் பணம், அவர்களுடைய அநேக நாட்களின் தேவைகளை சந்திக்க போதுமானது. நம்முடைய வருமானத்தில் சிறிது தோய்வு ஏற்பட்டாலும் கலங்கும் நாம், அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாதிருந்தும், சார்ந்து கொள்ள இவ்வுலகில் எதுவும் இல்லாதிருந்தும், தேவனை சார்ந்து மகிழ்ச்சியோடு ஜீவிப்பதால், அவர்களையே விசுவாசத்தில் ஐசுவரியவான்களாக தேவன் காண்கிறார். ஆம் எல்லாம் வாழ்க்கையில் சாதகமாய் நடப்பதை கண்டு மகிழ்ச்சியோடு, நம்பிக்கையோடு இருப்பதை காட்டிலும், விசுவாசிக்கிறதற்கு எந்த சூழலும் இல்லாத போதும், விசுவாச கண்களால் தேவனையே நோக்கி பார்த்து வாழ்ந்த ஆபிரகாமை போல, யோசேப்பை போல வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இவ்வாறாக அவரை காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு, சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் **(1 பேதுரு 1:8, ரோ 8:28)**. எனவே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்பதெல்லாம், பெரிய பக்தி செயல்கள் அல்ல, அவர் நம்மோடு இருக்கிறார், நம் தேவைகளை அறிந்திருக்கிறார், நம்மை போஷித்து பாதுகாக்க வல்லவர் என்ற அறிவோடு, நம்மை குறித்த அவருடைய திட்டத்தை விசுவாச கண்களில் கண்டு வாழவே எதிர்பார்க்கிறார். தேவன் தாமே அப்படிப்பட்ட விசுவாச வாழ்க்கையை வாழ நம் ஒவ்வொருவரையும் பெலப்படுத்துவாராக, ஆமென், அல்லேலூயா.

# 48. காலங்கள் கடந்து போனாலும்




நம் வாழ்நாட்கள் வேகமாய் கடந்து போய் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். நாட்களும், வருடங்களும் வேகமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் 2000ஆம் ஆண்டு பிறப்பதையும், ஆண்டவர் வருகையையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நாட்கள் உண்டு. ஆனால் 2000ஆம் ஆண்டு பிறந்தே இப்பொழுது 17 வருடங்கள் ஓடி விட்டது. நம் வாழ்க்கை சூழலிலும் பல்வேறு மாற்றங்கள் நம்மை அறியாமலேயே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவற்றில் சில நன்மைக்குரிய, மகிழ்ச்சிக்குரிய மாற்றங்கள் ஆகும். உதாரணமாக, சில வருடங்களுக்கு முன்பு வரை நம் படிப்பு, வேலை என்று இவற்றை சிந்தித்த நாம், இன்று நம் பிள்ளைகளின் படிப்பு, வாழ்வை குறித்து சிந்தித்து கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் கடந்த காலத்தில் வாழ்வில் உண்டான சில காரியங்கள் / மாற்றங்கள் நம்மை நிலைகுலைய செய்துள்ளன. உதாரணமாக, வியாதி படுக்கை, ஊழிய பாதையிலும், வாழ்க்கையிலும் எந்தவித பலனும் / முன்னேற்றமும் இல்லாமல் கடந்து சென்ற காலங்கள், இன்னும் சில இழப்புகளை சந்தித்த நேரங்கள் நம்மை இன்றும் வேதனை அடைய செய்து கொண்டிருக்கின்றன.

ஒருபுறம் ஆண்டவர் நம் வாழ்க்கையில் வைத்திருக்கும் நோக்கத்தை நோக்கி உற்சாகமாய் நாம் ஓடிக்கொண்டிருந்தாலும், மறுபுறம் காலங்கள்

கடந்தும் திராத வியாதிகள், பிரச்சனைகள் நம்மை சோர்வுள்ளாக்குகிறது. என்றுதான் இந்த பிரச்சனைக்கு முடிவு வரும், நாம் காலம் முழுவதும் இப்பிரச்சனையோடு தான் வாழவேண்டுமா என்று அநேக நேரங்களில் நாம் நம்மில் தவிக்கிறோம். வேதாகமத்தில் ஆண்டவர் ஆபிரகாமை அழைத்தது முதல் ஈசாக்கின் பிறப்பு வரையிலும், யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டது முதல் எகிப்தில் உயர்த்தப்பட்டது வரையிலும், மோசே எகிப்தை விட்டு ஓடி சென்று மீண்டும் ஆண்டவர் அவரை அழைக்கும் வரைக்கும் ஆகிய இந்த இடைப்பட்ட காலத்தில் இந்த தேவ மனிதர்களும் சரீர பிரகாரமாகவும், மனதிலும் பல்வேறு இன்னல்களை அநுபவித்தனர். ஆண்டவர் வாக்குத்தத்தம் கொடுத்தும், காலங்கள் கடந்து போனதால், காத்திருக்க மனமில்லாத சாராளினிமித்தம் ஆபிரகாமுக்கு தேவையில்லாத சஞ்சலங்கள் ஏற்பட்டது. இது போல நம் வாழ்விலும் வியாதிபடுக்கை, பிரச்சனைகள் ஆகியவை காலங்கள் கடந்தும் மாறாமல் இருக்கும்பொழுது, மன அழுத்ததாலும், மற்ற மனிதர்கள், சூழ்நிலைகள் கொடுக்கும் அழுத்ததாலும் நாம் சோர்ந்து போகிறோம்.

ஆகிலும் தேவன் இறுதியில் அவரவர்களுக்கு வேண்டிய காரியங்களை தமக்கு சித்தமான நேரத்தில் வாய்க்கசெய்தார். வேதனைகளை கடந்து வந்தாலும் முடிவு மகிமையாகவே இருந்தது. இங்கு நாம் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு சத்தியம் என்னவெனில், 24 மணிநேர நாட்கள், மற்றும் 365 நாட்கள் கொண்ட வருடங்கள் ஆகிய இக்காலத்தின் அளவிற்குள்ளாய் நாம்தான் இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் தேவனோ காலத்திற்கு அப்பாற்ப்பட்டவர். **“ பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம்போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம்” (2 பேதுரு 3:8)**. எனவே காலத்திற்கு / நேரத்திற்கு உட்பட்டு வாழ்கிற நாம்தான் காலங்களும் / நேரங்களும் கடந்து செல்லுகையில் குறிப்பிட்ட காரியத்தில் / பிரச்சனையில் மாற்றம் இல்லையே என்று எண்ணி தவித்து போகிறோம். ஆனால் ஆண்டவர் முக்காலத்தையும் அறிந்தவர், முக்காலங்களிலும் ஒரே நேரத்தில் செயல்பட கூடியவர். அவர் எக்கால சூழ்நிலையையும், எக்காலத்திற்கும் ஏற்றவாறு மாற்றி அமைக்க கூடியவர். உதாரணமாக, இரண்டு வருடத்திற்கு முன்பாக யோசேப்பு பானபாத்திரக்காரரின் தலைவனுக்கு செய்த நன்மையை அவனுக்கு தக்க நேரத்தில் ஞாபகப்படுத்தி **(ஆதி 41:9)**, அதின்மூலம் ஆண்டவர் யோசேப்பின் வாழ்க்கையில் கிரியை செய்தார்.

அதேபோல் எதிர்காலத்தில் நாம் வாழ்வில் சந்திக்க இருக்கும் சூழ்நிலைகளுக்காகவும், ஆண்டவர் இப்பொழுதே நம் வாழ்வில் சில பயிற்சிகளை நாம் அறியாமலேயே நமக்கு கொடுக்கிறார். உதாரணமாக மோசே தன்னுடைய இறுதி 40 வருட காலத்தில் செய்ய வேண்டிய ஊழியத்திற்காக அவருடைய முதல் 40 வருட காலத்தை தேவன் பயன்படுத்தினார். எனவே காலங்கள் கடந்து போனாலும், இல்லையேல் காலமே முடிந்துபோய்விட்டது இனி எதுவும் செய்ய இயலாது என்ற நிலை வந்தாலும், அங்கும் தேவன் கிரியை செய்ய வல்லவராயிருக்கிறார். 12 வருட உதிரபோக்கினால் பாடுப்பட்டாலும் **(மாற் 5:25)**, 18 வருட கூனியாய் இருந்தாலும் **(லூக் 13:11)**, 38 வருடமாய் பெதஸ்தா குளத்தண்டையில்

வியாதிப்பட்டிருந்தாலும் **(யோ 5:5)**, பிறவியிலேயே பார்வையற்றவராய் இருந்தாலும் **(யோ 9:1)**, மரித்து அடக்கமபண்ணப்பட்டு நாளுநாளானாலும் **(யோ 11:39)**, ஆண்டவருக்கு கிரியை செய்வதில் எந்தவித வித்தியாசமும் இல்லை. ஆண்டவராகிய இயேசு இருந்திருந்தால் லாசரு மரியாமல் இருந்திருப்பானே என்று அவனுடைய சகோதரிகளும், மற்றவர்களும் சொன்னாலும் **(யோ 11:21,32,37)**, ஆண்டவரோ எக்காலத்திலும், எவ்விடத்தில் இருந்தும் ஒரே நேரத்தில் கிரியை செய்ய வல்லவராயிருக்கிறார்..

நம் விண்ணப்பங்கள் / வேண்டுதல்களை கேட்டு நம்மோடு இடைபடும் அதே நேரத்தில், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள ஒருவரோடும் அதே நேரத்தில் அவரால் இடைபட முடியும். இது நம்முடைய புரிந்து கொள்ளும் திறனிற்கு அப்பாற்ப்பட்ட அவருடைய தெய்வீக சுபாவமாகும். நம்முடைய சிந்தனை, செயல் யாவும், ஒரு அளவிற்குட்பட்டது. ஆனால் ஆண்டவரோ அவற்றிற்க்கு அப்பாறப்பட்டு கிரியை செய்கிறவராய் இருக்கிறார். எனவே காலங்கள் கடந்து போனாலும், காலத்தை கடந்த ஆண்டவரையே நம்பி நாம் வாழ்வோமானால் நிச்சயமாக முடிவு உண்டு, நம் நம்பிக்கை வீண் போகாது **(நீதி 23:18)**. ஆமென், அல்லேலூயா.

# 49. நல்ல போர்ச்சேவகன்

**நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி**
**(2 தீமோ 2:3)**




இன்று தேவனுடைய சபையின் அங்கங்களாய், அவருடைய மேய்ச்சலின் ஆடுகளாய் கோடானுகோடி விசுவாசிகள் இப்பூமியில் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஆண்டவரால் அருமையாக போஷிக்கப்பட்டு வழிநடத்தப்படுகின்றனர். ஆனால் இவர்களில் சிலரே கிறிஸ்துவுக்காக ஆவிக்குரிய யுத்தம் செய்யும் போர் வீரர்களாய் எழும்பி, கிறிஸ்துவின் இராஜ்யம் அகிலமெங்கிலும் பரவ போராடுகின்றனர். சுவிசேஷ ஊழியத்தின் மூலமாகவோ, சபை ஊழியத்தின் மூலகமாகவோ மற்றும் ஏதோ ஒரு விதத்தில் கிறிஸ்துவுக்காக எதையாவது செய்து, பிசாசின் இராஜ்யத்தை அழித்து, அவனுடைய பிடியில் சிக்கி இருப்போரை விடுவித்து அவர்களை கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குள்ளாய் கொண்டு வர வேண்டும் என்று முனைப்புடன் செயல்படுகின்றனர்.

இப்படிப்பட்டவர்களே மேற்க்கண்ட வசனத்தில் கூறியிருப்பது போல, கிறிஸ்துவுக்காக தீங்கநுபவிக்கவும் தயங்காதவர்கள். இவ்வுலகத்தில் தங்களுக்குரிய அனைத்தையும் (தங்கள் ஜீவன் உள்பட) கிறிஸ்துவுக்காக அர்பணித்து, அவருடைய கட்டளையை நிறைவேற்றுபவர்கள் (மத் 28:19,20). இப்படிப்பட்டவர்களுக்குரிய மேன்மையை ஆண்டவரே பல இடங்களில் கூறியுள்ளார். **"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"** (யோ 12:26), (மாற்கு 10:28-30).

பழைய ஏற்பாட்டு காலத்தில், தேவதூதர்கள் திரித்துவ தேவனின் சேனை வீரர்களாய், அவருடைய செய்தியை அறிவிப்பவர்களாய் காணப்பட்டனர் (2 இரா 6:16,17), (யோசுவா 5:14). புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்து பிறப்பின்

நற்செய்தி தேவதூதர்கள் மூலமாகவே கொடுக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்கள் தேவ ஜனங்களாய், தேவனுடைய இராஜ்யத்தின் பிரஜைகளாய் இருந்தனரே தவிர, அவருக்காக போராடும் போர் வீரர்களாய் காணப்படவில்லை.

ஆனால் இன்றோ நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அழைப்பு அவருடைய இராஜ்யத்தின் பிரஜைகளாய் மாத்திரமல்ல, அவருடைய இராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காய், சத்துருவின் இராஜ்யத்தை அழித்து அவனுடைய பிடியில் இருக்கும் மக்களை விடுவிக்கும் போர்வீரர்களாய் வாழவே கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார். அதே நேரத்தில் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் போர்வீரர்களாய் இருப்பவர்கள், கிறிஸ்துவின் இராஜ்யத்தின் பிரஜைகளாய் இருப்பவர்களை பாதுகாக்க வேண்டிய கடமையும் உடையவர்கள். இராஜாதி இராஜாவாம் கிறிஸ்துவே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி சிலரை மேய்ப்பர்களாக / போதகர்களாக ஏற்படுத்தியுள்ளார், இவர்களுடைய ஊழியம் இராஜ்யத்தின் பிரஜைகளை போஷித்து பாதுகாப்பதாகும். அதே நேரத்தில் சிலரை சுவிசேஷகர்களாக / தீர்க்கதரிசிகளாக ஏற்படுத்தியுள்ளார். இவர்களுடைய ஊழியம், சத்துருவின் கோட்டையை தகர்த்து சிறைப்பட்டவர்களை விடுவிப்பதாகும்.

எனவே தேவனுடைய இராஜ்யம் விரிவடைவதற்கு, ஏழுப்புதல் உண்டாவதற்கு நாம் அனைவரும் கிறிஸ்து இயேசுவின் சேனை வீரர்களாய் புறப்பட வேண்டியது அவசியம். ஆனால் இன்றோ, தேவனுடைய இராஜ்யத்தின் பிரஜைகளாய் சமாதானத்தோடு, ஆசிர்வாதத்தோடு வாழவே பலர் விரும்புகின்றனர். கிறிஸ்துவுக்காக சத்துருவை எதிர்த்து போராடுபவர்கள் வெகு சிலரே. அதிலும் சிலர் **2 தீமோ 2:3** கூறப்பட்டுள்ளபடி போராட்டத்தினால் ஏற்படும் எதிர்ப்புகளை காணும்பொழுது போர்களத்தையே விட்டு ஓடிவிடுகின்றனர். இன்னும் சிலர் நன்றாய் போரிட்டு கொண்டிருக்கும் மற்றவரை சோர்ந்து போகசெய்கின்றனர். இன்னும் சிலர் சத்துருவினால் வஞ்சிக்கப்பட்டு (உலகத்தால் கறைப்பட்டு) கிறிஸ்துவின் போர்வீரர்களுக்கு எதிராகவே போரிட்டு ஆண்டவருக்கு துரோகிகளாய் மாறிவிடுகின்றனர். விரோதிகளை காட்டிலும், துரோகிகளாய் காணப்படும் இப்படிப்பட்ட யூதாஸ் காரியோத்து போன்றவர்களாலேயே தேவனுடைய இராஜ்யம விரிவடைய முடியாமல் போகிறது. இவர்கள் தேவனுக்கு அல்ல, உலக பொருளுக்கே ஊழியம் செய்து, தேவ பக்தியின் வேஷத்தை தரித்து கொள்பவர்கள். தங்கள் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவர்கள். கிறிஸ்துவின் நாமம் தூஷிக்கபட இப்படிப்பட்டவர்களே காரணம்.

எனவே கிறிஸ்துவுக்காக நல்ல போராட்டத்தை போராடும், நல்ல போர்ச்சேவகராய், நாம் ஒவ்வொருவரும் ஏழும்ப வேண்டியது அவசியமாகும். முழுநேர ஊழியத்தை செய்யமுடியாவிட்டாலும், ஏதாவது ஒரு செயலை செய்துகொண்டே இருக்க வேண்டும். நம் மூலமாக ஒரு சிலராவது ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவை அறிந்து கொள்ள காரணமாய் இருக்க வேண்டும். போர்களத்தில் நாம் போராடும் பொழுது மரணமே ஏற்பட்டாலும், இறுதி வெற்றி நமது இராஜாவுக்கே உரியது. அப்படி நாம் வாழும்பொழுது, இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் நமக்கு கிடைக்கும்

பிரதிபலன் பெரிதாயிருக்கும். இயேசுவின் வீரனாகிய நானும் அப்படிப்பட்ட ஒரு சிறு ஊழியத்தையே செய்துவருகிறேன். இராஜாதி இராஜவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்கே மகிமை உண்டாவதாக, ஆமென், அல்லேலூயா.

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொ 15:57).**

## 50. அவாந்தரவெளி

**அவர் அவாந்தரவெளியைத் தண்ணீர்த் தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றுகளாகவும் மாற்றி (சங் 107:35)**




நம்முடைய வாழ்க்கை பயணத்தில் அவாந்தவெளியைப் போன்ற சில பாதைகளை நாம் கடந்து போக வேண்டியிருக்கிறது. நம்முடைய அத்தியாவசிய தேவைகள் கூட சந்திக்க படமுடியாத சூழ்நிலைகளை நாம் கடந்துபோகிறோம். எந்த வகையிலும் ஆதரவோ, ஆறுதலோ, நம்பிக்கையோ இல்லாத சூழ்நிலையில் தனித்து விடப்பட்ட அவாந்தர பாதையில் நாம் பயணிக்க நேரிடுகிறது. கண்ணிற்க்கு எட்டிய தூரம் வரையில் எந்த உதவியும் இருப்பதாக தெரிவதில்லை.

இந்த அவாந்தவெளி பயணம் இன்னும் எவ்வளவுகாலம் தொடரும் என்றும் நம்மால் அறிந்துகொள்ளமுடியவில்லை. சில நேரங்களில் இந்த அவாந்தர பயணத்தில் நம்மோடு, நமக்கு பிரியமானவர்களும் சேர்ந்து பயணிக்கும்பொழுது அவர்கள் படுகிற துன்பமும் நமக்கு வேதனையை உண்டாக்குகிறது. நம்மையும் காப்பாற்ற முடியாமல், நம்மை சேர்ந்தவர்களையும் காப்பாற்ற முடியாமல் நாம் தவிக்கிறோம். இதன் உச்சகட்டமாக, இனி எந்த திசையில் பயணிப்பது என்றும், அடுத்து என்ன செய்வது என்றும் தெரியாமல் நாம் நிற்கின்ற இடத்தில் அப்படியே திகைத்து நிற்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் தவிக்கும் பொழுது, தேவனே நான் என்ன செய்வது என்று அவரை நோக்கி கூப்பிடும் பொழுது, தேவன் ஒரு அற்புதமான காரியத்தை செய்கிறார்.

நாம் அவாந்தர பாதையாய் எந்த சூழ்நிலையை நினைக்கிறோமோ, அதிலிருந்து நம்மை வெளியே கொண்டு வராமல், அந்த அவாந்தரவெளியையே தண்ணீர்த் தடாகமாக அவர் மாற்றி விடுகிறார். எந்த இடத்தில் இருப்பது நமக்கு வேதனையை கொடுத்ததோ அந்த இடத்தையே ஆசிர்வாதமான ஒன்றாக தேவன் மாற்றி போடுகிறார். எந்த

காரியத்தை குறித்து நாம் வேதனைப்பட்டு கலங்கினோமோ அதையே நமக்கு ஆசிர்வாதமாக தேவன் மாற்றிபோடுகிறார். எந்த இடத்தில் நாம் தலை கவிழ்ந்து நின்றோமோ, இரக்கத்திற்க்காக கெஞ்சினோமோ அதே இடத்தில் நாம் தலை நிமிர்ந்து நிற்கும்படியாய், பிறருக்கு இரக்கம் பாராட்டும் படியாய் தேவன் சூழ்நிலைகளை மாற்றி போடுகிறார்.

எந்த வியாதிபடுக்கை நம்மை நிலைகுலைய செய்ததோ, அதே வியாதிபடுக்கையிலிருந்து நம்மை விடுவித்து ஜீவனுள்ள சாட்சிகளாய் நிறுத்துகிறார். மோசேயின் வாழ்வில் இதுவே நடந்தது. எந்த பார்வோன் மோசேயை கொல்ல நினைத்தானோ, அதே பார்வோன் அரண்மனையில் மோசே வளரும்படியாய் தேவன் கிரியை செய்தார். எந்த எகிப்திற்கு யோசேப்பு அடிமையாய் விற்கப்பட்டு போனானோ, எந்த எகிப்தில் அநியாயமாய் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் தவித்தானோ, எல்லாராலும் மறக்கப்பட்டு அவாந்தவெளி போல தன் நாட்களை கடத்திக்கொண்டு இருந்தானோ, அதே எகிப்தில் அவன் உயர்த்தப்பட்டான். காரணம் கர்த்தர் யோசேப்போடே இருந்தார்.

இன்றும் இப்படிப்பட்ட பாதைகளில் கடந்து செல்லும் நமக்கும் இருக்கும் ஒரே நம்பிக்கை அவாந்தரவெளியை போன்ற சூழ்நிலையாக இருந்தாலும், கர்த்தர் நம்மோடிருக்கிறார். எனவே அவாந்தவெளியில் இருந்து வேறொரு இடத்திற்கு மாற்றாமல், அவாந்தரவெளியையே தேவன் தண்ணீர்த்தடாகமாக மாற்றி போடுகிறார். எனவே தேவனை சார்ந்து வாழ்க்கையில் பயணிக்கும் நாம், கடந்த செல்கின்ற பாதை எதுவானாலும், அதன் எல்லாவற்றின் மத்தியிலும் தேவன் நம்மோடிருக்கிறார் என்ற நிச்சயம் மட்டும் நமக்கு இருந்தால் அது போதும். தேவன் ஏற்ற காலத்தில் நிச்சயமாக அதை ஆசிர்வாதமாக மாற்றி போடுவார். **“அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்” (ரோ 8:28).** ஆமென் அல்லேலூயா.

# 51. அவரே இராஜா




இன்று உலகம் முழுவதும் ஒரு புறம் அறிவியல் வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும், அதீநவீன கண்டுபிடிப்புகளும், மக்களுடைய வாழ்க்கை தரத்தை பெரும் அளவிற்கு முன்னேற செய்துள்ளது. குறிப்பாக கடந்த 50 வருடத்திற்குள் மிகப்பெரிய மாற்றத்தை மனித சமுதாயம் சந்தித்திருக்கிறது. இன்று நாம் உலகின் எந்த மூலையில் இருப்பவரிடத்திற்கும் உடனடியாக தொடர்பு கொள்ள முடியும், வெவ்வேறு இடத்தில் இருந்தாலும் ஒன்றிணைந்து ஒரு காரியத்தை தொழில்நுட்ப வசதியோடு செய்யமுடியும். விண்வெளி ஆராய்ச்சி, மருத்துவம் போன்றவற்றில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்ப்பட்டுள்ளது. எனவே உலகத்தில் ஏதோ ஒரு மூலையில் இருந்தாலும், உலக முழுவதும் தன் கையில் இருக்கும் சிறு ஸ்மார்ட் போனில் இருப்பதாக மனிதன் உணர்கிறான்.

ஒருபுறம் இவையாவும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியை காட்டினாலும், முன்பு இருந்த கட்டுக்கோப்பான மனித சமுதாயத்தையோ, பண்பாட்டையோ இன்று காணமுடியவில்லை. இதற்கு சிறந்த உதாரணம் நம் இந்திய நாடேயாகும். இளைய சமுதாயத்தின் கல்வி தரமும், வாழ்க்கை தரமும் உயர்ந்திருந்தாலும், வாழ்க்கையை குறித்த உண்மையான அர்த்தத்தை மறந்துவிட்டு மனம்போல் ஒருநாள் வாழ்வை இன்பமென்று எண்ணி வாழும் வாழ்க்கைநிலை உள்ளது. எல்லாருக்கும் எல்லா சுதந்திரமும் உண்டு, யாரும் யாருக்கும் அடிமையில்லை என்பதை போன்ற கருத்து பரவி வந்தாலும், சத்துருவாகிய பிசாசானவன் சில மனுஷீக அதிகாரங்கள் மூலமாக, அரசாங்கங்கள் மூலமாக மனிதரை அடிமைபடுத்த நினைக்கிறான், மனிதர்களை தேவனை விட்டு திருப்பி, அவர்களுக்கு ஆண்டவர் தேவையில்லை என்றோ அல்லது முக்கியமானவர் அல்ல என்றோ போதித்து, ஆண்டவரை காட்டிலும் தேவையான காரியங்கள் உள்ளது என்றும் அதுவே வாழ்க்கைக்கு போதுமானது என்றும் போதிக்கிறான்.

உதாரணமாக, வேதம் வாசிக்காமல், ஜெபிக்காமல், தேவ ஐக்கியம் இல்லாமல் இருப்பதை பலர் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்வதில்லை, ஆனால் அவர்களால் செல்போன் இல்லாமல், அதின் மூலம் மற்ற மனிதரோடு கிடைக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கமுடிவதில்லை. மனிதர்களின் வாழ்க்கையில் சில காரியங்களை தந்திரமாக கொண்டு வந்து, அதற்கு அவர்களை பழக்கப்படுத்தி, பிறகு அடிமைப்படுத்தி, இறுதியில் உன் வாழ்க்கைக்கு தேவன் வேண்டுமா அல்லது இவ்வுலக பொருள் வேண்டுமா என்பதை போன்ற நிர்பந்தமான நிலைமைக்கு மனிதர்களை தள்ளிவிடுகிறான். இதனால் தேவனை பற்றிய சிந்தையோ, பரிசுத்தம், ஒழுக்கம், உண்மை போன்ற காரியங்களையோ மனிதர்கள் பெரியதாக எடுத்து கொள்வதில்லை.

சில பொருட்களை கொண்டு இயங்கும் இயந்திரம்போல் மனிதவாழ்வு மாற்றப்பட்டுவிட்டது. இதனை சத்துரு சில மனித அதிகாரங்கள் மூலமாகவே செய்கிறான். பிசாசின் நயவஞ்சகத்தினால், அவனால் ஏவப்படும் மனிதர்கள் செய்யும் செயலினால் பலர் நரகத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றனர். மீட்கப்பட்ட மக்களும் இப்படிப்பட்ட நயவஞ்சக வலையில் வீழ்ந்து போகின்றனர். நம் இந்திய தேசத்திலும், நாட்டின் பாதுகாப்பு என்ற போர்வையில் ஒவ்வொரு மனிதரும் அரசாங்கத்தில் உள்ள சில தனி மனிதர்களின் கட்டுபாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு கண்காணிக்கப்படுகின்றனர். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் கூறியிருப்பது போல எதை வாங்கினாலும், விற்றாலும் அல்லது வேறு எந்தவொரு செயலை செய்தாலும் அவையாவும் கண்காணிக்கப்படுகிறது **(வெளி 13:16,17)**.

ஒரு புறத்தில் ஊழலை ஒழிக்க, வெளிப்படை தன்மை இருக்க இவை எல்லாம் செய்யப்படுகிறது என்று கூறப்பட்டாலும், இவையாவும் இனி வாழ்வின் ஒவ்வொரு காரியத்திற்கும் இறைவனை நம்பி அல்ல, எங்களை நம்பியே நீ இருக்கிறாய் என்ற ஒரு அதி பயங்கரமான சூழலே உருவாகிகொண்டிருக்கிறது. சில மனிதர்களாகிய நாங்கள் நினைத்தால் நீ ஒருவேளை உணவை கூட உண்ணமுடியாதபடி உன் நிலைமையை மாற்றமுடியும் என்ற சூழ்நிலையே உருவாகிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட தனி மனிதர்கள் சக மனிதர்களை அடிமைப்படுத்தி ஆள நினைக்கின்றனர். அன்று நேபுகாத்நேச்சார் பொற்சிலையை செய்து அனைவரும் பணிந்துகொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டது போல், இன்று கோடிக்கணக்கான மக்களை சில மனுஷீக அதிகாரங்கள் அடிமைப்படுத்த நினைக்கின்றன. இவை யாவும் பிசாசின் ராஜ்யத்தினால் ஏற்படுத்தப்பட்ட சிறு இராஜாக்களை போல மனுஷர் மேல் துரைத்தனம் பண்ணுகின்றன.

இன்று நமது இந்திய தேசத்திலும் உள்ள பல குழப்பமான சூழ்நிலைகளுக்கு இப்படிப்பட்ட காரியங்களே காரணமாகும். இவற்றை எல்லாம் ஆண்டவர் அமைதியாக பார்த்துக்கொண்டு தான் இருக்கிறார், ஏனெனில் அந்திகிறிஸ்துவின் காலத்திற்கு உலகத்தை ஆயத்தப்படுத்த அவனால் ஏவப்பட்ட இப்படிப்பட்ட மனுஷீக வல்லமைகள் மிக தந்திரமாக கிரியை செய்துகொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு தேவபிள்ளைக்கு, பரலோக

இராஜ்யத்தின் பிரஜைக்கு ஆண்டவரே என்றென்றும் இராஜாவாக இருக்கிறார். ஒரு தேவபிள்ளையின் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு காரியமும் தேவ சித்தத்திற்கும், திட்டத்திற்கும் உட்பட்டே நடைபெறும். ஆண்டவரின் அதிகாரத்திற்கு உட்பட்டே மனித அதிகாரங்களுக்கு கீழ்படிவரே தவிர, ஒரு போதும் அதைவிட்டு வெளியே செல்லமாட்டார்கள். ஏனெனில் அவரே மெய்யான கர்த்தாவும், இராஜாதி இராஜாவுமாய் இருக்கிறவர். இது சத்துருவாகிய பிசாசானவனுக்கும் அவனால் ஏவப்படும் மனிதர்களுக்கும் தெரியும். ஆனாலும் தங்களுக்கு காலம் இருக்கும் மட்டும் எவ்வாறெல்லாம் மனிதர்களை வஞ்சிக்க முடியுமோ அவ்வாறெல்லாம் வஞ்சிக்க பார்பான்.

**யோவான் 19:10,11** வசனங்களில் பிலாத்து ஆண்டவரிடத்தில் உன்னை சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைப்பண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்று கூறினபொழுது, பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது என்று பதில் கூறினார். இந்த வார்த்தைகள் மிகமிக முக்கியமானது. நாம் கடந்துபோய் கொண்டிருக்கிற பாதை எப்படிப்பட்டது என்றாலும், நாம் தேவனோடு ஐக்கியப்பட்டு அவரை நமது இராஜாவாக கொண்டிருப்போமானால், நம் வாழ்க்கையில் நாம் சார்ந்திருக்கிற யாவும் தேவனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டே இருக்கும்.

அதாவது தேவனால் அனுமதிக்க பட்டாலொழிய வேறெதுவும் நம் வாழ்க்கையில் நம்மை கட்டுபடுத்தமுடியாது. நாம் இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும், பரலோக இராஜ்யத்தின் பிரஜைகளாகவே வாழ்கிறோம். எனவே நாம் அரசாங்கத்தின் மூலமாகவோ, சில தனிப்பட்ட மனிதர்களின் மூலமாகவோ நம்மேல் திணிக்கப்படும் எந்த காரியத்தை குறித்தும் பயப்பட தேவையில்லை. நம் இராஜாவாகிய இயேசு கிறிஸ்து அவற்றிற்கெல்லாம் நம்மை விலக்கி மீட்டு கொள்வார். ஆமென் அல்லேலூயா.

## 52. துன்ப நேரத்தில்




நமக்கு வாழ்க்கையில் எல்லாம் சரியாக நடந்து கொண்டிருக்கும் நேரத்தில், நாம் சார்ந்திருக்கிற மற்றும் பழகுகிற மனிதர்கள் முதற்கொண்டு, நம்முடைய தீர்மானங்கள், வாழ்க்கைமுறை ஆகிய அனைத்தும் சரியானதாகவே நமக்கு தோன்றும். ஆனால், வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாரா நிகழ்வுகள், சில விபத்துக்கள், வியாதிகள், பொருளாதார நெருக்கடிகள் போன்றவற்றால் ஏற்படும் துன்ப சூழ்நிலைகளில், நம்முடைய ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் ஆகிய மூன்றும் செயல் இழந்து இருக்கும் நிலையில், இனிவரும் வாழ்நாட்களை எப்படி கடத்தப் போகிறோம், இனி என்ன செய்ய போகிறோம், எப்படி இந்த துன்ப சூழலில் இருந்து வெளியே வரப்போகிறோம் என்று தெரியாத நிலையில், நாம் நம்முடைய வாழ்க்கையில் எடுத்த தீர்மானங்களை, நம்முடைய வாழ்க்கை முறையை நோக்கி பார்க்கும்பொழுது, நாம் எத்தனை காரியங்களில் தவறி இருந்திருக்கிறோம், எவ்வளவு அஜாக்கிரதையாய் இருந்திருக்கிறோம் என்பது விளங்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக நம்மை சுற்றியுள்ள மனிதர்களின், நம்மை பற்றிய மனநிலை எப்படியாக மாறி போகிறது என்பதையும் நாம் காணலாம். இத்துன்ப நேரத்தில் நமக்காக யாரும் ஒரு சொட்டு கண்ணீர் வடிக்கமாட்டார்களா என்று நினைக்கும்பொழுது, நாம் எவ்வளவு பெரிய முட்டாள் என்பதையும், எப்படிப்பட்ட உலகத்தில் நாம் வாழ்கிறோம் என்பதையும் அப்பொழுது நாம் உணர்ந்துகொள்வோம். நாம் சிரித்த போது, சிரித்த உலகம், நாம் அழுகிற போதும் சிரித்து கொண்டே இருக்கும். அப்பொழுது தான், நமக்காக உலகம் சிரிக்கவும் இல்லை, நமக்காக அது அழபோவதும் இல்லை என்பதை நாம் உணர்ந்து கொள்வோம்.

ஆண்டவரை விட்டு, இறை ஐக்கியத்தை குறித்து எதுவும் கவலைப்படாமல், உலகத்திற்காக நாம் ஓடின ஓட்டங்களும், செலவழித்த நேரங்களும் வீண்

என்பதை நாம் நம்முடைய துன்ப நேரத்திலேயே உணர்ந்துகொள்கிறோம். எல்லாம் லாபமாய் இருந்த பொழுது நம்மோடு கரம் கோர்த்து உழைத்த கைகள் எல்லாம், சிறு நஷ்டம் ஏற்பட்டவுடன் நம்மை கைவிட்டு செல்வதை நம்முடைய துன்ப நேரத்திலேயே உணர்ந்து கொள்கிறோம். நம்மால் போஷிக்கப்பட்டு, நம்மை சார்ந்திருந்த இரத்த உறவுகள் கூட நம்மை விட்டு செல்கின்றனர். வாழ்க்கையில் என்ன சாதித்தும், யாருக்கு எதை கொடுத்தும் என்ன பயன். நன்றி இல்லாத உலகில் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் மாயையாகவே காணப்படும். ஏற்கெனவே துன்பத்தில் இருக்கும் நமக்கு, நடைபெறும் இப்படிப்பட்ட காரியங்கள் மேலும் மேலும் நம்முடைய துன்பத்தை அதிகரிக்க செய்து, இனி வாழ்ந்து என்ன பயன் என்ற முடிவிற்கே நம்மைகொண்டு போய் விடுகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் யோபு, ஆபிரகாம் மோசே, தாவீது, எலியா போன்ற பல தேவ மனிதர்களின் வாழ்க்கையிலும், இப்படிப்பட்ட காரியங்களே நடந்தது. அதனால் தான், தாங்கள் வாழ்ந்தது போதும் என்ற முடிவிற்கே வரும் அளவிற்கு வாழ்க்கையில் உண்டான துன்ப நேரங்கள் தேவ மனிதர்களை செயலிழக்க செய்தது.

ஆனால் நாம் அழுதால், நம்மோடு அழ நமக்கு ஒருவர் இருக்கிறார். லாசரு மரித்தபொழுது, அவனுடைய சகோதிரிகளான மார்த்தாளும், மரியாளும் இப்படிப்பட்ட வேதனைக்குள்ளாகவே சென்றனர். ஒருவேளை அவர்களோடு சேர்ந்து சிலர் அழுதாலும் **(யோ 11:33)**, அவர்களுக்கு எந்தவிதத்திலும் உதவ கூடியவர்களாய் இவர்கள் இல்லை. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களுக்காக கண்ணீர் விட்டபொழுது **(யோ 11:35)**, அவர்களுடைய கண்ணீர் மாறியது. இங்கு நாம் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான சத்தியம் என்னவெனில், ஆண்டவர் அவர்களிடத்திற்கே வந்து அவர்களுக்காக இத்தனை கரிசனையாய் கண்ணீர் விட காரணம், ஆண்டவரோடு அவர்களுக்கு இருந்த ஐக்கியமே ஆகும்.

**யோ 11:5** கூறுகிறது **“இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்.“** என்று. ஆம் அவர்கள் அவருடைய அன்பிற்கு பாத்திரமாய் இருந்தார்கள். எனவே எதிர்பாராத துனப சூழ்நிலையிலும், யாரும் உதவ முடியாத நேரத்திலும், ஆதரவு அற்றவைகளாய் இருந்த அந்த இரண்டு சகோதரிகளுக்கு ஆண்டவர் அற்புதம் செய்தார், ஆதரவாய் லாசருவை மறுபடியும் எழுப்பி தந்தார்.

தாவீதின் வாழ்க்கையிலும் பல சோதனைகள், வேதனைகள், துன்ப நேரங்கள் வந்த பொழுதும், இதுவே நடந்தது. **1 சாமு 30:1,2** வசனங்கள் கூறுகிறது **“தாவீதும் அவன் மனுஷரும் மூன்றாம் நாளிலே, சிக்லாகுக்கு வந்து சேருகிறதற்குள்ளே, அமலேக்கியர் தென்புறத்துச் சீமையின்மேலும் சிக்லாகின்மேலும் விழுந்து, சிக்லாகைக் கொள்ளையடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்து, அதிலிருந்த ஸ்திரீகளாகிய சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைபிடித்து, ஒருவரையும் கொன்றுபோடாமல், அவர்களைப் பிடித்துக்கொண்டு, தங்கள் வழியே போய்விட்டார்கள்.“** என்று.

இதனால் **"தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்."** (1 சாமு 30:6). இங்கு ஒருபுறம் தாவீதே தன்னுடைய மனைவி, பிள்ளைகளை இழந்து நிற்கிறான், இதனோடு சேர்ந்து, அவனோடு கூட இருந்த மனிதர்களே, இப்பொழுது அவனுக்கு எதிராய் திரும்பினர். எல்லாம் நன்றாய் இருந்த பொழுது அவனேடு கூட நன்மையை அநுபவித்த மனிதர்கள், துன்பம் உண்டானவுடன் பழி முழுவதையும் தாவீதின் மேல் போட்டனர்.

ஆனால் தாவீதோ இப்படிப்பட்ட துன்ப நேரத்திலும், தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டார். ஆண்டவரும் அவரை அத்துன்பத்தில் இருந்து விடுவித்தார். காரணம் ஆண்டவரோடு தாவீது கொண்டிருந்த ஐக்கியமேயாகும். **சங்கீதம்** 16:8 இல் தாவீதே இவ்விதம் கூறுகிறார் **"கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை."** மோசேயின் மூலமாக, தேவ ஆசீர்வாதத்தை அநுபவித்த இஸ்ரவேல் மக்களும், துன்ப சூழ்நிலைகளில் அவருக்கு எதிராகவே கூக்குரலிட்டனர். ஆனால் மோசே தேவனோடு முகமுகமாய் பேசி உறவாடினவராகையால், எப்படிப்பட்ட துன்ப சூழ்நிலையையும், இஸ்ரவேல் மக்களின் எதிர்ப்பையும் மேற்கொள்ள அவரால் முடிந்தது.

யோபு, எலியா போன்றோரின் வாழ்வில் நடந்ததும் இப்படிப்பட்ட காரியங்களே. எனவே எத்துன்ப நேரத்திலும், நம் துன்பத்தை கண்டு, அத்றகாக பரிதவித்து, நம்மை அதிலிருந்து மீட்க வல்லவர் நம் ஆண்டவர் மட்டுமே ஆகும். அதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான், அது அவருடைய ஐக்கியத்தை தேடுவதாகும். அவரோடு பேசியும், அவர் சத்ததிற்கு கீழ்படிந்து வாழ்வதுமாகும். அப்பொழுது மனிதர் நம்மை கைவிட்டாலும், கொடிய துன்பங்கள் நம்மை நெருக்கிட்டாலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே நமக்கு போதும். ஆமென், அல்லேலூயா.

# 53. உலகத்தாரல்ல

## நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல (யோ 17:14)




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இதே வார்த்தையை மறுபடியுமாக **யோ 17:16** ஆம் வசனத்திலும் கூறுகிறார். ஆண்டவர் இரண்டு முறை அழுத்தமாக கூறுவதிலிருந்து இது மிகவும் முக்கியமானதொன்று என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். ஆனால் 90% மேலான கிறிஸ்தவ விசுவாசிகள் இந்த வார்த்தையை பற்றி சிறிதும் சிந்தியாமல் இவ்வுலகத்தோடே போராடி கொண்டிருக்கின்றனர். இவ்வுலகத்தில் இருக்கும் வரை நமக்கு போராட்டம் உண்டுதான். ஆனால் அதன் நடுவிலும் தேவன் எதற்காக நம்மை இவ்வுலகத்தில் வைத்திருக்கிறார் என்ற நோக்கத்தை அறிந்து, அதை நிறைவேற்ற பிரயாசப்படுவது முக்கியமானதாகும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் இதையே செய்தார். எனவேதான், **“நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.“ (யோ 17:15)** என்று ஜெபித்தார். தேவன் நமக்கு வைத்திருக்கும் இலக்கை அடையும்வரை அல்லது நம்மூலமாய் இவ்வுலகத்தில் செய்ய வேண்டிய காரியங்களை செய்துமுடிக்கும் வரை, எந்த போராட்டம் வந்தாலும், உலகமே எதிர்த்தாலும், அவற்றை தேவபெலத்தோடு சகித்து, ஜெயித்து நம் வேலையை முடித்தவர்களாய் இவ்வுலகத்தை விட்டு கடந்து போகுதல் வேண்டும்.

எனவேதான் தேவ நோக்கத்தை அறிந்த தேவபிள்ளைகள் தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் எவ்வாறு தேவ நோக்கம் நிறைவேற

பிரயோஜனப்படுத்த வேண்டும் என்பதில் கரிசனையாய் இருப்பார்கள். சுறுசுறுப்பாய் செயல்பட்டு காலத்தை பிரயோஜனப்படுத்தி கொள்வார்கள். உலகத்தால் தங்களை கறைப்படுத்தி கொள்ளமாட்டார்கள். உலகத்தில் இருந்து எதையும் எதிர்ப்பார்க்காமல், பரத்தில் இருந்தே சகலத்தையும் பெற்றுக்கொள்வார்கள். தங்கள் வாழ்வின் சூழ்நிலைகளை குறித்தோ, சமுதாயத்தில், அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தோ கவலைப்படாமல், தங்கள் எஜமானனாகிய ஆண்டவருக்கே ஊழியம் செய்வார்கள்.

ஆதி அப்போஸ்தல காலத்தில், எவ்வளவோ உபத்திரவம் வந்தபோதிலும், அரசாங்கமே அவர்களுக்கு எதிர்த்து நின்றபோதிலும், அநேகமுறை உலக அரசாங்கத்தால் தண்டிக்கப்பட்ட போதிலும், சொந்த ஜனங்களாலேயே பகைக்கப்பட்டபோதிலும், பலர் இரத்தசாட்சிகளாய் தங்கள் கண்களுக்கு முன் ஜீவனை விட்ட போதிலும், அவர்களை அது எதுவும் செய்யமுடியவில்லை. எந்த போராட்டத்தின் மத்தியிலும் தேவ நோக்கத்தை நிறைவேற்ற உலகத்தில் போராட ஆயத்தமாயிருந்தனர். ஆனால் உலக காரியங்களோடு அவர்கள் போராடி கொண்டிருக்கவில்லை. அதே நேரத்தில் எந்த நேரத்திலும் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லவும் அவர்கள் ஆயத்தமாயிருந்தனர்.

அவர்கள் பார்வையில் அழிவை நோக்கி போய் கொண்டிருக்கும் இந்த உலகத்திற்கு, நியாயதீர்ப்பின் நாள் வரும் முன்பாக, கிறிஸ்துவானவர் மத்திய ஆகாயத்தில் நம்மை அழைக்க வரும் முன்பாக, எவ்வளவு நபரை ஆதாயப்படுத்த முடியுமோ, ஆயத்தப்படுத்த முடியுமோ அவ்வளவு நபரை ஆயத்தப்படுத்தி, அவர்களை கிறிஸ்துவினிடத்தில் நடத்தி, இவ்வுலகத்தின் நியாயத்தீர்ப்புக்கு தப்பி கிறிஸ்துவை அடைய வேண்டும் என்பதே ஒரே நோக்கமாக இருந்தது.

இன்று வாழும் நம்முடைய நோக்கமும் இதுவாகவே இருக்க வேண்டும். ஆனால் இன்று நடைபெறும் ஊழியங்கள் பல விசுவாசிகளை உலகத்தின் காரியங்களை குறித்தே சிந்திக்க வைக்கின்றன. அவற்றிற்கு விடைதேடி திரிந்தே பலர் நேரத்தை வீணடித்து கொண்டிருக்கிறார்கள். குடும்பத்தில், சமுதாயத்தில் நடைபெறும் மாற்றங்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தேவ நோக்கத்திற்கு விரோதமாய் உலக அரசாங்கங்கள் கொண்டு வரும் சட்டங்களை எண்ணி கலங்குகின்றனர். இன்னும் சிலர், உலகத்தின் ஆசாபாசங்களுக்கும், ஐசுவரியத்திற்கும், சுகபோகத்திற்கும் தங்களை விற்று போட்டுள்ளனர். இவர்கள் ஆண்டவருக்கும் ஊழியம் செய்ய விரும்புகிறார்கள், உலகத்திற்கும் ஊழியம் செய்ய நினைக்கிறார்கள். ஆண்டவரையும் திருப்திபடுத்த நினைக்கின்றனர், சிலர் அரசியல் தலைவர்களையும் திருப்திபடுத்த நினைக்கின்றனர். ஆனால் வேதம் கூறுகிறது **“இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.“ (மத் 6:24)**. இது அனலுமின்றி, குளிருமின்றி வாழும் வாழ்க்கையாகும்.

**1 யோ 2:15 தெளிவாக கூறுகிறது “உலகத்திலும் உலகத்திலுள்ளவை -**

களிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.“ என்று. சிலர் உலகத்தால் கறைபடாதபடிக்கு துறவிகள் போல் வாழ முற்படுகின்றனர். ஆனால் ஆண்டவர் நமக்கு இதை கற்றுக் கொடுக்கவில்லை. ஆண்டவர் சொன்னதெல்லாம் நீங்கள் பூமிக்கு உப்பாய், உலகத்துக்கு வெளிச்சமாய் இருக்க வேண்டும் என்பதே (மத் 5:13,14). தேவன் நமக்கு கொடுத்திற்கும் குடும்பம், வேலை ஆகிய இவற்றை சிறப்புடன் கையாண்டு அதன் மூலம் நம் குடும்பதாருக்கும், மற்றவர்களுக்கும் கிறிஸ்துவை பிரதிபலிப்பவராய் காணப்பட வேண்டும். நாம் ஆண்டவருக்காக செய்யும் ஊழியங்கள் ஒருபுறம் இருந்தாலும், நம் வாழ்க்கை முறையே பலர் ஆண்டவரிடம் வர தூண்டுதலாய் இருக்க வேண்டும்.

ஆனால் சபையின் மூலமாய் உலகம் கலக்கப்படுவதற்கு பதிலாக, உலகத்தால் சபை கலங்கி நிற்கிறது. பண ஆசைகளும், பதவி ஆசைகளும் பல நல்ல ஆவிக்குரிய சபைகளை சிதைத்து போட்டுள்ளது. மேலும் 1 யோ 2:16,17 வசனங்கள் கூறுகிறபடி “ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.“ இன்று மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் கிறிஸ்தவ குடும்பங்களை சீரழித்து கொண்டிருக்கிறது. எனவே இதற்கு எதிராகவும் நாம் போராட வேண்டியுள்ளது.
தண்ணீரில் இருக்கும் தாமரையாய், பூமியில் இருந்தும் உலகத்தார் அல்லாதவராய் நாம் வாழும் பொழுது “இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.“
(1 கொ 15:51-54) ஆமென், அல்லேலூயா.

## 54. தேவனின் தெரிந்தெடுப்பு




தேவனின் தெரிந்தெடுப்பு என்பது எப்பொழுதும் வித்தியாசமானதும், நம்மால் விளங்கிகொள்ள முடியாததுமாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்து இன்றுவரைக்கும், தேவனால் பயன்படுத்தபட்ட மனிதர்களின் வாழ்க்கை பிண்ணனி, மிகவும் சாதாரணமானதும், சில நேரங்களில் தேவனுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லாததுமாயிருந்தது. உதாரணமாக, சமாரிய ஸ்திரீ, பவுல், பேதுரு, மோசே, தாவீது, ஆமோஸ் தீர்க்கதரிசி போன்றவர்கள். மேற்கூறப்பட்டுள்ள ஒவ்வொருவருடைய வாழ்க்கையும், ஏதோ ஒரு திசையில் சென்று கொண்டிருந்தபொழுது, ஆண்டவர் அவர்களை சந்தித்து, அவர்களை தமக்கு உகந்த பாத்திரங்களாக மாற்றி, அவர்களின் மூலம் வல்லமையான காரியங்களை செய்தார்.

**யோவான் 4 ஆம்** அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்திரீயை சந்திப்பதை நாம் காணலாம். **யோ 4:4-7 வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி ”அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தபடியால், யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார். அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது; இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்; அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிருந்தது. அவருடைய சீஷர்கள் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள்.“**, ஆண்டவர் இளைப்படைந்தவராய், சற்று இளைப்பாற அங்கே உட்கார்ந்தார். ஆண்டவர் மாம்ச சரீரத்தின்படி இளைப்படைந்தவராய் இருந்தாலும், அங்கு இருந்த அந்த நேரத்திலும், பிதாவாகிய தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுகிறவராகவே இருந்தார்.

வசனம் 8 கூறுகிறது, "அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத் தா என்றார்.". இங்கு நடக்கும் காரியங்கள் யாவும் யதார்த்தமாய் நடப்பதைபோல் காணப்பட்டாலும், சமாரிய மக்களின் இரட்சிப்பிற்கான ஓர் மிக பெரிய திட்டம் நிறைவேறி கொண்டிருந்தது. இங்கு கவனிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், சமாரிய மக்களின் நடுவில் எத்தனையோ நீதிமான்கள், பரிசுத்தவாங்கள், திறமையானவர்கள் இருந்திருக்கலாம். ஆனால் ஆண்டவர் அவர்கள் வழியாய் இரட்சிப்பின் செய்தியை அறிவிக்காமல், தன் வாழ்க்கையே கேள்விகுறியாக இருந்த ஒரு ஸ்திரீயை சந்தித்து, அவளுக்கு தேவனுடைய காரியங்களை வெளிப்படுத்தி, அவளுடைய மன ஐயங்களை நீக்கி, தாம் மேசியா என்பதை அவளுக்கு வெளிப்படுத்தி, அவள் மூலமாய் அவளுடைய பட்டணத்தையே இரட்சித்தார். வெளிப்படையாக இவை எதற்கும் அந்த பெண் தகுதியுள்ளவளாக காணப்படவில்லை. அவள் வாழ்க்கை அலங்கோலமாய் காணப்பட்டாளும், இருதயத்தில் அவளுக்கு இருந்த கேள்விகளை தேவன் அறிந்திருந்தார். யோவான் 4 ஆம் அதிகாரம் முழுவதும் அவள் ஆண்டவரோடு உரையாடுவதை வைத்து நாம் அதை விளங்கி கொள்ளலாம்.

ஆண்டவரே என்று கூப்பிடுவதும், ஜீவத்தண்ணீரை தனக்கும் தர வேண்டும் என்று ஆவல் கொண்டதும், தன் வாழ்க்கையை பற்றி ஆண்டவர் கூறியவுடன், அவர் வார்த்தைகள் தீர்க்கதரிசனமானவை என்பதை அறிந்து கொண்டதும், தேவனை தொழுது கொள்வதை குறித்தும், எல்லாவற்றிற்கும் மேலாக "அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்." (யோ 4:25) என்று அறிக்கையிட்டதும், அவளுடைய உள்ளான தூய்மையை பிரதிபலிக்கிறது. வெளிப்பார்வையில் அழகாக வாழ்ந்து கொண்டு இருதயத்தில் தீய எண்ணம் கொண்டிருப்பவரை காட்டிலும், வாழ்க்கையின் சூழ்நிலையின் காரணமாக அழுக்கான ஒரு வாழ்க்கை வாழ்ந்தாலும், உள்ளான தூய்மையையே, வாஞ்சையையே ஆண்டவர் பார்க்கிறார்.

யோ 4: 28-30 கூறுகிறது "அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி: நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள். அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.", ஆம் இங்கு இந்த ஸ்திரீயின் மூலமாய் நற்செய்தி அறிவிக்கபடுகிறது. அதுவும் அவள் தன் சாட்சியை கூறி (நான் செய்த எல்லாவற்றையும் சொன்னார்), கிறிஸ்துவாகிய மேசியாவை அறிவித்தாள். இதன் பின்பாக அவளுடைய வாழ்க்கை ஒரு மேன்மையான வாழ்க்கையாக மாறியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பவுலின் வாழ்க்கையிலும் ஆண்டவர் இதனையே செய்தார். அப் 8:1-3 வசனங்களில் "அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த

துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள். தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங்கொண்டாடினார்கள். சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்." பவுலாகிய சவுலின் கொடூரமான காரியங்கள் கூறப்பட்டுள்ளன. ஸ்தேவான் கொலை செய்யபடுவதற்கு சவுல் உடந்தையாயிருந்தான். மேலும் வசனம் 3 கூறுகிறது "அவன் சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்." என்று.

இங்கு மறுபடியும் நாம் தேவனின் ஒரு வித்தியாசமான தெரிந்தெடுப்பை காணலாம். ஆண்டவரால் அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் இருந்தும், பேதுருவின் மற்றும் மற்ற அப்போஸ்தலர்களின் போதனையால் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்ந்த எத்தனையோ ஆயிரக்கணக்கான விசுவாசிகள் இருக்க, ஸ்தேவான், பிலிப்பு போன்றவர்கள் வைராக்கியமாய் ஊழியம் செய்ய, அப் 8:4 இன்படி "சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்.", இப்படியாக ஊழியம் பலவாறு பெருகிகொண்டிருக்க, இவர்களில் ஆண்டவர் ஒருவரையும் தெரிந்துகொள்ளாமல், சபையை பாழாக்கி கொண்டிருந்த சவுலை ஆண்டவர் தெரிந்து கொண்டு, அவனுக்கு காட்சியளித்து, அவன் வாழ்க்கையின் நோக்கத்தை அப்படியே தலைகீழாக மாற்றி போட்டார்.

அப் 9:10-16 வசனங்களில் ஆண்டவர் பவுலை குறித்து ஒரு திட்டம் வைத்திருந்தார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். கலா 1:22-24 வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி "மேலும் யூதேயாதேசத்திலே கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தேன். முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே, தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்பதைமாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து, என்னைப்பற்றித் தேவனை மகிமைப்படுத்தினார்கள்." தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை எங்கும் பிரசங்கிக்கிறவராய் ஆண்டவர் அவரை மாற்றினார்.

1 கொ 15:8-10 வசனங்களில் அவரே இதை அறிக்கையாக கூறுகிறார் "எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார். நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல. ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது." தான் அழிக்க நினைத்த சபையையே கட்டும் பணியை செய்யும்படியாய் ஆண்டவர் அவரை மாற்றினார் (1 கொ 3:10). அதுவும் மிகுந்த பிரயாசத்தோடு, கொடிய உபவத்திரவங்கள் மத்தியிலும் வைராக்கியமாய் ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்தார் (2 கொ 11:23-28).

ஆண்டவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமும், குப்பையுமாக எண்ணினார் “அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.“(பிலி 3:11). அப் 26:27-29 வசனங்களில் அகிரிப்பா ராஜாவின் முன் தன் சாட்சியை வெளிப்படுத்தின பவுல், “அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன் என்றான். அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான். அதற்குப் பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.“ என்று கூறுவதிலிருந்து அவர் எப்படிப்பட்ட பூரண நிலையை அடைந்தார் என்பதை நாம் விளங்கிகொள்ளலாம்.

மோசேயின் வாழ்வில் நடந்ததும் இப்படிப்பட்ட நிகழ்வே. அவர் எகிப்தில் இருந்த இளமையான காலத்தில் தன் சகோதரராகிய எபிரேய மனுஷர்களுக்கு உதவ வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயல்பட்ட காலத்தில் (யாத் 2:11-15), ஆண்டவர் மீட்பின் பணிக்கு அவரை அழைக்கவில்லை, ஆனால் பெலன் எல்லாம் குறைந்து போய், திக்குவாயும் மந்த நாவும் உள்ளவராய் (யாத் 4:10) இருந்த காலத்தில், தன்னால் ஆண்டவரின் பணியை செய்யமுடியாது என்று நினைத்த காலத்தில் ஆண்டவர் அவரை அழைத்தார். இதை போல் ஆமோஸ் தீர்க்கதரிசியும் ஆண்டவர் தன்னை அழைத்த விதத்தைப்பற்றி ஆமோஸ் 7:14,15 வசனங்களில் “ஆமோஸ் அமத்சியாவுக்குப் பிரதியுத்தரமாக: நான் தீர்க்கதரிசியுமல்ல, தீர்க்கதரிசியின் புத்திரனுமல்ல; நான் மந்தை மேய்க்கிறவனும், காட்டத்திப்பழங்களைப் பொறுக்குகிறவனுமாயிருந்தேன். ஆனால் மந்தையின் பின்னாலே போகிறபோது என்னைக் கர்த்தர் அழைத்து, நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு என்று கர்த்தர் உரைத்தார்.“ என்று கூறியுள்ளார்.

இவை எல்லாவற்றிலும் நாம் அறிந்து கொள்கிற சத்தியம் என்னவென்றால், தேவனின் தெரிந்தெடுப்பு என்பது மிகவும் வித்தியாசமானது. அவர் தெரிந்தெடுக்கும் மனிதர்களும், அவர்களை அழைக்கும் நேரமும் மிகவும் ஆச்சரியமானது. சமாரிய ஸ்திரீ, பவுல் போன்றோரின் வாழ்க்கை மிகவும் ஒரு மோசமான சூழ்நிலையில் இருந்தது, ஆனால் ஆண்டவர் அவர்களோடு தனியாக இடைப்பட்ட பொழுது, “எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான்“, (லூக் 7:43) என்ற சத்தியத்தின்படி, மோசமான வாழ்க்கை வாழ்ந்த என்னையும் தேவன் சந்தித்து, மன்னித்து, இவ்வளவு கனமான ஊழியத்தை என் கையில் கொடுத்தாரே என்பதை அவர்கள் உணர்ந்த பொழுது, அது அவர்களை தேவனுக்காக வைராக்கியமாக வாழ செய்தது. இன்றும் பாரம்பரிய கிறிஸ்தவ பிண்ணணியத்தில் இருந்து வருவோரை பார்க்கிலும், மோசமான வாழ்க்கை வாழ்ந்து, பாவ சேற்றில் உழன்று கொண்டிருந்த மக்கள் இரட்சிக்கப்பட்டு சபைக்குள் வரும்பொழுது, அவர்கள் தேவனுக்காய் மிகவும் வைராக்கியத்தோடு வாழ்கின்றனர், வல்லமையாய் ஊழியம் செய்து அநேகரை கிறிஸ்துவுக்குள்ளாய் கொண்டு வருகின்றனர்.

மோசேயை போல, அவர் தன் சுயபெலனை சார்ந்து இருந்த பொழுது, துடிப்புடன் இருந்த பொழுது அவரை அழைக்காமல், 40 வருடங்கள் கழித்து, அவர் பெலன் குறைந்த நிலையில், எல்லாவற்றிற்காகவும் தேவனுடைய பாதத்தில் விழ கற்று கொண்ட நேரத்தில், வாழ்க்கையில் பொறுமை, சகிப்பு தன்மை ஆகியவற்றை கற்று கொண்ட நிலையில் தேவன் அவரை அழைத்தார், இங்கு நாம் அறிந்துகொள்ளும் சத்தியம், தேவனுடைய ஊழியத்தை செய்வதற்கு நமக்கு எது தேவை என்பதை ஆண்டவரே அறிந்திருக்கிறார். அந்த குணமோ, திறமையோ நம்மில் உருவாகும் வரைக்கும் தேவன் நம்மை காத்திருக்க செய்து, அவருடைய ஏற்ற காலத்தில் நம்மை தம் ஊழியத்திற்கு என அழைக்கிறார்.

எனவே நாம் நமக்கு என்ன திறமை இருக்கிறது என்று பார்த்துக்கொண்டு இராமல், ஆண்டவர் நம்மிடம் எதை எதிர்பார்கிறார் என்பதை உணர்ந்து, அதற்கேற்ற விதமாய் நம்மை மாற்ற தேவனிடம் அர்பணிக்க வேண்டும். இறுதியாக ஆமோஸ் தீர்க்கதரிசி கூறியதை போல, நம் வாழ்க்கை பிண்ணனி எப்படியிருந்தாலும், நம்முடைய தகுதி எப்படிபட்டதாய் இருந்தாலும், ஆண்டவர் தம்முடைய ஊழியத்திற்கு என்று அழைத்தால், அது எப்படிப்பட்ட சவால் நிறைந்த ஊழியமானாலும், அதை செய்து நிறைவேற்ற ஆண்டவர் பெலன் தருவார். எனவே ஆண்டவர் நம்மை தமக்கென அழைக்கும் நேரத்தில் கீழ்ப்படிதலோடு அவருடைய அழைப்பை ஏற்று, அதை அவருடைய சித்தத்தின்படியே செய்து நிறைவேற்றுவதே நம் ஒவ்வொருவருடைய இவ்வுலக வாழ்க்கையை ஓர் அர்த்தமுள்ளதாக்குகிறது. "மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று," **1 தெச 2:11** கூறுகிறது. அப்பொழுது ஆண்டவர், "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி", **(மத் 25:21)** என்று கூறி நம்மை வரவேற்பார். ஆமென், அல்லேலூயா.

## 55. தலைவர்களை உருவாக்கும் தலைவர்கள்




கர்த்தராகிய தேவன் தம்முடைய சித்தத்தை, திட்டத்தை பூமியில் நிறைவேற்ற பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு மனிதர்களை தலைவர்களாக ஏற்படுத்தினார். உதாரணமாக, மோசே என்ற மனிதனை அழைத்து அவனை தலைவனாக்கி அவனின் மூலமாக ஒரு பெரும் திரளான மக்கள் கூட்டத்தையே வழி நடத்தினார். தலைவர்களில் சிலர் ஆசாரியர்களாய் மற்றும் சிலர் நியாயாதிபதிகளாய், இராஜாக்களாய், தீர்க்கதரிசிகளாய் என்று பல்வேறு விதங்களில் இருந்தனர். தேவன் ஒருவரை தலைவராக ஏற்படுத்துவதற்கு முன்பாக, அவர்களுடைய வாழ்க்கையின் பல்வேறு காலகட்டங்களில், அவர்களை பலவித மேடுபள்ளமான, கரடுமுரடான பாதைகளில் நடத்தி, அவர்களை தலைவர்களாக உருவாக்குகிறார். யாரும் ஒரே நாளில் தலைவராக ஏற்படுத்தபடுவதில்லை. அதற்காக திரைமறைவில் பல்வேறு காரியங்களை தேவன் அவர்களது வாழ்க்கையில் செய்கிறார்.

இப்படியாக உருவாக்கப்பட்ட தலைவர்கள் தேவனுடைய பணி தொடர்ந்து நடைபெற தங்களுக்கு அடுத்ததாக, இரண்டாம் தலைமுறை தலைவர்களை தேவ சித்தத்தின்படி, திட்டத்தின்படி, நடத்துதலின்படி உருவாக்க வேண்டும். ஆனால் சிறந்த தலைவர்களாக விளங்கிய சிலர், இரண்டாம் தலைமுறை தலைவர்களை உருவாக்காமல் கடந்து சென்றனர். இதனால் பல்வேறு விதங்களில் தேவனுடைய திட்டத்திற்கு, சித்தத்திற்கு எதிரான காரியங்கள் நடைபெறுவதற்கு அவர்களே ஒரு காரணமாயினர். சிலர் தனக்கு அடுத்ததாக தலைவர்களை உருவாக்கியும், தேவ சித்தத்தை அறியாமலும், தேவ சித்தத்திற்கு எதிராகவும் அதை செய்தனர்.

**1 சாமுவேல் 2,3 ஆம்** அதிகாரங்களில் ஆசாரியனாகிய ஏலியின் குமாரர் துன்மார்க்கராய் இருந்தபடியால் தேவன் அவர்களை அழித்து, ஏலியின் குடும்பத்தை தள்ளி அதற்கு பதிலாக சாமுவேலை ஏற்படுத்தினார். ஏலியின்

குமாரர் துன்மார்க்கராய் இருந்தும் ஏலி அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம் அவர்கள் தேவ நியாயத்தீர்ப்பை சம்பாதித்தனர் **(1 சாமு 3:13)**. இதை சாமுவேலும் நன்றாக அறிந்திருந்தார் **(1 சாமு 3:11-14)**. ஏலி அடுத்தக்கட்ட தலைவர்களாக தன் குமாரரை சரியாக உருவாக்காததின் விளைவை சாமுவேல் கண்ட பின்பும், **1 சாமு 8:1-3 கூறுகிறது "சாமுவேல் முதிர்வயதானபோது, தன் குமாரரை இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளாக வைத்தான். அவனுடைய மூத்தகுமாரனுக்குப் பெயர் யோவேல், இளையவனுக்குப் பெயர் அபியா; அவர்கள் பெயெர்செபாவிலே நியாயாதிபதிகளாயிருந்தார்கள். ஆனாலும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள்."**, என்று.

இங்கு சாமுவேலும் அந்த பிழையையே மறுபடியும் செய்கிறார். ஏலியும், சாமுவேலும் சிறந்த தேவமனிதர்களாய், தலைவர்களாய் இருந்தபொழுதும், அவர்கள் சிறந்த தலைவர்களை உருவாக்காமல் போயினர். அதன் விளைவு அடுத்த வசனத்திலேயே தெரிகிறது. **1 சாமு 8:4-7 "அப்பொழுது இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் கூட்டங்கூடி, ராமாவிலிருந்த சாமுவேலினிடத்தில் வந்து: இதோ, நீர் முதிர்வயதுள்ளவரானீர்; உம்முடைய குமாரர் உம்முடைய வழிகளில் நடக்கிறதில்லை; ஆகையால் சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி, எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு, ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்றார்கள். எங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று அவர்கள் சொன்ன வார்த்தை சாமுவேலுக்குத் தகாததாய்க் காணப்பட்டது; ஆகையால் சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான். அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி: ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள்; அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்."**

ஒருபுறம் தேவன் சாமுவேலை கடிந்துகொள்ளாத போதும், அவர்கள் என்னைத்தான் தள்ளினார்கள் என்று தேவன் கூறினாலும், ஜனங்கள் இப்படியாக முறையிட அவர் தன் குமாரர்களை சரியான தலைவர்களாய் உருவாக்காமற் போனதும் ஒரு காரணமாகும். இதன் விளைவு சாமுவேலின் சந்ததி பற்றி நாம் அதன் பிறகு வேதத்தில் எங்கும் காணமுடியவில்லை. ஆனால் அதன் பிறகு தேவனே யார் யாரை தலைவர்களாய் காட்டினாரோ (சவுல், தாவீது), அவர்களை அபிஷேகித்து தலைவர்கள் ஆக்கினார். இங்கு நாம் கற்று கொள்ளும் பாடம் தலைவர்களை உருவாக்காமற் போவதும், உருவாக்கினாலும் அவர்களை சரியான விதத்தில் உருவாக்காமற் போனாலும் அது ஒரு தலைவனுடைய ஊழிய பாதையில் ஒரு சருக்கலாகவே காணப்படுகிறது.

அதே சாமுவேல் புஸ்தகத்தில், சாமுவேலுக்கு அடுத்ததாக, தலைமை பொறுப்பை இராஜாவாக ஏற்ற சவுலின் வாழ்க்கையிலும் இக்குறை வேறுவிதத்தில் வெளிப்பட்டது. சாமுவேல் சவுலை தேவ திட்டத்தின்படி தலைமை பொறுப்பேற்க அழைத்த பொழுது, தான் எவ்வளவு சிறியவன், தன் குடும்பம் எவ்வளவு சிறியது என்று கூறி **(1 சாமு 9:21)** தன்னை

தாழ்த்தின சவுல், அதே தலைமை பதவியை, இராஜாவாய் அனுபவித்த சில வருடங்களிலேயே, தனக்கு அடுத்ததாக ஆண்டவர், தாவீதை தலைவனாக, இராஜாவாக தெரிந்துகொண்டார் என்பதை அறிந்ததும், தன் தலைமை பொறுப்பை தேவ சித்தத்தின்படி ஒப்படைக்க மனதில்லாமல், தன் குடும்பத்தை சேர்ந்த தன் வாரிசான யோனத்தான் தான் இராஜாவாக வர வேண்டும் என்று விரும்பினான். அதற்காக தாவீதை கொல்ல நினைத்தான் **(1 சாமு 20:30,31)**.

இங்கு தேவசித்தத்தின்படி சவுல் தலைவனாக ஏற்படுத்தபட்ட பொழுதும், அடுத்த தலைமுறை தலைமையை தேவன் சவுலுக்கு காண்பித்த பொழுதும், அதை ஏற்க மனதில்லாமல் அதற்கு எதிராய் செயல்பட்டது, தேவ திட்டத்திற்கு ஒரு தடைகல்லாய் காணப்பட்டது. அதன் முடிவு சவுலும், யோனத்தானும் ஒரே நாளில் மடிந்தனர். இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியம், தேவன் ஒருவரை தலைமை பொறுப்பிற்கு ஏற்படுத்தும் பொழுது, அதை ஏற்றுக்கொள்ளும் நபர், தன் காலத்தில் தன்னுடைய பணியை செவ்வையாய் செய்வதுமட்டுமில்லாமல், தனக்கு பிறகும் அந்த ஊழியம் தேவ சித்தத்தின்படி, சரியான ஒரு தலைமையின் கீழ் தொடர வேண்டும் என்ற தரிசனத்தையும் உடையவராய் இருக்க வேண்டும்.

இதில் சரியாக செயல்பட்ட சிலர், மோசே, தாவீது, எலியா போன்றவர்கள். இவர்கள் யாவரும் தேவசித்தத்தின்படி தேவன் யாரை தெரிந்துகொண்டாரோ அவர்களை தலைவர்களாக ஏற்படுத்தினர். இதனால் மோசேக்கு பின்பாக யோசுவாவின் மூலமாகவும், தாவீதிற்கு பின்பாக சாலமோனின் மூலமாகவும், எலியாவிற்கு பின்பாக எலிசாவின் மூலமாகவும் தேவபணி தடையின்றி நடைபெற்றது. புதிய ஏற்பாட்டின் காலத்திலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், தனக்கு அடுத்ததாக இப்பூவுலகில் தம் பணியை தொடர்ந்து செய்ய அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார், அப்போஸ்தலர்களும் தங்களுக்கு பிறகு அடுத்தகட்ட தலைவர்களை உருவாக்கினர். அதனால் தான் இன்று வரை சுவிஷேசம் எந்தவித தடையுமின்றி உலகம் முழுவதும் அறிவிக்கப்பட்டு கொண்டேயிருக்கிறது.

எனவே இக்காலத்திலும் தேவதிட்டத்தின்படி தலைமை பொறுப்பேற்று ஊழியத்தை செய்யும் யாரானாலும், செய்யும் ஊழியம் எப்படிப்பட்டதாயிருந்தாலும் தனக்கு அடுத்தாக தலைமை பொறுப்பேற்று நடத்த, தேவன் யாரை காண்பிக்கிறார் என்பதை அறிந்து அவர்களை பழகுவித்து, அவர்களை சரியான தலைவர்களாய் உருவாக்குவது ஒவ்வொரு தலைவனின் கடமையாகும்.

ஆனால் இன்று, தேவ ஊழியத்தை செய்யும் பலர் இதைப்பற்றி ஒரு கரிசனை இல்லாமல் இருக்கின்றனர். சிலர் சவுலை போல தங்கள் இரத்த சம்பந்தமான வாரிசுகள் அல்லது தங்களுக்கு சரியென தோன்றுபவர்கள் தான் அடுத்த தலைவர்களாக வரவேண்டும் என்று நினைத்து தலைமை பொறுப்பிற்கு தகுதியானவர்களுக்கு விரோதமான காரியங்களை செய்கின்றனர். இதனால் இன்று எத்தனையோ தேவ சபைகளில், ஊழியங்களில் பிரிவினை காணப்படுகிறது. பல ஆண்டுகளாய்,

அருமையாய் கட்டி எழுப்பபட்ட ஊழியங்கள் ஒரு நிமிடத்தில் ஒன்றுமில்லாமல் போகிறது. தேவனுடைய நாமத்திற்கு புகழ்ச்சிக்கு பதிலாக இகழ்ச்சி இப்படிப்பட்ட தலைவர்கள் மூலம் ஏற்படுகிறது.

நம் தமிழ்நாட்டிலும், அரசியல் ரீதியாய் தலைமை பொறுப்பேற்க, இரண்டாம் தலைமுறை தலைவர்கள் சரியாய் அடையாளம் காட்டபடாமல் போனதால், சமுதாயத்திலும், அரசியலிலும் ஏற்பட்டிருக்க கூடிய பல்வேறு சிக்கல்களை நாம் கண்கூடாக காண்கிறோம். எனவே சமுதாயமானாலும், சபையானாலும் சரியான தலைவர்கள் உருவாக்கப்படுவது மிக மிக அவசியமாகும். இல்லையேல் அது பல்வேறு குழப்பங்களுக்கு வழிவகுத்து, பல்வேறு நன்மைகளை நாம் அனுபவிக்க முடியாதபடி தடைகற்களாய் காணப்படும். தேவன் தாமே சரியான தலைவர்களை ஒவ்வொரு காலகட்டத்திலும் நமக்கு உருவாக்கி தருவாராக. ஆமென், அல்லேலூயா.

## 56. சூனேமியாள் (பாகம் - 1)




**2 இரா 4 ஆம் அதிகாரத்தில்** சூனேமியாள் என்கிற ஒரு பெண்மணியை பற்றி நாம் காண்கிறோம். ஒரு சில வசனங்களிலே மட்டும் அவளை பற்றி கூறப்பட்டிருக்கிற பொழுதிலும், அவளுடைய வாழ்க்கை ஒரு தேவ பிள்ளை எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் உள்ளது. அவற்றை பற்றி நாம் இங்கு தியானிப்போம்.

**2 இரா 4:8** ஆம் வசனம் கூறுகிறது "**பின்பு ஒருநாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும்போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ அவனைப் போஜனம்பண்ண வருந்திக்கேட்டுக்கொண்டாள்; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம்பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்.**" என்று. இங்கு சூனேமியாள் என்பது அந்த ஸ்தீரியின் உண்மையான பெயராய் இராமல் அவள் இருந்த ஊரின் பெயரை வைத்து அவள் குறிப்பிடப்படுகிறாள் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும் அவளுடைய ஒவ்வொரு நற்குணமும் ஒவ்வொரு வசனத்திலும் தெளிவாய் கூறப்பட்டுள்ளது. வேதம் அவளை கனம்பொருந்திய ஸ்தீரி என்று நமக்கு அறிமுகப்படுத்துகிறது. படிப்பின் மூலமாகவோ, செல்வத்தின் மூலமாகவோ, அதிகாரத்தின் மூலமாகவோ தேவன் நமக்கு ஒரு கனம் உள்ள வாழ்க்கையை தரும்பொழுது, அதை நாம் சரியான விதத்தில் உபயோகப்படுத்தி கொள்ளவேண்டும். ஏனெனில் "**கனம் பொருந்தினவனாயிருந்தும் அறிவில்லாத மனுஷன் அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்**". (**சங் 49:20**) என்று வேதம் கூறுகிறது.

இங்கு அவளுடைய கனம் அவளுக்கு இருந்த செல்வத்தின் மூலமாக உண்டாகியிருக்க வேண்டும். அதனால் தான் எலிசா தீர்க்கதரிசி அவ்வூர் வழியே வருகிறபொழுதெல்லாம் அவளுடைய வீட்டில் தங்க முடிந்தது. தன்னுடைய செல்வத்தை வீண் ஆடம்பரத்திற்காய், சுகபோக வாழ்க்கைக்காய் செலவழிக்காமல், ஒரு தேவ ஊழியரை தாங்குவதற்கு அதை உபயோகிப்பது எவ்வளவு நல்லது. நாம் வாழும் இந்நாளிலும் தேவன் செல்வத்தை அநேக தேவ பிள்ளைகளுக்கும், அவர்களுடைய சந்ததிகளுக்கும் கொடுத்துள்ளார். ஆனால் சுவிசேஷ ஊழியத்திற்காகவும், ஆண்டவருடைய ஊழியர்களுக்காகவும் அதை செலவிட நினைப்பவர் மிக சிலரே. தேவன் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு நல்ல செழிப்பை தந்திருந்தும், அவர்கள் அதை சுகபோக வாழ்க்கைக்காக செலவழிப்பதே இன்றும் உலகமெங்கும் சுவிசேஷம் பரவாமைக்கு ஒரு காரணமாகும்.

**2 இரா 4:9,10** வசனங்களில் "**அவள் தன் புருஷனை நோக்கி: இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன். நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்.**", என்று கூறப்பட்டுள்ளது. இங்கு சூனேமியாள் எலிசாவை பரிசுத்தவான் என்று கூறுகிறாள். இது, வெறுமனே தேவ ஊழியரை உபசரித்து விட்டு, அதன் மூலம தேவ ஆசிர்வாதத்தை பெற்றுகொள்ளலாம் என்ற சுயத்தை சார்ந்த மனநிலை இல்லாமல், தாம் உபசரிக்கிற தேவ ஊழியர் எவ்வளவாய் தேவனோடு ஐக்கியப்பட்டவர், இன்னும் நாம் எப்படிப்பட்ட உதவிகளை அவருக்கு செய்யலாம் என்று ஆராய்ந்து அறிகிற ஒரு நல்ல மனநிலையை காணலாம்.

இப்படிப்பட்ட மனநிலை இன்று நம் அனைவருக்கும் தேவை. ஏனெனில் வெறும் பணத்தை மட்டும் ஊழியத்திற்கு கொடுத்துவிட்டு, அதனால் உண்டாகிற கனிகளை குறித்து கவலைப்படாமல், நாம் போட்ட காணிக்கைக்கு நம்முடைய குடும்பத்திற்கு ஆசிர்வாதம் வந்தால் போதும் என்கிற குறுகிய மனப்பான்மை இராமல், உண்மையான ஆத்தும தாகத்தோடு நடைபெறும் ஊழியங்களை கண்டறிந்து அதற்கு தேவையான உதவிகளை நம்முடைய காணிக்கையின் மூலம் செய்வதே நாம் தேவ இராஜ்யத்தின் பணியின் மீது உண்மையான அக்கறை கொண்டுள்ளோம் என்பதற்கு அத்தாட்சியாயிருக்கிறது.

**2 இரா 4:10** இல், சூனேமியாள் கூறுகிற ஒவ்வொரு காரியமும் எலிசாவிற்கு என்னென்ன பொருட்கள் தேவைப்படும் என்பதை நன்கு கண்டறிந்து கூறுவது அவளுடைய ஞானத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் இவை அனைத்தையும் அவள் தன் புருஷனிடம் கூறுவது அவள் ஒரு நல்ல குணசாலியான, புத்தியுள்ள ஸ்தீரியாய், தன் புருஷனுக்கு அடங்கினவளாய் இருந்தாள் என்பதை வெளிப்படுத்துகிறது. இது சபை கிறிஸ்துவுக்கு முன் எப்படிப்பட்டதாய் காணப்பட வேண்டும் என்பதற்கு ஒரு நிழலாட்டமாய் காணப்படுகிறது.

**2 இரா 4:11-13** வசனங்களில் "**ஒருநாள் அவன் அங்கே வந்து, அந்த அறைவீட்டிலே தங்கி, அங்கே படுத்துக்கொண்டிருந்தான். அவன் தன் வேலைக்காரனாகிய கேயாசை நோக்கி: இந்தச் சூனேமியாளை அழைத்துக்கொண்டுவா என்றான்; அவளை அழைத்துக்கொண்டுவந்தான்; அவள் அவனுக்குமுன்பாக நின்றாள். அவன் கேயாசியைப் பார்த்து: இதோ, இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்யவேண்டும்? ராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேசவேண்டிய காரியம் உண்டோ என்று அவளைக் கேள் என்றான். அதற்கு அவள்: என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன் என்றாள்.**" நாம் காண்கிறபடி, எலிசா தன்னை இவ்வளவு கரிசனையோடு விசாரித்து வருகிற சூனேமியாளுக்கு எவ்விதத்திலாவது உதவ நினைத்து, அவளுக்கு ஏதேனும் தேவை இருக்கிறதா என்று கேட்டார்.

அதற்கு அவள் கூறிய பதில் "**என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன்**" என்பதாகும். இது ஒரு திருப்தியுள்ள வாழ்க்கையை, மனநிறைவுடன் கூடிய வாழ்க்கையை அவள் வாழ்ந்தாள் என்பதை வெளிப்படுத்துகிறது. ஆனால் இப்படிப்பட்ட ஒரு பதிலை அவள் ஒரு பெரும் நெருக்கத்தின் மத்தியிலேயே கூறினால் என்பதை நாம் **2 இரா 4:14** இல் அறியலாம் "**அவளுக்குச் செய்யவேண்டியது என்னவென்று கேயாசியை அவன் கேட்டதற்கு; அவன், அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்றான்.**"

ஆம் அவளுக்கு பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்பதாகும். எனவே, பிள்ளை பிறக்கும் எதிர்பார்பை அவள் இழந்துவிட்ட நிலையில், உண்மையிலேயே ஒரு பெண்ணாக அது அவளுக்கு மிகுந்த வேதனையை தந்த பொழுதும், அதை வெளிக்காட்டாமல், தேவ ஊழியரை கனப்படுத்தி தன் வாழ்வை அர்த்தமுள்ளதாய் வாழ்ந்து முடிக்க நினைத்தாள். ஆனால் தேவனோ, எந்த முறுமுறுப்பும் இல்லாமல், தன் குறையை நினைத்து தேவனிடம் முறையிடாமல், தேவ சித்ததிற்கு தன் வாழ்வை அர்பணித்து தன் வாழ்க்கையை மற்றவருக்கு பிரயோஜனமுள்ள ஒரு வாழ்வாய் வாழ்ந்து முடிக்க நினைத்த சூனேமியாளின் வாழ்க்கையில் கிரியை செய்ய ஆரம்பித்தார். எல்லாமே முடிந்து போய் இனி யாரிடம் கூறி என்ன பயன் என்ற நிலையில் வாழ்ந்த சூனேமியாளின் வாழ்க்கையில் எலிசா மூலம் தேவன் கிரியை செய்தார். அதனை நாம் அடுத்த பாகத்தில் தியானிப்போம்.

தேவன் தாமே, சூனேமியாளை போல அவரையே சார்ந்திருக்கிற நம் ஒவ்வொருவர் வாழ்விலும் அற்புதங்களை தம் சித்தத்தின் படியும், திட்டத்தின் படியும் நிச்சயம் செய்வார். ஆமென், அல்லேலூயா.

## 57. சூனேமியாள் (பாகம் - 2)



2 இரா 4 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள சூனேமியாள் என்னும் கனம்பொருந்திய ஸ்தீரி, எலிசா தீர்க்கதரிசியை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டு, அவர் தங்குவதற்கு தேவையான வசதிகளை தன் வீட்டில் செய்து கொடுத்து கனப்படுத்தினாள். இதன் மூலம் எவ்வாறு அவள் ஒரு நற்குணசாலியாய், தேவனுக்கு பயந்து, ஊழியரை கனம் பண்ணி, தன் செல்வத்தையும் மற்ற ஆசிர்வாதங்களையும் எவ்வாறு தேவனுக்காய் செலவு செய்தாள் என்பதையும், எந்த ஊள்நோக்கமும் இல்லாமலும், பிரதிபலனை எதிர்பாராமலும் அவள் வாழ்ந்தாள் என்பதை (சூனேமியாள் - பாகம் 1) என்ற தியானிப்பில் தியானித்தோம்.

எலிசா தீர்க்கதரிசி அவளுக்கு ஏதாவது உதவி செய்ய நினைத்து அதைக் குறித்து அவளிடம் கேட்ட பொழுது கூட அவள் கூறிய பதில் **"அவன் கேயாசியைப் பார்த்து: இதோ, இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்யவேண்டும்? ராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேசவேண்டிய காரியம் உண்டோ என்று அவளைக் கேள் என்றான். அதற்கு அவள்: என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன் என்றாள்."** (2 இரா 4:13) என்பதாகும். உண்மையிலேயே அவளுக்கு பிள்ளையில்லாமல் இருந்தும், அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவனாய் இருந்தும் (2 இரா 4:14), அவள் அதைப் பற்றி கூட அங்கு கூறவில்லை. இவ்வாறு தன் மிகுந்த மனவேதனையையும் ஒரு குறைவாக கூறாமல் கர்த்தருக்குள் தான் மனநிறைவுள்ளவளாய் சுகமாய் இருப்பதாக

கூறின சூனேமியாளின் வாழ்வில் தேவன் கிரியை செய்ய ஆரம்பித்தார், அதனை நாம் தொடர்ந்து தியானிப்போம்.

**2 இரா 4:15,16 கூறுகிறது "அப்பொழுது அவன்: அவளைக் கூப்பிடு என்றான்; அவளைக் கூப்பிட்டபோது, அவள் வந்து வாசற்படியிலே நின்றாள். அப்பொழுது அவன்: ஒரு பிராண உற்பத்திகாலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக்கொண்டிருப்பாய் என்றான். அதற்கு அவள்: ஏது? தேவனுடைய மனுஷனாகிய என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்லவேண்டாம் என்றாள்".** இங்கு நாம் எலிசா தீர்க்கதரிசி சூனேமியாளுக்கு தேவ வாக்காய், அவளுக்கு தேவன் செய்ய போகிற நன்மையை குறித்து கூறினான். இங்கு உண்மையாய், எவ்வித முறுமுறுபில்லாமல், அவரையே சார்ந்து வாழும் மக்களின் வாழ்க்கையில் எவ்வித குறையிருந்தாலும், அது எத்தனை காலமாய் இருந்தாலும், அவற்றை அவர் குறித்த நேரத்தில் அற்புதமாய் மாற்றிபோடுவார் என்பதை காண்கிறோம். "என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்லவேண்டாம்" என்று அவள் கூறுவது அவிசுவாசத்தினால் இராமல் மனதில் ஏற்பட்ட ஒரு விரக்தியினால் ஏற்பட்ட வெளிப்பாடாகும். நாமும், ஆண்டவரை முழுமையாய் விசுவாசித்து வாழ்கிற போதிலும், சில வேளைகளில் பிரச்சனையின் மிகுதியினால் அல்லது நெடுகாலமாய் மாறாமல் இருக்கிற கஷ்டதினால் சோர்ந்து போகிறோம். அப்பொழுது நாமும் சூனேமியாளை போல சில நேரங்களில் பேசி விடுகிறோம். ஆனால் நம்முடைய கண்ணீரை ஆனந்த களிப்பாய் மாற்றுகிற தேவன் இவற்றையெல்லாம் மன்னித்து நமக்கு அற்புதங்களை செய்கிறார். சூனேமியாளுக்கும் அவ்விதமே செய்தார். **(2 இரா 4:17).**

**2 இரா 4:18-20 வசனங்களில் "அந்தப் பிள்ளை வளர்ந்தான், ஒருநாள் அவன் அறுப்பறுக்கிறவர்களிடத்திலிருந்த தன் தகப்பனண்டைக்குப் போயிருக்கும்போது, தன் தகப்பனைப் பார்த்து: என் தலை நோகிறது, என் தலை நோகிறது என்றான்; அப்பொழுது அவன் வேலைக்காரனிடத்தில், இவனை இவன் தாயினிடத்தில் எடுத்துக்கொண்டுபோய்விடு என்றான். அவனை எடுத்து, அவன் தாயினிடத்தில் கொண்டுபோனபோது, அவன் மத்தியானமட்டும் அவள் மடியில் இருந்து செத்துப்போனான்.",** இங்கு நாம் காண்கிற காரியங்கள், தேவன் சூனேமியாளுக்கு ஒரு நன்மையை கொடுத்து, அந்த நன்மையின் மூலமாகவே ஒரு சோதனையையும் அனுப்பினார். எப்படி ஆபிரகாமுக்கு தேவன் ஈசாக்கை கொடுத்து, பின்பு பலியிட சொன்னது போல, இங்கு அற்புதமாய் ஆண்டவரால் கொடுக்கப்பட்ட பிள்ளை இறந்து போயிற்று.

**2 இரா 4:21-24 வசனங்களில் "அப்பொழுது அவள் ஏறிப்போய், அவனை தேவனுடைய மனுஷன் கட்டிலின்மேல் வைத்து, அவன் வைக்கப்பட்ட அறையின் கதவைப் பூட்டிக்கொண்டுபோய், தன் புருஷனிடத்தில் ஆள் அனுப்பி: நான் சீக்கிரமாய் தேவனுடைய மனுஷன் இருக்கும் இடமட்டும் போய்வரும்படிக்கு, வேலைக்காரரில் ஒருவனையும் ஒரு கழுதையையும் எனக்கு அனுப்பவேண்டும் என்று சொல்லச்சொன்னாள். அப்பொழுது அவன்: இது அமாவாசியும் அல்ல ஓய்வுநாளும் அல்லவே; நீ இன்றைக்கு அவரிடத்துக்குப் போகவேண்டியது என்ன என்று**

**கேட்கச்சொன்னான். அதற்கு அவள்: எல்லாம் சரிதான், நான் போகவேண்டியிருக்கிறது என்று சொல்லியனுப்பி, கழுதையின்மேல் சேணம்வைத்து ஏறி, தன் வேலைக்காரனை நோக்கி: இதை ஓட்டிக்கொண்டுபோ; நான் உனக்குச் சொன்னால் ஒழிய போகிற வழியில் எங்கும் ஓட்டத்தை நிறுத்தாதே என்று சொல்லிப் புறப்பட்டு,"** இங்கு நாம் காண்கிற காரியங்கள், சூனேமியாளை பற்றிய முழுவடிவத்தையும் நமக்கு காண்பிக்கிறது. குணசாலியான ஸ்தீரியாய், தேவனுக்கு பயந்து ஊழியர்களை கனம்பண்ணி, கணவனுக்கு கீழ்படிந்து வாழும் ஒரு குடும்ப தலைவியாய் நாம் அவளை கண்டோம். ஆனால் இங்கு இப்படிப்பட்ட அசாதரமாண சூழ்நிலையின் மத்தியிலும் பதற்றபடாமல், தன் கணவனுக்கு கூட எதையும் தெரிவிக்காமல், அழுது புலம்பாமல், தனக்கு தேவன் கொடுத்த நன்மை ஒருபோதும் வீண்போவதில்லை, அதன்மூலம் தனக்கு நன்மையே அன்றி தீமை வருவதில்லை என்ற மன உறுதியோடு தேவனிடமே அதைகுறித்து முறையிட எலிசாவிடம் சென்றாள்.

இங்கு ஒரு பெண்ணாய், தாயாய் அவள் மனம் எவ்வளவு துடித்திருக்கும். தன் கணவன் உள்பட யாரிடமும் எதுவும் கூறாமல் தனியே இச்சூழ்நிலையை எதிர்கொள்வது, கர்த்தருக்குள் அவளுடைய மன உறுதியையும், மரித்து போனான் இனி எல்லாம் முடிந்தது என்று எண்ணாமல், இந்த பிரச்சனைக்கு நிச்சயம் தீர்வு உண்டு என்ற மன உறுதியோடு அவள் எலிசாவை நோக்கி செல்வது, ஆபிரகாமின் விசுவாசத்தை காட்டிலும் ஒருபடி மேலோங்கி நிற்கிறது.

மேலும் **2 இரா 4:25,26 வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி "கர்மேல் பர்வதத்திலிருக்கிற தேவனுடைய மனுஷனிடத்திற்குப் போனாள்; தேவனுடைய மனுஷன் தூரத்திலே அவளை வரக்கண்டு, தன் வேலைக்காரனாகிய கேயாசியைப் பார்த்து: அதோ சூனேமியாள் வருகிறாள். நீ அவளுக்கு எதிர்கொண்டு ஓடி, நீ சுகமாயிருக்கிறாயா? உன் புருஷன் சுகமாயிருக்கிறானா? அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா என்று அவளிடத்தில் கேள் என்றான். அவள்: சுகந்தான் என்று சொல்லி",** எலிசாவிற்கு கூட தேவன் தாம் செய்வதை மறைத்து, அவர் மூலமாகவே சூனேமியாளை விசாரிக்க செய்கிறார். 26 ஆம் வசனத்தில் நாம் காண்கிறபடி அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா என்று கேட்ட கேள்விக்கு, சுகந்தான் என்று அவள் சொல்லிய பதில் அவளுடைய விசுவாசத்தின் உச்சத்தை நமக்கு காண்ப்பிக்கிறது. ஒரு தாயாய், யாரிடம் அந்த கேள்வியை கேட்டாலும் அந்நேரத்தில் உடைந்து போவார்கள், ஆனால் விசுவாசத்தோடு, ஒரு அற்புதம் நிகழ போகிறது என்ற உறுதியோடு சுகந்தான் என்று கூறினாள்.

**2 இரா 4:27** கூறுகிறபடி அவள் எலிசாவின் காலைப் பிடித்துக்கொண்டாள். தேவ மனுஷனாய், தேவனிடத்தில் இருந்து தனக்கு கிடைத்த நன்மைக்கு ஒரு வாய்க்காலாய் இருந்த எலிசா தீர்க்கதரிசியே இப்பொழுது தேவனிடத்தில் இருந்து தனக்கு ஒரு அற்புதத்தையும் பெற்று தர முடியும் என்று நம்பினாள். அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறதையும், அதற்கான காரணத்தையும் தேவன் எலிசாவிற்கு வெளிப்படுத்தினார். எலிசா

கேயாசியை அனுப்பியும், அவளோ எலிசாவே வரவேண்டும் என்று கூறினாள். **"நான் உம்மை விடுகிறதில்லை" (2 இரா 4:30)** என்று கூறுவது தேவன் நிச்சயமாகவே அற்புதம் செய்வார் அதற்கு எலிசா செயல்படவேண்டும் என்பதை கூறுவதற்கே. இங்கு நாம் அறிந்து கொள்கிற ஒரு சத்தியம், நாம் ஜெபத்திற்க்காய், விடுதலைக்காய் தேவ மனிதர்களை அணுகும்பொழுது, முதலாவது நமக்கு தேவன் அற்புதம் செய்வார் என்ற விசுவாசம் இருக்க வேண்டும், அந்த விசுவாசத்தை தாங்கி பிடித்து, உண்மையான உள்ளத்தோடு தேவ ஊழியர்களும் நமக்காக ஜெபிக்கும் பொழுது நம் வாழ்வில் அற்புதம் நிகழ்கிறது.

நாம் விசுவாசிக்காமல் தேவ ஊழியரை ஒரு மந்திரவாதி போல் நினைத்து, அவரிடம் சென்று ஜெபித்தால் அல்லது காணிக்கை கொடுத்தாள் எல்லாம் மாறிவிடும் என்று நினைப்பது மடமையாகும். **2 இரா 4:37 இல் கூறப்பட்டுள்ளபடி, "அப்பொழுது அவள் உள்ளே போய், அவன் பாதத்திலே விழுந்து, தரைமட்டும் பணிந்து, தன் குமாரனை எடுத்துக்கொண்டு வெளியே போனாள்"**, நன்றியறிதல் உள்ளவளாய், தன் பிள்ளைக்காய் ஜெபிக்க வந்த எலிசாவின் பாதத்தில் விழுந்து தன் பிள்ளையை சுகத்தோடு எடுத்து சென்றாள். இது நன்மையை பெற்றபின் தேவனுக்கும், தேவ ஊழியர்களுக்கும் நாம் நன்றியறிதல் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. ஏதோ பெற்ற அற்புதத்திற்கு காணிக்கை கொடுத்து விட்டால் எல்லாம் முடிந்தது, இனி மற்றொரு பிரச்சனை வந்தால் அந்நேரம் தேவனையும், தேவ ஊழியரையும் தேடலாம் என்றில்லாமல், என்றும் நன்றியோடு நாம் வாழ வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. தேவன் தாமே இப்படிப்பட்ட சாட்சியுள்ள வாழ்க்கையை நாமும் வாழ கிருபை செய்வாராக, ஆமென், அல்லேலூயா.

## 58. குயவன்




**எரேமியா 18:6** கூறுகிறது **"இதோ, இஸ்ரவேல் வீட்டாரே, களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்."** என்று. இது ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாக இருக்கும் விசுவாச மக்களான நமக்கும் பொருந்தும். நாம் **எரே 18:1-10** வசனங்கள் வரை படிக்கும்பொழுது, அங்கு கர்த்தர் எரேமியாவை குயவன் வீட்டிற்கு போக சொல்கிறார். அப்பொழுது **"அப்படியே நான் குயவன் வீட்டிற்குப் போனேன்; இதோ, அவன் திரிகையினாலே வனைந்துகொண்டிருந்தான். குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறேபாண்டமாக வனைந்தான்." (எரே 18:3-4).** இங்கு குயவன் தன் சித்தத்தின்படி அந்த களிமண் உருவாகாததால் அதை திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்.

இதன் மூலம் ஆண்டவர் **எரே 18:7-10** வசனங்களில் பின்வருமாறு கூறுகிறார், **"பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில், நான் விரோதமாய்ப் பேசின அந்த ஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன். கட்டுவேன், நாட்டுவேன் என்றும், ஒரு ஜாதியையும் ஒரு ராஜ்யத்தையும் குறித்து**

**நான் சொல்லுகிறதுமுண்டு. அவர்கள் என் சத்தத்தைக்கேளாமல், என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால், நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்**". இங்கு நாம் அறிந்துகொள்கிற சத்தியம், முதலாவது குயவனே நாம் எப்படிப்பட்ட பாத்திரமாய் இருக்க வேண்டும் என்று முடிவு செய்கிறார்.

**ரோ 9:21** கூறுகிறது "**மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ?**", மண்ணாகிய நம்முடைய வேலை, குயவன் கையில் அவர் நினைத்தபடி வனையும்படியாய் இசைந்துகொடுக்க வேண்டும். அப்பொழுது தேவன் நம் வாழ்க்கையில் வைத்துள்ள திட்டங்கள் யாவும் நேர்த்தியாய் நிறைவேறும். ஒருவேளை ஆண்டவர் நம்மை வனையும்பொழுது, நாம் அதற்கு இசையாமற் போனால் **எரே 18:4** இல் கூறப்பட்டுள்ளபடி, குயவன் கையிலே கெட்டுபோன மண்பாண்டமாய், உபயோகமற்றவர்களாய் மாறிவிடுவோம். ஆகிலும் இன்னும் நாம் அவர் கையில் தான் இருக்கிறோம். எனவே திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைகிறார்.

இங்கு நாம் அறிந்து கொள்ளும் மூன்று காரியங்கள். (1) திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, (2) தன் பார்வைக்குச் சரியாய் மற்றும் (3) வேறே பாண்டமாய். நாம் அவருக்கு ஒத்துழைக்காததினால் தேவன் களிமண்ணாகிய நம்மை தூக்கி எறிந்துவிடுவதில்லை. மறுபடியும் திருத்தமாய் அதை செய்ய முயல்கிறார். ஒருவேளை நாம் முதல் தடவை கெட்டுபோயிருந்தாலும் மற்றொரு வாய்ப்பிலாவது ஆண்டவருக்கு இசைந்து நம்மை உருவாக்க அவர் சித்ததிற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்பொழுது நாம் பிரயோஜனமுள்ள பாத்திரமாய் மாறுவோம்.

ஆனால் நாம் நம் சுயசித்தத்தின்படி நம் வாழ்க்கையை நடத்த நினைத்தாள், நஷ்டம் நமக்குதான் ஒழிய அவருக்கில்லை. அவர் தன் பார்வைக்குச் சரியாய் கண்டபடி நம்மை வனைகிறார். ஒருவேளை நம் வாழ்க்கை தாறுமாறாய் சென்று கனவீனமான பாத்திரம் போல் காணப்பட்டாலும் அல்லது கெட்டுபோன / பிரயோஜனமில்லா பாத்திரம்போல் காணப்பட்டாலும், ஆண்டவருக்கு நாம் நம்மை அவர் சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கும்பொழுது, அவர் தன் பார்வைக்குச் சரியாய் கண்டபடி மறுபடியும் நம்மை வேறோரு பிரயோஜனமான பாத்திரமாய் மாற்றுகிறார். அதேவேளையில் கனமான பாத்திரமாய், பிரயோஜனமான பாத்திரமாய் உருவாக்கப்பட்டிருந்தாலும், அதற்கேற்ற விதமாய் நாம் கிரியை செய்யாத பட்சத்தில் **எரே 18:9,10** வசனங்கள் கூறுகிறபடி, கனமான பாத்திரமாய் இருந்தும் அதற்குரிய பிரயோஜனம் (நன்மை), நம்மில் உண்டாகாதபடிக்கு, கர்த்தர் மனம் மாறுவார்.

ஒருவேளை நாம் கனவீண பாத்திரமாய் உருவாக்கப்பட்டிருந்தாலும், ஆண்டவருடைய சித்ததிற்கு அர்பணித்து, சாதாரண நிலையிலும், அவருக்கு பிரயோஜனமாய் காணப்படுவோமானால், நம்மை உயர்த்திட தேவன் வல்லவராய் இருக்கிறார். எனவே நாம் சொல்ல வேண்டியதெல்லாம், பக்தன் பாடியதுபோல

**என்னை உம் கையில் படைத்தேன் முழுவதுமாய்**

**என்னையும் பயன்படுத்தும்**

**குயவன் நீர், களிமண் நான்**

**உம் சித்தம் நிறைவேற்றுமே.**

ஆமென் அல்லேலூயா.

# 59. காரியம் மாறுதலாய் முடியும்



நம் அனைவருக்கும் வேதாகமத்தில் உள்ள எஸ்தர் புத்தகத்தை பற்றி நன்கு தெரியும். இஸ்ரவேல் மக்கள் பாபிலோனுக்கு சிறைப்பட்டு போய் அங்கு அடிமைகளாய், அந்நியர்களாய் வாழ்ந்த காலம் அது. முதலாவது பாபிலோனிய சாம்ராஜ்யமும், பிறகு மேதிய பெர்சிய சாம்ராஜ்யமும் ஆண்டது. இந்த மேதிய பெர்சிய சாம்ராஜ்யம் ஆண்ட காலத்தில், நடைபெற்ற சம்பவமே எஸ்தர் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த புத்தகத்தின் ஒரு சிறப்பு, நமது இந்திய தேசத்தின் பெயரை குறிப்பிட்டே இந்த புத்தகம் ஆரம்பம் ஆகிறது. இதில் பல்வேறு காரியங்கள் குறிப்பிடபட்டிருந்தாலும், எஸ்தர், மொர்தெகாய், அகாஸ்வேரு ராஜா, ஆமான் என்ற நான்கு நபர்களை சுற்றியே புத்தகம் முழுவதும் காணப்படுகிறது. இப்புத்தகத்தில் கர்த்தர் என்ற வார்த்தையோ, ஆண்டவரை பற்றியோ வெளிப்படையாக எந்த அதிகாரத்திலும் கூறப்படவில்லை. ஆனால் அதில் நிகழும் ஒவ்வொரு காரியமும், ஆண்டவரின் சித்தத்தின்படி, அநாதி திட்டத்தின்படி அற்புதமாய் நடப்பதை நாம் காணலாம். பயங்கரமான நெருக்கத்தின் மத்தியில் சென்ற எஸ்தரும், மொர்தெகாயும், அகாஸ்வேரு ராஜ்யம் முழுவதும் இருந்த யூதர் அனைவரும், தாங்கள் எந்த நாளில் தங்கள் சத்துருக்களால் அழிக்கப்படுவோம் என்று நினைத்தார்களோ, அதே நாளில் தங்கள் சத்துருக்களை மேற்கொள்ளவும், அழிக்கவும், விருந்துண்டு பண்டிகை கொண்டாடுகிற நாளாய் அது மாறவும், இப்படியாக **காரியம் மாறுதலாய் முடிய** காரணம், எஸ்தரும், மொர்தெகாயும், மற்ற யூதரும் மூன்று நாள் செய்த உபவாசம் ஆகும். இங்கு அவர்கள் (யூதர்கள்) உபவாசம் இருந்து வேண்டியது சர்வ வல்லமையுள்ள கர்த்தரை நோக்கியே ஆகும்.

எஸ்தர் புத்தகத்தில் மூன்றாம் அதிகாரத்தில், ஆமான் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பாகவே, எஸ்தர் இராஜாத்தியாக்கப்படுவது, ஆமான் மூலமாய் சோதனை உண்டாவதற்கு முன்னரே, அதை முறியடிக்க, தேவன் எஸ்தரை இராஜாத்தியாக்கினார். இன்றைய சூழ்நிலையிலும் நம் இந்திய தேசத்தில், தேவ பிள்ளைகளுக்கு எதிராக சத்துருவானவன் அதிகாரத்தின் மூலமாய் செயல்படுகிறான். ஆனால் எஸ்தரை போல் இந்நாளிலும், ஆமானின் துஷ்ட தனத்தை முறியடிக்க ஆண்டவர் தம் பிள்ளைகளை எழுப்பி கொண்டு இருக்கிறார்.

**எஸ்தர் 3:1-6** வசனங்களில், "**இந்த நடபடிகளுக்குப்பின்பு, ராஜாவாகிய அகாஸ்வேரு அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியனை மேன்மைப்படுத்தி, தன்னிடத்திலிருக்கிற சகல பிரபுக்களுக்கும் மேலாக அவனுடைய ஆசனத்தை உயர்த்திவைத்தான். ஆகையால் ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் எல்லாரும் ஆமானை வணங்கி நமஸ்கரித்து வந்தார்கள்; அவனுக்கு இப்படிச் செய்யவேண்டும் என்று ராஜா கட்டளையிட்டிருந்தான்; ஆனாலும் மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவுமில்லை. அப்பொழுது ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் மொர்தெகாயைப் பார்த்து: நீ ராஜாவின் கட்டளையை மீறுகிறது என்ன என்று கேட்டார்கள். இப்படி அவர்கள் நாளுக்குநாள் அவனுடனே சொல்லியும், அவன் தங்களுக்குச் செவிகொடாதபோது, தான் யூதன் என்று அவன் அவர்களுக்கு அறிவித்திருந்தபடியால், மொர்தெகாயின் சொற்கள் நிலைநிற்குமோ என்று பார்க்கிறதற்கு, அதை ஆமானுக்கு அறிவித்தார்கள். ஆமான் மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததைக் கண்டபோது, மூர்க்கம் நிறைந்தவனானான். ஆனாலும் மொர்தெகாயின்மேல்மாத்திரம் கைபோடுவது அவனுக்கு அற்பக்காரியமாகக் கண்டது; மொர்தெகாயின் ஜனங்கள் இன்னாரென்று ஆமானுக்கு அறிவிக்கப்பட்டிருந்தபடியால், அகாஸ்வேருவின் ராஜ்யமெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க அவன் வகைதேடினான்.**".

ஆமானின் துஷ்ட தனத்திற்கு காரணம், மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவுமில்லை. இராஜா கட்டளையிட்டிருந்த பொழுதிலும், ராஜாவின் ஊழியக்காரர், "**நீ ராஜாவின் கட்டளையை மீறுகிறது என்ன**" என்று பலமுறை கேட்டபொழுதும், மொர்தெகாய் கூறிய ஒரே பதில் தான் ஒரு யூதன் என்பதாகும். ஜீவனுள்ள தேவனை அன்றி வேறு எதையும் வணங்க, நமஸ்கரிக்க முடியாது, அதற்காய் இராஜாவின் கட்டளையை மீறவும் அவர் தயாராய் இருந்தார். இராஜாவின் கட்டளை அனைத்தும், தேச சட்டத்தின்படி அமைக்கப்பட்டு, மீறபடுமானால், கடுமையான் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று வஸ்தியின் விசயத்தில் நடந்ததை மொர்தெகாய் அறிந்திருந்தும் அவர் தேவனுக்காய் வைராக்கியம் பாராட்டினார்.

இன்றைய காலகட்டத்திலும், இந்திய தேசத்தில் வாழும் நமக்கும் இதே நிலைதான். தேவனுக்கு விரோதமான காரியங்கள், அதிகாரத்தில்

உள்ளவர்கள் மூலம் சட்டமாக்கப்பட்டு, அதை நடைமுறைப்படுத்த, துஷ்ட ஆமானை போன்றவர்கள் முயல்கின்றனர். தேவ பிள்ளைகள் தேவனை ஆராதிப்பதை விட்டு, அவரை தெய்வமாக கொண்டிருப்பதை விட்டு, தாங்கள் காட்டினதிற்கு அவர்கள் அடிபணிய வேண்டும் என்ற நோக்கத்தோடு, அன்று சிறுபான்மையினராய் இருந்த யூதர்களை போல, இன்று சிறுபான்மையினராய் இருக்கும் கிறிஸ்தவர்களாகிய நம்மீது தாக்குதல் தொடுக்கப்படுகிறது. அன்று இராஜாவின் ஊழியகாரர் கூறியது போல, இன்று கிறிஸ்தவர்களை பார்த்தும், இதுதான் சட்டம் இப்படித்தான் நீங்கள் வாழ வேண்டும். இதைதான் தொழுதுகொள்ள வேண்டும் என்று அதிகாரத்தை கையில் வைத்துள்ளவர்கள் கூறினாலும், அதை மீறினால் தேச துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டாலும், நாம் மொர்தெகாயை போல தைரியமாய் ஆண்டவருக்காய் வைராக்கியம் பாராட்ட வேண்டும். துஷ்ட ஆமான், இராஜாவிடம் நயவஞ்சகமாய் பேசி, யூதர்களின் அழிவிற்கு நாள் குறித்தான். **(எஸ்தர் 3:7-15).**

**எஸ்தர் 4:1-3** வசனங்கள் கூறுகிறது “**நடந்த யாவற்றையும் மொர்தெகாய் அறிந்தபோது, மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டுப்போய், துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறிக்கொண்டு, ராஜாவின் அரமனை வாசல் முகப்புமட்டும் வந்தான்; இரட்டுடுத்தினவனாய் ராஜாவின் அரமனை வாசலுக்குள் பிரவேசிக்க ஒருவனுக்கும் உத்தரவில்லை. ராஜாவின் உத்தரவும் அவனுடைய கட்டளையும் போய்ச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் ஸ்தலத்திலுமுள்ள யூதருக்குள்ளே மகா துக்கமும், உபவாசமும், அழுகையும், புலம்பலும் உண்டாய், அநேகர் இரட்டுடுத்திச் சாம்பலில் கிடந்தார்கள்.**“,

இதை போன்ற ஒரு சூழ்நிலை இன்று நம் தேசத்தின் தேவ மக்களிடமும் நிலவுகிறது. இதில் மேலும் ஒரு கொடூரமான காரியம் என்னவென்றால் இந்தியர்களாகிய நாம், நம் சுய தேசத்தில் வாழ்ந்தும், கிறிஸ்தவ மிஷனரிகள் மற்றும், நம் முன்னோர்கள் இந்நாட்டிற்காய் பல நல்ல காரியங்களை (கல்வி, மருத்துவம்) செய்தும், தேசத்தின் உண்மையான சட்டம் நமக்கு சகல உரிமைகளையும், மத சுதந்திரத்தையும் கொடுத்திருந்தும், துஷ்ட ஆமான்களால் திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம், ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களும், சட்டத்தை காப்பாற்ற வேண்டிய நீதித்துறையும் இன்று கைகோர்த்து தேவ பிள்ளைகளுக்கு துன்பத்தை ஏற்படுத்துகின்றன.

ஆனால் நாம் வெறுமனே மொர்தெகாயை போல அழுதுகொண்டிராமல், எஸ்தர் கூறியதை போல, தேவ பிள்ளைகள் அனைவரும் சபை பாகுபாடின்றி ஒரே குரலாய் உபவாசத்தோடு பரலோக தேவனை நோக்கி பார்க்க வேண்டும். அப்பொழுது நிச்சயமாய் நமக்கு ஏதாவது ஒரு விதத்தில் ஆண்டவர் சகாயம் அருள்வார். அகாஸ்வேரு இராஜாவின் மனதையோ அல்லது அகாஸ்வேரு இராஜாவையே மாற்ற தேவன் வல்லமையுள்ளவர். நிச்சயமாய் எந்த இடத்தில் தேவ பிள்ளைகள் நசுக்கப்படுகிறார்களோ, அதே இடத்தில் சத்துருவின் தலை நசுக்கப்படும், எந்த நாளை குறித்து யூதர்கள் பயந்தார்களோ, அதே நாளில் அவர்கள் தங்கள் சத்துருக்களை

மேற்கொண்ட்து போல, நம் இந்திய தேசத்திலும் எந்த இடத்தில் எல்லாம் எதிர்ப்புக்கள் அதிகமாய் இருக்கிறதோ, அதே இடத்தில் தேவ பிள்ளைகளை அலை அலையாக தேவன் எழுப்புவார்.

அன்று இந்திய தேசம் உள்பட அகாஸ்வேரு அரசாண்ட 127 நாடுகளில் இருந்த யூதர்களை காட்டிலும் அதிகமாய் மக்கள் வாழும் நம் நாட்டில் நிச்சயமாய் ஒரு எழுப்புதல் ஏற்படும். ஆண்டவரை நம்பாமற் போன தோமாவிற்கு, இரண்டாவது முறையாய் காட்சியளித்து அவரது விசுவாசத்தை திடப்படுத்தி, அவரை இந்திய தேசத்திற்கு அனுப்பி, குறிப்பாக தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை பட்டினத்தில் இரத்த சாட்சியாக 2000 வருடத்திற்கு முன்பாக மரிக்க, ஆண்டவர் சித்தம் கொண்டிருப்பாரானால், நிச்சயமாக ஆண்டவர் நம் சென்னை பட்டணத்தையும், தமிழ்நாட்டையும், இந்திய தேசத்தையும் பற்றி மேலான ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். எனவே நாம் பயப்படாமல் எஸ்தரை போல, மொர்தெகாயை போல தைரியமாய் ஆண்டவருக்காக வைராக்கியம் பாராட்ட வேண்டும். வெறும் 127 நாடுகளை மட்டும் சில காலம் ஆண்டு, பின்பு மறைந்து போன அகாஸ்வேரு இராஜாவை காட்டிலும், அண்ட சராசரங்களையும் உண்டாக்கி அதை தமது ஆளுகைக்குள் வைத்திருக்கும் இராஜாதி இராஜாவான தேவனை நம்பியிருக்கும் நாம், எஸ்தர் அகாஸ்வேருவிடம் மன்றாடியதை போல, நாமும் ஆண்டவரிடம் மன்றாடும் பொழுது **நிச்சயமாய் காரியம் மாறுதலாய் முடியும்**. எனவே இன்றைய கால அரசியல் மற்றும் சமூக சூழ்நிலையை குறித்து கவலைப்படாமல் தைரியமாய் முன்னேறுவோம். தேசத்தை ஆண்டவருக்காய் சுதந்தரிப்போம். ஆமென், அல்லேலூயா.

## 60. எல்லாவற்றையும் விட்டு



**"சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்." (லூக் 5:10,11).**

**"இவைகளுக்குப் பின்பு, அவர் புறப்பட்டு, ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த லேவி என்னும் பேருடைய ஒரு ஆயக்காரனைக் கண்டு: எனக்குப் பின்சென்று வா என்றார். அவன் எல்லாவற்றையும் விட்டு, எழுந்து, அவருக்குப் பின்சென்றான்." (லூக் 5:27,28).**

மேற்க்கண்ட வசனங்களில் நாம் காண்பது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை ஊழியத்திற்கு அழைத்தபொழுது அவருக்கு கீழ்படிந்து, அவருக்கு பின்சென்றதை பற்றி கூறுகிறது. இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான காரியம், "எல்லாவற்றையும் விட்டு" என்ற வார்த்தையாகும். சீமோனாகிய பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் சற்று முன்னர் வரை தங்கள் தொழிலான மீன் பிடிப்பதில் மிகவும் கவனமாக ஈடுப்பட்டு கொண்டிருந்தனர். அது அவர்களுடைய வாழ்வாதாரம். அவர்களை சார்ந்து ஒருவேளை பெற்றோர், மனைவி, பிள்ளைகள் போன்ற குடும்ப உறுப்பினர்கள் இருந்திருக்க கூடும்.

ஆனால் இதை எதைப்பற்றியும் சிந்திக்காமல், ஆண்டவர் அழைத்தவுடனே அவர்கள் அனைவரும் தங்கள் படவுகளைக் கரையிலே கொண்டு போய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றார்கள். வலை கிழியத்தக்கதாய் தாங்கள் பிடித்த மீன்களை பற்றியோ, தங்கள் படவுகள் மற்றும் குடும்ப காரியங்களை மற்றவரிடம் ஒப்படைப்பதை பற்றியோ (லூக் 5:6) அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அதேபோல் ஆயத்துறையில் வரியை வாங்கிகொண்டு உட்கார்ந்திருந்த லேவி, ஆண்டவர் அழைத்தவுடன் எல்லாவற்றையும் விட்டு,

எழுந்து, அவருக்கு பின்சென்றான் **(லூக் 5:27,28)** என்று வசனம் கூறுகிறது. இவரும் தன் குடும்பத்தை பற்றியோ, தன் கையில் உள்ள வரி பணம் பற்றியோ, தன்னுடைய அரசாங்க வேலை என்று எதை பற்றியும் கவலைப்படாமல் உடனே ஆண்டவருக்கு பின்சென்றார்.

இங்கு அவர்கள் ஆண்டவருக்கு பின்சென்றது ஏதோ தங்களுக்கு பெரியதாக கிடைக்கபோகிறது என்பதற்காக அல்ல, அல்லவென்றால் ஏதோ ஒரு கொள்கையை நிறைவேற்ற அரசியல் / சமூக தளங்களில் கலந்து கொள்வதை போல் அவர்கள் ஆண்டவரை பின்செல்லவில்லை. அவர்களை ஆண்டவர் சந்தித்த பொழுது, அவர்களுடைய உள்ளான மனதில் தங்களுடைய பாவ நிலைமையை உணர்ந்தனர், தங்களை போல் மற்றவரும் இப்படிப்பட்ட பாவத்தின் கீழ் அடிமைபட்டிருப்பதை உணர்ந்தனர். **ஆண்டவருடைய பார்வையும் (கண்டு), அவருடைய அழைப்பும் (பின்சென்று வா), தங்கள் வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை க்ஷண பொழுதில் அறிந்துகொள்ள அவர்களுக்கு உதவினது**, அதுவே உடனே எல்லாவற்றையும் விட்டு அவரை பின்செல்ல அவர்களை தூண்டினது.

**அப் 4:13** கூறுகிறது **"பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள்"**, ஆம் அவர்கள் படிப்பறியாதவர்கள், ஞானமில்லா பேதைமையுள்ளவர்கள், மனுஷரால் வெறுக்கப்பட்ட ஆயத்துறையில் பணியாற்றியவர்கள், ஆனால் அவர்களைதான் ஆண்டவர் அழைத்தார். அவர்களுடைய அழைப்பு அநாதியானது. இன்று வரையிலும் உலக முழுவதும் அவர்களை பற்றி பேசப்பட காரணம் ஆண்டவர் அவர்களை அழைத்த அழைப்பும், அதற்கு அவர்கள் கீழ்படிந்ததுமே.

**யோ 6:59,60 "கப்பர்நகூமிலுள்ள ஜெபஆலயத்திலே அவர் உபதேசிக்கையில் இவைகளைச் சொன்னார். அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்."** மேலும் **யோ 6:66,67 "அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள். அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்."**, ஆனால் இதற்கு பேதுரு கூறிய பதிலே, எது அவர்களை ஆண்டவரை பின்பற்றி செல்ல வைத்தது என்பதை காண்பிக்கிறது. **யோ 6:68,69 "சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்."**, ஆம் அவருடைய கிருபை பொருந்திய பார்வை, அவருடைய வார்த்தை, அவரோடு கூடியிருக்கிற ஐக்கியம் ஆகிய இவைகளே காந்தத்தை பற்றிய இரும்பை போல அவரை விடாமல் பற்றிகொள்ள செய்தது.

ஒருவேளை மனுஷிக பிரகாரமாக அவர்களிடம் குறைகள் இருந்தாலும், தங்களில் யார் பெரியவன் என்ற எண்ணம் அவர்களிடம் காணப்பட்டாலும், ஆண்டவரை போர்சேவகர்கள் பிடிக்க வந்தபொழுது, ஓடி ஒளிந்திருந்தாலும், தனக்கு அவரையே தெரியாது என்று பேதுரு மறுதலிக்கவே செய்தாலும், அப்போஸ்தலர்களாய் தெரிந்துகொள்ளபட்ட, அழைக்கப்பட்ட அவர்களுடைய இருதயம் "நீரின்றி வாழ்வேது தேவா, உம் நினைவின்றி மகிழ்வேது இறைவா" என்று சொல்லி, தங்கள் மணவாளனை இழந்து தவிக்கும் மணவாட்டி போலவே காணப்பட்டது. **யோவான் 21ஆம்** அதிகாரத்தில், மறுபடியும் மீன்பிடி தொழிலுக்கு அவர்கள் சென்றபொழுதும்,

ஆண்டவர் அன்பு அவர்களை மறுபடியும் தேடி வந்து, அவர்களை அழைத்து அவர்களுடைய அழைப்பின் நோக்கத்தை உணர செய்தது.

இதன்பின் பரிசுத்த ஆவியினால் நிரப்ப பட்டு, வல்லமையாக ஆண்டவருடைய ஊழியத்தை செய்தனர். இரத்த சாட்சிகளாய் தங்களை ஆண்டவர் பணிக்கென ஒப்புக்கொடுத்தனர். ஆதலால் இன்றளவும் அவர்களுடைய பெயர் உலகமுழுவதும் அறியபடுகிறது. பரலோகத்தில் அவர்களுடைய ஸ்தலத்தை ஆண்டவர் ஆயத்தம் பண்ணி தந்திருப்பார். இவ்வுலகத்தில் உள்ள எல்லாவற்றையும் விட்ட அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எதையும் இழந்து போகவில்லை. **யோ 17:7-9 "நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே."** கூறியுள்ளபடி, அவர்கள் அவருக்காக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இதை போன்ற ஒரு அழைப்பையே ஆண்டவர் இன்று நமக்கும் தருகிறார். சிலுவையை எடுத்து கொண்டு அவரை பின்செல்லும் அனைவருக்கும் நித்திய பாக்கியமும், மேன்னையும் உண்டு. ஆமென், அல்லேலூயா.

## 61. பேதுரு



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடனே கூட ஊழியம் செய்வதற்கு, அவரால் நேரடியாக அழைக்கப்பட்டவர்கள் அப்போஸ்தலர்களாவர். ஆண்டவர் தன்னுடைய சித்தத்தை, திட்டத்தை இவ்வுலகில் தொடர்ந்து செய்ய இவர்களை தெரிந்தெடுத்தார். அப்படியாக தெரிந்தெடுக்கபட்டவர்களில் முதன்னையானவர் அப்போஸ்தலர் பேதுரு ஆவார். வாழ்க்கையில் சறுக்கல்கள் இருந்தாலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதற்கு ஓர் நல்ல முன்மாதிரியாய் அவர் வாழ்க்கை காணப்பட்டது. அவற்றில் சில காரியங்களை நாம் இப்பொழுது தியானிப்போம்.

### 1. ஆண்டவரை பற்றி அறிந்து கொண்டது:

அப். பேதுரு, தனது சகோதரர் அந்திரேயா மூலமே ஆண்டவரை பற்றி முதலாவது அறிந்துகொண்டார். **யோ 1:40,41** கூறுகிறது **“யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற இரண்டுபேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக்**

**கண்டு: மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம்.”**, இங்கு அந்திரேயா நாங்கள் மேசியாவை கண்டோம் என்று கூறுவது, பேதுரு மேசியா வருவதை ஆவலாய் எதிர்பார்த்து காத்துகொண்டிருந்த இஸ்ரவேல் மக்களில் ஒருவர் என்பதை கண்டுகொள்ளலாம். ஆதலால் அப்படிப்பட்ட மேசியா எப்படி இருப்பார் என்பதை காண அந்திரேயா மூலமாய் ஆண்டவரிடம் அழைத்து வரபட்டார். **யோ 1:42** கூறுகிறது **“பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக்கொண்டுவந்தான். இயேசு அவனைப் பார்த்து: நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்.”** இங்கு ஆண்டவரை கண்ட பேதுரு என்ன கூறினார் என்பது பதிவு பண்ணபடவில்லை. ஆனால் ஆண்டவர் பேதுருவை குறித்து ஒரு நோக்கம் கொண்டிருந்தார் என்பதை அவர் கேபா என்று அவருக்கு பெயரிட்டது மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். இன்று நம்மையும், அவர் அவ்வாறே பெயரிட்டு பிரித்து தம்முடைய சித்தத்தையும், நோக்கத்தையும் நிறைவேற்ற அழைத்திருக்கிறார். பேதுருவை போல் நாமும் அதற்கு கீழ்படிந்தால், இம்மையிலும், மறுமையிலும் நித்திய பாக்கியம் நமக்கு கிடைக்கும்.

## 2. பின்செல்லுதல்:

ஆண்டவரை முதலாவது பேதுரு கண்டபொழுது, ஆண்டவர் தனக்கென வைத்திருக்கும் நோக்கத்தை அவர் சரியாக உணர்ந்துகொள்ளவில்லை. அவர் மறுபடியும் தன் மீன் பிடி தொழிலுக்கே சென்றார். ஆண்டவர் அவரை தேடிசென்றார். **லூக் 5:1-3** கூறுகிறது **“பின்பு அவர் கெனேசரேத்துக் கடலருகே நின்றபோது, திரளான ஜனங்கள் தேவவசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள். அப்பொழுது கடற்கரையிலே நின்ற இரண்டு படவுகளைக் கண்டார். மீன்பிடிக்கிறவர்கள் அவைகளை விட்டிறங்கி, வலைகளை அலைசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தப் படவுகளில் ஒன்றில் ஏறினார், அது சீமோனுடையதாயிருந்தது; அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டு, அந்தப் படவில் உட்கார்ந்து, ஜனங்களுக்குப் போதகம்பண்ணினார்.”** மேற்க்கண்ட வசனங்களில் அவர் சீமோனுடைய படவை கேட்டுபெற்று அதின்மேல் அமர்ந்து ஜனங்களுக்கு உபதேசம் பண்ண வலைகளை அலசிக்கொண்டே பேதுருவும் அதை கேட்டிருப்பார். ஆனால் அதே நேரத்தில் அன்று மீன்கள் எதுவும் கிடைக்காதலால், பிழைப்பிற்கு என்ன செய்வது என்ற கவலையும் அவர் மனதில் இருந்திருக்கும். ஆனால் **லூக் 5:4,5** வசனங்களில் **“அவர் போதகம்பண்ணி முடித்த பின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார்.**

**அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்."** இங்கு மீன்பிடிக்கும் தொழில் செய்பவரான அவர், தன் திறமையில் எல்லா முயற்சியும் செய்து தோற்ற பின்பு, இனி எதுவும் கிடைக்காது என்ற நேரத்தில் ஆண்டவர் கூறியதை நம்பி அவர் வலையைப் போட்டது, அவர் தன் வாழ்வை ஆண்டவர் கையில் அர்பணிக்க வைத்த முதல் அடியாகும்.

**லூக் 5:6,7** கூறுகிறது **"அந்தப்படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்றப் படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்யும்படிக்குச் சைகைகாட்டினார்கள்; அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள்"**. ஆனால் **"சீமோன் பேதுரு அதைக் கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போகவேண்டும் என்றான்." (லூக் 5:8).** இங்கு மீன் கிடைத்ததற்காக சந்தோஷபடாமல், உள்ளான தன் வாழ்கையின் நிலை பாவத்தினால் நிறைந்திருக்கிறது என்ற உணர்வை பெற்றார். ஆண்டவர் அவர் வாழ்க்கையில் உலக பிரகாரமாக அற்புதம் செய்தபொழுது, அதற்காக ஆண்டவருக்கு நன்றி கூறிவிட்டு, தன் போக்கில் வாழாமல், ஆண்டவர் பாவியாகிய தன்னையும் ஒரு பொருட்டாக எண்ணி வந்து அற்புதம் செய்தாரே என்ற எண்ணமே அவரை இவ்வாறு பேச செய்தது. ஆண்டவரும் இத்தருணத்திற்காகவே காத்திருந்தார். ஏனெனில் இனி அவர் இவ்வுலக வாழ்வை பற்றி கவலைப்படுவதை காட்டிலும், ஆவிக்குரிய ஜீவியத்திற்கான சிந்தனை அவர் மனதில் தோன்றிவிட்டது. எனவே இனி அவர் மனுஷர்களை பிடிக்க தயாராகி விட்டார். ஆதலால் ஆண்டவர் **லூக் 5:10** இல் **"சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்."** மேலும் **லூக் 5:11** இல் **"அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்."**. இங்கு எல்லாவற்றையும் விட்டு என்ற வார்த்தை மிக முக்கியமானதாகும். இனி அவர்கள் (பேதுரு மற்றும் அவரது கூட்டாளிகள்) எதைப்பற்றியும் கவலைப்பட போவதில்லை. இனி ஆண்டவர் மட்டுமே அவர்களுக்கு போதுமானவர். [குறிப்பு: எல்லாவற்றையும் விட்டு என்னும் தியான தலைப்பில் மேற்க்கண்ட வசனங்கள் விவரமாக தியானிக்கப்பட்டுள்ளது. நமது இணையதளத்தில் www.jesussoldierindia.com காணவும்.).

### 3. நித்திய ஜீவ வசனங்கள்:

ஆண்டவர் நானே ஜீவ அப்பம் என்ற சத்தியத்தை கூறின பொழுது, **யோ 6:48-52** வசனங்களில் **"ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். அப்பொழுது யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள்"**. இங்கு நாம் காண்கிறபடி ஆண்டவர் கூறிய சத்தியத்தை விளங்கி கொள்வது மற்றவர்க்களுக்கு கடினமாய் இருந்தது. **யோ 6:60,66** கூறுகிறது **"அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள். அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்."** இதனால் ஆண்டவர் **யோ 6:67,68** வசனங்களில் **"அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே."** என்றார். மேற்கண்டவற்றில் பேதுரு கூறிய ஒரு அருமையான வாக்கியம் **"நத்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே"** என்பதாகும். ஆம் ஆண்டவரை பேதுரு பின்பற்றியதற்கு காரணம் அவர் அற்புதம் செய்கிறவர், தங்களை போஷிக்கிறவர் என்பதற்காக அல்ல நத்திய ஜீவ கரையில் சேர்த்திடும் கிருபை பொருந்திய வார்த்தைகளையும், அதனால் உண்டான அவரோடு கூடிய ஐக்கியத்தையும் மேன்மையாக கருதியதினாலேயே கடினமான உபதேசமாயிருந்தாலும், தன்னுடன் இருந்த மற்றவர்கள் பின்வாங்கினாலும், அவர் பின்வாங்கவில்லை. கிறிஸ்துவின் அன்பை விட்டு என்னை பிரிப்பது எது என்று, அப். பவுல் கூறியதை போல, அவருடைய அன்பிற்காகவே அவர் வாயிலிருந்து புறப்பட்ட நித்திய ஜீவ வசனங்களுக்காகவே அவரை பின்பற்றினார்.

### 4. ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்:

ஒருமுறை ஆண்டவர் **"பின்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி:**

**மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்." (மத் 16:13,14),** இங்கு ஒவ்வொருவரும் ஆண்டவர் கேட்ட கேள்விக்கு, தாங்கள் அறிந்த, தெரிந்த பதிலை கூறினார்கள். ஆனால் அவரோடு ஐக்கியப்பட்டிருந்த பேதுரு ஆண்டவரை பற்றி தனது அனுபவ பூர்வமான பதிலை தெளிவாய் கூறினார். **"சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்." (மத் 16:16).** இதை கேட்டவுடனே ஆண்டவர் கூறிய பதில் **"இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்." (மத் 16:17).** ஆவிக்குரிய வாழ்க்கையில் மனுஷ சத்தத்தை விடுத்து தேவ சத்தத்தை கேட்க அவர் பழகி கொண்டார்.

### 5. கடலின் மேல் நடத்தல்:

**மத் 14:24-33** வசனங்களில் சீஷர்கள் சென்றுகொண்டிருந்த படகு எதிர்காற்றில் சிக்கி கொண்டபொழுது, ஆண்டவர் இரவின் நாலாம் ஜாமத்திலே கடலின் மேல் நடந்து அவர்களிடத்திற்கு வந்தார் **(மத் 14:25).** அதை கண்ட அவர்கள் கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள். ஆண்டவர் அவர்களிடம் நான் தான் பயப்படாதிருங்கள் என்றார் **(மத் 14:27).** அப்பொழுது **"பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான். அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான்." (மத் 14:28,29)** இங்கு கொந்தளிக்கும் கடலின் மேல் நடக்க வேண்டியதற்கு ஒரு முகாந்தரமும் இல்லை. ஆனால் பேதுரு என்ன நினைத்தாரோ தெரியவில்லை, ஒருவேளை ஆண்டவரிடம் சென்று விட்டால் பாதுகாப்பாய் இருப்போம் என்று நினைத்திருக்கலாம். ஆனால் சற்றும் பயப்படாமல் கொந்தளிக்கும் கடலில் காலை எடுத்து வைத்தார். கடலை பற்றி நன்கு அறிந்தவரான பேதுரு **"காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது." (மத் 14:30-32).** இங்கு காற்று பலமாய் இருப்பதை கண்டு பேதுரு அவிசுவாச பட்டு அமிழ்ந்தாலும், நாம் கவனிக்க வேண்டிய

இரண்டு சத்தியங்கள் உள்ளன. ஒன்று, கொந்தளிக்கும் கடலை போல, நம் வாழ்க்கையில் போராட்டமான சூழ்நிலைகள் உருவாகும் பொழுது, ஆண்டவர் வந்துவிட்டார் என்று தெரிந்தவுடனே, தைரியமாய் பேதுரு கடலின் மேல் காலை ஆண்டவர் அனுமதியுடன் வைத்ததை போல, ஆண்டவரின் துணையோடு அதை எதிர்கொள்ள அவரிடம் தஞ்சம் அடைவது. இரண்டாவது அவிசுவாசத்தினால் பதறினாலும், நோக்கி கூப்பிடுவது ஆண்டவரை மாத்திரமே இருக்க வேண்டும். அப்பொழுது காற்று அமர்ந்தது போல், நம் வாழ்க்கையில் வீசும் போராட்ட காற்றுகளும் அடங்கும்.

**6.மறுரூப மலை:**

பேதுருவுக்கு ஆண்டவர் சில விசேஷித்த அனுபவங்களின் கூடாக நடத்தி சென்றார். அவற்றில் ஒன்று மறுரூப மலையின் அனுபவம். **மத் 17:1-4** வசனங்களில், பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவான் ஆகியோருக்கு கிடைக்கும் அனுபவம், பழைய ஏற்பாட்டில், மோசே, எலியா போன்ற வல்லமையான தேவ மனிதர்களுக்கு கிடைத்த அனுபவத்தை போன்றது. இங்கும் பேதுரு முந்திரி கொட்டை போல பேசுகிறார். ஆனால் இந்த மகிமையான தரிசனத்தை காண செய்த ஆண்டவர் அதைப்பற்றி மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து உயிர்தெழுலும் வரைக்கும் யாரிடமும் கூற வேண்டாம் என்றார். இங்கு பேதுரு அடைந்த அனுபவம், பிற்காலத்தில், ஊழியத்திற்கு அவருக்கு பிரயோஜனமாயிருந்தது. **2 பேதுரு 1:17,18** வசனங்களில் **“இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக்கேட்டோம்.”** இந்த மகிமையான அனுபவத்தை தன் நிருபத்தில் எழுதுகிறார். ஆண்டவரோடு இருந்த எத்தனையோ அனுபவங்கள் இருந்தாலும், இந்த ஒரு அனுபவம் அவரால் மறக்கமுடியாததாகும். இங்கு நாம் கற்று கொள்ளும் சத்தியம், ஆண்டவரோடு நாம் எவ்வளவு, நெருங்கி ஐக்கியமாய் இருக்கிறோமோ, அந்த அளவிற்கு அவரிடம் இருந்து மகிமையான அனுபவங்களை நாம் பெற்று கொள்ள முடியும்.

**7. ஆண்டவரின் சரீரத்தை காண ஓடிவருதல்:**

பேதுரு ஒருவேளை ஆண்டவரை மறுதலித்து இருந்தாலும், பின்பு மனஸ்தாப பட்டு மனங்கசந்து அழுதார். அதற்கு காரணம் ஆண்டவர் அவருக்காக பண்ணின வேண்டுதல் ஆகும் **(லூக் 22:31-34)**. மேலும்

ஆண்டவருடைய சரீரத்தை காணவில்லை என்று கல்லறைக்கு சென்ற மகதலேனா மரியாள் கூறியபொழுது, யாருக்கும் பயப்படாமல் கல்லறையை நோக்கி ஓடினார் பேதுரு **(யோ 20:1-3)**. இரண்டு நாட்களுக்கு முன்பு ஆண்டவரை யாரென்று தெரியாது என்று மறுதலித்த பேதுரு, கல்லறையை சுற்றி காவல் இருக்கும் என்று தெரிந்தும், தான் ஆண்டவரோடு ஐக்கியப்பட்டவர் என்பதை வெளிப்படுத்த அவர் இப்பொழுது பயப்படவில்லை. ஆண்டவர் சரீரத்தை காணவில்லை என்று கூறினவுடனே, ஆண்டவர் மீது வைத்த அன்பினால், எதைக்குறித்தும் பயப்படாமல் ஆண்டவரிடம் ஓடிவந்தார். இங்கு நாம் அறிந்துகொள்ளும் சத்தியம், ஒருவேளை பேதுருவை போல் நம் வாழ்க்கையிலும் பின்மாற்ற சூழ்நிலைகள் காணப்பட்டாலும். ஆண்டவரிடம் உண்மையான அன்பு கூறும்பொழுது, நாம் எப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையில் இருந்தாலும், ஆண்டவரிடம் நாம் ஓடி வந்துவிடுவோம். இதையே நாம் இவ்விடத்திலும் காண்கிறோம்.

இவ்வாறாக பேதுரு பல அனுபவங்களை பெற்றிருந்தும், **யோவான் 21ஆம்** அதிகாரத்தில் மறுபடியும் மீன்பிடி தொழிலுக்கு சென்றபொழுது ஆண்டவர் மறுபடியும் அவரை தேடிவந்து, **"யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" (யோ 21:15-17)** என்று மூன்று தடவை கேட்டு, பேதுருவை குறித்த அவரது திட்டத்தையும் கூட அவருக்கு வெளிப்படுத்தினார் **(யோ 21:18,19)**. இங்கு நாம் காணும் ஒரு அருமையான காரியம், ஆண்டவருக்கு அன்பாயிருந்த சீஷனாகிய யோவான் எழுதின இந்த சுவிசேஷத்தில், ஆண்டவர் பேதுருவின் அன்பை, ஒரு தாய் தன் பிள்ளையிடம் எதிர்பார்க்கும் அன்பை போல் தேடினதை காணலாம். இதுவே ஆண்டவருக்கும் பேதுருவுக்கும் இடையே ஒரு விசேஷித்த பிணைப்பு இருப்பதை விளங்கி கொள்ள, தக்க சான்று ஆகும். இவ்வாறு ஊழியத்தை ஆரம்பித்த பேதுரு, மேல்வீட்டறையில் வந்தெறங்கின பரிசுத்த ஆவியினால் நிரப்ப பட்டு வல்லமையான ஊழியத்தை செய்தார். ஆதி அப்போஸ்தல சபையில் ஆயிரக்கணக்கானோர் பேதுருவின் பிரசங்கத்தை கேட்டு இரட்சிக்கபட்டனர். அற்புதங்களும், அடையாளங்களும் பேதுருவின் மூலமாய் நடைபெற்றன. இவற்றை எல்லாம் நாம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் காணலாம்.

எனவே பேதுருவை போல, இன்றும் ஆண்டவர் நம்மிடமும் இதைப்போன்ற ஒரு அர்பணிப்பு நிறைந்த வாழ்க்கையையே எதிர்பார்க்கிறார். பேதுருவை போல் நம்முடைய ஆரம்பமும் சாதாரண நிலையில் இருந்தாலும், ஆண்டவரோடு பயணித்து வரும்பொழுது, ஆண்டவர் மகிமையான காரியங்களை நம்

வாழ்க்கையில் செய்து, பேதுருவை போல் நம்மையும் பிரயோஜனமுள்ள ஒரு பாத்திரமாய் மாற்றி, மகிமையாய் உபயோகித்து, நித்திய ஜீவ கரையில் சேர்பார். ஆமென், அல்லேலூயா.

## 62. பாலகன் பிறந்தார்



**ஏசாயா 9:6** கூறுகிறது, **"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். "**, மேற்க்கண்ட வசனத்தின் மூலம் நாம் ஆண்டவரின் பல்வேறு தன்மைகளை அறிந்து கொள்கிறோம். அவ்வொன்றையும் சுருக்கமாய் இப்பொழுது தியானிப்போம்.

### 1. கர்த்தத்துவம்:

ஆம், வானமும், பூமியும் சகலமும் அவரால் சிருஷ்டிக்கப்பட்டு அவரால் ஆளப்படுகிறது. **கொலோசெயர் 1:15,16** வசனங்கள் கூறுகிறது **"அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது."**, எனவே நாம் அவருடைய ஆளுகைக்குள் வாழுகிறபடியால், நமக்கு வேண்டிய அனைத்தையும் அவர் தர வல்லவர். நாம் செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று அவர் நம்மை ஆளும்படியாய், அவருடைய கர்த்தத்துவத்திற்குள் நம்மை அர்பணிக்க வேண்டும்.

### 2. அதிசயமானவர்:

ஆம், அவர் அதிசயமானவர். தம்மை நம்பினோரின் வாழ்க்கையில் அதிசயங்களை செய்கிறவர். பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்களின் காலத்திலும், புதிய ஏற்பாட்டின் காலத்திலும், இன்றும், என்றும் அவர்

அதிசயங்களை செய்கிறவர். அவரை நம்பின ஒருவரும் வெட்கப்பட்டு போவதில்லை.

### 3. ஆலோசனைக்கர்த்தா:

ஆம், நம்மை போதித்து (ஆலோசனை கூறி) வழி இதுவே இதில் நடவுங்கள் என்று வழி நடத்துகிறவர். அவர் வழியின் முடிவு நித்திய ஜீவ கரை **(வெளி 7:17)**. அவர் வழியில் இருள் இல்லை, அவரே வெளிச்சமாக இருக்கிறார். அவரின் சிந்தையை நம்மில் செலுத்தி, நாம் நடக்க வேண்டிய, பிறரை நடத்த வேண்டிய பாதையை காண்ப்பிக்கிறார்.

### 4. வல்லமையுள்ள தேவன்:

ஆம், அன்று செங்கடலை பிளந்து தம் வல்லமையை வெளிப்படுத்தினவர், இன்று அவரை சார்ந்து கொள்ளும் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் வல்லமையான காரியங்களை செய்கிறார். அவரே நம் பெலனாய் இருந்து, சத்துருவை ஜெயிக்க பெலன் தருகிறார். நம் வாழ்வின் எத்தடைகளையும் அகற்றி நம்மை நடத்தி செல்ல வல்லமையுள்ளவர். பாவ, சாப கோர பிடியில் இருந்து நம்மை மீட்டெடுப்பவரும் அவரே.

### 5. நித்திய பிதா:

ஆம், அவர் என்றென்றும் இருக்கிறவர். என்றென்றும் நம்மையும் தம்மோடு இருக்க செய்கிறவர். எக்காலத்திற்கும் உரியவர். நம்மை முற்றும் முடிய இரட்சிக்க வல்லமையுள்ளவரும் அவரே.

### 6. சமாதானப் பிரபு:

நம் வாழ்வில், சமுதாயத்தில், தேசத்தில், இவ்வுலகத்தில், அண்ட சராசரம் எங்கும் சமாதானம் இருக்க கட்டளையிட கூடியவர். அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும், யாவும்.

இவரே நம் பெருமான். எனவே நமக்காக இம்மண்ணுலகில் வந்துதித்த அவரையே சார்ந்து கொள்வோம். கிறிஸ்துவை ஒவ்வொருவர் இதயத்திலும் பிறக்க செய்வோம். **"ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" (வெளி 22:20)**. மார நாதா.

## 63. சகலமும் நன்மைக்கே




**ரோமர் 8:28 கூறுகிறது, "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." மேற்க்கண்ட வசனத்தின்படி வாழ்க்கையில் நடைபெறும் சகலமும் நன்மைக் கேதுவாகவே நடைபெற இரண்டு முக்கிய காரியங்கள் தேவைப்படுகிறது. (1) அவருடைய தீர்மானத்தின்படியான அழைப்பு (2) தேவனிடத்தில் அன்புகூறுதல்.**

### தீர்மானத்தின்படியான அழைப்பு:

**ஆம், நம் வாழ்க்கையை குறித்து தேவனுக்கு ஒரு பிரத்தியேகமான திட்டம் இருப்பதால், அதற்கான ஒரு விசேஷித்த அழைப்பை தேவன் நம் வாழ்வில் தருகிறார். சில வேளைகளில் அப்படிப்பட்ட அழைப்பை நமக்கு உணர்த்தும் விதமாக, நம் வாழ்க்கையில் சில அசாதாரண சூழ்நிலைகளுக்குள்ளாய் நம்மை நடத்தி சென்று, நன்மையான தன் வழியை, திட்டத்தை வெளிப்படுத்தி அழைப்பதினால், மேற்க்கண்ட வசனத்தை நம் வாழ்வில் உறுதிபடுத்துகிறார்.**

### தேவனிடத்தில் அன்புகூறுதல்:

**தேவனால் அழைக்கப்பட்ட அழைப்பை உணர்ந்து, அதற்கு உண்மையாய் வாழ்ந்து, வாழ்வின் எந்த சூழ்நிலையிலும், அழைப்பை விட்டு விலகாமல்,**

அதன் மூலம் தம் அன்பை வெளிப்படுத்துகிறவர்களுக்கே சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கும். இப்படியாக தேவனால் அழைப்பை பெற்ற சிலரை பற்றி நாம் பின்வருமாறு காண்போம்.

**(1) யோசேப்பு:**

மேற்க்கண்ட வசனத்திற்கு ஒரு சிறந்த உதாரணமான வாழ்க்கையை ஆதியாகம புத்தகத்திலேயே நாம் காணலாம். நியாயபிரமாணமும், மற்ற சட்டதிட்டங்கள் எதுவும் இல்லாத காலத்தில், மனிதர்கள் ஒவ்வொருவரும் ஏனோ தானோவென்று வாழ்ந்த காலத்தில், சொப்பனத்தின் மூலம் தேவனால் தனக்கு கொடுக்கப்பட்ட அழைப்பை உணர்ந்தவராய், ஆனால் அதற்கு எதிராய் காணப்பட்ட வாழ்க்கை சூழ்நிலையின் மத்தியிலும், தன் வீட்டிலும், போத்திபாரின் வீட்டிலும், சிறைச் சாலையிலும், என தான் இருந்த இடங்கள் எப்படிப்பட்டதாய் இருந்தாலும், நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி கொண்டிருந்தாலும், தன் உத்தமத்தை, பரிசுத்தத்தை, தேவனுக்கு பயப்படும் பயத்தை, பொறுமையை, ஒவ்வொரு காலகட்டத்திலும் வெளிப்படுத்தி, இறுதியில் அநேக மக்களுக்கு ஜீவ ரட்சணை செய்ய, வாக்குத்தத்த சந்ததியாகிய ஆபிரகாமின் சந்ததி காக்கப்பட, வாழ்நாள் முழுவதும் மேற்க்கண்ட வசனத்திற்கு ஓர் உதாரணமாய் யோசேப்பின் வாழ்க்கை காணப்பட்டது.

மற்ற தேவபிள்ளைகளை விட யோசேப்பு விசேஷ விதமாய் காணப்படுவதற்கு காரணம், மோசே, தாவீது போல அவருக்கு துணையாக தேவ பிள்ளைகள் இல்லை, சுற்றியுள்ள மனிதர்கள் முதல் சூழ்நிலைகள் வரை எல்லாம் எதிர் மறையானவைகளே. ஆனால் அதின் மத்தியிலும், தேவனிடத்தில் அன்பு கூர்ந்த யோசேப்பின் வாழ்வில் மேற்க்கண்ட வசனம் தீர்க்கமாக நிறைவேறியது.

**(2) மோசே:**

மோசே தன் அழைப்பை அறிந்திராத காலத்திலும், அவர் பிறந்த நேர முதலாய், தேவன் எவ்விதமாய் அவரை பாதுகாத்து அவரை முதல் 40 வருடங்கள் எகிப்தின் சகல காரியங்களிலும் பழக்குவித்தார் என்பதை வேதத்தில் அறியலாம். **எபி 11:24-27** வசனங்களில், "**விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்.**"

நாம் காண்கிறபடி, தான் அழைக்கப்பட்ட அழைப்பை உணர்ந்து, அதற்காக மற்ற எல்லாவற்றையும் துச்சமாக எண்ணி, எகிப்தை விட்டு வெளியேறினார். தேவன் மோசேயை 40 வருடங்கள் மீதியான் தேசத்தில்

வைத்து பாடங்களை கற்றுக்கொடுத்தார். கோபத்தில் வெட்டி கொன்று, புதைத்த மனிதனை, பூமியில் உள்ள எல்லா மனிதர்களை காட்டிலும் சாந்தமுள்ளவராய் மாற்றினார்(எண் 12:3). அதனாலேயே இஸ்ரவேல் மக்கள் எத்தனையோ தடவை முறுமுறுத்தும், எதிர்த்து பேசியும், எதிர்மறையான காரியங்களை செய்தும், அவற்றை எல்லாம் பொறுமையோடு, சாந்தமுள்ளவராய் சகித்து கொண்டார் மோசே.

யோசேப்பின் மூலமாய் இஸ்ரவேல் மக்கள் அழியாமல் காக்கப்பட்டது போல, மோசேயின் மூலமாக வாக்குத்தத்த பூமியை அடைந்தனர் இஸ்ரவேல் மக்கள். தேவனுடைய அநாதி தீர்மானங்கள், திட்டங்களின் ஒவ்வொரு பகுதியையும் நிறைவேற்ற, பல்வேறு காலக்கட்டங்களில், பல்வேறு மனிதர்களை தேவன் இவ்வாறு அழைத்து அவர்கள் வாழ்வில் ரோ 8:28 வசனத்தை உறுதிப்படுத்தியுள்ளார். எனவே இவையாவும் தனிப்பட்ட முறையில் அவர்களுக்கான அழைப்பாக இருந்தாலும், ஒரு அநாதி திட்டத்தின் ஒரு பகுதியே அவர்கள் வாழ்வின் அழைப்பாக இருந்தது. இந்த அநாதி திட்டத்தின் கீழ் அழைக்கப்பட்ட மேலும் சிலரை தொடர்ந்து காண்போம்.

**(3) ரூத்:**

ரூத்தின் வாழ்க்கையின் ஆரம்பம், தேவனை அறியாத பின்னணியில் இருந்தாலும், அவள் எப்பொழுது இஸ்ரவேல் மக்களின் குடும்பத்திற்குள் அங்கமானாலோ, அப்பொழுதே அவள் இஸ்ரவேல் தேவனை குறித்து அறிந்து உணர்ந்திருக்க வேண்டும். ஆண்டவர் ரூத்தை பயன்படுத்திய விதம் சற்று வித்தியாசமானது. இஸ்ரவேல் மக்களில் எத்தனையோ பெண்கள் இருந்த போதிலும், தாவீதின் சந்ததியில் மீட்பர் தோன்ற, அந்த தாவீதின் சந்ததியை தொடர்ந்து எடுத்து செல்ல தாவீதிற்கு முன்பாகவே தேவனால் பயன்படுத்தபட்டவள் ரூத். யோசேப்பும், மோசேயும் ஒட்டு மொத்தமாக இஸ்ரவேல் மக்களுக்கான திட்டத்தில் அங்கம் வகிக்கும் பொழுது, ரூத் தேவனின் தெளிவான, ஈசாயின் வேரை தோன்ற செய்ய பயன்படுத்தபட்டால். தான் அழைக்கப்பட்ட அழைப்பின் தெளிவான நிச்சயத்தை தேவன் அவளுக்கு வெளிப்படுத்தாமல் இருந்தாலும், அவரை நம்பி, அவர் தன் வாழ்வில் அனுமதித்த அனைத்து சூழ்நிலையிலும், அவரை சார்ந்து இறுதியில் தேவ திட்டத்தை, திட்டமாக நிறைவேற்றினாள் ரூத்.

ரூத் 1:16 இல், "அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். ", ரூத்தின் தீர்மானம், அவளுக்கு வாழ்க்கையில் சகலத்தையும் நன்மையாக மாற்றினது. ரூத் 2:3 இல், "அவள் போய், வயல்வெளியில் அறுக்கிறவர்கள் பிறகே பொறுக்கினாள்; தற்செயலாய் அவளுக்கு நேரிட்ட அந்த வயல்நிலம் எலிமெலேக்கின் வம்சத்தானாகிய போவாசுடையதாயிருந்தது.", இங்கு தற்செயலாய் என்ற வார்த்தை காணப்படுகிறபொழுதும், அது தேவசெயலாய் ரூத் வாழ்க்கையில் நடைபெற்றது என்பதை அறியலாம்.

**(4) தாவீது:**

**தாவீதின் வாழ்க்கையில் தேவன் தமது பல்வேறு திட்டங்களை நிறைவேற்றினார். ஒரு புறம் தாவீதின் வித்து, அவருடைய சந்ததி பரிசுத்தமாய் காக்கபட வேண்டும். மற்றொன்று தாவீதன் மூலம் சமஸ்த இஸ்ரவேலையும் வழிநடத்த வேண்டும். தாவீது எழுதிய சங்கீதங்களே, அவர் எவ்வாறு தேவ நோக்கத்தை அறிந்திருந்தார், அதற்கு எவ்வாறு அர்பணித்தார், தேவன் எவ்வாறு தம் திட்டங்களை அவர் வாழ்க்கையில் நிறைவேற்றினார் என்பதற்கு சாட்சி பகிர்கின்றன.**

**இதுபோல இன்னும், எஸ்தர், தானியேல் என்று பல்வேறு தேவ மனிதர்கள், மனுஷீகள் வாழ்வில் ஆண்டவர் எவ்வாறு கிரியை செய்தார் என்பதை பழைய ஏற்பாடு முழுவதும் நாம் காணலாம். புதிய ஏற்பாட்டிலோ இது பிரத்தியட்சமாய் வெளிப்படுத்த பட்டிருக்கிறது. ஆம் தேவன், அப்போஸ்தலர்கள், ஆதி திருச்சபை விசுவாசிகள் ஆகியோர் வாழ்வில் ரோ 8:28 வசனத்தை அனுபவமாக்கி காட்டினார். இதற்கு ஒரு நல்ல உதாரணம், லாசருவின் உயிர்தெழுதல் ஆகும். யோ 11:4 இல், "இயேசு அதைக் கேட்டபொழுது: இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார்.". ஒரு வேளை அந்த ஒரு சிறு காலகட்டத்திற்கு லாசருவின் குடும்பத்தார் கண்ணீரில் காணப்பட்டாலும், ஒரு நோக்கத்திற்காக தேவன் அதை அனுமதித்தார்.**

**இன்று, இந்த கடைசி காலகட்டத்தில் வாழும் நம்மிடத்திலும் இதையே தேவன் எதிர்பார்க்கிறார். அவருடைய இரத்தத்தால் கழுவபட்டவர்களாய், விசுவாசிகளாய் அழைக்கப்பட்ட நம் ஒவ்வொருவர் வாழ்விலும் தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அதை உணர்ந்து, வாழ்க்கையின் சூழ்நிலையை பாராமல், நம்மை சுற்றி நடக்கின்ற காரியங்களை கவனியாமல், எத்தனை பேர் எதிர்த்தாலும், அவருடைய சமாதான சுவிசேஷத்தை அறிவித்து, அவருக்கு சாட்சிகளாய் வாழ்ந்தால், நம் வாழ்வில் நடக்கும் அத்தனையும் நன்மைக்கே. ஆமென், அல்லேலூயா.**

## 64. கர்த்தரின் ஆசிர்வாதம்

**கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார் (நீதி 10:22).**

ஆவிக்குரிய ஆசிர்வாதங்கள் மற்றும் பூமிக்குரிய நன்மைகள் யாவும் அவரால் நமக்கு கிடைக்கும் பலன். ஊழியங்கள், கனிகள், வரங்கள் என்பவற்றை தருபவர் அவரே. பொன்னும், பொருளும் மட்டும் அல்ல, பெற்றோர், கணவன், மனைவி, பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், நண்பர்கள் என இவ்வுலகில் யாவற்றையும் நமக்கு தருபவர் அவரே. இப்படிப்பட்ட ஆசிர்வாதங்களினால் நமக்கு இவ்வுலகிலும், மறு உலகிலும் நன்மைகள் மற்றும் மகிழ்ச்சி உண்டாகிறது. ஆனால் சிலர் மேற் கூறப்பட்ட நன்மைகளை ஆண்டவரின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு பதிலாக, தங்கள் சுய புத்தியினால், பெலத்தினால், முயற்சியினால் அல்லது மற்ற மனிதர்களின் தயவினால் அவற்றை பெற முயற்சிக்கின்றனர். சிலர் பூமிக்குரிய பொன், பொருள்களை சம்பாதிக்கின்றனர். தமக்கு பிடித்தவரை மணக்கின்றனர். ஆனால் கர்த்தரால் தரபடாத இவை யாவற்றாலும் அவர்களுக்கு இவ்வுலகிலும், மறு உலகிலும் துன்பமே உண்டாகும், **நீதி 28:20 கூறுகிறது "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்"** என்று. எனவே ஆபிரகாமை போல (ஆதி 14:22,23) கர்த்தரால் வரும் நன்மைகளையே நாம் நாடி தேடுவோமாக. அவர் நமக்கு தருபவற்றில் திருப்தியோடிருப்போம். நம் ஒவ்வொருவருடைய ஜெபமும் **"என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்" (நீதி 30:9)** என்பதாக இருக்கட்டும். ஆமென், அல்லேலூயா.

## 65. கர்த்தரின் வழி

**கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு அரண், அக்கிரமக்காரருக்கோ கலக்கம். (நீதி 10:29)**

ஆம் கர்த்தர் காட்டிய வழியில் நம் வாழ்க்கை பயணிக்கும் பொழுது ஒரு பாதுகாப்பை நம் வாழ்வில் நாம் உணர்கிறோம். நாம் கர்த்தருடைய வழியில் நடக்கிறோம், தேவன் நம்மை பார்த்துக்கொண்டிருக்கிறார், ஒரு பொல்லாப்பும் நம்மை அணுகாதபடி காப்பார் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. ஆனால் அக்கிரமக்காரருக்கோ அதே வழி கலக்கத்தை ஏற்படுத்தும். அவர்கள் ஒருபோதும் நீதியின் வழியாகிய, உத்தம பாதையாகிய கர்த்தரின் வழியை தெரிந்து கொள்ளமாட்டார்கள். **"உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்; கோணலான வழிகளில் நடக்கிறவனோ கண்டுபிடிக்கப்படுவான்." (நீதி 10:9)** என்று வேத வசனம் கூறுகிறது. **"இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்." (மத் 7:13,14)**. ஆம், குறுகிய வாசல் வழியாய் நடக்க ஜாக்கிரதையோடு, இந்த பக்கம் அந்த பக்கம் சாயாமல், ஒரே சீராய், ஒரு கட்டுபாட்டோடு நடக்கவேண்டும். கேட்டுக்குப் போகிற வழியோ, விசாலமானதால், ஏனோ தானோவென்று நடக்கலாம். ஆனால் அதின் முடிவோ மரணம். **"நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்தப் பாதையில் மரணம் இல்லை." (நீதி 12:28)**. **"ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக." (பிலி 3:16)**. ஆகவே கர்த்தரின் வழியையே தெரிந்து கொள்வோம். **"உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்." (சங் 73:24)** என்ற வசனத்தின் படி கர்த்தர்தாமே நம்மை நடத்தி நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக. ஆமென், அல்லேலூயா.

## 66. கர்த்தரால் வரும்

**காரியசித்தியோ கர்த்தரால் வரும். (நீதி 16:33)**

நாம், நம் வாழ்க்கையில் எத்தனையோ காரியங்களுக்காக பிரயாசப்படுகிறோம். ஆவிக்குரிய காரியங்களிலும், உலகபிரகாரமான காரியங்களிலும் நமக்கு தேவைகள் உண்டு. ஒவ்வொரு நாளும் அதற்காக நாம் உழைக்கிறோம். ஆனால், வேதம் சொல்கிறது **"காரியசித்தியோ கர்த்தரால் வரும்"** என்று. ஆம் **"குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்." (நீதி 21:31)**. நாம் ஒருவேளை இந்த இந்த காரியம், இந்த இந்த வேளைகளில் இப்படியாக நடந்தால் நன்மையாக இருக்குமே என்று நினைக்கலாம். ஆனால் வேதம் கூறுகிறது **"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு." (பிர 3:1)**. மேலும் **"அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்" (பிர 3:11)** என்றும் வேதம் தெளிவாக கூறுகிறது. ஆபிரகாம், யோசேப்பு, மோசே, தாவீது என்று பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு காலதிட்டத்தை அவர்கள் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த ஆண்டவர் வைத்திருந்தார்.

புதிய ஏற்பாட்டில் வேதம் சொல்கிறது **"காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்." (கலா 4:5)** என்று. சவுலை பவுலாக்க தேவன் ஒரு நாளை வைத்திருந்தார். எனவே ஊழியக்காரியமானாலும், உலகபிரகாரமான வாழ்க்கையின் தேவைகள் எதுவானாலும் ஆண்டவர் நமக்கு தரும் நேரத்திலேயே அது கை கூடி வரும். அதுவரை நாம் பொறுமையாய் இருக்க வேண்டும். நம் சொந்த முயற்சியில், புத்தியில் அதை செய்யலாம் என்று நினைத்தாலோ அல்லது பொறுமையின்றி அந்த காரியத்தை விட்டுவிட்டாலோ நஷ்டம் நமக்குதான். எனவே கர்த்தருடைய நேரத்திற்கு காத்திருப்போம். **"ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1 பேதுரு 5:6)**. ஆமென், அல்லேலூயா.

# 67. அவரே தீர்வு




நம் வாழ்க்கையில் நமக்கு இருக்கும் எல்லா தேவைகளுக்கும், எல்லா நெருக்கங்களுக்கும், எல்லா உபத்திரவங்களுக்கும் அவரே (தேவனே) தீர்வு. நம் வாழ்க்கையில் நடைபெறும் நன்மையான காரியங்களானாலும், எதிர்மறையான காரியங்களானாலும், அவை யாவும் தேவனுடைய அனுமதி இல்லாமல், நம் வாழ்க்கையில் நடப்பதில்லை. இதை யோபு, தாவீது போன்றோர் நன்கு அறிந்திருந்தனர். எனவே தான் தங்களுக்கு நெருக்கங்கள் ஏற்பட்டபோது, ஒரு வேளை அது பிசாசினால் ஏற்பட்டபொழுதும், அதற்காக பிசாசு என் வாழ்க்கையில் இப்படி செய்து விட்டான் என்று கூறாமல், தங்கள் வாழ்க்கை எப்பொழுதும் தேவனுடைய கைகளிலேயே இருக்கிறது என்பதை அறிந்து, அதனால் தங்களுக்கு வந்த துன்பம் பிசாசினால் வந்தபொழுதும் அதற்கான தீர்வு தேவனிடத்திலேயே இருக்கிறது என்பதை உணர்ந்து, பிசாசை குறித்து அதிகம் பேசாமல் ஆண்டவரையே நோக்கி பார்த்து, தங்கள் துன்பத்தை வெளிப்படுத்தி அதற்கான தீர்வையும் பெற்று கொண்டனர்.

இங்கு நாம் கற்று கொள்ள வேண்டிய சத்தியம், நம் சிந்தை முழுவதும் தேவன் மேலேயே இருக்க வேண்டும் என்பதாகும். நன்னையானவைகள் போல தீமையான காரியங்களும் நம் வாழ்வில் மாறி மாறி வரத்தான் செய்யும். தேவ பிள்ளைகள், தேவன் எதற்காக தங்கள் வாழ்க்கையில் இந்த காரியத்தை அனுமதித்தார் என்பதை உணர்ந்து கொள்வர். துன்பத்திற்கு பாவம் காரணமெனில் அதை அறிக்கை செய்து சரி செய்ய முற்படுவர், ஒருவேளை துன்பம் ஏதோ ஒரு நோக்கத்திற்காக தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்குமானால், அதனை உணர்ந்து, தேவ சித்ததிற்கு தங்களை ஒப்புவித்து, உம் சித்தபடி ஆக கடவது, **“நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்;**

**கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" (யோபு 1:21)** என்பர்.

யோபுவின் வாழ்க்கையில் உண்டான சொல்லொணா துயரத்திற்கு அவரது பாவம் காரணம் இல்லை, அது திரைமறைவில் ஆண்டவருக்கும், பிசாசிற்கும் இடையேயான ஓர் காரியம். தேவன் பிசாசிடம் கூறியது ஒன்றே ஒன்று தான், நன்மைகளை அநுபவிக்கிற யோபு, தன் வாழ்க்கையில் தீமைகள் உண்டானாலும், அவருடைய கண்கள் ஆண்டவரை நோக்கியே இருக்குமே ஒழிய, துன்பங்கள் மீதோ, பிசாசின் மீதோ போகாது என்பதாகும். அற்ப விசுவாசமுள்ளவர்கள், துன்பங்கள் உண்டானவுடனே பதற்றமடைந்து, தேவனை மறந்து, பிசாசு என் வாழ்வில் கிரியை செய்து என்னை அழித்துவிட்டான் என்று பிசாசிற்கு உயர்வை கொண்டு வரும் வகையில் அவர்களின் செயல்பாடுகள் இருக்கும்.

ஆனால் உண்மையாய் ஆண்டவரை நம்பி இருக்கும் ஒரு தேவ பிள்ளை, அழுதாலும் ஆண்டவரின் சமூகத்தில் தான் அழுவானே ஒழிய, பிசாசின் முன் கூனி குறுகி, தன் வேதனையை வெளிப்படுத்த மாட்டான். எளிதாக கூறவேண்டுமானால் பிசாசு என்ற வார்த்தை கூட அவன் வாயில் இருந்து வராது. இது ஏதோ அறியாமையினால் செய்கிற செயல் கிடையாது, பிசாசிற்கு பயந்து ஆண்டவரை நோக்கி கதறுவது கிடையாது, கோலியாத்தை போல பிசாசு எவ்வளவு பெரியவனாய் தனக்கு முன் நின்றாலும், தன்னோடு இருக்கிற தேவன் பெரியவர் என்பதை உணர்ந்தவனாய், பிசாசை ஒரு பொருட்டாகவே அவன் மதிப்பதில்லை.

நீ என்ன துன்பங்களை கொண்டு வந்து போட்டாலும், ஆண்டவர் தம் சித்தபடி அதை எப்பொழுது நீக்க நினைக்கிறாறோ அப்பொழுது அது மறைந்து விடும், எனவே என் பிரச்சனையை தேவ சமூகத்தில் வைத்து விட்டால் அது போதுமானது என்று கூறி ஒரு தேவ பிள்ளை வைத்துவிடுவான். பிசாசை எதிர்த்து போராட வேண்டிய போராட்டங்கள் நமக்கு உண்டு என்பதை வேதம் நமக்கு தெளிவாக கூறுகிறது. ஆனால் ஒருபோதும் அவன் வல்லமையை எண்ணி பயந்து என்ன செய்வது என்று தெரியாமல் தேவனிடம் கதறவோ, முறையிடவோ வேதம் கூறவில்லை. அதற்கு பதிலாக அவன் எதை கொண்டு வந்து நம் வாழ்வில் போட்டாலும் அவை எல்லாவற்றையும் தேவ ஒத்தாசையுடன் அமைதியாக கடந்து செல்வதே ஒரு நல்ல தேவ பிள்ளையிற்கு அழகாகும்.

மேற்கண்ட காரியங்களை இன்னும் தெளிவாக விளங்கிகொள்ள யோபுவின் வார்த்தைகள் சிலவற்றை பின்வருமாறு தியானிப்போம். **யோபு 16:11-22** வசனங்களில் **"தேவன் என்னை அநியாயக்காரன் வசமாக ஒப்புவித்து, துன்மார்க்கரின் கையில் என்னை அகப்படப்பண்ணினார். நான் சுகமாய் வாழ்ந்திருந்தேன்; அவர் என்னை நருக்கி, என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார். அவருடைய வில்லாளர் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள்; என் ஈரலைத் தப்பவிடாமல் பிளந்தார்; என் பிச்சைத் தரையில் ஊற்றிவிட்டார். நொறுக்குதலின்மேல் நொறுக்குதலை என்மேல் வரப்பண்ணினார்; பராக்கிரமசாலியைப்போல என்மேல் பாய்ந்தார். நான் இரட்டுச்சேலையைத் தைத்து, என் தோளின்மேல் போர்த்துக்கொண்டேன்; என் மகிமையைப் புழுதியிலே போட்டுவிட்டேன். அழுகிறதினால் என் முகம் அழுக்கடைந்தது; மரண இருள் என் கண்ணிமைகளின்மேல் உண்டாயிருக்கிறது. என் கைகளிலே கொடுமையில்லாதிருக்கையிலும், என் ஜெபம் சுத்தமாயிருக்கையிலும், அப்படியாயிற்று. பூமியே, என் இரத்தத்தை மூடிப்போடாதே; என் அலறுதலுக்கு மறைவிடம் உண்டாகாதிருப்பதாக. இப்போதும் இதோ, என் சாட்சி பரலோகத்திலிருக்கிறது, எனக்குச் சாட்சி பகருகிறவர் உன்னதங்களில் இருக்கிறார். என் சிநேகிதர் என்னைப் பரியாசம்பண்ணுகிறார்கள்; என் கண் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது.**

**ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறதுபோல, தேவனோடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும். குறுகின வருஷங்களுக்கு முடிவு வருகிறது; நான் திரும்பிவராத வழியே போவேன்.",** இங்கு **11ஆம் வசனத்தில்** தேவனே தன்னை அநியாயக்காரன் வசமாக ஒப்புவித்தார் என்று கூறுவது தேவனை குற்றப்படுத்த அல்ல. தேவ அனுமதியோடே தான் அநியாயக்காரன் வசம் ஒப்படைக்கபட்டிருக்கிறேன், ஆனால் எந்த பாடத்தை தான் கற்று கொள்ள தேவன் எதிர்பார்க்கிறாரோ, அதை தான் கற்றுக்கொண்டவுடன் தேவன் தன்னை விடுவிப்பார் என்ற விசுவாசத்திலேயே கூறுகிறார். **"பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" (யோ 19:11)** என்று ஆண்டவர் பிலாத்துவிடம் தான் ஒப்புகொடுக்கப்பட்டிருக்கிறது தேவ சித்ததினாலேயே அன்றி மற்றபடியல்ல என்று கூறினார்.

யோபு கூறும் வார்த்தைகளில் நான் சுகமாய் வாழ்ந்திருந்தேன், நொறுக்குதலின்மேல் நொறுக்குதலை என் மேல் வரபண்ணி போன்ற வார்த்தைகள் அவருடைய துயரத்தின் நிலையை தெளிவாக நமக்கு கூறுகிறது. எப்படியோ இருந்த தன் வாழ்க்கை இப்படியாகிவிட்டதே என்பதை தெளிவாக கூறுகிறார். மேலும் **"என் கைகளிலே கொடுமையில்லாதிருக்கையிலும், என் ஜெபம் சுத்தமாயிருக்கையிலும், அப்படியாயிற்று." (யோபு 16:17)** என்றும் கூறுகிறார். எனவே தெளிவாக இது தன் பாவத்தினால் உண்டாகவில்லை என்பதை அவர் உணர்ந்துகொண்டார். ஆகிலும் தான் உத்தமன், நீதிமான் என்று கூறாமல் **"இப்போதும் இதோ, என் சாட்சி பரலோகத்திலிருக்கிறது, எனக்குச் சாட்சி பகருகிறவர் உன்னதங்களில் இருக்கிறார்." (யோபு 16:19)** என்று கூறி தேவனையே தனக்கு சாட்சியாக கூறுகிறார். ஆகிலும் இதை உணராத **"என் சிநேகிதர் என்னைப் பரியாசம்பண்ணுகிறார்கள்; என் கண் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது." (யோபு 16:20)** என்கிறார். எனவே தன் துன்பத்தின் காரணத்தை புரிந்து கொள்ளாமல் அவருடைய சிநேகிதர்கள் பேசினதே அவருக்கு வருத்தத்தை கொடுத்தது. ஆகிலும் **"ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறதுபோல, தேவனோடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்." (யோபு 16:21)** என்று கூறி முடிக்கிறார். ஒருவேளை யோபுவை போல நம் வாழ்விலும் துன்பங்கள் உண்டானாலும் நாம் மனம் தளராமல் அவர் கூறியதை போல எனக்காக சிநேகிதனை போல தேவனிடத்தில் யார் வழக்காடுவார் என்று கூட புலம்பாமல், நமக்காக பிதாவினிடத்தில் பறிந்து பேசும் ஒருவர் நமக்கு இருக்கிறார், **"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்." (யோ 15:13,15)** என்ற தைரியத்தோடு பிசாசை எதிர்த்து துன்பங்களில் இருந்து விடுதலை பெறலாம்.

மேலும் **யோபு 17:3** இல் **"தேவரீர் என் காரியத்தை மேல்போட்டுக்கொண்டு, எனக்காகப் பிணைப்படுவீராக; வேறே யார் எனக்குக் கைகொடுக்கத்தக்கவர்?"** என்று கூறுவது, "அவரே தீர்வு" என்பதை ஆழமாக அடித்து சொல்கிறது. **யோபு 21:4** இல் **"நான் மனுஷனைப்பார்த்தா அங்கலாய்க்கிறேன்? அப்படியானாலும் என் ஆவி விசனப்படாதிருக்குமா?"** என்று கூறுகிறார். ஆம் அவர் எந்த மனுஷனிடத்திலும் தன் துன்பத்தை கூறி முறையிடவில்லை, அதற்கு தீர்வை தேடவில்லை. அதற்கு பதிலாக மற்ற மனிதர்களின் செயல்களே அவருக்கு துன்பத்தை தந்தது. **யோபு 19:2** இல் **"நீங்கள் எந்தமட்டும் என் ஆத்துமாவை வருத்தப்படுத்தி, வார்த்தைகளினால் என்னை நொறுக்குவீர்கள்?"**, என்று கேட்பதில் இருந்து விளங்குகிறது. மேலும் **யோபு 19:17** இல் **"என் சுவாசம் என் மனைவிக்கு வேறுபட்டிருக்கிறது; என் கர்ப்பத்தின் பிள்ளைகளுக்காகப்**

**பரிதபிக்கிறேன்."**, என்று கூறுவது அவர் பட்ட வேதனையின் உச்ச கட்டத்தை நமக்கு காண்ப்பிக்கிறது. ஆனால் **யோபு 23:10** இல் கூறியபடி **"ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்."** ,என்பது தன் துன்பங்களுக்கு முடிவு உண்டு அதற்கு பின் மிக அருமையான ஒரு எதிர்காலத்தை தேவன் தனக்கு தருவார் என்பதில் நிச்சயம் உடையவராய் இருந்தார்.

இறுதியாக **யோபு 19:25-27** வசனங்களில் **"என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது."** என்று அறிக்கையிடுவது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை குறித்த, நித்தியத்தை குறித்த ஒரு தெளிவான அறிவு அவருக்கு இருந்தது என்பதை காணலாம். எனவே நம் வாழ்விலும், நம் எல்லா பிரச்சனைக்களுக்கும் தீர்வு தேவனே. ஆம் தேவன் என்றென்றும் நம்மோடிருக்கிறார். எனவே எந்த பிரச்சனைக்கும் தீர்வாக அவரே இருக்கிறார். எனவே நாம் நம் கண்களை அவர்மீதே பதித்து வைத்திருக்க வேண்டுமே ஒழிய, பிசாசிற்கு இடம் தர கூடாது. தேவன் தாமே நம் கண்ணீர் யாவையும் துடைத்து நித்திய ஜீவகரையில் சேர்பாராக, ஆமென் அல்லேலூயா.

.

## 68. மெய்யான காவலாளர் (True Chowkidar)

**மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. (எசே 3:17)**



மேற்க்கண்ட வசனத்தில் நாம் காண்கிறபடி தேவனே தேசத்தையும், தம் மக்களையும் பாதுகாக்கும் வகையில் காவலர்களை ஏற்படுத்துகிறார். அப்படி ஏற்படுத்தப்பட்டவரே எசேக்கியேல் தீர்க்கதரிசி ஆவார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய இரண்டு காரியங்கள், ஒன்று ஒரு காவலாளன் ஆண்டவருடைய வார்த்தையை கேட்டுப்பெற்று கொள்ள வேண்டும், இரண்டாவது அந்த வார்த்தையின் தன்மைக்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

**ஆதி 2:15** கூறுகிறது **"தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்"** என்று. ஆம் ஆண்டவர் மனிதனுக்கு கொடுத்த முதல் வேலை தாம் நேர்த்தியாக உண்டாக்கின ஏதேன் தோட்டத்தை காக்க வேண்டும். **ஆதி 2:16,17** வசனங்களில் **"தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்"**, அதை எவ்வாறு காக்க வேண்டும் என்பதையும், எதை முக்கியமாக காக்க வேண்டும் என்பதையும் ஆண்டவர் கூறினார். இந்த கட்டளையை ஆதாம், ஏவாள் படைக்க படும் முன்னரே பெற்றுக்கொண்டார்.

இங்கு ஆண்டவர் ஆதாமிற்கு கொடுத்த இந்த ஒரே வேலையை அவர் ஜாக்கிரதையாய் செய்திருப்பாரானால் பாவம் உலகில் பிரவேசித்திருக்க முடியாது. ஆனால் அவரோ அந்த காவலை சரியாக காக்கவில்லை. நாம் **எசே 3:17** இல் பார்த்தபடி தேவ வார்த்தையை கேட்டு அதின்படி மற்றவரை எச்சரித்திருக்க வேண்டும். ஒருவேளை ஆதாம் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை கவனமாக காத்திருப்பாரானால் அல்லது தன் மனைவியிடம் தேவ எச்சரிப்பின் சத்தத்தை தீவிரத்தோடு தெரிவித்திருப்பாரானால், சத்துருவிற்கு இடம் இல்லாமல்

போயிருக்கும். அவர் தன் காவலை சரியாக காவாமல் போனதால், அவரோடு சேர்ந்து முழு உலகமும் சாபத்திற்க்குள்ளானது.

ஆம் தேவன் நம்மை பாதுகாக்கிறவர் தான். ஆனால் அதே நேரத்தில் நாமும் விழிப்பாயிருக்க ஆண்டவர் எதிர்பார்க்கிறார். ஆண்டவர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்ற நம்பிக்கையோடு வாழலாம், ஆனால் சோம்பலாய் வாழ, அஜாக்கிரதையாய் வாழ ஆண்டவர் கூறவில்லை. **ஆதி 3:23** கூறுகிறது **"அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்."**, ஆம் அன்று ஏதேன் தோட்டத்திற்கு ஆதாமை அழைத்து கொண்டு வந்தார், ஆனால் இன்றோ அங்கிருந்து அனுப்பிவிட்டார். அன்று பண்படுத்தவும், காக்கவும் வைத்தார், இன்றோ அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த வெளியே அனுப்பி விட்டார். மேலும் **ஆதி 3:18,19** கூறுகிறது **"அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்."**

ஆம் ஓர் உன்னதமான வாழ்வின் சூழ்நிலையில் இருந்து மிகவும் மோசமான நிலைமைக்கு ஆதாமின் நிலை மாற காரணம், காக்கும்படியாய் தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை அவர் செய்ய தவறினார். மேலும் **ஆதி 3:24** கூறுகிறது **"அவர் மனுஷனைத் துரத்திவிட்டு"**, ஆம் கரம் பிடித்து ஏதேனிற்குள் அழைத்து வந்த தேவனே இன்று அவ்விடத்தை விட்டு அவனை துரத்துகிறார். எல்லாம் ஆதாமிற்காக உண்டாக்கப்பட்டது, தேவ மகிமையின் நிறைவோடு, அவரோடு உலாவி வாழும் வாழ்க்கையின் உன்னதமான நிலையில் இருந்து **"புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்." (ஆதி 3:17)** என்ற மோசமான நிலைக்கு அவர் வாழ்க்கை தள்ளப்பட்டது. ஆம், ஏதேனிற்கு வெளியே அவர் பாதுகாக்கவும் எதுவுமில்லை, அவரை பாதுகாக்கவும் எதுவுமில்லை.

இதுவே இன்றைய மனித சமுதாயத்தின் நிலை. இன்றைக்கு முளைத்து, நாளைக்கு அடுப்பிலே போட படுகிற புல்லிற்கு ஒப்பான வாழ்க்கை நிலை. இவை எல்லாவற்றிற்க்கும் ஒரே காரணம் தன் காவலை அவர் காக்கவில்லை. **ரோ 5:19** கூறுகிறது **"அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்."** ஆம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, ஆதாமின் மீறுதலினால் பாவிகளாக்கப் பட்ட நம்மை இரட்சிக்க வந்தார். ஆதி ஏதேனில் இருந்த அதே தேவ மகிமையின் பிரசன்னத்தை, புதிய எருசலேமில் அனுபவிக்க நம்மை ஆயத்தப்படுத்துகிறார்.

நல்ல மேய்ப்பரான அவர் **"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது." (யோ 10:27-29)**. ஆம், அவர் நம்மை தம் கரத்தில் பாதுகாப்பாய் வைத்திருக்கிறார். அவர் கையில் இருந்து எதுவும் நம்மை பிரிக்க முடியாதபடி நம்மை பாதுகாக்கிறவராய் இருக்கிறார்.

**“நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்.“ (யோ 10:11,12)**, ஆம் அவர் தன் ஜீவனையே விலையாக கொடுத்து நம்மை மீட்டெடுத்திருக்கிறார். எனவே நாம் இனி எதையும் காக்க தேவையில்லை, நம்மை அவருக்குள்ளாய் காத்துகொண்டாலே போதும். அவர் எல்லா தீமையினின்றும் நம்மை காத்து நித்திய ஜீவ கரையில் சேர்பார். ஆம், அவரே நம் மெய்யான காவலாளர், அவரை தவிர வேறொருவரும் இல்லை. ஆமென், அல்லேலூயா.

## 69. இவர் யாரோ

**அவர்கள் மிகவும் பயந்து: இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். (மாற்கு 4:41)**




இங்கு இவர் யாரோ என்று கூறியவர்கள் படகில் இருந்த ஆண்டவருடைய சீஷர்களே. ஆண்டவர் செய்த அற்புதங்களை இதற்கு முன்னும் அவர்கள் பார்த்திருக்கின்றனர், ஆனால் அப்போதெல்லாம் உண்டாகாத ஒரு பிரமிப்பு இப்பொழுது காற்றையும் கடலையும் அவர் அதட்டியபோது உண்டானது. ஆம், அவரை ஒரு போதகராக, நோய்களை சுகமாக்குபவராக, அற்புதங்களை செய்பவராக அவர்கள் கண்டபோது உண்டாகாத ஒரு பிரமிப்பு அவர் இயற்கைக்கு கட்டளையிட்டு அதை நடத்தினபொழுது உண்டானது. ஆம், அவர் போதகர் மட்டுமல்ல, அற்புதங்களை செய்பவர் மட்டுமல்ல, அவர் மெய்யான தேவன் என்பதை வெளிப்படுத்தும் விதமாய் இச்செயல் உள்ளது. ஆனால் அதை அவர்களால் சரியாக புரிந்து கொள்ளமுடியவில்லை.

ஆம், தங்கள் மனதில் இவ்வளவு காலம் நினைத்திருந்த ஒரு நிலையை விட ஆண்டவராகிய இயேசு பன்மடங்கு உயர்ந்தவர் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. இன்றைய நிலையும் இப்படித்தான், ஆண்டவர் அற்புதம் செய்கிறவர், நன்மை தருகிறவர், நோய்களை சுகமாக்குகிறவர் என்று பறைச்சாற்றும் பொழுது, அதை ஏற்றுக்கொள்ளும் மக்கள், அவரே மெய்யான தேவன், வேறொருவரும் இல்லை என்று கூறும்பொழுது அதை ஏற்றுக்கொள்ள தயங்குகின்றனர். அவர் செய்த அற்புதங்களை எல்லாம் பார்த்தபொழுது சிஷர்கள் இவர் யாரோ என்று கேட்கவில்லை. ஆனால் இயற்கைக்கு ஆணையிட்டபொழுது, இவரை பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டியது இன்னும் அதிகமாயிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டனர்.

**யோ 19:10** இல் **"அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு**

**அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான்."** இங்கு ரோம சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தின் கீழ் பணிபுரிகிறவனாக, அந்த அதிகாரத்தோடு தன் கட்டுபாட்டில் இருக்கும் யூதேயா தேசத்தில் தான் எதையும், யாருக்கும் செய்ய முடியும் என்ற மமதையோடு பிலாத்து பேசினான். ஆனால் ஆண்டவரோ **"பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது " (யோ 19:11)** என்றார். ஆம் இங்கு பிலாத்துவின் அதிகாரத்தின் கீழ் விசாரணை நடைபெறவில்லை, ஆண்டவருடைய சித்தத்தின், திட்டத்தின் கீழ்தான் பிலாத்து நியமிக்கப்பட்டு ஆண்டவரை விசாரித்து கொண்டிருக்கிறான்.

ஆண்டவரே ஒரு தடவை ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று தம் சிஷர்களிடம் கேட்டார். **"அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்; பேதுரு பிரதியுத்தரமாக: நீர் கிறிஸ்து என்றான்." (மாற் 8:28,29)**, ஆம் அவர் மனுகுலத்தை மீட்டு இரட்சிக்க இம்மானுவேலராய் அபிஷேகிக்கப்பட்டவர். அவர் கிறிஸ்துவாகிய மேசியா, நம்மை மீட்டு இரட்சிப்பவர். இந்த சத்தியமே இப்பொழுது உலக முழுவதிலும் அறிவிக்கப்பட வேண்டும். ஆண்டவராகிய இயேசுவே, கிறிஸ்துவாகிய மேசியா என்பதை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை ஆண்டவரே **யோவான் 4ஆம்** அதிகாரத்தில் சமாரிய ஸ்தீரியை சந்திப்பதின் மூலம் கற்றுக் கொடுத்துள்ளார். எனவே இப்பொழுது கவனமாக ஆண்டவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும், அதற்கு சமாரிய ஸ்திரீ எழுப்பிய கேள்விகளையும், அதற்கு ஆண்டவர் பதிலளித்து அவளை இரட்சித்த விதத்தையும் நாம் காண்போம்.

**யோ 4:8** இல் **"அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத் தா என்றார்."**, இங்கு உண்மையிலேயே ஆண்டவர் பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் இவ்வாறு கேட்டார் **(யோ 4:6)**. ஆனால் அதற்கு பின்பு, ஒரு அற்புதமான நிகழ்வை நிகழ்த்தவும் இவ்வாறு கேட்டார். அதற்கு **"யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்." (யோ 4:9)**. ஆம் இங்கு முதலில் ஆண்டவரை ஒரு சாதாரண யூத மனிதராக அந்த ஸ்திரீ கண்டாள்.

அப்பொழுது **"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்." (யோ 4:10)**. இங்கு ஆண்டவர், தான் சரீர தேவையை மட்டுமல்ல, ஆத்ம தேவையையும் பூரணமாய் சந்திக்க வல்லவர் என்பதை வெளிப்படுத்துகிறார். இங்கு உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்ற வார்த்தை மிக முக்கியமானது. இங்கு ஆண்டவரின் ஒரே நோக்கம் தான் யார் என்பதை சமாரிய ஸ்திரீ அறிய வேண்டும் என்பதாகும்.

யோ 4:11,12 வசனங்களில், "**அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும். இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்.**" முன்பு நீர் என்று கூறி பேச்சை தொடங்கிய அந்த ஸ்திரீ, இப்பொழுது ஆண்டவரே என்று கூறி, மேற்க்கண்ட வார்த்தைகளை கூறுகிறாள். தாம் யாக்கோபை காட்டிலும் பெரியவர் என்பதை அவள் அறிந்து கொள்ள யோ 4:16-18 வசனங்களில் "**இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார். அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்.**" தன் வாழ்வின் நிலைமைக்குறித்து வெளிப்படுத்தியதால், சாதாரண யூத மனிதராக பின்பு ஆண்டவராக அவரை பார்த்த ஸ்திரீ, "**ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்.**" (யோ 4:19) என்றாள்.

ஆனால் ஆண்டவர் இத்தோடு நிற்கவில்லை, தான் யார் என்பதை அவள் அறிந்து கொள்ள வேண்டும் என்று இன்னும் பல ஆவிக்குரிய காரியங்களை அவளுக்கு விளக்குகிறார். அவளாகவே, "**கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்.**" (யோ 4:25). அப்பொழுது, "**அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.**" (யோ 4:26). ஆம், இவ்வளவு காரியங்களையும் அவளிடம் தெளிவாய் கூறிய பிறகு தாமே அந்த மேசியா என்பதை நேரடியாகவே கூறினார். இதுவே ஆத்தும ஆதாயம் செய்ய, இயேசு யார் என்பதை அறிவிக்க ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மேலும் "**அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி: நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள். அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.**", (யோ 4:28-30). இதுவே இந்த கடைசி காலத்திலும் வேகமாக பல கோடி மக்களுக்கும் சுவிஷேசம் சென்றடைய சரியான ஓர் உதாரணமாகும். யோ 4:39 இல் "**நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்.**", இதில் சாட்சி சொன்ன என்ற வார்த்தை மிக முக்கியமானதாகும். ஆண்டவர் சந்தித்தது, ஒரு சாதாரண ஸ்திரீயை தான், அதுவும் அவளோடு ஒரு சில நிமிடங்கள் தான் பேசினார். ஆனால் தான் யார் என்பதை அவளுக்கு ஆண்டவர் வெளிப்படுத்தினபடியால், ஒரு சரியான சாட்சியாய் மாறினாள். அதன் மூலம் அநேகர் ஆண்டவரின் வார்த்தையை கேட்டனர்.

மேலும் **யோ 4:41,42** வசனங்களில் **"அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து, அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்."** அவள் மூலமாய் மற்ற சமாரியர்களையும் சந்திக்க வாய்ப்பு கிடைத்த பொழுது, அவர்களுக்கும் சரியான உபதேசத்தை கூறினதால், அந்த பட்டணத்தார் அனைவரும் அவரே **மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து** விசுவாசித்தனர். ஆம் யூத மனிதராய் பார்க்கபட்ட இயேசுவாகிய தம்மை உலக இரட்சகராக அவர்கள் காணச்செய்தார்.

ஆம் இன்றும் ஆண்டவருக்காக ஆத்தும ஆதாய ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் பின்பற்ற வேண்டிய ஒரு அழகான மாதிரியை ஆண்டவரே இங்கு மிக நேர்த்தியாக செய்து காட்டியுள்ளார். எனவே ஆண்டவரை வெறும் அற்புதங்களை செய்கிறவராக மட்டும் போதியாமல், அவர் ஆண்டவர், சகலத்தையும் அறிந்த தீர்க்கதரிசி, கிறிஸ்துவாகிய உலக இரட்சகர், ஒன்றான மெய் தேவன் என்பதை அறிவிக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே, கிறிஸ்து யார் என்பதை மனு குலம் அறிந்து கொள்ளும். ஆண்டவர் தாமே அதை செய்ய நம்மை பெலப்படுத்துவாராக, ஆமென், அல்லேலூயா.

## 70. வழுவாதபடி

## வழுவாதபடி உங்களைக் காக்கவும் (யூதா 1:24)




அநேக நேரங்களில், நம் வாழ்வில் எதிர்மறையான காரியங்கள் நிகழும்பொழுது அல்லது எதிர்பாராத ஒரு துன்பம் உண்டாகும் பொழுது, அது நம் சரீரத்தை பாதிக்கும்பொழுதும் அல்லது மனதை பாதிக்கும்பொழுதும், தேவனை பற்றிய ஒரு உறுதியான விசுவாச நிலையில் இருந்து நம்மை அவை வழுவி போக செய்கிறது. பேதுருவுக்கு ஒரு நெருக்கடியான சூழ்நிலை உண்டான பொழுது, ஆண்டவரையே மறுதலித்தார். ஆண்டவராகிய இயேசுவோடு படவில் இருந்த சீஷர்கள், பலத்த சூழல் காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதின பொழுது, நொடி பொழுதில் அவர்கள் விசுவாசம் ஆட்டம் கண்டது (மாற்கு 4:37,38), ஆண்டவரோ **“ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். “** (மாற்கு 4:40).

சில நேரத்தில், நம்மை நோக்கி சிலர் பேசும் கடுமையான / பொய்யான வார்த்தைகள், சிலருடைய துரோக செயல்கள், ஆண்டவர் நம்மோடு இருக்கிறார், அவர் நமக்காக வழக்காடுவார் என்பதை மறக்க செய்து, நாம் அதற்கு எதிர்வினையாற்ற செய்கிறது. யோசேப்பின் வாழ்க்கையில், அவருடைய சகோதரரின் துரோக செயல்கள், போத்திபார் மனைவியின் பொய் குற்றசாட்டு, பானபாத்திரகாரனின் நன்றி மறந்த தன்மை, சிறைவாசம், அடிமைத்தனம் என யாவும் அவருடைய உடலையும், மனதையும் வெகுவாக பாதித்திருக்கும். ஆகிலும், தேவனை பற்றிய

விசுவாசத்திலிருந்து துளியும் அவர் வழுவி போகவில்லை. காரணம், வேத வசனம் கூறுகிறது, **“கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து “ (ஆதி 39:21)** என்று.

ஆம் மேற்கண்ட எந்த காரியமும் தேவ உறவில் இருந்து யோசேப்பை விலக / வழுவ செய்ய முடியவில்லை. காரணம், துன்பங்கள் இருந்தாலும், அதின் நடுவே தேவனும் தன்னோடு இருக்கிறார் என்ற அறிவே அவரை வழுவாமல் காத்தது. மோசேயின் வாழ்விலும் இதுவே நடந்தது. எத்தனையோ முறை சூழ்நிலைகளை கண்டு இஸ்ரவேல் மக்கள் வழுவி போனாலும், மோசேயோ உறுதியாய் இருந்தார். தாவீதின் வாழ்விலும் இதுபோன்ற சூழ்நிலை ஏற்பட்டது, **“தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான். “ (1 சாமு 30:6).**

சுற்றிலும் உள்ள அனைவரும் நம்மை நெருக்கும் பொழுது, பிரச்சனைக்கு தீர்வு காண்பதை காட்டிலும், பிரச்சனையை விட்டு விடுபடுவதே மேல் என்று எண்ணுவதாலேயே, வழுவி போகிற சூழ்நிலை ஏற்படுகிறது. இன்று அநேகர் தங்கள் வாழ்வை முடித்து கொள்வதற்கும் இதுவே காரணம். ஆனால் புதிய ஏற்பாட்டின் காலத்தில், இந்த கிருபையின் காலத்தில், **யூதா 1:24** கூறுகிறது **“வழுவாதபடி உங்களைக் காக்கவும் “**, அவரே இருக்கிறார். பவுலின் வாழ்வில் ஒரு முள் கொடுக்கபட்டிருந்த பொழுதிலும், அது பவுலுக்கு துன்பத்தை கொண்டு வந்த பொழுதிலும், **“அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். “ (2 கொ 12:9)**, என்று தேவன் அவருடைய கிருபையை பொழிந்த பொழுது அவரால் அதை தாங்கி கொள்ள முடிந்தது. இன்னும் புதிய ஏற்பாட்டு காலத்தில், சபையின் நடுவே எத்தனையோ உபத்திரவங்கள் உண்டான பொழுது, இஸ்ரவேல் மக்கள் போல் வழுவி போகாமல், அவற்றை எல்லாம் வெற்றியாக கடந்து வர முடிந்தது.

இன்றும் ஆண்டவருடைய இரத்தம் நம் ஒவ்வொருவருக்காகவும் சிந்தப்பட்டுள்ளது, சத்துருவாகிய பிசாசானவன் ஏதாவது ஒரு போராட்டத்தை, துன்பத்தை நம் வாழ்வில் கொண்டு வந்து போட்டு, எப்படியாவது நாம் ஆண்டவரை விட்டு வழிவிலகி, வழுவி செல்ல செய்ய பார்பான். ஆனால் வழுவாதபடி நம்மை காக்கிற ஒருவர் நமக்கு உண்டு என்ற அந்த ஒரு விசுவாசம், எத்தகையான சூழ்நிலையிலும் கற்பாறையாகிய கிறிஸ்துவின் மேல் நாம் திடமாய் நிற்க உதவி செய்யும். ஆமென், அல்லேலூயா.

## 71. ஒய்ந்திருந்தார்




**ஆதி 2:2** கூறுகிறது **"தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்."** என்று. இங்கு சர்வ வல்லமையுள்ள தேவன் ஏதோ தான் ஆறு நாளும் செய்த சிருஷ்டிப்பின் வேலையால் களைப்படைந்தவராய் ஓய்ந்திருக்கவில்லை. ஏனெனில் வேத வசனம் கூறுகிறது, **"பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை;" (ஏசா 40:28)** என்று. இங்கு அவர் ஒய்ந்திருப்பது நமக்காகத்தான். நம் வாழ்க்கையின் கால சக்கரத்தில் சூழன்று வரும் இந்த ஏழு நாட்களிலும், ஒரு நாள் நாம் சற்று அன்றாடக வேலைகளை விட்டு ஓய்ந்திருக்க தேவன் சித்தமுள்ளவராய் இருக்கிறார். இந்த நடைமுறை இன்று உலகெங்கிலும் பின்பற்றப்படுகிறது. மனிதனுக்கு கொடுக்கப்படுகின்ற ஒரு நாள் ஓய்வு, அவனுக்கு ஓய்வை மட்டுமல்ல, அடுத்த ஆறு நாட்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்கு ஒரு உந்துதலையும் தருகிறது.

**ஆதி 2:3** கூறுகிறது, **"தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்."** என்று. ஆம் அந்த ஒய்வு நாள் நாம் வெறுமனே சரீரத்தில் ஓய்ந்திருந்து, புத்துணர்வை பெற்றுக் கொள்ள மட்டுமல்ல, அந்த நாளில் மற்ற வேலைகள், கவலைகள், அலைச்சல்கள் எல்லாவற்றையும் மறந்து, இருதயத்தில், ஆத்துமாவில், ஆவியில் ஒரு இளைப்பாறுதலை பெற்றுக்கொள்ள, ஆண்டவருடனான உறவை பலப்படுத்தி கொள்ள அது நமக்கு ஆசிர்வாதமான நாளாக, பரிசுத்த நாளாக கொடுக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டு காலத்தில் ஓய்வு நாளை குறித்து பல கட்டளைகள்

கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் புதிய ஏற்பாட்டு காலத்தில் உள்ள திருச்சபையாராகிய நமக்கு வாரத்தின் முதல் நாளாகிய கர்த்தருடைய நாளிலே **(வெளி 1:10)** விசேஷ விதமாய் அவருடைய சன்னிதியில் திருச்சபையாய் கூடி அவரை ஆராதித்து, தொழுது கொண்டு, ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் ஒரு புத்துணர்வை பெற்றுக்கொள்ளும் ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் நாம் தேவனோடு உறவாடினாலும், கர்த்தருடைய நாளில் நாம் சபையாக, குடும்பமாக அவரை ஆராதித்து, தொழுதுகொள்ள தேவன் விரும்புகிறார்.

மேலும் ஓய்வை குறித்து நாம் இன்னும் ஆழமாக தியானிக்கும் பொழுது, ஆண்டவர் நம்மீது வைத்திருக்கும் கரிசனை விளங்கும். ஆம், தாம் சிருஷ்டித்த ஒவ்வொரு சிருஷ்டிப்புக்கும், ஆண்டவர் ஒரு ஒய்வை தருகிறார். மனிதர்களாகிய நமக்கு ஒவ்வொரு நாளும், நம் வாழ்க்கையில் ஒரு நாளாகிய 24 மணி நேரத்தில், 6 முதல் 8 மணி நேரம் வரை உறக்கத்தின் மூலம் ஒரு இளைப்பாறுதலை தருகிறார். அவரை அறிந்தவர்களுக்கு மாத்திரம் மட்டுமல்ல, அவரைப் பற்றி அறியாதவர்களுக்கும், அவரையே எதிர்ப்பவர்களுக்கும் கூட ஒரு இளைப்பாறுதலை தந்து நடத்துகிறார். அதற்கு எற்றவாறு காலை, மாலை, இரவு என்று இயற்கையின் தன்மையையும் ஏற்படுத்தியிருக்கிறார்.

**சங் 104:19-24** வசனங்கள் கூறுகிறது, **“சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காகப் படைத்தார்; சூரியன் தன் அஸ்தமனத்தை அறியும். நீர் இருளைக் கட்டளையிடுகிறீர், இராக்காலமாகும்; அதிலே சகல காட்டு ஜீவன்களும் நடமாடும். பாலசிங்கங்கள் இரைக்காக கெர்ச்சித்து, தேவனால் தங்களுக்கு ஆகாரம் கிடைக்கும்படித் தேடும். சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்கி, தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளும். அப்பொழுது மனுஷன் சாயங்காலமட்டும் தன் வேலைக்கும், தன் பண்ணைக்கும் புறப்படுகிறான். கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது**“. ஆம் நாம் ஒய்வு எடுக்கும் இரவு நேரத்தில் மற்ற விலங்கினங்களை நடமாட செய்கிறார். மனிதன் காலை எழுந்தவுடன் அவைகள் ஒதுங்கி தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளும் என்று வேத வசனம் கூறுகிறது. ஆம், மனிதனுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் மாறி மாறி வேலை ஒழுங்கையும், இளைப்பாறுதலையும் தருகிறார். **24 ஆம்** வசனம் கூறுகிறது, **“உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்**“ என்று.

ஆம் ஆண்டவர் இந்த உலகத்தையும், அதிலுள்ள மனிதர்களாகிய நம்மையும் மற்ற விலங்கினங்களையும் ஏதோ இயந்திரத்தை போல் படைக்க வில்லை. அவை எல்லாவற்றையும் ஒழுங்கும் கிரமுமாய் சிருஷ்டித்திருக்கிறார். அதில் ஓய்வு என்ற பகுதியையும், மனிதனுக்கும், மற்ற உயினங்களுக்கும் அழகாய் கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட பகுதிநேர ஓய்வை மட்டுமல்ல, நித்திய இளைப்பாறுதலையும் நமக்கு தர அவரே வல்லவர். ஆம் ஒருவேளை ஆண்டவரை அறிந்தவர்களுக்கும், அவரை அறியாதவர்களுக்கும், ஏன்

எதிர்ப்பவர்களுக்கும் கூட ஆண்டவர் கிருபையாய் ஓய்வை தருகிறார். ஆனால் நத்திய இளைப்பாறுதல் அவர் பிள்ளைகளுக்கு மட்டுமே, மற்றவர்களுக்கெல்லாம் அழுகையும், பற்கடிப்பும், அக்கினி கடலுமே. அங்கு அவர்கள் இரவும் பகலும் (ஓய்வில்லாமல்) சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் **(வெளி 20:10)**.

ஆம், சகோதர சகோதரிகளே, பெரியவர்களே, பிள்ளைகளே, நீங்கள் யாரானாலும் இன்று ஆண்டவர் உங்கள் வாழ்க்கையில் கிருபையாய் கொடுத்திருக்கும் ஓய்வையும், நித்திய இளைப்பாறுதலையும் பற்றி விழிப்புள்ளவர்களாய் இருங்கள். இவ்வுலக வாழ்வில் நமக்கு **“மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம்“ (எபே 6:12)** இருந்தாலும், ஒரு அமைதியான, இளைப்பாறுதலான வாழ்வை ஆண்டவர் நமக்கு நத்தியத்திலே தருவார். எனவே அவரையே சார்ந்து கொள்வோம், நித்திய இளைப்பாறுதலில் பங்கடைவோம். ஆமென், அல்லேலூயா.

## 72. ஆதாரம்



நம் வாழ்வின் ஆதாரம் எது. எதை நம்பி நம் ஒவ்வொரு நாள் வாழ்வையும் நாம் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். அநேகருக்கு பணம் ஒரு ஆதாரமாய் இருக்கிறது. சிலருக்கு பதவி, உடல் பெலன், ஞானம், இன்னும் சிலருக்கு மற்ற மனிதர்கள் என பலர் பலவற்றின் மேல் தங்கள் நம்பிக்கையை வைத்து அதை ஆதாரமாக கொண்டு வாழ்க்கையை வாழ்கின்றனர். இன்னும் பலர் காணவும், பேசவும் மாட்டாத கல்லின் மேலும், மண்ணின் மேலும் தங்கள் நம்பிக்கையை வைத்திருக்கின்றனர். இவற்றை எல்லாம் ஆதாரமாக கொண்டு தங்களை இது காப்பாற்றும், இவற்றால் தங்கள் வாழ்க்கை பாதுகாப்பாகவும், நிலையாகவும் இருக்கும் என்று எண்ணி வாழ்வோர் பலர்.

ஆனால் இவை எல்லாம், கடந்த கால வரலாற்றில் பலரை கைவிட்டிருக்கிறது. அதனால் தங்களை தாங்களே நொந்து இனி இவ்வுலக வாழ்வில் என்ன இருக்கிறது என்று தேவன் தங்களுக்கு கிருபையாய் தந்த வாழ்வை முடித்துகொள்வோர் அதிகம். பணத்தை, அதிகமான செல்வத்தை சேர்க்க,

அது நம்மை பாதுகாக்கும் என்று நினைத்து அதை தேடி சேர்த்து குவித்து வைத்தவர்கள், தாங்களும் பணத்தை, செல்வத்தை காப்பாற்ற முடியாது. அதே நேரத்தில் அதுவும், தங்களை காப்பாற்ற முடியாது என்பதை இறுதியில் தான் அறிந்து கொள்கின்றனர். அதனால் தான் எண்ணி முடியாத அளவு கோடானு கோடி பணம் இருந்தும், சிலர் வாழ்க்கையை முடித்து கொள்கின்றனர்.

ஆனால் அதே நேரத்தில், வாழும் வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகள், வேதனைகள் ஏற்பட்டாலும், சூறாவளி போன்ற சம்பவங்கள் நடந்தாலும், பணம், பொருள், பதவி, சரீர பெலன் மற்ற மனிதர்களின் சார்ப்பு என்று எதுவுமே இல்லாமல் இருந்தாலும், நம்பிக்கையோடு இப்பூமியில் வாழும் மனிதர்கள் உண்டு. சாதாரண மனிதர்களுக்கு கிடைக்க கூடிய, அடிப்படை தேவைகள் கூட கிடைக்க பெறாமல் இருந்தாலும், இன்னும் வியாதி, சரீர குறைபாடு, இழப்பு, தனிமை என பல கரடு முரடான பாதைகள் தங்கள் வாழ்வில் இருந்தாலும், அதன் மத்தியிலும், நம்பிக்கையோடு வாழ்கின்ற மக்கள் சிலர் உண்டு. இன்னும் ஒரு படி மேலாக, மற்றவர்களுக்கும் ஊக்கமளித்து வாழ்வை தொடர்ந்து வாழ உதவும் மக்களும் உண்டு.

வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும், வாழ்வில் ஒரு பிடிப்பு இல்லாமல் அல்லது வாழ்க்கை என்றால் என்ன என்று தெரியாமல் வாழ்வோர் ஒருபுறம், ஆனால் எது இருந்தாலும், இல்லாமற் போனாலும், இது எனக்கு கொடுக்கப்பட்ட வாழ்க்கை, அதை வெற்றியோடு, சமாதானத்தோடு ஓடி முடிப்பேன் என்ற நம்பிக்கையோடு வாழ்கின்ற ஒரு கூட்ட மக்கள் மறுபுறம். இது மிகவும் சிந்திக்க வைக்ககூடிய ஒரு காரியம். எதின் மீதான நம்பிக்கை அல்லது எந்த ஆதாரத்தில் மேல் இவர்களுடைய வாழ்க்கையானது செயல்பட்டு கொண்டிருக்கிறது என்பதை நாம் சற்று ஆராய்வோமானால், நமக்கு கிடைக்கும் விடை இதுதான் **“அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார். இது நெகிநோத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம். “, (ஆபகூக் 3:17-19)** ஆம் எல்லாவற்றையும் இழந்த நிலையிலும், **“அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்“, (யோபு 13:15)** என்று யோபு கூறுகிறார்.

ஆம் இதே நம்பிக்கையே ஆபிரகாமை கானான் தேசத்தை நோக்கி புறப்பட செய்தது. இதே நம்பிக்கையே, பல போராடங்களுக்கு பின்பும், வாலிபனான யோசேப்பை நிலை குலையாமல் நிற்க செய்தது. தீயின் மத்தியில் நின்றபொழுதும், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோரை தீயின்

வாசனை கூட படாமல் காத்தது. சிங்கங்களின் வாயை தானியேலின் முன் கட்டி போட்டது. இன்னும் எத்தனையோ காரியங்களை நாம் சொல்லி கொண்டே போகலாம். இவர்கள் யாரும் வாழ்வின் ஒவ்வொரு நாளையும் சுக போகமாய் அனுபவிக்க நினைக்கவில்லை. தாங்கள் இவ்வுலகில் எதற்காக வாழ ஆண்டவர் அழைத்திருக்கிறாரோ அதை உணர்ந்து வாழ்ந்தனர். அதே நேரத்தில் நித்தியத்தை குறித்த ஒரு நம்பிக்கை இருந்ததால், தாங்கள் நம்பியிருக்கும் ஆதாரம், இவ்வுலகில் மட்டுமல்ல, அதற்கு பிறகும் தங்களை காக்க வல்லது என்பதை அவர்கள் உணர்ந்து இருந்தனர்.

அதனால் தான் இவ்வுலகில் நம்பிக்கையோடு வாழவும், அதே நேரத்தில் எந் நேரமும் இவற்றை விட்டு நித்திய வாழ்விற்கு செல்லவும் அவர்கள் ஆயத்தமாய் இருந்தனர். **“தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். “, (பிலி 4:12)** என்றும், **“நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்.“ (2 கொ 5:6-9)** என்றும் அப். பவுலினால் கூற முடிந்தது.

ஆம் நம் ஆதாரம் அவரே, அவரே நித்திய கன்மலை, அவர் மேல் சார்ந்து வாழ்வோர் ஒருபோதும் தளர்வடைவதில்லை, சோர்ந்துபோவதுமில்லை. கர்த்தர் தாமே நம் ஆதாரமாய் என்றென்னும் நம்மோடிருந்து நம்மை வழிநடத்துவாராக, ஆமென், அல்லேலூயா.

**ஆதாரம் நீ தான் ஐயா , என்துரையே,**
**ஆதாரம் நீ தான் ஐயா**

## அனுபல்லவி

**சூதாம் உலகில்நான் தீதால் மயங்கையில்**

## சரணங்கள்

**1. மாதா பிதாவெனைத் தீதாய் மதிக்கையில்**
**மற்றோர்க்குப் பற்றேதையா , எளியன்மேல்,**
**மற்றோர்க்குப் பற்றேதையா , எளியனுக்கு ---**
**ஆதாரம்**

2. நாம் , நாம் துணையென நயந்துரை சொன்னவர்
நட்டாற்றில் விட்டாரையா ; தனியனை
நட்டாற்றில் விட்டாரையா ; தனியனுக்கு --- ஆதாரம்

3. கற்றோர் பெருமையே , மற்றோர் அருமையே
வற்றாக் கிருபை நதியே , என்பதியே
வற்றாக் கிருபை நதியே , என்பதியே --- ஆதாரம்

4. சோதனை யடர்ந்து வேதனை தொடர்ந்து
துக்கம் மிகுவேளையில் என் சுகிர்தமே,
துக்கம் மிகுவேளையில் , உன் தாசனுக்கு --- ஆதாரம்

*ஆ.தேவதாசன்*

## 73. மேடு பள்ளங்கள்

**பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும், சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும், கோணலானவைகள் செவ்வையாகும், கரடானவைகள் சமமாகும்** (லூக் 3:4)



தேவன் நம் வாழ்வில் என்ன செய்ய சித்தங்கொண்டிருக்கிறாரோ அதை நமக்கு நம் இரட்சிப்பின் அனுபவ தொடக்கத்திலேயே சில நேரங்களில் வெளிப்படுத்துகிறார். ஆனால் அது நிறைவேற நம் வாழ்வில் நாம் மேடு பள்ளங்கள் போன்ற பல கடினமான அனுபவங்களை தாண்டிதான் அதை அடைய முடிகிறது. அதை அடையும் வரை நம் வாழ்வின் ஒவ்வொரு நாளும் நாம் அந்த இலக்கை நோக்கி தொடர தேவன் நம்மை பயிற்றுவிக்கிறார்.

தாவீது ஒரு நாள் இளைஞராய் இருந்த போது, சாமுவேலினால் தன் தகப்பன் வீட்டில், தன் சகோதரர் முன்னிலையில் ஆண்டவரால் இஸ்ரவேலின் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். ஆனால் அவர் அந்த இராஜ பதவியை அடைய எத்தனையோ வருடங்கள் ஆனது. வாழ்க்கையில் பல ஏற்ற தாழ்வுகள், இழப்புக்கள், கண்ணீரின் பாதைகள், சரீர பிரகாரமான போர்கள் என்று சொல்லி எத்தனையோ காரியங்களை எதிர்கொண்ட பின்னரே அவரை அரியணையில் ஆண்டவர் ஏற்றினார்.

யோசேப்பின் வாழ்விலும் இதுவே நடந்தது. அவர் அவருடைய தகப்பன் வீட்டில் வாலிப வயதில் இருக்கும் போதே, அவருக்கும் பிற்காலத்தில் தேவன் அவரை உயர்த்த போகிறார் என்பது வெளிப்படுத்த பட்டது. ஆனால் அது நிறைவேறுமளவும் அவர் தன் வாழ்க்கையில் பல வருடங்கள் பல்வேறு நிலைகளில் மேடு பள்ளங்கள் போன்ற வாழ்க்கை சூழ்நிலைகளை காண வேண்டிவந்தது. ஆபிரகாமுக்கும் ஆண்டவர் இதை போல அவர்

வாழ்க்கையில் நடக்க போகும் ஒரு நன்மையை குறித்த, ஒரு திட்டத்தை வெளிப்படுத்தினார். அவருடைய சந்ததியார் எப்படி இருப்பார்கள் என்பதை கூறினார். ஆனால் அந்த நன்மையான சந்ததியின் முதல் தலைமுறையான ஈசாக்கை பெற அவர் வெகு நாள் காத்திருக்க வேண்டியிருந்தது.

மேலும் புதிய ஏற்பாட்டிலும் ஆண்டவர் நமக்கு பரலோகத்தில் மகிமையான ஒரு ஸ்தலத்தை ஆயத்தபடுத்தி, ஒரு நாள் திரும்பவும் வந்து அழைத்து செல்வதாக வாக்களித்துள்ளார். எனவே ஆண்டவரை நம்பி வாழும் நம் ஒவ்வொருவர் வாழ்வும் ஒரு மகிமையான விதத்திலேயே முடிய போகிறது என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த வாழ்வை அடையும் வரை இவ்வுலகத்தில் மேடு பள்ளங்கள் போன்ற வாழ்வின் சூழ்நிலைகளுக்குள்ளாக நாம் கடந்து செல்ல வேண்டியது அவசியம். மேலும் இவ்வுலகத்திலேயே கூட நாம் சில நன்மைகளை அடைய நாம் காத்திருப்பது மட்டுமல்ல அதற்காகவும் சில கரடு முரடான பாதைகளை நாம் கடந்து செல்ல வேண்டியுள்ளது.

இதில் நாம் கற்று கொள்கிற ஒரு சத்தியம் என்னவென்றால், தாவீது இராஜாவாக, யோசேப்பு எகிபதிற்கு அவ்வளவு பெரிய அதிகாரியாக, ஆபிரகாவின் மூலமாய் ஒரு பெரிய சந்ததி உருவாக ஏதுவில்லாத காலத்தில் தேவன் கிருபையாக அவர்களுக்கு அந்த உயர்வை வாக்களித்தார். பிறகு அவர்கள் வாழ்வில் படிபடியாக தான் அவர்களுக்கு கிருபையாக அளித்த நிலைக்கு அவர்களை தகுதிபடுத்தி, ஒரு நாளில் அதை அவர்கள் வாழ்வில் நிறைவேற செய்தார். நமக்கு கிடைத்திருக்கும் இரட்சிப்பும், பாவ மன்னிப்பும், மகிமையான நித்திய வாழ்வும் நமக்கு ஆண்டவரின் மூலமாய் கிருபையாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆம் நம் பாவத்திற்காக அவர் பலியாகி, பாவிகளாகிய நம்மை நீதிமான்களாக்கி, நித்திய இராஜ்யத்திற்கு உட்படுத்தியது தேவனுடைய கிருபையே.

ஆனால் அந்த நித்திய இராஜ்யத்தில் பிரவேசிக்க அவர் நம்மை தகுதிபடுத்தி, பரிசுத்தபடுத்தின பிறகே அதில் பங்கடைய செய்வார். இது தேவனின் அநாதி ஞானத்தை வெளிப்படுத்துகிறது.. ஆம் நாம் பெற்றிருக்கிற, நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிற யாவும் தேவன் கிருபையாய் நமக்கு தந்ததே. ஆனால் அதே நேரத்தில் அவற்றின் நிறைவான பலனை பெற்று கொள்ள தேவன் நம்மிடம் அவருக்கு கீழ்படிந்து, நம்முடைய இலக்கு எதுவோ அதை நோக்கி எவ்வித மேடு பள்ளங்கள் வந்தாலும் தொடர்ந்து செல்ல எதிர்பார்க்கிறார். அதற்கான பெலனையும் அவரே நமக்கு தருகிறார். இதுவே தேவ கிருபையின் மகா மேன்மையான இரகசிய மாகும்.

எனவே நமக்கு கொடுக்கபட்டிருக்கும் இந்த மகிமையான காலத்தில், தேவ ஐக்கியத்தையும், தேவ உறவையுமே நாம் மேன்மையாக எண்ணி நித்திய இராஜ்யத்தில் நல்ல பங்கை பெற்றுக்கொள்ள நம்மை ஆயத்தப்படுத்தி கொள்ள வேண்டும். எனவே தான் இந்த மேன்மையான கிருபையை போக்கடிக்கிறவர்களை வேதம் கடுமையாக கண்டிக்கிறது. ஏனெனில் **"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும்,**

**விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்.“(எபி 10:26-29)**. தேவன் நமக்கு வைத்திருக்கும் நன்மையை குறித்த ஒரு அறிவை முன்கூட்டியே நமக்கு கொடுப்பதின் காரணம், நாம் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம், எப்படிப்பட்ட மகிமையான வாழ்வு நமக்கு கொடுக்கபட போகிறது என்பதையும், அதற்கு சற்றேனும் தகுதியில்லாத நமக்கு இந்த அருமையான வாழ்வை தேவன் கொடுக்கும் பொழுது, அதற்கு பங்குள்ளவர்களாக நம்மை தகுதிபடுத்தி கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதையும் நாம் உணர வேண்டும் என்பதற்காகவே.

எனவே ஆண்டவர், அவர் ஆட்டிவிக்கும் ஒரு பொம்மையை போல நம்மை நடத்தாமல், அவர் நமக்காக செய்த காரியங்களை, செய்ய இருக்கின்ற காரியங்களை நமக்கு வெளிப்படுத்தி, சுயசித்தத்தோடு அதற்கேற்ற ஒரு வாழ்க்கை வாழவே நம்மை அழைத்திருக்கிறார். எனவே நமக்கு கிடைத்திருக்கும் இந்த மகாமேன்மையான வாழ்வை நாம் ஜாக்கிரதையோடு, எப்படிப்பட்ட மேடு பள்ளங்கள் நம் வாழ்வில் வந்தாலும் அதை தேவ கிருபையோடு கடந்து மகிமையான நித்திய வாழ்வை பெற்றுக்கொள்வோமாக, ஆமென், அல்லேலூயா.

## 74. நிலையில்லா வாழ்வு




இன்றைய உலக கால கட்டத்தில் எதுவுமே நிலையில்லை. பொதுவாக பணம், பொருள் போன்றவைதான் நிலையில்லா தன்மையுடையதாய் இம்மட்டும் மனித வாழ்வில் காணப்பட்டது. ஆனால் இன்று மனித மனமே நிலையற்றதாய் உள்ளது. ஒரு மனிதனின் மனம் எந்நேரம் எவ்விதமாய் மாறும், எவ்விதமாய் சிந்திக்கும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. பார்வைக்கு நல்லவராய் காணப்படுவோர், பயங்கரமான, படுபாதக செயல்களை செய்துவிடுவதை காண்கிறோம். தன் அற்ப சந்தோஷத்திற்காக தான் பெற்ற பிள்ளைகளையே கொன்று விடும் படுபாதக செயல்களை சிலர் தீடீரென்று செய்து விடுவதை காண்கிறோம். படித்தவர்கள், படிக்காதவர்கள், செல்வம் உடையவர்கள், அது இல்லாதோர், ஆண்கள், பெண்கள், இளையோர், முதியோர் என்ற எந்த பாகுபாடும் இல்லாமல் சிலர் செய்யும் செயல்கள், இவர்களா இப்படி நடந்தார்கள் என்று நம்மை வேதனைபட வைக்கிறது. இவர்கள் செய்யும் தீஞ்செயல்கள் எல்லாம் ஏதோ கோபத்தில் அவசரப்பட்டு செய்தவை அல்ல, நன்கு திட்டமிட்டு தன் நெஞ்சில் உள்ள நஞ்சை வெளிப்படுத்தி செய்தவைகள்.

இதில், மேலும் ஒரு துக்ககரமான காரியம் என்னவென்றால், விசுவாசத்தில், திருச்சபை ஐக்கியத்தில், இதற்கும் மேலாக தேவ ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்தி கொண்டுள்ள சிலர் செய்த செயல்கள், நம்மை இனி யாரை தான் நம்பி இப்பூமியில் வாழ்வது என்று எண்ண தோன்றுகிறது. எந்த இடமும், எந்த சூழ்நிலையும், எந்த மனிதரும் நமக்கு பாதுகாப்பு இல்லை என்ற சூழ்நிலையே நமக்கு இன்று உருவாகியுள்ளது.

ஒருபுறம் அநேகர் இரட்சிக்கபடுவது, அநேகர் தேவ வார்த்தையை கேட்டு ஆண்டவருக்குள்ளாய் வருவது போன்ற காரியங்கள் நடைபெற்றுவந்தாலும், இன்றைய சமூக சூழ்நிலையில் ஒருவரும் நம்பபட தக்கவர்களாய் இல்லை.

ஏனெனில் வெளி தோற்றத்திற்கு பலர் நல்லவர்களாய் காணப்பட்டாலும், அவர்கள் இருதயம் எப்படிப்பட்டதாய் இருக்கும் என்பதை நம்மால் கணிக்க முடிவதில்லை. ஆரம்பத்தில் அருமையாய் ஊழியத்தை தொடங்கின பலர், இன்று சபையை, தேவ பிள்ளைகளை வஞ்சிக்கிற, வஞ்சகர்களாய் மாறிபோனதை கண்டு நாம் கலங்கி நிற்கிறோம்.

அதே நேரத்தில் தேவ பக்தியை, ஆதாய தொழிலாக கொண்டு வாழும் ஒரு பெருங்கூட்டம் இக்கால கட்டத்தில் ஏழும்பியிருக்கிறது. உலகபிரகாரமான சமூக சூழ்நிலையில்தான் ஒரு நம்பகதன்மை, நிலைதன்மை இல்லையே என்று எண்ணின காலம் போய், திருச்சபை ஐக்கியத்திற்குள்ளாய் தேவ ஊழியர்கள் / விசுவாசிகள் என்று தங்களை அடையாளப்படுத்தி கொள்வோரையே நம்பி நம்மால் ஜீவிக்கமுடியவில்லை. இவை எல்லாம் ஒன்றை நோக்கியே செல்கிறது. அது கிருபையின் காலத்தின் முடிவாகிய இவ்வுலகத்தின் முடிவு. ஆம், இனி காலம் செல்லாது, மனுஷருடைய அக்கிரமம் பூமியில் நிரம்பி வழிகிறது. மனிதர்கள் தாம் தம்மையும் அழித்து கொண்டு, மற்றவர்களையும் அழித்து வருகின்றனர்.

ஒரு பக்கம், மக்களிடையே / தேசங்களிடையே சகோதரத்துவம், ஒற்றுமை, சகிப்புத்தன்மை ஆகிய இவை பேசப்பட்டாலும், பிரிவினை வாதிகளால் மனிதர்கள் பிரிதாளப்பட்டு வருகின்றனர். மனித உயிர்களுக்கு ஒரு மதிப்பும் இல்லாமல் போகிறது. கடந்த ஈஸ்டர் நாளன்று இலங்கையில் நடைபெற்ற வெடிகுண்டு சம்பவமே, இதற்கு ஒரு நல்ல உதாரணம். இவை எல்லாம் இனியும் தேவ பிள்ளைகள், இப்பூமியில் மெய்யான சமாதானத்தோடு, ஐக்கியத்தோடு வாழ முடியுமா என்பதை கேள்வி குறியாக்கியிருக்கிறது. ஆண்டவர் வந்து நம்மை இப்பூமியில் இருந்து எடுத்துகொள்ள போவது அதிசீக்கிரம் நடைபெற போகிறது என்பதற்கு இவை எல்லாம் அத்தாட்சியாயிருக்கிறது. பொய்யான சமாதானமும், பொய்யான செழிப்பும், பொய்யான பாதுகாப்புமே இப்பூமியின் தலைவர்களால் பேசப்படுகிறது. குறிப்பாக நம் இந்திய தேசத்திலேயே கடந்த 6 மாதங்களாய் நடைபெற்று வரும் காரியங்கள், நம் தேசம் சமூக, பொருளாதார அழிவிற்குள்ளாய் சென்று கொண்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

எனவே நாம் இப்பொழுது செய்ய வேண்டியது என்ன. அது மிக சுலபம். மணவாளனுக்காக தீவட்டிகளோடு காத்திருந்த கன்னியர்கள் போல **(மத் 25:1)**, நாம் வேறு எதையும், எவரையும் சாராமல், நம் இரட்சகரான மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை மாத்திரமே சார்ந்து இருக்க வேண்டும். இவ்வுலகத்தில் நாம் எத்தனை காரியங்களை சாதித்தாலும், நாம் எத்தனை பொருள்களை நமக்கென்று சேர்த்து வைத்துக்கொண்டாலும், இன்னும் எத்தனை காரியங்களை அடைய / சாதிக்க நாம் முயன்று கொண்டிருந்தாலும், ஆண்டவர் வந்தால், நொடி பொழுதில் இவை எல்லாவற்றையும் விட்டு செல்ல நம் மனம் ஆயத்தமாய் இருக்க வேண்டும். இல்லையேல் லோத்துவின் மனைவியிற்கு ஏற்பட்ட நிலைதான் நமக்கும் நேரிடும். எனவே ஆண்டவர் வரும்வரை, இவ்வுலகில் நாம் வாழும் ஒவ்வொரு நாளும் தேவ பாதுகாப்பையும், அவருடைய வழிநடத்துதல்களையும் பெற்று வாழ முற்பட வேண்டும். பொல்லாங்காய் தோன்றுகிற எந்த ஒரு காரியத்தையும் விட்டு விலகியிருக்க வேண்டும்.

மணவாளனை வரவேற்று, அவரோடு கலியாண வீட்டிற்குள் செல்ல வேண்டிய **(மத் 25:10)** இந்த கடைசி கால கட்டத்தில், நாம் சற்றேனும் அசதியாய் இருத்தல் கூடாது. நாம் வாழ்கிற இன்றைய வாழ்வு நிலையற்றதாய் இருந்தாலும், இந்த நிலையற்ற வாழ்வில் நாம் வாழும் வாழ்க்கையே நம் நிலையான நித்திய வாழ்விற்கு அடித்தளம் என்பதை மறவாமல் ஜாக்கிரதையாய் வாழ்வோமாக. ஆமென், அல்லேலூயா.

## 75. கொஞ்சத்திலே




**அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான் (மத் 25:21).**

மேற்க்கண்ட வசனத்தின்படி ஆண்டவர் கொஞ்சத்திலே நாம் உண்மையாய் இருக்கும் பொழுது, அநேகத்தின் மேல் நம்மை அதிகாரியாக வைக்கிறார். அதாவது தேவன் நமக்கு கொடுத்திருக்கிற காரியம் எதுவானாலும், அது நம்முடைய விசுவாசம் அல்லது ஊழியம் அல்லது ஆவிக்குரிய வரங்கள் அல்லது பொருளாதார நிலைகள் அல்லது உயர் பதவிகள் என எதுவாக இருந்தாலும், அதை நாம் ஆண்டவர் எதற்காக நமக்கு கொடுத்திருக்கிறாரோ அதற்கென அதை நாம் சரியாக பயன்படுத்தும் பொழுது, அதற்குரிய நன்மைகளையும், ஆசிர்வாதங்களையும் ஆண்டவர் நமக்கு நிறைவாக (அநேகத்தின் மேல்) தருகிறவராய் இருக்கிறார்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் ஆபிரகாம், யோசேப்பு, தானியேல் போன்றோர் ஆண்டவர் தங்களுக்கு அருளிய ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய ஆசிர்வாதங்களை, வரங்களை சரியாய் பயன்படுத்தி மேன்மையடைந்தனர். அவர்களுடைய ஆரம்பம் மிக

சாதாரணமானதாய் இருந்தாலும், ஆண்டவர் பிற்காலங்களில் கொஞ்சத்திலே உண்மையாய் இருந்த அவர்களை அநேகத்தின் மேல் அதிகாரியாக / அதிபதியாக உயர்த்தினார். மேலும் புதிய ஏற்பாட்டு காலத்திலும், ஒரு சிறு கூட்டமாய் எழும்பின சபை, ஒரு சில நூற்றாண்டுகளில் உலகம் முழுவதும் பரவினது. இதற்கும் காரணம் அவர்கள் ஒரு சிறு கூட்டமாய், தங்களுக்கு அநேக துன்பங்கள் யூதர்கள் மூலமாகவும், புற ஜாதிகள் மூலமாகவும் வந்த பொழுதும், அந்த கொஞ்ச கால கொடிய உபவத்திரவத்தின் மத்தியில் விசுவாசத்தில் உறுதியாய் நின்று, கிறிஸ்துவை அறிவித்ததினால், அன்று அவர்கள் வாலாள் அறுபுண்டு, தலைகிழாக சிலுவையில் அறையப்பட்டு, உயிரோடு தீக்கிரையாக்கப்பட்டிருந்தாலும், இன்று 2000 ஆண்டுகளுக்கு பிறகும் அவர்களை நன்றியோடு உலக எங்கும் பரவியிருக்கிற தேவ சபை பார்க்கிறது.

எனவே நமக்கு தரப்படுகின்ற கொஞ்ச ஆசிர்வாதங்களானாலும் அல்லது நாம் கடந்து செல்ல வேண்டிய கொஞ்ச கால பாடுகளானாலும் அவற்றை ஏற்று கொண்டு, அவற்றை சரியாய் பயன்படுத்தி, நித்திய ஆசிர்வாதங்களையும், நன்மைகளையும், இளைப்பாறுதலையும் நாம் பெற வேண்டும் என்பதே இதன் சத்தியம் ஆகும். தேவன் நமக்கு தரும் ஆசிர்வாதங்கள் எல்லாம் நித்தியமானவை, பூரணமானவைகளே. அவைகள் நம்முடைய நீதியினால் அல்ல அவருடைய கிருபையினால் தரப்படுகிறவைகள். ஆகிலும் இலவசமாய் அதை பெற்றுக்கொள்ள நாம் தகுதியுடையவர்களாய் இருக்கும்படியாக ஆண்டவர் சில நேரங்களில் கொஞ்ச நன்மைகளை அல்லது கொஞ்ச பாடுகளையோ அனுமதித்து நம்மை பயிற்றுவித்து பின்பு நித்திய நன்மைகளை சுதந்தரிக்க செய்கிறார்.

**வெளி 2:10** கூறுகிறது “**நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.**“மேலும், **ரோ 8:18** கூறுகிறது “**ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.**“ஆம் ஒன்றை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும், நம் இவ்வுலக வாழ்வில் தேவன் தருகிற ஆசிர்வாதங்களானாலும் சரி அல்லது பவுலுக்கு கொடுக்கபட்டது போன்ற முல்லான காரியங்கள் ஆனாலும் சரி, நம் உலக வாழ்வு ஒரு சில காலம் தான். எனவே இவ்வுலக பிரகாரமான காரியம் எதுவானாலும் அது நம்மை தொடர போவதில்லை.

ஆனால் இதன் மூலம் தான் நித்திய வாழ்விற்கென எதை தர வேண்டும் என்பதை தேவனே தீர்மானிக்கிறார். எனவே இவ்வுலகத்திலேயே தர

வேண்டிய நன்மைகளுக்காகவும் சில வேளைகளில் தேவன் நம்மை பயிற்றுவிக்கிறார். அதே நேரத்தில் நித்திய வாழ்விற்கான பயிற்று தளமாய் நம் இவ்வுலக வாழ்வையும் நமக்கு தந்திருக்கிறார். ஆனால் இன்று அநேகர் நித்திய வாழ்வு என்பதை பற்றிய அறிவு இல்லாதிருப்பதும், இன்னும் சிலருக்கு அதை குறித்த அறிவு இருந்தும் அதை பெற்றுக்கொள்ள கொஞ்ச கால வாழ்வான இவ்வாழ்வை ஒரு அர்ப்பணிப்போடு வாழ முற்படாதததும் வருத்ததிற்குரிய காரியமாகும். மேலும் சில பேர் தங்கள் சுய நீதியின் மூலமாகவும், இன்னும் சிலர் பேசவும், காணவும் மாட்டாத கல்லான விக்கிரங்கள் மூலமாகவும் நித்திய ஜீவனை தேடுகின்றனர்.

ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்பதெல்லாம் ஒரு கடுகு விதை அளவு விசுவாசம் தான். ஐந்து அப்பம், இரண்டு மீன் போன்ற ஒரு காரியம் தான். நாம் ஆண்டவரை நோக்கி ஒரு அடி எடுத்து வைக்கும் பொழுது, தேவன் நம்மை நோக்கி பத்து அடிகள் எடுத்து வைக்கிறார். ஆனால் அதே நேரத்தில் ஆண்டவருக்கு நம் இதய கதவை திறவாத பொழுது, அதை தமது வார்த்தைகள் மூலம் தட்டி கொண்டிருப்பாரே (**வெளி 3:20**) அல்லாமல் கதவை உடைக்க மாட்டார். நாம் அவருக்கு எதிரான விசாலமான திசையில் பயணிக்கும் பொழுது நம்மை நோக்கி, இடுக்கமான பாதையானாலும் (**மத் 7:13**), வழி இதுவே இதில் நடவுங்கள் என்று நம்மை அழைப்பாரே அல்லாமல் நம்மை பலவந்தமாய் திருப்ப மாட்டார். எனவே நாம் செய்ய வேண்டியதெல்லாம், ஆண்டவர் நம்மோடு நம் இதயத்தில் இருக்கிறார அல்லது வெளியில் இருக்கிறாரா, அவர் காட்டிய பாதையில் பயணிக்கிறோமா அல்லது அதற்கு எதிராக பயணிக்கிறோமா என்பதை மாத்திரம் ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து அறிந்து சீராய் நடக்க வேண்டும். மற்றவர்களுக்கும் இதையே சொல்லவும் வேண்டும். அதையே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். ஆமென், அல்லேலூயா.

## 76. பரலோகத்திலே




**பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள். அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன். இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார். (லூக் 10:17-20)**

இங்கு ஆண்டவர் தாம் தேர்ந்தெடுத்து ஊழியத்திற்கு என அனுப்பின 70 பேரிடம் மேற்கண்டவாறு கூறினார் **(லூக் 10:1)**. இன்று தேவனால் இரட்சிக்கப்பட்டு, அபிஷேகிக்கப்பட்டு, அப்பா பிதாவே என்று கூப்பிட தக்க புத்திர சுவிகார ஆவியை உடையவர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் பிரதான கட்டளையாக **மத் 28:19,20** கொடுக்கப்பட்டிருக்கிறது. "**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.**" எனவே அந்த 70 நபர்களுக்கும் கொடுக்கப்பட்ட விஷேசித்த வரங்களை போல, இன்று விசுவாசிகளான நம் ஒவ்வொருவருக்கும் விஷேசித்த கிருபைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் தேவன் வல்லமையான காரியங்களை நம் ஒவ்வொருவர் மூலமும் செய்து வருகிறார். ஆம், ஆண்டவருக்குள்ளாய் நாம்

வாழும்பொழுது நம் வாழ்விலும், நமது மூலமாய் பிறர் வாழ்விலும் தேவன் கிரியை செய்வதை, அதிசயங்களை செய்வதை நாம் கண்கூடாய் காணலாம். ஒரு இயற்க்கைக்கு அப்பாற்ப்பட்ட வாழ்க்கையை வாழ்வதற்கே ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் இவ்வாறு அழைத்திருக்கிறார்.

ஆனால் இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது "**ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார். (லூக் 10:20)** " என்பதாகும். ஆம், இதை இன்னொரு விதத்தில் கூறுவதாய் இருந்தால், ஆண்டவர் நமக்கு தந்திருக்கிற விஷேசித்த ஆவிக்குரிய வரங்கள், ஆசிர்வாதங்கள் அல்லது, பூமிக்குரிய நன்மைகள், ஆஸ்திகள், மேன்மைகள் என எதை காட்டிலும், நம்மை ஆண்டவர் இரட்சித்திருக்கிறார். ஒரு நாள் நாம் ஆண்டவரோடு என்றென்றும் இருப்போம் என்ற இந்த ஒரு நம்பிக்கையே நமக்கு மேலான மகிழ்ச்சி தருவதாய் இருக்க வேண்டும்.

நாம் பெரிய சபைத்தலைவராய், சுவிசேஷகராய், தீர்க்கதரிசியாய் காணப்படுகிறவர்களையே அல்லது தேவனால் வல்லமையாய் பயன்படுத்த படுகிறவர்களையே, ஆண்டவரால் ஆசிர்வதிக்கப் பட்டவர்களாய் விஷேசமானவர்களாய் காண்கிறோம். மற்றவர்களையோ சாதாரண சபை விசுவாசிகள் என்று கூறிவிடுகிறோம். ஆனால் ஆண்டவருடைய பார்வையில் தனக்காக ஒரு தேவ பிள்ளை எந்த அளவிற்கு கிரியை செய்கிறான் என்பதை காட்டிலும், அவன் தன்னோடு இருப்பதை, தான் இரட்சிக்கப்பட்டிருப்பதை எந்த அளவிற்கு மேன்மையாக எண்ணுகிறான் என்பதையே அவர் காண்கிறார்.

ஊழியங்கள், வரங்கள் என எல்லாம் முக்கியமானவைகளே. இவற்றை செய்ய, பெற விசுவாசிகளாகிய நாம் ஒவ்வொருவரும் முயல வேண்டும், ஆனால் இவை எல்லாவற்றை காட்டிலும், நம்மை ஆண்டவருக்குள்ளாய் நிறுத்தி, நாம் பெற்ற இரட்சிப்பின் அனுபவத்தை நினைத்து மகிழ்ந்து, இவ்வுலக வாழ்வின் முடிவு பரியந்தம் அதை விட்டுவிடாமல் நிலைத்து நின்று, பரலோகத்திலும் எனக்கு இடம் உண்டு என்ற நிச்சயம் உடையவர்களாய் **வாழ்**வதையே ஆண்டவர் மேன்மையாக காண்கிறார். மேலும் கடைசி நாளில், ஆண்டவர் பரலோகத்தில் தேவ பிள்ளைகள் அனைவரையும் கூட்டி சேர்க்கும் பொழுது, இவ்வுலகத்தில் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து, யாருக்கும் அவ்வளவு அறிமுகமாய் இராத விசுவாசிகள், மேன்மையான வரவேற்பை பெறுவார்கள்.

இவை யாவும் ஒன்றை மாத்திரமே நமக்கு சுட்டி காட்டுகிறது. அதாவது நாம் நமது வேத அறிவை வளர்த்து கொள்வதை காட்டிலும், வரங்களை நாடி தேடுவதை காட்டிலும், இன்னும் ஆண்டவருக்கு எவ்வாறு ஊழியம் செய்வது என்பதை யோசிப்பதை காட்டிலும், திருச்சபை விசுவாசிகள் எல்லோருடன் கூட நமது பெயரும் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறதே, அது கிறுக்கப்பட்டு போகாதபடி நமது தனிப்பட்ட வாழ்க்கையை, சாட்சியை ஜாக்கிரதையாய் காத்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். நாம் ஒருபோதும், நம்மை மற்றவரைவிட மேன்மையாக எண்ணாமல், "**இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.**" **(2 கொரி 4:7)** என்பதை உணர்ந்து, சரீரமாகிய இந்த மண்பாண்டத்தை விட்டு விலகி எப்பொழுது ஆண்டவர் அழைத்தாலும், பரலோகில் அவரோடு கூட இருக்க ஆசைப்பட்ட பவுலை போல **(2 கொரி 5:8)** நாமும் வாஞ்சையாய் இருப்போம். ஆம், புதிய ஏற்பாட்டின் மிக பெரிய சுவிஷேச ஊழியமும், சபை ஊழியமும், அற்புத அடையாளங்கள், நிருபங்கள் என பலவித ஊழியங்கள்

இருந்தாலும், அவர் ஆசைப்பட்டதெல்லாம், மற்றவர்களுக்கு போதித்த நான் தானே ஆகாதவனாய் போகாதபடி சரீரத்தை ஒடுக்கி கீழ்படுத்தி, பரலோக ஜீவ புஸ்தகத்தில் பெயர் கிறுக்கப்பட்டு போகாதபடி காத்து கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

ஏனெனில் ஆண்டவரோடு மூன்று வருடங்கள் இருந்தும் ஆகாதவனாய் போன யூதாஸ் காரியோத்து போல **(அப் 1:16-20)**, ஆண்டவருடைய உபதேசம் கடினம் என்று கூறி அவரை பின்பற்றமல் பின் வாங்கி போன அநேக சீஷர்களை போல **(யோ 6:59-66)**, தங்களுடைய ஆஸ்தியில் ஒரு பகுதியை வஞ்சித்து புதிய ஏற்பாட்டு சபையில் ஆவியானவரிடம் பொய் சொன்ன அனனியா, சப்பீராள் போல **(அப் 5:1-10)**, இன்னும் வேறொரு கிறிஸ்துவை, வேறொரு சுவிஷேசத்தை பின்பற்றி, பின்வாங்கி போன சிலரை போல நாம் ஆகாதபடி ஜாக்கிரதையாய் இருக்கவே ஆண்டவர் அந்த 70 பேரிடம் கூறியதை, இன்று நம்மிடமும் கூறுகிறார். எனவே பரலோகத்தில் நம் பெயர் எழுதப்பட்டிருப்பதற்காக சந்தோஷப்பட்டு, அதே நேரத்தில் அது கிறுக்கப்பட்டு போகாதபடி இருக்க ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். அற்புத அடையாளங்கள் நம் வாழ்வில் நடப்பதும், நமது மூலமாய் பிறர் வாழ்வில் நடப்பதும் முக்கியமே. ஆனால் அதை காட்டிலும் நாம் கிறிஸ்துவுக்கும், கிறிஸ்து நமக்கும் முக்கியமானவர். ஆமென், அல்லேலூயா.

## 77. இமைப்பொழுதிலே



**அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (லூக் 23:39-43).**

ஆண்டவருடைய இரத்தம் சிந்தப்பட்ட நேரத்தில் அதின் முதற்பலனாய், ஆண்டவராலேயே நேரடியாக இரட்சிப்பை பெற்று, அன்றே பரலோக வாழ்வை பெற்றவன் இந்த சிலுவையில் அறைப்பட்ட கள்ளன். சிலுவையில் அறையப்படுவதற்கு கொஞ்சம் முன்பு கூட அவன் தான் இவ்வாறு இரட்சிக்கப்படுவேன் என்பதை நினைத்திருக்க மாட்டான். ஆனால் அந்த கொடூர சிலுவை பாடுகள் மத்தியிலும் தான் எல்லாம் முடிந்தது என்று கூறுவதற்கு சற்று முன்னரும், அவருடைய இரத்தத்தினால் மீட்கப்படும் மீட்பை அவரே சிலுவையில் ஆரம்பித்து வைத்தார். மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்ற ஆண்டவருடைய வாக்குப்படி, சிலுவையில் காரிருள் சூழுலும் நேரத்திலும், பரலோகத்தில் ஒரு மகிழ்வு உண்டாகும்படியாய், சத்துருவாகிய சாத்தானின் அழிவை ஆரம்பித்து வைக்கும்படியாய் நியாயபிரமாணத்தை முடித்து, கிருபையினால், அவருடைய இரத்தத்தினால் அனைவருக்கும் மீட்பு என்பதை ஆண்டவர் ஆரம்பித்து வைத்தார்.

ஆண்டவர் கூறியபடி, அந்தகாரத்தின் அதிகாரம் **(லூக் 22:53)** அங்கு செயலப்பட்டு கொண்டிருந்தாலும், பிசாசின் தலை நசுக்கப்பட்டு கொண்டிருக்கிறது என்பதை ஆண்டவர் அங்கு வெளிப்படுத்தினார். தான் செய்த தவறான செயல்களினால், தான் தண்டிக்க பட போகும் அந்த கடைசி வேளை வரை அவன் சிந்தித்து கொண்டிருந்ததெல்லாம், ஐயோ என் சரீரம் கொடிய சிலுவை வேதனை அடைய போகிறதே, அதற்கு மேலாக, தேவனுக்கு பயப்படாமல் தான் செய்த தீய செயல்களினால், தன் ஆவியும், ஆத்துமாவும் நரகத்தில் வேதனைப்பட போகிறதே என்ற துயரத்தில் இருந்த அவனுக்கு, ஆண்டவர் இப்படிப்பட்ட ஒரு தருணத்தை தந்தார். அதை அவன் சரியாக பயன்படுத்தி கொண்டான்.

அப். பவுலின் வாழ்க்கையும் இப்படிப்பட்ட ஒன்றே. சவுலாய் இருந்து, சபையை துன்பப்படுத்தி பாழாக்கிக்கொண்டிருந்த **(அப் 8:3)** நேரத்தில் ஒரு நொடிபொழுதில், “**அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.**” **(அப் 9:4-6)**. இந்த சத்தத்திற்கு, பரம தரிசனத்திற்கு கீழ்படிந்து, முற்றிலும் மாற்றம் அடைந்தவராய் சபைக்காக, புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்காக தன்னையே அர்பணித்து, சபைக்காக கர்ப வேதனை படுகிற தாய்யாய், தகப்பனாய் மாறிப்போனார். இவை இரண்டிலும் ஆண்டவர் நேரடியாய் இவர்களோடு இடைப்பட்டு, அவர்கள் வாழ்க்கையை இமைப்பொழுதிலே தலைகீழாக மாற்றிப்போட்டார். இதுவே அவரின் அன்பு, இதுவே அவரின் வல்லமை.

இப்படி 2000 ஆண்டுகளாக ஆண்டவருடைய இந்த வல்லமையினால் தொடப்பட்டு, வாழ்க்கை தலைகீழாக மாற்றப்பட்டோர் ஏராளம். சிறைச்சாலையில் மரண தண்டனை கைதியாக இருந்து தன் பாவத்திற்காக, இவ்வுலக நிதீ, சரீர மரணத்தை தங்களுக்கு தந்த பொழுதும், ஆண்டவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு, மீட்கப்பட்டு, வாழ்வில் மாற்றம்பெற்று, மரண தண்டனையை சமாதானத்தோடு ஏற்று பரலோகத்தை சென்றடைந்தவர் பலர். இன்னும் தங்கள் பொல்லாத வழியில் / வாழ்க்கையில் இருந்து மனந்திரும்பி, முழுவதுமாய் ஆண்டவருக்கு தங்களை அர்பணித்து வாழ்ந்தோர், வல்லமையாய் ஊழியம் செய்தோர் பலர். பழைய மனுஷனை கலைந்து போட்டு, கிறிஸ்துவுக்குள்ளாக புதிய மனுஷனை தரித்து கொள்ளும் அனுபவமே கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வின் அஸ்திபாரம் ஆகும்.

ஆண்டவர் சஷணபொழுதில் மாற்றங்களை பலர் வாழ்வில் செய்து கொண்டிருக்கிறார். சிலருடைய வாழ்க்கையில் இரட்சிப்பின் அனுபவம் பவுலை போல உடனே நிகழாமல் சிறிது சிறிதாய் காலம் எடுத்து நடந்தாலும், அவர்கள் மனமாற்றத்திற்கான ஒரு ஆரம்பத்தை ஆண்டவர் ஏதோ ஒரு நாளில் அவர்களுடன் இடைப்பட்டு துவக்கி வைக்கிறார். அந்த நொடி பொழுதே நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் முக்கியமானதாகும். பூமியில் உள்ள அனைத்து மக்களுக்கும், ஆண்டவர் ஏதோ ஒரு விதத்தில் இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை தருகிறார். சிலர் அதை பயன்படுத்தி கொள்கின்றனர், மற்ற சிலர் அதை தவற விடுகின்றனர். இப்படிப்பட்ட இரட்சிப்பை பெற்ற, அழைப்பை பெற்ற நாம் **“பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.” (1 தெச 4:3), “தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.“ (1 தெச 4:7)**. மேலும் **மத் 5:8** கூறுகிறது “**இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.**“ என்று.

இப்படியாக ஏதோ ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, தேவனுடைய அநாதி திட்டத்தின்படி இரட்சிப்பின் பாதைக்கு திருப்பப்பட்ட நாம், பரிசுத்தமாக்க பட்டவர்களாய், "**இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.**" (1 கொரி 15:51-54). இதுவே இந்த கிருபையின் காலத்தில் தேவனுடைய அநாதி திட்டமாகும். எனவே இந்த கிருபையின் நாட்கள் முடிவதற்குள், இரட்சிப்பின் சுவிசேஷத்தை எத்தனை மக்களுக்கு கூற முடியுமோ, அத்தனை மக்களுக்கு கூறி, நாமும் பரிசுத்தத்தில் பூரணப்பட நம் வாழ்வையும் அர்பணிப்போடு ஜாக்கிரதையாய் காத்துகொள்வோமாக. இரட்சிப்பு எப்படி நம் வாழ்வில் ஒரு நாள் நிகழ்ந்ததோ, அதே போல் நம் சரீர மறுரூபமும் ஒரு நாள் இமைப்பொழுதிலே நடக்கும் என்ற நம்பிக்கையோடே, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்படி பிரயாசப்படுவோமாக (எபே 4:11). ஆமென், அல்லேலூயா.

## 78. பெத்லகேம் செல்வோம்




**அப்பொழுது அவள்: இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப் போய்விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ என்றாள். அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள். அவள் தன்னோடேகூட வர மனஉறுதியாயிருக்கிறதைக் கண்டு, அப்புறம் அதைக்குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை. (ரூத் 1:15-18).**

மேற்கண்ட வசனங்கள் நகோமி தன் மருமக்களோடு மோவாப் தேசத்திலிருந்து பெத்லகேம் நோக்கி பயணம் புறப்பட்ட பொழுது கூறின வார்த்தைகள் ஆகும். ஆம் இஸ்ரவேலில் உள்ள பெத்லகேமிற்கு வருவதால் உலக பிரகாரமாக உனக்கு நன்மை எதுவும் கிடைக்கபோவதில்லை அதற்கு பதில் மோவாபிற்கே செல்வது நல்லது என்று நகோமி கூறிய பொழுதும், அதைக்கேட்டு மற்றொரு மருமகளான ஓர்பாள் சென்றபொழுதும், ரூத் தன்னுடைய முடிவில் உறுதியாய் இருந்தாள். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி ஸ்தீரியின் வித்தாகிய தேவகுமாரன் பெத்லகேமில் தாவீதின் ஊரிலே பிறப்பது அவருடைய சித்தமாகையால் அன்று அந்த ரூத்தின் மனதில் ஆண்டவர் கிரியை செய்தார்.

இஸ்ரவேல் தேசத்தில், பெத்லகேம் ஊரில் எத்தனையோ பெண்கள் இருந்தாலும் மோவாப் தேசத்தின் ரூத்தே புதிய ஏற்பாட்டின் வம்சாவளியில் இடம் பெற்றாள். இவையாவும் தேவனின் அநாதி திட்டம் மற்றும் சித்தமாகும். ரூத் கூறிய வார்த்தைகளில் முக்கியமான ஒன்று **"உம்முடைய தேவன் என்னுடைய தேவன்"** என்பதாகும். ஆம் திருமணத்திற்கு முன்பு ரூத் ஆண்டவரை பற்றி

அறிந்திருந்தாலோ இல்லையோ, ஆனால் இப்பொழுது தனக்கு யார் ஆண்டவர் என்பதை அவள் முடிவு செய்துவிட்டாள். அதை முடிவு செய்வது மட்டுமல்ல, அதை செயலின் மூலமாய் பெத்லகேமிற்கு பயணப்படுவதின் மூலம் வெளிப்படுத்தியும் விட்டாள். போவாஸ் அவளை மீட்பதற்கு காரணமாக அமைந்தது இந்த பயணமே.

இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியங்கள் பல இருக்கின்றன. முதலாவது ரூத்தின் செயல் இரட்சிப்பை நோக்கி அடி எடுத்துவைக்கும் ஒரு மனந்திரும்புதலுக்கு ஏற்றதாக உள்ளது. இன்று பாவ இருளில், கொடிய பிணியில் இருக்கும் எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள், இரட்சிப்பை குறித்து கேள்விபடும் பொழுது அதை நோக்கி செல்கின்றனர். தாங்கள் அர்பணிக்கும் இந்த அர்பணிப்பின் மூலமாய் நித்திய பரலோக மேன்மையும், ஆவிக்குரிய ஆசிர்வாதங்களும், பூமிக்குரிய நன்மைகளும் எல்லாவற்றிற்கும் மேலாக சர்வ வல்ல ஆண்டவரை 'அப்பா பிதாவே' என்று கூப்பிட்தக்க புத்திர சுவிகார பாக்கியமும் கிடைக்கும் என்பதை பற்றிய முழுமையான தெளிவு இல்லாமல் இருந்தாலும், இரட்சிப்பை நோக்கி அவர்கள் எடுத்துவைக்கும் அந்த அடி மேலானதாகும்.

தங்கள் பாவ வாழ்க்கையில் இருந்து, நோயிலிருந்து, இன்னும் பலவித இன்னல்களில் இருந்து விடுபட இந்த இரட்சிப்பின் சுவிஷேசம் உதவுமா என்று வரும் அவர்கள், தேவன் அவர்களுக்கு வைத்திருக்கிற திட்டத்தை ஆரம்பத்தில் அறிவதில்லை. ஆம் ரூத்தும் போவாஸ் பற்றியோ, வயல்நிலங்களை பற்றியோ, அதை மீட்பதை பற்றியோ எந்த அறிவும் முதலில் பெற்றவளாய் இருக்கவில்லை. தான் பெத்லகேம் செல்வதின் மூலம் இவை எல்லாம் ஆண்டவர் மூலம் தனக்கு கொடுக்கப்படும் என்ற எண்ணத்திலோ அவள் பெத்லகேம் வரவில்லை. ஆனால் ஒன்றை அவள் உணர்ந்து இருந்தாள் அதாவது நகோமியோடு பெத்லகேம் சென்று அவளோடு வாழ்வதே நலம் என்பதாகும். **ரூத் 1:8,9** வசனங்களில் "**நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி: நீங்கள் இருவரும் உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பிப்போங்கள்; மரித்துப்போனவர்களுக்கும் எனக்கும் நீங்கள் தயைசெய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயைசெய்வாராக. கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று சொல்லி, அவர்களை முத்தமிட்டாள்.** ", நகோமியே அவர்கள் இருவரும் திரும்பி செல்வதின் மூலம் கிடைக்கும் புதிய வாழ்வை குறித்து கூறினாள்.

முதலில் மறுத்தாலும் பிறகு ஒர்பாள் சென்றுவிட்டாள். அவளுடைய பெயரும் வேதாகமத்தில் அதற்கு பிறகு குறிப்பிட படவில்லை. ஆனால் "**மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்**" **(ரூத் 1:17)** என்று கூறிய ரூத்தின் மன உறுதியோ அவளுடைய பெயரை புதிய ஏற்பாட்டின் முதல் அத்தியாயத்தில் கிறிஸ்துவின் சந்ததியில், தாவீதின் முன்னோராய் இடம் பெற செய்தது. **மத் 1:5 ஆம்** வசனம் மிகவும் ஆச்சரியமான வசனமாகும் "**சல்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான்; போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான்; ஓபேத் ஈசாயைப் பெற்றான்;**". ஆண்டவரின் வம்சவரலாற்றில் இடம்பெற்ற இரண்டே பெண்களான போவாசின் தாயாகிய ராகாபும், போவாசின் மனைவியான ரூத்தும் அடுத்த அடுத்த கால கட்டத்தில் புற ஜாதிகளிலிருந்து இஸ்ரவேல் வம்சாவளிக்குள் வந்தவர்கள். ஆம் ரூத்தை போல இனி ஒருபோதும் மோவாபாகிய உலக வாழ்க்கைக்குள்ளாய் செல்லமாட்டேன் என் வாழ்க்கையின் காலம் எல்லாம் பெத்லகேமில் இருப்பதே என்று முடிவு செய்யும் ஒருவரும் கெட்டுபோவதில்லை. ரூத் பெற்றது போல் மேலான ஒரு வாழ்வையே பெற்று கொள்வர்.

மேலும் நகோமியும் ரூத்தையும், ஒர்பாளையும் திரும்பி போக சொன்னாலும், அவளோடு இருக்க அவர்கள் விருப்பம் தெரிவித்து இருந்தது, தன் சொந்த தாய் வீட்டை காட்டிலும், மோவாப் தேசத்தை காட்டிலும், ஒரு புதிய வாழ்க்கையை உருவாக்கி கொள்வதை காட்டிலும், நகோமியோடு வெளிப்பிரகாரமாக ஒரு நன்மையும் இல்லாமல் இருந்தாலும், அவளோடு இருப்பதே நலம் என்று இருவரையுமே சிந்திக்க வைத்தது நகோமியின் வாழ்க்கையாகும். ஒருவேளை நகோமி விரக்தியில் சில காரியங்களை பேசினாலும் "**அதற்கு அவள்: நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல், மாராள் என்று சொல்லுங்கள்; சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பிவரப்பண்ணினார்; கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தியிருக்கையில், நீங்கள் என்னை நகோமி என்பானேன் என்றாள்.**" (ரூத் 1:20,21), அவள் ரூத்தை நேசித்த விதமும், அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்து கொடுத்த விதமும் சிறந்ததாகும். இன்று சபை விசுவாசிகளாய் உள்ளோர் எவ்வாறு தங்கள் வாழ்க்கை முறையின் மூலமாய் புறஜாதி மக்களை ஆண்டவர் பக்கம் கொண்டு வர வேண்டும், இரட்சிப்பிற்குள்ளாய் நடத்த வேண்டும் என்பதற்கு நகோமி ஒரு அடையாளமாய் உள்ளாள்.

இறுதியாக போவாசை குறித்து நாம் காணும் பொழுது, செல்வ சீமானாய் வாழ்ந்த பொழுதும், நற்குணசாலியாய், ஏழைகளை விசாரிக்கிறவராய், ரூத்தை குறித்து சாட்சி கொடுக்கிறவராய் காணப்படுகிறார் "**அப்பொழுது அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி: நான் அந்நியதேசத்தாளாயிருக்க, நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயைகிடைத்தது என்றாள். அதற்குப் போவாஸ் பிரதியுத்தரமாக: உன் புருஷன் மரணமடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்.**" (ரூத் 2:10-12). மேலும் எல்லாவற்றையும் நியாயப்படியும், சட்டப்படியும் செய்வதை காணலாம் (ரூத் 4:1,2).

எல்லாவற்றிற்கும் மேலாக "**அப்பொழுது அந்தச் சுதந்தரவாளி: நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு, நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன்; நான் மீட்கத்தக்கதை நீர் மீட்டுக்கொள்ளும்; நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன் என்றான்.**", (ரூத் 4:6) என்று கூறிய பொழுதும், தன்னை அங்கு அர்பணித்த போவாஸ் எதையும் இழந்துபோகவில்லை. "**நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு**", என்று பெயர் குறிப்பிடபடாத அவன் கூறிய பொழுதும், போவாஸின் அர்ப்ணிப்பு அவரையும் கிறிஸ்துவின் வரலாற்றில் ஒன்றாக்கியது. அவருடைய சுதந்திர வீதம் கெட்டுபோகவில்லை அதற்கு மாறாக அது தேவனால் மேன்மை பெற்றது. எனவே பாலைவனம் போல் எல்லாவற்றையும் இழந்த நிலையில் இருந்த நகோமி மற்றும் ரூத்தின் நிலையோடு மோவாப்பில் ஆரம்பமாகும் புத்தகம், பெத்லகேமிற்கு பயணித்து ஒரு அருமையான ஆசிர்வாதத்தோடு முடிகிறது. ரூத்தின் புத்தகம் தாவீதின் பிறப்பை பற்றி கூறி முடிந்தாலும், அது "**ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.**" (ஏசா 11:1) என்பதற்கு ஆரம்பமாய் உள்ளது. ஆமென், அல்லேலூயா.

## 79. இருளிலிருந்து வெளிச்சத்திற்கு



**வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார். அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவள் புறப்பட்டு, அவரோடேகூட இருந்தவர்கள் துக்கப்பட்டு அழுதுகொண்டிருக்கையில், அவர்களிடத்தில் போய், அந்தச் செய்தியை அறிவித்தாள். (மாற்கு 16:9,10)**

மேற்கண்ட வசனங்களில் நாம் காண்கிற வார்த்தைகள் “முதலாம் நாள், அதிகாலை, எழுந்திருந்த பின்பு, முதல் முதல்” போன்றவைகள் ஒரு புதிய ஆரம்பத்தை குறிப்பதாய் உள்ளது. ஆம் மனித குலத்தின் புதிய யுகமான கிருபையின் காலத்தின் ஆரம்பத்தில், அதற்காக இரத்தம் சிந்தி மரித்து உயிர்த்த கிறிஸ்து தாமே நேரடியாய் வந்து, மனித குலத்திற்கு ஒரு பிரதிநிதியாய் மகதலேனா மரியாளை தேர்ந்தெடுத்து அவள் மூலமாய் மற்றவர்களுக்கு அதை வெளிப்படுத்தினார்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒன்று, இப்பேர்ப்பட்ட கிருபையை பெற்ற மரியாளிடமிருந்து ஆண்டவர் ஏழு பிசாசுகளை துரத்தியிருந்தார் என்பதாகும். ஆண்டவர் இவ்வுலகில் ஊழியம் செய்தது 3½ வருடங்கள் தான். எனவே அவள் விடுதலை பெற்றதும் இந்த 3½ வருடங்களுக்குள்ளாகவே இருக்கும். சற்று யோசித்து பார்ப்போமானால், மூன்று அல்லது நான்கு வருடத்திற்கு முன்பு வரை, ஒன்று, இரண்டு என்றல்ல ஏழு பிசாசுகள் பிடித்திருந்த அவளுடைய வாழ்வு எவ்வளவு இருளாய் இருந்திருக்கும். பக்திமான்களாய், நீதிமான்களாய் இருந்த மற்றவர்களை அவர் தேர்ந்தெடுக்காமல், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து வந்தவர்களையும் தேர்ந்தெடுக்காமல், தாம் ஊழியத்திற்கென ஏற்படுத்திய அப்போஸ்தலர்களை கூட தேர்ந்தெடுக்காமல் மகதலேனா மரியாளை தேர்ந்தெடுத்தார். மரியாளிடம் இருந்து அவர் பிசாசுகளை துரத்தின சம்பவம் சுவிஷேச புத்தகங்களில் விவரமாக குறிப்பிடபடவில்லை. வேறு எந்த இடத்திலும் பேதுருவை போல, மற்ற அப்போஸ்தலர்களை போல மரியாள் பெயர் குறிப்பிடபடவில்லை. ஆனால் யாருக்கும் கிடைக்காத பாக்கியத்தை அவள் பெற்றாள்.

இதற்கு காரணத்தை யோவான் சுவிஷேசத்தில் நாம் காணலாம். **யோ 20: 1-18** வசனங்களை நாம் காண்கையில், முதலாவது அவள் கல்லறையில் வந்து பார்த்து விட்டு அங்கு ஆண்டவரின் சரீரம் இல்லாதபடியால் ஓடி சென்று பேதுருவையும் இன்னும் மற்றொரு சீஷனையும் அழைத்து வருகிறாள். ஆண்டவரின் சரீரம் இல்லாததை கண்டு, வந்த அவர்கள் தங்களுடைய இடத்திற்கு ஆச்சரியத்துடன் திரும்பி சென்றுவிட்டனர். ஆண்டவர் மரித்து விட்டார். அவர் சரீரத்தை கூட காணவில்லை. எனவே நம்மையாவது இனி காப்பாற்றி கொள்வோம் என்று யூதருக்கு பயந்ததினால், பூட்டிய அறையில் பாதுகாப்பாக இருக்க அவர்கள் சென்றுவிட்டனர். பிலாத்துவினிடதிற்கு துணிந்து சென்று ஆண்டவரின் சரீரத்தை கேட்டு பெற்று, அதை அருமையாக அடக்கம் செய்த **"கனம்பொருந்திய ஆலோசனைக்காரனும் அரிமத்தியா ஊரானும் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனுமாகிய யோசேப்பு" (மாற்கு 15:43-46)** கூட ஆண்டவரின் சரீரத்தை பற்றி கவலைப்படவில்லை.

ஆனால் **"மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள்; அப்படி அழுதுகொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள். அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள்." (யோ 20:11-13).** இங்கு அவள் கண்ட தேவதூதர்களின் காட்சி இயற்கைக்கு அப்பாற்ப்பட்டதாய் இருந்தாலும், அதைபற்றி எல்லாம் அவள் சிந்தியாமல், அவள் இதயமெல்லாம், ஒன்றையே, இயேசுவின் சரீரத்தையே தேடினது.

மேற்கண்ட வசனங்களுக்கு அடுத்த வசனமான **யோ 20:14-16** வசனங்களில் **"இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள். இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள்; அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்."** ஆம் ஒரு காலத்தில் அவளுக்குள் ஏழு பிசாசுகள் இருந்தது, ஆனால் இப்பொழுதோ முழுவதும் இயேசுவே அவளில் நிறைந்திருந்தார். ஆண்டவரின் சரீரம் காணவில்லை என்றபோது, மற்றவர்கள் அதை பற்றி அதிக அக்கறை காட்டாமல் போனபொழுதும், அவள் இதயமோ தன் பாதுகாப்பை குறித்து கவலைப்படாமல் அவரது மரண சரீரத்தை எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்றே அவள் தான் பார்த்த ஒவ்வொருவரிடமும் **"என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை"** என்பதையே சொல்லி கொண்டிருந்தாள். அழுகையோடும், ஒருவித பதற்றதோடும் அவரது சரீரத்தை தன்னம் தனியவளாய் தேடிகொண்டிருந்தாள். ஆதலால் அவளை தேடி இயேசு வந்தார். ஆகிலும் ஒரு நொடி தன்னை மறைத்து அவளிடம் **"ஏன் அழுகிறாய், யாரை தேடுகிறாய்"** என்ற கேள்வியை கேட்டார். அதற்கு அவள் கூறிய பதில் மிக அருமையானதாகும். அவள் **"அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள்"**, இங்கு நாம் கவனிக்க வேண்டிய வார்த்தை நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்பதாகும்.

ஆம் அவர் சரீரம் இருக்கும இடத்தை மட்டும் காட்டுங்கள், யாரும் எனக்கு துணை வேண்டாம், தான் ஒரு பெண்ணாக இருந்த போதிலும், யாரையும் துணைக்கு

அழைக்காமல், தோட்டக்காரர் என்று எண்ணின அவரையும் அழைக்காமல், நானே போய் அவரது உடலை எப்படியாவது எடுத்து கொண்டு வந்து மறுபடியும் நல்லடக்கம் செய்வேன் என்பதே அவளது நோக்கமாக இருந்தது. அப்பொழுது ஆண்டவர் அவளுக்கு தம்மை வெளிப்படுத்தினார். அவர் கூறியது ஒரே வார்த்தை மரியாளே என்பதாகும். அவரோடு பேசி கொண்டே இங்கும் அங்கும் தேடிதிரிந்த அவள் "மரியாளே" என்று ஆண்டவரின் தொனியை கேட்ட மாத்திரத்தில் திரும்பி பார்த்து "ரபூனி" என்றாள்.

ஆம் மரித்த சரீரத்தை தேடின அவள், அவர் உயிர்தெழுந்த வல்லமையோடு நிற்பதை கண்டபோது எவ்வளவு மகிழ்ந்திருப்பாள். பிசாசின் பிடியில் இருந்து இரட்சிக்கப்பட்டு ஆண்டவரண்டை வந்த அவள், உயிர்தெழுந்த கர்த்தரை கண்ணாற கண்டாள். இதற்கு ஒரே காரணம் ஆண்டவரை தேடின அவளது இருதயமே. இங்கு நாம் அறிந்து கொள்கிற ஒரு சத்தியம் என்னவென்றால், எப்பேர்பட்ட பாவ சேற்றில் இருந்திருந்தாலும், எத்தனை பிசாசுகளின் பிடியில் அகப்பட்டிருந்தாலும், ஆண்டவரால் சந்திக்கபடும்பொழுது அவற்றில் இருந்து விடுதலை பெறும் நாம், அத்தோடு நின்று விடாமல் இயேசுவையே நம்மில் முழுவதுமாய் நிறைத்து கொள்ளவேண்டும். அப்பொழுது உயிர்தெழுந்த வல்லமையோடு கிறிஸ்து நம்மூலமாய் வெளிப்படுவார். வேறு எந்த விஷேச தாலந்தையோ, திறமையையோ ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கவில்லை. இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வந்த நம் வாழ்வு, அவ்வெளிச்சத்தை பிரதிபலிப்பதாய் மாறவேண்டும். தேவன் தாமே அப்படிப்பட்ட கிருபையை நம் ஒவ்வொருவருக்கும் தருவாராக. ஆமென், அல்லேலூயா.

# 80. அங்கிகரிக்கப்படுதல்




**"ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார். காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை." ஆதி (4:4,5)**

மேற்க்கண்ட வசனம் ஒன்றை தெளிவாய் கூறுகிறது. ஒரு மனிதன் தேவனால் அங்கிகரிக்கப்படும் பொழுது, அவன் செலுத்தும் காணிக்கை உள்பட அனைத்தும் அவரால் அங்கிகரிக்கப்படுகிறது. ஆனால் அவரால் அங்கிகரிக்கப்படமுடியாத ஒன்றை (காணிக்கை உள்பட) மனிதன் செலுத்தும் பொழுது அவனும் அவரால் அங்கிகரிக்கப்படாமல் போகிறான். இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியம் என்னவென்றால், காணிக்கையால் தேவ அங்கிகாரத்தை பெற முடியாது, ஆனால் நாம் அங்கிகரிக்கப்பட்டவர்களாய் இருக்க விரும்பினால், நம்முடைய அனைத்தும் (காணிக்கை உள்பட) தேவ அங்கிகாரத்தை பெற்றதாய் இருக்க வேண்டும். மேற்க்கண்ட வசனத்தில், ஆபேல் காணிக்கை செலுத்தியதால் அவன் அங்கிகரிக்கப்படவில்லை, ஆனால் அங்கிகரிக்கப்படதக்க காணிக்கையை செலுத்தியதால், அவனும் அவன் காணிக்கையும் தேவ சமூகத்தில் அங்கிகரிக்கப்பட்டது.

**எபி 11:4** கூறுகிறது **"விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்."**, என்று. மேற்க்கண்ட வசனத்தில் விசுவாசத்தினாலே மேன்மையான பலியை தேவனுக்கு செலுத்தியதால் அவனும், அவன் காணிக்கையும் அங்கிகரிக்கப்பட்டது. அதினாலே

அவன் நீதிமான் என்று சாட்சி பெற்றான். முக்கியமாக அவனுடைய காணிக்கைகளைக் குறித்தும் தேவன் சாட்சி கொடுத்தார். ஆம் இங்கு எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பது விசுவாசம். காயீனும், ஆபேலும் வாழ்ந்த அந்த ஆதி காலத்தில், தேவனுடைய நியாயபிரமாணங்கள் அறிவிக்கபடாத அக்காலத்தில், மனசாட்சியில் உண்மையுள்ளவராய், தன் பெற்றோரான ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்தவரும், இவ்வுலகம் முழுவதையும் உண்டாக்கி, ஆண்டு நடத்துகிறவரும் தேவனே என்ற அறிவு அவரிடம் இருந்தது. மேலும் தனக்கு உண்டாயிருக்கும் யாவும் தேவனால் கொடுக்கப்பட்டது என்ற நம்பிக்கை அவர்டம் இருந்தது. எனவேதான் **ஆதி 4:4** கூறுகிறபடி **“ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான்.“**

ஆனால் அப்படிப்பட்ட எதுவும் காயீனிடம் இருந்ததாக தெரியவில்லை. அவன் மனதில் இருந்ததெல்லாம் பொறாமையும், எரிச்சலும் தான். ஆண்டவரே காயீனை நோக்கி **ஆதி 4:7** வசனத்தில் **“நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.“**, ஆம் காயீனால் காணிக்கை கொண்டு வந்து செலுத்த முடிந்ததே தவிர அவனை தேவனுக்கு செலுத்தமுடியவில்லை. எனவே அவன் தன்னை தேவனுக்கு செலுத்த முடியாத பொழுது அவன் கொடுத்த காணிக்கையும் தேவனால் அங்கிகரிக்கப்படவில்லை. இங்கு நாம் காணகூடிய மற்றொரு சத்தியம், நியாயபிரமாணம் இல்லாத அக்காலத்தில் விசுவாசம் மூலம் நீதிமானாக்கப்பட்டவர் ஆபேல். இன்று நாமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீது வைக்கும் விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்படுகிறோம். அப்படி நீதிமான்களாக்கப்பட்ட நாம், காணிக்கை உள்பட எதை தேவனுக்கு செலுத்தினாலும், ஜாக்கிரதையாய் தேவ அங்கிகரிப்புக்கு ஏற்ற விதமாய் (தலையீற்று, கொழுமை) செலுத்த வேண்டும். நாம் அஜாக்கிரதையாய் இருப்போமானால் அதுவே நம்முடைய வீழ்ச்சிக்கு, பின்மாற்றத்திற்கு காரணமாய் அமைந்து விடும்.

அதே நேரத்தில் காயீனை போல தேவ அங்கிகரிப்புக்கு ஏற்றவிதமாய் நம் வாழ்க்கை இல்லாதபொழுது, நாம் கொடுக்கும் எந்தவித காணிக்கையும் தேவனால் அங்கிகரிக்கப்படுவதில்லை. காணிக்கை மாத்திரமல்ல, தேவனுக்கு என்று நாம் எதை செய்தாலும் அது அங்கிகரிக்கப்படுவதில்லை. தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் என்று கூறி செயல்படும், பலரது செயல்கள் தேவனால் அங்கிகரிக்கப்படுவதில்லை. சிலர் பெரும் பணத்தை சபைக்கு கொடுப்பதின் மூலம், ஒருவேளை சபை மக்களிடம் அங்கிகாரம் பெறலாம். ஆனால் அவர்களும் அவர்கள் கொடுத்த பணமும் தேவ அங்கிகாரத்தை பெற்றதா என்பது கேள்விகுறி. அதே போல் சிலர் சபை பொறுப்புக்களில் இருந்து ஊழியம் செய்ய விரும்புகின்றனர். ஆனால் அப்பொறுப்பை பெற அவர்கள் செய்யும் செயல்களும், அப்பொறுப்பை பெற்ற பிறகு அவர்கள் செய்யும் காரியங்களும் தேவனுக்கு எதிரானதாய் உள்ளது. இன்னும், பல கோடிக்கணக்கான மக்களால் அங்கிகரிக்கப்பட்டு, பின்பற்றபடுகிற தேவ ஊழியர்களின் வாழ்க்கையும் உண்மையில் தேவ அங்கிகாரம் அற்றதாய் உள்ளது.

எனவே ஆபேலை போல தேவன் மீது வைக்கும் விசுவாசத்தினாலும், மேலும் அதற்கேற்ற நடக்கையினாலும் நீதிமான் என்கிற அங்கிகரிப்பை பெற்று வாழும் வாழ்க்கையே சிறந்ததாகும். **“அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்“ (எபி 11:4)** என்று வேத வசனம் கூறுகிறபடி, நாம் மறைந்த பிறகும், நம்முடைய சந்ததியும், நாம் தேவனுக்கென்று செய்த காரியங்களும் தேவ அங்கிகரிப்பை பெற்று அநேகருக்கு சாட்சியாய் விளங்கும். தேவன் தாமே அப்படிப்பட்ட கிருபையை நம் ஒவ்வொருவருக்கும் தருவாராக. ஆமென், அல்லேலூயா.

# 81. கொரோனா காலத்தில்



இன்று உலகத்தில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு பரீட்சையமான ஒரு பெயர் கொரோனா. இந்த கொள்ளை நோய் எப்படி ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டது என்பது தேவ பிள்ளைகளாகிய நமக்கு தெரியாவிட்டாலும், ஆண்டவரின் சித்தம், அனுமதி இல்லாமல் இது இவ்வுலகில் இல்லை. ஆனால் ஒன்று, இதை அனுமதித்திருக்கும் ஆண்டவர் அதை எப்பொழுது மறைய செய்ய நினைக்கிறாரோ அப்பொழுது அது மறைந்து போகும்.

மோசேயின் காலத்தில் எகிப்தியர் வாதிக்கப்பட்ட நிலையிலும், ஆண்டவரின் சத்ததிற்கு கீழ்படிந்து செயலாற்றிய இஸ்ரவேலரை அவை எப்படி பாதிக்கவில்லையோ, எகிப்தாகிய உலகத்திற்குள் இருந்தாலும் பரம கானானை நோக்கி செல்கின்ற நாம், இவற்றால் பாதிக்கபடுவதில்லை. ஒருவேளை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் பல தேவ பிள்ளைகள் இறக்கிறார்களே, ஏன் ஆண்டவர் அதை தடுக்கவில்லை என்று கேட்கலாம். உண்மையில் ஆண்டவருடைய சித்தம் இதன் மூலம் அவர்களை தம்மண்டை சேர்த்து கொள்வதற்காக இருக்கலாம். கொரோனாவினால் சபையை ஒன்றும் செய்ய முடியாது. இன்று அனைத்து சபைகளும் மூடி கிடக்கிறது. அநேக சுவிஷேச ஊழியங்கள் தடைப்பட்டு கிடக்கிறது. புனித வெள்ளி, ஈஸ்டர் போன்ற நாட்கள் கிறிஸ்துவின் அன்பை, அவரது பாடு மரணத்தை, அவரது உயிர்தெழுதலின் வல்லமையை மற்றவரோடு பகிர்ந்து கொள்ளமுடியாதபடி இவ்வருடத்தில் சென்றுவிட்டது. ஒருவேளை பிசாசு, இந்நோயின் மூலம், சபை கூடி வருதலையும், சுவிஷேச ஊழியத்தையும் ஸ்தம்பிக்க செய்ததை போல் நாம் உணரலாம். நாடே பொருளாதார நெருக்கடியில் சென்று கொண்டிருக்க, இனி மிஷன் ஊழியங்கள், சபை ஊழியங்கள் எப்படி தாங்கபடபோகிறது என்று கூட சிலர் நினைக்கலாம்.

ஒரு வேளை பிசாசு ஏதோ நம்மை பிரேக் போட்டு நிறுத்தி வைத்துள்ளதை போல எண்ணலாம். ஆனால் சபை இக்கொரோனா காலத்தில் செய்ய வேண்டிய ஒரு காரியம் உள்ளது, ஆம், அதை தான் நாம் இப்பொழுது தியானிக்க போகிறோம்.

சபை செய்யகூடிய காரியம் என்றவுடன் விஷேச உபவாச ஜெபத்தை ஏறெடுக்க செய்ய வேண்டும் என்று நினைக்கலாம். ஆம் அதுவே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம். அத்தோடு சேர்த்து நாம் இன்னும் பிற காரியங்களை செய்யும் பொழுது, இக்கொரோனா வியாதியினால் உண்டாயிருக்கிற காயங்களை நாம் கட்டுவதின் மூலம், இக்கொரோனா வியாதி மறைந்துபோவது மட்டுமில்லாமல், மிக சுலபமாக அநேக ஆத்துமாக்களை நாம் இவ்வேளையில் அறுவடை செய்து, பிசாசின் முகத்தில் கரியை பூசலாம். ஆம், இக்கொள்ளை நோயினால் சாத்தான் சிலரை அழிக்க நினைத்தாலும், அவனுக்கே அடி கொடுக்கும்படியாய் கிறிஸ்துவின் அன்பை இச்சூழலில் நாம் உலக மக்கள் அனைவருக்கும் பறைசாற்ற பயன்படுத்தி கொள்ள வேண்டும். ஒருவேளை, ஊரடங்கு போடப்பட்டிருக்கிற இச்சூழ்நிலையில் நாம் என்ன செய்ய முடியும் என்று நினைக்கலாம். அதை நாம் பின்வருமாறு காண்போம்.

இன்று இன்னும் இன்நோயினால் இறப்புக்கள், அழிவுகள் மேலும் அதிகரிக்கும் முன்பு, ஒவ்வொரு சபை அமைப்பும், துரிதமாக குறைந்தது தங்கள் சபை எல்லைக்குட்பட்ட மக்களுக்காக தேவையானவைகளை திட்டமிட்டு செயல் படவேண்டும். நம் இந்திய நாட்டில் உள்ள சபைகள், சபைபாகுபாடு பாராமல் சரியாக திட்டமிட்டு, அரசாங்க அனுமதியோடு / உதவியோடு செய்யவேண்டிய காரியம், இக்கொடிய நோயினால் சரீரரீதியாகவும், மனரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தாக்கப்பட்டு இருக்கும் மக்களுக்கு செய்ய வேண்டிய உதவிகளை துரிதமாக செய்து, கிறிஸ்துவின் அன்பை அவர்களிடம் வெளிப்படுத்தி காட்டுவதாகும்.

**யாக் 2:14-17 “என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.“** வசனங்களில் நாம் காண்கிறபடி சபைகுள்ளாக பேசிய / வெளிப்படுத்திய விசுவாசத்தை, சபைக்கு வெளியே விசுவாச கிரியைகளின் மூலம் செயல்படுத்த வேண்டும். ஆம், சரீர தேவைகளோடு, மருத்துவ தேவைகளோடு, என்ன செய்வோம் என்று தெரியாமல் தவிக்கும் நம்மண்டையில் இருக்கும் மக்களின் சரீர தேவைகளுக்கு உதவி, கனிவான மருத்துவ உதவியையும் செய்து, காயம் பட்டிருக்கும் இருதயத்தை கிறிஸ்துவின் அன்பினால் காயம் கட்டும் பொழுது, கொரோனா அவர்கள்

வாழ்வை அழிப்பதை தடுத்து அவர்களை நித்திய ஜீவனுக்கு நேராக நடத்தலாம்.

செய்ய வேண்டிய காரியம் மிக சுலபம். ஆனால் செயல்படுத்த வேண்டிய முறையே மிகவும் கவனத்தோடு கையாள வேண்டிய காரியம் ஆகும். சபை தலைவர்கள் குறிப்பாக CSI, CNI, Roman Catholic, AG போன்ற சபைகளின் தலைவர்கள், அரசாங்கத்தை சந்தித்து தங்களால் இயன்ற உதவியை, உணவு வழங்குதல், மேலும் அடிப்படை தேவைகளை அளித்தல், போன்றவற்றை நாட்டின் பல்வேறு இடங்களில் இயங்கும் தங்கள் சபைகளின் மூலம், பள்ளிகளின் மூலம் அந்தந்த பகுதி மக்களுக்கு அளிக்க அனுமதி பெற்று, ஒவ்வொரு கிளை சபைகளின் மூலமாக அந்தந்த பகுதியில் வேண்டிய உதவிகளை அரசின் மூலமாகவே செய்யலாம். ஏனெனில் அரசாங்க உத்தரவின்படி அரசாங்க அதிகாரிகளே ஊரடங்கு உள்ள நிலையில் மக்களை சந்திக்க முடியும். அதே போல சபை மக்களின் மூலமாக ஒரு தொகையை சேகரித்து அதை அரசிடம் அளிக்கலாம். சில சபைகள் ஏற்கெனவே இதுபோன்ற செயல்களை அசாதாரண சூழ்நிலையில் செய்துள்ளன.

ஆனால் இப்பொழுது பாதிப்பு நாட்டின் மூலை முடுக்கெங்கும் இருப்பதால், கொரோனாவினால் தாக்கபடாவிடாலும், பசி, பட்டினியால் தாக்கப்பட்டு ஏற்கெனவே மக்கள் இறக்க தொடங்கி விட்டனர். ஊரடங்கு எப்பொழுது விலக்கி கொள்ளப்பட்டு, இயல்பு நிலை எப்பொழுது திரும்பும் என்பதை உலக நாடுகளே கணிக்க முடியாத இச்சூழ்நிலையில் இப்படிப்பட்ட உதவிகள் அந்தந்த பகுதியில் செய்யப்பட்டு மக்கள் காக்கபடும்பொழுது, இயல்வு நிலை திரும்பிய பிறகு தானாகவே அநேகர் சபையை நோக்கி வருவார்கள். ஒரு வேளை சிலர் கேட்கிறபடி, உலகபிரகாரமான நாடுகளும், அரசியல்வாதிகளும், பிரபலங்களும், தொழில் அதிபர்களும், சினிமா துறையினரும், இன்னும் பலரும் கோடி கணக்கான பணத்தை கொடுத்து நிவாரண பணிகளை செய்யும் பொழுது, சபை செய்வது எங்கு தெரியபோகிறது என்று நினைக்கலாம். இல்லை சகோதர, சகோதரிகளே, ஆண்டவர் நிச்சயமாக சபை மூலம் நடக்கும் கிரியைகளை வேறுபடுத்தி காட்டுவார்.

ஏனெனில் மற்றவர்கள் ஏதோ தானதர்மம் செய்வது போல் உதவி செய்வதும், ஆனால் சபையோ உள்ளான அன்போடு கிறிஸ்துவின் சிந்தையோடு, நாட்டின் மூலை முடுக்கெங்கும் அதை செய்யும் பொழுது, நிச்சயமாக அதற்கு பலன் கிடைக்கும். அப்படி ஒருவேளை கிடைக்காமல் போனாலும், நாம் ஆண்டவரின் சித்தத்தை நிறைவேற்றினோம் என்ற மனநிறைவாவது கிடைக்கும். ஆனால் இதை செய்ய தவறி, TV, You Tube இல் ஆலய ஆராதனை பார்த்து, சபைக்கு காணிக்கை என்று பணத்தை பையில் போட்டு வைத்து கொண்டு, எல்லாம் சரியான பின்பு இதை நாம் சபைக்கு போய் சேர்போம் என்று நினைத்தாலும், அல்லது சபை நடத்துபவர் அப்படி போதித்தாலும், அதில் ஒரு பகுதியாவது எடுத்து சபையின் மூலமாய் செயல்படவேண்டிய காலம், இக்கொரோனா காலம் ஆகும்.

இக்காலத்தை நாம் வீணடிப்போமானால், பிறகு லட்ச லட்சமாய், கோடி கோடியாய் காணிக்கையை வைத்து சபை கட்டிடத்தை வேண்டுமானால்

பெரியதாக கட்டலாமே தவிர ஆத்துமாக்களை ஆதாய படுத்தமுடியாது. தற்போது உள்ள சூழ்நிலையில் (நாள் 16-04-2020), சுமார் 21 லட்சம் மக்கள் நேரடியாக கொரோனாவினால் பாதிக்கப்பட்டு, அதில் 1.3 லட்சம் பேருக்கு மேலாய் மாண்டுபோன இச்சூழ்நிலையில், மரண பயத்தில், அதே நேரத்தில் வாழ்வாதாரமும் இல்லாமல் தவிக்கும் கோடிக்கணக்கான மக்களை சந்திக்க வேண்டிய காலம் இது. மற்ற எந்த காலத்தை காட்டிலும், இந்த ஏப்ரல், மே 2020 மாதங்களில் சபை செய்யும் காரியம், உண்மையிலேயே அநேகர் நித்திய ஜீவனை பெற்றுகொள்ள காரணமாய் இருக்கும்.

எனவே மிக துரிதத்தோடு, சபை செயல்பட வேண்டும். இதில் தேவ பிள்ளைகள் தனி மனிதராய் ஒன்றும் பெரிதாக செய்துவிட முடியாது. ஆனால் சபை பாகுபாடுகளை விட்டு, கிறிஸ்துவின் அன்பை மட்டும் நாம் பறைசாற்ற முற்பட்டால், நாமே 11 ஆம் மணி வேலைக்காரர். செய்யும் வேளை சிறிது காலமானாலும், அதின் அறுவடை மிகுதி. வீட்டின் (சபையின்) எஜமானனாகிய கிறிஸ்து எதிர்பார்பதெல்லாம், அவருடைய ஊழியகாரராகிய நாம் விழிப்போடு இருந்து செயல்படுகிறோமா என்பதேயாகும். உண்மையாய் செயல்பட்டு வெற்றி பெறுவோமானால், அநேக ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தி, அவருக்கு முன்பாக உண்மையும், உத்தமுமான ஊழியனே உன் எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்ற சத்தத்தை கேட்கலாம். கொரோனா காலம் ஒருவேளை இறுதி அறுவடை காலமாய் இருக்கலாம். ஜாக்கிரதையாய் இருப்போம். கிறிஸ்துவின் பணிசெய்வோம். ஆமென், அல்லேலூயா.

## 82. திருச்சபை ஒழுங்கு



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் திருச்சபையார் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கொரோனா என்னும் கொடிய நோய் நிமித்தமாக சபையாக கூடி வர முடியாதபடி உலகம் முழுவதும் ஏற்பட்டிருக்கிற இத்தடை நமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. சரீர பிரகாரமாக ஒரு இடத்தில் கூடி திருச்சபையாய் தேவனை தொழுது கொள்ள முடியாவிட்டாலும், தேவ ஐக்கியதிற்குள்ளாய், அதாவது அவருக்குள்ளாய் நாம் அனைவரும் என்றைக்கும் ஆவியில் ஒன்றிணைக்கப்பட்டு இருக்கிறோம். எனவே சரீரப் பிரகாரமாய் நாம் பிரிந்து இருந்தாலும் கிறிஸ்துவுக்குள் நாம் ஒரே சிந்தையாய் இணைக்கப்பட்டுள்ளோம்.

இப்படிப்பட்ட இந்த காலத்தில் இதுவரை நாம் கண்டுபிடிக்க இயலாத திருச்சபைக்குள்ளாய் மறைந்திருந்த களைகள் இப்பொழுது வெளிப்பட ஆரம்பித்திருக்கிறது. ஆம் திருச்சபையை பற்றியும், அதை குறித்த நோக்கத்தைப் பற்றியும், அதன் ஒழுங்கை பற்றியும் அறியாத சிலர், இன்று ஆன்லைனில் மற்றும் தொலைக்காட்சியில் சபை நடத்துவதாக கூறி, இதுவே ஆதி காலத்தில் இருந்த சபை முறை என்றும் கூறிவருகின்றனர். இவர்களைப் பொறுத்தவரை, 1 அல்லது 2 பாட்டுப்பாடி, வேதம் வாசித்து, காணிக்கை சேகரித்து, பிரசங்கம் செய்வது மட்டும்தான் சபை ஆராதனை என்று நினைத்து விட்டனர். ஆனால் இப்பொழுது தொலைக்காட்சியில், ஆன்லைனில் செய்யப்படும் ஆராதனை ஒரு தற்காலிக தீர்வே தவிர, அது சபை ஆராதனை அல்லது சபை ஐக்கியம் ஆகாது. உண்மையான தேவ ஊழியர்கள் சபையாக கூடி வர முடியவில்லையே என்று வருத்தத்தோடு ஆன்லைனில் ஆராதனை நடத்துவதை நாம் காண்கிறோம். ஆனால் சத்தியம் அறியாத மற்றவர்களுக்கு ஒரு வித்தியாசமும் இல்லை. ஒரு குழந்தை தாயின் பாலை உண்டு வளருவதற்கும், பவுடர் பாலை உண்டு வளருவதற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்தவர்கள், இதையும் உணர்ந்து கொள்வார்கள். ஒருவேளை பால் பவுடரும் ஊட்டச்சத்தான காரியங்களை கொண்டிருந்து, குழந்தையின் பசியைப் போக்கினாலும், என்னாலும் அது தாய் பாலிற்கு ஈடாகாது.

இதில் வேதனை தரும் விஷயம் என்னவென்றால் இப்படிப்பட்ட ஆன்லைன் மற்றும் தொலைக்காட்சி ஆராதனையில் புதுமைகளைப் புகுத்துவதாக எண்ணி சபையின் அடிப்படை ஒழுங்கையே சிலர் கேள்விக்குறியாக்கி விட்டனர். தொலைக்காட்சியில் சபை நடத்தும் போதகர் ஒருவர், தன் கையில் அப்பமும், ரசமும் வைத்துக் கொண்டு, சபை மக்களை நோக்கி நீங்கள் உங்கள் வீட்டில் உள்ள ரொட்டித்துண்டு மற்றும் ஏதாவது ஜூஸ் எடுத்துக் கொண்டு, என்னோடு நற்கருணை ஆராதனையில் இணைந்து கொள்ளுங்கள் என்று கூறுவது வேதத்திலுள்ள நியமத்திற்கு ஏற்றதா என்பது முதலாவது உறுதி செய்யப்பட வேண்டும். ஆனால் அதைப் பற்றி எதுவும் கவலை படாமல் சபை மக்களை வாராவாரம் ஏதாவது ஒரு விதத்தில் எங்கேஜ் பண்ணி, அவர்களை தங்களோடு வைத்துக் கொள்ள இவற்றையெல்லாம் செய்வது வேதனை அளிப்பதாக உள்ளது. ஒருவகையில் திருப்பந்தியில் சேர முடியாதபடி மூன்று மாதங்களுக்கு மேலாக தடை உண்டாயிருந்தாலும் அதற்காக இப்படி செய்வது சரியானது தானா என்பதை திருச்சபைத் தலைவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

எனவே எவ்வித ஒழுங்கும் இன்றி இப்படி அவரவர் நினைத்தபடி ஆராதனை நடத்தாமல் திருச்சபைத் தலைவர்கள் கூடி இதற்கும் ஒரு ஒழுங்கை ஏற்படுத்தி அதன்படி ஆன்லைனில் மற்றும் தொலைக்காட்சியில் ஆராதனை நடத்த வேண்டும். மேலும் உலகம் முழுவதும் உள்ள திருச்சபைகளில் குறிப்பாக இந்தியா போன்ற ஆசிய திருச்சபைகளில் வெறும் ஒன்று அல்லது இரண்டு சதவிகித ஆலயங்களே இப்படிப்பட்ட ஆராதனையை நடத்துகிறது. ஆனால் மீதமுள்ள 98 சதவிகித மக்கள் இப்படிப்பட்ட ஆராதனை எதுவும் இல்லாவிட்டாலும் நான் முதலில் கூறியப்படி கிறிஸ்துவுக்குள்ளாய் ஐக்கியப்பட்டு, தளர்வுகள் உள்ள இடங்களில் சிறு சிறு குழுக்களாய் ஐக்கியத்தில் உள்ளனர். உண்மையில் வேதத்தை அறிந்து, திருச்சபை ஒழுங்கை அறிந்தவர்கள், இப்படிப்பட்ட காலத்திலும் விசுவாசத்தில் ஸ்திரமாய் இருப்பார்கள். நாம் கவலைப்பட வேண்டியது எல்லாம் புதியதாக வந்தவர்களை பற்றியும், இன்னும் சுவிசேஷம் அறிவிப்பு ஊழியம், சுகம் அளிக்கும் ஊழியம் என்று மக்களை அணுகி செய்யப்பட்டு வந்த ஊழியங்கள் இன்று தடைப்பட்டு இருப்பதையும் கண்டு தான். ஆம் சுதேச ஊழியர்கள் மூலம் சந்திக்கப்பட்டு ஆங்காங்கே உள்ள திருச்சபையில் இணைக்கப்பட்ட புதிய விசுவாசிகளின் நிலையும், இன்னும் தொடர்ந்து சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டிய மக்களின் நிலையை பற்றியும் தான், நாமும் திருச்சபை தலைவர்களும் அக்கறை செலுத்த வேண்டும். அரசாங்கத்தின் சட்டத்திற்கு உட்பட்டு, ஏதாவது ஒரு வகையில் இப்படிப்பட்ட மக்கள் சந்திக்கபடவேண்டும் இன்டர்நெட் வசதியோ, தனியார் தொலைக்காட்சிகளை காணும் வசதியோ, இல்லாத கோடிக்கணக்கான இப்படிப்பட்ட மக்களை இன்று சுவிசேஷ ஊழியர்களும் திருச்சபை மக்களும் கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியத்திற்குள்ளாய் அவர்களைக் கொண்டு வர வேண்டும். அதற்கான திட்டங்களை தீட்டி செயல்படுத்த வேண்டும்.

சத்தியமாகிய சுவிசேஷத்தை சொல்லி, ஆங்காங்கே உள்ள நல்ல திருச்சபை ஐக்கியத்தில் மக்களை இணைத்து வந்த நிலை மாறி, தான் சந்திக்கும் அனைத்து மக்களையும் தானாக ஏற்படுத்திய ஒரு தனி ஐக்கியத்திற்குள்ளாய், ஒரே இடத்தில் அவர்களை ஆயிரக்கணக்கில் சேர்த்தவர்களே இப்பொழுது சிரமத்திற்குள்ளாகி உள்ளனர். ஆம் ஒருவேளை கொரோனா ஒழிந்தாலும், ஆயிரக்கணக்கில் கூடி ஒரே

இடத்தில் இருப்பது என்பது இன்னும் சில காலத்துக்கு தடை செய்யப்படலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், 50 பேர் அல்லது 100 பேர் ஒரு நல்ல மேய்ப்பனின் கீழ் கூடி ஆராதிக்கும் சபைகள் தங்கு தடையின்றி நடைபெறும். ஆனால் ஆயிரக்கணக்கான மக்களை ஒரே இடத்தில் கூட்டி, சபையின் ஐக்கியம், சபையைப் பற்றிய ஆண்டவரின் நோக்கம் என்பவற்றையெல்லாம் கூறாமல், பெரும் மந்தையாய் கூடியிருக்கும் அவர்களை போஷிக்காமல், சபை ஆராதனையை, கலைநிகழ்ச்சி போல் நடத்துபவர்களுக்கு இனிவரும் காலம் சற்று கடினமாகும். சத்தியத்தை அறிந்தவர்கள், சபை ஐக்கியத்தின் எண்ணிக்கையையோ, சபையின் பிரஸ்தாபத்தை பற்றியோ கவலைப்படாமல் தங்களை நன்கு அறிந்து உணர்ந்த, தங்களுக்கு வேண்டிய ஆவிக்குரிய ஆகாரத்தை தரக்கூடிய சபை ஐக்கியத்தை நோக்கியே செல்வர். அங்கு பெரிய கட்டிடமோ, நவீன உபகரணங்களோ, வசதிகளோ, ஆராதிக்கும் முறைகளோ இல்லாமல் இருந்தாலும், சத்திய வார்த்தைகளும் தேவபிரசன்னமும், ஐக்கியமும் அங்கு இருக்கும்.

மேலும் இதைக் காட்டிலும் மோசமாக உள்ள சில காரியங்களை நாம் காண்பது வேதனை அளிக்கக் கூடியதாக உள்ளது. திருச்சபை ஆராதனையை நடத்துபவர்கள் தேவ ஊழியத்தின் அழைப்பை பெற்று அபிஷேகிக்க பட்ட பின்னரே அவர்களால் போதகராக அல்லது அவருக்கு ஆராதனையில் உதவியாக இருப்பவராக செயல்பட முடியும். சபையின் பாடகர் குழு நடத்தும் நபர் உட்பட இப்படிப்பட்ட ஒழுங்கின் கீழ் செயல்பட வேண்டும். ஆனால் இன்றோ சிலரின் திறமைகளை வெளிக்காட்ட, வளர்த்தெடுக்க சபை ஆராதனை நேரங்கள் பயன்படுத்தப்படுவது வேதனையாகும். சபை போதகர் மனைவியாகவோ அல்லது பிள்ளைகளாக இருந்தாலும் கூட, அவர்கள் முதலாவது பெண்கள் ஐக்கியம், வாலிபர் ஐக்கியம் போன்றவற்றில் போதிய ஆவிக்குரிய முதிர்ச்சியை பெற்ற பின்னரே சபை ஆராதனையில் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் இன்றோ வாரிசு அரசியல் போன்ற காரியங்கள் திருச்சபைக்குள்ளும் வந்துவிட்டது.

திருச்சபை ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவரும், தங்கள் சபையை சேர்ந்தவர்களை, எப்படி தக்கவைத்துக்கொள்வது, காணிக்கை பெறுவது என்று சிந்தியாமல், இக்கொரோனா காலத்திலும், இதற்குப் பின் வரும் காலங்களிலும் எப்படி திருச்சபை மக்களை, திருச்சபை ஐக்கியத்திற்குள்ளாய் வைத்திருப்பது, பெரிய அளவில் கூட முடியாவிட்டால் எப்படி சிறிய அளவில் கூடுவது, மேலும் முடங்கிப் போயிருக்கும் சுவிசேஷ ஊழியத்தை, திருச்சபை மூலம் எப்படித் தாங்குவது, திருச்சபையோடு இணைந்திருக்கும் மருத்துவப்பணி, கல்விப்பணி, மற்றும் சமுதாயப்பணி போன்றவைகளை எவ்வாறு அனைவரும் ஒன்றிணைந்து செய்வது என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு காரியத்தையே தேவனும் விரும்புகிறார். இதனை எத்தனை பேர் உணர்ந்துகொண்டு உடனடியாக செயல்பட போகின்றனர், செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதை தேவன் அறிவார். அப்படிப்பட்ட மகிமையான, ஒன்றான மெய் திருச்சபையை சேர்த்துக்கொள்ளவே அவர் வருவார். எனவே ஆண்டவர் கொடுத்திருக்கும் இந்த சவாலான பணியை திருச்சபை தலைவர்களும், விசுவாசிகளும் ஒன்றிணைந்து செய்து, அவர் வரும்போது, சகலத்தையும் செய்து முடித்த நிறைவோடு, அவரிடம் சேர்வோமாக. ஆமென், அல்லேலூயா.

## 83. இருதயத்தின் சஞ்சலம்




**என் இருதயத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து, எதுவரைக்கும் என் ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிக்கொண்டிருப்பேன்? (சங் 13:2)**

கவலை இல்லாத மனிதர்கள் இவ்வுலகில் இல்லை. எல்லாருக்கும் ஏதோ ஒரு விதத்தில் ஒரு சஞ்சலம் இருக்கதான் செய்கிறது. ஆவிக்குரிய பிரகாரமாக பாவத்தினால் இருதயத்தில் உண்டாகும் சஞ்சலம், சரீரபிரகாரமாக வறுமையினால், நோயினால், பிறரின் அடக்குமுறையினால், வாழ்கின்ற சூழ்நிலையினால் என ஏதோ ஒரு காரியத்தினால் எல்லாவித மக்களுக்கும் ஒரு வித சஞ்சலம் இருக்கத்தான் செய்கிறது.

ஆனால் சில காரியங்கள் நாம் என்ன செய்வதென்றே தெரியாதபடி, அதே நேரத்தில் அதை கடந்தும் போகமுடியாதபடி, ஏதோ ஒரு விதத்தில் இடைவிடாது அதை பற்றிய எண்ணம் நம் இருதயத்தை வாதிக்கும். அப்பொழுது சங்கீதகாரன் **சங் 13: 2** கூறுவதை போன்ற அனுபவம் நமக்கு நேரிடும். ஆம் சில காரியங்களில் நடப்பது நடக்கட்டும் பார்த்துகொள்ளலாம் என்று நாம் கடந்துபோய்விடுகிறோம். சில காரியங்களில் இப்படிதான் வாழ்ந்தாக வேண்டும் என்று கூறி அவற்றால் உண்டாகும் சஞ்சலங்களை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் சில காரியங்கள், நாம் அவற்றை விட்டுவிடமுடியாதபடி நித்தம் நித்தம் இருதயத்திலே அந்த சஞ்சலம் தோன்றி, நாம் எதிலும் கவனம் செலுத்தமுடியாதபடி அதை மாத்திரமே சிந்தித்து கொண்டிருக்க செய்யும்.

உதாரணமாக, இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இக்கொரோனா வியாதினால் பாதிக்கப்பட்ட பலர் இன்று குணமாகி இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிவிட்டனர், ஆனால் அதே நேரத்தில் வேறு பலர் மாத கணக்காக தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து, வாழ எந்த வழியுமில்லாமல் நிற்கின்றனர். இக்கொரோனா எப்பொழுது முடிவுக்கு வரும், எப்பொழுது நாம் வாழ்ந்து கொண்டிருந்த இயல்வு வாழ்க்கை திரும்பும் என்கிற காரியங்கள் அநேகரின் இருதயத்திலே **சங் 13:2** இல் கூறியதை போன்ற சஞ்சலத்தை ஏற்படுத்தி நித்தம் நித்தம் அதையே சிந்தித்து கொண்டிருக்கும்படி, ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிகொண்டிருக்கும்படி செய்கிறது.

ஆம் சில பெரும் துயரங்களை கூட, கஷ்டங்களை கூட, இழப்புகளை கூட நாம் சில காலங்களுக்குள்ளாக கடந்து போய் விடலாம். ஆனால் என்ன செய்வதென்றே தெரியாமல், சஞ்சலபடுவதை தவிர வேறெதுவும் செய்ய முடியாமல் இருக்கும் துன்பகாரியங்கள் நம்மை மிகவும் பாதிக்கின்றது. அப் பவுலின் வாழ்க்கையிலும் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது, எத்தனையோ பேருக்கு அற்புத சுகத்தை ஆண்டவரிடம் இருந்து பெற்று தந்த பவுல், அது தன்னைவிட்டு நீங்கும்படிக்கு கர்த்தரிடத்தில் மூன்று தரம் வேண்டிகொண்டும், அவருக்கு கிடைத்த பதில் **"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்" (2 கொ 12:9)** என்பதாகும். ஆம் யோபுவின் வாழ்க்கையில் அவர் என்ன செய்வதென்று தெரியாமல், சடுதியில் தனக்கு ஏற்பட்ட காரியங்களினால் நிலை குலைந்து போயிருந்தார். ஒரு ஓட்டை எடுத்து, தன்னை சுறண்டிக்கொண்டு சாம்பலில் உட்காருவதை **(யோபு 2:8)** தவிர வேறெதையும் அவரால் அப்பொழுது செய்ய முடியவில்லை. ஆனால் இருதயத்தில் மட்டும் சஞ்சலம் நீங்காமல், இப்பொழுது என்ன செய்வது என்றும் தெரியாமல், நித்தம் நித்தம் வேதனை அனுபவித்துகொண்டிருந்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சூழ்ந்திருக்கும் மனிதர்கள் சொல்லும் ஆலோசனையோ, செய்யும் உதவிகளோ கூட நமக்கு பயன்படாது. பவுலுக்கு ஆண்டவர் கூறியது போல, அவரது கிருபை, இரக்கம், தயவு மட்டுமே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இருந்து நம்மை வெளியே கொண்டுவர முடியும்.

**சங் 13:3,5 இல், "என் தேவனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப்பார்த்து, எனக்குச் செவிகொடுத்தருளும்; நான் மரணநித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும். நான் உம்முடைய கிருபையின்மேல் நம்பிக்கையாயிருக்கிறேன்; உம்முடைய இரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும்.",** மேற்க்கண்ட வசனங்களில் கூறபட்டுள்ளபடி, கர்த்தர் தாமே இவற்றில் இடைப்பட்டு, தம்முடைய கிருபையினால், நம்மை இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து இரட்சிக்க, மீட்டெடுக்க, இருதயத்தில் நித்தம் நித்தம் உண்டாகிய சஞ்சலத்தை நீக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே நம் இருதயத்தில் களிகூருதல் உண்டாகும். **"இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும்; அதின் மகிழ்ச்சிக்கு அந்நியன் உடந்தையாகான்.", (நீதி 14:10).** ஆம், வெளிப்படையாக இருக்கும் சில பிரச்சனைகளை மற்றவர்கள் புரிந்து கொண்டு நமக்கு உதவ முடியும்.

ஆனால் இருதயத்தில் உண்டாகும் காயங்களை, துன்பங்களை, சஞ்சலங்களை தேவன் மாத்திரமே அறிய முடியும். அப். பவுலுக்கு ஆண்டவர் கூறியது போல், **சங் 13: 3,5** இல் குறிப்பிட்டுள்ளபடி, அவருடைய கிருபை மாத்திரமே நம்மை இரட்சித்து, நம்முடைய இருதயத்தை களிகூற செய்ய முடியும். அப்பொழுது அதனால் உண்டாகும் பெரும் மகிழ்ச்சி நமக்கு மாத்திரமே விளங்குமே தவிர மற்றவர்களால் அதை புரிந்துகொள்ள முடியாது. இப்படிப்பட்ட அனுபவங்களின் வழியாக கடந்து வந்த பலர் பவுலைபோல ஆண்டவருக்காக வல்லமையாக செயல்பட்டிருக்கின்றனர். ஏனெனில் அவர்கள் இருதயத்திற்கு மாத்திரமே தெரியும், எப்படிப்பட்ட சஞ்சலத்தை ஆண்டவர் ஆனந்த களிப்பாக மாற்றினார் என்று.

எனவே இக்கொரோனா காலத்திலும், இப்படிப்பட்ட சஞ்சலத்தோடு வாழும் ஒவ்வொருவரும், நித்தம் நித்தம் இருதயத்தில் உண்டாகும் வேதனையில் இருந்து நீங்க, ஆண்டவருடைய கிருபையை சார்ந்து அவருடைய இரட்சிப்பையே எதிர்நோக்கி காத்திருந்து அதை பெற்று கொள்ளவேண்டும். இக்கட்டான இக்காலத்தில் எந்த மனிதரோ, அரசாங்கமோ, பணமோ, நம் சொந்த முயற்சியோ தரமுடியாத விடுதலையை, இரட்சிப்பை, அவருடைய கிருபை நமக்கு தரும். எனவே நாம் கடந்து செல்லும் சஞ்சலம் எப்படிப்பட்டதாய் இருந்தாலும், கர்த்தர்மேல் நம் பாரத்தை வைத்து அவருடைய கிருபைக்கு காத்திருந்து இரட்சிப்பை பெற்றுக்கொள்வோம்.

**சங் 33:18 "தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்;"**, என்று வேதம் கூறுகிறது. மேலும் **"தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்." (சங் 147:11)** என்றும் வேதம் கூறுகிறது. எனவே எந்த மனிதரின், அரசாங்கத்தின் உதவியை அல்லது சூழ்நிலையின் அனுகூலத்தை நாடாமல், அவருடைய கிருபையையே சார்ந்து கொள்வோம். அது மாத்திரமே இருதயத்தின் சஞ்சலத்தினால் நம்முடைய ஆத்துமா மரித்துபோய் விடாதபடி நம்மை மரணத்திற்கு விலக்கி காக்கும். அவருடைய பிரியம் / நேசம் நம்மை எல்லா சஞ்சலத்துக்கும் நீக்கி நித்திய ஜீவ கரையில் கொண்டு சேர்க்கும். ஆமென், அல்லேலூயா.

## 84. ஜீவனுள்ள தேவன்




நம்முடைய தேவன் ஜீவனுள்ள தேவன் என்று வேதவசனம் கூறுகிறது. ஆம் இப்பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் ஜீவன் தந்தவர் அவரே. **"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்." (ஆதி 2:7)**, ஆம், இங்கு மண்ணாகிய மனுஷனுக்குள் ஆண்டவர் தமது ஜீவனை அனுப்பின பொழுது, அவன் ஜீவனுடையவனானான். இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒன்று மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மீன்கள், மரம், செடி, கொடிகள் போன்றவற்றில் மட்டுமல்ல பூமியில் உள்ள ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வொரு தூசு மண்ணிலும் கூட அவருடைய சிருஷ்டிக்கும் தன்மை உள்ளது. தண்ணீர், காற்று, சூரியன், சந்திரன் என்று ஒவ்வொரு சிருஷ்டிப்பிற்குள்ளும் அவருடைய ஜீவன் வெளிப்படுகிறது.

ஒரு சிறிய உதாரணமாக, ஒரு மரம் வளர்வதை நாம் காணலாம். அடிப்படையாக அந்த மரம் வளர்வதற்கு கண்கூடாக தெரியும் காரணங்கள் முதலாவது அதின் விதை, மண், பிறகு பாய்ச்சப்படும் தண்ணீர், மற்றும் சூரிய ஒளி. இங்கு நாம் காணும் ஒவ்வொன்றிற்குள்ளும் ஒரு வித ஜீவன் உண்டாயிருக்கிறது. அதன் விதை அந்த மரம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதை தீர்மானிக்கிறது. மேலும் மண், தண்ணீர், சூரிய ஒளி என ஒவ்வொன்றிற்குள்ளும் இருக்கும் ஜீவன் அந்த விதைக்குள்ளாக பாய்ச்சப்பட்டு அது வளர்கிறது. இங்க ஆச்சரியமானது என்னவெனில் உயிர் உள்ளவைகள் என்று நாம் காணும் மனிதன், மிருகம், மரம், செடி, கொடிகள் தவிர தண்ணீர், காற்று, மண், சூரிய ஒளி என ஒவ்வொன்றிலும் ஜீவன் மறைந்து இருப்பதை நாம் காணலாம்.

ஆம், நம்மை சுற்றி உள்ள ஒவ்வொரு இயற்கை பொருளிலும் அவருடைய ஜீவன் மறைந்திருக்கிறது. ஒரு மரத்தை வளர்ப்பதற்கு எல்லாவற்றையும் கொடுத்து, சூரிய ஒளி படாவிட்டால் அது வளராது. எனவே ஒரு மரம்

வளர்வதற்குள்ளாகவே இத்தனை நிகழ்வுகள் நடப்பது ஆச்சரியமானதாகும். நமக்கு கூட நாம் சுவாசிக்கும் காற்று, பருகும் தண்ணீர், சாப்பிடும் உணவு, சூரிய ஒளி என ஒவ்வொன்றிலும் இருந்து ஏதோ ஒரு வித ஜீவன் நமக்குள்ளாக பாய்ச்சப்பட்டு, நாம் ஜீவனோடு வாழும் படியாய் செய்கிறது. கண்ணுக்கு தெரியாத காற்றில் இருந்து கண்ணுக்குத் தெரியும் பொருள்கள் வரை ஒவ்வொன்றிற்குள்ளும் அவருடைய ஜீவன் மறைந்து இருக்கிறது.

**யோ 1:3,4** வசனங்கள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக்குறித்து, **"சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது."**, என்று கூறுகிறது. ஆம், அந்த ஜீவனே, பிதாவாகிய தேவனுக்குள்ளும், குமாரனாகிய கிறிஸ்து இயேசுவுக்குள்ளும் இருந்து வெளிப்பட்டு பூமியிலுள்ள ஒவ்வொன்றையும் ஜீவனோடு வைத்திருக்கிறது. **"தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்;",( சங் 53:1)**, ஆம் தேவன் எங்கே, அவர் இருப்பதற்கான அடையாளம் என்ன என்று கேட்கும் மதிகேடரான மக்களுக்கு விடை, பூமியில் உள்ள ஒவ்வொரு பொருளும் ஆகும். மேலும் சொல்லப்போனால் அவனுக்குள் இருக்கும் ஜீவனே சாட்சி.

இப்படிப்பட்ட அவருடைய ஜீவனே செத்துப்போன நிலைமையில் இருக்கும் ஒவ்வொன்றிற்கும், மறுபடியும் ஜீவனை கொடுக்கிறது. ஆதி மனிதன் செய்த பாவத்தினால், மனுகுலம் நித்தியஜீவனை இழந்தது மட்டுமல்ல, மரணம் (ஜீவனில்லாத தன்மை) பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் ஆண்டு கொண்டது. அதன் விளைவு மனிதர்கள் நித்தியஜீவனற்றவர்களாய், தேவனைக் குறித்த உணர்வற்றவர்களாய் கல், மரம், மிருகம் என தன்னுள் ஜீவன் இல்லாதவைகளை தெய்வங்களாக ஏற்படுத்திக் கொண்டனர். ஆனால் **"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்." (அப் 17:30)**. ஆம் இதற்கு காரணம் **"இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்." (லூக் 23:46).**

**யோ 10: 15 இல் "நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்."** என்றார். மேலும் **யோ 10: 17, 18 வசனங்களில் "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்."** என்றும் கூறப்பட்டுள்ளது. **"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்", (1 யோ 3:16)** என்றும் வேத வசனம் கூறுகிறது.

ஆம், அவருடைய அன்பு, தயவு. இரக்கம், கிருபை, திட்டம், நோக்கம் என அனைத்தும் செயல்படுவது அவருடைய ஜீவன் நமக்குள்ளாக பாய்ச்சப்படுவதின் மூலமாகவே. ஜீவ காலமெல்லாம் மரண இருளின் மத்தியில், வியாதியின் மத்தியில், குறைவுகள் மத்தியில் ஒரு செத்த நிலைமையிலே காணப்படும் அனைத்தையும் அவருக்குள்ளாக இருந்து வெளிப்படும் ஜீவனே புத்துயிர் அடையச் செய்கிறது. அப் 3;6 கூறுகிறது, **"அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி;"**, ஆம், அவர்கள் மூலமாக வெளிப்பட்ட தேவனுடைய உயிர்பிறக்கிற வல்லமையே அந்த மனிதன் மீது செலுத்தப்பட்டு சுகத்தைப் பெற்றுக் கொண்டான். அதே அதிகாரத்தில் **"ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்."** (அப் 3:15) என்றும் அப். பேதுரு கூறுகிறார்.

ஆம் சிருஷ்டிப்பு ஒவ்வொன்றிற்குள்ளும் தம்முடைய ஜீவனை வைத்திருக்கிற அவரே ஜீவாதிபதி. இக்கொரோனா காலத்திலும் இன்றைய நிலவரப்படி 12/09/2020, 2 கோடியே 86 லட்சம் மக்கள் உலகமெங்கிலும் பாதிக்கப்பட்டு, 9 லட்சத்து 19 ஆயிரம் மக்கள் மரித்துப் போன நிலையில், கடந்த எட்டு மாதங்களில் பூமி முழுவதுமே ஒருவித மரண இருள் சூழ்ந்திருக்கிறது வியாதியின் வேதனையும், மரண ஓலங்களும் பூமி எங்கும் கேட்கப்படுகிறது. இப்பொழுது இவற்றிலிருந்து நம்மை விடுவிக்க கூடிய ஒரே ஒருவர் ஜீவாதிபதியாகிய கிறிஸ்து இயேசுவே.

ஆம் அவரால் அன்றி இப்பொழுது இருக்கும் இச்சூழ்நிலையில் மாற்றத்தை எவராலும், எந்த அரசாங்கத்தாலும், எந்த அதிகாரத்தாலும் கொண்டுவர முடியாது. எனவே சிறியோர் முதல் பெரியோர் வரை, அதிகாரத்தில் இருப்போர் முதல் சாமானிய மனிதர் வரை, ஜீவனுள்ள தேவனிடத்தில் தங்களை அர்ப்பணித்து, இந்த (பாவ) மரண இருளில் மடிந்து போகாதபடி முழங்கால்படியிடகடவது. கர்த்தர் தாமே தயவாய் இறங்கி தமது ஜீவனால், நம் ஒவ்வொருவரையும் இந்த மரண இருளுக்கு விலக்கிக் காத்துகொள்வாராக. தேவன் தாமே, தமது தீர்மானத்தின்படியே சகலத்தையும் மறுபடியும் சகஜ நிலைக்கு திரும்பி வரச் செய்ய அவரையே நோக்கி மன்றாடுவோமாக. அவரே நம் பரிகாரியாகிய கர்த்தர். ஆமென், அல்லேலூயா.

## 85. நினைக்கிறதற்கும் அதிகமாய்




**"நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு,"  (எபே 3:20)**

நாம் மேற்கண்ட வசனம், நமக்கு மிகவும் ஆறுதலான ஒன்றாகும். ஆவிக்குரிய மற்றும் இப்பூமிக்குரிய தேவைகள் அனைத்திற்கும் மேற்க்கண்ட வசனம் பொருந்தும். ஆம் நம் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் சரி, இப்பூமிக்குரிய வாழ்க்கையிலும் சரி, நாம் தேவனிடத்தில் எதிர்பார்த்து வேண்டி கொள்கிற காரியங்களை தம்முடைய கால திட்டத்தின்படியே நிறைவேற்றுகிற தேவன், நாம் எதிர்பார்த்து, நினைத்து இருந்த எல்லைக்கும் மேலாக நம்மை ஆசிர்வதிப்பது, நமக்கு தேவனுக்குள்ளாய் ஒரு களிகூறுதலை ஏற்படுத்துகிறது.

நாம் இதை எளிமையாக புரிந்துகொள்ள, உதாரணமாக, ஒரு மாணவன் தான் பரீட்சை எழுதி முடித்துவிட்டு, தேவனிடத்தில் தனக்கு நல்ல வெற்றியை தருமாறு வேண்டிகொள்ளும் பொழுது, தான் உண்மையோடு படித்து எழுதினதற்கு, தனக்கு ஒரு குறிப்பிட்ட மதிப்பெண் கிடைக்கும் என்னு எண்ணியிருக்கையில், அதற்கும் அதிகமாய், தேவ கிருபையால் அவனுக்கு மதிப்பெண் கிடைக்கும் பொழுது, ஒரு விதமான மகிழ்ச்சியோடு, அதே நேரத்தில், இந்த மதிப்பெண் பெறுவதற்கு தான் பாத்திரவானாய் இல்லாத பொழுதும், அதை தேவ கிருபையினால் பெற்று கொள்ளும்பொழுது, அவனிடத்தில் ஒரு வித தாழ்மையும், தேவ அன்பின், இரக்கத்தின் வல்லமையும் வெளிப்படுகிறது. அதை அனுபவித்தவர்களுக்கே அதின் அருமை புரியும். இன்னும், வாழ்வின் பலவித நிலைகளிலும், இப்படிப்பட்ட அனுபவத்தை நாம் உணரலாம். சரியான வேலை கிடைக்காமல், அனுதின தேவைகளை சந்திக்கவாவது ஒரு சிறிய வேலை கிடைக்காதா என்று எண்ணி பிரயாசப்படும்பொழுது, தான் நினைத்து கூட பார்க்காத ஒரு வேலை ஒருவருக்கு கிடைக்கும்பொழுது, அதினால் உண்டாகும் சந்தோஷம் சொல்லிமுடியாது.

ஆவிக்குரிய பிரகாரமாகாவும், ஒரு சிறு ஊழியத்தை ஆரம்பித்து, ஒரு சிலருக்காவது தினமும் ஆண்டவரின் அன்பை கூற வேண்டும் என்ற பிரயாசத்தோடு ஊழியத்தை ஆரம்பித்தவர்களை, தேவன் வல்லமையாய் எடுத்து

உபயோகித்து கோடிக்கணக்கான மக்கள் அவர்களின் மூலமாய் ஆண்டவரை அறிந்து கொள்ளும்படியாய் ஊழிய பாதைகளை மாற்றி அமைக்கும்பொழுது அதனால் உண்டாகும் சந்தோஷமும், நினைத்ததற்கும் அதிகமாய் நம்மை களிகூற செய்கிறது. உலகபிரகாரமான மக்கள் சில உயர்வுகளை அடையும்பொழுது, அது தங்களின் சாமர்தியத்தினால் அல்லது சிலருடைய தயவினால், அதிகாரத்தினால் தங்களுக்கு கிடைத்தது என்று எண்ணுகின்றனர். ஆனால் ஒரு தேவ பிள்ளைக்கோ சகலமும் தேவனாலேயே கொடுக்கப்படுகிறது. இப்படியாக நினைத்ததற்கும் அதிகாய் பலனை பெறும்பொழுது, இம்மட்டுமாய் அதற்காக பட்ட பிரயாசத்தின், ஓட்டத்தின் வலிகள் எல்லாம் நமக்கு மறந்து போகிறது.

ஆம் யோசேப்பு எகிப்தில் எதிர்பார்த்ததெல்லாம், ஒரு விடுதலையான வாழ்வைதான். **ஆதி 40:14,15** வசனங்களில், பான பாத்திரகாரனுக்கு யோசேப்பு அவனுடைய சொப்பனத்தின் அர்த்தத்தை சொல்லி முடித்த பின்பு, **“நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும். நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை என்றும் சொன்னான்.“**. ஆம் அவர் தேவனிடத்தில் எதிர்பார்த்ததெல்லாம், எகிப்தில் ஒரு சமாதானமான, அவமானமற்ற வாழ்க்கையைதான். அடிமையாக விற்கபட்ட தான், இனி தன் குடும்பத்தை தேடி போகமுடியாத சூழ்நிலையில், தனிமரமாய் தேவனிடத்தில் தவிர வேறுயாரிடமும் தன்னுடைய நிலைமையை கூட சொல்ல முடியாத நிலையில் இருந்தார். ஆனால் தேவன் அவருடைய வாழ்க்கையை ஒரே நாளில் தலைகீழாய் மாற்றி போட்டார். இத்தனை காலமும், எத்தனை பேரிடம் ஒரு அடிமையாய் கைகட்டி நின்றாறோ, அத்தனை பேரும் தொண்டனிட்டு அவருக்கு முன்பாக பணிந்தனர். அதனாலேயே, **ஆதி 41:51,52** இல், **“யோசேப்பு: என் வருத்தம் யாவையும் என் தகப்பனுடைய குடும்பம் அனைத்தையும் நான் மறக்கும்படி தேவன் பண்ணினார் என்று சொல்லி, மூத்தவனுக்கு மனாசே என்று பேரிட்டான். நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப்பண்ணினார் என்று சொல்லி, இளையவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்.“**, ஆம் அவர் எதிர்பார்த்ததற்கும் அதிகமாய் தேவன் அவருடைய வாழ்க்கையில் காரியங்களை நடப்பித்தார்.

மேலும் **ஆதி 48:11** இல் **“இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: உன் முகத்தைக் காண்பேன் என்று நான் நினைக்கவில்லை; ஆனாலும், இதோ, உன் சந்ததியையும் காணும்படி தேவன் எனக்கு அருள்செய்தார் என்றான்.“**. ஆம் **ஆதி 37:33-35** வசனங்களில் **“யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப்போட்டது, யோசேப்பு பீறுண்டுபோனான் என்று புலம்பி, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் அரையில் இரட்டுக் கட்டிக்கொண்டு, அநேகநாள் தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான். அவனுடைய குமாரர் குமாரத்திகள் எல்லாரும் அவனுக்கு ஆறுதல் சொல்லவந்து நின்றார்கள்; ஆனாலும் அவன் ஆறுதலுக்கு இடங்கொடாமல், நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன் என்றான். இவ்விதமாய் அவனுடைய தகப்பன் அவனுக்காக அழுதுகொண்டிருந்தான்.“**, மேலும் **ஆதி 42:36** இல் **“அவர்கள் தகப்பனாகிய யாக்கோபு அவர்களை நோக்கி: என்னைப் பிள்ளையற்றவனாக்குகிறீர்கள்; யோசேப்பும் இல்லை, சிமியோனும் இல்லை; பென்யமீனையும் கொண்டுபோகப் பார்க்கிறீர்கள்; இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது என்றான்.“**. மேலும் **ஆதி 43:14** இல், **“அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனையும் பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்படிக்கு, சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத்தில்**

**உங்களுக்கு இரக்கங்கிடைக்கப்பண்ணுவாராக; நானோ பிள்ளையற்றுப் போனவனைப்போல் இருப்பேன் என்றான்.“**. இங்கு இஸ்ரவேலின் மனநிலை, தன் குடும்பம் பஞ்சத்தில் மடியாமல் இருக்க, தனக்கு பிரியமான பென்யமீனை சில காலம் பிரிய வேண்டியிருந்தது. ஆனால் அதை கூட இஸ்ரவேலால் தாங்கி கொள்ளமுடியவில்லை. காரணம், யோசேப்பிற்கு ஏற்பட்டது போல் ஏதாவது மோசம் நேருமோ என்ற பயம். ஆனால், அதே நேரத்தில் தன் முழு குடும்பத்தையும் காப்பாற்ற அவருக்கு வேறு வழியில்லை. அவர் எதிர்பார்த்ததெல்லாம் சிமியோனும், பென்யமீனும் பத்திரமாய் வீடு திரும்ப வேண்டும் என்பதாகும்.

ஆனால் இறுதியில் நடந்த காரியங்கள், அவர் யோசேப்பையும், அவருடைய சந்ததியையும் காணும்படி தேவன் கிரியை செய்தார். ஆம், எத்தனையோ நாளாய் அழுது, இனி இழந்தது இழந்ததுதான் என்று எண்ணியிருக்கையில், தேவன் யோசேப்பை இவ்வளவு பெரியவனாக்கி, இஸ்ரவேலின் முழு குடும்பத்தையும் போஷிக்கிறவராய், இஸ்ரவேலினிடத்தில் மறுபடியும் கொண்டு வந்து சேர்தார். ஆம், இருதயத்தின் வேதனை, சரீர தேவைகள், மற்றவர்களால் உண்டாகும் நெருக்கங்கள் என்று அனைத்தையும் ஒரே நாளில் இஸ்ரவேலின் வாழ்க்கையில் தேவன் மாற்றிபோட்டார். அவருடைய முடிவு இன்பமாய் இருந்தது. ஆம் இதுவே நாம் வேண்டிகொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் அதிகமாய் தேவன் நம் வாழ்வில் கிரியை செய்யும் பொழுது நிகழும் காரியங்கள்.

ஆம், தினமும் பத்து பேருக்காவது ஆண்டவரை பற்றி கூற வேண்டும் என்று ஒரு தேவ ஊழியர் பேசியபோது, தேவன் என் இருதயத்தில் கிரியை செய்ததால், அடியேன் கடந்த ஆகஸ்ட் 2012 ஆம் ஆண்டில், இந்த சிறு ஊழியத்தை (இயேசுவின் வீரன்) ஆரம்பிக்க கர்த்தர் உதவினார். ஒரு வலைதளத்தை எப்படி நிர்வகிக்க வேண்டும், அதிலும் குறிப்பாக தமிழில் எவ்வாறு வடிவமைக்க வேண்டும் என்ற முன் அனுபவம் எதுவுமின்றி, தேவனே எல்லாவற்றையும் கற்று தந்தார். ஆச்சரியபடும் விதமாய் இன்னால் வரையிலும் பலருக்கும் பிரயோஜனமாய் இருக்கதக்கதாய், வலைதளத்தை டிசைன் செய்து நிர்வகிக்க தேவன் கிருபை செய்தார். இதிலும் மேலானது, இன்று நமது வலைதளத்தில் பதியப்பட்டுயிருக்கிற அருமையான தியானங்கள் ஆகும். ஆம், வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவன் என்னோடு பேசி, எனக்குள்ளாய் அவருடைய வார்த்தைகளை போட்டு, இன்று எத்தனையோ ஆயிர கணக்கான மக்களுக்கு பிரயோஜனப்படும் படியாய், இத்தியானங்களை எல்லாம் வெளியிட செய்தார்.

ஆம் நான் வேண்டிகொண்டதற்கும், நினைத்ததற்கும் அதிகமாய் தேவன் என் வாழ்வில் கிரியைசெய்தார், இன்றும் செய்து கொண்டிருக்கிறார். ஊழிய பாதையில் மட்டுமின்றி, இன்னும் வாழ்வின் எத்தனையோ சூழ்நிலையில் நான் நினைத்ததிற்கும் அதிகமாய் என் வாழ்வில் நன்மைகளை தந்திருக்கிறார். நாம் விதைத்தது, பிரயாசப்பட்டது ஒரு மடங்கு ஆசிர்வாதத்திற்காக, ஆனால் நூறுமடங்கு பலன் கிடைக்கும் பொழுது, அதனால் நமக்கு உண்டாகும் சந்தோஷமும், உயர்வும் சொல்லி முடியாது. எனவே, இக்கொரோனா காலத்திலும், எல்லாம் சீராகி இயல்பான வாழ்க்கை திரும்பினாலே போதும் என்று நாம் அனைவரும் எதிர்பாத்திருக்கையில். இந்த பொல்லாத சூழ்நிலையை கடப்பது மாத்திரமல்ல, நாம் எதிர்பாராத ஆசிர்வாதங்களை, நிச்சயமாய் தேவ பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் அவர் தருவார். அதனால் இக்கொரோனாவினால் நாம் எதையாவது இழந்திருப்போமானால், தேவன் நாம் இழந்தவைகளை எல்லாம் திரும்ப தருவதுமின்றி, அதற்கும் மேலாக கிரியை செய்திடுவார். ஆமென், அல்லேலூயா.

## 86. ஐசுவரியம்

**"கோபாக்கினைநாளில் ஐசுவரியம் உதவாது" (நீதி 11:4)**




**யாக் 5:1-3 "ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்."**

மேற்கண்ட இரண்டு வசனங்களிலும், கடைசிநாட்களாகிய இந்த காலகட்டத்திலும், கோபாக்கினை நாளாகிய நியாயத்தீர்ப்பின் நாளிலும் இவ்வுலக ஐசுவரியத்தை நாம் எவ்வளவுதான் தேடி வைத்திருந்தாலும் அவை நம் சரீர மீட்புக்கு ஒரு போதும் உதவாது என்பதை கூறுகிறது. **லூக் 12:20,21 இல் "தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்.**" ஆம், இங்கு நாம் காணும் ஐசுவரியவானைப் போல இன்று அநேகர், பெரும் பொருளை, ஐசுவரியத்தை தேடிவைத்து, அதை தங்களுக்கான அங்கீகாரமாக எண்ணுகின்றனர் ஆனால் ஐசுவரியத்தினால் தேவன் வைத்திருக்கும் மரண நாளுக்கு ஒருவராலும் தப்பமுடியாது. இவ்வுலக வாழ்க்கைக்குப் பின்னான வாழ்க்கையிலும் அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. **யாக் 5:1-3** இல் உள்ள வசனங்களுக்கு இணை வசனமாக, நாம் எப்படிப்பட்ட பொருளை எங்கு சேர்க்க வேண்டும் என்பதற்கு

ஆதாரமாக "உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள், பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." **(லூக் 12:33,34).**

ஆம் பரலோகத்தில் சேர்த்து வைக்கப்படும் பணப்பைகள் பழமையாய் போவதில்லை, பொக்கிஷங்கள் குறைவதில்லை, திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. இவ்வுலகத்திற்கு என்று, அதாவது உலக வாழ்க்கையை, உலக மனிதர்கள் போல் அனுபவிப்பதற்கு சேர்க்கப்படும் ஐசுவரியம் அழியும், பொன்னும் வெள்ளியும் துருப்பிடிக்கும் எனவே தேவன் நமக்கு தரும் ஐசுவரியங்களை இவ்வுலக வாழ்விற்காகவே செலவழிக்க நினையாமல் **லூக் 12:33** இல் கூறியிருக்கிறபடி "உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள்". நமக்கு இருக்கும் ஐசுவரியங்களை நம்முடைய நியாயமான தேவைக்கு போக, மீதம் இருப்பவைகளை தாராளமாக தேவ சித்தத்தின்படி, வழிநடத்துதலின்படி மற்ற காரியங்களுக்காக கொடுக்க வேண்டும். அதை நாம் கொடுக்க மனதில்லாமல் இருந்தால், ஆண்டவராகிய இயேசுவை பின்பற்றும்படி வந்த ஐசுவரியமுள்ள வாலிபனை போல நாமும் ஆண்டவரை பின்பற்ற முடியாமல் பின்மாற்றம் அடைவோம். **"அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான். அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மத் 19:20-24).** எனவே தேவ நடத்துதலின்படி, தேவையுள்ள தேவ பிள்ளைகள், தேவ ஊழியர்கள், ஆதரவற்ற மனிதர்கள் என யாருக்கெல்லாம், எதற்கெல்லாம் தேவை இருக்கிறதோ, எவ்வளவு தேவை இருக்கிறதோ அதற்கேற்றவிதமாய் கொடுக்க வேண்டும்.

ஒருவேளை நமக்கே தேவைகள் அதிகம் இருக்கலாம், அல்லது நாம் அநேகரை தாங்கும் அளவிற்கு ஐசுவரியம் உடையவர்களாய் இல்லாமல் இருக்கலாம். ஆனால் தேவன் எதிர்பார்ப்பதெல்லாம் "உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள்" என்பதாகும். எனவே அன்று தேவாலயத்தில் ஒரு காசை மட்டும் போட்ட ஏழை விதவையை, தேவன் எப்படி மெச்சி கொண்டாரோ, அதை போல் நம்மால் இயன்றதை நாம் கொடுக்கலாம். ஏனென்றால் நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பது மட்டுமல்ல நமக்கென எவ்வளவு மீதம் வைத்து இருக்கிறோம், அதை

எதற்கு செலவழிக்கிறோம் என்பதையும் தேவன் காண்கிறார். **"அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப்போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்."**(மாற்கு 12:43,44). எனவே இவ்வுலகில் எவ்வளவுதான் நாம் சேர்த்துக் குவித்து வைத்தாலும், பணமோ, பொருளோ எதுவும் நம்மோடு பரலோகம் வர முடியாது. எனவே பரலோகத்தில் நாம் சேர்த்து வைக்க நம் இருதயம் முயற்சிக்காத நிலையில் நம்முடைய தேவபக்தி வெறும் மாயையே. நாம் உண்மையாய் பரலோகத்தை வாஞ்சிபோமானால், இவ்வுலகில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் முக்கியமாக, கடினமாக உழைத்து பொன் பொருள் ஐசுவரியம் சேர்ப்பது உள்பட, இவை யாவும் நாம் பரலோகத்தில் சென்றடையும் நோக்கத்துடன் செயல்பட வேண்டும். அப்பொழுது, நமக்கு இவ்வுலகவாழ்வை குறித்தும், மறு வாழ்வை குறித்தும் நம்பிக்கை இருக்கும்.

எனவே ஐசுவரியத்தை சேர்த்து வைத்து குவிக்கும் தொல்லையோ, அதைப் பத்திரப்படுத்த பதைபதைப்போ இல்லாமல், தேவன் நமக்கு தருவதை அவருக்கே அவரது சித்தப்படியே திருப்பிக் கொடுக்கும்போது, தேவன் நம்மில் மகிமைப்படுகிறார். நம்மை ஆசீர்வதித்து மென்மேலும் சிறக்க செய்வார். எப்படி தேவன் நமக்கு கொடுத்த இந்த மாம்ச பாண்டத்தை பரிசுத்தத்தோடு பாதுகாத்து, அவர் பணிக்கெனவே செலவழித்து, அவரிடம் சென்று அடையவே நம் சரீரம் காத்திருக்கும் போது, தேவன் அவரது மகிமையை அனுப்பி நம்மை மறுரூபப்படுத்தி அழிவுள்ள மாம்ச சரீரத்தை, அழிவில்லாததாய், மகிமையுள்ளதாய் மாற்றி தம்மிடம் சேர்த்துக் கொள்கிறாறோ, அதைப்போலவே இவ்வுலக ஐசுவரியமும், பணமும் பொருளும், தேவனுக்கென பிரதிஷ்டை பண்ணபடும் பொழுது, அது சுகந்த வாசனை காணிக்கையாகத் பரிசுத்தபடுத்தப்பட்டு அவரிடம் சேரும், நம்மையும் அவரிடம் சேர்க்கும். இதுவே விசுவாச கிரியை. **யாக் 2:14-18**, வசனங்களில், **"என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும். ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே."**

எனவே **லூக் 12:34** இல் கூறப்பட்டுள்ளபடி, நம் பொக்கிஷத்தை பரலோகத்தில் சேர்த்து வைத்து, நம் இருதயமும் பரலோகத்தையே நாட செயல்படுவோமாக. ஆமென், அல்லேலூயா.

# 87. விசுவாசத்தின் அடையாளங்கள்




இன்று நாம் கிறிஸ்தவ விசுவாச மக்களிடையே காணும் இயல்பான ஒரு காரியம் சிலுவை அடையாளம் இடுவதாகும். போதகர்கள் மற்றும் ஊழியர்கள் சிலுவை அடையாளமிட்டு ஜெபிப்பதையும் ஆசிர்வாதம் கூறுவதையும் நாம் காண்கிறோம். இங்கு சிலுவை ஒரு புனித சின்னமாக ஆசிர்வாத சின்னமாக காணப்படுகிறது. ஒரு காலத்தில் ரோமர்கள் குற்றவாளிகளை தண்டிக்க பயன்படுத்திய ஒரு பொருளாக இருந்தது, ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்று அந்த சிலுவையில் இரத்தத்தை சிந்தி பாவமன்னிப்பு உண்டாக்கினாரோ அதுமுதல் அது ஒரு இரட்சிப்பின் அடையாளமாக காணப்படுகிறது.

இங்கு நாம் சிலுவையை அவரவர் தம் சுய சித்தத்தின்படி பயன்படுத்திக் கொள்வது குறித்து தற்கிக்க முயலவில்லை. ஆனால் மனதில் எவ்வித தேவ பயமுமின்றி, வாழ்க்கையில் பரிசுத்தத்தை பற்றி எந்த ஒரு தெளிவும் இன்றி வாழ்வோர், தாங்கள் எப்படி வாழ்ந்தாலும், தங்களை பாதுகாக்க, ஆசீர்வதிக்க சிலுவையை பயன்படுத்த முடியும் என்று நினைப்பது முட்டாள்தனமாகும். ஏனெனில் சிலுவையின் உபதேசத்திற்கு கீழ்படிய மனதில்லாததோர், சிலுவையை தங்கள் கழுத்தில் அணிந்து கொண்டாலோ அல்லது தங்கள் கைப்பையில் / பாக்கெட்டில் வைத்து இருந்தாலோ தங்களுக்கு நன்மை

வரும், தீமையினின்று காக்கப்படுவோம் என்று நினைப்பது முட்டாள்தனமாகும்.

இது போன்றே ஜெப எண்ணெய், ஜெபித்து கொடுக்கப்பட்ட தண்ணீர் என்று பல காரியங்கள் காணப்படுகிறது. **யாக் 5:14,15 வசனங்களில் "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்."** என்று கூறபட்டுள்ளது. இங்கு ஒன்றை நாம் நன்றாய் புரிந்துகொள்ள வேண்டும். ஜெப எண்ணெய் என்பது விசுவாசத்தின் ஐக்கியத்தை காண்பிக்கிறதே தவிர, ஏதோ ஒரு வல்லமை இறக்கப்பட்ட பொருளாக இங்கு காண்பிக்கப்படவில்லை. ஆம் ஒரு தேவ ஊழியரின் மூலமாய் ஜெபித்து கொடுக்கப்படுகிற பொருள் அது எண்ணெய், தண்ணீர் அல்லது உணவு என எதுவாக இருக்கலாம், அதை நாம் பயன்படுத்தும் பொழுது குறிப்பாக எண்ணையை பூசி பிணியாளிக்கு ஜெபிக்கும் போது அனைவரது (தேவ ஊழியர் மற்றும் பயன்படுத்துபவர்) விசுவாசமும் ஒரு ஐக்கியத்திற்குள்ளாய் இருப்பதற்கு ஒரு அடையாளமே அந்த எண்ணெயாகும். ஆகவேதான் வேதம் தெளிவாக கூறுகிறது "**விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்**" என்று.

மேலும் **மத் 18:19,20** வசங்களில் "**அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.**" எனவே ஜெபித்து கொடுக்கப்படுகின்ற பொருளை நாம் பயன்படுத்தும் பொழுது நமது விசுவாச ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறோம். ஆனால் இன்று சிலர் ஜெப எண்ணெய் போன்றவற்றை ஒரு மந்திரப் பொருளை போல் பயன்படுத்துவது வருந்தத்தக்கது. தேவ பயமோ, பரிசுத்தமோ இல்லாமல் வெறும் வாயினால் மாத்திரம், ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் என்று சொல்லி ஜெப எண்ணெய் பயன்படுத்துவதால் ஒரு பிரயோஜனமும் இல்லை.

இதிலும் வேதனையான ஒரு காரியம் என்னவென்றால் தங்களை தேவ ஊழியர்கள் என்று கூறிக் கொள்கின்ற சிலரே தாங்கள் கைவைத்து ஜெபிக்கிற எண்ணெய், தண்ணீர் என்பவற்றின் மீது ஏதோ வல்லமையை இறக்குவது போல் செய்வது வேதனையாகும். சிலர் பவுலின் மீது இருந்த உடையை பயன்படுத்தி மக்கள் விடுதலை பெற்றனர் என்று கூறுவர். "**பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன." (அப் 19:11,12)**. ஆனால் ஒன்றை நாம்

எல்லாரும் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். **லூக் 8:43-48 வசனங்களில் "அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்து, தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும், ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்த ஒரு ஸ்திரீ, அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்; உடனே அவளுடைய பெரும்பாடு நின்றுபோயிற்று. அப்பொழுது இயேசு: என்னைத் தொட்டது யார் என்று கேட்டார். எங்களுக்குத் தெரியாதென்று எல்லாரும் சொன்னபோது, பேதுருவும் அவனுடனே கூட இருந்தவர்களும்: ஐயரே, திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே, என்னைத் தொட்டது யார் என்று எப்படிக் கேட்கிறீர் என்றார்கள். அதற்கு இயேசு: என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார். அப்பொழுது அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்கவில்லையென்று கண்டு, நடுங்கிவந்து, அவர் முன்பாக விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும் உடனே தான் சொஸ்தமானதையும் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள். அவர் அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்."** பெரும்பாடுள்ள ஸ்திரீ அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டவுடன் அவள் சுகமாக்கப்பட்டால். காரணம் ஆண்டவர் சொன்னார் **என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு** என்றார். ஆனால் **45ஆம் வசனத்தில்** திரளான ஜனங்கள் ஆண்டவரை சூழ்ந்து நின்று நெருக்கிக்கொண்டிருந்தார்கள், ஆனால் அவர்கள் ஆண்டவரின் வல்லமையை உணரவில்லை இதற்கு காரணம் **48ஆம் வசனத்தில்** ஆண்டவரே கூறினார் **உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்**. ஆம் விசுவாசத்தின் ஒரு வெளிப்பாடாக அவள் ஆண்டவரின் வஸ்திரத்தை தொட்டால், அதனால் விடுதலை பெற்றால். ஆனால் மற்றவர்களோ எந்த ஒரு உணர்வும் இன்றி ஆண்டவரை சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருந்தும் ஒரு விடுதலையையும் பெறவில்லை.

காரணம் ஏதோ தொடுதல் அல்ல, உள்ளத்தின் விசுவாசமே கிரியை செய்கிறது. ஆம் எனவே இருதயத்தில் உண்டாகும் விசுவாச உணர்வே அற்புதங்களைக் கொண்டு வருமே தவிர மற்றபடி வெறும் தொடுதல், பழகுதல், உபதேசத்தைக் கேட்டல் போன்றவை விசுவாசத்தோடு கிரியை செய்யாவிட்டால், ஆண்டவரோடு ஏறக்குறைய மூன்று வருடம் இருந்து, எல்லா அற்புதங்களையும் கண்டு, ஒவ்வொரு நிமிடமும் ஆண்டவரின் பிரசன்னத்தை உணர்ந்து, அவரோடு உண்டு உறங்கி அவர் எந்த நேரத்தில் எங்கு இருப்பார் என்று தனிப்பட்ட முறையில் ஆண்டவரைப் பற்றி அறிந்திருந்தும், அப்போஸ்தலனாகவே அழைக்கப்பட்டிருந்தும் உணர்வற்று போன யூதாஸ்காரியோத்து நிலைமையே வரும்.

எனவே இப்படிப்பட்ட காரியங்களில் நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் இப்படிப்பட்ட காரியங்களே ஆசிர்வாத துணி, தங்க சாவி, கிருபாசன பெட்டி போன்ற காரியங்களுக்கு வழிவகுத்தது. இதனால்

யாருக்கும் எந்த நன்மையும் ஏற்படவில்லை. அதற்கு பதிலாக தேவனுடைய ஊழியம் தூஷிக்கபட இது காரணமாயிற்று. எனவே ஜெப எண்ணெய், தண்ணீர் போன்றவற்றின் உண்மையான நோக்கம் அறிந்து அதைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால் எதுவும் நம் வாழ்வில் விக்கிரகமாகிவிட நாம் இடம் தரக்கூடாது. ஆமென், அல்லேலூயா.

# 88. மேன்மையில் இருந்து




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கொடிய காலத்தின் மத்தியில் மறுபடியும் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தர் தாமே நம்மை சகல தீமைகளிலிருந்தும் விலக்கி காத்து தமது நித்திய ஜீவ கரையில் சேர்பாராக. இன்று இந்த உலகமே தனக்கு கிருபையாய் கொடுக்கப்பட்டிருக்கிற மேன்மையில் இருந்து விழுந்து கிடக்கிறது. இந்த வீழ்ச்சி ஆதியிலேயே தொடங்கிவிட்டது அவற்றை ஒவ்வொன்றாய் தியானித்தோமானால், நம்முடைய இன்றைய பரிதாபமான நிலையை நாம் புரிந்து கொள்ளலாம்.

முதலாவதாக ஆதியிலே இந்த உலகம் **ஆதியாகமம் 1 ஆம்** அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறபடி சிருஷ்டிக்கப்படும் முன்பதாகவே இந்த வீழ்ச்சி தொடங்கிவிட்டது. இதனை நாம் **எசே 28:12-19 வசனங்களில்**, ஆதி மேன்மையை இழந்துபோன ஒருவனை நாம் காணலாம். ஆம் அவனை தேவன் தம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வைத்தார், அக்கினி மயமான கற்களின் நடுவே உலாவினான், அவன் ஞானத்தால் நிறைந்தவன், பூரண அழகுள்ளவன், ஆனால் அவனிடத்தில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்ட பொழுது, அவனை தம்முடைய பரிசுத்த பர்வதத்திலிருந்து ஆகாதவன் என்று தேவன் தள்ளினார். ஆம் இப்படியாக தள்ளபட்டவன், அன்று தான் தவறு செய்து தண்டிக்கப்பட்டது போல், இன்றும் பலரை தவறு செய்ய வைத்து அவர்களை தேவகிருபையில் இருந்து விழசெய்கிறான். அதை நாம் **ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்திலேயே** காணலாம்.

பிசாசாகிய அவன் ஏவாளை வஞ்சித்து, அதன்மூலம் நம் ஆதி பெற்றோராகிய ஆதாமையும் ஏவாளையும் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த மேன்மையில் இருந்து விழசெய்தான். வேதாகமும் முழுவதும் தங்களுக்கு மேன்மையான ஒரு வாழ்க்கை தேவனால் அருளப்பட்டிருந்தும் அதை சரியாய் பயன்படுத்திக் கொள்ளாமல் தங்களுடைய மேன்மையில் இருந்து வீழ்ந்தவர் பலர்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானை சுதந்தரித்துக்கொள்ள மகிழ்ச்சியோடு, தேவ வல்லமையின் வெளிப்பாடோடு புறப்பட்ட இஸ்ரவேலர், தங்கள் கீழ்ப்படியாமையினால் வனாந்தரத்தில் மாண்டார்கள். இஸ்ரவேலுக்கு முதல் ராஜாவாய் தெரிந்து கொள்ளப்பட்ட சவுல் தனக்கு அருளப்பட்ட மேன்மையை காத்துக்கொள்ளாத படியினால் பல இன்னல்களுக்கு உட்பட்டு மரித்தார். இதுபோல் பழைய ஏற்பாட்டில் பலருடைய வாழ்க்கையும், பல தேசங்களின் / சாம்ராஜ்யங்களின் நிலையையும் நாம் காணலாம்.

புதிய ஏற்பாட்டிலும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாய் ஆண்டவரால் நேரடியாக ஊழியத்திற்கு அழைக்கப்பட்டு அவரோடு கிட்டத்தட்ட மூன்றரை ஆண்டுகாலம் ஊழியம் செய்தும், ஆண்டவரோடு தங்கி உண்டு உறங்கி நாள்தோறும் அவருடைய கிருபையுள்ள வார்த்தைகளை கேட்கும் பாக்கியத்தை பெற்றிருந்தும் தனக்கு கொடுக்கப்பட்ட மகா மேன்மையான நிலையை ஆற்ப காசுக்காய் இழந்துபோனான் யூதாஸ்காரியோத்து. தங்களுடையதையெல்லாம் தேவனுக்காக அர்ப்பணிக்க நினைத்தும் அதில் ஒரு பங்கை மறைத்து வைத்த அனனியா, சப்பீராளும் ஆதிசபையில், அப்போஸ்தலனாகிய பேதுரு முன்பாக திருச்சபையின் நடுவிலே தங்களின் உயிரை விட்டனர். மேன்மையான சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து, நித்திய ஜீவனை அடைய பாத்திரராய் எண்ணப்பட்டு இருந்தும் அவர்கள் வாழ்க்கை இவ்விதமாய் முடிந்தது.

இவை எல்லாம் இன்று நாம் இருக்கும் இந்த நிலைக்கு நிழலாட்டமாய், முன்மாதிரியாய் உள்ளது. ஆம் கடந்த 100 ஆண்டுகளில் மற்ற எப்போதும் இல்லாத அளவில் அறிவியல் வளர்ச்சியிலும், தொழில் வளர்ச்சியிலும் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்பட செய்து, நாம் நம் முன்னோர்களை காட்டிலும் ஒரு மேன்மையான நிலையில் வாழ தேவன் கிருபை செய்தார். மேலும் ஆவிக்குரிய ரீதியிலும் தேவனுடைய வார்த்தை, அவருடைய தயவு எங்கும் பிரசித்தம் ஆயிற்று. சத்திய சுவிசேஷத்தை நான் கேள்விப்படவில்லை என்று ஒருவரும் கூற முடியாதபடி தேவன் வல்லமையான தேவ ஊழியர்களை அனுப்பி அவர்களின் மூலம் தமது வார்த்தையை பூமியில் உள்ள அனைவருக்கும் வெளிப்படுத்தினார். எவ்வளவு அதிகமாய் தேவன் மனிதர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினாரோ, அவ்வளவு தூரமாய் மனிதர்கள் அவரை விட்டு விலகினர். அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கு ஆண்டவர் எவ்வளவோ மேன்மையை கொடுத்திருந்தும், அனைவரும் ஆண்டவருடைய வார்த்தைக்கு விரோதமாகவே செயல்பட்டனர். இந்தியா போன்ற நாடுகளில் மத சுதந்திரம் என்பது பெயரளவில்தான் உள்ளது. உண்மையாய் தேவனை பின்பற்றுவோர் துயரத்திற்கு உள்ளாக்கப்பட்டனர்.

உலக ஞானமும், சொகுசான வாழ்க்கையும், மனிதன் தான் தேவனை மறந்து ஓடச் செய்தது. இந்த உலகத்தை தான் கட்டி அமைப்பதாக மனிதன் நினைக்கிறான். தங்களால் எதையும் செய்ய முடியும் என்று உலக அரசாங்கங்களும் உலக தலைவர்களும் நினைத்தனர். இவையெல்லாம் ஆதியில் வீழ்ந்தவனுடைய சூழ்ச்சியினால் நடைபெறுவதாகும். ஆம் பூமியில் நடைபெறும் ஒவ்வொரு காரியத்திற்கும் காரணம் அன்று ஏவாளை போல் இன்று வாழும் மனிதனும், சத்துருவின் வார்த்தைக்கு செவி கொடுத்து வாழ்வதால்தான். தாங்கள் கிருபையின் காலத்தின் இறுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கின்ற விசுவாசிகள், ஏன் தேவ ஊழியர்கள் கூட உலகத்திற்கு ஊழியம் செய்ய போய்விட்டனர். ஆதலால்,

கிருபையின் காலத்தை தவறவிட்டால், பின்பு பூமியில் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதற்கு ஒரு சிறிய முன்னோட்டமாக, இந்த கொடிய கொரோனா காலம் தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இவை எல்லாவற்றுக்கும் காரணம், தேவன் நமக்கென்று வைத்திருக்கும் மேன்மையை அறிந்து அதற்கேற்றபடி வாழாமல் உலகத்திற்கு பின்னே நாம் பிஸியாக ஓடிக் கொண்டிருப்பதால், மனுஷராகிய நாம் ஒன்றிணைந்து, அன்று வானளாவ பாபேல் கோபுரத்தை கட்ட முயன்றவர்கள் போல் இந்த உலகத்தை கட்டமைத்து விடலாம், நம்முடைய ஞானத்தால் நோய், பிணி எதுவும் அண்டாதவாறு நம்மை காத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் நாம் எண்ணியதால். ஆனால் இன்று தேவன் அனைத்தையும் நிலைகுலையச் செய்தார். உலக ஞானம், மருத்துவத் துறையின் முன்னேற்றம் என எதுவும் கொரோனாவை ஒன்றும் செய்யமுடியவில்லை. கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக உலகம் எங்கும் கோடிக்கணக்கான மக்கள் நோயினால் பாதிக்கப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் மாண்டு போயிருக்கிறார்கள்.

பணக்கார நாடு, ஏழை நாடு என எந்த பாகுபாடும் இல்லாமல் எல்லாரும் பாதிக்கப்பட்டுள்ளனர். நோயின் தாக்கம் மட்டுமில்லாமல் அதனால் உண்டாகி கொண்டிருக்கிற நாட்டின் மற்றும் தனி மனித வாழ்வில் உண்டாக்கிய பொருளாதார நஷ்டம் அதிகம். நாளை என்ன நடக்கும் நம்முடைய வாழ்வின் நிலை என்ன, குழந்தைகளின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதெல்லாம் கேள்விக்குறியாகிவிட்டது. நம்முடைய வாழ்க்கையே அதற்கு ஒரு சிறந்த உதாரணம்.
தமிழ்நாட்டில் நாம் அனைவரும் கடந்த வருடம் (2020) மார்ச் மாதம் 22-ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட லாக் டவுனில் இருந்து இன்னும் விடுபடவில்லை. இன்னும் எத்தனை நாட்கள் நம் வாழ்க்கை இப்படியாக இருக்கப் போகிறது என்பதும் தெரியவில்லை. கடந்த ஒரு வருடத்தில் எத்தனையோ பேரை நாம் இழந்திருக்கிறோம், அநேக குடும்பங்கள் நிற்கதியாய் இருக்கிறது, அரசாங்கமோ, எந்த தனிமனிதனோ நாளைக்கான எந்த முடிவையும் எடுக்க முடியாதபடி, நாளை என்ன நடக்கும் என்பதை அறியாத சூழ்நிலை இருக்கிறது. நாம் பெற்ற பிள்ளைகளுக்கு அடிப்படையான நல்ல உணவு, கல்வியைக் கூட நம்மால் கொடுக்க முடியவில்லை. பணம் இருக்கிறது எல்லா அறிவியல் முன்னேற்றமும் கட்டமைப்பும் அப்படியே இருக்கிறது. ஆனால் அதனால் நமக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை. நாம் வீட்டை விட்டு கூட வெளியே செல்ல முடியாதபடி, வாழ்வின் எந்தக் காரியத்தையும் குறித்து சிந்தித்து செயல்பட முடியாதபடி, அடங்கிப் போய் இருக்கிறோம்.

வீண் பெருமை பேசின உலக அரசாங்கங்களும் தலைவர்களும் இன்று அமைதியாகி விட்டனர். தேவன் எப்படிப்பட்ட ஒரு அருமையான வாழ்க்கையை நமக்கு கொடுத்திருக்கிறார், ஆனால் நாம் அதை எவ்வாறு சீரழித்து விட்டோம் என்பதை இப்பொழுதாவது உணர வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும், குடும்பமும், சமுதாயமும், மாநிலமும், தேசமும் இந்த முழு உலகமும் அவரின் முன் பணிய வேண்டும். சீரழிந்த நம் வாழ்க்கை மறுபடி சீராகப்படவேண்டும். நியூ நார்மல் என்று சொல்லி, நம் நார்மலான வாழ்க்கையை இழந்துபோனதை மறக்க செய்து, இன்னும் மனம்போல் வாழ நம்மை வஞ்சிக்கும் சத்துருவின் தந்திரத்தை நாம் உணர்ந்து தேவன் நமக்கு பூமியிலும் பரலோகத்திலும் வைத்திருக்கும் மேன்மையான வாழ்வை, ஒவ்வொருவரும் உணர்ந்து மனம் திரும்பவேண்டும். தேவன் இக்கொரோனா

காலத்தை, கிருபையின் காலம் முடிவிற்கு ஒரு முன்னோட்டமாக கொடுத்துள்ளார். இதை உணர்ந்து மனம் திரும்பி வருகையில் ஆண்டவரோடு செல்ல நாம் ஆயத்தமாக வேண்டும், மற்றவரையும் ஆயத்தப்படுத்த வேண்டும். இழந்துபோன மேன்மையான வாழ்வை நாம் மறுபடியும் பெறவேண்டும். கிருபையின் காலத்தை இழந்து, ஆண்டவருடைய வருகையில் காணப்படாமல் போய், நியாயத்தீர்ப்பிற்குள்ளாய் கடந்து செல்வோர் நிலைகுறித்து நாம் எண்ணிப்பார்க்கக்கூட முடியாது. எனவே இக்கொடிய காலத்தில் தேவன் கொடுக்கும் கடைசி எச்சரிப்பின் சத்தத்தை கேட்டு மனந்திரும்பி ஆண்டவருடைய வருகையில், தேவ கிருபை இப்பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பாக, அவரது பாதம் சரணடைவோம், ஆமென் அல்லேலூயா.

## 89. பாரமற்ற இருதயம்




வேதாகமத்தில் ஆண்டவர் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் மாய்மாலமாய் ஜெபிக்கிறவர்களை பற்றி கூறியுள்ளார். அதில் ஒரு முக்கிய வார்த்தையாக அவர்கள் பார்வைக்கு ஜெபம் பண்ணி என்கிற வார்த்தையை நாம் காணலாம். இதன் அர்த்தம் என்னவென்றால் அவர்கள் வாய் ஜெபிக்கிறது, அதுவும் மற்றவர்கள் காதுகள் கேட்க, அதுவும் சில வேளைகளில் நீண்ட ஜெபம் பண்ணுகிறார்கள், ஆனால் அது பார்வைக்கு தான் ஜெபம் செய்வது போல் தோன்றினாலும், அது ஜெபமே அல்ல. இன்று நாம் எங்கு பார்த்தாலும் குறிப்பாக இந்த லாக்டவுன் காலத்தில் தொலைக்காட்சியிலும் இணையதளத்திலும் இன்னும் பல வகைகளிலும் பலர் கூடி ஜெபிக்கின்றனர். குறிப்பாக கொரோனாவிற்காக அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அழுது மன்றாடி ஜெபிக்கின்றனர். இவை எல்லாவற்றையும் நாம் காணும்பொழுது இன்னும் ஏன் ஆண்டவர் மனம் இரங்கவில்லை என்று நினைக்கத் தோன்றும். ஆனால் இவையெல்லாம் இருதயத்தில் எந்தவித பாரமும், கவலையும் இல்லாமல் உதட்டளவில் செய்யும் மாய்மால கிரியை ஆகும்.

மேலும் சிலர் இப்படி மற்றவர்களுக்காக மன்றாடி ஜெபிப்பது மூலம் தங்களுக்கு தேவன் நன்மை தருவார் என்று எண்ணுகின்றனர். எனவே உலகில் என்ன நடந்து கொண்டிருக்கிறது துயருறும் மக்களின் நிலை என்ன என்பதை பற்றி கவலைப்படாமல், அதை சிறிதும் கண்டு கொள்ளாமல் ஜெப குறிப்புகளில் இருக்கும் குறிப்புக்களை மட்டும் வைத்து ஜெபிப்பர். இதுவே பாரமற்ற ஜெபமாகும். மேலும் தேவனே காரியத்தை வாய்க்க பண்ணவேண்டும் என்று மற்றவர்களுடைய ஜெப குறிப்புகளுக்காக ஜெபிக்கிற இவர்கள் தங்கள் காரியம்

நிறைவேற தேவனை அல்ல மனிதரையே நம்பி ஓடுகின்றனர். மற்றவர்களுக்காக மலையளவு விசுவாசத்தை வெளிப்படுத்துகிற, சத்தத்தை உயர்த்தி ஜெபிக்கிற இவர்கள் தங்கள் காரியத்துக்காக கடுகளவு விசுவாசத்தை கூட வெளிப்படுத்த மாட்டார்கள். பரிசேயர் சதுசேயர் போல இவர்கள் பக்தி வைராக்கியம் உள்ளவர்களைப் போல் காணப்பட்டாலும் இவர்கள் வெறும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்.

இதைப்போன்ற நிலைமையே இன்று பாடல்களை எழுதி அதை இசை அமைத்துப் பாடும் நபர்களிடமும் காணப்படுகிறது. அவர்கள் பாடல் வரிகள் அனைத்தும் கடவுள் இல்லாமல் தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது, இவ்வுலகத்தில் எதுவும் மேன்மையானது கிடையாது, நிரந்தரமானது கிடையாது, பரலோக வாழ்வு, தேவ ஐக்கியம் அவரது பிரசன்னமும் முக்கியம் என்பது போல் இருந்தாலும், அருமையான இசையும், குரல் வளமும் இருந்தாலும் அவர்கள் வாழ்க்கையும், உலக பிரகாரமான நடக்கையும், அவர்களின் பாடலுக்கும் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் சம்மந்தம் இல்லை என்பதையே வெளிப்படுத்துகிறது.

இதனால் முன்பை விட இன்று அதிக இளைஞர்கள் பாடல் ஊழியங்களை செய்தாலும் அது அவர்களுக்கு வேண்டுமானால் ரசிகர் கூட்டத்தை உண்டாக்குகிறதே தவிர, தேவ மகிமைக்கோ சுவிசேஷம் சென்றடைவதற்கோ காரணமாய் இருப்பதில்லை. இப்படிப்பட்ட இருதய பாரமற்ற செயல்களால் எந்தவித ஆவிக்குரிய எழுப்புதலும் மற்றவர்களுக்கு ஏற்படப்போவதில்லை உண்மையான எழுப்புதல் எப்பொழுது உண்டாகும் என்றால் தேவ சித்தத்தை அறிந்து பிதாவே உம் சித்தம் போல் செய்யும் ஐயா என்று ஜெபிப்பதின் மூலமே. அவருடைய சித்தத்தை அறிய, அவருடைய ஐக்கியம் தேவை, அதற்கு உண்மையான தேவனே சார்ந்திருக்கிற இருதயம் தேவை.

ஒருவேளை தேவ சித்தம் இன்னது என்று வெளிப்படுத்தப்படாமல் இருந்தாலும், தேவ சித்தத்தின்படி எது நடந்தாலும் அது நன்மைக்கே, அது நம்மை நித்திய ஜீவனை சென்றடையவே வழிவகுக்கும் என்ற எண்ணத்துடன் ஜெபிக்கவேண்டும். இன்று அநேகர் தாவீதைப் போல நடனமாடி பாட அறிந்திருக்கின்றனர். ஆனால் புதிய ஏற்பாட்டு சபை காலத்தில் பவுலின் ஆவியோடும் கருத்தோடும் பாடும் பாடல்கள் தேவை, அதுவே சிறைச்சாலைகளின் கதவுகளை திறந்து, கட்டுண்டவர்களின் சங்கிலிகளை உடைக்கும்.

எனவே இக்கொடிய கொரோனா காலத்திலே நமது ஜெபங்களும் பாடல்களும் தேவசித்தம் நிறைவேறும்படியாய் கட்டுகள் முறியும்படியாய், விடுதலையும் எழுப்புதலும் உண்டாகும்படியாய் இருக்கட்டும். அப்படிப்பட்ட ஒரு சிறு கூட்டத்தை தேவன் தமக்கென இப்பூமியில் வைத்திருக்கிறார். அதில் நாமும் ஒருவராக காணப்பட தேவன் அருள் புரிவாராக. ஆமென், அல்லேலூயா.

## 90. பரத்திலிருந்து கொடுக்கப்படாவிட்டால்




**லூக்19:11 "இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்."**

மேற்கண்ட வசனம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிலாத்துவை நோக்கி கூறியதாகவும். இப்படிக் கூற காரணம் இதற்கு முந்தைய வசனத்தில், **லூக் 19:10 இல் "அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான்."** இங்கு பிலாத்து அன்றைய ரோம சக்கரவர்த்தியான சீசரிடம் இருந்து தனக்கு கிடைத்த அதிகாரத்தினால் தான் எதையும் செய்ய முடியும் என்று நினைத்து இவ்வாறு பேசினான். ஆனால் உண்மையில் நடக்கும் காரியங்கள் ரோம சக்கரவர்த்தியின் அதிகாரத்திற்கு உட்பட்டு நடவாமல், தேவ சித்தத்தின்படி நடக்கின்றது என்றும், பிலாத்து ஆண்டவரை விசாரணை செய்து எடுக்க போகின்ற முடிவு பரலோக தேவனின் கட்டளையின்படி நடக்கிறது என்பதை அறிந்திருந்த ஆண்டவர் அதை பிலாத்துவிற்கு கூறினார். ஆனால் அதை உணர்ந்து கொள்ள கூடிய அறிவு பிலாத்துவிற்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் இல்லாதிருந்தது.

ஆண்டவரை அநியாயமாய் காட்டிக்கொடுத்து பிடித்துவந்து பிலாத்துவிடம், ஏரோதுவிடமும் ஒப்படைத்து ஆண்டவரை மரண தண்டனைக்கு உள்ளாக தீர்க்க நினைப்பது ஏதோ தங்கள் தந்திரத்தினால், அதிகாரத்தினால், தாங்கள் செய்வதாக எண்ணினர். ஆனால் இவையாவும் தேவ முன்னறிவிப்பின்படியே நடந்தேறியது. காரணம் தேவனுடைய மகத்துவமான மீட்பின் திட்டம். ஆனால் அதுவோ அற்ப மனிதர்கள் ஒருவருக்கும் விளங்கவில்லை. இதைப் போலவே, இப்பொழுதும் தேவ பிள்ளைகள் மேல் பலர் அதிகாரம் செலுத்த நினைக்கின்றனர். சிலர் அரசியல் அதிகாரத்தின் மூலமும், சிலர் பணபலம், ஆள்பலம் மூலமும், இன்னும் சிலர் வேலை ஸ்தலத்தில், சொந்த குடும்பத்தில் கூட தேவ

பிள்ளைகளாகிய நம் மேல் அதிகாரம் செலுத்த நினைக்கின்றனர். ஆனால் நம்மில் அதிகாரம் உடையவர் தேவன் மட்டுமே.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னது போல் அவரால் அனுமதிக்கப்பட்ட அளவை தாண்டி யாரும் நம் வாழ்வில் அதிகாரம் செலுத்த முடியாது. ஆனால் அதே நேரத்தில் ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கிற அதிகாரத்தினால் நம்மால் ஊழியம் செய்ய முடிகின்றது. கடிந்துகொண்டு, கண்டனம் பண்ணி புத்தி சொல்ல நமக்கு அதிகாரம் உண்டு. **"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை." (யாக் 1:17).** நம் வாழ்வில் நடைபெறுகின்ற அனைத்தும் அது நன்மையானாலும், நன்மை உண்டாகும்படி சிலகாலம் உண்டாகிற சோதனையானாலும், அவை யாவும் பரலோகத்திலிருந்து நமக்கு கொடுக்கப்படுகின்றது அல்லது அனுமதிக்கப்படுகின்றது.

யோபுவின் வாழ்விலும் நடந்தது இது தான். மற்றவர்கள் யோபுவின் துன்பத்திற்கு பல காரணங்கள் கூறினாலும், அவர் கூறியது ஒன்றுதான் **கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார்** என்பது தான். அவர் தன் மீதோ, மற்றவர் மீதோ, ஏன் பிசாசின் மீது கூட காரணம் கூறவில்லை. தான் முழுமையாக தேவ அதிகாரத்திற்கு உட்பட்டவர் எனவே தனக்கு நேரிடும், அனுமதிக்கப்படும் அனைத்தும் தேவனை தாண்டி வர முடியாது என்பதை நன்கு அறிந்திருந்தார். எனவே தான் மற்றவர்கள் என்ன கூறினாலும், சொந்த மனைவியே தன்னோடு கூட எல்லா நன்மைகளையும் அனுபவித்தவளே, **தேவனை தூஷித்து ஜீவனை விடும்** என்று கூறியபோதும், அவர் அமைதியாக இருந்தார். பிலாத்து ஆண்டவரை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தது போல் தோன்றினாலும் மூன்றாம் நாள் அவர் உயிரோடுடெழுந்ததை அவனால் தடுக்க முடியவில்லை. யோபுவை இரண்டு மடங்கு தேவன் ஆசீர்வதிப்பதை பிசாசினாலும், மற்றொருவரலாரும் தடுக்க முடியவில்லை.

எனவே இன்றும் உலக அரசாங்கங்களை பார்த்து, அதிகாரங்களை பார்த்து, தீவிரவாத முறையில் மக்களை அடக்கியாள நினைக்கும் குழுக்களை பார்த்து, பணபலம் ஆள்பலம் என்பவற்றை பார்த்து அல்லது உறவினர்கள், நண்பர்கள், சொந்த குடும்பத்தினர், கணவன், மனைவி, பிள்ளைகள் என்று இவர்களைப் பார்த்து, நம் வாழ்வு கட்டுப்படுத்தப்படுகின்றது என்று எண்ணாமல், பரத்திலிருந்து கொடுக்கப்படாவிட்டால் இவர்கள் ஒருவராலும் நம் வாழ்வில் எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியாது, அது நன்மையானாலும் தீமையானாலும் சரி. அதே நேரத்தில் தேவன் பரத்தில் இருந்து நமக்கு கொடுத்திருக்கின்ற அதிகாரத்தின் மூலம், மேற்சொன்ன உலக அரசாங்கம் முதல் மனைவி பிள்ளைகள் வரை, அவர்களை தேவ சித்தத்தின்படி நடத்துவது தேவன் நமக்கு கொடுத்த பணியாகும்.

அதே நேரத்தில் எந்த ஒரு நன்மையையும் தேவனிடத்தில் தேட வேண்டுமே ஒழிய மற்றவர்களிடத்தில் தேடக் கூடாது. ஏனெனில் நமக்கு நடக்கும் / கிடைக்கும் அனைத்தும் **சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது.** எனவே இக்கொடிய கொரோனா காலத்திலும், யோபுவின் வாழ்வை போல சீர்குலைந்து கிடைக்கும் நம் வாழ்க்கை, ஊழியம், சரீர சுகம், வேலை, மனித உறவுகள் என அனைத்தையும் பரலோகம் நமக்கு கொடுப்பதின் மூலமே அவற்றை சீர்படுத்துவோமாக. எனவே எதற்கும் கலங்காதீர்கள். யார் என்ன பேசினாலும் சத்துருவானவனே நமக்கு எதிர்த்து நின்றாலும், நாமோ ஆண்டவர் சொன்னபடியே பரத்திலிருந்து அனுமதிக்கப்படாவிட்டால் நம்மீது யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லை என்பதை உணர்ந்து கொள்வோமாக. தேவன் தாமே இதற்கான கிருபையை நம் ஒவ்வொருவருக்கும் தருவாராக, ஆமென், அல்லேலூயா.

## 91. தேவ வார்த்தை




தேவ வார்த்தையை போதிப்பது வேறு, பிரசங்கம் செய்வது வேறு. பிரசங்கம் செய்ய சில குறிப்புகளை தயார் செய்து அதன் மூலமாக எந்த தலைப்பிலும் பிரசங்கிக்கலாம். ஆனால் தேவனிடத்திலிருந்து பெற்ற வார்த்தையை வேத வசனத்தின் துணையோடு, இன்னும் சில ஆவிக்குரிய நூல்களில், செய்திகளின் துணையோடு விளக்கிக் கூறுவதே தேவ வார்த்தையை போதிப்பது ஆகும். இன்று பலர் கிறிஸ்தவ ஊழிய வட்டாரத்தில் அநேகம் பிரசங்கங்களை செய்கின்றனர். இன்னும் சிலர் புதுமையாக ஏதாவது பேசவேண்டும் என்பதற்காக வேதத்திற்கு ஒத்துவராத அது கூறாத காரியத்தை பிரசங்கம் சென்றனர். ஆனால் உண்மையான தேவ வார்த்தை அப்படிப்பட்டது அல்ல, அது மேன்மையானது அதைக் குறித்த சில சத்தியங்களை நாம் பின்வருமாறு காணலாம்.

முதலாவது தேவ வார்த்தையை போதிப்பது, மனிதர்களுக்கு ஏதாவது போதிக்கவேண்டும், புத்தி சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. செய்தியை அவர் கூற விரும்பும் மக்களுக்கு போதிப்பது ஆகும். அது ஒரு தனி நபருக்குக்காகவோ அல்லது, ஒரு தேசத்திற்குக்காகவோ அல்லது, முழு உலகத்திற்கும் கூட இருக்கலாம். சில நேரத்தில் விசுவாசம் குடும்பத்தாருக்கு மட்டும் அல்லது சபைக்கு மட்டும் போதிக்கலாம். தேவன் தமது வார்த்தையை வெளிப்படுத்தும் பொழுது அதை யாருக்கு கூற வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகிறார். இதை நாம் வேதாகமத்தில் அநேக இடங்களில் விசேஷமாக தீர்க்கதரிசன புத்தகங்களில் காணலாம். வேதத்தில் உள்ள ஒவ்வொரு வெளிப்பாடும், வார்த்தையும் எப்படி தேவ மனிதருக்கு அருளப்பட்டதோ அதே அடிப்படையில்தான் தேவன் இப்பொழுதும் அதை அருளுகிறார்.

**"வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" (2 தீமோ 3:16)**, எனவே இப்பொழுது தேவ வார்த்தையாக போதிக்கப்படும் எதுவும் வேதத்திலுள்ள ஏற்கனவே எழுதப்பட்ட சத்தியத்திற்கு ஒருபோதும் முரணாக இருக்காது. ஏனெனில் இவை எல்லாம் ஒரே ஆவியானவரால் அருளப்படுகிறது.

மேலும் அது வல்லமையுள்ளது. அந்த வார்த்தை யாருக்கு சொல்லப்பட வேண்டுமோ, அவர்களுக்கு அது சொல்லப்படும் பொழுது இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போல அந்த வார்த்தைகள் செயல்படுகிறது. அது இரட்சிப்பை, ஒரு விடுதலையை அதைக் கேட்பவர்களுக்கு உண்டாக்குகிறது. அதைக் கேட்கும் தனி நபருக்கோ, சபைக்கோ, தேசத்திற்கோ ஒரு மாற்றத்தை உண்டாக்குகிறது.

இந்த வார்த்தையை பெற்று அறிவிக்கவே ஆண்டவர் நபர்களை தேடிக் கொண்டிருக்கிறார். ஆனால் ஆரம்ப காலத்தில் தேவ வார்த்தையை எடுத்து போதித்த தேவ மனிதர்கள் கூட பிற்காலத்தில், சொந்த வார்த்தைகளை ஜனங்களின் தேவைக்கேற்ப பேச ஆரம்பித்துவிட்டனர். இதுவே எழுப்புதல் அக்னி குறைந்து போக காரணமாகும். தேவ வார்த்தையை பெற்று அக்னியைப் போல கேட்பவர்கள் இடத்தில் அதைக் கொண்டு வந்து சேர்த்தபொழுது, புற ஜாதி மக்கள் பாவத்தில் இருந்து மீட்கப்பட்டு இரட்சிக்கப்பட்டனர். சபைகள் பரிசுத்தத்தில் வளர்ந்து பெருகின, ஆச்சரியப்படும் வகையில் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் அற்புத சுகம் உண்டாயிற்று. உலக அரசாங்கங்களும், அதிகாரங்களும் அதை கண்டு கலங்கின. ஆனால் இப்பொழுதோ அனேக பிரசங்கிமார்கள் இடைவிடாமல் பிரசங்கிக்கின்றனர். யாருக்காகப் பிரசங்கிக்கிறோம் என்பதைக்கூட சரியாக அறியாமல் பிரசங்கிக்கின்றனர். இதனால் அதை கேட்பவர்களின் ஆவிக்குரிய வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை.

இதில் இன்னும் மோசமானது சிலருடைய பிரசங்கம் மாறுபாடானவைகளை போதித்து அநேகரை விசுவாசத்தை விட்டு வழிவிலக செய்கிறது. சத்தியத்திற்கு விரோதமாய் செயல்பட வைக்கிறது. பரலோகத்திற்கு நேராக நடத்திச்செல்லாமல் அதற்கு எதிர்திசையில் நடத்திச்செல்கிறது. எனவே அன்று ஆண்டவர், அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம், அறுப்புக்கு எஜமான் வேலை ஆட்களை அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுங்கள் என்று கூறியது போல, இன்று உண்மையாய் தேவ வார்த்தையை போதிப்போர் எழும்ப வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும். ஒரு பிரசங்கத்தை கேட்கும் பொழுது அது உண்மையாகவே தேவ வார்த்தையா, அல்லது வெறும் மனித அறிவின் போதனையா என்பதை, விளங்கிக் கொள்ள தேவ ஒத்தாசையை நாம் நாட வேண்டும். இந்தப் பொல்லாத கடைசி கால சூழ்நிலையில் வாழும் நாம் **“மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்களுக்கு” (அப் 20:29)** விலகி நம்மை காத்துக்கொள்ள வேண்டும், சபையையும் காத்துக் கொள்ள வேண்டும். அதற்கு முதலாவது நாம் தேவ வார்த்தையை, வேதாகமத்தை, உண்மையாய் நித்தமும் தியானித்து, தேவ உறவில் நம்மை காத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தேவனிடத்திலிருந்து, ஊழியர்களின் மூலமாய் நமக்கு அருளப்படும் தேவ வார்த்தைகள், நாம் ஆவிக்குரிய வாழ்வில் இன்னும் வளர, தேவனிடத்தில் கிட்டி சேர, பூரண புருஷராக நம்மை வழிநடத்தும். ஆமென், அல்லேலூயா.

## 92. எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்

**கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார் (சங் 121:7)**




மேற்கண்ட வசனம் நம் பலரது வாழ்க்கையில் பல்வேறு நேரங்களில் நம்மை அறியாமலேயே நிறைவேறியிருக்கிறது. ஆம் தீமை நிறைந்த இப்பூமியில், நம் வாழ்க்கையில் எத்தனையோ தடவை ஆண்டவர் நம்மை தீங்குக்கு விலக்கிக் காத்திருக்கிறார். அவற்றில் சிலவற்றை நாம் பின்பு உணர்ந்து ஆண்டவரை ஸ்தோத்தரித்த வேளைகள் உண்டு. தீங்கு என்பது, ஏதோ நம்மை சரீரப் பிரகாரமாய் தாக்கக் கூடியது மட்டுமல்ல, நாம் ஆவி, ஆத்துமாவை நிலைகுலைய செய்த, எத்தனையோ தீங்குக்கு ஆண்டவர் நம்மை விலக்கி காத்து சமாதானத்தோடு வாழ செய்திருக்கிறார். ஆண்டவர் பரிசுத்த வேதாகமத்தில் பல பரிசுத்தவான்களை பல்வேறு விதங்களில் தீமைகளில் இருந்து மீட்டெடுத்திருப்பதை நாம் காணலாம். அவற்றில் சிலவற்றை நாம் பின்வருமாறு தியானிக்கலாம்.

### யோசேப்பு:

யோசேப்பின் வாழ்க்கையில் அவருக்கு உண்டான தீங்குகள் ஏராளம். ஆனால் அவை எல்லாவற்றிலும் இருந்தும், ஆண்டவர் அவரை பாதுகாத்து, இறுதியில் இஸ்ரவேல் வம்சத்தையே போஷித்து காப்பாற்றும்படி செய்தார். ஆம் தேவ ஜனமாகிய இஸ்ரவேலை முளையிலேயே அகற்ற சத்துருவானவன் செய்த திட்டத்தில், அதை எதிர்த்து ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்டவரே யோசேப்பு. இஸ்ரவேல் குடும்பத்தை தலைமையேற்று, போஷித்து நடத்துவதே, ஆண்டவர் அவருக்கு சொப்பனத்தின் மூலம் கொடுத்த தரிசனம். ஆனால் அதை அவர் தன் தகப்பனாகிய யாக்கோபு உள்பட பிறரிடம் கூறியபோது, அதை அவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால் யோசேப்பு அதை விசுவாசித்தார். அவன் சொப்பனங்கள் எப்படி நிறைவேறும் என்று பிசாசானவன் இஸ்ரவேல் குடும்பத்தாராகிய அவருடைய சகோதரர்களையே அவருக்கு விரோதமாய் எழுப்பி அவருக்கு தீமை செய்ய நினைத்த

பொழுதும், ஆண்டவர் அவரை குறித்து வைத்திருந்த திட்டமே நிறைவேறியது. குழியில் தூக்கிப்போட்ட சகோதரர்களே அவரை எகிப்துக்கு அனுப்பி வைத்தனர். **"யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்." (ஆதி 50:19,20)** என்றார்.

இங்கு நாம் கவனிக்க வேண்டியயொன்று, சத்துருவானவனால், யோசேப்பின் சகோதரர் அவருக்கு தீமைசெய்ய நினைத்தார்கள். ஆனால் அது முடியவில்லை, காரணம் அதையே தேவன் நன்மையாக முடிய பயன்படுத்தினார். ஆம் யோபுவிற்கு, தீமையைக் கொண்டு வர நினைத்து அதன் மூலம் அவர் தேவனை மறுதலிப்பார் என்று பிசாசானவன் நினைத்தான். ஆனால் அந்த தீமையையே நன்மையாக மாற்றி, அவர் வாழ்க்கையை அநேக பரிசுத்தவான்களுக்கு முன்மாதிரியாக மாற்றி, துன்ப நேரங்களில் நாம் எப்படி தேவனைப் பற்றி பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதை வெளிப்படுத்தி, இறுதியில் யோபுவை இரண்டு மடங்கு ஆசீர்வதிக்கவும் ஆண்டவர் வழி உண்டாக்கினார். ஆம், இன்றும் தேவ பிள்ளைகளுக்கு வரும் நெருக்கங்களே அவர்கள் பலுக காரணமாகும்.

யோசேப்பின் சரீரத்தில் ஏற்பட்ட துன்பத்தை / தீமையை அவர் கடந்து வந்த பொழுது, அவர் ஆவியை, ஆத்துமாவை கறைபடுத்த போத்திபாரின் மனைவி மூலம் சத்துருவானவன் செயல்பட்டான். ஆனால் அங்கும் அவர் ஆண்டவரை உறுதியாய் பற்றிப் பிடித்துக்கொண்டபடியால், **"இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்." (ஆதி 39:9)**. ஆம் இங்கு வஞ்சகமாய் யோசேப்பிற்கு தீமைசெய்ய சத்துருவானவன் போத்திபாரின் மனைவியை ஏவின பொழுதிலும், அவரோ தன் உத்தமத்தில் உறுதியாய் இருந்தார், இதுவும் அவருக்கு நன்மையாகவே மாறியது. காரணம் இது அவரை போத்திபாரின் வீட்டிலிருந்து தேவ திட்டத்தின்படியே, அவர் எங்கு சென்று யாரை சந்திக்க வேண்டுமோ அதற்கு நேராய் நடத்தியது. இதை அழகாக அதே அதிகாரத்தில் **ஆதி 39:21 ஆம்** வசனத்தில் நாம் காணலாம், **"கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து, சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார்."**. இங்கு நாம் கவனிக்க வேண்டிய வார்த்தை "கர்த்தரோ", ஆம் யாரும் அவருடன் இல்லை தன் மேல் விழுந்த வீண்பழிக்கு அவர் சொன்ன விளக்கத்தை யாரும் நம்பவுமில்லை. ஆனால் **"கர்த்தரோ யோசேப்போடே இருந்தார்"**. இதுவே அவரை பாதுகாத்து, இதன் பின்பு யோசேப்பு சிறைச்சாலையில் இருந்தாலும், தன் தரிசனத்துக்கும் தான் தற்போது இருக்கும் இடத்திற்கும் சற்றும் சம்பந்தம் இல்லாமல் இருந்தாலும் சிறைச்சாலைக்குள்ளும் தன் பணியை உண்மையோடு செய்தார்.

பானபாத்திரக்காரன் யோசேப்பின் மூலமாய் நன்மை பெற்ற போதும், யோசேப்புத்தானே வேதனையோடு கூட, **ஆதி 40:14,15** வசனங்களில் **"இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி, நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும். நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை"** என்று கூறியபொழுதும், **ஆதி 40:23** கூறுகிறது **"ஆனாலும் பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டான்."** என்று. ஒருவேளை மனதளவில் யோசேப்பிற்கு இது மிகுந்த வேதனையை கொடுத்திருக்கும். ஆண்டவர் பானபாத்திரக்காரனின் சொப்பனத்தை தனக்கு வெளிப்படுத்துவதன் மூலம். தன்னை சிறைச்சாலையிலிருந்து மீட்பார் என்று

நினைத்திருந்தார். ஆனால் அதையும் ஆண்டவர் சற்று தாமதப்படுத்தி இறுதியில் அதை நன்மையாக முடிய பண்ணினார். ஆம் அந்த இரண்டு வருட இடைவெளி யோசேப்பு ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும், மனதளவிலும் மிகுந்த சோர்வுக்குள்ளாக்கி இருக்கலாம். ஆனால் கர்த்தரோ யோசேப்போடே இருந்தார். இதையெல்லாம் தன் வாழ்க்கையில் முப்பது வயதிற்குள்ளாகவே அவர் கடந்து முடித்திருந்தார். அதனால்தான் அவரால், **ஆதி 50:20 இல் "நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்."** என்று தைரியமாக கூற முடிந்தது.

### தாவீது:

யோசேப்பின் வாழ்க்கை காலகட்டத்தில் அவருடைய 17 வயதிலிருந்து 30 வயது வரை அவர் வாழ்வில் தேவன் இடைப்பட்டு செய்த காரியத்தை நாம் வேதத்தில் காண்கிறோம். ஆனால் தாவீதின் வாழ்க்கையோ, அவர் சாமுவேலினால் சிறு வயதில் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட நாள் முதல் அவருடைய முதிர் வயது வரைக்கும், ஆண்டவர் பல்வேறு நேரங்களில் தாவீதின் வாழ்வில் ஏற்பட்ட தீமைகளுக்கு அவரை எப்படி விலக்கி காத்தார் என்பதை வேதாகமம் அழகாக, ஆழமாக விளக்குகிறது. **1 சாமுவேல் 17ஆம்** அதிகாரத்தில் கோலியாத் என்றும் தீமை இஸ்ரவேலை அழிக்க நினைக்கையில், தாவீது அத்தீமையை அழிக்க கர்த்தர் தனக்கு பெலனளிப்பார் என்று விசுவாசித்தார். இங்கு தாவீது, **1 சாமு 17:37** வசனத்தில், **"பின்னும் தாவீது: என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான்; அப்பொழுது சவுல் தாவீதைப் பார்த்து: போ, கர்த்தர் உன்னுடனேகூட இருப்பாராக என்றான்."** ஆம் புத்தி இல்லாத இந்த துஷ்ட மிருகங்கள் எப்படியோ, அப்படியே கோலியாத்தும் தீமை செய்ய வருகிறான், ஆனால் கர்த்தர் தனக்கு ஜெயம் கொடுப்பார் என்று தாவீது விசுவாசித்தார். அதன்படியே வெற்றியும் பெற்றார்.

ஆனால் தீமை அத்தோடு முடியவில்லை யாருக்கு நன்மை செய்தாரோ, சவுலாகிய அவரே தாவீதுக்கு தீமை செய்ய நினைத்தார். ஒரு விலங்கை வேட்டையாடுவது போல் சவுல் தாவீதை துரத்தினார். சங்கீதம் 18ஆம் அதிகாரத்தின் தலைப்பு கூறுகிறது "கர்த்தருடைய தாசனாகிய தாவீது இந்த பாட்டின் வார்த்தைகளை கர்த்தர் தன்னை தன்னுடைய எல்லா சத்துருக்களின் கைக்கும் சவுலின் கைக்கும் நீங்கலாக்கி விடுவித்த நாளிலே பாடினது" என்று. ஆம் சவுல் மட்டுமல்ல இன்னும் அனேக சத்துருக்களும் அவருக்கு இருந்தனர். வாழ்வின் பல்வேறு கட்டங்களில் பலரோடு போராட வேண்டியிருந்தது. ஆனால் அவர் கர்த்தருடைய தாசனாய் இருந்தபடியால், ஆண்டவர் அவரை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காத்தார். இதை நாம் சங்கீத புத்தகத்தில் அவருடைய சங்கீதங்களில் காணலாம்.

ஒருபுறம் சத்துக்களால் உண்டான போராட்டம் இருந்தது, மறுபுறம் அவரோடு இருந்த ஜனங்களே துன்பம் உண்டான பொழுது அவருக்கு எதிராக மாறினர். **1 சாமுவேல் 30ஆம்** அதிகாரத்தில் தாவீதும் அவருடைய மனுஷரும் போருக்குச் சென்றிருந்த நேரத்தில், அமலேக்கியர் தாவீது இருந்த ஊருக்கு வந்து, அதை சுட்டெரித்து அவருடைய மனைவி பிள்ளைகளையும், அவருடைய மனுஷரின் மனைவி பிள்ளைகளையும் மற்றும் அவருக்கு உண்டான எல்லாவற்றையும் கொள்ளையடித்துச் சென்ற பொழுது, **1 சாமு 30:4** கூறுகிறது **"அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள். ", மேலும் 1 சாமு 30:6 கூறுகிறது " தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்."** ஆம், வாழ்வின் பல போராட்டத்தின் நடுவில் எதிர்பாராத இப்படியொரு பிரச்சனை அவரை

நிலைகுலையச் செய்தது. அவருக்கு ஆதரவாய் இருக்க வேண்டியவர்கள் தங்கள் துக்கத்தினால் அவரையே எதிர்த்தனர்.

எந்த ஒரு மனிதனும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் திடனற்றுப்போவான். ஆனால் தாவீதோ தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டார். ஆண்டவர் இப்படிப்பட்ட தீங்கான சூழ்நிலையில் இருந்தும் அவரை தப்புவித்தார். **1 சாமு 30:18,19** கூறுகிறது, **"அமலேக்கியர் பிடித்துக்கொண்டுபோன எல்லாவற்றையும், தன்னுடைய இரண்டு மனைவிகளையும், தாவீது விடுவித்தான். அவர்கள் கொள்ளையாடிக்கொண்டுபோன எல்லாவற்றிலும், சிறியதிலும் பெரியதிலும், குமாரரிலும், குமாரத்திகளிலும், ஒன்றும் குறைபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக்கொண்டான்."** என்று. ஆம் ஆண்டவருக்குள்ளாய் தன்னைத் திடப்படுத்திக் கொண்டவர், மற்றவர்களையும் திடப்படுத்தி, அமலேக்கியருடன் போரிட்டு எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டார் இப்படியாக பல்வேறு துன்ப நேரங்களில், தீங்குண்டான வேளைகளில் ஆண்டவர் அவரை தப்புவித்தார். இறுதியாக அவருடைய சொந்த மகனாலேயே அவருக்கு தீங்கு நேர்ந்தது. **2 சாமு 15:13-16** வசனங்களில் தாவீது தன் சொந்த மகனுக்கு பயந்து உயிர்பிழைக்க வயதான காலத்தில் ஓட வேண்டி இருந்தது. ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஆண்டவர் அவரை காப்பாற்றி அவரை மறுபடியும் ராஜாவாய் நிலைநிறுத்தி, சாலொமோன் அவருடைய ஸ்தானத்தில் ராஜாவாகவும், கர்த்தருடைய ஆலயம் கட்டப் படுவதற்கான எல்லாவற்றையும் சேகரித்து வைத்து அதைத் தன் மகனாகிய சாலொமோன் இடம் ஒப்படைக்கவும் கிருபை செய்தார். தன் வாழ்நாளில் பல்வேறு தீங்குகளை கண்டபோதிலும் அவருடைய முடிவு சமாதானமாய் இருந்தது.

### பவுல்:

இறுதியாக அப்போஸ்தலனாகிய பவுலுக்கு உண்டாகிய தீங்குகளில் ஆண்டவர் எப்படி அவரை காத்தார் என்பதை பின்வருமாறு காண்போம். பவுல் அடைந்த துன்பங்களை அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இருந்து அவர் எழுதிய நிருபங்கள் வரை அனைத்திலும் காணலாம். அவருக்கு பல்வேறு விதங்களில் பல்வேறு நேரங்களில் உண்டான தீங்குகளை அவரே **2 கொரிந்தியர் 11:23-33** வசனங்கள் வரை பட்டியலிடுகிறார். சாட்டையால் பட்ட அடிகள், கல்லெறியப்படுதல், கப்பல் சேதத்தில் கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் இருந்தது என்று சரீர அளவில் பல துன்பங்கள் அவருக்கு உண்டாயிற்று. இதைத்தவிர கள்ளரால் வந்த மோசங்கள், சுய ஜனங்களால், அந்நிய ஜனங்களால், கள்ளச்சகோதரர்களால் உண்டான மோசங்கள் என்று பலவிதங்களில் சரீரத்திலும், மனதளவிலும் தீமைகள் உண்டான பொழுதிலும், ஆண்டவர் இவை எல்லாவற்றிலும் இருந்து அவரை காத்தார்.

**அப் 14:19** கூறுகிறது **"பின்பு அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள்."** இங்கு நாம் காணும் இக்கொடிய சம்பவம், எப்படி **அப்போஸ்தலர் 7 ஆம்** அதிகாரத்தில் ஸ்தேவான் கல்லெறியப்பட்டு மரித்தாரோ, அப்படிப்பட்ட ஒரு நிலையே இப்பொழுது அப்போஸ்தலனாகிய பவுலுக்கு உண்டாயிற்று. ஆனால் அடுத்த வசனம் கூறுகிறது **"சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான்." (அப் 14:20)**. குற்றுயிராய் அடிபட்டு மரித்துப்போன நிலையிலிருந்த அவர், தூக்கத்தை விட்டு எழுந்திருப்பது போல் எழுந்து நடந்து, மறு நாளிலேயே பிரயாணம் பண்ண புறப்பட்டார். இங்கு ஆண்டவர், அவருடைய சரீரத்தில் உண்டான தீங்கை எப்படியாக குணமாக்கி, அவரை இப்படிப்பட்ட கொடிய சூழ்நிலையில் இருந்தும் தப்பித்தார் என்பதை காணலாம். **அப்போஸ்தல 28 அதிகாரத்திலும்** விஷப்பூச்சி அவரை கடித்தபொழுதும், அவருக்கு ஒரு தீங்கும் ஏற்படவில்லை. இவையெல்லாம் சத்துருவினால் உண்டாயிருந்தாலும், ஆண்டவர் அவரை எல்லாத் தீங்குக்கும்

விலக்கிக் மீட்டு, அவர் மூலமாய் தம் திட்டப்படியே நடைபெற வேண்டிய ஊழியத்தை நிறைவேற்றி முடித்தார்.

எனவே பல கொடிய தீங்குகள் நிறைந்த இந்த கடைசிகால உலகில் வாழ்கின்ற நாமும், ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீர பிரகாரமாகவும் நமக்கு உண்டாகும் சகல தீங்குக்கும் ஆண்டவர் நம்மை விலக்கிக் காப்பார் என்பதை விசுவாசிக்க வேண்டும். உண்மையில் இந்த கொரோனா நோயினால் சரீரளவிலும், மனதளவிலும், பொருளாதார ரீதியாகவும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் பலர் தங்களுக்கு அருமையானவர்களை இழந்து திக்கற்றவர்களாக உள்ளனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆண்டவர் மட்டுமே ஒவ்வொருவரையும் இத்தீங்கிலிருந்து, அதனாலுண்டான விளைவில் இருந்து மீட்டெடுத்து புது வாழ்வு தர முடியும். எனவே ஆண்டவரை நம்பி தாவீதைப் போல கர்த்தருக்குள் நாம் நம்மை திடப்படுத்திக் கொண்டு, மற்றவர்களையும் திடப்படுத்தி இதன்மூலம் ஆண்டவரின் அன்பையும், வல்லமையையும் நாம் உணர்ந்து மற்றவர்களுக்கும் உணர்த்தி, அவரே எல்லா தீங்குக்கும் நம்மை விலக்கிக் காத்து நித்திய ஜீவ கரையில் சேர்ப்பார் என்பதை பறைசாற்றுவோமாக, ஆமென் அல்லேலூயா.

# 93. மறைவானது ஒன்றுமில்லை

**அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது (எபி 4:13)**




கர்த்தருக்கு மறைவானது ஒன்றுமில்லை என்று வேதாகமம் கூறுகிறது. ஆம் அவருக்கு மறைவானது, தெரியாதது, உணர்ந்து கொள்ள முடியாதது என்று எதுவும் இல்லை. யாவும் அவருக்கு முன்பாக வெளியரங்கமாய் இருக்கிறது. இதற்கு காரணம் அவரே எல்லாவற்றையும் சிருஷ்டித்து ஆண்டு நடத்துகிறார். ஒவ்வொரு தனிமனித வாழ்வை குறித்தும், பூமியிலுள்ள எண்ணிறைந்த ஜீவராசிகளின் ஒவ்வொரு அசைவை குறித்தும், அண்ட சராசரங்களின் இரகசியங்களையும் அவர் அறிவார். நட்சத்திரத்தை பெயரிட்டு அழைக்கும் தேவன், தன்னை நோக்கிக் கூப்பிடுகிற சிறு காக்கை குஞ்சுகளின் சத்தத்தையும் கேட்கிறார் **(லூக் 12:24)**. சமுத்திரத்தில் விளையாடி மகிழும் திமிங்கலங்கள் அவரை நோக்கி பார்க்க அவைகளை போஷிக்கிறார் **(சங் 104:25-28)**. இன்றைக்கு தோன்றி நாளைக்கு மறைந்து போகிற காட்டு புஷ்பங்களை அழகாய், நேர்த்தியாய், வாசனையாய் மலர செய்கிறார் **(லூக் 12:27)**.

இவை எல்லாவற்றையும் நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமானால், ஒவ்வொரு நொடியும் ஜீவனுள்ள மற்றும் ஜீவன் இல்லாத எத்தனையோ காரியங்களை, முக்காலத்தையும் அறிந்தவராய் தம் சித்தபடியே ஆண்டு நடத்தும் தேவனின் அளவுக்கு அடங்காத வல்லமையை நாம் காணலாம். ஆம், சகலவற்றையும் அவர் அறிவார், அறிவது மாத்திரமல்ல அதைத் தம் சித்தப்படியே நடத்துகிறவரும் அவரே. எனவே ஒவ்வொரு நாளும் பூமியில் நடக்கும் எத்தனையோ கொடுமையான காரியங்களையும், மனிதர்களுடைய பொல்லாத இருதயத்தின் செய்கைகளையும், அவர் அறிகிறவராய் இருக்கிறார். முழு உலகத்தையும் அச்சுறுத்திவரும் இக்கொடிய கொரோனா, எப்படி தோன்றியது என்பதையும், எப்பொழுது முடிவடைய வேண்டும் என்பதையும் அவர் அறிவார். அவர் அறிவது மட்டுமல்ல அதை செயல்படுத்துகிறவரும் அவரே. இப்படியிருக்க நம் வாழ்வில் நாம் விடை காணா எத்தனையோ கேள்விகள் இருக்கிறது. நம் வாழ்க்கையில் ஏன் இப்படிப்பட்ட துயர சம்பவங்கள் அனுமதிக்கப்பட்டது, ஏன் இப்படிப்பட்ட கஷ்ட சூழ்நிலைகளைக் கடந்து போகிறோம், இவையெல்லாம் எப்போது முடிவுக்கு வரும் என்று அனேக கேள்விகள் நம்மிடம் உண்டு. என்னுடைய சொந்த அனுபவத்திலும் இதைப் போன்ற எத்தனையோ கேள்விகள் உண்டு. தேவன் இவையெல்லாவற்றையும் நிச்சயமாய் மாற்றுவார். ஆனால் அது எப்போது நடைபெறும் என்பது நமது வாஞ்சையாகும்.

பேதுருவின் மாமி கடும் ஜுரமாய் படுக்கையில் கிடந்த பொழுது அவளை எழுப்பின தேவன் **(லூக் 4:38,39)**, யவீரு மகள் மரித்து அடக்கம் செய்ய ஆயத்தமாகும் வேளையில்

செயல்பட்டார் **(லூக் 8:49-56)**. நாயீனூர் விதவையின் மகன் அடக்கம் செய்ய எடுத்துக்கொண்டுபோக படுகையில் உயிர்ப்பித்தார் **(லூக் 7:11-16)**. லாசருவையோ கல்லறையில் வைத்து, நான்கு நாள் முடிந்த பின்னர் எழுப்பினார் **(யோ 11:38-45)**. இங்கு எல்லாருமே சுகத்தை / ஜீவனைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் அது எப்பொழுது என்பதே கேள்வி. எந்த அளவுக்கு ஆண்டவர் நம்மை சில நேரங்களில் காத்திருக்க செய்வார் என்பதை அறியோம். ஆனால் அவர் அதை அறிவார். எந்த அளவுக்கு அல்லது, எந்த காலகட்டம் வரை நாம் அந்தத் துன்பத்தை சகிக்க வேண்டும் என்பதைப் பொறுத்தே நம் ஒவ்வொருவரின் அனுபவமும் மாறுபடுகிறது. ஆனால் அவரோ மாறாதவர், நிச்சயம் இவையெல்லாவற்றிற்கும் ஒரு முடிவுண்டாக்குவார், விடுதலை தருவார். இக்கொடிய கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு, சரீரத்தில் பாடனுபவித்து மீண்டோர் உள்ளனர். மரணப் போராட்டம் வரை போராடி மீண்டோர் உள்ளனர். இன்னும் சிலர் மரித்தே விட்டனர். இதனால் சிலருக்கு சில நாள் போராட்டம், சிலருக்கு மரண போராட்டம், சிலரோ அனாதைகளாக்கப்பட்டு நிற்கதியாய் நிற்கின்றனர். இன்னும் சிலர் கொரோனாவால் சரீர அளவில் பாதிக்கப்படாவிட்டாலும், பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு, வேலையை இழந்து, தொழிலை இழந்து, வாழ்வாதாரத்தை இழந்து, அதனால் வாடுவோர் உண்டு. இதனிமித்தம் மரணத்தை சந்தித்து, நிற்கதியாய் நிற்கும் மக்களும் உண்டு.

இவை எல்லாவற்றையும் நாம் காணும் பொழுது, அன்று இயேசு லாசருவை எண்ணி கண்ணீர் விட்ட பொழுது, **“அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்! அவர்களில் சிலர்: குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்.“ (யோ 11:36,37)**, ஆம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு சேர்ந்து நம்முடைய துயரமிகுதியால் நாம் அழும் பொழுது அவரும் அழுகிறார். ஆனால் கண்ணீர்விடும் அவரே, இன்னும் சில நேரத்தில் கண்ணீரை ஆனந்த களிப்பாய் மாற செய்வார். எனவே நம்முடைய துன்பங்கள், துயரங்கள், ஏக்கங்கள், வேதனைகள் தேவைகள் எதுவாயிருந்தாலும், அவை எல்லாவற்றையும் அவர் அறிவார், அது எந்த அளவில் நம்மில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் அவர் அறிவார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. அன்று பேதுருவின் மாமியை சுகப்படுத்தின் தேவன், யவீருவின் மகளை மரணத்திலிருந்து எழுப்பின கர்த்தர், நாயீனூர் விதவையின் அழுகையை ஆனந்தக் களிப்பாய் மாற செய்த ஆண்டவர், லாசருவை கல்லறையில் நாறின நிலையிலிருந்தும் மீட்ட நம் மீட்பராகிய இயேசுகிறிஸ்து, நிச்சயம் நம் அழுகுரலையும் கேட்கிறார், அவரே அதை ஆனந்தக் களிப்பாய் மாற செய்வார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை, ஆமென், அல்லேலூயா.

## 94. சகலமும் நன்மைக்கு ஏதுவாக

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோ 8:28)**




இங்கு நாம் காணும் ஒரு காரியம், நம் வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதாகும். இதை நாம் புரிந்துகொள்ள, மாம்சத்தின்படி சிந்திப்போமானால், நம் வாழ்க்கையில் எத்தனையோ துன்பங்களை, இழப்புகளை, காயங்களை, துரோகங்களை நாம் கண்டிருக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் தான் பல முறை அனுபவித்த துன்பங்களை, **2 கொ 11:23-28** வசனங்களில் விளக்குகிறார். இவையெல்லாம் எப்படி நன்மையானதாக இருக்க முடியும் என்று நாம் சிந்திக்கலாம். யோசேப்பின் வாழ்வில் கூட பலமுறை அவர் இன்னல்களை அநுபவித்தார். சொந்த சகோதரரால் வந்த தீமைகள், உண்மையாய் இருந்தும் வந்த வீண் பழி என்று பல காரியங்கள் உண்மையில் தீமையானதாகவே இருந்தது. உண்மையில் நம் வாழ்வில் நாம் சந்தித்த இழப்புகள் வேதனையானதும், துன்பம் தரக்கூடியதும் ஆகும்.

கடந்த இரண்டு வருடங்களாக இக்கொடிய கொரோனாவினால் ஏற்பட்ட பாதிப்புகள் கொஞ்சமல்ல. அவை எல்லாம் அநேகர் வாழ்வில் துன்பத்தை கொண்டு வந்ததேயொழிய நன்மை எதுவும் கொண்டு வரவில்லை. தேவ பிள்ளைகளும், மேலும் அநேக ஊழியர்களும், ஊழியங்களும் கூட இக்கொரோனாவினால் பாதிக்கப்பட்டது. இவையெல்லாம் இப்படியிருக்க சகலமும் நன்மைக்கே என்பது நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கலாம். ஆனால் நாம் இங்கு இரண்டு விஷயங்களை கவனிக்க வேண்டும். ஒன்று அவருடைய தீர்மானம், இரண்டு அவரிடத்தில் நாம் அன்பு கூர்வது. ஆம் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்ட நமக்கு, நம் வாழ்வில் நடப்பதெல்லாம் ஏதோ இவ்வுலக தற்கால சூழ்நிலையினால் நடப்பதல்ல. இவை எல்லாவற்றையும் கர்த்தராகிய ஆண்டவர் ஏற்கனவே தம்முடைய தீர்மானத்தின்படி நம் வாழ்க்கையில் முன் குறித்துவிட்டார். மேலும் நம் வாழ்வில் நடந்த வேதனையான காரியங்கள் நன்மையானதாக இல்லாதிருந்தும், அவை எல்லாம் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

யோசேப்பை அவருடைய சகோதரர் குழியில் தள்ளியது, அவரை எகிப்திற்கு விற்றது ஆகியவற்றினால் தாயை இழந்த அவர் தகப்பன் அன்பையும் பெற முடியாமல், இளம் வயதில் அடிமை வாழ்க்கை வாழ நேரிட்டது ஒரு துன்பகரமான காரியமே. ஆனால் அந்தத் துன்ப சூழ்நிலையையும், தேவன் அவர் வாழ்வில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நன்மையான காரியத்திற்கு ஏதுவாக மாற்றினார். இதை யோசேப்பே பிற்காலத்தில் உணர்ந்து அறிக்கையிடுகிறார். **"நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்." (ஆதி 50:20).** ஆம் அது அவருக்கு மாத்திரமல்ல வெகு ஜனங்களுக்கு, நன்மைக்கு ஏதுவாக அமைந்தது. ஆனால் இவை எல்லாவற்றிலும் தேவனுடைய அநாதி தீர்மானம் மற்றும் நாம் அவரிடத்தில் அன்பு கூருவதும் இன்றியமையாததாகும். தேவனுடைய தீர்மானம் இல்லாமல், நம்முடைய அறீவினத்தினால் தீமை உண்டானாலும் அல்லது தீர்மானத்தின்படி வாழ, அவரிடத்தில் அன்புகூறமுடியாமற் போனாலும், அவை நன்மைக்கு ஏதுவாக மாற வழியில்லை. ஏனெனில் **1 யோ 5:3** கூறுகிறது **"நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்"** என்று.

ஆனால் நாம் மனந்திரும்பி தேவனிடத்தில் அவருடைய தீர்மானத்தின்படி வாழ நம்மை முழுமனதோடு அர்ப்பணிக்கும் பொழுது, கடந்த காலங்களில், நம் வாழ்வில் தீமையாய் நடந்த காரியங்களையுங்கூட, நமக்கு நன்மைக்கு ஏதுவாக மாற்ற தேவனால் கூடும். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று வேதம் தெளிவாக கூறுகிறது. இதை நாம் ரூத்தின் வாழ்க்கையில் அவளுடைய கடந்த கால இழப்புகளை, எதிர்கால வாழ்வின் நன்மைக்கு ஏதுவாக தேவன் மாற்றினதை காணலாம். அதற்கு காரணம் **ரூத் 1:16** இல் அவள் எடுத்த தீர்மானமேயாகும். **"அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்."** என்று அவள் எப்பொழுது அறிக்கையிட்டாளோ, அப்பொழுதே அவள் **"உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்." (ரூத் 2:12)** என்ற ஆசிர்வாதத்தை போவாஸ் மூலமாகவே பெற்றுக்கொண்டாள். மக்லோன், கிலியோன் ஆகியோரின் இழப்பு, ஓர்பாள் மற்றும் ரூத்தின் வாழ்வில் துன்பமான காரியமானாலும், அவளுடைய தீர்மானத்தின்படி, போவாஸ் மூலமாய் தாவீதும் தாவீது மூலமாய் இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவும் இவ்வுலகில் வர, அதற்கு தன்னை தேவனுக்கு அர்ப்பணித்த ரூத்தின் வாழ்க்கையில், அவளுடைய இழப்பு போவாஸின் மூலமாய் நன்மைக்கு ஏதுவாக மாற்றப்பட்டது.

**"போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான்" (மத் 1:5)** என்று ஆண்டவருடைய வம்ச அட்டவணையில் அவளுடைய பெயர் இடம் பெற்றது. மேலும் ரூத் என்ற பெயரிலேயே வேதபுத்தகத்தில் அவளுடைய சரித்திரம் எழுதப்பட்டது. இவையெல்லாம் ரூத்தின் வாழ்க்கையில் தீமையான காரியங்கள் நடந்திருந்தும், நடந்த காரியங்கள் யாவும் நன்மைக்கு ஏதுவாகவே தேவனால் மாற்றப்பட்டதை நமக்குத் தெளிவாகக் காண்பிக்கிறது. ஆனால் சொந்த தீர்மானத்தின்படி சென்ற ஓர்பாளின் வாழ்வோ, அதற்கு பிறகு காணாமல் போயிற்று. எனவே இக்கொடிய கொரோனா துன்ப சூழ்நிலை மத்தியில், இன்னும் நம் தனிப்பட்ட வாழ்வில் அனுபவித்த அனுபவிக்கிற துன்பங்கள் மத்தியில், இவை எல்லாவற்றையும் நன்மைக்கு ஏதுவாக மாற்ற தேவனால் முடியும். எனவே நம் வாழ்க்கை இப்படியிருக்கிறதே என்றோ, இழந்து போன காரியங்களை குறித்தோ கலங்காமல், நம் வாழ்வில் தேவ தீர்மானம் எது என்பதை உணர்ந்து, அதற்கு கீழ்படிந்து, அவரிடத்தில் அன்புகூறுவோமானால், சகலவற்றையும் அது நடந்து முடிந்த, அல்லது

நடக்கின்ற, அல்லது நடக்கப் போகிற எதுவாயிருந்தாலும் அவை எல்லாவற்றையும் நன்மைக்கு ஏதுவாக அவர் மாற்றுவார். ஆமென், அல்லேலூயா.

## 95. உண்மையுள்ளவனென்றெண்ணி

**என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி** (1 தீமோ 1:12)




இங்கு நாம் கவனிக்க வேண்டிய சொல் **உண்மையுள்ளவனென்றெண்ணி**. இங்கு ஆண்டவர் நம்மிடம் நம்பிக்கை வைத்து, அவர் கொடுக்கும் வேலையை நாம் உண்மையாய், உத்தமமாய், செய்து முடிப்போம் என்று எண்ணி நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார். இங்கு கவனிக்க வேண்டிய சத்தியம் என்னவென்றால், அவர் நம் ஒவ்வொருவருடைய முக்காலத்தையும் அறிந்திருக்கிறார். எனவே எதையும் எப்படி நடக்கும் என்று எண்ணி அவர் செய்யவேண்டியதில்லை. காரணம் நடக்கும் சகலமும் அவர் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது. ஆகிலும் அவர் நம்மிடம் தம்முடைய சித்தத்தை, ஊழியத்தை நிறைவேற்ற நம்மீது தம்முடைய கிருபையை பொழியும் பொழுது நாம் அதை நிறைவேற்றி முடிப்போம் என்ற எதிர்பார்ப்போடு அதை நமக்கு தருகிறார். ஆம் அவர் சர்வ வல்லவர் நாம் சரியான நேரத்திற்குள் செயல்படாவிட்டால் வேறு ஒருவரை கொண்டு ஆண்டவரால் அந்த நேரத்திலேயே செய்து முடிக்க முடியும். ஆகிலும் நாம் அதை செய்ய அவர் எதிர்பார்க்கிறார். அவருடைய எதிர்பார்ப்பின்படி செயல்பட்டால் அதனால் நமக்கு தான் நன்மை. செயல்படாவிட்டால் அதனால் நமக்கு தான் நஷ்டமேயொழிய அவருக்கு இல்லை.

ஆகிலும் இந்த மண்பாண்டமாகிய சரீரத்தில் அவருடைய கிருபை தயவைக் கொண்டு நம்மை பலப்படுத்தி, என் கிருபை உனக்குப் போதும் என்று சொல்லி, தம் சித்தத்தை நாம் உண்மையாய் செய்ய அவர் எதிர்பார்க்கிறார். ஆம் அவருடைய நம்பிக்கைக்கு உரியவர்களாக நாம் நடக்க அவர் எதிர்பார்க்கிறார். ஏதோ நாம் ஆண்டவரை விசுவாசிக்கிறோம், அவரிடத்தில் அன்பு கூறுகிறோம், அவருடைய ஊழியத்தை செய்கிறோம், அவரை முழு மனதோடு ஆராதிக்கிறோம் என்பதெல்லாம் நம்மிடத்தில் காணப்பட்டாலும், அவர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது அவருக்கு உண்மையாய் இருப்பதையே. இன்று நாம் நம்மை சற்று ஆராய்ந்து பார்ப்போமானால், அநேகர் கூடி ஆராதிக்கின்றனர், காணிக்கைகளை வாரி வழங்குகின்றனர், உற்சாகத்தோடு பல ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடுகின்றனர்,

ஆனால் உள்ளத்தில் உண்மையான கீழ்ப்படிதல் இருக்கின்றதா என்பதே முக்கியம். நம்மை உண்மையுள்ளவர்கள் என்று எண்ணி தேவன் நம்மிடம் இதை ஒப்படைத்திருக்கிறாரே என்ற பாரம் நம்மிடம் காணப்பட வேண்டும். அப்பொழுது நாம் எதை எவ்வளவு உண்மையாய் நேர்த்தியாய் செய்ய முடியுமோ, அவ்வளவு உண்மையாய் நேர்த்தியாய் செய்வோம். மேலும் நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு நாளும் நாம் நம்முடைய உண்மையை காத்துக்கொள்ள ஜாக்கிரதையாக இருப்போம்.

ஆதி அப்போஸ்தலர்கள் அப்படிப்பட்ட எண்ணத்தின்படியே தங்களுடைய ஊழியத்தை செய்தனர். ஆதி திருச்சபை இப்படிப்பட்ட உண்மையையே காத்துக்கொண்டு விசுவாசத்தில் நிலைத்திருந்தது. அந்த உண்மையில் இருந்து சற்று பின் வாங்கினாலும் அனனியா, சப்பீராள் நிலைமையே ஏற்பட்டது. **அப் 5:11 கூறுகிறது "சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று."** நாம் இவ்வளவு உண்மையாய் இருக்க வேண்டுமா என்ற எண்ணம் அனைவரிடமும் காணப்பட்டது. அதனால் **அப் 5:13 கூறுகிறது, "மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள்."** என்று. ஆம் ஆண்டவர் நம்மிடம் உண்மையுள்ளவர்கள் என்று எண்ணி எதை ஒப்படைத்திருக்கிறாரோ, அதை நாம் ஜாக்கிரதையாய் காத்துக் கொள்ள வேண்டும். நாம் கிருபையாய் பெற்ற ஆவி, ஆத்தும, சரீர இரட்சிப்பை காத்துக் கொள்வதற்கு, நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் அவருடைய உண்மையை காத்துக்கொள்ள வேண்டும்.

ஆனால் இந்த கடைசி காலத்தில் ஆண்டவர் என்னை உண்மையுள்ளவன் என்று எண்ணி எனக்கு இந்தக் கிருபையை கொடுத்திருக்கிறாரே என்ற நடுக்கம் பலரிடம் காணப்படுவதில்லை. அதனால் ஊழியத்தை செய்கிற, சபையை நடத்திருகிற பலர் ஏனோதானோ என்று தங்கள் இஷ்டப்படி செய்கின்றனர். வேதம் கூறுகிறது **"என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்." (எண் 12:7)**, என்று தேவனே அவரை குறித்து சாட்சிக் கொடுத்தார். மேலும் யோசேப்பு அந்நிய தேசத்தில் அடிமையாய் இருந்த நிலையிலும் தன்னுடைய உண்மையை எல்லாவிதத்திலும் காத்துக் கொண்டார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய சத்தியம் **"கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து" (ஆதி 39:21)** என்பதாகும். ஆம் தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடு உண்மையாய் இருக்கிறவர்க ளோடு ஆண்டவர் எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் இருக்கிறார். எனவே துன்பத்தை கண்டு, துயரத்தை கண்டு சோர்ந்து போக வேண்டியதில்லை. எந்த அளவுக்கு துன்பம் உண்டாகிறதோ, அதற்கும் மேலாக நம்முடைய உண்மையை காத்துக்கொள்ள கர்த்தர் உதவி செய்வார். ஆனால் இன்றோ சிலரை திருப்திப்படுத்த, தனது சொந்த வீட்டார் சுகமாய் வாழ, தங்கள் உண்மையை சிலர் காற்றில் பறக்க விடுகின்றனர். நம்முடைய தேவனாகிய கர்த்தர் திரும்பி வரும் பொழுது நம்முடைய எந்த காரியத்தை, செய்கையை காட்டிலும் நாம் எந்த அளவு அவருக்கு உண்மையாய் இருந்தோம் என்பதையே அவர் எதிர்பார்க்கிறார்.

காரணம் **மத் 25:21 கூறுகிறது "அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்."** என்று. மேலும் **நீதி 28:20 கூறுகிறது "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்;"** என்று. சிறிதளவு கூட உண்மை இல்லாத மனிதர்கள் மத்தியில், அன்று நோவாவிடம் தாம் கூறியதை உண்மையாய் செய்வார் என்று அவரை தெரிந்துகொண்ட தேவன், தாம் நிறைவேற்றின ஊழியத்தை தொடர்ந்து உண்மையாய் செய்வார்கள் என்று அன்று அப்போஸ்தலரை தெரிந்துகொண்ட ஆண்டவர், இன்று நம்மையும் அப்படியே தெரிந்து கொண்டிருக்கிறார். ஒருவேளை

உண்மையின் பாதையில் பல துன்பங்களும், ஏளனங்களும் ஏற்படலாம். நம்மோடு இணைந்து செயல்பட வேண்டியவர்களே, சொந்த வீட்டாரே உண்மையிலிருந்து வழுவி போகலாம். ஆனால் இறுதிவரை நாம் ஆண்டவருக்கு உண்மையாய் இருப்போமானால், நம் எஜமானின் சந்தோஷத்திற்குள் பிரவேசித்து, என்றென்றும் அவரோடு நித்திய வீட்டில் இருப்போம். ஆமென், அல்லேலூயா.

# 96. உமது கரத்திலே வாங்கி

**இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம். (1 நாளா 29:14)**




மேற்கண்ட வசனம் தாவீது ராஜா கர்த்தருக்காக ஆலயத்தை கட்ட சாலொமோனையும், மற்ற சபையாரையும் ஊக்கப்படுத்தின பொழுது கூறிய வார்த்தைகள் ஆகும். தாவீது இராஜா, **1 நாளா 29:1,2** வசனங்களில் **"பின்பு தாவீதுராஜா சபையார் எல்லாரையும் நோக்கி: தேவன் தெரிந்துகொண்ட என் குமாரனாகிய சாலொமோன் இன்னும் வாலிபனும் இளைஞனுமாயிருக்கிறான்; செய்யவேண்டிய வேலையோ பெரியது; அது ஒரு மனுஷனுக்கு அல்ல, தேவனாகிய கர்த்தருக்குக் கட்டும் அரமனை. நான் என்னாலே இயன்றமட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று பொன்வேலைக்குப் பொன்னையும், வெள்ளிவேலைக்கு வெள்ளியையும், வெண்கலவேலைக்கு வெண்கலத்தையும், இரும்புவேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு மரத்தையும், பதிக்கப்படத்தக்க காந்தியுள்ள கற்களையும், பலவருணக் கற்களையும், விலையேறப்பெற்ற சகலவித ரத்தினங்களையும், வெண்கற்பாளங்களையும், கோமேதக முதலிய கற்களையும் ஏராளமாகச் சவதரித்தேன்."** என்று கூறுகிறார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய சத்தியங்களில் முதலாவது, செய்ய வேண்டிய வேலையோ பெரியது, அது ஒரு மனுஷனுக்கு அல்ல, தேவனாகிய கர்த்தருக்கு கட்டும் அரண்மனை. ஆம் தனக்காக நகரங்களையும், மாளிகைகளையும் கட்டியமைத்த பொழுது தாவீதுக்கு இருந்த ஜாக்கிரதையை காட்டிலும், எல்லாவற்றிற்கும் உயர்ந்தவராகிய கர்த்தருக்காக, அதிக ஜாக்கிரதையோடு செய்ய வேண்டிய வேலை, பெரியது என்கிறார். தேவனாகிய கர்த்தருக்கு கட்டும் அரண்மனை என்று கூறுவதிலிருந்து, ராஜாவாகிய தனக்காக கட்டிய அரண்மனைகளிலும் மிகவும் உயர்வுள்ளதாய் கர்த்தருடைய ஆலயமாகிய, தேவாலயம் இருக்கிறது என்பதை அவர்

உணர்ந்திருந்தார். எனவே தேவன் தனக்கு கொடுத்த எல்லா செல்வத்தையும் அதற்காக கொடுக்க அவர் முன் வந்தார்.

அடுத்த வசனத்தில் "நான் என்னால் இயன்ற மட்டும்" என்ற வார்த்தையானது, அவர் அதற்காக எவ்வளவு பிரயாசப்பட்டார் என்பதையும், தன் நேரம், பெலன், ராஜ மேன்மை அதிகாரம் எல்லாவற்றையும் அதற்காக செலவழித்தார் என்பதையும், நாம் அறிந்து கொள்ளலாம். மேலும் **1 நாள 29:5** ஆம் வசனத்தில் **"இப்போதும் உங்களில் இன்றையதினம் கர்த்தருக்குத் தன் கைக்காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார் என்றான்."** இங்கு தனக்கு, தேவன் கொடுத்த அனைத்தையும் தன் குமாரன் மூலமாய் ஆலயத்தை கட்ட அர்ப்பணித்த பின்பு, தான் அர்ப்பணித்தபடியே தன் ஜனங்களும் அர்ப்பணிப்போடு கர்த்தருக்கு கொடுக்க அறைகூவல் விடுக்கிறார். இதனால் **1 நாள 29:6-9** வசனங்களில் **"அப்பொழுது வம்சங்களின் பிரபுக்களும், இஸ்ரவேல் கோத்திரங்களின் பிரபுக்களும், ஆயிரம்பேருக்கு அதிபதிகளும், நூறுபேருக்கு அதிபதிகளும், ராஜாவின் வேலைக்காரராகிய பிரபுக்களும் மனப்பூர்வமாய், தேவனுடைய ஆலயத்து வேலைக்கு ஐயாயிரம் தாலந்து பொன்னையும், பதினாயிரம் தங்கக்காசையும், பதினாயிரம் தாலந்து வெள்ளியையும், பதினெண்ணாயிரம் தாலந்து வெண்கலத்தையும், லட்சம் தாலந்து இரும்பையும் கொடுத்தார்கள். யார் கையில் ரத்தினங்கள் இருந்ததோ, அவர்கள் அவைகளையும் கர்த்தருடைய ஆலயத்துப் பொக்கிஷத்திற்கென்று கெர்சோனியனான யெகியேலின் கையிலே கொடுத்தார்கள். இப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்; உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்; தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப்பட்டான்."** இப்படியாக தானும், தன் ஜனங்களும் கர்த்தருக்காக கொடுத்த பின்னர், அவர் கூறும் காரியங்களே முக்கியம். ஏனெனில் அதிகமாய் உற்சாகமாய் கொடுப்பது மாத்திரமல்ல எந்த மனநிலையோடு அதைக் கொடுக்கிறோம் என்பதும் முக்கியம்.

குறிப்பாக **1 நாள 29:11** ஆம் வசனத்தில், **"கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்."** இங்கு "வானத்திலும் பூமியிலும் உள்ளவைகள் எல்லாம் உம்முடையவைகள்" என்ற வார்த்தை முக்கியமானது. ஆம், நாம் கர்த்தருக்காக எதைக் கொடுத்தாலும், அது நாம் அவருக்கு கொடுப்பதற்கு முன்னமே அவருடையதாகவே இருக்கிறது. மேலும் **1 நாள 29:12** வசனத்தில் **"ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்."**, இங்கு குறிப்பாக ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது, எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும் என்ற வார்த்தைகள் முக்கியமானதாகும். இவை எல்லாவற்றிற்கும் ஒரு முத்தாய்ப்பாக **"இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்." (1 நாள 29:14)** வசனம் காணப்படுகிறது. ஆம் மனப்பூர்வமாய் கொடுப்பதற்கு திராணி உண்டாவதும் கர்த்தராலேயே என்பதை அறிந்த அவர், கடைசியாக உமது கரத்திலே வாங்கி உமக்கு கொடுத்தோம் என்று முடிக்கிறார். இங்கு **1 நாள 29:1-14** வசனங்களில், நாம் காணும் தாவீதின் அறிக்கையும், ஜெபமும், அவரின் உற்சாகமும் மற்றவரை உற்சாகப்படுத்துவதும், மிகவும் அருமையானதாகும். நாம் கர்த்தருக்காக எப்படிப்பட்ட மனநிலையோடு, எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பதற்கான எடுத்துக்காட்டான அருமையான சத்திய வசனங்கள் இவை.

ஆம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் கூட இதையே, **லூக் 21:4** வசனத்தில் **"அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துத் தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்."**, என்று இரண்டு காசைப் போட்ட, ஏழை விதவையை குறித்து கூறுகிறார். எனவே உலக பணமதிப்பின்படி, அது கணக்கிட முடியாத பொன் வெள்ளியானாலும், இரண்டு காசானாலும், ஆண்டவர் இரண்டையும் ஒரே தராசில் வைத்தே அளக்கிறார். அதன் அளவு, அதை கொடுப்பவரின் மனநிலையை, வாழ்க்கை நிலையை வைத்தே கணக்கிடப்படுகிறது. தாவீது ஆண்டவருக்காக அதிகமாய் கொடுத்தார். ஆனால் ஆண்டவர் அதிகமாய் கொடுத்ததனால் சந்தோஷப்படவில்லை, அவர் எந்த மனநிலையில், எவ்வாறு கர்த்தராலேயே பொன்னும், பொருளும் உண்டாயினவென்பதையும், அதைத் தான் சம்பாதிக்கிறதற்கான பெலனையும், கர்த்தரே கொடுத்தார் என்பதையும், அதை திரும்ப கர்த்தருக்கு கொடுப்பதற்கான திராணியையும் அவரே கொடுத்தார் என்பதையும், உமது கரத்திலே வாங்கி உமக்கே கொடுத்தோம் என்ற சத்தியத்தை அறிக்கையிட்டதால், அவரின் காணிக்கை ஏற்கபட்டதே தவிர, அவர் கொடுத்த அளவினால் அல்ல. அதுவே அந்த ஏழை விதவையினடத்திலும் காணப்பட்டது. ஆண்டவர் கொடுத்த அந்த இரண்டு காசை, தேவாலயத்தில் வந்த அந்த விதவை அவருக்கு கொடுத்துவிட்டாள். இங்கு தாவீதும், ஏழை விதவையும் கொடுத்த அளவினால் வேறுபட்டாலும், கொடுத்த மனநிலையில் தேவனுக்கு முன்பாக சமமாக காணப்படுகின்றனர்.

ஆனால் இந்த மனநிலை இல்லாமல் சிறிதோ, பெரிதோ எது ஆண்டவருக்கு காணிக்கையாகப் படைக்கப்பட்டாலும், அது காயீன் காணிக்கை போல் நிராகரிக்கப்படும். இன்று கோடி கோடியாக செலவழித்து கட்டிய ஆலய கட்டிடங்களை பார்க்கிலும், ஆண்டவருக்காக அர்ப்பணிப்போடு கட்டியெழுப்பப்பட்ட சிறு ஆலயங்கள் , கல்வி மற்றும் மருத்துவச் சாலைகள், ஆதரவற்றோர் இல்லங்கள் இன்று அநேகருக்கு பிரயோஜனமுள்ளதாய் காணப்படுகிறது. சிலர் தம் குடும்ப / சுய / சமுதாய பெருமைக்காக கட்டின ஆலயங்களில் உள்ள கல்வெட்டுக்களில் அவர்கள் பெயர்கள் காணப்படுகிறதே தவிர ஆண்டவர் அங்கு இல்லை. ஆனால் கர்த்தர் தங்களுக்குக் கொடுத்ததை அவர் கரத்தில் கொடுத்த, யாரோ சிலரால் தியாகத்தோடு ஆரம்பிக்கப்பட்ட கல்வி மற்றும் மருத்துவ நிறுவனங்கள், மிஷன் ஊழியங்கள், ஆலயங்கள் இன்று அநேகருக்கு ஆண்டவருடைய பிரசன்னத்தை உணர கூடிய இடமாய், ஆண்டவருக்காக தம்மையும், தமக்குள்ளதையும் அர்ப்பணிக்கும் இடமாய் உள்ளது. மேலும் நாம் ஏற்கனவே **1 நாளா 29:2** இல் கண்டது போல நாம் சம்பாதிப்பதற்கான பெலனை, வழி வகைகளை ஆண்டவர் கொடுக்கும் பொழுது, நாம் ஆண்டவருக்கு கொடுத்தால் எல்லாம் எளிதாக வந்துவிடும், நாம் உழைக்க தேவையில்லை என்று எண்ணாமல், ஆண்டவர் கொடுக்கும் பெலத்தோடு பிரயாசப்பட வேண்டும். அப்படி நாம் பிரயாசப்பட்டு ஆண்டவருக்கு கொடுக்கும் பொழுது, அதனால் நம் உள்ளத்திலும் ஒரு பெரிய சமாதானமும் சந்தோஷமும் உண்டாகிறது.

இதில் வெறும் பொன்னும் பொருளும் மாத்திரமல்ல, நம் நேரம், நம்முடைய தாலந்து, தேவன் கொடுத்த கல்வி, ஞானம், அதிகாரம், மேன்மை என எல்லாவற்றையும் மேற்கண்ட மனநிலையோடு நாம் ஆண்டவருக்கென கொடுக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில், மிகப்பெரிய அப்போஸ்தலரான பவுலும், தனக்காகவும் தன்னுடைய வர்களுக்காகவும், ஊழியப் பாதையிலும் வேலை செய்தார். நாம் தான் ஊழியம் செய்கிறோமே இது போதும், நம் தேவைகளை நம்மோடு இருப்பவர்களின் தேவைகளை ஆண்டவர் மற்றொருவர் மூலமாய் சந்திக்கட்டும் என்று இல்லாமல், ஆண்டவர் வேலை செய்து பிழைப்பதற்கான பெலனையும், வழியையும் உண்டாக்கின பொழுது, முழுநேர ஊழியத்தின் மத்தியிலும், ஊழிய தேவைகளுக்காகவும், தன்னோடு இருந்த சக ஊழியர்களுக்காகவும் அவரே வேலை செய்தார். இது என்று அநேகருக்கு சவாலான ஒரு காரியமாகும். ஏனெனில் இன்று

சிலர் எவ்வளவு காணிக்கை வேண்டுமானாலும் தருகிறோம் என்று கூறிவிட்டு காணிக்கையை வெறும் பணமாக பொருளாக மட்டும் பார்த்து, அதை கொடுத்து விட்டு, மற்றபடி தங்கள் வாழ்க்கையை தங்கள் இஷ்டப்படி வாழ்கின்றனர். ஏதோ தாங்கள் காணிக்கை கொடுத்தால், அதனால் ஆண்டவர் தங்களை ஆசீர்வதிப்பார், இன்னும் அதிகம் இவ்வுலக செல்வங்களை தருவார், சுகமாய் வசதி வாய்ப்போடு வாழ செய்வார் என்று நினைக்கின்றனர். இன்னும் சிலர் தங்கள் பாவம் மன்னிக்கப்படும் என்று கூட நினைத்து கொடுக்கின்றனர். அதே நேரத்தில் சிலர் ஆலய ஆராதனைகளில், ஊழியங்களில் உற்சாகத்தோடு குடும்பமாய் பங்குபெறுவர். ஆனால் ஆண்டவருக்காக தியாகத்தோடு எதையும் கொடுக்க மாட்டார்கள். இவர்கள் சோம்பலான, அஜாக்கிரதையான வாழ்க்கை வாழ்ந்தாலும், ஏதோ ஊழியத்தில் பங்கு பெறுவதால், ஆலயத்திற்கு நேரம் தவறாமல் செல்வதால், ஆண்டவர் தங்களை ஆசிர்வதித்து போஷிப்பார் என்ற தவறான எண்ணம் உடையவர்கள். தன்னைப் பின்பற்றி வர விரும்பின ஐஸ்வர்யமுள்ள வாலிபனிடம், ஆண்டவர் எதிர்பார்த்தது இதையே. எனவே ஆண்டவர் ஒவ்வொரு தனி மனிதனிடமும் எதிர்பார்ப்பது எதுவோ, தன் வாழ்க்கையில் அவர் கொடுத்தது எதுவோ, திரும்பக் கேட்பது எதுவோ அதை அப்படியே ஆண்டவருக்கு அர்ப்பணித்து வாழ்வது மேன்மையாகும்.

இது நாம் விளங்கிக் கொள்ள முடியாத அற்புதமான சத்தியமாகும். சகல அதிகாரத்தோடு, மேன்மையோடு, பொன் பொருள், மனைவி, பிள்ளைகள், என்று சகல பூமிக்குரிய நன்மைகளோடும், ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்ட தாவீது இராஜாவையும், இரண்டு காசை போட்ட ஏழை விதவையும், தினந்தோறும் போஷித்து நடத்தினவர் கர்த்தரே. இதை நாம் விளங்கிக் கொண்டோமானால் எவரையும், நாம் அவர் வாழும் வாழ்க்கை தரத்தை வைத்தோ, கொடுக்கும் காணிக்கை அளவை வைத்தோ அளக்க மாட்டோம். அதற்கு பதிலாக தேவனுடைய பார்வையில் அவர்களின் வாழ்க்கை இராஜாவாகிய தாவீதை போலாவது, அல்லது இரண்டு காசை போட்ட ஏழை விதவையை போலாவது காணப்படுகிறதா என்றே பார்ப்போம், ஆமென், அல்லேலூயா.

## 97. கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்படவேண்டும்

உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்துஇயேசுவுக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல்செய்கிறேன். (பிலே 1:6)




இங்கு பவுல் பிலேமோனைப் பார்த்து இவ்வாறு கூறினாலும் இது ஒவ்வொரு விசுவாசிக்கும் பொருந்தும். ஆம், நாம் எவ்விதத்திலாவது கிறிஸ்து இயேசுவுக்காக பயன்பட வேண்டியவர்களாக உள்ளோம். முதலாவது, நமது இவ்வுலக வாழ்க்கை எவ்விதத்திலாவது அவருக்கு பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் நம்முள் இருக்க வேண்டும். ஆண்டவருக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பு நம்முள் காணப்பட வேண்டும். இரண்டாவது, அதை சரியான விதத்தில் செய்ய வேண்டிய படி, நம்முடைய வாழ்க்கை முறையும் காணப்பட வேண்டும். வெறும் ஆர்வம் மட்டும் இருந்துவிட்டு, வாழ்க்கை ஓட்டத்தை வேறுவிதமாய் ஓடுவோமானால் அதனால் பயனில்லை. அல்லது ஏதோ வாழ்வின் சூழ்நிலை கட்டாயத்தினால், பணத்திற்காக வயிற்றுப் பிழைப்பிற்காக உண்மையான ஆர்வம் இன்றி, ஆண்டவருக்காக எதை செய்தாலும் அதனால் பலனில்லை. மேலும் தேவன் எவ்விதமாக பயன்படுத்த விரும்புகிறார் என்பதை உணர்ந்து அதற்கேற்ற காரியங்களைச் செய்ய வேண்டும். நம்மை சுவிசேஷகராக ஆண்டவர் அழைத்து இருந்தால், அதை உண்மையுடன் செய்ய வேண்டும். அதை விட்டு சபை ஊழியத்தையும் மற்ற காரியங்களை நாடக் கூடாது.

மேலும் இங்கு பிலேமோனுக்கு பவுல் கூறியதை போல, ஒவ்வொரு விசுவாசிக்கும் ஏதோ ஒரு அளவில் / சூழலில், கிறிஸ்துவுக்காக பயன்படக்கூடிய தருணம் கொடுக்கப்படுகிறது. அதை கண்டறிந்து உண்மையோடு ஆண்டவருக்காக பணியாற்ற வேண்டும். நாம் சுவிசேஷ புத்தகங்களில் காணும்பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு உண்டு உறங்கி அவரோடு நித்தமும் இருந்து அவர் கூறும் வேலையையே தம் வாழ்க்கையாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் அப்போஸ்தலர்கள். இவர்கள் தம் முழு வாழ்க்கையையே கிறிஸ்துவுக்காக பயன்பட அர்ப்பணித்தவர்கள். அதேநேரத்தில் ஆண்டவர் தங்கள் ஊர்களுக்கு வரும்பொழுது அவரைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொண்டு அவருக்கும் அவரோடு

இருந்தவர்களுக்கும், பணிவிடை செய்த மார்த்தாள் மரியாள் போன்ற குடும்பங்களும் உண்டு. மேலும் வேதம் கூறுகிறது "**ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்.**" **(லூக் 8:3)** என்று. ஒருவேளை அப்போஸ்தலராக அழைக்கப்பட்டு, ஆண்டவரோடு இணைந்து செய்யும் அப்போஸ்தல ஊழியம் மேன்மையானதாக இருந்தாலும், எல்லா நிலைகளிலும் ஆண்டவருக்காக எதையாவது செய்வோரை அவர் நோக்கிக் கொண்டிருக்கிறார். நிச்சயமாக அதற்கான பலனை அவர் தருவார். அதனால்தான் ஆண்டவர் கூறினார், "**சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத் 10:42)** .

இப்படியாக நாம் செய்யும் செயல் எதுவானாலும் கிறிஸ்துவுக்காக பயன்பட அதை செய்யும் பொழுது, அது அநேகருக்கு ஆசிர்வாதமாய் அமைகிறது. சபையாகிய கட்டிடத்தை சேர்ந்த கட்டும் பணியாக அது அமைகிறது. இவ்வாறு செய்யும் செயலுக்காக ஆசிர்வாதத்தை இம்மையிலும் மறுமையிலும் நாம் பெற்றுக்கொள்வோம். இன்று நாம் காணும் அனேக மிஷன் ஊழியங்கள், பள்ளி கல்லூரிகள், மருத்துவமனைகள் என்பவைகள் எல்லாம் யாரோ சிலர் கிறிஸ்துவுக்காக பயன்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டதால் உருவானதாகும். இதற்கு முழுமையான அர்ப்பணிப்பும் கீழ்ப்படிதலும் தேவை. இப்படி கிறிஸ்துவுக்காக பயன்பட சில சிறிய காரியங்களை அர்ப்பணிக்கும் பொழுது, அதிலிருந்து அற்புதமான மேன்மையான பெரிய காரியங்கள் வெளிப்படுகிறது. உதாரணமாக 2 மீனும், 5 அப்பமும் அளவில் ஒன்றும் இல்லாததாய் இருந்தும், அதை கிறிஸ்து இயேசுவுக்காக அர்பணித்த பொழுது, அவர் அதை பெருகச் செய்து அநேகருக்கு ஆசீர்வாதமாக மாற செய்தார். எனவே கிறிஸ்து இயேசுவுக்காக பயன்பட நாம் கொடுக்கும் காரியம் சிறியதானாலும் பெரியதானாலும் அதை முழு மனதுடன் அர்ப்பணிக்கும் பொழுது, அது அநேகருக்கும் நமக்கும் ஆசிர்வாதமாய் காணப்படுகிறது. ஆனால் இன்று சிலர் பெரிய அளவில் பணத்தை நேரத்தை மனிதவளத்தை வைத்து, கிறிஸ்துவுக்காக பெரிய காரியங்களை செய்பவர்கள் போல, மிகப்பெரிய சபை கட்டிடங்களையும், ஆராதனை கூடங்களையும் கட்டுகின்றனர். சிலர் மிகப்பெரிய பொருட்செலவில் பாடல்களை வெளியிடுகின்றனர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். ஆனால் அவற்றின் மூலம் அவர்கள் பிரபலமாகிறார்களே தவிர கிறிஸ்து இயேசுவுக்கு பயன்படும்படி அங்கு எதுவும் காணப்படுவதில்லை.

நம் தேசத்திலும், உலகமெங்கிலும் இன்றும் ஆண்டவரை அறியாத மக்கள் உண்டு. சபையாக கூடி ஆராதிக்க இடமில்லாத மக்கள் உண்டு. தங்கள் அடிப்படை தேவைகளை கூட சந்திக்க முடியாத நிலையில் ஊழியர்களும் சபை விசுவாசிகளும் உள்ளனர். எனவே கிறிஸ்து இயேசுவுக்காக பயன்பட எதையாவது செய்ய நினைப்பவர்கள், உண்மையான தேவைகளை அறிந்து, அதற்காக பணத்தையும் மனித பெலத்தையும் செலவழிக்க வேண்டுமே தவிர, பெயர் பிரஸ்தாபத்திற்காக செய்யக்கூடாது. அதனால் ஆசிர்வாதத்திற்கு பதிலாக, சாபமே வந்து சேரும். எனவே நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும், எப்படியாயினும் கிறிஸ்து இயேசுவுக்காக பயன்படவேண்டும் என்பதை உணர்ந்து, அதை செய்ய வேண்டிய பிரகாரம் செய்ய தேவ கிருபையை தேடி, செய்வோமானால், அது ஆண்டவருக்கு மகிமையையும், அநேகருக்கும் நமக்கும் நன்மையையும் கொண்டுவரும், ஆமென் அல்லேலூயா.

## 98. ஆவியை விடாதிருக்கிறதற்கு

**ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை; மரணநாளின்மேலும் அவனுக்கு அதிகாரமில்லை; அந்தப் போருக்கு நீங்கிப்போவதுமில்லை; (பிரசங்கி 8:8)**




ஆம் ஆவியை விடாதிருகிறதற்கு, தன் ஆவியின் மேலேயே ஒரு மனுஷனுக்கு அதிகாரம் இல்லை. காரணம் **பிர 12:7** கூறுகிறது **"இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும்"** மேலும் **பிர 3:19-21** வசனங்கள் கூறுகிறது **"மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு; இவைகள் சாகிறதுபோலவே அவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப்பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல; எல்லாம் மாயையே. எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது. உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்?"**. மேற்கண்ட வசனங்களிலிருந்து ஒன்று நமக்கு தெளிவாகத்தெரிகிறது, ஒருவேளை நாம் மரித்து, நமது உடல் நாற்றம் எடுத்து மண்ணில் அழுகி போனாலும், அந்த உடல் உருவாவதற்கு காரணமாக இருந்த அந்த உயிர் (ஆவி) மறுபடியும் பத்திரமாக தேவன் இடத்திற்கு செல்கிறது.

நம் தாயின் கருவில் ஆவியாகிய இந்த ஜீவனை தருவதாலேயே, நம் சரீரம் தாயின் கருவில் உருவாகி வளர்கிறது. அதே சரீரம் அந்த ஜீவன் (ஆவி) எடுத்துக்கொள்ளப்படும் கொஞ்ச நேரத்தில் அழுகி நாற்றமெடுக்க துவங்குகிறது. இது மனுஷனை தவிர மற்ற உயிரினங்களுக்கும் ஏற்பட்டாலும், அவற்றின் ஆவி தாழ பூமியில் இறங்குகிறது என்று **பிர 3:21** கூறுகிறது. ஆனால் மனுஷனுடைய ஆவியோ உயர தேவனிடத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்று **பிர 3:21** மற்றும் **பிர 12:7** வசனங்கள் கூறுகிறது. எனவேதான் மிருகங்களைக் காட்டிலும் மனுஷனானவன் விசேஷித்திருக்கிறான் **(லூக் 12:24)** என்று நமது ஆண்டவரே கூறினார். காரணம் சிருஷ்டிப்பிலேயே மற்ற ஜீவன்கள் தேவ வார்த்தையால் உண்டான போதிலும், மனுஷனுக்கோ ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே தேவனே ஊதினார் என்று **ஆதி 2:7**

கூறுகிறது. இங்கு மேலும் ஒரு விசேஷித்த காரியம், மற்ற உயிரினங்களுக்கு இல்லாத ஆத்துமா மனுஷனுக்கு உண்டு. சரீரம் நிச்சயமாக ஒருநாள் மரணத்தை சந்தித்து (ஆவியை பிரிந்து) அழியத்தான் போகிறது. ஆவி (ஜீவன்) தேவனிடத்தில் செல்லதான் போகிறது. எனவே பிறப்பின் மேலும், இறப்பின் மேலும் மனுக்குலத்திற்கு அதிகாரம் இல்லை. ஆனால் இவ்விரண்டிற்கும் நடுவாக உள்ள ஆத்துமாவே, ஆவி சரீரத்தோடு பூமியில் இருந்தபோது செய்த செய்கைக்கான பலனை பெறுகிறது. அந்த ஆத்துமா ஏழையாகிய லாசருவை போல் ஆண்டவரோடு இளைப்பாறுவதும், அல்லது பணக்காரனை போல் கொடிய தீயில் வாதிக்கப்படுவதும் செய்கைக்கான பலனை பொறுத்ததாகும்.

எனவே ஆவியை விடாதிருக்கிறதற்கு, மனிதனுக்கு அதிகாரம் இல்லை என்றாலும், அந்த ஆவி சரீரத்தை விட்டுப் பிரிந்து தேவனிடத்தில் சென்றபின்பு, சரீரம் அழிந்து போனாலும், அதன் கிரியைகளின் பலனை ஆத்துமா சுமக்கிறது. இதுவே நமது நித்தியத்தை தீர்மானிக்கிறது. ஆம் ஆவி ஆத்துமாவோடு, சரீரத்தோடு இந்த பூமியில் இருப்பது சில காலம் தான். அதுவும் எப்போது முடியும் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அது பூமியில் இருக்கும் வரை நம் ஆத்துமாவும், சரீரமும் தேவன் தந்த ஆவியோடு, அவருடைய சித்தத்தை நிறைவேற்ற அவரோடு ஐக்கியமாய் இருக்கும்பொழுது, நமது மாம்சம் அழிந்தாலும், ஆவியும் ஆத்துமாவும் தேவனைச் சேரும். மேலும் ஒரு நாள் வரும் அப்பொழுது அழிவுக்குரிய சரீரத்திற்கு பதிலாக தேவமகிமை தங்கிய மறுரூபமாக்கப்பட்ட புதிய உயிர்தெழுந்த சரீரத்தை நமக்கு தந்து, நித்திய நித்தியமாய் அவரோடு வாழச்செய்வார். எனவேதான் பூமிக்குரிய கூடாரமாகிய இச்சரீரம் அழிந்து போனாலும், மறுரூபமாக்கப்பட்ட சரீரம் நித்திய நித்தியமாய் நமக்கு கிடைக்கும் என்று வேதம் கூறுகிறது. எனவே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஆவி ஆத்துமா என்ற இந்த இரண்டும் மறுரூபமாக்கப்பட்ட சரீரத்தோடு நித்திய நித்தியமாய் தேவனோடு இருக்கும். ஆனால் இச்சரீர வாழ்வில் ஆத்துமாவை காத்துக் கொள்ளாதவர்களின், ஆத்துமா வேதனை அடைந்து இறுதியில் அக்கினி கடலிலே தள்ளப்படும்.

எனவே ஆவியை பெற்று ஜீவனோடு இந்த சரீரம் இருக்கும் வேளையில், நமது ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாய் இருக்க வேண்டும். **ரோ 7:22,23** வசனங்களில் **“உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது.“** இங்கு உள்ளான மனுஷனுக்கு ஏற்றபடி ஆவியிலே, ஆத்துமாவிலே தேவனுக்கு ஏற்ப ஒரு வாழ்க்கை வாழ வேண்டும் என நினைத்தாலும், கொஞ்ச காலத்தில் அழிந்து மண்ணோடு மண்ணாக போகப்போகிற இந்த சரீரத்தின் தேவையை பூர்த்தி செய்ய, அதன் இச்சைக்கு நம்மை விட்டு விடுவோமானால், அது நம் சரீரத்தையும், ஆத்துமாவையும் சேர்த்து கறைப்படுத்தி விடும். ஆனால் அதே நேரத்தில் **ரோ 8:1** கூறுகிறபடி **“ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.“** ஆம், நம் ஆத்துமாவை சரீர இச்சைக்கு உட்படுத்தாமல், தேவன் தந்த ஆவியின் சித்தத்திற்கு ஏற்ப தேவனோடு வாழவோமானால், அதனால் நம்முடைய சரீரத்தையும் அழிவிலிருந்து இரட்சித்து கொள்ளலாம். மேலும் **ரோ 8:9** கூறுகிறது **“தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.“** ஆம், பரிசுத்த ஆவியாகிய கர்த்தருடைய ஆவியானவர் நமக்குள்ளே இருப்பாரானால், நம்முடைய ஆத்துமா தேவ ஆவியின் பலத்தின் மூலம் சரீர இச்சைக்கோ, உலகத்திற்கோ இடங்கொடாமல், தேவனுக்கேற்ற செயலை செய்யும்படி நம்முடைய சரீரத்தையும் செயல்படுத்துகிறது. இது நம்முடைய

முயற்சியினால் உண்டாவது அல்ல. நாம் பாவிகள் என்றும் முற்காலத்தில் நமது மாமிசமும், மனதும் விரும்பியதை செய்தோம் என்றும், ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டியிருக்கிறோம் என்ற சத்தியத்தை அறிந்து அதற்கு கீழ்படிந்து ஏற்றுக்கொள்வதின் மூலம், பரிசுத்த ஆவியானவர் நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் ஆளுகை செய்ய அர்ப்பணிக்கிறோம்.

அப்படி அர்ப்பணிக்கும் போது, ஒருவேளை நம்முடைய சரீரத்தை விட்டு ஆவி பிரிக்கப் பட்டாலும், நாம் அதை குறித்து கவலைப்பட போவதில்லை. காரணம் நமது ஆவியும், ஆத்துமாவும் தேவனிடத்தில் பத்திரமாய் அவரோடு இருக்கும். ஒருநாள் எக்காளம் தொனிக்கும், அப்பொழுத நமக்கு மகிமையுள்ள சரீரம் கொடுக்கப்படும். அது என்றென்றும் தேவனோடு கூட இருக்கும். எனவே மரணம் என்பது அழிந்து போகக்கூடிய இந்த சரீரத்தை விட்டுப் பிரிந்து போவதே அல்லாமல், நமது ஆத்துமாவிற்கோ ஆவிக்கோ ஒரு சேதமும் ஏற்படப்போவதில்லை. அதற்கு பதிலாக மகிமையுள்ள ஒரு சரீரம் நமக்காக ஆயத்தம் பண்ணப்பட்டு இருக்கிறது. அதை ஏற்ற காலத்தில் ஆண்டவர் நமக்கு தருவார்.

ஒருவேளை ஆண்டவர் வருகையில் நாம் இந்த சரீரத்தோடு இப்பூமியில் இருப்போமானால், மேற்கண்ட நிகழ்வுகள் இமைப்பொழுதிலே நடந்தேறும். இதை **1 கொ 15: 51-54** வசனங்களில் **“இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.“** ஆம் மாம்ச சரீரத்தில் மறுரூபம் ஒரு இமைப்பொழுதில் நடந்தேறும், அழிவுள்ளத்தாகிய, சாவுக்கேதுவாகிய இச்சரீரம் அழியாமையை, சாவாமையை தரித்துக் கொள்ளும். ஆம் ஆவியை விடாதிருக்கிறதற்கு நமக்கு அதிகாரம் இல்லை என்றாலும், மரணத்தின் மேலும் அதிகாரம் இல்லை என்றாலும், நாம் நித்தியத்தை எங்கு கழிக்கப் போகிறோம் என்பது இந்த மரண நாள் வருவதற்கு முன்பாகவே தீர்மானிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து, தேவ ஆவியின் பெலத்தால், நம்முடைய சரீரத்தை கீழ்ப்படுத்தி, கிறிஸ்துவின் சிந்தையை தரித்துக்கொண்டு, மாம்சத்தின்படி வாழாமல், ஆவியின்படியே வாழ்வோமானால், நித்திய ஆக்கினை தீர்ப்பிற்கு தப்பி, நம் ஆவி, ஆத்துமா சரீரம் என்ற மூன்றையும் காத்துக் கொள்வோம் ஆமென், அல்லேலூயா.

## 99. என்னைக் காண்கிற தேவன்

**அப்பொழுது அவள்: என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள். (ஆதி 16:13)**




மேற்கண்ட வசனத்தில் எகிப்து தேசத்து அடிமை பெண்ணாகிய ஆகார், கர்த்தராகிய தேவனுக்கு இப்படிப்பட்ட ஒரு பெயரை தன் அனுபவத்தின் மூலம் கூறினாள். ஆபிரகாமின் வித்தாகிய இஸ்மவேலை தன் வயிற்றில் சுமந்தவளாய், ஆபிரகாமுக்கு தெரியாமல், சாராளின் கடினமான நடத்துதல் நிமித்தம், அவ்விடம் விட்டு வெளியேறி வனாந்தரத்தில் அலைந்த ஆகாரை கர்த்தர் கண்டார் **(ஆதி 16:7)**. இதற்கு காரணம் என்னவென்பதை இதற்கு முந்தைய வசனங்கள் நமக்கு தெளிவாக கூறுகின்றன. **“அவன் ஆகாரோடே சேர்ந்தபோது, அவள் கர்ப்பந்தரித்தாள்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டபோது, தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள். அப்பொழுது சாராய் ஆபிராமை நோக்கி: எனக்கு நேரிட்ட அநியாயம் உமதுமேல் சுமரும்; என் அடிமைப்பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டு என்னை அற்பமாக எண்ணுகிறாள்; கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றாள். அதற்கு ஆபிராம் சாராயை நோக்கி: இதோ, உன் அடிமைப்பெண் உன் கைக்குள் இருக்கிறாள்; உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்குச் செய் என்றான். அப்பொழுது சாராய் அவளைக் கடினமாய் நடத்தினபடியால் அவள் அவளைவிட்டு ஓடிப்போனாள் (ஆதி 16:4-6)”**. இங்கு இந்த பிரச்சனைக்கு எல்லாம் மூலக்காரணம், தன் நாச்சியாரை அற்பமாக எண்ணியதாகும். அடிமைப் பெண்ணாகிய தனக்கு இப்படிப்பட்ட

அந்தஸ்தைத் தந்த தன் எஜமாட்டியை அவள் அற்பமாக எண்ணினாள். அதே நேரத்தில் சாராளுக்கு ஆகாரின் வயிற்றில் வளர்வது ஆபிரகாமின் வித்து என்று தெரிந்திருந்தும், அவளை கடினமாய் நடத்தினாள். ஆபிரகாமோ, இதை எதையும் கண்டுகொள்ளாமல் உன் அடிமைப்பெண் உன் கைக்குள் இருக்கிறாள், உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்கு செய் என்று கூறிவிட்டார் **(ஆதி 16:6)**.

மனிதர்கள் தேவ சித்தத்தை, திட்டத்தை உணராமல் வாழ்வில் செய்யும் தவறுகள் பல விதங்களில், பலருக்கு, பல்வேறு வேதனையான அனுபவங்களைக் கொண்டு வருகிறது. இதற்கு ஆபிரகாம், சாராள், ஆகார் ஆகிய மூவரும் சரியான உதாரணங்களாவர். ஆனால் இவை எல்லாவற்றையும் சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவன் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். அவருக்கு தெரியும் எப்பொழுது, எது எப்படி நடைபெற வேண்டும் என்பது. எனவே தற்போது ஆபிரகாமை விட்டு செல்வது அவருடைய திட்டம் அல்ல என்பதனால், அவளுடன் இடைப்பட்டு, அவளை மறுபடியும் சாராளிடத்திற்குச் செல்லும்படி கூறினார். **“அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர்: நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப்போய், அவள் கையின்கீழ் அடங்கியிரு என்றார். பின்னும் கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி: உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்; அது பெருகி, எண்ணிமுடியாததாயிருக்கும் என்றார். பின்னும் கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கிறாய், ஒரு குமாரனைப் பெறுவாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினால், அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக (ஆதி 16:9-11)”**. மேலும் இங்கு நாம் காணும் முக்கியமான சத்தியம் என்னவென்றால், **நீர் என்னைக் காண்கிற தேவன் (ஆதி 16:13)** என்பதை ஆகார் உணர்ந்து கொண்டதுதான். ஒருவேளை அவள் அன்று ஆண்டவருக்கு கீழ்படியாது இருந்திருப்பாளானால், இன்று பூமியில் இஸ்மவேலின் சந்ததியே இருந்திருக்காது. இங்கு என்னை காண்கிற தேவன் என்ற வார்த்தையானது அவர் நம்மை இப்பொழுது இக்கட்டான சூழலில் காண்கிறார் என்று பொருள் மாத்திரமல்ல, அவர் நம்மை எப்பொழுதும் காண்கிறவராய் இருக்கிறார், நம்முடைய கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என சகலவற்றையும் காண்கிற தேவன் இருக்கிறார் என்பதே அதன் அர்த்தம்.

அதனால்தான் அவள் வயிற்றில் வளரும் பிள்ளையின் பெயர் முதற்கொண்டு, அவன் சந்ததியாரின் வாழ்க்கை வரை நடக்க இருக்கும் அனைத்தையும் அவர் காண்கிறபடியால், அதை அவளுக்கு வெளிப்படையாகவே அறிவித்து, இப்படிப்பட்ட திட்டத்தில் இருக்கும் பிள்ளையை பாதுகாப்பாய் பெற்றெடுத்து வளர்க்க அவளிடம் கூறினார். ஆம் ஆண்டவர் தன்னுடைய வாழ்க்கையை மட்டுமல்ல தன் சந்ததியின் வாழ்க்கையையும் தம் சித்தப்படி, திட்டப்படி நடத்துகிறார் என்பதை உணர்ந்து கொண்டதால், அதனாலேயே நீர் என்னைக் காண்கிற தேவன் என்றாள். அதற்கு காரணம் என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் என்று கூறுகிறாள். ஆம் நம் வாழ்வை மட்டுமல்ல நம் சந்ததிகளின் வாழ்வையும் பொறுப்பெடுத்து நடத்துகிறவர் நம் தேவன். நாம் இன்று ஆண்டவரோடு இருக்கிறோம் என்றால், அதை நாம் நம் தாயின் கருவில் உருவாவதற்கு முன்பே அவர் முன் குறித்து விட்டார். எனவே நம் முன்னோர்களின் வாழ்க்கை மட்டுமல்ல நம் வாழ்க்கையையும், நம் சந்ததிகளின் வாழ்க்கையையும், அவர் அறிந்திருக்கிறார். எனவே அவர் நம்மை காண்கிற தேவன் என்ற சத்தியத்தை நாம் அறிந்திருக்கிறபடியால் நம்முடைய நிலைமை முற்காலத்தில் எப்படி இருந்திருந்தாலும், தற்கால நிலைமை அதைக்காட்டிலும் மோசமாக இருந்தாலும், முக்காலத்தையும் காண்பவர் மட்டுமல்ல, அதை ஆண்டு நடத்துகிற அவருக்கு கீழ்ப்படிந்து, என்னை காண்பவரை, நானும் கண்டேன் என்று சொல்லி ஆண்டவருக்கு கீழ்ப்படிவோமானால், அதற்கான நன்மையை ஆண்டவர் நிச்சயம் நமக்கு தருவார்.

மேலும் ஆகாரிடம் ஆண்டவர் இஸ்மவேலின் வாழ்க்கை பற்றி கூறியது போல, நம் பிள்ளைகளின் வாழ்க்கையும், அவரது கரத்திலே இருக்கிறது என்பதை நாம் உணர்வோமானால், நம் பிள்ளைகளைப் பற்றி நாம் கவலை கொள்ளமாட்டோம்.

நம்மால் நம் பிள்ளைகளை அருகில் இருந்து கவனித்துக் கொள்ள முடியாத சூழலில் இருந்தாலும், எல்லாவற்றையும் முன்குறித்த தேவன், நம் பிள்ளைகளின் குறித்த திட்டத்தையும் நிச்சயம் செய்து முடிப்பார். ஏறக்குறைய 14 வருடங்களுக்கு பிறகு தேவ சித்தப்படி ஆபிரகாமின் மூலமாகவே அனுப்பி விடப்பட்ட போது, அதே பிள்ளையை தன் கையில் பிடித்தவளாய் மறுபடியும் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள். **“அப்பொழுது தேவன் ஆபிரகாமை நோக்கி: அந்தப் பிள்ளையையும், உன் அடிமைப்பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்குத் துக்கமாயிருக்க வேண்டாம்; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்; ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள். அடிமைப்பெண்ணின் மகனும் உன் வித்தாயிருக்கிறபடியால், அவனையும் ஒரு ஜாதியாக்குவேன் என்றார். ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் எடுத்து, ஆகாருடைய தோளின்மேல் வைத்துப் பிள்ளையையும் ஒப்புக்கொடுத்து, அவளை அனுப்பிவிட்டான்; அவள் புறப்பட்டுப்போய், பெயெர்செபாவின் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள். (ஆதி 21:12-14)”**. குடிக்க தண்ணீர் இல்லாமல், பிள்ளை சாகிறதை நான் காண மாட்டேன் என்று கூறி சத்தமிட்டு அழுத வேளையில், அன்று ஆகாரை கண்ட தேவன், இன்று அவள் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார். **“துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்தபின்பு, அவள் பிள்ளையை ஒரு செடியின்கீழே விட்டு, பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேன் என்று, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள். தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்; தேவதூதன் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு: ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது, பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார். (ஆதி 21:15-17)”**. அவ்வனாந்தரத்திலே தண்ணீர்துரவை காண செய்து அவளின் பிள்ளையை காப்பாற்றினார் **(ஆதி 21:19)**. ஆம் எத்தனை காலம் ஆனாலும் ஆண்டவர் நம்மை காண்கிற, நம் கூப்பிடுதலை கேட்கிறவராய் இருக்கிறார்.

நம்மை எல்லாரும் கை விட்டாலும் அல்லது உதவி செய்ய முடியாத சூழலில் இருந்தாலும், ஏன் நம்மாலேயே நம் பிள்ளைகளுக்கு உதவ முடியாத சூழ்நிலையில் இருந்தாலும், ஆண்டவர் நம்மை காண்கிற தேவனாக இருக்கிறார். ஒருவேளை வாழ்க்கை சூழ்நிலையினால், பெற்றோர் பிள்ளைகளை அருகில் இருந்து பராமரிக்க முடியாமல் வெவ்வேறு இடத்தில் வாழலாம், அல்லது சிறிது காலம் பிரிந்து இருக்கலாம், ஆனால் அவ்வேளையிலும் அவர் நம் பிள்ளைகளை பொறுப்பெடுத்துக் கொள்வார். அவர்களுடைய தற்கால வாழ்க்கை மாத்திரமல்ல, அவர்களுடைய சந்ததியையும் தேவன் பொறுப்பெடுத்துக் கொள்வார். **“தேவன் பிள்ளையுடனே இருந்தார்; அவன் வளர்ந்து வனாந்தரத்திலே குடியிருந்து, வில்வித்தையிலே வல்லவனானான். அவன் பாரான் வனாந்தரத்திலே குடியிருக்கையில், அவனுடைய தாய் எகிப்து தேசத்தாளாகிய ஒரு பெண்ணை அவனுக்கு விவாகம்பண்ணுவித்தாள். (ஆதி 21:20,21)”**. ஆம் அவன் வளர்ந்தது வனாந்தரத்திலே, குடியிருந்தது வனாந்தரத்திலே, ஆகார் எகிப்திலிருந்து வந்தபடியால் எகிப்து தேசத்து பெண்ணையே அவனுக்கு திருமணம் செய்து முடித்தாள். இன்று இஸ்மவேலின் சந்ததியார், ஆண்டவர் கூறியபடியே எண்ணி முடியாதவர்களாய் அதே வனாந்திர தேசத்தில் செல்வ செழிப்போடு வாழ்வது உலகறிந்த உண்மை. அன்று தன்னைக் கண்ட ஆண்டவரை கண்டு, உணர்ந்து நீர் என்னைக் காண்கிற தேவன் என்று அறிக்கையிட்டபடியால் இன்றளவும் ஆபிரகாமின் வித்தாகிய அவளுடைய சந்ததியார் பூமியெங்கும் பரம்பி வாழ்கின்றனர். அன்று ஆகாரை கண்ட தேவன், இன்று நம்மையும் காண்கிறார் என்பதை உணர்ந்து அறிக்கையிடுவோமானால், நம் சந்ததியார் பூமியில் மாத்திரமல்ல, நித்தியத்திலும் கிறிஸ்துவின் சந்ததியாராய் என்றென்றும் வாழ்வர். ஆண்டவர் தாமே அப்படிப்பட்ட கிருபையை நமக்கும், நம் பிள்ளைகளுக்கும் தருவாராக. ஆமென், அல்லேலூயா.

## 100. உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் (பாகம் 2)

**மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மாற்கு 8:36)**




இன்று இந்த உலகில் உள்ள ஒவ்வொருவரும் எதையாவது ஒன்றை அடையும்படியாய் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். சிலர் பணத்தின் பின்னே சென்று, இரவு பகலாய் பணம் சம்பாதிப்பதே நோக்கமாகக் கொண்டு ஓடுகிறார்கள். சிலர் அதிகாரத்தை, மேலான பதவியை, புகழை அடையும்படி ஓடுகிறார்கள். இன்னும் சிலர் அதிக ஞானத்தை அடைய ஓடுகின்றனர். இன்னும் சிலர் சுகபோகமான வாழ்க்கை எப்பொழுதும் வாழ நினைக்கின்றனர். இவற்றில் சிலர் பணம், பதவி, அதிகாரம், புகழ், சுகபோகமான வாழ்க்கை என அனைத்தையும் அனுபவிக்க நினைக்கின்றனர். இதனால் இறைவனை குறித்தோ, சக மனிதரை குறித்தோ எந்தவித கவலையும் இன்றி வாழ்கின்றனர். இன்னும் சிலர் இவற்றையெல்லாம் அடையும்படி சக மனிதர்களை ஏமாற்றி, துன்புறுத்தி, அடிமைப்படுத்தி, அவர்கள் உழைப்பை உறிஞ்சி, தேவனுக்கு ஏற்காதவர்களாய் வாழ்கின்றனர். ஆனால் ஆண்டவர் சொல்கிறார், அவர்கள் நினைத்தபடி உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தங்கள் ஜீவனை நஷ்டப்படுத்தி கொள்ளும் அவர்களுக்கு, இந்த பணம், பதவி, பட்டம், புகழ், சுகபோக வாழ்க்கை ஆகிய இவைகளினால் என்ன லாபம்? உயிர் போகும் ஒரு நொடி பொழுதில், இவையெல்லாம் ஒன்றுமில்லாமல் போய்விடும். ஆனால் அதைப்பற்றிய அறிவு இவர்கள் ஒருவருக்கும் இல்லை. ஏதோ இவை தங்களை காலம் காலமாய் வாழவைக்கும் என்று நினைக்கின்றனர். உலகம் முழுவதையும் கைப்பற்றி ஆள நினைத்த மகா அலெக்சாண்டர் முப்பத்தி இரண்டாம் வயதில் தன்

மரணப்படுக்கையில் இதை உணர்ந்தான். அதனால் தன் கைகளை தன் சவப்பெட்டிக்கு வெளியே வைத்து, தன்னை கொண்டு செல்ல கூறினான். உலகம் முழுவதையும் குறுகிய காலத்தில் தன் அதிகாரத்திற்குட்படுத்தி, ஆள நினைத்த தான் வெறுங்கையனாய் செல்வதை, உயிரோடு இருக்கும் மற்றவர்களாவது உணர்ந்து தங்கள் ஜீவனை தப்புவித்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தான். ஆனால் அவனுக்கோ காலம் கடந்து போய்விட்டது. அப்படியானால் பணம், பதவி, பட்டம் என இவை எதுவும் தேவை பிள்ளைகளுக்கு இருக்கக்கூடாதா என்று நாம் கேட்கலாம்.

ஆனால் ஆண்டவர் அதையும் தெளிவாய் **மாற்கு 10:24** இல் **"ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது!"** என்றார். அதன் பின்பே **மாற்கு 10:25** இல் **"ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்."** ஆம் மேலே குறிப்பிடப்படும் ஐஸ்வர்யவான், தேவன் மேல் நம்பிக்கை வைக்காமல் ஐஸ்வர்யத்தின் மேல் நம்பிக்கை வைக்கிறவன். ஆனால் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோபு, தாவீது, யோசேப்பு, தானியேல் என இவர்கள் யாவரும் ஐஸ்வர்யவான்களாய், அதிகாரம் உடையவர்களாய், புகழப்பட்டவர்களாய், ஞானவான்களாய் இருந்தனர். ஆனால் அவர்கள் தங்கள் ஜீவனை நஷ்டப்படுத்தாமல், தேவ மனிதர்களாய் இருந்தனர். காரணம் தங்களுக்கு இவ்வுலகத்தில் கொடுக்கப்பட்ட யாவும் இறைவனால் அருளப்பட்டது என்றும், அதை தேவ நாம மகிமைக்காக பயன்படுத்த வேண்டும் என்றும் அறிந்திருந்தனர். அதனால்தான் தாவீது தான் சம்பாதித்து வைத்திருந்த எண்ணற்ற ஐஸ்வர்யத்தை தேவாலயம் கட்ட அர்ப்பணித்தார். யோசேப்பு, தானியல் போன்றோர் தங்கள் வரத்தை / ஞானத்தை, தங்களை மேன்மைபடுத்திக்கொள்ள பயன்படுத்தாமல், அதன் மூலம் தேவ நாமம் மகிமை அடைய செயல்பட்டனர்.

மேலும் இவையெல்லாம் இல்லாமலும், தங்களை தேவனால் நடத்த முடியும் என்று நினைத்தனர். ஆபிரகாம் ஒரு புறம் ஐஸ்வர்யவானாய் விருத்தி அடைந்து வந்தாலும், லோத்துவை மீட்டெடுத்து, அத்தோடு கூட சோதோமின் மனிதர்களை மற்றும், அவர் உடைமைகளை மீட்டெடுத்து வரும்பொழுது, **"சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான்." (ஆதி 14:21)**. அக்கால நியாயப்படி போரிட்டு ஜெயிப்போர், உடைமைகளை கைப்பற்றுவது இயல்பானதாகும். ஆனால் ஆபிரகாமோ, அது தேவனால் தனக்கு கொடுக்கப்படவில்லை என்பதை உணர்ந்து **"அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்." (ஆதி 14:22,23)**. இங்கு வானத்தையும், பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவன் என்று அவர் குறிப்பிடுவது, மிக அருமையானதாகும். தேவன் பூமிக்கும், வானத்திற்கும் மேலாக உன்னதத்தில் இருக்கிறார். அப்படிப்பட்டவர் மூலமாகவே தனக்கு அருளப்படும் வானத்திற்கும் (ஆவிக்குரிய) ஆசீர்வாதங்களும், பூமிக்குரிய (இவ்வுலகத்திற்குரிய) நன்மைகளும் தனக்கு போதுமானது, அதைத் தவிர வேறு எந்த வழியில் வரும் பொன்னும், பொருளும், வேறு எந்த ஆசிர்வாதமும் தனக்கு தேவையில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

மேலும் யோபு, கர்த்தர் தனக்கு இப்பூமியில் கொடுத்த எல்லா ஆசீர்வாதங்களையும் எடுத்துக் கொண்ட பின்பும், **யோபு 1:21** இல் **"கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்."** மேலும் **யோபு 2:10** இல் தன் மனைவியிடம் **"நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ**

**என்றான்"**. ஆம் இவ்வுலகத்தில் தனக்கு கொடுக்கப்பட்ட அனைத்தும், தான் தன் சுய பலத்தினால் சம்பாதித்தது அல்ல, தேவ கரத்தினால் அருளப்பட்டது என்பதை அறிக்கையிட்டார். ஆம் நமக்கு இவ்வுலகில் கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்தும் தேவனால் நமக்கு கொடுக்கப் பட்டது, அதை அவர் நாம மகிமைக்காக பயன்படுத்த வேண்டும் என்பதை, நாம் உணர்வோமானால், நம் ஜீவனை நாம் நஷ்டப்படுத்தாமல், தேவ ராஜ்யத்தில் பிரவேசிக்க பாத்திரவான்களாய் இருப்போம்.

எனவே தம் சித்தப்படி எதையெல்லாம் தேவன் நம் வாழ்வில் தருகிறாரோ, அது செல்வமானாலும், அதிகாரமானாலும், ஞானமானாலும், அதைப் பெற்று அனுபவித்து, அதன் மூலம் தேவ நாமம் மகிமைப்படும்படியாய், மற்றவர்களுக்கும் அவர் சித்தப்படி பகிர்ந்தளித்து வாழுவோமானால், அப்பொழுது அது நன்மையாக இருக்கும். ஆனால் அவ்வாறு இல்லாமல் **"அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்." (லூக் 12:17-21)**.

மேற்கண்ட காரியங்கள் ஐஸ்வர்யவானை பற்றியது என்பது நமக்கு நன்றாக தெரியும். இதை ஆண்டவர் கூறுவதற்கு முன் **லூக் 12:15** வசனத்தில் **"பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல"** என்று கூறி அதற்கு உவமையாகவே மேற்கண்ட ஐஸ்வர்யானைப் பற்றி கூறினார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய காரியம் பொருளாசை. ஆம் ஐஸ்வர்யவானாய் இருப்பது குற்றமல்ல, ஏனெனில் தேவனே பூமியின் பலனாகிய அவனது நிலத்தை நன்றாய் விலை செய்தார் (**லூக் 12:16**). இவ்வாறு தேவனால் நல்ல விளைச்சலைப் பெற்று, வேலைக்காரரின் கடின உழைப்பினால் நல்ல அறுவடையை பெற்றவன், அதை எவ்வகையில் செலவழிக்க, தனக்கும் மற்றவர்களுக்கும், பிரயோஜனம் உண்டாக பயன்படுத்த வேண்டும் என்பதை சிந்தியாமல், தான் இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாய் இருப்பதற்கு அதை பயன்படுத்த ஆசைப்பட்டதே அவனுடைய பொருளாசை ஆகும்.

அதனால் இவ்வுலக ஐஸ்வர்யம் அவனுக்கு இருந்தும், தேவனுடைய பார்வையில், அவரிடத்தில் ஐஸ்வர்யவானாய் அவன் காணப்படவில்லை. எனவே அவனிடத்தில் காணப்பட்ட குற்றம், தேவ சித்தப்படி தன் செல்வத்தைப் பயன்படுத்தி தேவனிடத்தில் ஐஸ்வர்யவானாய் இல்லாமல், தனக்காகவே பொக்கிஷங்களை சேர்த்து வைத்தது தான். எனவே முதலாவதாக நமக்கு இருக்கும் பணம், பதவி, பொருள், ஞானம் யாவும் இறைவனால் நமக்கு கொடுக்கப்பட்டது என்ற அறிவு நமக்கு வேண்டும். மேலும் அப்படிப்பட்ட காரியங்களை பெருக்கிக் கொள்ளும் போதும், தேவ சித்தப்படி அவை நம் வாழ்வில் நடைபெறுகிறதா அல்லது குறுக்கு வழியில் நாம் அதை சேர்கிறோமா என்பதை உணர்ந்துகொண்டு, ஆபிரகாமை போல் அறிக்கையிட வேண்டும். மேலும் அதை சரியானபடி செலவு செய்து, தேவனிடத்தில் ஐஸ்வரியம் உள்ளவர்களாய் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். இறுதியாக இவையெல்லாம் ஒரே நாளில் நம்மை விட்டு எடுத்துக்கொள்ளப்பட்டாலும், "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்று யோபுவை போல் அறிக்கையிட தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுது, உலகத்தை ஆதாயப்படுத்த நினைத்து, நம்

ஜீவனை நஷ்டப்படுத்தி கொள்ளாமல், இவ்வுலகத்திலும் ஐஸ்வர்யவான்களாய், தேவனிடத்திலும் ஐஸ்வர்யவான்களாய் இருந்து, நித்திய ஜீவனையும் பெற்று, நம் ஆத்துமாவை, நஷ்டப்படுத்தாமல் ஆதாயப்படுத்திக் கொள்வோம், ஆமென் அல்லேலூயா.

# 101. நல்ல பங்கு

**தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். (லூக் 10:42)**



மேற்கண்ட வசனத்தின் மூலம், ஆண்டவர் நமக்கென வைத்திருக்கும் மேலான பாக்கியத்தை, நன்மைகளை, ஆசீர்வாதங்களை நாம் தெரிந்துகொள்ள, அதை பெற்றுக் கொள்ள அவர் எதிர்பார்க்கிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். மார்த்தாள், மரியாள் என்ற இருவருமே ஆண்டவரை ஏற்றுக் கொண்டனர். அவருக்கென தங்களை அர்ப்பணித்தனர். ஆனால் ஆண்டவர் தங்களுக்கு எதை தர விரும்புகிறார், எதற்காக தங்களை சந்தித்து இருக்கிறார் என்பதை புரிந்து கொள்வதில் வேறுபடுகின்றனர். இந்த வேறுபாடே இன்று தேவ பிள்ளைகளிடமும், குறிப்பாக பல்வேறு சபை பிரிவினரிடையேயும் காணப்படுகிறது. இதை நாம் சற்று ஆழமாக சிந்திப்போம்.

**லூக் 10:38** கூறுகிறது **"பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்."**. இங்கு முதலாவது மார்த்தாளுடைய பெயரே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவளே ஆண்டவரைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள் என்று. பிறகு **லூக் 10:39** வசனத்தில், **"அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்."** இங்கு மார்த்தாளை வைத்தே அவளுடைய சகோதரியாகிய மரியாள் அடையாளப்படுத்தப்படுகிறாள். ஆனால் அதே வசனத்தில், மரியாள் ஆண்டவருடைய பாதத்தருகே உட்கார்ந்து அவர் வாயிலிருந்து வந்த தேவ சத்தத்தை முழுமனதோடு கேட்டுக்கொண்டிருந்தாள் என்பதை காணலாம். அக்காலத்தில் இருந்த மற்ற எந்த வேத பாரகர்கள் மற்றும் வேதத்தை போதிப்பவர்களை காட்டிலும், ஆண்டவருடைய வார்த்தை அதிகாரம் உடையதாய், வல்லமை உடையதாய்

இருப்பதை அவள் உணர்ந்து கொண்டாள். எனவே மற்ற எல்லாவற்றையும் மறந்து, அவர் பாதத்தின் அருகே அமர்ந்து, மெய்மறந்து, அவருடைய கிருபையுள்ள வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். இது ஆண்டவர் நம்மை ஒரு மேலான அனுபவத்திற்காக அழைத்து இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டவர்களுக்கே விளங்கும்.

**லூக் 10:40** வசனம் கூறுகிறது **"மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்."**. இங்கு மார்த்தாள் பற்பல வேலைகளை செய்வது ஏதோ தனக்காக அல்ல. ஆண்டவருக்காகவும், அவரோடு கூட வந்திருக்கும் சீஷர்களுக்காகவும் தான். அவருக்காகவும் மற்றவர்களுக்காகவும் நல்ல உணவை தயாரிக்க வேண்டுமே, இன்னும் அவர் தன் வீட்டில் தங்குவதற்கு வேண்டிய காரியங்களை செய்ய வேண்டுமே என்பதில் அவள் முனைப்போடு இருந்தாள். ஒரு விதத்தில் இவையாவும் தேவையே. அதற்காக கடினமாக உழைக்க வேண்டும். எனவே மார்த்தாள் பிரயாசப்பட்டதும் ஆண்டவருக்காக தான். ஆனால் ஆண்டவர் அவளுக்கு கூறிய பதிலோ **"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்." (லூக் 10:41,42)**. ஆம் மார்த்தாளை போல இன்று ஆண்டவருக்காக உழைக்க வேண்டும், பெரிய காரியங்களை செய்ய வேண்டும் என்று செயல்படுகிற தேவ பிள்ளைகளும் சபை மக்களும் உண்டு. ஆண்டவருடைய சுவிசேஷம் எங்கும் அறிவிக்கப்படவேண்டும், பெரிய ஆலயங்களைக் கட்டி எழுப்ப வேண்டும், அனேகர் பயன்படும் வகையில் பல்வேறு ஊழியங்களை ஏற்படுத்த வேண்டும் என்று தனி நபராகவோ, சபையாகவோ, ஒரு அமைப்பாகவோ பிரயாசப்படுவோர் உண்டு. இவர்கள் பிரயாசப்படுவதெல்லாம் ஆண்டவருக்காகவும், மற்ற தேவ பிள்ளைகளுக்காகவும் தான். இதில் தவறு ஒன்றும் இல்லை, ஆனால் இதற்கும் மேலான ஒரு அனுபவத்திற்குள்ளாய், தேவ வார்த்தையை, அவருடைய பிரசன்னத்தை மற்ற எதைக் காட்டிலும் அதிகமாய் தேடுவோரையே அவர் தேடுகிறார்.

மேற் போக்காக பார்க்கும் பொழுது ஒரு பெண்ணாய், மரியாள் தன் வீட்டிற்கு வந்திருப்போரை கவனிக்க வேண்டிய கடமையிலிருந்து தவறி இருப்பதை போல் தோன்றலாம். ஆனால் ஆண்டவருடைய கிருபையுள்ள வார்த்தை மற்ற எல்லாவற்றையும் மறக்கச் செய்து அவருடைய பாதத்தில் அவளை அமர வைத்தது. எனவே மார்த்தாளின் பார்வையில் மற்ற பொதுமக்களின் பார்வையில் அவள் எந்த வேலையும் செய்யாமல் சும்மா உட்கார்ந்து இருப்பவளாக காணப்படலாம். ஆண்டவருக்கும் மற்ற சீஷர்களுக்கும் அவளால் என்ன பிரயோஜனம் என்று நினைக்கலாம். ஆனால் ஆண்டவர் அறிவார் எவ்வளவுக்கெவ்வளவு ஆண்டவருடைய வார்த்தை ஒரு மனிதனுக்குள் செல்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் ஆண்டவருக்காக பிரகாசிப்பார்கள் என்று.

ஆண்டவருடைய கிருபையுள்ள வார்த்தை மார்த்தாளின் காதில் விழுந்த பொழுதும், அவள் தான் செய்ய வேண்டிய கடமையில், கண்ணும் கருத்துமாக இருந்தாளே ஒழிய, ஆண்டவரின் வார்த்தைகள் அவளை அவரின் பாதத்தில் வந்து அமர வைக்க வில்லை. ஆண்டவருக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று அவள் மாம்சத்தில் பிரயாசப் பட்டாள், ஆனால் தன்னால் அதை செய்ய இயலாத பொழுது, அவள் ஆண்டவரிடம் முறையிட்டாள். ஆனால் மரியாளோ ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து அவர் வார்த்தைகளை கேட்டு பெலன் கொள்வதே முதலாவது கடமை. அதன்பிறகே ஆண்டவருக்காக விடாமுயற்சியோடு முறுமுறுக்காமல் செயல்பட முடியும் என்பதை அறிந்துகொண்டாள். இதை உணர்த்துவிக்க, ஆண்டவரும் மார்த்தாளிடம், நீ அனேக காரியங்களை குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய், ஆனால் தேவையானது

ஒன்றே, தேவ உறவு, தேவ ஐக்கியம், அவர் பிரசன்னம், அவருக்குள் வாழ்வது போன்ற தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை மரியாள் தெரிந்து கொண்டாள் என்பதை ஆண்டவர் மார்த்தாளிடம் கூறினார்.

எனவே இன்றும் வெளிப்படையாக பல்வேறு காரியங்களை ஆண்டவருக்காக செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு உழைப்போர் பலர். ஆனால் அவ்வாறு அவர்கள் செயல்பட துவங்கும் முன்னர், தேவையானது எது, முதன்மையானது எது, நல்ல பங்கு எது என்பதை உணர்ந்து, ஆண்டவருக்குள் தங்களை முதலாவது பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது ஆண்டவருக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று முற்படும் பொழுது, அதில் துன்பம் ஏற்பட்டாலும் சக மனிதர்களின் ஆதரவு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், தெளிவாக ஆண்டவர் என்ன செய்யச் சொல்கிறார் என்பதை கேட்டு செயல்படுவதன் மூலம், மார்த்தாளை போல, என்னால் தனியாக வேலை செய்ய முடியவில்லையே, ஊழியத்தில் பலன் ஏதும் இல்லையே என்று அவசரப்பட்டு கலங்காமல், அழைத்தவர் உண்மையுள்ளவர் எப்படியும் தங்களை நடத்துவார் என்று, மோசேயை போல, தாவீதைப் போல, அப்போஸ்தலனாகிய பவுலை போல எந்த பாதகமான சூழலின் மத்தியிலும், தேவ சித்தத்தை ஆவலோடு கேட்கும் அனுபவம், தேவ உறவு, தேவ ஐக்கியம் ஆகிய விட்டெடுபடாத இவைகள், ஆண்டவருக்குள்ளாய் தொடர்ந்து செயல்பட அவர்களுக்கு பெலனளிக்கும்.

ஆனால் மார்த்தாளை போல, வசன ஆழமில்லாமல் வெறும் உணர்ச்சிவசப்பட்டு செய்யப்படும் ஊழியங்களில் சோர்வு ஏற்படும் பொழுது, அது மற்றவரை நோக்கி குறை சொல்ல வழி வகுக்கும். ஆண்டவரிடமே முறையிட செய்யும். ஆனால் வெளிப்படையாக பெரிய காரியங்களை செய்தவர்கள் போல் காணப்படாத சிலர், அந்தரங்கத்தில் ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து அவருடைய ஐக்கியத்தில் நிறைந்திருப்பதன் மூலம், தேவ மக்களிடையே செய்யப்படும் காரியங்கள் அளப்பெரியது, அதை தேவன் அறிவார். கடந்த இரண்டு வருடங்களில் ஒரு வேளை பெரிய பெரிய கூட்டங்கள், சர்வதேச மாநாடுகள், திருச்சபைகள் ஆகியவை கூட்ட படாமல், செயல்படாமல் இருந்திருக்கலாம். இதனால் சில ஊழியர்கள் சோர்ந்துபோயினர். ஊழியத்திற்கு வேண்டிய தேவைகள் சந்திக்கப்படவில்லையே என்று கலங்கினார். ஆனால் யாரும் அறியா, தேவன் மட்டுமே அறிந்துள்ள, மரியாளை போன்றோர் இந்த கொரோனா காலத்தை அதிகமாய் பிரயோஜனப்படுத்தி, ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து, அவர் வார்த்தையை எவ்வித தடையுமின்றி கேட்டு, அதன் மூலம் எந்த சூழ்நிலையிலும் திடமனதோடு, இக்கொரோனா காலத்தை ஜெபத்தோடு ஜெயித்தனர், அவர்களை தேவனே அறிவார். எனவே நாமும் ஆண்டவர் கூறியபடி தேவையான நல்ல பங்கை, அவருடைய ஐக்கியத்தை, உறவை, வார்த்தையை முதலாவது தேடுவோம். அப்பொழுது மற்ற எல்லாம் நமக்கு கூட கொடுக்கப்படும். ஆமென், அல்லேலூயா.

## 102. சீர்ப்படுத்துவார்

**கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக.** (1 பேதுரு 5:10)




நம் வாழ்க்கையில் நாம் ஆவியிலும், ஆத்துமாவிலும், மாம்சத்திலும் சோர்ந்து போகும் பொழுது, பாடு அனுபவிக்கும் பொழுது, பல்வேறு குழப்பமான சூழ்நிலைகளில் செல்லும்பொழுது, பொல்லாத மனிதர்களின் மூலமாய் காயப்படும் போது, எதிர்பாராத வியாதி வேதனைகளுக்கு ஊடாக செல்லும் பொழுது, நம்முடைய விசுவாச வாழ்க்கையும், ஆண்டவருக்குள்ளான பக்தி வைராக்கியமான வாழ்க்கையும், அவருக்கே கீழ்ப்படிந்து அவரை மாத்திரமே சார்ந்து வாழ்கிற வாழ்க்கையும் சற்று நிலை தடுமாறுகிறது. இதற்கு காரணம் மேற்கண்ட வசனத்திற்கு முந்தைய இரண்டு வசனங்களில் கூறப்பட்டுள்ளது. **1 பேதுரு 5:8,9** வசனங்கள் இவ்வாறு கூறுகிறது **"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து**

**நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.“**. இங்கு பிசாசானவன், நம் வாழ்க்கையில் இப்படிப்பட்ட எதிர்பாராத சூழ்நிலைகளை கொண்டு வருகிறான் என்றும், விசுவாசத்தில் உறுதியாக இருந்து அவனுக்கு எதிர்த்து நிற்க வேண்டும் என்றும் வேதம் நமக்கு அறிவுரை கூறுகிறது. மேலும் உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறது என்று கூறப்பட்டுள்ளது. ஆம், நாம் மாத்திரம் இந்த விசுவாச போராட்டத்தில் தனியாய் இருக்க வில்லை, தேவ பிள்ளைகள் ஒவ்வொருவரும் இப்படி பட்ட பாடுகள் ஊடாகக் கடந்து செல்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் சத்துருவாகிய பிசாசானவன் நம் வாழ்க்கையில் பல்வேறு விதங்களில் தேவையில்லாத பிரச்சினைகளை கொண்டு வருகிறான். நம் சொந்த குடும்பத்தில், ஊழியத்தில், பணி செய்யும் இடத்தில், குடும்ப உறவினர் மத்தியில், சமுதாயத்தில் என பல்வேறு நிலைகளில் பல்வேறு காரணங்களுக்காக பாடுகள் உண்டாகிறது. அவற்றின் ஊடாக நாம் கடந்து செல்லும் பொழுது, சில நேரங்களில் நாம் தேவ உறவு, தேவ ஐக்கியம் தேவனை சார்ந்திருத்தல் ஆகியவற்றை இழந்து போகிறோம். அப்பாடுகள், பிரச்சினைகள் பற்றி நினைத்து, நிகழ்கால வாழ்க்கையில் செய்ய வேண்டியவற்றை செய்ய முடியாமல் போகிறோம். சில நேரங்களில் ஊழியப் பாதையில் ஏற்படும் சோர்வுகள் குடும்பத்தை கவனிக்க முடியாமல், பல காரியங்களை திட்டமிட்டு செய்ய முடியாமல், சொந்த உடல் நலத்தை கூட கவனிக்க முடியாமல், நம்மை சோர்வடைய செய்கிறது. அப்படியே வேலை ஸ்தலத்தில் உண்டாகிற பாடுகள் வீட்டில் ஏற்படும் பிரச்சினைகள் என ஒன்று மற்றொன்றை பாதித்து இறுதியில் நாம் எதையும் செய்ய முடியாமல் சோர்ந்து போய் அமர்ந்து விடுகிறோம். சத்துருவானவன் மிகவும் தந்திரமாக ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதத்தில் வஞ்சிக்க பார்க்கிறான். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படும் பொழுது தேவனுடைய பெரிதான கிருபை நமக்குத் தேவையாய் இருக்கிறது. **1 பேதுரு 5:10** வசனம் ஆண்டவர் எவ்வாறு இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து நம்மை தப்பிக்கிறார் என்பதை விளக்குகிறது. அவற்றை ஒவ்வொன்றாக பார்ப்போம்.

(i) **நித்திய மகிமை**: வசனம் சொல்கிறது ஆண்டவர் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்திருக்கிறார் என்று. எனவே நமது முடிவு ஏதோ இந்த பாடுகளோடு அழிந்து போக போவதில்லை. அது நித்திய நித்தியமாய் கிறிஸ்துவுக்குள் மகிமையோடு வாழ இருக்கிறது. எனவே எப்படிப்பட்ட சூழ்நிலை தற்போது இருந்தாலும் அது நம் வாழ்க்கையின் முடிவல்ல, நித்திய மகிமையே நம்முடைய முடிவு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

(ii) **சகல கிருபையும் பொருந்திய தேவன்**: ஆம் அன்று அப்போஸ்தலனாகிய பவுல் தான் அனுபவித்த வேதனையின் மத்தியில் ஆண்டவரை நோக்கி கூப்பிட்ட பொழுது அவருக்கு கிடைத்த மறுமொழி **“என் கிருபை உனக்குப் போதும்” (2 கொ 12:9)** என்பதே. அவர் கிருபை நமக்கு போதும். எப்படிப்பட்ட சூழ்நிலையையும், சகல கிருபையும் பொருந்திய தேவன் அதை கடந்து வர உதவி செய்வார்.

(iii) **கொஞ்சகாலம் பாடனுபவித்தல்**: நாம் ஏற்கனவே கண்டபடி இந்தப் பாடுகள் நமக்கு அனுமதிக்கப்பட்டு இருந்தாலும் அவற்றினால் நாம் சேதப்படுவதில்லை. தேவ கிருபை நம்மை காக்கும். அதே நேரத்தில் வெகு சீக்கிரமாக இவற்றிற்கெல்லாம் ஒரு முடிவு உண்டாகும். இவ்வுலகில் இப்பொழுது நடக்கும் அநீதியை நாம் காணும் பொழுது உண்மைக்கு மதிப்பில்லாதது போல, பொய்யும் பித்தலாட்டமும் தேவனுக்கு எதிரான காரியங்களும் ஜெயிப்பது போல, வல்லமை கொள்வது போல காணப்பட்டாலும், இவை எல்லாம் எங்கு போய் முடியுமோ என்று கூட நாம் கவலைப்படலாம், ஆனால் சர்வலோக நியாயதிபதியாய் இருக்கிற கர்த்தராகிய தேவன் சீக்கிரமாய் நியாயம் செய்வார். எனவே **“ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று” (ரோ 8:18)** வேதம் கூறுகிறது. மேலும் நம் வாழ்க்கையில் ஆண்டவர்

பல்வேறு விதங்களில் மாற்றங்களைக் கொண்டு வருகிறார் அவற்றை ஒவ்வொன்றாக பின்வருமாறு காண்போம்.

(a) **சீர்ப்படுத்தி**: ஆம் சில வேளைகளில் நம் வாழ்க்கையில் ஏற்படுகின்ற பாடுகள், துக்கங்கள், நம் ஆவி ஆத்துமா சரீரத்தை சீரழித்து விடுகிறது. நம் வாழ்க்கை நமக்கே பிரியம் இல்லாமல் போகிறது. விசுவாச ஜீவியத்தில் தடுமாறுகிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆண்டவர் முதலாவது நம்மை சீர்ப்படுத்துகிறார். ஏனோதானோ என்று செல்லும் நம் விசுவாச வாழ்க்கையை சீர்ப்படுத்துகிறார்

(b) **ஸ்திரப்படுத்தி**: இரண்டாவதாக நம்மை ஸ்திரப்படுத்துகிறார். நம் வாழ்க்கையில், நாம் சீரான பாதைக்கு வந்தவுடன் அதில் ஸ்திரமுடன் நிற்க பெலன் தருகிறார். ஒருவேளை பிரச்சனைகள் அப்படியே இருக்கலாம், பாடுகள் அப்படியே இருக்கலாம், அவரோ நம்மை அதன் மத்தியிலும் ஸ்திரப்படுத்தி சோர்ந்து போகாது இருக்க செய்கிறார். அப்பொழுது நம் மூலமாய் நம்மை சார்ந்து இருப்பவர்களும் ஸ்திரப்படுவர். பாடுகளினால் உண்டாகும் எதுவும் நம் வாழ்க்கை ஓட்டத்தை பாதிக்காது.

(c) **பலப்படுத்தி**: மூன்றாவது, **"என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்"** (**2 கொ 12:9**) என்று அப்போஸ்தலனாகிய பவுலுக்கு செல்லப்பட்டது போல, ஆண்டவருடைய கிருபை நம்மை ஸ்திரப்படுத்தும், அதேவேளையில் பாடுகளினால் உண்டாகிய பலவீனத்தால், நம் ஆவி ஆத்மா மற்றும் சரீரம் பலவீனப்படும் பொழுது, ஆண்டவருடைய பெலன் பூரணமாய் நம் மேல் விளங்கும், நம்மை பலப்படுத்தும், பெலனடையச்செய்யும்.

(d) **நிலை நிறுத்துவார்**: இறுதியாக நாம் நம்முடைய பாடுகள் மத்தியிலும், சீர் படுத்தப்பட்டு அதனால் உண்டாகிய ஸ்திரத்தினால் பலப்பட்டு, நம் வாழ்க்கை ஓட்டத்தை இவ்வுலகில் தொடர்ந்து ஓடும் பொழுது, நாம் தேவனால் நிலை நிறுத்தப்பட்டு, நித்திய மகிமைக்குள் பிரவேசிக்கும் வரைக்கும் காக்கப்படுவோம். எனவே தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருந்து, விழித்திருந்து, விசுவாசத்தில் உறுதியாய் இருந்து, பிசாசானவனுக்கு எதிர்த்து நின்று, தேவனுடைய கிருபையை மாத்திரமே சார்ந்திருந்து, இந்த கொஞ்ச கால பாடநுபவித்தலை கடந்துபோவோமாக. **"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்." (1 கொ 15:57)**, ஆமென், அல்லேலூயா.

## 103. தேவ அன்பு

**உங்களில் தேவ அன்பு இல்லையென்று உங்களை அறிந்திருக்கிறேன். (யோ 5:42)**




மேற்கண்ட வசனத்தை ஆண்டவர் யாரை பார்த்து கூறினாரென்றால் **"இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்தபடியால், யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலைசெய்ய வகைதேடினார்கள்." (யோ 5:16)**, மேலும் **"அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்." (யோ 5:18)**.

இங்கு நாம் ஆண்டவரை குற்றப்படுத்தி, அவரை கொலை செய்யும் அளவிற்கு மூர்க்கமாய், மேற்குறிப்பிட்ட யூதர்கள் காணப்பட்டதற்கு, அவர்கள் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்ட தேவ கட்டளைகளுக்காக வைராக்கியம் பாராட்டியோ, அல்லது தேவனுக்கு சமமாக யாருமில்லை என்ற சத்தியத்திற்காகவோ, ஆண்டவரோடு போராடவில்லை. அப்படி இருந்திருப்பார்களானால் ஆண்டவருடைய வாயிலிருந்து புறப்பட்ட சத்திய வார்த்தைகள் அவர்களை சவுல், பவுலாக மாறியது போல் மாற செய்திருக்கும். உண்மையில் அவர்கள் ஒரு மாய்மாலமான வாழ்க்கையை சமுதாயத்தில் வாழ்ந்து, தங்களை தேவனுக்காக வைராக்கியம் கொண்டவர்கள் போல் காண்பித்து கொள்ளவே இப்படியாக தேவையில்லாமல் ஆண்டவரையே கொலைசெய்யும் அளவிற்கு அதிக அதிகமாய் வகை தேடினார்கள்.

**"இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது." (யோ 4:22)** என ஆண்டவரே சமாரிய பெண்ணிடம் கூறியுள்ளார். எனவே உண்மையாக தேவனுக்காக வைராக்கியம் பாராட்டுவோர், தங்களின் மூலமாய் இரட்சிப்பு மற்றவர்களுக்கு கடந்து செல்ல

வேண்டும் என்று பிரயாசப்படுவார்களேயொழிய, யாரையும் கொலை செய்ய, துன்புறுத்த முற்படமாட்டார்கள். எனவே தான் தன்னை எதிர்த்த யூதர்களை குறித்து ஆண்டவர் கூறினார் **"உங்களில் தேவ அன்பு இல்லையென்று" (யோ 5:42)**, அவர்களிடம் காணப்பட்ட தெல்லாம் மாய்மாலமான முறையில் தங்களை தேவபக்தியுள்ளவர்கள் போல், மற்ற யூதர்களை காட்டிலும் தேவ வைராக்கியம் உள்ளவர்கள் போல், காண்பித்துக் கொள்வதே ஆகும். இன்றும் சபையிலும் இப்படிப்பட்ட மக்கள் காணப்படுகின்றனர். அவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள், விசுவாசிகள் என்று கூறிக் கொண்டாலும் உண்மையில் அவர்களிடத்தில் தேவ அன்பு இல்லை. இன்னும் ஒருபடி மேலே சென்று பார்த்தால் சபையில் முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ ஊழியம் செய்கிறோம் என்று கூறிக் கொள்வோறிலும் சிலர் தேவ அன்பு அற்றவர்களாக இருக்கின்றனர். இவர்கள் வாழ்க்கையில் அதிகமாய் ஜெபம், உபவாசம், ஆவியில் நிரம்புதல் போன்ற காரியங்கள் காணப்பட்டாலும் உண்மையில் அவர்களிடத்தில் தேவ அன்பு இல்லை. அவர்கள் செய்வதெல்லாம் தேவனிடத்திலிருந்து ஏதோ ஒரு பிரதிபலனை எதிர்பார்த்து செய்யப்படுவதே தவிர தேவ அன்பினால் செய்யப்படுவது அல்ல.

**"ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத் 7:11)** என்று ஆண்டவரே கூறியுள்ளார். எனவே ஆண்டவர் நம் வாழ்வில் செய்வதெல்லாம் நன்மையான காரியங்களே. அவர் கரத்தை மீறி எதுவும் எவரும் நம்மை தொட முடியாது. அதே நேரத்தில் பிள்ளைகள் கேட்பதுபோல நாம் வேண்டிக் கொள்வது எல்லாவற்றையும் அவர் தமது சித்தப்படியே நமக்கு தருகிறார். அதே நேரத்தில் பிள்ளைகள் எதையாவது கண்டு அஞ்சும் நேரத்தில், பிதாவின் பாதுகாவலை, பிரசன்னத்தை, தேடி நாடுவது போல், நம் வாழ்க்கையிலும் சத்துருவாகிய பிசாசானவன் வியாதி மூலமாகவோ, அல்லது பொல்லாத மனிதரின் மூலமாகவோ, அல்லது வேறு எந்த ஒரு விதத்திலோ நம்மை பயமுறுத்த நினைக்கும் பொழுது, அப்பா பிதாவே காப்பாற்றும் என்று கேட்பது, அவர் நம் மீது அன்பு வைத்துள்ள பிதா என்பதனால்தான். ஆனால் இதைப் புரிந்துகொள்ளாதோர், சில பக்தியான காரியங்களை செய்யவில்லை, காணிக்கை போன்றவற்றை கொடுக்கவில்லை என்றால், ஆண்டவர் நம்மைத் தண்டித்து விடுவார் என்றும். அல்லது சில மாய்மாலமான காரியங்களை செய்து தேவனையே திருப்தி செய்து விடலாம் என்ற முட்டாள்தனமான எண்ணம் உள்ளவர்களே. தேவனை பிதாவாக பார்க்க மனமில்லாமல், தேவ அன்பு சற்றும் இன்றி, வெறும் பக்தியாளர்களாய் தங்களை காண்பித்துக் கொள்வர். இதில் வேதனையான காரியம் என்னவென்றால் இவர்களது மாய்மாலத்தைத் பின்பற்றி உண்மையாய் தேவனின் அன்பு கூற நினைப்பவரும் மாய்மாலமான காரியங்களை செய்ய தள்ளப்படுகின்றனர்.

இந்த தேவ அன்பு இல்லாத காரணத்தினாலேயே இன்று சபைகள் நிரம்பி வழிவதை போல் காணப்பட்டாலும், அனேகர் ஆவியில் நிறைவதை போல் காணப்பட்டாலும் ,அதிகமான காணிக்கை கொடுக்கப்பட்டாலும், பல்வேறு இடங்களில் குறிப்பாக இன்றைய இளைஞர்கள் சமூக வலைதளங்களில் தேவ வைராக்கியம் உள்ளவர்கள் போல் பாடல்கள் இயற்றி பதிவிட்டாலும், இன்னும் பல்வேறு காரியங்களை செய்தாலும் தேசத்தில் எழுப்புதல் ஏற்படவில்லை. அதற்கு மாறாக இவர்களின் செய்கைகளை பின்பற்றுவோர், குறிப்பாக இளைஞர்கள் தேவ அன்பை விட்டு உலகத்திற்குள்ளாய் சென்று தங்களைக் கெடுத்துக்கொள்கின்றனர். தேவபயம், பரிசுத்தம் எதுவுமின்றி, வெறும் வைராக்கியம் காட்டிய யூதர்களைப் போல் இவர்கள் ஏதோ தேவனுக்காக வைராக்கியமாக செய்வது போல் இருந்தாலும், அவர்கள் மூலமாய் தேவ நாமத்திற்கு எந்தவித மகிமையும் இல்லை. காரணம் அவர்கள் தேவனுக்கே மகிமை என்று பாடினாலும், ஆடினாலும் தங்களை முன்னிறுத்தவே நினைக்கின்றனர். இதில் இன்னும் மோசமான காரியம் என்னவெனில்,

தேவபக்தியை ஆதாய தொழிலாக மாற்றி தங்கள் வயிற்றிற்கே ஊழியம் செய்கின்றனர். இப்படிப்பட்டவர்களை பார்த்து ஆண்டவர் கூறுகிறார் உங்களில் தேவ அன்பு இல்லை என்று.

எனவே தேவனை அப்பா பிதாவே என்று கூப்பிட அறியாமல், தேவ அன்பு தங்களில் இல்லாமல், வெறும் மத வைராக்கியம் பாராட்டிக் கொண்டு தங்கள் மனதில் தோன்றியவைகளை செய்து, பாவத்தைத் பற்றியோ பரிசுத்த வாழ்வை பற்றியோ கவலைப்படாமல் வயிற்றுப் பிழைப்பிற்காக வாழ்வோர் இப்படிபட்டவர்கள். எனவே உண்மையை நாம் ஆண்டவரை தேடுவோமானால், நாம் அவர்களைப் போல் மாய்மாலம் எதுவும் செய்யத் தேவை இல்லை. ஒன்றை மாத்திரம் நாம் அறிந்திருந்தால் போதும். அது அவர் நம்முடைய பிதா என்பதே. எனவே அவர் நம்மில் அன்பு கூறுகிறார், நாமும் அவரில் அன்பு கூரவேண்டும். அவருக்கு பிரியமில்லாதவற்றை தவிர்த்து அவருக்கு பிரியமானவற்றை செய்ய வேண்டும் என்பதே. அப்படி நாம் செய்யும் பொழுது நம் மூலமாய் அநேகர் இரட்சிக்கப்படுவார்கள், போஷிக்கப்படுவார்கள், தேவனை தங்கள் சொந்த பிதாவாக அறிந்துகொள்வார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் வார்த்தைக்கு கீழ்படிந்து நடப்பார்கள். அப்பொழுது பிள்ளைகள் மனமகிழ்ச்சியாய் பிதாவை சார்ந்து அன்பு கூறுவது போல, நம்முடைய அன்பையும் அவர் ஏற்றுக்கொள்வார். அதற்கான (பிள்ளைக்கான) பிரதிபலனை அவரே நமக்கு தருவார். எல்லா தீமைக்கும் நம்மை விலக்கிக் காப்பார். ஆமென், அல்லேலூயா.

## 104. பொல்லாத இருதயம்

**மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. (ஆதி 6:5,6)**



மேற்கண்ட இந்த காரியங்கள் ஆண்டவர் பூமியையும், மனிதனையும் படைத்த சில நூற்றாண்டுகளுக்கு உள்ளாகவே நடந்தேறின. இது ஆதியாகம புத்தகத்தின் ஆரம்பத்திலேயே பதியப்பட்டுள்ளது. ஆதியாகமத்தின், முதல் இரண்டு அதிகாரங்கள் சிருஷ்டிப்பின் அருமையான நிகழ்வுகளைப் பற்றி கூறுகிறது. ஆனால் மூன்றாம் அதிகாரத்தில் ஆதாம் ஏவாளின் மீறுதலும், நான்காம் அதிகாரத்தில் உலகில் முதல் பிறந்த மனிதனாகிய காயின், தன் சகோதரனை கொலை செய்தல், **(ஆதி 4:8)**, லாமேக்கு கொலை செய்தல் **(ஆதி 4:23)** என்று குறுகிய காலத்திற்குள்ளாகவே இப்படிப்பட்ட பொல்லாத செயல்கள் பூமியில் பெருகினது. இதனால்தான் ஆண்டவர் **"அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே" (ஆதி 6:5)** என்றார். மேலும் தாம் அருமையாக பார்த்து பார்த்து 6 நாட்களாக சிருஷ்டித்த ஜீவன்களை எல்லாம் மனிதனின் பொல்லாப்பின் நிமித்தம் அழிக்க சித்தங்கொண்டார். **"தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது." (ஆதி 6:6)** என்பது, மனித இருதயத்தின் பொல்லாத காரியங்கள் எவ்வளவாய் ஆண்டவர் இருதயத்தை வேதனைப்படுத்தியது என்பதை விளக்குகிறது. இதனால் நோவா காலத்தில் அவருடைய குடும்பத்தினர் 8 பேர் மற்றும், அவரோடு பேழைக்குள் இருந்த ஜீவ ஜந்துக்கள் தவிர மற்ற அனைத்தும் அழிக்கப்பட்டன. ஆனால் ஆதியாகமம் 9ஆம் அதிகாரத்திலேயே, நோவா கானானை சபிப்பதும் **(ஆதி 9:25)**, 11 ஆம் அதிகாரத்தில் நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் **(ஆதி 11:4)** என்று கூறி பாபேல் கோபுரத்தை கட்டினதும், நோவா காலத்திற்கு பின்பு எவ்வளவு தீவிரமாய் மனித இருதயம் பொல்லாததாய் மாறியது என்பதை காணலாம். ஆண்டவர் எவ்வளவோ அற்புத அடையாளங்களை இஸ்ரவேல் மக்களிடத்தில் செய்திருந்தும், இன்னும் பல விதங்களில் சிருஷ்டிக் கர்த்தராகிய தம்மை இவ்வுலக மக்களிடத்தில்

வெளிப்படுத்தியும், மனித இருதயம் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தும், அவர் விரும்பாத காரியத்தை செய்ய விரும்புகிறது. உலகமெங்கும் காலம் காலமாய் மக்களின் வாழ்க்கை முறைகளிலும், தொழில் மற்றும் அறிவியல் துறைகளிலும், எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், உலகமெங்கிலும் உள்ள மனிதரின் இருதயமோ தேவனுக்கு விரோதமாக பொல்லாததாக காணப்படுகிறது.

**லூக் 6:45** கூறுகிறது **"நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்"** மேலும் **பிரசங்கி 7:29** கூறுகிறது "இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்; இதைமாத்திரம் கண்டேன்." இங்கு நாம் காண்கிறபடி ஆண்டவர் மனிதனை செம்மையான இருதயத்தோடு தான் சிருஷ்டித்தார், ஆனால் மனிதனுக்கோ இவ்வுலகு உபாய தந்திரங்களில் தான் விருப்பம் உள்ளதே தவிர செம்மையான வழியில் செல்ல விருப்பம் இல்லை. காரணம் இவ்வுலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறபடியினால் பொல்லாத வழிகளே, எளிதான வழிகளாய், அகலமான சுகமான வழிகளாய் காணப்படுகிற படியால், தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழ பெரும்பாலான மனிதர்களுக்கு விருப்பம் இல்லை. இப்படித்தான் வாழவேண்டும் என்ற முறைக்கு உட்பட்டு வாழ விரும்பாமல், எப்படியும் வாழலாம் என்று தங்கள் மாம்சமும் மனசும் விரும்பினதை செய்கின்றனர். கண்களின் இச்சையும்,, மாம்சத்தின் இச்சையும்,, ஜீவனத்தின் பெருமையும் மனித இருதயத்தின் பொல்லாத நிலையின் வெளிப்பாடே.

அன்றிலிருந்து இன்றுவரை, ஆண்டவர் நல்ல வாழ்க்கையை, குடும்பத்தை மற்றும் சகல நன்மைகளையும் தந்திருந்தும், அதற்கு நன்றியோடு வாழாவிட்டாலும், பொல்லாத காரியங்களை செய்யாமலாவது வாழலாம். ஆனால் நன்மைக்கு தீமை செய்யும் பொல்லாத இருதயம், பரலோக வாழ்வை குறித்தோ, இவ்வுலக வாழ்வின் நன்மைகளை குறித்தோ, நித்திய நியாயத் தீர்ப்பைக் குறித்தோ கவலைப்படாமல், இவ்வுலகில் உள்ள வரை சுகபோகமாய், தன் இஷ்டப்படி வாழ விரும்புகிறது. அப்படிப்பட்ட வாழ்க்கைக்கு எப்படிப்பட்ட தீமையான காரியங்களை செய்தாலும் தவறில்லை என்ற எண்ணம் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட பொல்லாத இருதயத்தின் செயல்களே, கடைசி காலத்தில் வெளிப்படையாக சிறியோர் முதல் பெரியோர் வரை ஒவ்வொருவர் வாழ்விலும் காணப்படுகிறது. இருதயத்தில் உள்ள தீமையான காரியங்களை வெளிப்படையாக செய்ய தயங்கிய காலம் சென்று, இன்று வெளிப்படையாக பொல்லாத செயல்கள் செய்யப்படுகிறது. காரணம், இன்று கொஞ்சம் குறைய சிறியோர் முதல் முதியோர் வரை அனைவரின் இருதயமும் கரைப்பட்டிருக்கிறபடியால், யாரும் யாரையும் குற்றச்சாட்ட கூடாதவர்களாய் உள்ளனர். இன்றுள்ள தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம், கைபேசி போன்றவைகள் யாரையும் அடக்க முடியாதபடி, தடுக்க முடியாதபடி அவரவர் மனம் போன போக்கில் வாழ செய்கிறது.

பொல்லாத இருதயத்தின் செயல்கள் காலகாலமாய் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும், இந்த கடைசி காலத்தில் கடைசி மணித்துளிகளில், அது ஒரு வெளிப்படையாக செயல்படுகிறது, இன்னும் இதில் என்ன தவறு என்று கூட சில பொல்லாத செயல்கள் நியாயப்படுத்தப்படுகின்றன. நாட்டை ஆளுகின்ற தலைவர்கள் முதல் சாதாரண குடிமகன் வரை பொல்லாப்பு பல்வேறு விதங்களில் ஒவ்வொருவர் வாழ்விலும் காணப்படுகிறது. கடைசி காலத்தில் சத்தியம் எவ்வளவுதான் அறிவிக்கப்பட்டாலும், மனிதர்கள் அதை கேட்டாலும், அதற்கு கீழ்படிய அவர்களுக்கு மனதில்லை. இதில் மற்றொரு வேதனையான காரியம் என்னவென்றால், சத்தியத்தின்படி வாழ்ந்து பலருக்கு நன்மைகளைத் தரும் வாய்க்கால்களாய் இருந்த தேவபிள்ளைகளுடைய சந்ததியாரின் இருதயமும், இன்று பொல்லாததாய் மாறியுள்ளது. சபை ஊழியத்தை உண்மையும், உத்தமுமாய் செய்து,

ஒரு கூட்டம் மக்களை ஆண்டவருக்காக மணவாட்டி திருச்சபையாய் உருவாக்கி, அதை அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைத்த போது, அவர்கள் தங்களுடைய பொல்லாத இருதயத்தின் செயல்களால் எத்தனையோ ஆண்டு காலமாய் அருமையாய் கூட்டி சேர்க்கப்பட்ட திருச்சபையை, இன்று சிதறிப் போக செய்துள்ளனர். எந்த உலகத்தில் இருந்து வேறு பிறிக்கப்பட்டு திருச்சபையாய் ஏற்படுத்தப்பட்டனரோ, இன்று ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று அதே உலகத்தை திருச்சபைக்குள்ளாய் கொண்டுவந்து, வேறு பிரிக்கப்பட்ட ஜீவியம் என்பது மறக்கடிக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு பொல்லாத இருதயத்தின் செயல்கள் திருச்சபைக்குள்ளும் பரவிவருகிறது. இவையெல்லாம் இன்னும் தேவனை உறுதியாய் பற்றிக் கொண்டுள்ள ஒரு கூட்டம் மக்களுக்கு, வேதனை அளிப்பதாக, அவர்கள் வாழ்விலும் பல இன்னல்களை கொண்டு வருவதாக உள்ளது. இதனால் ஒருவிதக் கலக்க உணர்வுடனேயே தேவ பிள்ளைகள் வாழ வேண்டியிருக்கிறது. சமுதாயத்திலும், வேலை செய்யும் இடத்திலும், திருச்சபையிலும், சொந்த குடும்பத்தின் மத்தியிலும் காணப்படும் கொல்லாத இருதயத்தில் செயல்கள், ஆண்டவரே இவற்றிற்கெல்லாம் எப்பொழுதும் முடிவு உண்டாகும் என்று ஆண்டவரை நோக்கி கேட்க செய்கிறது. ஆனால் ஆண்டவரோ நீடிய பொறுமை உள்ளவராக இருக்கிறார். அவர் நிச்சயம் நியாயம் செய்வார், நம்முடைய வேலை எல்லாம் இந்தப் பொல்லாத இருதயத்துக்கு ஒருபோதும் இடம் கொடுக்காமல், எப்படிப்பட்ட பொல்லாத இருதயத்தின் செயல்களையும் மன்னிக்கத்தக்க ஆண்டவருடைய அன்பை பற்றி மாத்திரம் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அந்த அன்பிற்கும் கீழ்ப்படியாமல் போனால், நரக அக்கினி மாத்திரமே முடிவு என்பதை கூற வேண்டும். கர்த்தர் தாமே இப்படிப்பட்ட பொல்லாத இருதயத்தின் செய்கைகளை நம்மை விட்டும், நமக்கு அருமையானவர்களை விட்டும் விலக்கி, சமாதானத்தோடு இம்மையிலும், நித்திய சந்தோஷத்தோடு மறுமையிலும் வாழ உதவி செய்வாராக, ஆமென் அல்லேலூயா.

## 105. உத்தம இருதயம்

**தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது. (2 நாளா 16:9)**




இங்கு **தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடு** என்பது வெறும் நீதியான வாழ்க்கையைப் பற்றி மட்டும் குறிக்காமல், ஆண்டவருக்கு முன்பாக உத்தமமாய் வாழ்வதை பற்றி, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அவருடைய நீதிக்கு பங்கு உள்ளவர்களாய் வாழ்வதை குறிக்கிறது. அப்படி நாம் வாழும் பொழுது எப்படிப்பட்ட நன்மையை நாம் பெற்றுக் கொள்வோம் என்பதையும் மேற்கண்ட வசனம் தெளிவாக கூறுகிறது. இப்படி ஆண்டவருக்கு முன்பாக உத்தமமாய் வாழ்ந்தவர்களை பற்றி பரிசுத்த வேதாகமத்தில் அனேக இடங்களில் காணலாம். அப்படிப்பட்ட ஒவ்வொருவரையும் ஆண்டவருடைய கண்கள் தேடி கண்டுபிடித்து, அவர்களுடைய வாழ்க்கையில் தம்முடைய வல்லமையை விளங்கச் செய்தார். அதே வல்லமையை இக்காலத்திலும் நம்முடைய வாழ்க்கையில் விளங்க செய்கிறார். எனவே எப்படிப்பட்ட **தம்மைப்பற்றிய உத்தம இருதயத்தை** ஆண்டவர் எதிர்பார்க்கிறார் என்பதை நாம் விளங்கிக் கொண்டோமானால், நாம் வாழ்நாள் முழுவதும் ஆண்டவருக்கு முன்பாக நம்முடைய உத்தம இருதயத்தை காத்துக் கொள்ள முடியும்.

அதன் மூலம் ஆண்டவருடைய வல்லமையை ஒவ்வொரு நாளும் இம்மையிலும் மறுமையிலும் நாம் பெற்று அனுபவிக்க முடியும். இப்பொழுதும் இப்படிப்பட்ட அனுபவத்தை பெற்ற சில பரிசுத்தவாங்களை குறித்து வேதாகமத்தில் காண்போம்.

**ஆதி 6:8,9 வசனங்களில் "நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா**

**தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்."** இங்கு நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது என்று பார்க்கிறோம். அவருக்கு கிடைத்தது கிருபை தான். ஆனால் அந்த கிருபையை போக்கடிக்காத **உத்தம இருதயம் நோவாவுக்கு இருந்தது**. ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தது போல **நோவாவும் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தார்**. அழிவுக்கு தப்பிக் கொள்ளும்படியாய் ஆண்டவர் அவருக்கு கூறிய காரியத்திற்கு கீழ்ப்படிந்து அதன்படி செயல்படலானார் இங்கு விசேஷமாக கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது என்று எழுதப்பட்டுள்ளது. ஆம் **2 நாளா 16:9** வசனத்தில் கூறியபடி, கர்த்தருடைய கண்கள் பூமி இயங்கும் உலாவிக்கொண்டிருந்து, அவருடைய இருதயத்துக்கு ஏற்ற நோவாவை கண்டுபிடித்து, தன்னுடைய வல்லமையை அவரிடத்தில் காண்பித்த கிருபையின் மூலம் வெளிப்படுத்தி, பூமியின் அழிவில் இருந்து அவரையும், அவருடைய குடும்பத்தையும் மீட்டதும் அல்லாமல், சகல ஜீவராசிகளையும் பிழைக்க வைக்க அவரையே தம்முடைய வல்லமையால் பயன்படுத்தினார்.

அடுத்ததாக **ஆதி 15:6 இல்** ஆபிரகாமைக் குறித்து வசனம் கூறுகிறது **"அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்."** மேலும் **ஆதி 15:1 இல்** ஆண்டவர் ஆபிரகாமிடம் **"ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்."** . இங்கு ஆண்டவர் **தம்மை பற்றி உத்தம இருதயத்தோடு** தான் சொன்ன வார்த்தையை நம்பி புறப்பட்ட ஆபிரகாமை குறித்து ஆண்டவரே சொன்ன அருமையான சாட்சி **ஆதி 18:17-19 வசனங்களில் "அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும், நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்."**. ஆபிரகாமின் வாழ்க்கையில் வெளிப்பட்ட கர்த்தருடைய வல்லமை அவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல, இன்றளவும் பூமியில் அவருடைய மாம்ச பிரகாரமான சந்ததிகளான இஸ்ரவேல் மீதும், விசுவாச சந்ததியான நம் மீதும் வெளிப்படுகிறது.

அடுத்ததாக மோசேயை குறித்து நாம் காணலாம். ஆண்டவர் அவரைக் குறித்து சாட்சி கொடுக்கும் பொழுது **அவர் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராய் இருந்தார் (எபிரேயர் 3:2)** என்று வேதம் கூறுகிறது. தேவனுடைய வல்லமை வெளிப்படையாகவே அவருடைய முகத்தில் பிரகாசித்தது. ஆண்டவரோடு முகமுகமாய் பேசினார். செங்கடலை பிளந்தது முதல் மோசையை கொண்டு எத்தனையோ வல்லமையான செயல்களை ஆண்டவர் இஸ்ரவேல் மக்கள் முன்பும், புறஜாதியார் மத்தியிலும் செய்தருளினார். நியாயப்பிரமாணமும், வேதத்தின் முதல் ஐந்து ஆகமங்களும் மோசேயின் மூலமாகவே கொடுக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக மறுரூப மலையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு காணப்பட்டு, அவர் எருசலேமில் நிறைவேற்ற போகிற காரியத்தை குறித்து பேசினார். சரீர பிரகாரமான அவருடைய பூத உடலை கூட ஆண்டவர் இம்மண்ணில் அடக்கம் செய்ய விடாமல் அவர் சரீரத்தை கூட தேவனே எடுத்துக் கொண்டார். இவை எல்லாம் உத்தம இதயத்தோடு தேவனுக்கு கீழ்ப்படியும், சாதாரண பின்னணியில் இருந்து வந்து மிகப்பெரிய காரியங்களை தேவ வல்லமையினால் அவருக்கென செய்தவர்களை பற்றி கூறுகிறது. இன்னும் இந்த பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

மோசையை போலவே தம் மக்களை வழிநடத்த ஆண்டவர் தாவீதை தெரிந்து கொண்டார். **சங் 78:71,72 வசனங்கள் சொல்கிறது "கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை, தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக, அழைத்துக்கொண்டுவந்தார்.**

**இவன் அவர்களைத் தன் இருதயத்தின் உண்மையின்படியே மேய்த்து, தன் கைகளின் திறமையினால் அவர்களை நடத்தினான்."** கறவலாடுகள் பின்னாகச் சென்ற அவரை என் இதயத்திற்கு ஏற்றவனாக கண்டேன் என்ற சாட்சியோடு கூட, **தம்மை பற்றி உத்தம இருதயத்தோடு தாவீது** இருக்கிறார் என்பதை விளங்க செய்தார். பல்வேறு சூழ்நிலைகளில் பலவித இக்கட்டுகளையும், சோதனைகளையும், போர்களையும், சூழ்ச்சிகளையும் காண நேர்ந்தாலும் தாவீதோ அவரை சுரமண்டலத்தால் பாடி துதித்து மகிழ்ந்தார். சங்கீத புத்தகத்தில் அநேக அருமையான சங்கீதங்களை பாடினார். தேவகுமாரரானாம் இயேசுவும் தாவீதின் குமாரனே என்று அழைக்கப்பட்டார். எருசலேமில் யூதாவை ஆள என்றைக்கும் உனக்கு ஒரு வித்தை கட்டளையிடுவேன் என்று ஆண்டவர் அவருக்கு வாக்குரைத்தார்.

ஆம் இதைப்போல் நாம் எலியா, எலிசா, தானியேல் மேலும் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலராகிய பவுல், பேதுரு, யோவான் என்று எத்தனையோ தேவ பிள்ளைகளின் வாழ்வில் தம்மை அவர்கள் உத்தம இருதயத்தோடு பின்பற்றினத்தினிமித்தம் வல்லமையான காரியங்களை அவர்களின் மூலம் செய்தருளினார். இன்று நம் வாழ்விலும் அதே வல்லமையை விளங்க செய்ய, ஆண்டவருடைய கண்கள் பூமி எங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. இந்த உத்தம இருதயம் என்பது ஏதோ வெறும் பக்தி செயல்களை செய்வதோ, உலகப் பிரகாரமான நீதிமானாய் வாழ்வதோ, தான தர்மங்களை செய்வதோ மட்டுமல்ல, அதற்கு மேலாக ஆபிரகாமை போல, மோசேயை போல, தாவீதைப் போல, அப்போஸ்தலராகிய பவுலை போல கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே நம்மிலும் காணப்பட வேண்டும்.

நம்முடைய உத்தம இருதயம் ஆவிக்குரிய காரியங்களில் மட்டுமல்ல, பூமிக்குரிய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் வெளிப்பட வேண்டும். நாம் கிறிஸ்துவின் நற்கந்தங்களாய் அவருடைய வாசனையை எங்கும் வீச வேண்டும். இனி நான் அல்ல கிறிஸ்துவே எனில் ஜீவிக்கிறார் என்ற உணர்வோடு வாழ வேண்டும். இப்படிப்பட்ட உன்னதமான, உத்தமமான ஒரு வாழ்வை நாம் வாழும் பொழுது. அன்று ஆதிதிருச்சபை மற்றும் அப்போஸ்தலர்களைக் கொண்டு ஆண்டவர் செய்த வல்லமையான காரியங்களை, இன்று நம்மை கொண்டும், திருச்சபையை கொண்டும் செய்ய முடியும். ஊழிய பாதையில் மட்டுமல்ல, சமுதாய வாழ்வில் மட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் நம்மிடத்தில், நம் சந்ததியாரிடத்திலும் ஆண்டவருடைய வல்லமை வெளிப்படும்.

ஆனால் இன்று அனேகர் வெளிப்படையான முறையில் ஆண்டவருக்கு மகிமையான காரியங்களை செய்கின்றனர். உலகப் பிரகாரமான நீதிமான்களாக வாழ்கின்றனர். இது ஒருவேளை மனிதர்கள் முன்பாக உத்தமர்கள் என்ற பெயரை வாங்கித் தரலாம். ஆனால் தேவனைப் பற்றிய உத்தமமான இருதயம் என்பது, அதற்கு மேலானதாய், அவருடைய ஐக்கியத்தையும், பிரசன்னத்தையும் தேடி அவரோடு வாழும் வாழ்வை, இவ்வுலகில் உள்ள மற்ற எதை காட்டிலும் அதிகமாக வாஞ்சிப்பதாகும். அவரை நம்முடைய ஆத்ம மணவாளராய் ஏற்று அவருடைய சித்தத்தை மாத்திரம் நிறைவேற்றும் ஒரு வாழ்வை வாழ்வதாகும். அப்படிப்பட்ட வாழ்வை நாம் வாழும் பொழுது நம் மூலமாய் அநேகர் கிறிஸ்துவண்டை சேர தேவ வல்லமை வெளிப்படும். சமுதாயத்திலும் திருச்சபையிலும் நம் குடும்பத்தார் மத்தியிலும் ஆசீர்வாதத்தை கொண்டு வருகிற ஆசிர்வாத வாய்க்கால்களாய் நாம் காணப்படுவோம். தேவன் தாமே இப்படிப்பட்ட கிருபையை நமக்கு அருளி, அவரைப்பற்றும் உத்தம இருதயத்தோடு வாழ உதவி செய்வாராக, ஆமென், அல்லேலுயா.

## 106. பேதுருவின் மாமி



**இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி ஜுரமாய்க் கிடக்கிறதைக் கண்டார். அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்தாள். (மத் 8:14,15)**

**உடனே அவர்கள் ஜெபஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, யாக்கோபோடும் யோவானோடுங்கூட, சீமோன் அந்திரேயா என்பவர்களுடைய வீட்டில் பிரவேசித்தார்கள். அங்கே சீமோனுடைய மாமி ஜுரமாய்க் கிடந்தாள்; உடனே அவர்கள் அவளைக்குறித்து அவருக்குச் சொன்னார்கள். அவர் கிட்டப்போய், அவள் கையைப் பிடித்து, அவளைத் தூக்கிவிட்டார்; உடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று; அப்பொழுது அவள் அவர்களுக்குப் பணிவிடைசெய்தாள். (மாற்கு 1:29-31)**

**பின்பு அவர் ஜெபஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, சீமோன் வீட்டில் பிரவேசித்தார், சீமோனுடைய மாமி கடும் ஜுரமாய்க் கிடந்தாள். அவளுக்காக அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர் அவளிடத்தில் குனிந்துநின்று, ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார், அது அவளை விட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள். (லூக் 4:38,39)**

ஒரு நோக்கு சுவிசேஷங்கள் (Synoptic Gospels) என்று அழைக்கப்படுகிற முதல் மூன்று சுவிசேஷங்களிலும் பொதுவாக காணப்படுகின்ற, ஆண்டவர் கூறிய காரியங்கள், அவர் செய்த அற்புதங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். அனைத்து சுவிசேஷ புத்தகங்களிலும் காணப்படுவது, அது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவும், யாவரும் அறிய வேண்டிய ஒன்றாகவும் காணப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிகழ்வே, நாம் மேற்கண்ட வசனங்களில் காண்கின்ற, சீமான் பேதுருவின் மாமியை (ஆங்கில மொழிபெயர்ப்பு தெளிவாக கூறுகிறது, அவரது மனைவின் தாயார் என்று அதாவது மாமியார்) குறித்த காரியம் ஆகும். அவளுடைய பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும், அவள் சீமோன் பேதுருவின் வீட்டில் இருந்தால் என்பது அனைத்து சுவிசேஷங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவள் கடும் ஜுரமாய் காணப்பட்டால் என்று வசனம்

**(லூக் 4:38)** கூறுகிறது. அவள் சுகம் பெற்ற விதமும் ஒவ்வொரு சுவிசேஷத்திலும் சற்றே வேறுபடுகிறது. ஆனால் அதற்கு காரணம் அதை கண்ணார கண்டவர், எந்த விதத்தில் அதை எப்படி கண்டாரோ, அதுவே பதியப்பட்டுள்ளது. மத்தேயு சுவிசேஷம் அவர் அவளது கையை தொட்டார் என்றும், மாற்கு சுவிசேஷம் கையைப் பிடித்து தூக்கி விட்டார் என்றும், லூக்கா விசேஷம் குனிந்து நின்று ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார் என்றும் கூறுகிறது. எது எப்படி இருப்பினும் அவள் நொடிப் பொழுது சுகத்தைப் பெற்றால் என்பது மட்டும் நிச்சயம்.

யோவான் சுவிசேஷம் இறுதி அதிகாரம் இறுதி வசனம் இவ்வாறு கூறுகிறது, **"இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்." (யோ 21:25)**. இப்படி அநேக காரியங்கள் இருக்கையில் அவற்றில் சில காரியங்கள் மட்டும் எல்லா சுவிசேஷத்திலும் இடம்பெற்று இருப்பது இச்சம்பவம் நமக்கு ஒரு ஆழ்ந்த சத்தியத்தை அறிவிக்கவே ஆகும். இங்கு ஜுரம் என்றும், கடும் ஜுரம் என்றும் கூறப்பட்டிருந்தாலும் உண்மையாய் அவள் எவ்வளவு தீவிரமாய் அதனால் பாதிக்கப்பட்டிருந்தால் என்பது நமக்கு தெரியாது. கொரோனாவை கடந்து வந்த நமக்கு தெரியும் சாதாரண ஜுரம் எத்தனை பேர்களை எவ்வளவாய் பாதித்தது என்று. எனவே ஒருவேளை அவள் அதனால் மோசமாக பாதிக்கப்பட்டு, அதனால் பேதுருவின் குடும்பமே அவளைக் குறித்து கவலை அடைந்து இருக்கலாம். அதனால்தான் வசனம் கூறுகிறது ஆண்டவர் வீட்டிற்கு வந்தவுடன் அவளைக் குறித்து ஆண்டவரிடம் கூறி அவளுக்காக அவரை வேண்டிக் கொண்டார்கள் என்று.

இங்கு அவள் சுகம் பெற்றது மட்டுமல்ல, அவள் சுகம் பெற்றவுடன் உடனே அவள் எழுந்திருந்து ஆண்டவருக்கும், அவரோடு கூட வந்தவர்களுக்கும் பணிவிடை செய்தால் என்பதும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். இந்த செயலும் மூன்று சுவிசேஷங்களிலும் கூறப்பட்டுள்ளது. இப்பொழுது நாம் இதில் உள்ள ஆழ்ந்த சத்தியங்களை சற்று தியானிப்போம். பேதுருவின் மாமி ஜுரமாய் கிடந்தது போல், இம்மண்ணுலகிலும் பாவத்தினால், சாபத்தினால், ஜென்ம சுபாவத்தினால் மனுகுலத்தில் உள்ள ஒவ்வொருவரும் சோர்ந்து போய், செயலற்றவர்களாய், பாவத்தோடு போராடி, உலகத்தோடு போராடிக் கொண்டிருக்கின்றனர். இதற்கெல்லாம் என்ன முடிவு என்று தெரியாதவர்களாய், வாழ்க்கையின் நோக்கம் தெரியாதவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எளிமையாக கூற வேண்டும் என்றால் எத்தனையோ மக்கள் ஏதோ ஒரு விதத்தில் பாவத்தின் பிடியில் சிக்கி தவிக்கின்றனர். வெளிச்சத்தை காண முடியாமல் இருளில் தவிக்கின்றனர். குடிக்கு அடிமையாகி, பண ஆசைக்கு அடிமையாகி, பாவ சந்தோஷத்திற்கு அடிமையாகி, என இவ்வாறு பல்வேறு விதங்களில் யாருக்கும் பிரயோஜனம் அற்றவர்களாய், தங்களுக்கு தாங்களே பாரமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இப்படியாக வேதனைப்பட்டு கொண்டிருக்கும் நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொருவருக்காகவும், பேதுருவும் அவனது வீட்டாரும் ஆண்டவரிடம் அவளுக்காக வேண்டிக் கொண்டது போல், இன்று தேவபிள்ளைகளாகிய நாம் வேண்டிக் கொள்ள ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

அன்று தட்டோடுகள் வழியாய் இறக்கி விட்டவர்களின் விசுவாசத்தை கண்டு சுகத்தை அருளிய தேவன், இன்று இப்படியாக வேதனைப்படும் ஒவ்வொருவருக்காகவும் வேண்டிக் கொள்ளும் நம் ஜெபத்தை கேட்கிறார். அதனால் தான் பேதுருவின் மாமியின் பெயர் கூட இல்லாவிட்டாலும், அவள் ஆண்டவரை அறிந்து இருந்தாலோ, விசுவாசித்தாலோ என்பது கூட கூறப்படாதிருந்தும் அவளை சுற்றியுள்ளவர்கள் ஆண்டவரின் அன்பை, வல்லமையை அறிந்தவர்களாக இருந்தபடியினால், அவர்களுடைய வேண்டுதலுக்கு ஆண்டவர் செவிச் சாய்த்தார், பூரண சுகத்தை அருளினார். இன்று கூட சுவிசேஷ பணி உலகமெங்கிலும் இப்படிப்பட்ட மக்களை தேடிச்சென்று அவர்களை ஆண்டவரண்டை கொண்டு வந்து சேர்த்து கொண்டிருக்கிறது. எப்படி ஒரு மனிதனுடைய வியாதி அவனுடைய

சரீரத்தை மட்டும் பாதிக்காமல், மனதையும் சிந்தியையும் பாதிக்கிறதோ, பாவ பாரமும் ஆவி ஆத்துமா மற்றும் சரீரமாகிய மூன்றிலும் பலவீனத்தை கொண்டு வரும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆண்டவர் சிலரை தொட்டிருக்கிறார், சிலரை தொட்டு தூக்கி இருக்கிறார், இன்னும் சிலருக்கு பாவ பிணிக்கு எதிராக கட்டளையிட்டு அதை நீங்குபடி செய்திருக்கிறார்.

இதில் அற்புதமான ஒரு காரியம் என்னவென்றால், அப்படிப்பட்ட சுகத்தைப் பெற்றுக் கொண்டவர், பேதுருவின் மாமியை போல அவருக்கு சேவை செய்ய ஆண்டவர் எதிர்பார்க்கிறார். ஆம் ஒரு காலத்தில் குடிக்கு அடிமைப்பட்டு, அதனால் தன் சொந்த சரீரத்தையும் வாழ்க்கையும் அழித்தது மட்டுமல்லாமல், தன்னை சார்ந்திருக்கும் மனைவி, பிள்ளைகள், பெற்றோர் என பலரும் வேதனைப்படும்படியாய், இந்த சூழலில் இருந்து எப்படி விடுதலை கிடைக்கும் என்று தவிக்கும்படியாய், பேதுருவின் வீட்டில் இருந்தவர்கள் போல், இன்றும் பலர் காணப்படுகின்றனர். ஆனால் ஆண்டவர் அவர்கள் வாழ்க்கையில் இடைப்பட்டு அப்படிப்பட்ட மனிதரை இரட்சித்து. அது பாவபிடியோ, வியாதியோ, சாபக்கட்டுகளோ எதுவானாலும் அதிலிருந்து விடுதலை தரும்பொழுது, சுகம் பெறும் பொழுது, அப்படியாக விடுதலை பெற்ற மனிதர் ஆண்டவரின் அளவில்லா அன்பை வல்லமையைக் கண்டு அதை தன் ஆவி ஆத்தும சரீரத்தில் அனுபவித்ததின் பொருட்டு, அவருக்கே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து அவருக்கு சேவை செய்வோராய், அல்லது அவருக்கு சேவை செய்வோருக்கு பக்கபலமாய் இருப்பவராய் மாறிவிடுகின்றனர்.

எத்தனையோ சபை போதகர்களின், ஊழியர்களின் சாட்சி இதற்கு அத்தாட்சியாகும். அப்போஸ்தலராகிய பவுலும் இதற்கு ஒரு அத்தாட்சியாகும். பலர் கண்டு வேதனை படும்படியாய் இருந்த வாழ்க்கை சூழ்நிலை மாறி அப்படி பாதிக்கப்பட்டிருந்தவரே ஆண்டவருக்கு எழுந்து ஊழியம் செய்வது என்பது வாழ்வை தலைகீழாய் மாறச் செய்வதாகும். இப்படிப்பட்ட ஒரு வித மாற்றத்தையே ஆண்டவர் நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார். ஆம் பேதுருவின் மாமியை போல் நாமும் ஆண்டவரால் சந்திக்கப்பட்டு நம் வாழ்க்கையில் அற்புத மாற்றத்தை பெற்றிருக்கிறோம், ஒவ்வொரு நாளும் ஆண்டவர் அற்புதமாய் நம் ஆவி ஆத்துமா மற்றும் சரீரத்தை போஷித்து வருவதையும், அவர் நமக்கு தந்திருக்கும் ஆவிக்குரிய ஆசிர்வாதங்களையும் பூமிக்குரிய நன்மைகளையும் நாம் பெற்று அனுபவித்து வருவதையும் அறிந்திருக்கிறோம். ஆனால் நாம் ஆண்டவருக்காக செயல்பட்டு இருக்கிறோமா என்பதும், முன்பு நாம் இருந்த நிலையில் இப்பொழுது இருக்கும் மனிதர்களை, ஆண்டவரிடம் கொண்டு வந்திருக்கிறோமா என்பதும் மிக முக்கியமான தாகும். எனவே நாம் ஒவ்வொருவரும் ஆண்டவர் நமக்கு செய்கின்ற நன்மைக்கு நன்றியுள்ளவர்களாய் அவருக்கு பணிவிடை செய்ய புறப்படுவோமாக. ஆமென், அல்லேலூயா.

## 107. விடையறியா காலங்கள்



1 சாமுவேல் 24 ஆம் அதிகாரத்தில் தாவீது சவுலுக்கு தப்பி ஓடிக்கொண்டிருக்கும் வேளையில், அவர் என்கேதியின் வனாந்தரத்தில் இருப்பதை அறிந்து **(1 சாமு 24:1)** சவுல் தாவீதை பிடிக்க தன் படையோடு நெருங்குகையில், தாவீதிடம் தனியாக ஒரு குகையில் சவுல் அகப்பட்ட நிலையிலும், தாவீதோடு இருந்தவர்கள் இதுதான் சரியான நேரம் சவுலை கொன்று உன் பிரச்சனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வை என்று கூறியபோதும், நான் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்ட சவுலின் மீது என் கையை போட மாட்டேன், கர்த்தரே அவருக்கு என்றைக்கு முடிவுண்டாக்குகிறாரோ, அன்று அவர் வாழ்க்கை முடியட்டும். ஆனால் என் பிரச்சனை தீர வேண்டும் என்பதற்காக, நான் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் மேல் என் கையை போட மாட்டேன் என்றார். தாவீதிற்க்கு நன்றாய் தெரியும் சவுலுக்குப் பிறகுதான், தான் ராஜாவாக முடியும் என்று. எனவே தான் இங்கு சவுலை கொல்லாமல் விடுவது, தன்னுடைய பிரச்சனையை தொடரச் செய்யுமே யன்றி, தானும் சாமுவேலினால் பெற்ற ராஜ அபிஷேகத்தை நிறைவேற்ற காலம் செல்லுமேயன்றி, மற்றபடி நிலையில்லா எதிர்காலத்தையே தொடர நேரிடும். ஆனாலும் தாவீது அதற்கு ஆயத்தமாய் இருந்தார். ஒருநாள் ஆண்டவர் அவரை ராஜாவாக மாற்றினார். இங்கு நாம் தியானிக்க இருக்கும் காரியம், நிச்சயமாக ஆண்டவர் ஒருநாள் நம் பிரச்சனைகளுக்கு எல்லாம் முடி உண்டாக்குவார், அவர் நேரம் வரும் பொழுது அந்த பிரச்சனை காணாமல் போய்விடும். எனவே இதில் நமக்கு எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் பிரச்சனை இடையே நாம் கடந்து சென்ற காலங்களை நாம் திரும்பிப் பார்க்கும் பொழுது, ஒருவேளை அந்த பிரச்சனைகள் எல்லாம், வியாதிகள் எல்லாம், வேதனைகள் எல்லாம், இழப்புகள் எல்லாம், வராதிருந்ததானால் இன்னும் வாழ்க்கையில் ஆண்டவருக்காக நிறைய சாதித்து இருக்கலாமே என்பதுதான்.

ஆம் தாவீது தன் இளமை காலத்தில் சாமுவேலினால் அபிஷேகம் பெற்று, கோலியாத்தை கொன்று, சவுலின் மகளாகிய மிகாளை மணந்து, கர்த்தருடைய சித்தப்படியே ஆண்டவருடைய யுத்தங்களை நடத்தி வந்த வேளையில், பெலிஸ்தியரால் அல்ல, தான் ராஜாவாக போகும் தன் சொந்த இஸ்ரவேல் நாட்டு படையினராலேயே, பல வருடங்கள் வேட்டையாடப்பட்டார். தன்னுடைய இளமை காலத்தில் தன் குடும்பத்தோடு இருக்க முடியாமல், அமைதியான ஒரு வாழ்க்கை வாழ முடியாமல், பயந்து பயந்து, ஓடி ஓடி, வாழ வேண்டியிருந்தது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தன் எதிரி நாடாகிய பெலிஸ்தியரிடமே தஞ்சம் புக வேண்டி வந்தது **(1 சாமு 27:1)**. இதனால் அவர் தன் தனிப்பட்ட வாழ்வில் இழந்த சந்தோஷமான இளமை காலங்கள் அதிகம், அதை காட்டிலும் ஒரு வேளை இப்படிப்பட்ட பிரச்சனை

உருவாகாமல், சவுல் நல்ல புத்தியோடு இருந்திருந்தால், தாவீது பல வெற்றிகளை இஸ்ரவேலுக்கு தந்திருப்பார். சவுலும், யோனத்தானும் போரில் மரித்திருக்கமாட்டார்கள். ஆனால் இவை எதுவுமே நடக்கவில்லை.

இதையே நாம் பவுலின் ஊழிய காலத்திலும் காண்கிறோம் அவர் ஒவ்வொரு பட்டணத்திற்கு சென்று ஆண்டவருடைய சுவிசேஷத்தை அறிவித்த போதெல்லாம், அவர் பல நாட்கள் சிறைச்சாலையில் வேதனைப்பட வேண்டியிருந்தது. சிறைச்சாலையில் மாத்திரமல்ல தான் எவ்வாறெல்லாம் வேதனைகளை அனுபவித்தேன் என்பதை **2 கொ 11-23-28** வசனங்களில் "**நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது**." பவுலே பட்டியலிடுகிறார். ஒவ்வொரு முறையும் அவர் வாறினால் அடிக்கப்படும் பொழுதும், கல்லெறியப்படும் பொழுதும், தாக்கப்படும் பொழுதும் அந்தக் காயங்கள் ஆற அவர் தன் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் எத்தனை நாள் வேதனை அனுபவித்திருப்பார் என்பது நமக்கு தெரியாது. ஆனால் அதன் மத்தியிலும், அவர் தன் ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடித்தார். ஆனால் ஒருவேளை இப்படிப்பட்ட கொடிய காலங்கள், சிறைவாசம், அடிகள், கப்பற்சேதங்கள் போன்றவை நடவாது இருந்திருந்தால், பவுல் இன்னும் பலருக்கு ஊழியம் செய்து இருக்க முடியும், இன்னும் ஒருவேளை அதிக நிருபங்கள் எழுதியிருக்க முடியும். அதற்கு காலம் இல்லாமல் போயிற்று.

இன்று வரை எத்தனையோ தேவ பிள்ளைகள், ஊழியர்கள், தங்கள் வாழ்வில் கடந்து செல்லும் கடினமான சூழ்நிலைகள் அவர்களை ஆண்டவருக்குள் பக்குவப்படுத்துகிறது. முடிவில் ஆண்டவர் மகிமையான விடுதலையையும் தருகிறார். ஆனால் அவர்கள் அந்த கடினமான சூழ்நிலை ஊடாகச் செல்லும் பொழுது, குறிப்பாக ஊழியர்கள் வியாதி படுக்கையில் கடந்த செல்கையில், வியாதி நிமித்தம் ஊழியம் செய்ய முடியாமல், சபையை கவனிக்க முடியாமல், தனிப்பட்ட முறையில் கூட ஜெபிக்க, உபவாசிக்க முடியாமல், வியாதியினால் வேதனை அனுபவிக்கும் பொழுது, சபையில் நின்று வாரம் தவறாமல் தன் சபை மக்களுக்கு சத்திய வார்த்தையை போதிக்கும் மேய்ப்பர், வியாதியின் நிமித்தம் வீட்டிலோ, மருத்துவமனையிலோ இருக்கும்பொழுது, ஒருவேளை இது அவருக்கு நேரிடாமல் இருந்திருந்தால், இன்னும் அதிகமாக ஆண்டவருக்கு ஊழியம் செய்திருப்பார் என்று நாம் எண்ணலாம். ஊழியர் மாத்திரமல்ல, ஊழியரின் குடும்பமும் ஊழிய பாதையில் முன்னேறிச் செல்ல முடியாமல், வியாதியின் வேதனையில் இருக்கும் ஊழியரை கவனிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தியாவிற்கு வந்து ஊழியம் செய்த வில்லியம் கேரி அவர்கள் மிகப்பெரிய பணிகளை ஆண்டவருக்கு என்று செய்தார், ஆனால் அதே நேரத்தில் அவர் வாழ்வில் எத்தனை இன்னல்களை சந்தித்தார், எத்தனை இழப்புகளை சந்தித்தார், என்பதை வரலாறு கூறுகிறது. ஒருவேளை அவர் இப்படிப்பட்ட வேதனைகளை சந்திக்காமல் இருந்திருந்தால், இன்னும் ஆண்டவருக்கு என்று பல காரியங்களை செய்திருக்க முடியுமே என்று எண்ண தோன்றுகிறது.

சமீபத்தில் காலமான அருமையான ஊழியர் ஐயா ராபின்சன் அவர்களின் மனைவி திருமதி.கிறிஸ்டினா ராபின்சன் அவர்களின் மரணமும் இக்கேள்வியையே எழுப்புகிறது. ஒருவேளை இது நடவாமல் இருந்திருந்தால், இன்னும் குடும்பமாய் நன்றாக ஊழியம் செய்திருக்கலாமே, இப்படிப்பட்ட மரணம், ஆவிக்குரிய ரீதியிலும், சரீர ரீதியிலும், அந்த குடும்பத்திற்கு இழப்பை அல்லவோ கொண்டு வந்திருக்கிறது.

நமக்கு தெரிந்திருக்கிற ஊழியர்கள் மாத்திரமல்ல, இன்னும் எத்தனையோ தேவ பிள்ளைகளின் வாழ்வில், நாம் சமுதாயத்தில் சந்திக்கின்ற மக்களின் வாழ்வில் நடக்கும் காரியங்கள், ஏன் நம் சொந்த வாழ்வில் நாம் கடந்து செல்லும் கடினமான காரியங்கள், காலங்கள், ஒருவேளை நமக்கு அது வராது இருந்தால், நாம் இன்னும் ஆண்டவருக்காக ஓடலாமே என்று எண்ண தோன்றும். ஆம் ஊழிய பாதையில் விரிவடைய முடியாமல், சத்தியத்தை கொண்டு செல்ல முடியாமல், பல காலங்களாக போராடிக் கொண்டிருக்கும் ஊழியர்கள் உண்டு. குடும்பத்தின் மத்தியில் ஆண்டவருக்கு சாட்சியாக வாழ்ந்தாலும், குடும்பத்தில் உள்ளவர் செய்யும் சாட்சி இல்லா செயல்கள், அக்கிரம செயல்கள், இத்தனை காலம் தியாகமாய் குடும்பத்திற்காக வாழ்ந்தும் ஒரு பிரயோஜனமும் இல்லையே என்று எண்ணத் தோன்றுகிறது. இவை எல்லாம் விடையறியா காலங்களாய் நம் முன் நிற்கிறது. ஒன்றை நாம் அறிந்திருக்கிறோம் எப்படிப்பட்ட கொடிய சூழ்நிலை நடுவே நாம் கடந்து சென்றாலும், நாம் எடுத்த முயற்சிகள் பலன் தந்தாலும், பலன் தராமல் போனாலும் ஆண்டவர் நம்மை நிச்சயமாய் நித்திய ஜீவக்கரையில் சேர்ப்பார் என்பது. ஆனால் நாம் எதுவும் செய்ய முடியாமல், அல்லது முயன்றும் பிரயோஜனம் இல்லாமல் போன காலங்கள், காரியங்களின் விடை நாம் அறியாதவை. அவை ஆண்டவர் ஒருவருக்கு மட்டுமே தெரியும். பயந்து பயந்து, ஓடின காலங்கள் ஏன், ஊழியம் செய்ய வேண்டிய நாட்களில், அடியும் உதையும் பட்டு சிறையில் ஏன் இருக்க நேரிட்டது, எத்தனையோ அக்கிரமம் செய்வோர் கூட, எந்த பிரச்சினையும் இன்றி தங்கள் அக்கிரம செயல்களை தொடர்ந்து செய்யும் பொழுது, ஆண்டவருக்கு ஓட முடியாமல், தடைகளும் வேதனைகளும் வியாதிகளும் உண்டானது ஏன், அதை ஆண்டவர் மட்டுமே அறிவார். நாம் செய்ய வேண்டியதெல்லாம், ஆண்டவரே எல்லாம் சரியானபடி நடக்கின்ற காலங்கள் மட்டுமின்றி, ஏன் இப்படி நடக்கிறது என்று விடையறியா காலங்களிலும், ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் என்பதையும், ஒருவேளை நாம் சில காரியங்களை இழந்தது போல் தோன்றினாலும், ஆண்டவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார், என்ற நிச்சயம் மாத்திரம் நமக்கு போதும், நமக்கு விடை தெரியாவிட்டாலும், பாதை தெரியாவிட்டாலும், நாம் ஆண்டவரின் கரத்தில் மாத்திரம் இருக்கிறோம் என்பதை நிச்சயப்படுத்தி கொள்வோமாக, ஆமென், அல்லேலூயா.

## 108. சத்துருவின் பிடியிலிருந்து



**"பின்பு, அவர் பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்துவந்தார். பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள். அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்." (லூக் 8:1-3)**. இங்கு மேற்கண்ட வசனத்தில் ஆண்டவரோடு நடந்த அப்போஸ்தலர்களாகிய சீஷர்களை தவிர, அவரோடு கூட மற்றவர்களும் இருந்தார்கள் என்பதை காணலாம். அதில் குறிப்பாக **"அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும்," (லூக் 8:2)** என்பது மிகவும் ஆச்சரியமானதாகும். சில நாட்கள், அல்லது மாதங்கள், அல்லது வருடங்கள் முன்பு வரை பொல்லாத ஆவிகளால் அதிலும் குறிப்பாக ஏழு பிசாசுகளால் பீடிக்கப்பட்டு இருந்த மகதலேனா மரியாள் போன்ற ஸ்திரீகள், இன்று ஆண்டவரோடு இருப்பது எவ்வளவு அருமையானது. அவர்களுடைய முந்தைய நிலையை பார்த்த மற்றவர்கள், அந்த ஸ்திரிகள் இப்பொழுது சமாதானத்தோடு ஆண்டவரின் வார்த்தைகளை ஒவ்வொரு நாளும் கேட்டு அவரோடு நடப்பதை காணும் பொழுது நிச்சயமாகவே ஒரு மிகப்பெரிய மாற்றத்தை அவர்களில் கண்டிருப்பர்.

குறிப்பாக ஏழு பிசாசுகளால் பிடிக்கப்பட்டு இருந்த மகதலேனா மரியாளே உயிர்த்தெழுந்த ஆண்டவரை முதன்முதலாக கண்டாள். ஆண்டவர் அவளை தேடி வந்து ஏன் அழுகிறாய் என்று கேட்டு அவளுக்கு தம்மை வெளிப்படுத்தினார் **(யோ 20:11-17)**. இது எவ்வளவு பெரிய பாக்கியம். ஆரம்பத்தில் சத்துருவின் பிடியில் எப்படியோ இருந்த வாழ்க்கை, இப்பொழுது ஆண்டவரே தேடி வரும் அளவிற்கு மாறி போனதே. மகதலேனா மரியாள் போன்று எத்தனையோ நபர்களின் வாழ்க்கையில் ஆண்டவர் விடுதலையை தந்து அவர்கள் வாழ்க்கையை தலைகீழாக மாற்றினார். சத்துருவின் பிடியில் அவனுடையவர்களாய் இருந்த அவர்கள் இன்று தேவனுடைய ராஜ்யத்திற்கு உரியவர்களாய் மாறிப்போனார்கள். இவர்கள் மாத்திரம் அல்ல, சிலுவையில் இருந்த கள்ளன், விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீ, ஆயக்கரனாகிய சகேயு என்று இன்னும் எத்தனையோ நபர்களை ஆண்டவர் பாவப்பிடியிலிருந்தும்,

நோயிலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும் தமது வல்லமையினால் தப்புவித்தார். அவர்கள் ஆரம்பம் அற்பமாக இருந்தாலும் அவர்களுடைய முடிவு சம்பூரணமாய் இருந்தது.

ஆனால் அதே நேரத்தில் யூதாஸ் காரியோத்து, போன்ற மனிதர்கள் ஆண்டவரோடு தங்கள் வாழ்க்கையை அருமையாய் தொடங்கி நடத்தினாலும் இடையில் ஏதோ ஒரு சிறு காரியத்தில் பிசாசிற்கு இடம் கொடுத்து அதனால் மிகவும் மோசமான முடிவை பெற்றனர். **"அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி யோசித்து, ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினால், எவ்விதமாய் அப்படிச் செய்யலாமென்று வகைதேடினார்கள். அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர்கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான். அவன் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத்தலைவர்களிடத்திலும் போய், அவரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான்." (லூக் 22:2-4)** வசனங்களில் நாம் காணும் பொழுது தெளிவாக யூதாஸுக்குள் சாத்தான் புகுந்தான் என்று வேத வசனம் கூறுகிறது. இங்கு நாம் கவனிக்க வேண்டிய சத்தியம், மகதலேனா மரியாளுகுள்ளும் 7 பிசாசுகள் இருந்தது, ஆனால் அவளோ விடுதலை பெற்றாள். ஆனால் சாத்தான் ஒரு நொடிப்பொழுது யூதாஸ் காரியோத்தை தூண்டி, அவனில் புகுந்த பொழுது அவன் கேட்டின் மகனாய் மாறிப்போனான். ஆண்டவரை மறுதலித்த பேதுரு மனம் கசந்து அழுது ஆண்டவரோடு ஒப்புரவானது போல், யூதாஸால் செய்ய முடியவில்லை. குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவம் செய்தேன் என்று அறிக்கையிட்டு வெள்ளிக்காசை தேவாலயத்தில் எறிந்துவிட்டு நான்டு கொண்டு சாகத்தான் முடிந்தது **(மத் 27:3-5)**. இங்கு மகதலேனா மரியாள் பெற்ற விடுதலையை ஏன் யூதாஸால் பெற முடியவில்லை. காரணம் அவன் காசை விட்டெறிந்தானே ஒழிய, பிசாசின் பிடியில் இருந்து அவனால் வெளிவர முடியவில்லை. உன் பாவத்திற்கு உன் மரணம் தான் சம்பளம் என்று கூறிய பிசாசின் சத்தத்திற்கு அவன் செவி கொடுத்தான்.

இங்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சத்தியம், மகதலேனா மரியாளும், இன்னும் பலரும் பிசாசினால் பிடிக்கப்பட்டு இருந்தபோது, அவர்கள் தங்கள் சுயநினைவை இழந்தவர்களாக இருந்தனர். எனவே ஆண்டவரால் அவர்கள் விடுதலை பெற்ற பொழுது புத்தி தெளிந்து சுயநினைவையோடு, ஆண்டவரை பின்பற்றினர். எனவே ஏதோ ஒரு விதத்தில் சத்துருவினால் அவர்கள் பிடிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் அதை சுயநினைவோடு அறிந்திருக்கவில்லை. ஆனால் யூதாஸின் காரியத்தலோ அவன் மனம் அறிய, பொருளாசையினால் பீடிக்கப்பட்டு தான் என்ன செய்கிறோம் என்பதை உணர்ந்தவனாய் பிசாசுக்கு இடம் கொடுத்தான். இதுவே நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான சத்தியமாகும். அதாவது எப்பேர்பட்ட லேகியோனாகிய பிசாசுகள் பிடித்தவனை கூட ஆண்டவரால் ஒரு நொடிப்பொழுதில் விடுவிக்க முடியும். ஆனால் ஆண்டவர் நமக்கு தந்திருக்கும் சுய சித்தத்தால், அன்று ஆதாம் ஏவாள் பிசாசின் சத்தத்திற்கு செவி கொடுத்து பாவம் செய்ததைப் போல், மனம் அறிய சத்துருவுக்கு ஒருவன் இடம் கொடுப்பானானால் அது அவனை நான்று கொண்டு சாகும் நிலைக்கு தான் கொண்டு செல்லும்.

பழைய ஏற்பாட்டிலும் சவுல் ராஜாவும் மனம் அறிய தன் ராஜ்யத்திற்கு நன்மை செய்த தாவீதை, பொறாமையினால் பகைத்ததினால் பிசாசினால் பிடிக்கப்பட்டு, இறுதியில் யூதாஸிற்கு ஏற்பட்ட நிலையே அவனுக்கும் நேரிட்டது. எனவே சில நேரங்களில் யோபுவின் வாழ்க்கையில், பொல்லாப்பைக் கொண்டு வந்த சத்துருவாகிய பிசாசானவன், நம் வாழ்க்கையிலும் கிரியைச் செய்ய முடியும். சில கொடிய சூழ்நிலைகள், வியாதி வேதனைகள், பொல்லாத மனிதர்களின் கிரியைகள், சில இழப்புகள் ஆகியவற்றை நாம் காணும்பொழுது நம் ஆவி ஆத்மா சரீரம் ஆகிய மூன்றிலும் சத்துருவின் போராட்டத்தை உணரலாம். ஆனால் எப்பேர்ப்பட்ட கொடிய சூழ்நிலையாக இருந்தாலும், யோபுவை விடுவித்த ஆண்டவர், மகதலேனா

மரியாளை விடுவித்த ஆண்டவர், நம்மையும் பிசாசின் பிடியிலிருந்து விடுவிப்பார். ஆனால் ஒன்றை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும், நாமாக சத்துரு நம் வாழ்க்கையில் கிரியை செய்வதற்கு இடம் தரக்கூடாது. எனவே பிசாசின் பிடியில் நாம் சிக்கி தவிக்கும் பொழுது, நாமாக அவனுக்கு இடம் கொடுத்திருக்கிறோமா என்பதை ஆராய்ந்து பார்த்து மனம் திரும்ப வேண்டும். அப்பொழுது பேதுருவைப் போல் நாம் மன்னிப்பையும், விடுதலையையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஒருவேளை புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலராகிய பவுலை போல், பிசாசின் போராட்டங்களை நேரடியாக சந்திக்க நேர்ந்து, அதனால் நம் ஆவி ஆத்மா சரீரத்தில் வேதனை அனுபவித்தால், நாம் கவலை கொள்ள தேவையில்லை. ஆண்டவர் நிச்சயமாக நொடி பொழுதில் அவற்றை நம் வாழ்வில் இருந்து விலக்கி மகதலேனா மரியாளை போல், நம்மையும் வாழ செய்வார். எனவே பிசாசின் கிரியைகளுக்கு நாம் நம் வாழ்வில் மனமறிய இடம் கொடுக்கும் பொழுது, அவற்றால் நம்மை வீழ்த்த முடியுமே தவிர, எப்படிப்பட்ட பொல்லாத பிசாசின் பிடியிலிருந்தும் ஆண்டவர் நம் ஆவி ஆத்மா சரீரம் முழுவதையும் மீட்டுக்கொண்டு, நம்மை நித்திய ஜீவ கரையில் சேர்க்க முடியும். எனவே நம் இருதய சிந்தனைகளை, மாம்ச இச்சைகளை கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய சிறைப்படுத்துகிறவர்களாய் இருந்து, ஆண்டவரோடு விடுதலையான ஒரு வாழ்வை, இம்மையிலும் மறுமையிலும் வாழ்வோமாக, ஆமென், அல்லேலூயா.

## 109. பாவ மன்னிப்பின் மேன்மை




**2 சாமுவேல் 11 அதிகாரத்தில்** தாவீது பத்சேபாளிடத்தில் பாவத்திற்குட்பட்ட பின்பு, நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவன் பாவத்தை உணர்த்தின போது, **51 ஆம் சங்கீதத்தை** தாவீது பாடி, ஆண்டவரிடத்தில் இருந்து முழுமையாக பாவமன்னிப்பை பெற்றுக் கொண்டார். ஆவிக்குரிய பிரகாரமாக அவருடைய மேன்மையில் ஒரு குறைவும் ஏற்படவில்லை. அவர் தொடர்ந்து ஆண்டவருக்கு பிரியமானவராக இருந்தார். ஆண்டவருடைய சித்தத்தை செய்தார். அவருடைய விருப்பமாகிய தேவாலயம் அவருடைய குமாரனாகிய (பத்சேபாள் மூலமாய் பிறந்த) சாலொமோன் ராஜா காலத்தில் கட்டப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, புதிய ஏற்பாடு **"ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" (மத் 1:1)** என்றே ஆரம்பிக்கிறது.

எனவே அவருடைய ஆவிக்குரிய நிலையில் எந்த தொய்வும் அவருடைய பாவத்தால் ஏற்படாவிட்டாலும், **2 சாமு 12:9-12 வசனங்களில் "கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டைபண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்றுபோட்டாய். இப்போதும் நீ என்னை அசட்டைபண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டபடியினால், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான். நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் என்றார் என்று சொன்னான்."** என்று கூறப்பட்டுள்ள அவருடைய பாவத்தின், அனைத்து பின் விளைவுகளும் ஒன்று விடாமல் அவருடைய சரீர பிரகாரமான வாழ்க்கையில் நிறைவேறின. ஆவியிலும், ஆத்துமாவிலும், தேவனுடைய பாவ மன்னிப்பையும்,

ஐக்கியத்தையும், அவர் உணர்ந்தாலும் சரீர பிரகாரமாக அவருடைய பின்னான காலங்களை மேற்கூறிய தண்டனையின் வழியாகவே கடந்து சென்றார். எனவே பாவ மன்னிப்பை ஆவியிலும் ஆத்மாவிலும் பெற்று மகிழ்ந்த பொழுதும், சரீர பிரகாரமாக பாவத்தின் பின் விளைவுகளை அவர் எதிர்கொள்ள நேர்ந்தது. எனவே தேவன் அவரை மனதார மன்னித்தபொழுதும், அதன் தண்டனையை சரீர பிரகாரமாக தாவீது கடந்து செல்ல தேவன் அனுமதித்தார்.

ஆனால் புதிய ஏற்பாட்டில் முதல் இரத்த சாட்சியாகிய ஸ்தேவானை யூதர்கள் கல்லெறிந்து கொன்ற பொழுது, அவர்கள் வஸ்திரங்களை காத்த சவுல் **(அப் 7:58)**, **"இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்." (அப் 9:1,2)**. ஆனால் ஆண்டவர் அவரை சந்தித்தார், தேவப்பிள்ளைகளை துன்புறுத்துவதால் உண்மையில் துன்பப்படுவது தான் தாம் என்பதை கூறினார் **(அப் 9:4)**. மேலும் பவுலாகிய சவுலை குறித்த திட்டத்தையும், **அப் 9:15,16 வசனங்களில் "அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்."**. இதனால் அவருடைய வாழ்க்கை முற்றிலுமாக மாற்றப்பட்டது. அவருடைய முந்தைய வாழ்க்கையின் பாவங்கள் மன்னிக்கப்பட்டது மட்டுமல்ல, அவற்றின் எந்த ஒரு பின் வளைவும் தாவீதைப் போல் அவரை பாதிக்கவில்லை. அவர் தன் பிந்தைய நாட்களில் சரீரத்தில் பாடுபட்டாலும், அது தேவனுக்கு மகிமையை தான் கொண்டு வந்ததே தவிர, அது பாவ சாபத்தினால் அல்ல.

தாவீதின் இடத்தில் நாத்தானை அனுப்பியதை காட்டிலும், ஆண்டவரே நேரில் தோன்றி **"அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்." (அப் 9:5)** என்று கூறிய பொழுதிலும், சவுல் நேரடியாக ஆண்டவருடைய இருதயத்தையே வேதனைப்படுத்திய பொழுதிலும், சவுலுக்கு கிடைத்த பாவ மன்னிப்பு, பாவத்தின் பின் விளைவுகளை அவருக்கு ஏற்படுத்தவில்லை. காரணம் அவருடைய பாவம் மன்னிக்கப்பட்டது மாத்திரமல்ல அதற்கான கிரயமும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மூலமாக செலுத்தப்பட்டு விட்டது. பழைய ஏற்பாட்டிலும் ஆண்டவர் பாவங்களை மன்னித்தார், ஆனால் அதற்கான பரிகாரம் நியாயப்பிரமாணம் மூலமாய் செலுத்தப்பட்டது. மேலும் அதற்கான பின்விளைவுகளையும் சந்திக்க நேர்ந்தது. அதையும் ஆண்டவர் நாத்தான் தீர்க்கதரிசி மூலமாய் தாவீதிடம் கூறினார்.

ஆனால் புதிய ஏற்பாட்டிலோ அப்படியல்ல, ஆண்டவர் நமக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்து, உயிர்த்தெழுந்து நம் பாவங்கள், அதனால் உண்டாகி சாபங்கள், எல்லாவற்றையும் நீக்கிவிட்டார். பழைய ஏற்பாட்டில் பாவங்கள் மன்னிக்கப்பட்ட பின்பும் அதன் விளைவுகள் தொடர்ந்து கொண்டே இருந்தது. மேலும் இஸ்ரவேல் மக்களிடத்திலும் இதே நிலையே காணப்பட்டது. அவர்கள் ஒரு தேசமாக பாவத்தில் விழுவதும், அதனால் அடிமைத்தனத்துக்கு உட்படுவதும், பிறகு மன்னிப்பை

பெறுவதும் என்று மாறி மாறி நடந்து கொண்டுதான் இருந்தது. இதனை **எபிரேயர் 10:1-3 வசனங்களில் "இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா? அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது."** என்று நாம் காணலாம்.

இங்கு நாம் கற்றுக் கொள்கிற சத்தியம் என்னவென்றால் பழைய ஏற்பாட்டின் காலத்தில் கொடுக்கப்பட்ட பாவமன்னிப்பு, அவர்களை மேலும் பாவம் செய்யாமல் தடுக்கவில்லை, மேலும் பாவத்தினால் உண்டாகிய பின்விளைவுகளை, சாபங்களை அவர்களின் வாழ்வில் தடை செய்யவும் இல்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில், ஆண்டவர் நமக்கு கொடுக்கும் பாவமன்னிப்பு நம்மை வெளிச்சத்தின் பிள்ளைகளாய் தேவனுடைய பிள்ளைகளாய் மாற்றுகிறது. தேவனை அப்பா பிதாவே என்று கூப்பிட்ட தக்க புத்திர சுகாதாரத்தை நமக்கு தருகிறது. மேலும் **எபிரேயர் 9:25-28 வசனங்களில் "பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை. அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.",** என்று நாம் காண்கிறபடி, கிறிஸ்து ஒரே தரம் நமக்காக பலியிடப்பட்டார் என்றும், அந்த பலியினால் உண்டாகிய பாவ மன்னிப்பை நாம் பெற்றிருக்கிறோம் என்றும், இனி அவருடைய வருகைக்கு நாம் காத்திருக்க வேண்டியது என்றும் கூறுகிறது.

பழைய ஏற்பாட்டில் தேவன் சில வேலைகளில் மனஸ்தாபப்பட்டு மனதிறங்கி பாவமன்னிப்பை அருளினார். அதை தவிர நியாயபிரமான மூலமாய் பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ள வழி உண்டாக்கினார். ஆனால் அது எதுவும் அவர்களை முழுமையாக பாவத்தின் பிரசன்னத்திலிருந்து, அதன் சாபத்தில் இருந்து விடுவிக்கவில்லை. ஆனால் கிறிஸ்துவின் இரத்தமோ விலையேறபெற்றது. அதனால் நம் பாவ, சாப நோய்கள் அனைத்திலிருந்தும், நம் ஆவி ஆத்துமா மற்றும் சரீரம் முழுவதும் விடுதலை பெற்றுக் கொள்கிறது. அதன் பின்பு பாவத்தால் நம்மை ஆள முடியாது. நாம் கிறிஸ்துவுக்கே கீழ்படிகிற அடிமைகளாய் மாறிப்போகிறோம். ஆனால் ஒருவேளை **எபிரேயர் 6:4-6 வசனங்களில் "ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே**

**மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்."** என்று கூறப்பட்டுள்ளபடி, இப்படிப்பட்ட நிலை உருவாகும்மானால், அதன் முடிவு பயங்கரமாய் இருக்கும் இதனை நாம் **அப்போஸ்தலர் 5 ஆம் அதிகாரத்தில்** அனனியா சப்பீராளின் வாழ்வில் காண்கிறோம்.

எனவே பழைய ஏற்பாட்டில் தாவீது தன் பாவத்தின் விளைவுகளை சந்தித்தாலும், ஆண்டவர் அருளிய மன்னிப்பினால் பரலோகம் சென்றடைந்தார். ஆனால் புதிய ஏற்பாட்டில் முழுமையான விடுதலையை நாம் ஆண்டவருடைய இரத்தத்தின் மூலமாய் பெற்று இருந்தாலும், **2 பேதுரு 2:20-21 வசனங்களில் "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்."** என்று கூறப்பட்டுள்ள எச்சரிப்பை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையேல் **எபிரேயர் 10:28,29 வசனங்களில் "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்."** என்று கூறப்பட்டுள்ள காரியங்களே நடந்தேறும். எனவே ஆண்டவருடைய இரத்தத்தால் இலவசமாய் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற பாவமன்னிப்பின் மேன்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதை சரியாக பற்றிக்கொள்வோமானால் நித்திய வாழ்வை நாம் நிச்சயம் பெற்றுக் கொள்வோம். ஆனால் அதை இழந்து போனால் நித்திய அழிவை தான் சந்திக்க நேரிடும். எனவே நமக்கு அருளப்பட்டிருக்கிற பாவ மன்னிப்பின் மேன்மையை உணர்ந்து, அதனால் நமக்கு கிடைத்திருக்கிற மகிமையான வாழ்வை நாம் காத்துக் கொண்டு, நித்திய ஜீவக்கரை சென்றடைவோமாக. ஆமென், அல்லேலூயா.

# 110. காணிக்கை




காணிக்கை என்பது நாம் நம்முடைய அன்பை வெளிப்படுத்த, தேவனுக்காக அவர் நமக்கு கொடுத்ததிலிருந்து எடுத்து, அவருக்கென கொடுப்பதாகும். கர்த்தராகிய தேவன் தமது குமாரனான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையே, நமக்கென தந்துவிட்ட பிறகு, நாம் நம்மையே ஆண்டவருக்கு அர்ப்பணிப்பதை காட்டிலும், பெரிய காணிக்கை எதுவும் இல்லை. இதனையே ஆண்டவர் நம்மிடமும் எதிர்பார்க்கிறார். ஆகிலும் ஆண்டவர் நமக்கு இவ்வுலகில் கொடுத்திருக்கும் செல்வங்களில் இருந்து சிலவற்றை எடுத்து, ஆண்டவருக்கு படைப்பது, ஆதி காலம் முதல் தலைமுறை தலைமுறையாக நடந்து வருகிறது. காணிக்கை கொடுப்பவர்கள் எல்லாரும் ஆண்டவருக்கு பிரியமானவர்கள் என்று நாம் கூற இயலாது. ஆனால் ஆண்டவருக்கு பிரியமானவர்கள் நிச்சயமாய் அவருக்கு மேன்மையானவற்றை காணிக்கையாக படைப்பர். தேவனால் படைக்கப்பட்ட ஆதாம் ஏவாளுக்கு பிறந்த முதல் இரண்டு குமாரர்களான காயின், ஆபேல் ஆகியோரின் காணிக்கையே இதற்கு ஒரு நல்ல உதாரணம் ஆகும். ஆதி பிதாக்கள் ஆண்டவருக்கு நேரடியாக காணிக்கைகளை, பலிகளின் மூலமாக இன்னும் பல விதங்களில் செலுத்தினர். ஆனால் நியாயப்பிரமாண காலத்தில் தேவாலயத்திற்கு சென்று ஆசாரியன் மூலமாக அல்லது புதிய ஏற்பாட்டு காலத்தின்படி அப்போஸ்தலர்களிடமோ /தேவ ஊழியர்கள் மூலமாகவோ காணிக்கை செலுத்தப்பட்டது.

இங்கு இரண்டு காரியங்களை நாம் கவனிக்க வேண்டும். ஒன்று காணிக்கையை எப்படிப்பட்ட மனதோடு, எப்படிப்பட்ட ஒழுங்கோடு நாம் தேவனுக்கு செலுத்த வேண்டும் என்பது. மற்றொன்று, பெறப்படும் காணிக்கை அல்லது சேகரிக்கப்படும் காணிக்கை எப்படிப்பட்ட விதத்தில் ஆண்டவருக்கு மகிமையாக உபயோகிக்கப்பட வேண்டும் என்பது. ஏனெனில் சரியான முறையில் காணிக்கை செலுத்தப்பட்டு, அது சரியான முறையில் பயன்படுத்தப்படும் பொழுது, அது ஆண்டவருக்கு சுகந்த வாசனையாய் இருக்கும், இவற்றில் ஒன்று தவறாய் போனாலும் காணிக்கை செலுத்துவதில் பயன் இல்லாமல் போய்விடும். முதலாவது நாம் எவ்வாறு காணிக்கை கொடுக்க வேண்டும் என்பதை குறித்து சில காரியங்களை தியானிப்போம். ஒரு காலத்தில் மிருகங்களை, பறவைகளை பலியாக செலுத்தினர். ஆனால் இன்று நாம் அப்படி செலுத்துவதில்லை, பணமாகவோ அல்லது மற்ற பொருளாகவோ நாம் செலுத்தும் காணிக்கை தரமானதாக இருக்க வேண்டும். சிலர் செல்லாத ரூபாய்

நோட்டுகளையும், தரமற்ற பொருட்களையும் கொண்டுவந்து ஆலயத்தில் படைப்பதை காட்டிலும் அதை செலுத்தாமல் இருப்பதே மேல். இரண்டாவதாக, அது பரிசுத்தமானதாய், நேர்வழியில் சம்பாதிக்கப்பட்டதாயிருக்க வேண்டும். ஆண்டவர் நமக்கு தராத, நாம் குறுக்கு வழியில் ஈட்டிய எதுவும் ஆண்டவருக்கு தேவையில்லை. மூன்றாவதாக செலுத்தப்படும் காணிக்கை முழு மனதோடு ஆண்டவருக்கு என செலுத்தப்பட வேண்டும். ஆனால் சிலரோ, இன்று மன உற்சாகத்தோடு, ஊழிய தேவைகளை, ஊழியர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு காணிக்கை செலுத்தாமல், தங்கள் வாழ்வில் ஏதாவது நல்லது நடக்க வேண்டும் என்றோ, அல்லது காணிக்கை கொடுப்பது மூலம் தான் உலக ஆசீர்வாதங்களை மேன்மேலும் பெற முடியும் என்றோ, அல்லது செய்த பாவத்திற்கு பிராய்சித்தமாகவோ, தங்கள் செல்வ செழிப்பை பிரஸ்தாபம் பண்ணவோ, காணிக்கை செலுத்த துணிகின்றனர். மேலும் அனனியா மற்றும் சப்பீராள் போல் இருமனதோடு, ஆண்டவரையே ஏமாற்றும் விதத்தில் கொடுக்கப்படும் காணிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒருவேளை முழு மனதோடு நல்ல விதத்தில் ஈட்டிய பொருளில் இருந்து காணிக்கை கொடுத்தாலும், இன்றைய காலகட்டத்தில் யாருக்கு அது போய் சேர்கிறது என்பது மிக முக்கியமானதாகும். ஏனெனில், ஆண்டவருக்கு என நாம் கொடுத்தாலும் அது ஆண்டவருடைய நாமம் மகிமைக்காக உபயோகப்படுத்தப்படுமா என்பதை நாம் சிந்தித்துக் கொடுக்க வேண்டும். நம்மால் அதை முழுமையாக தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும் உண்மையாய் ஆண்டவருக்காக செயல்படும் ஊழியத்திற்காக, சபைக்காக, நாம் கொடுக்கிறோமோ என்பதை ஆண்டவர் தரும் ஞானத்தோடு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல், நாம் சுத்த மனதோடு காணிக்கை கொடுப்பதனால், ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்தாலும், அந்த காணிக்கை சரியானபடி உபயோகிக்கப்பட்டதாய் இல்லாமல் போகும் பொழுது, அது ஆண்டவருக்கு வேதனையை தான் கொண்டு வரும். மேற்கண்ட காரியங்களில் நாம் எவ்வாறு காணிக்கை கொடுக்க வேண்டும் என்பதை தியானித்தோம். இப்பொழுது சேகரிக்கப்படும் காணிக்கை எவ்வாறு உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் தியானிப்போம்.

ஏனெனில் இவ்வாறு சேகரிக்கப்படும் காணிக்கை சரியான விதத்தில் உபயோகப்படுத்தபடாததால், ஒரு பக்கம் ஊழிய தேவைகள் அதிகமாக இருக்க, மறுப்பக்கம் தேவையில்லாத காரியங்களுக்காய், சில தனிப்பட்ட மனிதர்களுக்காய், காணிக்கையாய் பெறப்பட்ட செல்வங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆண்டவருடைய கிருபையால் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, பல்வேறு அயல்நாட்டு மிஷனரி ஸ்தாபனங்கள் மூலம், ஊழியர்கள் இந்தியாவிற்கு குறிப்பாக தென் இந்தியாவிற்கு, அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிற்கு வந்து அருமையாய் சுவிசேஷ பணி செய்து, ஆலயங்களை ஸ்தாபித்து, கல்வி மற்றும் மருத்துவ சேவைகளையும் தந்து இன்று இத்தனை கோடி பேர் ஆண்டவரை அறிந்து கொள்ள காரணமாயினர். இதற்காக அவர்கள் ஊழிய தேவைகளை, திட்டங்களை அறிந்து தங்கள் சொந்த நாட்டிலிருந்து தியாகத்தோடு காணிக்கைகளைப் பெற்று அதன் மூலம் பல நல்ல பணிகளை செய்தனர். இத்தனை நூற்றாண்டுகளாகியும், அப்பொழுது அவர்கள் உதாரத்துவமாய் செலுத்திய காணிக்கை மூலம், கட்டப்பட்ட ஊழியங்கள், சபைகள், பள்ளிகள், மருத்துவமனைகள், கல்லூரிகள் மற்றும் ஆதரவற்றோர இல்லங்கள் என்று இன்றும் அநேகருக்கு பிரயோஜனமாய், இதைக் கண்டு இன்றும் மக்கள் ஆண்டவர் ஏற்றுக்கொள்ளும் விதமாய் அமைந்துள்ளது. இப்பொழுது நம் நாட்டு ஊழியர்கள், குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள ஊழிய ஸ்தாபனங்கள், இதையே நாடு முழுவதும் விரிவுபடுத்த வேண்டிய நிலையில் உள்ளனர். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, விஷ்வவாணி, இந்திய சுதேச மிஷனரி சங்கம் என்று பல சுதேச ஊழியங்களும், இன்னும் பல சபை பிரிவுகளும், இதற்கான காரியங்களை அயராது செய்து வருகின்றனர். ஒரு பக்கம் காணிக்கை அதிகமாக சேகரிக்கப்பட்டாலும், அது சரியான காரணங்களுக்காக செலவு செய்யப்படாதபடியால், எத்தனையோ இடங்களில் சரியான ஆலயமின்றி, ஊழியத்திற்கான மற்றும் ஊழியர்களின்

குடும்பத்திற்கான தேவைகள் சந்திக்கப்படாமல், கிறிஸ்துவை அறியாத இடங்களுக்கு சுவிஷேசத்தை சென்று சேர்க்க முடியவில்லை.

அயல்நாட்டு மிஷனரிகளால் தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில், சில நூற்றாண்டுகளுக்குள் செய்யப்பட்ட ஊழியத்தை, இன்று சகல வசதிகளும், காணிக்கைகளும் இருந்தும், அதனை இந்தியா முழுவதும் கொண்டு செல்ல முடியவில்லை. இதற்கு முக்கிய காரணம், நாம் இன்று வெளிப்படையாய் காண்கிறபடி, காணிக்கையாக சேகரிக்கப்படும் பணம் பொருள் ஆகியவை தவறான முறையில் பயன்படுத்தப்படுவது ஆகும். ஒருபுறம் சிறிய தேவைகள் கூட சந்திக்கப்படாமல், எத்தனையோ இடங்களில் (தமிழ்நாடு உள்பட) சரியான ஆலயம் இல்லாமல், ஆலயம் இருந்தும் அதற்கான அடிப்படை வசதிகள் இல்லாமல், மக்கள் ஆண்டவரை ஆராதித்து வருகின்றனர். ஆனால் மற்றொருபுறமோ, கோடிக்கணக்கில் செலவு செய்து ஏற்கனவே நல்ல வசதிகளோடு இருக்கிற ஆலயத்தை, தங்கள் உலகப் பெருமையை, தங்கள் செல்வ செழிப்பை காண்பிக்க புதுப்பிக்கின்றனர். ஆனால் தாங்களே அவருடைய ஆலயம், அதை புதுப்பித்து தூய்மையாக வைக்க வேண்டும் என்பதை மறந்து விடுகின்றனர்.

மேலும் சுயாதீனமாய் சபை ஊழியம், சுவிசேஷ ஊழியம் என பல விதங்களில் ஊழியம் செய்வோர், தாங்கள் விசுவாச மக்களிடமிருந்து, அற்பணிப்போடு பெரும் உதாரணத்துவமான காணிக்கையை, தெரிந்தோ தெரியாமலோ சரியான விதத்தில் பயன்படுத்தாமல் போகின்றனர். இன்று வெறும் ஐந்து நிமிடங்கள் ஓடக்கூடிய ஒரு பாடலை தயாரிக்க எத்தனையோ லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்படுகிறது. ஆனால் அப்படி தயாரித்து வெளியிடப்படும் பாடல்களில் 25% பாடல்கள் தவிர, மற்ற அனைத்தும் தனி மனிதர்களின் பாடும் திறமைகளை, இசை திறமைகளை காட்டுவதாய் உள்ளதே தவிர மற்றபடி ஆண்டவருக்கு எவ்விதத்திலும் மகிமையை கொண்டு வருவதில்லை. ஆடம்பரமான கார்கள், பங்களாக்கள் மற்றும் இதர வசதிகள் என்று உயர்தரமாக வாழ விரும்பும் ஊழியர்கள், உண்மையில் ஆண்டவருடைய ஊழிய விரிவாக்கத்திற்கு தடை கற்களாகவே உள்ளனர். மக்களை வஞ்சித்து, உண்மையான ஊழிய தேவைகளை அவர்கள் அறிந்து கொள்ள விடாமல், தாங்கள் செய்வதே ஊழியம் என்ற பிம்பத்தை உருவாக்கி, காணிக்கை பணத்தை வீணடிக்கின்றனர். ஊழியர்கள் நல்ல நிலையில் வாழ்வதும், தங்கள் ஊழியத்தை விரிவாக்குவதும் தவறல்ல. ஆனால் அதே நேரத்தில் தங்களைப் போல ஆண்டவருடைய ஊழியத்தை செய்கிற மற்ற ஊழியர்கள், ஊழிய ஸ்தாபனங்களின் தேவைகளை அறிந்து, அதற்கான காணிக்கை பணங்களை உபயோகப்படுத்த வேண்டும்.

அப்படி இல்லாமல் ஊழியத்தை ஒரு நிறுவனம் போல் நடத்தி, அதற்கு தான் தலைவன் என்று எண்ணி, தன் தேவைகளுக்காக, தன் ஊழியத்தை பிரபலப்படுத்த, இன்றைய ஊடகங்கள் மூலமாகவும், சமூக வலைதளங்கள் மூலமாகவும், கோடிக்கணக்கான காணிக்கை பணத்தை செலவு செய்வது ஏற்புடையது அல்ல. ஒரு பக்கம் அடிப்படை தேவைகளான, உணவு, உடை, இருப்பிடம், கூட இல்லாமல் எத்தனையோ ஊழியர்களும், விசுவாசிகளும் ஆண்டவரையே, நம்பி ஒவ்வொரு நாளையும் கடந்து செல்லும் பொழுது, அதைப்பற்றிய அக்கறை ஏதும் இன்றி, சுகபோகமாய் வாழ காணிக்கை பணத்தை செலவு செய்வது ஏற்புடையது அல்ல. இதில் இன்னும் கொடுமையானது, காணிக்கை மூலமாக ஏற்படுத்தப்பட்ட சபை கட்டிடங்கள், ஊழிய ஸ்தாபனங்களை, ஊழியர்களின் அடுத்த தலைமுறை குடும்பத்தினர், அவற்றை தங்கள் சொத்தை போல், ஏதோ நிறுவனத்தை போல் எண்ணி, அதை கைப்பற்ற நினைப்பதும், கைப்பற்றிய பிறகு பலருடைய தியாகமான காணிக்கையால் ஏற்படுத்தப்பட்ட ஊழியத்தை, சபை கட்டிடத்தை, தங்கள் இஷ்டத்திற்கு ஏற்ப நடத்த நினைப்பது, அவர்கள் பெற்றோர்கள் தியாகமாய் செய்த ஊழியங்கள் யாவையும் மறக்கடிக்க செய்கிறது.

இதனால் அநேகர் தாங்கள் ஊழியத்திற்க்கென கொடுக்கும் காணிக்கை, சரியான நோக்கங்களுக்காய் செலவு செய்யப்படுமோ என்று அஞ்சுகின்றனர். எனவே ஆண்டவர் கூறியபடி சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷ அறிவிக்க, அவர்களை சபையாக கூடிவரபண்ண, அதிகமான காணிக்கைகள் தேவை என்பது ஒரு புறம் இருந்தாலும், தற்பொழுது கொடுக்கப்படுகிற காணிக்கைகளை சரியாக பயன்படுத்தினாலேயே, ஓரளவுக்கு அதை அடைய இயலும் என்பதை ஊழியர்கள், ஊழிய நிறுவனங்கள், சபை மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். எவ்வித வசதிகள் இல்லாத, மொழி கூட தெரியாத, வாழ வசதி இல்லாத இயற்கை சூழ்நிலைகள் இருந்த பொழுதும் அர்ப்பணிப்போடு, பல மாதங்கள் கடல் கடந்து பிரயாணம் செய்து, பிறகு ஊழிய பாதையில் பல சிரமங்களை அடைந்து, அதன் மத்தியிலும் இவ்வளவு அருமையாய், குறிப்பாக தமிழ்நாடு முழுவதும் தங்கள் ஊழியத்தை செய்த, அயல்நாட்டு ஊழியர்களின் தியாகத்தையும், அவர்கள் ஊழிய நடைமுறைகளையும் இன்றைய ஊழியர்கள், ஊழிய ஸ்தாபனங்கள், சபை மக்கள் அறிந்து உணர்ந்து கொள்வார்கள் என்றால் இந்தியாவில் எழுப்புதல் விரைவில் உண்டாக்கும். எனவே சரியான நோக்கத்துடன், திட்டத்துடன், காணிக்கை செலுத்துவதும், அப்படி செலுத்தப்பட்ட காணிக்கையை சரியான முறையில் உபயோகிப்பதும், மிக மிக முக்கியமானதாகும். இதில் நாம் அசட்டையாய் இருப்போமானால், ஆண்டவர் பரமேறும் போது கூறிய, பிரதான கட்டளையை நாம் நிறைவேற்ற முடியாமல் போகும். எனவே காணிக்கை செலுத்துவதிலும், அதை பயன்படுத்துவதிலும் ஜாக்கிரதையோடு, விழிப்பாய் இருப்போமாக. அப்பொழுது அதற்கான பலனை ஆண்டவர் நமக்கு இம்மையிலும் ,மறுமையிலும் தருவார், ஆமென், அல்லேலுயா.

## 111. ரூத்தின் மாமியாகிய ராகாப்




ரூத்தின் புத்தகத்தில் நாம் அதிகமாக காண்பது ரூத்தை பற்றியும் ரூத்தின் மாமியாகிய நகோமியை பற்றியுமே. ஆனால் ரூத்தின் புத்தகத்தில் இவர்களுடைய அர்ப்பணிப்பும் நற்குணமும் மட்டுமல்லாமல், மறைந்திருக்கும் மற்ற நபர்களுடைய அர்ப்பணிப்பும், தியாகமும், தேவனுக்கு பயந்து அவரை சார்ந்து நடந்து கொண்ட விதமும், ரூத் தாவீது ராஜாவின் முற்பிதாக்கள் அட்டவணையில் இடம் பெற வழி வகுத்தது. அதிலும் மேலாக புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகமான மத்தேயு புத்தகத்தில், முதல் அதிகாரத்தில், ஆபிரகாம் முதல் கிறிஸ்து இயேசு வரைக்கும் உள்ள வம்ச அட்டவணையிலும் இடம்பெற முடிந்தது. ஆனால் இந்த வம்ச அட்டவணையை கூர்ந்து நோக்குவோமானால், மற்ற நபர்களையும் நாம் அடையாளம் கண்டு கொள்ளலாம். **மத் 1:5 கூறுகிறது "சல்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான்; போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான்",** என்று. இதே அட்டவணை ரூத் புத்தகத்தின் இறுதியில் கூறப்பட்டிருந்தாலும், அங்கு **"சல்மோன் போவாசைப் பெற்றான்; போவாஸ் ஓபேதைப் பெற்றான்." ( ரூத் 4:21)** என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. காரணம் ரூத் பற்றி, ரூத் புத்தகம் முழுவதும் கூறப்பட்டிருந்தாலும், ரூத்தின் புத்தகத்தில் உள்ள இந்த அட்டவணை **"ஓபேத் ஈசாயைப் பெற்றான்; ஈசாய் தாவீதைப் பெற்றான். " ( ரூத் 4:22)** என்று தாவீதின் வம்ச வரலாற்றை மையப்படுத்தியே எபிரேய மக்களின் வழக்கப்படி ஆண்களின் பெயர் மட்டுமே உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் **மத்தேயு முதல் அதிகாரத்தில் 1 -17 வரை உள்ள வசனங்கள்** கிறிஸ்துவின் வம்ச அட்டவணையை பற்றி, அவர் எவ்வாறு ஆபிரகாமின் விசுவாச சந்ததியின், வாக்குத்தத்தத்தை பெற்ற சந்ததியின், ஈசாயின் அடிமரத்தில் இருந்து தோன்றிய தாவீதின் சிங்காசனத்திற்கு உரியவராய், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார் என்பதே ஆகும். இப்பொழுது நாம் ஈசாய் எனும் அடி மரத்தை பெற்ற, ஈசாயின் தகப்பனாகிய ஓபேத்தை பற்றியும், ஓபேத்தை பெற்ற பெற்றோர்களாகிய போவாஸ் ரூத் பற்றியும், போவாசை பெற்ற சல்மோன் ராகாப் பற்றியும் சிறிது ஆராய்ந்து அறிந்து கொள்வது சால சிறந்ததாகும். குறிப்பாக ராகாப் மற்றும் போவாசைப் பற்றி அறிந்து கொள்வது மிக சிறந்ததாகும். மோவாப்பிய பெண்ணாகிய ரூத் நகோமின் மகனான மக்லோனை மணந்ததின் மூலம் நகோமிக்கு மருமகளானது போல், போவாசை மணந்ததன் மூலம் அவன் தாயாகிய ராகாப்பிற்கும் மருமகளானாள்.

ரூத்தின் புத்தகத்தின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை நகோமி மற்றும் ரூத்தைப் பற்றி அநேக காரியங்கள் கூறப்பட்டிருந்தாலும், ராகாப் மற்றும் ராகாபின் குமாரனான போவாஸ் ஆகிய இருவரை பற்றியும் அறிந்து கொள்வது ஆண்டவருடைய மீட்பின் திட்டத்தை பற்றி முழுமையாக நாம் அறிந்து கொள்ள உதவும். **"சல்மோன் போவாசைப் பெற்றான்; போவாஸ் ஓபேதைப் பெற்றான்." ( ரூத் 4:21)** என்று மட்டும் ரூத் புத்தகம் கூறுகிறது. ஆனால் புதிய ஏற்பாட்டின் உடன்படிக்கையின்படி அதில் ராகாபின் பங்களிப்பை உணர்த்த பெண்களாகிய ராகாப் மற்றும் ரூத்தின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. யூத முறைப்படி யூதர்களாகிய ஆண்களின் பெயர்கள் மட்டுமே இடம்பெறும் வம்ச அட்டவணையில், பெண்களாகிய அதிலும் கானான் மற்றும் மோவாப் ஆகிய, வேற்று ஜாதி பெண்களின் பெயராகிய ராகாப் மற்றும் ரூத்தின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இதில் ராகாப்பை பற்றி சில காரியங்களையும், ராகாபின் மகனான போவாசைப் பற்றியும் நாம் சிறிது ஆழமாக சிந்திப்போம்.

ராகாப்பை குறித்து **யோசுவா 2:1 இல் "நூனின் குமாரனாகிய யோசுவா சித்தீமிலிருந்து வேவுகாரராகிய இரண்டு மனுஷரை இரகசியமாய் வேவுபார்க்கும்படி அனுப்பி: நீங்கள் போய் தேசத்தையும் எரிகோவையும் பார்த்துவாருங்கள் என்றான். அவர்கள் போய், ராகாப் என்னும் பெயர்கொண்ட வேசியின் வீட்டுக்குள் பிரவேசித்து, அங்கே தங்கினார்கள்."** அவளை பற்றிய அறிமுகமே "**அவள் ஒரு வேசி**" என்று கூறப்பட்டுள்ளது. அதனால் எரிகோவை வேவு பார்க்க வந்த இஸ்ரவேல் வேவுகாரர்களால் எளிதாக அவள் வீட்டில் தங்க முடிந்தது. அவளை ஒரு வேசி என்று வேதம் அறிமுகப்படுத்தினாலும், அவளுடைய நற்குணத்தையும், இஸ்ரவேலின் தேவனுடைய வல்லமையை அறிந்து, அவரே மெய்யான தெய்வம் என்பதை அவள் உணர்ந்து அறிக்கையிட்டதையும், யோசுவா இரண்டாம் அதிகாரம் நமக்கு தெளிவாக கூறுகிறது. **யோசுவா 2:2-7 வரை உள்ள வசனங்கள் "தேசத்தை வேவுபார்க்கும்படி, இஸ்ரவேல் புத்திரரில் சில மனுஷர் இந்த ராத்திரியிலே இங்கே வந்தார்கள் என்று எரிகோவின் ராஜாவுக்குச் சொல்லப்பட்டது. அப்பொழுது எரிகோவின் ராஜா ராகாபண்டைக்கு ஆள் அனுப்பி: உன்னிடத்தில் வந்து, உன் வீட்டுக்குள் பிரவேசித்த மனுஷரை வெளியே கொண்டுவா; அவர்கள் தேசத்தையெல்லாம் வேவுபார்க்கும்படி வந்தார்கள் என்று சொல்லச்சொன்னான். அந்த ஸ்திரீ அவ்விரண்டு மனுஷரையும் கொண்டுபோய் அவர்களை ஒளித்துவைத்து: மெய்தான், என்னிடத்தில் மனுஷர் வந்திருந்தார்கள்; ஆனாலும் அவர்கள் எவ்விடத்தாரோ எனக்குத் தெரியாது. வாசலை அடைக்கும் நேரத்தில் இருட்டுவேளையிலே, அந்த மனுஷர் புறப்பட்டுப் போய்விட்டார்கள்; அவர்கள் எங்கே போனார்களோ எனக்குத் தெரியாது; அவர்களைச் சீக்கிரமாய்ப் போய்த் தேடுங்கள்; நீங்கள் அவர்களைப் பிடித்துக்கொள்ளலாம் என்றாள். அவள் அவர்களை வீட்டின்மேல் ஏறப்பண்ணி, வீட்டின்மேல் பரப்பப்பட்ட சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்திருந்தாள். அந்த மனுஷர் யோர்தானுக்குப் போகிற வழியில் துறைகள்மட்டும் அவர்களைத் தேடப்போனார்கள்; அவர்களைத் தேடுகிறவர்கள் புறப்பட்டவுடனே வாசல் அடைக்கப்பட்டது."** மேற்கண்ட வசனங்களில், அவள் எவ்வாறு தைரியமும், சாமர்த்தியமும் உடையவளாய் எரிகோவின் ராஜாவிற்கே பயப்படாமல் இஸ்ரவேலின் வேவுகாரர்களை தன் வீட்டில் மறைத்து வைத்து காப்பாற்றினால் என்பதை காணலாம்.

இவ்வாறு அவள் நடந்து கொண்டதற்கான காரியத்தை அவளே **யோசுவா 2:8-11** வரை உள்ள வசனங்களில் கூறுவதை காணலாம், **"அந்த மனுஷர் படுத்துக்கொள்ளுமுன்னே அவள் வீட்டின்மேல் அவர்களிடத்திற்கு ஏறிப்போய், கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும், உங்களைப்பற்றி எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக்குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்துபோனார்களென்றும் அறிவேன். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது, கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப்பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம் பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம். கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்துபோயிற்று, உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப்போயிற்று; உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்."** இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய காரியங்கள், ராகாப் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எப்படி இஸ்ரவேல் மக்களை அதிசயமாய் நடத்தி வருகிறார் என்பதையும், எரிகோவை குறித்த தேவ திட்டம் என்னவென்பதையும் அறிந்திருந்தாள், அது மட்டும் இன்றி **உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்** என்று அறிக்கையும் இட்டாள். இவ்வாறு அவள் அறிக்கையிட்டு, அதன் மூலம் எரிகோவின் அழிவிலிருந்து தப்பி இஸ்ரவேல் தேசத்தில் தஞ்சமடைந்தாள்.

**யோசுவா 6:22 இல் "யோசுவா, தேசத்தை வேவுபார்த்த இரண்டு புருஷரை நோக்கி: நீங்கள் அந்த வேசியின் வீட்டிலே போய், நீங்கள் அவளுக்கு ஆணையிட்டபடி அந்த ஸ்திரீயையும் அவளுக்கு உண்டான யாவையும் அங்கேயிருந்து வெளியே கொண்டுவாருங்கள் என்றான்."** கூறப்பட்டுள்ளபடி, தான் தப்பியது மட்டுமின்றி, அவள் தாய், தகப்பன், சகோதரர்கள் மற்றும் அவள் குடும்பத்தினர் அனைவரையும் எரிகோவின் அழிவிற்கு தப்புவித்தாள். தன்னுடைய வாழ்க்கை எரிகோவில், கேள்விக்குரியதாய் இருந்த போதிலும், அவள் தாய் தகப்பன், உள்பட எவரும் அவளுடைய வாழ்க்கையை பொறுப்பெடுத்துக் கொள்ளாத பொழுதும், அவள் தன் குடும்பத்தார் அனைவரையும் மீட்டெடுத்தாள். தன்னுடைய விசுவாசத்தால் தான் மனம் திரும்பினது மட்டுமின்றி, மற்றவர்களையும் மனம் திரும்ப செய்தால். இதனால்தான் புதிய ஏற்பாட்டின் அருமையான விசுவாசிகளின் பட்டியலில் இடம்பெற்றாள். **எபி 11:31** கூறுகிறது **"விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்."** என்று. ஆம் ஒருவேளை அவள் வேசி என்றே அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும், இஸ்ரவேலின் தேவனுக்கு கீழ் அவள் வந்துவிட்ட பிறகு, அவளுடைய வாழ்க்கை முற்றிலும் மாறியது, அவள் ஆபிரகாமின் சந்ததியில் தாவீது ராஜாவின் முற்பிறாக்களின் அட்டவணையில் இடம்பெற்றாள். எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றிலும் இடம் பெற்றாள். குறிப்பாக பெண்ணாகிய அவளுடைய பெயர் வம்ச அட்டவணையில் இடம் பெற்று இருப்பது, அவள் எவ்வளவாய் தன் பழைய வாழ்வை விட்டு, ஆண்டவருக்கு கீழ்ப்படிந்திருப்பாள் என்பதை அறிய தருகிறது. எரிகோவின் மத்தியில் வேசியாய் அறியப்பட்டவள் இன்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவதரித்த பெத்தலகேமிற்கு உரியவளாய் மாறிப்போனாள்.

மேலும் சல்மோன் மூலமாக அருமையான போவாசை பெற்றாள். அந்த போவாசை வேதம் நமக்கு பின்வருமாறு அருமையாக அறிமுகப்படுத்துகிறது, **"அப்பொழுது**

**போவாஸ் பெத்லெகேமிலிருந்து வந்து, அறுக்கிறவர்களைப் பார்த்து: கர்த்தர் உங்களோடே இருப்பாராக என்றான்; அதற்கு அவர்கள்: கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக என்றார்கள்." (ரூத் 2:4).** மேலும் **ரூத் 2:5-16** வசனங்கள் வரை உள்ள ரூத் போவாஸ் இடையிலான சம்பாஷனை, போவாஸ் மற்றும் ரூத் ஆகிய இருவரின் நற்பண்புகளைப் பற்றி நமக்கு அறிய தருகிறது. அதிலும் குறிப்பாக போவாசைப் பற்றி நாம் பின்வருமாறு சில அருமையான காரியங்களை காணலாம். போவாஸ் முதலாவது ரூத்தை பற்றி தன் வேலைக்காரன் மூலமாக எல்லாவற்றையும் அறிந்து கொண்ட பிறகு, அவளை தயவாய் விசாரிப்பதையும் **"உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்." (ரூத் 2:12)**, என்று கூறுவதும், ரூத்தின் வாழ்க்கையும் தன் தாயாகிய ராகாப்பின் வாழ்வை போல் இருந்ததால் தான். தன் தாயாகிய ராகாப்பின் மோசமான எரிகோவின் வாழ்வை பற்றியும், அதன் பின் விசுவாசத்தினால் அவள் இஸ்ரவேலின் தேவனுடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்துவிட்ட பிறகு, தன் தகப்பனாகிய சல்மோனை மணந்து தன் வாழ்க்கையில் பெற்ற மாற்றத்தையும், இன்று செல்வ செழிப்போடு பெயர் பெற்றவனாக பெத்தலகேமில் தான் இருப்பதையும் போவாஸ் சரியாக அறிந்திருந்தான்.

ராகாபின் வாழ்வை பார்க்கும் பொழுது, ரூத்தின் வாழ்க்கை எவ்வளவோ பரவாயில்லை. எனவே தன் தாயாரை போல் ஆதரவற்றவளாய் நிற்கும் ரூத்தை, கனிவோடு விசாரித்து நடத்துவதை பற்றி போவாஸ் நன்கு அறிந்திருந்தான். மேலும் **ரூத் 3:8-15** வசனங்களில், மறுபடியும் போவாஸ் மற்றும் ரூத் இடையே நடக்கும் சம்பாஷணையில் போவாசின் ஞானமும், நற்குணமும், கரிசனையும் வெளிப்படுகிறது. குறிப்பாக **ரூத் 3:10 இல் "அதற்கு அவன்: மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக; நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப்பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது."** என்று கூறுவது, அவள் எவ்வளவு பரிசுத்தமாய் தன்னை காத்துக் கொண்டால் என்பதை போவாஸ் அறிந்திருந்தான் என்பதும், **ரூத் 3:11,12 வசனங்களின்படி "இப்போதும் மகளே, நீ பயப்படாதே; உனக்கு வேண்டியபடியெல்லாம் செய்வேன்; நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள். நான் சுதந்தரவாளி என்பது மெய்தான்; ஆனாலும் என்னிலும் கிட்டின சுதந்தரவாளி ஒருவன் இருக்கிறான்."** என்று கூறுவது, நியாயப்பிரமாண கற்பனையின்படி செய்ய அவன் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தான் என்பதையும் காணலாம். மேலும் **ரூத் 3:18 இல் "அப்பொழுது அவள்: என் மகளே, இந்தக் காரியம் என்னமாய் முடியும் என்று நீ அறியுமட்டும் பொறுத்திரு; அந்த மனுஷன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்குமுன் இளைப்பாறமாட்டான் என்றாள்."** என்று நகோமி ரூத்திடம் இவ்வாறு கூறுவது, போவாசின் நற்குணத்தை அனைவரும் அறிந்திருந்தனர் என்பதை உணர்த்தும்.

இதற்கெல்லாம் காரணம் மறைவில் உள்ள ராகாபின் வாழ்க்கையும், அவள் தன் தகப்பன் குடும்பத்தாரை காப்பாற்றியது மட்டுமல்ல இஸ்ரவேலில் புதிய குடும்பத்திற்குள் பிரவேசித்த பிறகு, தான் பெற்ற மகனாகிய போவாசை எவ்வளவு அருமையாக வளர்த்திருக்கிறாள் என்பதையும் நாம் காணலாம். மற்றொரு சுதந்திரவாளியோடு பேசின பொழுது, **ரூத் 4:6-8 வசனங்கள் "அப்பொழுது அந்தச் சுதந்தரவாளி: நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு, நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன்; நான் மீட்கத்தக்கதை நீர் மீட்டுக்கொள்ளும்; நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன் என்றான். மீட்கிறதிலும் மாற்றுகிறதிலும் சகல காரியத்தையும் உறுதிப்படுத்தும்படிக்கு, இஸ்ரவேலிலே பூர்வகால வழக்கம் என்னவென்றால், ஒருவன் தன் பாதரட்சையைக் கழற்றி, மற்றவனுக்குக் கொடுப்பான், இது இஸ்ரவேலிலே வழங்கின உறுதிப்பாடு. அப்படியே அந்தச்**

**சுதந்தரவாளி போவாசை நோக்கி: நீர் அதை வாங்கிக்கொள்ளும் என்று சொல்லி, தன் பாதரட்சையைக் கழற்றிப் போட்டான்.“** அவன் அதை ஏற்றுக் கொள்ளாததை நாம் காணலாம். உண்மையில் இவையாவும் தேவசெயல். கானானிய பெண்ணாகிய, வேசியாய் (பாவியாய்) தன் வாழ்வை நடத்திய ராகாப்பையும், மோவாப்பிய பெண்ணாகிய, கைம்பெண்ணெய் (ஆதரவற்றவளாய்) தன் வாழ்வை நடத்திய ரூத்தையும், பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் மீட்டுக்கொண்டு அவர்களை கிறிஸ்துவின் சந்ததியில் கொண்டு வந்தது தேவனின் அநாதி திட்டமாகும்.

இன்று தேவனை அறியாத ஜனக் கூட்டத்திலிருந்து, பாவத்திலும், சாபத்திலும், வியாதி வேதனையிலும், உழன்று கொண்டிருந்த எத்தனையோ பேர், தேவ கிருபையால் அவருடைய அநாதி திட்டத்தின் மூலம், விசுவாசத்தினால், கிறிஸ்துவுக்குரியவர்களாய் திருச்சபையின் அங்கமாய் மாறி உள்ளனர். ராகாபும், ரூத்தும் இன்று கிறிஸ்துவின் திருச்சபைக்கு நிழலாட்டமாய், விசுவாசத்தின் மூலம் ஆபிரகாமின் பிள்ளைகளான நமக்கு ஒரு அடையாளமாய் உள்ளனர். கர்த்தர் அவர்களுடைய பெயர்களை, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் வம்ச அட்டவணையில் பதிய வைத்து, அவர்களை அடையாளங்களாய் வைத்துள்ளார். இதே அட்டவணை மற்றொரு பெண்ணாகிய மரியாளோடு முடிவடைகிறது. இங்கு ராகாப், ரூத் மற்றும் மரியாள் ஆகிய மூன்றுபேரின் கீழ்படிதலும், விசுவாசமும், மிகவும் முக்கியமானதாகும். அத்தோடு சேர்ந்து, ராகாபின் கடந்த கால வாழ்வை பாராமல், அவளுடைய விசுவாசத்தையும் நற்குணத்தையும் பார்த்து அவளை ஏற்றுக் கொண்ட சல்மோனும், தன் தாயைப்போல ஆதரவற்றவளாய், மேலும் கைம்பெண்ணாய் நின்ற ரூத்தை ஏற்றுக்கொண்ட போவாசும், தனக்கு நியமிக்கப்பட்டிருந்த கன்னியாகிய மரியாள், கர்ப்பவதியான பொழுது, **மத் 1:18-21** வசனங்களில் உள்ளபடி, மரியாளைக்குறித்த தேவத்திட்டத்தை அறிந்து கொண்ட பிறகு, மனப்பூர்வமாய் மரியாளை ஏற்றுக் கொண்ட யோசேப்பும் கிறிஸ்துவின் சந்ததியில் இடம்பெற பாக்கியம் பெற்றவர்கள். எனவே ரூத் தன் மாமியாகிய நகோமி தனக்கென நற்காரியங்களை முன்னெடுத்த பொழுது, அதற்கு கீழ்படிந்து, ரூத்தாகிய தன்னைப்போல், விசுவாசத்தினால் இஸ்ரவேல் தேவனுடைய செட்டைகளின் கீழ் வந்த ராகாபின், அருமையான மகனான போவாசை மணந்ததின் மூலம், ரூத் ராகாபுக்கு மருமகள் ஆனாள்.

**ரூத் 4:14-16 வசனங்கள் “அப்பொழுது ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து: சுதந்தரவாளி அற்றுப்போகாதபடிக்கு இன்று உனக்குத் தயைசெய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவன் பேர் இஸ்ரவேலிலே பிரபலமாகக்கடவது. அவன் உன் ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவனும், உன் முதிர்வயதிலே உன்னை ஆதரிக்கிறவனுமாயிருக்கக்கடவன்; உன்னைச் சிநேகித்து, ஏழு குமாரரைப்பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள் அவனைப் பெற்றாளே என்றார்கள். நகோமி அந்தப் பிள்ளையை எடுத்து, தன் மடியிலே வைத்து, அதை வளர்க்கிற தாயானாள்.“**, ரூத் மற்றும் நகோமி இடையே இருந்த அற்புதமான உறவை குறித்த சாட்சியாக இருந்தாலும், மறைவாக ராகாபின் நற்குணம், போவாசின் மூலமாய் வெளிப்பட்டு, ரூத் இப்படிப்பட்ட நிலையை அடைய செய்தது. ஒருவேளை ராகாப், ரூத் போவாசின் திருமணத்தின் போது உயிரோடு இருந்திருந்தால், தன்னைப்போல் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த ரூத்தை, தன் வீட்டில் அன்போடு ஏற்றுக் கொண்டிருப்பாள். ரூத்-நகோமியை மருமகள்-மாமியாராக பழைய ஏற்பாட்டில் கண்டாலும், புதிய ஏற்பாட்டில், ரூத்-ராகாப்பையே அந்த இடத்தில் நாம் காண்கிறோம். கர்த்தரின் அநாதி தீர்மானங்களும் திட்டமும், இந்த வம்ச

அட்டவணையில் அருமையாக வெளிப்படுத்தப்படுவதை காணலாம். இன்று நமக்கும் இதேபோன்ற சிறப்பு அழைப்பே, அப்பா பிதாவே என்று, கூப்பிடத்தக்க புத்திர சுவிகார மேன்மையே கொடுக்கப்பட்டிருக்கிறது. ராகாபும், ரூத்தும் மாமியார், மருமகளாக எப்படி புறஜாதியில் பிறந்து, ஆண்டவரின் வம்ச அட்டவணையில், யூத பெண்கள் இடம்பெறாவிட்டாலும், இடம்பெற்றார்களோ, நாமும் இப்படியாக ஆண்டவரை உறுதியாக பற்றி பிடித்துக் கொள்ளும் பொழுது, மேன்மையான இடத்தை இம்மையிலும், மறுமையிலும் ஆண்டவர் நமக்கு அருள்வார், ஆமென் அல்லேலுயா.

## 112. அப்போஸ்தலனாகிய பவுல்



வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டுப் பகுதியில், சுவிசேஷ புத்தகங்களை தவிர்த்து, அப்போஸ்தலர் நடபடிகள் முதல் வெளிப்படுத்தல் வரை உள்ள பகுதிகளில், அனேக வேதப் பகுதிகள் அப்போஸ்தலராகிய பவுலை கொண்டு எழுதப்பட்டவை ஆகும். பரிசுத்த லூக்காவால் எழுதப்பட்ட அப்போஸ்தல நடபடிகள் புத்தகம் கூட முதல் 10 அதிகாரத்திற்கு பிறகு, அப்போஸ்தலராகிய பவுலின் மனம் திரும்புதல், அவருடைய ஊழியம் பற்றியே அதிகம் குறிப்பிடுகிறது. ஆண்டவரால் நேரடியாக அப்போஸ்தலர்களாய் அழைக்கப்பட்டு, அவருடைய உபதேசங்களை, அற்புதங்களை அருகில் இருந்து, மூன்றரை வருட காலம் கண்ட அப்போஸ்தலர்களின் ஊழியம், நிருபங்களை காட்டிலும், பவுலின் ஊழியம் மற்றும் நிருபங்கள் பரிசுத்த வேதாகமத்தில் அதிகமாக இடம் பெற்றிருப்பது, பவுலுக்கு ஆண்டவர் தந்த விசேஷித்த அபிஷேகத்தை காட்டுகிறது. இதற்கான காரணங்களில் ஒன்று, எத்தனையோ தடைகள், உபத்திரவங்கள், சரீர மற்றும் ஆவிக்குரிய சோர்வுகளைக் கடந்து, வைராக்கியத்தோடு தொடர்ந்து அவர் செய்த ஊழியமாகும். ஆண்டவர் தந்த ஒரு தரிசனத்தில், தன்னை முற்றிலுமாக அவருக்கு ஒப்படைத்த அப்போஸ்தலராகிய பவுல், அவரை விட்டு அதன் பிறகு ஒருபோதும் பின் வாங்கவில்லை. அவர் செய்த வைராக்கியமான ஊழியத்தை பற்றி அப்போஸ்தலர் நடபடிகள் நமக்கு தெளிவாக விவரிக்கிறது. அவருடைய ஆழமான ஆவிக்குரிய நிலையை பற்றி, அவருடைய நிருபங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அப்போஸ்தலராகிய பவுலை குறித்து அனேக காரியங்கள் இருந்தாலும், ஊழிய பாதையில் ஒவ்வொரு நேரமும், சென்ற ஒவ்வொரு இடத்திலும் சரீரப்பிரகாரமாய் அவர் எவ்வளவு வேதனைகளை சகித்தார் என்பதை பற்றி அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் நமக்கு தெளிவாக காட்டுகிறது. ஆதி அப்போஸ்தல காலத்தில் உபத்திரவம் என்பது ரோமர், யூதர்கள் மற்றும் கிரேக்கர்கள் மூலமாக சபை மக்கள் அனைவருக்கும் இருந்தாலும், குறிப்பாக அப்போஸ்தலர்கள் அனைவரும் கொடிய துன்பங்களுக்கு உட்பட்டு, கொடூரமான முறையில் மரித்து இருந்தாலும், அப்போஸ்தலராகிய பவுல் பட்ட துன்பங்கள் பற்றி அப்போஸ்தலர் நடபடிகளில் அதிகமாக விளக்க காரணம், அவருடைய ஊழியவாஞ்சையே ஆகும். இதனை நாம் அவருடைய நிருபங்களில் அவர் கூறுவதில் இருந்தே அறிந்து கொள்ளலாம்.

**2 கொரி 11:23-27** வசனங்களில் "**அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்.**" இங்கு **அவர் அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்** என்று கூறுவதிலிருந்து, அவருக்கு இருந்த ஊழிய தாகத்தை நாம் அறிந்து கொள்ளலாம். அதே நேரத்தில் அதற்காக அவர் தம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் அர்ப்பணித்திருந்தார். ஆவியும், ஆத்துமாவும் சில வேளையில் உற்சாகமாக இருந்தாலும், சரீரத்தில் உண்டாகும் பாடுகள் உண்மையில் அநேகரை களைப்படையச் செய்யும். பழைய ஏற்பாட்டில் எலியா போன்ற வல்லமையான தீர்க்கதரிசிகளே சரீர பிரகாரமாக ஒரு கட்டத்தில் சோர்ந்து போயினர்.

ஆனால் அப்போஸ்தலராகிய பவுல் நாம் நினைத்துப் பார்க்க கூட முடியாத அளவு தொடர்ந்து ஊழியத்தினிமித்தம், உபத்திரவங்களை சரீரத்தில் அனுபவித்தாலும், அவர் சோர்ந்து போகவில்லை. **2 கொரி 11:23-27** வசனங்களில், பவுல் கூறிய உபத்திரங்களில் சிலவற்றை நாம்

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் விரிவாக காணலாம். அதனைப் பற்றி நாம் சற்று ஆழமாக தியானிப்போமாக. பவுல் தான் ஊழியத்திற்கான சென்ற இடங்களில் எல்லாம் யூதர், கிரேக்கர் மற்றும் ரோமர்களின், மூலமாக தொடர்ந்து துன்பப்படுத்தப்பட்டார். அதில் குறிப்பாக **அப் 14:19** கூறுகிறது "**பின்பு அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள்.**" இங்கு பவுல் கல்லெறியப்பட்டார், அதிலும் கொடூரமாக மரித்து போகும் அளவிற்கு கல்லெறியப்பட்டார். வசனம் கூறுகிறது **அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள்** என்று. ஆம் ஒரு செத்த சரீரத்தை மிருகங்களுக்கு இரையாக போடுகிறது போல, இரத்தம் தோய்ந்த அவருடைய சரீரத்தை இழுத்துக் கொண்டு சென்றனர். சரீர பிரகாரமாக இது வேதனையின் உச்சகட்டமாகும். யாரும் அவருக்கு எந்த உதவியும் செய்ய முடியவில்லை. அவருடன் இருந்த பர்னபாவினால் கூட அவரை காப்பாற்ற முடியவில்லை.

ஆனால் அற்புதமான ஒரு காரியத்தை அடுத்த வசனத்தில் "**சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான்.**" (**அப் 14:20**) நாம் காண்கிறோம். ஆம், மறுநாளில் சீஷர்கள் அவரது உடலின் முன்பு சூழ்ந்து நின்று கொண்டிருக்கையில், ஒன்றும் நடவாதது போல் அவர் எழுந்து, மறுபடியும் பட்டணத்திற்குள் பிரவேசித்து, மறுநாளிலேயே பர்னபாவுடனே கூட தெர்பைக்குப் புறப்பட்டு ஊழியத்தை தொடர்ந்தார். இது உண்மையிலேயே அற்புதமான ஒரு காரியமாகும். **மத் 10:28** இல் "**ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.**" என்று ஆண்டவர் கூறியது, ஆத்மாவை தொட முடியாமல், வெறும் சரீரத்திற்கு துன்பத்தைக் கொண்டு வருகிற, இவ்வுலக கொடிய மக்களுக்கு பயப்பட வேண்டாம் என்றார். ஆம், அதனால் பவுலும் யாருக்கும் பயப்படவில்லை. கல்லறியப்பட்டு, செத்துப்போன நிலையில், ஒருநாள் முழுவதும் வெட்ட வெளியில் கிடந்த பவுலின் சரீரத்தை, ஒரு நொடிப் பொழுதில் அற்புதமாய் ஆண்டவர் சுகப்படுத்தினார். தனக்கு ஒன்றும் நேரிடாதது போல் அவர் சாதாரணமாக எழுந்து, பட்டணத்திற்குள் சென்று, தொடர்ந்து தன்னுடைய சுவிசேஷ ஊழியத்தை செய்தார்.

**அப் 16:19-24** வசனங்களில் "**அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று கண்டு, பவுலையும் சீலாவையும்**

பிடித்து, சந்தைவெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு போனார்கள். அவர்களை அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து: யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி, ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள். அப்பொழுது ஜனங்கள் கூட்டங்கூடி, அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி; அவர்களை அநேக அடி அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தான்." பவுல் பிலிப்பி பட்டணத்தில் இருக்கையில் மறுபடியும் ரோமர்கள் மூலமாய் அதிகாரிகளிடத்தில் இழுத்துக் கொண்டு போகப்பட்டு, வஸ்திரங்கள் கிழிக்கப்பட்டு, அநேக அடிகள் அடிக்கப்பட்டு, உட்காவலறையில் தொழுமரத்தில் கால்கள் மாட்டப்பட்டவராய் இருந்த பொழுதும், அப் 16:25,26 கூறுகிறது "நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாகப் பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று." ஆம், அப்படிப்பட்ட சரீர வேதனை மத்தியிலும் ஜெபித்து, தேவனை துதித்து பாட பவுலினால் முடிந்தது. அப்பொழுது ஆண்டவர் அற்புதமாய் சிறைச்சாலையின் அஸ்திவாரத்தையே அசைத்து, கதவுகளை திறந்து, கட்டுகளை அவிழ்த்து விட்டார்.

இதிலும் அற்புதமான காரியம் பின்வரும் வசனங்களில் கூறப்பட்டுள்ளது. "சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போனான். பவுல் மிகுந்த சத்தமிட்டு: நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான். அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச்சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து, அவர்களை வெளியே அழைத்துவந்து: ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான். அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில்

**அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்குப் போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூடத் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.**" (அப் 16:27-34). ஆம் கட்டுகள் அவிழ்ந்தவுடன், அவர் இந்த சரீர உபத்திரவத்தில் இருந்து தப்பித்து ஓடிவிடலாம் என்று நினைக்கவில்லை. அத் தருணத்தையும் ஒரு ஆத்ம அறுவடைக்கென பயன்படுத்தினார். சிறைச்சாலைக்காரன் நடந்த காரியங்களை கண்ட பொழுது அவன் கேட்ட முதல் கேள்வி, **ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்** என்பதாகும். அதற்கு பவுல் கூறிய பதில் மிகவும் எளிமையான ஒரே வார்த்தையில், **கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்** என்பதாகும். பவுலின் எண்ணமெல்லாம், தன் சரீர காயங்களை பற்றி இல்லாமல், சுவிஷத்தை அறிவித்து ஆண்டவருடைய கட்டளையை நிறைவேற்றுவதிலேயே இருந்தது.

மேலும் சிறைச்சாலைக்காரன் மாத்திரம் இல்லாமல், அவனை சார்ந்த அவன் வீட்டார் அனைவருக்கும், இரட்சிப்பின் சுவிசேஷத்தை கூறினார். காரணம், சகேயு மனம் திரும்பின பொழுது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, நீ இரட்சிக்கப்பட்டாய் என்று கூறாமல், இதோ இந்த வீட்டிற்கு இன்று இரட்சிப்பு வந்தது என்று கூறி, அவன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படுவதையே விரும்பினார். இங்கு பவுலின் விருப்பமும் அதுவே ஆகும். அதன்படி அவனும், அவனுடையவர்கள் அனைவரும், உடனே அந்தநேரத்தில் தானே, ஞானஸ்நானம் பெற்றார்கள். ஒருவேளை மற்றவர்கள் பவுலை பிடித்து, அடித்து, அவரை சிறைச்சாலையில் தள்ளிவிட்டோம். இனி அவரால் ஒன்றும் முடியாது என்று எண்ணி உறங்க சென்றிருப்பர். ஆனால் அவர்கள் உறங்கி எழுவதற்குள், சிறைச்சாலைக்காரன் முதல், அவன் வீட்டார் அனைவரையும், அவர் இரட்சிப்பிற்குள் நடத்திவிட்டார். இந்த நிறைவோடு, அவருடைய காயங்கள் கழுவப்பட்டது. இதற்கு பின்பு நடைபெற்றது, இதிலும் சுவாரஸ்யமான காரியமாகும். அப் 16:35-39 வசனங்களில் "**பொழுது விடிந்தபின்பு: அந்த மனுஷரை விட்டுவிடுங்கள் என்று சொல்ல அதிகாரிகள் சேவகர்களை அனுப்பினார்கள். சிறைச்சாலைக்காரன் பவுலுக்கு இந்த வார்த்தைகளை அறிவித்து: உங்களை விடுதலையாக்கும்படிக்கு அதிகாரிகள் கட்டளை அனுப்பினார்கள்; ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்பட்டுச் சமாதானத்துடனே போங்கள் என்றான். அதற்குப் பவுல்: ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து, சிறைச்சாலையிலே போட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை**

விடுதலையாக்குகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து, எங்களை வெளியே அழைத்து அனுப்பி விடட்டும் என்றான். சேவகர் இந்த வார்த்தைகளை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபொழுது பயந்துவந்து, அவர்களுடனே தயவாய்ப் பேசி, அவர்களை வெளியே அழைத்துக்கொண்டுபோய், பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப்போகும்படி கேட்டுக்கொண்டார்கள்." பவுல் தான் ஒரு ரோம பிரஜை என்பதை வெளிப்படுத்தினார். மேலும் சட்டத்தை குறித்தும் கூறினார். இவையெல்லாம் அவருக்கு தெரிந்திருந்தும், தான் அடிக்கப்படும் பொழுதோ, தொழுமரத்தில் மாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பொழுதோ, அவர் ஒன்றும் கூறவில்லை. ஆவியானவர் தனக்கு என்ன நேரிட செய்தாலும், அதன் முடிவு இரட்சிப்பும், மகிழ்ச்சியுமே என்பதை பவுல் நன்கு அறிந்திருந்தார். இதற்கு ஆண்டவரே அவரை தகுதி படுத்தினார்.

தகுதிப்படுத்தியது மட்டுமல்லாமல், அப் 18:9-11 வசனங்களில் கூறியுள்ளபடி "இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார். அவன் ஒரு வருஷமும் ஆறு மாதமும் அங்கே தங்கி, தேவவசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிக்கொண்டுவந்தான்." பவுல் கொரிந்து பட்டணத்தில் இருக்கையில் ஆண்டவரே அவர் முன் தோன்றி நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை என்று சொல்லி தைரியப்படுத்தினார்.

மேலும் அப் 20:17-24 வசனங்களில் "மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான். அவர்கள் தன்னிடத்தில் வந்து சேர்ந்தபொழுது, அவன் அவர்களை நோக்கி: நான் ஆசியாநாட்டில் வந்த முதல்நாள் தொடங்கி எல்லாக் காலங்களிலும் உங்களுடனே இன்னவிதமாய் இருந்தேன் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன். பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம்பண்ணி, தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக்குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன். இப்பொழுதும் நான்

ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்தஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதைமாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.“, என்று அவரே எவ்வாறு தான் ஊழிய பாதையில் பாடுபட்ட பொழுதும், உண்மையாய் ஊழியத்தை செய்ததையும், இனிவரும் காலங்களிலும், கட்டுகளும், உபத்திரவங்களும், பட்டணங்கள் தோறும் உண்டென்று பரிசுத்த ஆவியானவர் தெரிவித்த பொழுதிலும், அதைப்பற்றி கவலைப்படாமல், தன் பிராணனையும் அருமையாக எண்ணாமல், தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றவே அவர் விரும்புவதாக கூறுவது, அவர் எவ்வளவு மன உறுதியோடு, தெளிவோடு தன் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் அர்ப்பணித்து ஊழியம் செய்தார் என்பதை அறியலாம்.

2 தீமோ 4:6,7 வசனங்களில் “ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.“, தன்னுடைய சரீரத்தை ஆண்டவருக்கு பானபலியாக படைத்து, நல்ல போராட்டத்தை போராடி, ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தை காத்துக் கொண்டு, தான் தேகத்தை விட்டு பிரிய ஆயத்தமாக இருந்தார் என்பதை அறியலாம். மேலும் அப் 21:10-14 வசனங்களில் “நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான். அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான். இவைகளை நாங்கள் கேட்டபொழுது, எருசலேமுக்குப் போகவேண்டாமென்று, நாங்களும் அவ்விடத்தாரும் அவனை வேண்டிக்கொண்டோம். அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். அவன் சம்மதியாதபடியினாலே, கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தோம்.“, அப்.பவுல் எருசலேமில் யூதர்கள் மூலமாக, ரோமர்கள்

கையில் ஒப்படைக்கப்படுவதை குறித்து, தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட பொழுதும், மற்றவர்கள் அதைக் கேட்டு அழுது பவுலை, எருசலேமுக்கு போக வேண்டாம் என்று கூறிய பொழுதும், அவரோ எருசலேமில் **நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்** என்று கூறுவது, எதுவந்தாலும் அவர் ஆண்டவருக்காக செயல்படுவதை தடுக்க முடியாது என்பதை காணலாம்.

இவற்றுக்கெல்லாம் காரணம், கிறிஸ்துவின் அன்பு தான் என்பதை **ரோ 8:35-39** வசனங்களில் "**உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.**" என்று அவரே விரிவாக கூறியுள்ளார். இந்த அன்பிற்காகவே அவர் இறுதி வரை ஓடினார். ரோம மன்னன் மூலமாக கொடூரமாய் கொலை செய்யப்பட்டார் என்று வரலாறு பதிவிடுகிறது. அவருடைய சரீரத்தை அவர்கள் அழித்தாலும், இன்றும் அவருடைய ஊழியமும், விசுவாசமும், தேவன் மேல் வைத்த அன்பும், அவருடைய நிருபங்களான வேத வார்த்தைகளும், பலரை கிறிஸ்துவுக்காக எழும்பி பிரகாசிக்க செய்துள்ளது. எனவே அப்போஸ்தலர்களில் எல்லாம் ஒரு சிறந்த அப்போஸ்தலராக, அப்போஸ்தலனாகிய பவுல் காணப்படுகிறார். இன்னும் ஆழமான காரியங்களை, பவுலின் நிருபங்களை தியானிப்பதன் மூலம், நாம் வேதாகமத்தில் கற்றுக் கொள்ளலாம்.

மேலும் **2 பேதுரு 3:15,16** வசனங்களில் "**மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்; எல்லா நிருபங்களிலும் இவைகளைக்குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும்**

**புரட்டுகிறார்கள்.**", இங்கு அப்போஸ்தலராகிய பவுல் கூறிய காரியங்கள் அறிவதற்கு அரிதாக இருக்கிறது, என்று அப்போஸ்தலராகிய பேதுரு கூறுவது, எந்த அளவிற்கு ஆண்டவர் தம் வார்த்தைகளை அப்போஸ்தலராகிய பவுலுக்கு வெளிப்படுத்தி இருந்தார் என்பதை அறிந்து கொள்ளலாம். எனவே அப்போஸ்தலராகிய பவுலை போல், நாமும் கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கப்பட்டு, அவருக்காய் நம் ஆவி, ஆத்மா, சரீரம் முழுவதையும் அர்ப்பணித்து நம் விசுவாச ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடிப்போமாக. ஆமென், அல்லேலூயா.

## 113. நன்மைக்கு ஞானிகள்




**ரோ 16:19 கூறுகிறது “நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.“** என்று. இங்கு நன்மைக்கு ஞானிகள் என்பதை நன்மை செய்வதற்கான காரியங்களில் ஞானத்தோடு செயல்பட்டு, நன்மையான காரியத்தை செம்மையாய், சிறப்பாய் செய்வதை பற்றி கூறுவதாக நாம் பொருள் கொள்ளலாம். நற்செய்தியாம் சுவிசேஷத்தை ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்திற்கு அல்லது வயதினருக்கு எவ்வாறு அறிவிக்க வேண்டும் என்ற நன்மையான காரியத்தை எவ்வாறு ஞானத்தோடு செயல்படுத்த வேண்டும் என்பதை இதற்கு உதாரணமாக கொள்ளலாம். ஆம் **“நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்.“ (லூக் 6:45)** என்று ஆண்டவரே கூறியுள்ளார். ஆம், நல்ல மனிதர்கள், தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம், சிந்தை, எண்ணம் என்ற அனைத்திலும் நன்மையானவைகளை வெளிப்படுத்துகிறவர்கள்.

உதாரணமாக, யோசேப்பு, எகிப்து பஞ்சத்தில் அகப்படாதபடி காக்கபட என்ன செய்ய வேண்டும் என்ற ஞானத்தை ஆண்டவர் அவனுக்கு

தந்திருந்தபடியால், அதை பார்வோனுக்கு சொன்ன பொழுது, எகிப்து முழுவதற்கும் அவன் அதிபதியாக்கப்பட்டான். இதுபோல நன்மைக்கு ஞானிகளாய் இருந்த ஏராளமான பேர்களை நாம் வேதாகமத்தில் காணமுடியும். இக்காலத்திலும், இப்படியாக நன்மையான காரியங்களை ஞானமாய் செய்தவர்களால், அருமையான ஊழியங்கள், திருச்சபைகள், உருவாயின, கட்டப்பட்டன. இன்னும் உலகபிரகாரமாக தேசங்கள் கட்டப்பட்டது, பெரிய நிறுவனங்கள், தொழிற்சாலைகள் உருவானது. தனிப்பட்ட முறையில் எத்தனையோ குடும்பங்கள் கட்டப்பட்டன. இவையெல்லாம், நல் மனதோடு ஞானமாய் செயல்பட்டதால் உண்டானதாகும்.

அதே நேரத்தில் இதற்கு நேர்மாறான மனிதர்களும் உண்டு. அவர்கள் நன்மைக்கு பேதைகளாய், தீமைக்கு ஞானிகளாய் இருப்பர். நயவஞ்சகமான பேச்சுகள், திட்டங்கள், செயல்கள், இவர்களுக்கு எளிதாய் வரும். ஆனால் நன்மையான காரியங்களை செய்ய கற்று கொடுத்தாலும் செய்யமாட்டார்கள். இவர்கள் இருதயத்தின் நினைவுகள் எல்லாம் நித்தமும் பொல்லாததே. இதற்கு உதாரணமாக, யோசேப்பின் சகோதரர்களை சொல்லலாம். ஆரம்பத்தில் இருந்தே, அவர்கள் ஒவ்வொருவர் உள்ளமும் பொல்லாப்பால் நிறைந்திருந்தது. இதனை நாம் ஆதியாகம புத்தகத்தில் காணலாம். ஆனால், ஆபிரகாமிற்கு இட்ட ஆணையின்படி, யோசேப்பின் சகோதரரான, யாக்கோபின் முழு குடும்பத்தையும் ஆண்டவர் யோசேப்பின் நன்மையான ஞானத்தின் மூலம் காத்தார். இவ்வாறு காக்கபட்ட பின்பும், யாக்கோபின் மறைவிற்கு பிறகு, யோசேப்பின் சகோதரர் அவனிடம் **“தங்கள் தகப்பன் மரணமடைந்ததை யோசேப்பின் சகோதரர் கண்டு: ஒருவேளை யோசேப்பு நம்மைப் பகைத்து, நாம் அவனுக்குச் செய்த எல்லாப் பொல்லாங்குக்காகவும் நமக்குச் சரிக்குச் சரிகட்டுவான் என்று சொல்லி, யோசேப்பினிடத்தில் ஆள் அனுப்பி, உம்முடைய சகோதரர் உமக்குப் பொல்லாங்கு செய்திருந்தாலும், அவர்கள் செய்த துரோகத்தையும் பாதகத்தையும் நீர் தயவுசெய்து மன்னிக்கவேண்டும் என்று உம்முடைய தகப்பனார் மரணமடையுமுன்னே, உமக்குச் சொல்லும்படி கட்டளையிட்டார். ஆகையால், உம்முடைய தகப்பனாருடைய தேவனுக்கு ஊழியக்காரராகிய நாங்கள் செய்த துரோகத்தை மன்னிக்கவேண்டும் என்று அவனுக்குச் சொல்லச்சொன்னார்கள்.“** (ஆதி 50: 15-17). இங்கு அவர்கள் எந்த வித தீமையான சூழ்நிலையிலும் இல்லாத பொழுதும், அவர்களுடைய நயவஞ்சகமான இருதயம், இன்னும் தாங்கள் செய்த துரோகத்தை குறித்து பயந்துகொண்டிருந்தது. இதுவே தீமை செய்ய திட்டமிட்டு ஞானமாய் செயல்படுவோரின் நிலை. அந்த தீமை அவர்கள் இருதயத்திலிருந்து உண்டானபடியால், அதற்கான தண்டனையை என்றோ ஒரு நாள் நாம் பெறுவோம் என்ற பயம் அவர்களிடத்தில் இருந்தது.

ஆனால் **“யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்.“ (ஆதி 50:19-21)**. ஆம் நன்மைக்கு ஞானியாய் இருந்த யோசேப்பிற்கு நடந்த யாவும் தேவத்திட்டத்தின்படி நன்மைக்காகவே நடந்தது என்றும், அதனால் தனக்கு சிறிது காலத்திற்கு சஞ்சலம் உண்டானாலும், முடிவில் தேவதிட்டத்தின்படி நன்மைக்காகவே உண்டானது என்றும் அறிந்திருந்தான். அதனால், அவன் தன் சகோதரர்களை மட்டுமல்ல, போத்திபார் மற்றும் அவனது மனைவி என்ற அத்தனை நபர்களையும் மன்னித்து விட்டு, நன்மையான காரியங்களையே திட்டமிட்டு செய்தான்.

மேலும், ஆண்டவர் நாம் நன்மைக்கு ஞானிகளாய் இருப்பது மட்டுமல்ல, அதிலும் ஒருபடி மேலாக தீமையான மக்களை, காரியங்களை எவ்வாறு அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்பதையும் எதிர்பார்க்கிறார். ஏனெனில், சில நேரத்தில், சில நன்மையான காரியங்களை செய்ய முற்படும் பொழுது, அதற்கு விரோதமாக செயல்படும் தீமையை அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையேல், நாம் நன்மையை முழுமையாக செயல்படுத்த முடியாது. அதனால்தான் ஆண்டவர் **“ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.“ (மத் 10:16)**. என்றார். ஆம், நாம் நன்மையான காரியங்களை செய்வது ஒருபக்கம் இருந்தாலும், புறாக்களை போல கபடற்றவர்களாய் இருந்தாலும், பொல்லாத மனிதர்கள் செய்யும் நயவஞ்சகமான கிரியைகளை உணர்ந்து கொள்ள, சர்பங்களை போல வினாவுள்ளவர்களாய் இருக்கவே ஆண்டவர் விரும்புகிறார். ஏனெனில் எத்தனையோ பிரயாசங்களினால் அருமையாக கட்டி எழுப்பபட்ட ஊழியங்கள், திருச்சபைகள், தொழில்கள், குடும்பங்கள், சில நயவஞ்சகமான மனிதர்களின் செய்ல்களால் குறுகிய காலத்தில் ஒன்றுமில்லாமல் போனதை நாம் அன்றும், இன்றும் காணலாம்.

மேலும் **லூக் 16:8** இல் ஆண்டவர் கூறுகிறபடி **“அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் கண்டு, அவனை மெச்சிக்கொண்டான். இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்“**, ஆம், அவர்கள் அதிக புத்திமான்களாய் இருப்பது நன்மையான காரியங்களை செய்ய அல்ல, செய்த தீமையான காரியங்களை மறைக்க. இவர்களால், அதிகமாய்,

உண்மையாய் உழைக்காமலேயே பெரும் செல்வத்தை ஈட்டமுடியும், நயவஞ்சகமான செயல்களால், பேச்சுக்களால் உயர்பதவியை, அதிகாரத்தை பெற முடியும், சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தை பெறமுடியும். ஆனால், அவர்களால் ஒரு நன்மையும் யாருக்கும் கிடைக்காது. அவர்கள் சேர்த்த செல்வமும், பொருளும், பொன்னும், பதவியும் ஒன்றுமில்லாமல் யாருக்கும் பிரயோஜனபடாமல் போகும். இதனையும் நாம் இக்காலத்தில் கண்கூடாக காணலாம். எனவே நாம் ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கும் பெலத்தின்படி, நன்மையான காரியங்களை தேவன் தரும் ஞானத்தோடு செய்வோமாக. ஒருவேளை தீமை செய்ய ஞானிகளாய் உள்ள நயவஞ்சகமான மனிதர்களை, நம் வாழ்வில் எதிர்கொண்டால், ஆண்டவர் தந்தருளும் ஞானத்தின்படி விழிப்புள்ளவர்களாய் இருந்து நம்முடைய நன்மையை அவர்கள் கெடுத்து போடாதபடி, ஜாக்கிரதையாய் இருப்போமாக. தேவன்தாமே, நம்மை தம் ஞானத்தினால் நிரப்பி, நன்மையானவைகளை அருளி, தீமைக்கு விலக்கி காத்துக்கொள்வாராக, ஆமென், அல்லேலூயா.

## 114. எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும்




**2 கொரி 4:8** கூறுகிறது **“நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை;கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;“** என்று. ஆம் நெருக்கப்படுகிற காலங்கள் எல்லார் வாழ்விலும் உண்டு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நெருக்கங்கள் வாழ்க்கையில் உண்டு. அதை சில நேரங்களில் சகித்துக் கொண்டு, ஒடுங்கி போய் சோர்ந்து போகாமல் நாம் முன்னேறும் பொழுது அவற்றை நாம் மேற்கொள்ளலாம். ஆனால் மேலே **2 கொரி 4:8** இல், **“எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும்”** என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு எப்பக்கத்தில் இருந்தும் நெறுக்கப்படும் பொழுது, அநேகர் ஒடுங்கிப் போய் சோர்ந்து போகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையையும் கடந்து சென்று வெற்றி பெறுபவரே, தேவனுக்கு முன்பாக விசேஷமானவர்களாய் காணப்படுகின்றனர். இதற்கு வேதாகமத்தில் பல உதாரணங்களை நாம் காணலாம். யோபுவிற்கு துன்பங்கள் ஏற்பட்ட பொழுது, ஒரு விதத்தில் அது அவருக்கு உண்டாகவில்லை. அவருடைய ஆஸ்தி, ஆடு மாடுகள், வயல் நிலங்கள், பொன் வெள்ளி மாத்திரமல்ல அவருடைய அருமையான 10 பிள்ளைகளையும் அவர் ஒரே நேரத்தில் இழந்தார். இதுவே எப்பக்கத்திலும் நெருக்கப்படுகிற ஒரு அனுபவமாகும். இது மாத்திரமன்றி அவருடைய சரீரமும் பாதிக்கப்பட்ட பொழுது, அவர் சோர்ந்து போய் சாம்பலில் உட்கார்ந்தார். **யோபு 6:1-4** வசனங்களில் **“யோபு பிரதியுத்தரமாக: என் சஞ்சலம் நிறுக்கப்பட்டு, என் நிர்ப்பந்தம் எல்லாம் தராசிலே வைக்கப்பட்டால் நலமாயிருக்கும். அப்பொழுது அது கடற்கரை**

**மணலைப்பார்க்கிலும் பாரமாயிருக்கும்; ஆகையால் என் துக்கம் சொல்லிமுடியாது. சர்வவல்லவரின் அம்புகள் எனக்குள் தைத்திருக்கிறது; அவைகளின் விஷம் என் உயிரைக் குடிக்கிறது; தேவனால் உண்டாகும் பயங்கரங்கள் எனக்கு முன்பாக அணியணியாய் நிற்கிறது.**“ ஆம் ஒன்றன்பின் ஒன்றாக நடந்த ஒவ்வொரு காரியமும் அவரை நிலைகுலையச் செய்தது. அவருடைய மனைவி மற்றும் நண்பர்களின் பேச்சும் கூட அவரை காயப்படுத்தினதேயன்றி ஆறுதல் படுத்தவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையே தாங்க முடியாத அளவிற்கு, ஆவி ஆத்துமா சரீரம் என அனைத்தையும் வேதனடையச் செய்யும். ஆனால் இவற்றை வெற்றிக்கொள்ள, இவ்வாறான சூழ்நிலையை கடந்து சென்ற நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி பார்ப்பதே சிறந்ததாகும்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவனிடத்தில் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும், அவர் மேல் பொய் குற்றங்களை சுமத்தி அவரை கைது செய்ய வேண்டும், அவரை மலை மேல் இருந்து தள்ளி கொலை செய்ய வேண்டும் என்று கூட அன்றைய யூத மக்கள் சிலரும், பரிசேயரும், சதுசேரும், வேதபாரகரும், பிரதான ஆசாரியரும் ஒவ்வொரு நாளும் முயன்றனர். ஆனால் அவர்களால் இயலவில்லை. காரணம் இன்னும் அதற்கான நேரம் வராததுதான். ஆனால் அதற்கான காலம் உண்டான பொழுது, குறிப்பாக அவர் சிலுவையில் அறையப்படுவதற்கான வேலை உண்டான பொழுது, அவருக்கு உண்டான நெருக்கங்கள் சொல்லி முடியாது. அவர் பலமுறை தம்முடைய சீஷர்களிடத்தில் தான் காட்டிக் கொடுக்கப்பட போவதை பற்றியும், சிலுவையில் அறையப்பட போவதைப் பற்றியும் கூறினார். குறிப்பாக அவர் காட்டிக் கொடுக்கப்படுவதற்கு சற்று முன்பு இராபோஜன பந்தியில் இருக்கும் பொழுதும், **“அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன், ஆடுகள் சிதறடிக்கப்படும், என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள். “ (மாற்கு 14:27)** என்றார். ஆனால் அதற்கு பேதுரு பிரதியுத்தரமாக **“அதற்கு அவன்: நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்று உறுதியாய்ச் சொன்னான்; எல்லாரும் அப்படியே சொன்னார்கள். ” (மாற்கு 14:31)**. எல்லாரும் அப்படியே சொன்னார்கள் என்று வேத வசனம் தெளிவாகக் கூறுகிறது. ஆனால் ஆண்டவரை யூதாஸ் காட்டிக் கொடுத்த பொழுது, அவனோடு வந்தவர்கள் ஆண்டவரை பிடித்த பொழுது, **மாற்கு 14:50** கூறுகிறது **“அப்பொழுது எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.“** என்று. ஆம், மூன்றரை வருடங்கள் கூடவே இருந்து, ஆண்டவர் செய்த அற்புதங்களை எல்லாம் பார்த்து, அவரோடு நடந்து உண்டு உறங்கி, தங்கள் வாழ்வையே அவருக்கு அர்ப்பணித்தவர்கள், நாங்கள் எப்படிப்பட்ட

சூழ்நிலையிலும் உம்மோடு இருப்போம் என்றவர்கள், அவரை விட்டு ஓடி போனார்கள்.

இதிலும் ஒரு படி மேலாக, எந்த பேதுரு நான் மரிக்க வேண்டியதாக இருந்தாலும், உம்மை மறுதலிக்க மாட்டேன் என்று கூறினானோ அவன், **"நீங்கள் சொல்லுகிற மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான்." (மாற்கு 14:71)**. ஆம் ஒரு சில மணி நேரத்தில் மனித மனங்கள் தலைகீழாய் மாறிப்போனது. பன்னிருவரில் ஒருவனாக தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டவரோடு இருந்து, ஊழியத்தை நிறைவேற்றின யூதாஸ் காரியோத்து, ஆண்டவரை காட்டிக் கொடுக்க, மற்ற 11 பேரும் அவரை விட்டு ஓடிப் போனது, அவர் அறிந்த ஒன்றாக இருந்த பொழுதும், ஆண்டவர் அவர்களுக்காக துக்கப்பட்டார். **யோ 16:32** இல், "**இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன் தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்.**". ஆம், அவரோடு இருந்த சீஷர்கள் அவரை தனியே விட்ட பொழுதும், பிதா அவரோடு கூட இருந்தபடியினால் நான் தனித்திரேன் என்றார். நம் வாழ்விலும், நம்மோடு உண்டு உறங்கி வாழ்ந்தவர்களும் நமக்கு துன்பம் உண்டாகும் பொழுது, நம்மை மறுதலித்து ஓடி போனாலும், மறவாத ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் என்பதே சத்தியமாகும்.

இங்கு இரண்டாவதாக, நியாயப்பிரமாணத்தின்படி, நீதியின்படி, விசாரணை செய்ய வேண்டியவர்கள் அவருக்கு விரோதமாய் பொய் சாட்சி தேடினார்கள். மேலும், **"அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்று கேட்டான். அதற்கு அவர்கள்: மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்." (மத்தேயு 26:65,66)**. பொய் சாட்சி தேடினது மட்டுமல்லாமல், அவர்களே பொய்யான தீர்ப்பையும் கூறுகின்றனர். இதுமாத்திரமல்லாமல் **"அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்." (மத்தேயு 26:67,68)**. ஒருபுறம் ஆண்டவருக்கு அருமையான சீஷர்கள், அவரை விட்டு ஓடி போக, மறுபுறம் பொல்லாத மனிதர்கள், நீதி நியாயத்தை திரித்து, பொய்யான குற்றங்களை சாற்றி, அதற்கான தீர்பையும் அவர்களே கூறுவது, ஆண்டவர் செய்த நன்மைக்கு பதிலாக தீமை செய்கிறவர்களாய், இரட்சிப்பின் சுவிசேஷத்திற்கு தடைகற்களாய் காணப்படுகின்றனர். இது மட்டுமின்றி, அவரை சரீரப்பிரகாரமாக துன்புறுத்தி அவரை அவமானப்படுத்த நினைத்த அவர்களுடைய செயல்களும், மறுபுறத்தில்

ஆண்டவரே நெருக்குகிறது. ஆனால் வேதவசனம் கூறுகிறது **"இயேசுவோ பேசாமலிருந்தார்."** **(மத்தேயு 26:63).** ஒருவேளை நம்மேல் இப்படிப்பட்ட எதிர்பாராத பழிச்சொல் கூறப்பட்டு, நாம் அநியாயமாய், நியாயம் தீர்க்கப் பட்டால், நாம் நிலைகுலைந்து போவோம். ஆனால் ஆண்டவர் இவை யாவையும் ஒன்றுமில்லாமல் போக செய்ய வல்லவராய் இருந்தும், அமைதியாய் இருந்தார்.

மேலும் பிரதான ஆசாரியர்கள், ஆண்டவரை பிலாத்துவினிடத்தில் அழைத்துச் சென்றனர். **"அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான். போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்."** **(யோ 19:1-3).** ஒருபுறம் நயவஞ்சகத்தினால், பொறாமையினால், பிரதான ஆசாரியரும் வேத பாரகரும், பரிசேயரும் ஆண்டவருக்கு விரோதமாய் செயல்பட, ரோம அரசாங்கத்தால் நியாயம் விசாரிக்க நியமிக்கப்பட்ட பிலாத்துவம் ஆண்டவரை துன்பப்படுத்த தொடங்கினான். அவன் அவரை நீதிமான் என்று அறிந்திருந்தும், அவர் மேல் ஒரு குற்றத்தையும் காணாதிருந்தும் **(லூக் 23:22)**, ஜனங்களை பிரியப்படுத்த மனதுள்ளவனாய் **(மாற்கு 15:15)**, தன் பதவியை பாதுகாத்துக் கொள்ள, ஆண்டவரை அவர்கள் விருப்பப்படி சிலுவையில் அறையப்பட ஒப்புக்கொடுத்தான்.

இதில் விசேஷம் என்னவென்றால், ஆண்டவரிடத்தில் பிலாத்து கேட்ட கேள்விகளுக்கு அவர் பதில் ஏதும் கூறவில்லை. இதனால் , **"அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான். இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்."** **(யோ 19:10,11).** ஆம் ஒருபுறம் பிலாத்து நீதி தவறி செயல்படுவதும், தான் இஷ்டப்படி நீதியை வளைக்கக் கூடியவன் என்று கூறிய பொழுதும், ஆண்டவர் அவனுக்கு பிரதியுத்தரமாக கூறிய காரியம், பரலோகத்தில் இருந்து இப்படிப்பட்ட காரியங்கள் நடக்க வேண்டும் என்று திர்மாணிக்கப்பட்டால் யொழிய, மற்றபடி ஆண்டவரின் மேல் அவருக்கு தீர்ப்பு கொடுப்பதற்கு அவனுக்கு ஒரு அதிகாரமும் இல்லை என்பதே. இவ்வாறாக ஆண்டவருக்கு எதிராக உடன் இருந்த சீஷர்களும், நயவஞ்சக எதிரிகளும், நீதி தவறிய அரசாங்கத்தினரும் செயல்பாட்டாலும் ஆண்டவர் அதன் மத்தியிலும் அமைதியாகவே இருந்தார்.

மேலும் அவர் சிலுவையில் அறையப்பட்டு வேதனை மத்தியில் தொங்கி கொண்டிருக்கையில் **“போர்ச்சேவகரும் அவரிடத்தில் சேர்ந்து, அவருக்குக் காடியைக் கொடுத்து: நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக்கொள் என்று அவரைப் பரியாசம்பண்ணினார்கள்.“ (லூக் 23:36,37).** மேலும் **“அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம்பண்ணி: மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்.“ (மத்தேயு 27:39-44).** ஆம் அவரை சிலுவில் அறைந்து தங்கள் வஞ்சகத்தை தீர்த்த பின்பும் அவரை தொடர்ந்து ஏளன பேச்சால் வேதனைப்படுத்தினர். தாங்கள் யாரை சிலுவையில் அறைந்திருக்கிறோம் என்பதை உணராத போர் சேவகரும், இவற்றில் ஒன்றையும் அறியாத அவ்வழியாய் நடந்து போகிறவர்களும் தூஷணமாய் பேசியது எப்பக்கத்திலும் நெருக்கப்படுகிற ஒரு அனுபவமாகும்.

அதிலும் குறிப்பாக **“அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.“ (லூக் 23:39-42).** இங்கு சிலுவையில் அறையப்படும் அளவிற்கு கொடும் குற்றம் செய்து, உயிர் போகும் நிலையில் உள்ள அந்த குற்றவாளி, ஆண்டவரை நிந்தித்து பேசியது ஒருவராலும் பொறுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலையாகும். ஆனால் அதன் மத்தியிலும் ஆண்டவர் கூறியதெல்லாம் **“ பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். “ (லூக் 23:34).**

ஆம் ஒரு நாள் பொழுதில் ஆண்டவர் இத்தனை விதமான மக்களிடம் இருந்தும் நெருக்கங்களை அனுபவித்தும், அவர் நோக்கமோ, பிதாவின் சித்தத்தை சிலுவையில் நிறைவேற்றி முடிப்பதிலேயே இருந்தது. **"இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்." (லூக் 23:46).** ஆம் பிதாவின் திட்டத்தை நிறைவேற்றி முடிப்பதையே அவர் நோக்கமாக கொண்டிருந்ததால், அவர் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும், அதை கடந்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி முடித்தார். நம் வாழ்விலும் இதுபோன்ற எப்பக்கத்திலும் நெருக்கப்படுகிற அனுபவங்கள் வந்தாலும், நம் இலக்கு ஆண்டவருடைய சித்தத்தை, திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தால், ஆண்டவர் எதையும் தாங்கிக் கொள்வதற்கும், அதை ஜெயமாக கடந்து செல்வதற்கும் வேண்டிய பெலனை, கிருபையை நமக்கு அருளுவார். எனவே நமக்கு வரும் நெருக்கங்களால் நாம் ஒடுங்கி போகாமல், சோர்ந்து தளர்ந்து விடாமல், நம் ஓட்டத்தை ஜெயமாக முடித்து, ஆண்டவர் வருகையில் அவர் அண்டை சேர நம்மை ஆயத்தப்படுத்துவோமாக, ஆமென், அல்லேலூயா.

## 115. சரீரமும், ஆவியும்




**"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." (1 கொரி 6:19,20).** மேற்கண்ட வசனங்களில், வேதம் தெளிவாக கூறுகிறது, இந்த மாம்ச சரீரம் தேவனாலே கொடுக்கப்பட்டது, அது தேவனுக்கு உடையது. இதற்கும் மேலாக, பரிசுத்த ஆவியானவர் தங்கி இருக்கிற ஆலயமாய் இருக்கிறது என்று.

**2 கொரி 4:6,7 கூறுகிறது "இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்."** என்று. ஆம் நம்முடைய சரீரம் மண்பாண்டம் போல் இருந்தாலும், அதுவே தேவ மகிமையை வெளிப்படுத்துகிற வாய்க்காலாகும். எனவே நாம் மரிக்கும் பொழுது, நமது சரீரம் நாறி, அழுகி போகக் கூடியதாய் இருந்தாலும், நாம் மரிக்கும் வரையிலோ, அல்லது ஆண்டவருடைய வருகையில் மறுரூபமாகும் வரையிலோ, நம்முடைய சரீரத்தை பேணிப் பாதுகாத்து, ஆண்டவர் தங்கும் ஆலயமாய் பாதுகாத்துக் கொள்வது மிக முக்கியமாகும். எனவே நம்முடைய ஆவி ஆத்துமாவை

தேவனுக்கு முன்பாக எப்படி ஜாக்கிரதையாய் காத்துக் கொள்கிறோமோ அதை போல் நம்முடைய சரீரத்தையும் ஜாக்கிரதையாய் காத்துக் கொள்வது அவசியமாகும்.

மேலும் அப்.பவுல் **ரோ 7:22,23 வசனங்களில் "உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது."** என்கிறார். மேலும் **ரோ 7:25 இல் "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்."** என்கிறார். மேற்கண்ட வசனங்களின்படி நாம் நம் சரீரம் சுகமாய் இருப்பதைப் பற்றி மட்டும் நினைத்து, ஆவிக்குரிய வாழ்வை பற்றி கவலையற்றிருப்போமானால் அது நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் ஆகிய மூன்றையும் அழித்துப் போடும். அதற்கு பதிலாக **"ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது." (2 கொரி 4:16)** என்பது நம்முடைய அனுபவமாய் இருக்க வேண்டும்.

மேலும் **2 கொரி 5:1-10 வசனங்களில் "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்; தரித்துக்கொண்டவர்களானால், நிர்வாணிகளாய்க் காணப்படமாட்டோம். இந்தக் கூடாரத்திலிருக்கிற நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம்; இந்தப் போர்வையைக் களைந்துபோடவேண்டுமென்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காகப் போர்வை தரித்தவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே; ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே. நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.அதினிமித்தமே நாம்**

**சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம். ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.“** இங்கு மிக தெளிவாக நம்முடைய வாஞ்சை பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய சரீர வாழ்வில் இருந்து, பரம வாழ்வை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஆகும். ஆனால் **வசனம் 5 கூறுகிறபடி அதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே, ஆவியென்னும் அச்சாரத்தை அதற்காகவே நமக்கு தந்திருக்கிறார்**. ஆனால் **வசனம் 10 கூறுகிறபடி சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்**. ஆம் நித்திய பரம வாழ்விற்கு நம்மை தகுதிப்படுத்துவது, சரீரத்தில் நாம் செய்யும் கிரியைகளை பொறுத்தே ஆகும். அதுவே கிறிஸ்துவின் நியாயசனத்தில் நம்மை நியாயம் தீர்க்கும்.

எனவே, நம் ஆவிக்குரிய வாழ்வை சீர்படுத்தி, தேவனுக்கு முன்பாக உத்தமமாக வாழ்வோமானால், தேவ ஆவியானவர் நம்முடைய ஆவி, ஆத்துமாவில் மாத்திரம் அல்ல, நம்முடைய மாம்ச சரீரத்தையும், தாம் தங்கும் ஆலயமாக மாற்றுகிறார். ஆம், நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் பொழுது, அதன் பலனை நம்முடைய சரீரமும் பெற்றுக் கொள்கிறது. உண்மையில் நம்முடைய சரீரத்தில் செய்கைகளே, கிறிஸ்துவானவர் நமக்குள் இருக்கிறார் என்பதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி காண்பிக்கிறது. ஆம், ஆண்டவர் நம்முடைய ஆவியோடு மாத்திரமல்ல, நம்முடைய சரீரத்தின் மூலமாகவும், நம்முடனும் பிறரிடமும் இடைப்பட விரும்புகிறார். ஆம், நம் ஆவியில் ஆத்துமாவில் கபடமில்லாமல் இருப்பது நமக்கும் தேவனுக்கு மட்டுமே தெரியும். ஆனால் தேவன் தந்த, அவருடைய உடமையாகிய சரீரத்தின் மூலமாக அப்பண்புகள் வெளிப்படும் பொழுதுதான், நம்மில் இருக்கும் ஆவிக்குரிய கனிகள், வரங்கள் பிறருக்கு பிரயோஜனம் உள்ளவைகளாய் மாறும். ஆம், எத்தனையோ தேவ பிள்ளைகளின் வாழ்க்கை முடிந்து, அவர்களுடைய சரீரம் மண்ணோடு மண்ணாக போய்விட்டது. ஆனால், அவர்கள் உயிரோடு இருந்த பொழுது, சரீரத்தின் மூலமாக அவர்கள் ஆண்டவருக்காக ஓடிய ஓட்டங்கள், செய்த ஊழியங்கள், கட்டி எழுப்பிய சபைகள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், இன்று அநேகருடைய ஆவிக்குரிய மற்றும் சரீரத்திற்குரிய வாழ்க்கைக்கு பிரயோஜனமாய் உள்ளது. ஆம் நம்முடைய ஆவிக்குரிய எந்த பண்பும் அது விசுவாசமானாலும், அன்பானாலும், பரிசுத்தமானாலும் அல்லது ஆவிக்குரிய எந்த வரமும், அது தீர்க்கதரிசன வரமானாலும், அந்நிய பாஷை வரமானாலும், அது நம்முடைய சரீரத்தின் மூலமாக வெளிப்படும் பொழுதே

அது மற்றவர்களுக்கு பிரயோஜனமாய் இருக்கும். எனவே நம்முடைய சரீரத்தை பேணி பரிசுத்தமாய் காப்பது மிக முக்கியமானதாகும்.

சிலர் போதிக்கிறபடி, நம்முடைய சரீரம் அழிந்து போகக்கூடியது, எனவே அதற்கு எந்த முக்கியத்துவமும் அல்லது மகிழ்ச்சியையோ தரத் தேவையில்லை என்று கூறுவது வேதத்திற்கு முரணாகும். மேலும் ஆவிக்குரிய வாழ்வில் தேவன் அளிக்கும், சுகம், பெலன், மேன்மை யாவையும் நம்முடைய சரீரமும் பெற்று அனுபவிக்கிறது. மேலும் தேவன் தரும் ஆவிக்குரிய ஆசிர்வாதங்களை மற்றவர்களுக்கு கடத்தும் வாய்க்காலாய் நம்முடைய சரீரம் செயல்படுகிறது. ஆவிக்குரிய வாழ்வில் நமக்கு எதுவெல்லாம் சந்தோஷத்தை, சமாதானத்தை தருகிறதோ, அதுவெல்லாம் நம்முடைய சரீரத்திற்கும் சந்தோஷத்தை சமாதானத்தை தரும். அதை போல் ஆவிக்குரிய ரீதியாக எதுவெல்லாம் நமக்கு துக்கத்தை தருகிறதோ, தேவனை விட்டு பிரிக்கிறதோ, அதுவெல்லாம் சரீரத்திற்கும் அப்படியே ஆகும். இது வேறுபடும் பொழுதே, ஆவிக்குரிய வாழ்விலோ அல்லது சரீர வாழ்விலோ, நாம் பாதை மாறி தவறி போகிறோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

சிலர் கேட்கலாம், அப்போஸ்தலர்கள் முதல் இன்று வரை சரீர பிரகாரமாக எத்தனையோ பேர் உபத்திரவத்தை அனுபவித்துள்ளனர். இது எப்படி ஆவிக்குரிய வாழ்விற்கு சந்தோஷம் ஆகும் என்று. ஆனால் **அப் 5:40-42 வசனங்கள் கூறுகிறது "அப்பொழுது அவர்கள் அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்."**. ஆம், இங்கு சரீர பிரகாரமாக அவர்கள் அவமானம் அடைந்தார்கள். ஆனால் ஆவிக்குரிய விதத்தில், தாங்கள் கிறிஸ்துவின் நாமத்திற்காக அவமானம் அடைந்ததற்காக, அதை அவர்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொண்ட காரணத்தினால், சரீரமும் அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு, பயந்து போய் உட்கார்ந்து விடாமல் மறுபடியும் அவர்களை செயல்பட வைத்தது. மேலும் **அப் 21:13 இல், "அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்."**. ஆம் சரீர உபத்திரவத்தையோ, ஏன் மரணத்தையோகூட கண்டு, சரீரத்தில் பவுல் கவலைப்படவில்லை. காரணம் அவருடைய ஆவிக்கு எது தேவையானதாக

கண்டதோ, அதுவே சரீரத்திற்கும் தேவையானதாக இருந்தது. அதற்கேற்ற விதமாக அவருடைய ஆவியும், சரீரமும் ஒன்றாய் செயல்பட்டன. இதனால் தான் அப்போஸ்தலனாகிய பவுல், **கலா 6:17 வசனத்தில் “கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்.“** என்று தைரியமாக கூற முடிந்தது. மேலும் **கலா 2:20 இல் “கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.“**, ஆம் அப்.பவுல் கூறுவதைப் போல, நாம் நம்முடைய ஆவிக்குரிய வாழ்வையும் சரீர வாழ்வையும் பிரித்து பார்க்கக் கூடாது. எனவே அழிந்து போகும் இவ்வுலகத்தில், அழிந்து போகக்கூடிய சரீரத்தோடு நாம் வாழ்ந்தாலும், அந்த சரீர வாழ்க்கையும், ஆவிக்குரிய வாழ்வினால் கட்டப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு இருக்குமானால், நாம் ஏனோக்கை போல, மாம்ச பிரகாரமாக இவ்வுலகில் வாழும் பொழுதே, தேவனோடு சஞ்சரிக்கும் மேன்மையான ஆவிக்குரிய அனுபவத்தை பெற முடியும். ஆண்டவர் அப்படிப்பட்ட மக்களையே எதிர்பார்க்கிறார். அதற்காகவே தம்முடைய ஆவியானவரை, நம் ஒவ்வொருவருக்கும் தந்திருக்கிறார்.

ஒருவேளை கர்த்தருடைய வருகைக்கு முன், நம்முடைய சரீரம் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மண்ணோடு மண்ணாய் போனாலும், **1 கொரி 15:42-44 வசனங்கள் கூறுகிறபடி “மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு.“**. ஆம், நம்முடைய ஜென்ம சரீரம் அழிந்தாலும், அதற்குரிய பலன் ஆவிக்குரிய சரீரத்தின் மூலமாய் நமக்கு கொடுக்கப்படும். **மேலும் 1 கொரி 15:45-49 வசனங்களில் “அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்.“**. ஆம், ஆவிக்குரிய

சரீரத்தின் மூலமாய் வானவருடைய சாயலை அணிந்து கொள்ளவோம். ஆம், மண்ணான நம்முடைய பெற்றோரின் சாயல் (பாவ சுபாவம்) நீங்கி, வானவராகிய கிறிஸ்து இயேசுவின் சாயல் நம்மில் வெளிப்படும். எனவே நம்முடைய ஆவி, ஆத்துமா, மற்றும் சரீரம் ஆகிய மூன்றையும் தேவனுக்கு முன்பாக பரிசுத்தமாய் பாதுகாத்து, அவரோடு கூட நித்திய ஜீவகரையில் சேர்வோமாக. ஆமென், அல்லேலூயா.

## 116. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 1



வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டு காலத்திலும், புது ஏற்பட்டு காலத்திலும், தேவன் சில நபர்கள் மீது அதிகமான கிருபையைப் பொழிந்து, அவர்கள் தேவனுடைய வழியில், திட்டத்தில், நடக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்திருந்தும், தங்களுக்கு கொடுக்கப்பட்ட **மிகுதியான கிருபையை போக்கடித்தவர்கள்** பலர், அதனால் அவர்களுக்கு தேவத்திட்டத்தில் பங்கு இல்லாமற்போய் அவர்கள் பேரும் மறக்கடிக்கப்பட்டு போயிற்று. இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை நமக்கு எச்சரிப்பின் செய்தியாக உள்ளது. அப்படிப்பட்டவர்களில் மிகவும் முக்கியமான சிலரை பற்றி நாம் இங்கு தியானிப்போம்.

### லோத்து:

இவர்களில் முதலாவது நாம் காண இருப்பது லோத்து ஆகும். புதிய ஏற்பாட்டு நீதிமான்களின் பட்டியலில் (2 பேதுரு 2:8), அவர் காணப்பட்டாலும், ஆதியாகமத்தில் அவருடைய வாழ்க்கை அனைவருக்கும் ஒரு எச்சரிப்பாகவே காணப்படுகிறது. ஆம் விசுவாச தகப்பனாகிய ஆபிரகாமோடு தன் வாழ்க்கை பயணத்தை அவர் துவக்கினாலும், ஆபிரகாமிற்கு உண்டான ஆசீர்வாதத்தினால் தானும் ஆசீர்வாதமுடையவராய் அவர் காணப்பட்ட பொழுதிலும், எப்பொழுது அவர் ஆபிரகாமின் விசுவாச பயணத்தை விட்டு விலகி, கண் காண ஆசீர்வாதமாய் இருப்பதைக் கண்டு, ஆபிரகாமை விட்டு விலகிச் சென்றாரோ, அன்றிலிருந்து அவருடைய பாதை தேவ நோக்கத்தை

விட்டு விலகிச் சென்றது. ஆதி 13:14 தெளிவாக கூறுகிறது "லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்தபின்பு," என்று. ஆபிரகாமினால் உண்டான உலக ஆசீர்வாதத்தை அவரோடு பங்கிட்டு, சமாதானமாய் ஆபிரகாமோடு இருந்திருந்தால், ஒருவேளை லோத்துவின் வாழ்க்கை வேறு மாதிரி இருந்திருக்கலாம். ஆனால் அவரோ எளிதான குறுக்கு வழியை தேர்ந்தெடுத்தார்.

லோத்து ஆபிரகாமை விட்டு பிரிந்த சில காலத்திற்குள்ளாகவே, அடுத்த அதிகாரத்திலேயே சோதோம், கொமோரா மீது படை எடுத்து வந்த ராஜாக்கள், "ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய லோத்து சோதோமிலே குடியிருந்தபடியால், அவனையும், அவன் பொருள்களையும் கொண்டுபோய்விட்டார்கள்." (ஆதி 14:12). இதை கேட்டவுடன் ஆண்டவர் இதுவரை பரதேசியாய் நடந்து திரிந்த ஆபிரகாமை, தன் சகோதரன் குமாரனாகிய லோத்தை மீட்க, ஆபிரகாமை ஒரு அரசனைப் போல் படையெடுத்துச் சென்று லோத்தை மீட்க செய்கிறார் (ஆதி 14:14-16). இங்கு மறுபடியும் ஆண்டவர் லோத்துவிற்கு, ஆபிரகாமோடு தேவத்திட்டத்தில் நடப்பது தான் பாதுகாப்பு, அந்த பாதுகாப்பு இல்லை யென்றால் அனைத்து பொருள்களும் ஒரு நொடிப் பொழுதில் ஒன்றுமில்லாமல் போகும் என்பதை தெளிவுப்படுத்தினார். ஆனால் ஏனோ லோத்து மறுபடியும் சோதோம், கொமோராவையே தெரிந்து கொண்டார். ஆபிரகாமோடு பரதேசியாய் அலைந்தாலும், அது தேவ நடத்துதலின்படியானது என்பதை லோத்து உணராமல், சோதோம், கொமோராவின் மக்கள் பொல்லாதவர்களாக இருந்தும் அவர்களோடு இருப்பதையே தெரிந்து கொண்டார். இங்கு ஆண்டவர் இரண்டாவது தடவை ஆபிரகாமோடு தேவத்திட்டத்தில் நடக்க கிருபை அளித்த போதிலும் அவர் அதை போக்கடித்தார்.

இதற்கு பின்பு பல ஆண்டுகள் கழித்து, ஆண்டவர் சோதோம், கொமோராவை அழிப்பதற்கு முன், சோதோம், கொமோராவை அழிக்கப் போகும் தூதர்களோடு தானும் ஆபிரகாமின் கூடாரத்திற்கு வந்து (ஆதி 18:1-3), அதை ஆபிரகாமுக்கு தெரியப்படுத்தினார் (ஆதி 18:20,21). அப்பொழுது ஆபிரகாம் லோத்துவிற்காய் மன்றாடுகிறார் (ஆதி 18:22-33). ஆபிரகாமின் வேண்டுதலை கேட்டு தேவன், லோத்துவின் வீட்டிற்கு சோதோம், கொமோராவை அழிக்க போகும் தூதர்களை அனுப்பி, அவனையும் அவன் குடும்பத்தினரையும் அழிவிற்கு விலக்கித் தப்புவிக்க, அவர்களை அவரே அங்கிருந்து வெளியே கொண்டு வருகிறார். ஒருவேளை தாமாய் லோத்து, 2 பேதுரு 2:6-8 வசனங்களில் "சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து; அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில்

**அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு; நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க;“** காண்கிறபடி, இருதயத்தில் வாதிக்கப்பட்ட அவர், அவ்விடத்தை விட்டு ஆபிரகாமிடத்திற்கு வந்திருப்பாரானால், அவர் குடும்பம் முழுமையாக அழிவிற்கு தப்பியிருக்கும். ஆனால் அவரோ, அதன் பாவத்தை காட்டிலும், அங்கு சௌகரியமாய் இருப்பதையே தெரிந்து கொண்டார். இதன் விளைவுகளை அவர் அனுபவித்தார்.

**ஆதியாகமம் 19ஆம் அதிகாரத்தில்**, லோத்தின் வீட்டை சுற்றி வளைத்த சோதோமின் பொல்லாத மனிதர்கள் **“அதற்கு அவர்கள்: அப்பாலே போ; பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது? இப்பொழுது அவர்களுக்குச் செய்வதைப்பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்புச் செய்வோம் என்று சொல்லி, லோத்து என்பவனை மிகவும் நெருக்கிக் கதவை உடைக்கக் கிட்டினார்கள். “ (ஆதி 19:9)**. இங்கு பரதேசியாய் வந்த இவனா என்று லோத்துவை தரக்குறைவாக கூறுவதை காணலாம். ஆனால் உண்மையில் லோத்து ஆபிரகாமுடன் தன் செல்வத்தை பங்கிட முடியாதவராய், தன் ஆஸ்தி, ஐஸ்வரியத்தை காப்பாற்றி பெருக்கவே அவர் சோதோமை தெரிந்து கொண்டார். ஆனால் அவருக்கு இறுதியில் கிடைத்தது பரதேசி என்ற பட்டப் பெயர் மட்டுமே.

ஆனால் ஆண்டவரோ லோத்துவின் மேல் வைத்த கிருபையை இன்னும் வெளிப்படுத்துபவராய், **“கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள். அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள். அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்.“ (ஆதி 19:15-17)**. எல்லாம் உடையவராய் சோதோமிற்குள் சென்ற லோத்து, ஏதும் அற்றவராய் சோதோமின் அழிவோடு, அனைத்தையும் இழந்தவராய் (தன் இரு மகள்கள் தவிர), தன் மனைவியையும் இறுதி நேரத்தில் பறிகொடுத்தவராய், இறுதியில் ஒரு மலைக்குகைக்குள் தஞ்சம் அடைந்தார்.

**ஆதி 19:29 கூறுகிறது, "தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்."**. ஆம் எந்த ஆபிரகாமோடு தன் செல்வ செழிப்பை பகிர்ந்து கொள்ள முடியாமல் அவரை விட்டுப் பிரிந்தாரோ, அதே ஆபிரகாமை தேவன் நினைத்துதான், லோத்தை தப்புவிக்க பண்ணினார். இப்பொழுதாவது தன்னுடைய நிலையை உணர்ந்து அவர் தன் பிள்ளைகளோடு ஆபிரகாமிடம் தஞ்சம் அடைந்திருப்பாரானால், அவர் வாழ்க்கை முற்றிலும் மாறி இருக்கும். ஆனால் சோதோமின் அழிவு வரை, அதை விட்டு வெளியேற மனதில்லாமல் இருந்த லோத்து, ஆபிரகாமிடமும் செல்லாமல் போனதால், ஆதியாகமம் 19ஆம் அதிகாரத்தின் இறுதியில், அவருடைய சந்ததி பாவ சந்ததியினராய், தேவ மக்களாகிய இஸ்ரவேலருக்கு எதிரானவர்களாய், தேவனுக்கேற்காதவர்களாய் மாறிப் போயினர். ஆபிரகாமோடு தன் வாழ்வை துவக்கி, ஆடு மாடு, ஆஸ்தி உடையவராய் ஆனதும், ஆபிரகாமை விட்டு சோதோமை நோக்கி சென்று, இறுதியில் ஒன்று மற்றவராய் குகை வாசியாய் மாறி, தேவனுக்கேற்காத சந்ததியாய் அவர் வாழ்க்கை முடிந்தது. அவர் வாழ்வில் ஒவ்வொரு சறுக்கல்கள் போதும், தேவ கிருபை அவரை தாங்கி பிடித்த பொழுதிலும், தனக்கு கொடுக்கப்பட்ட அனைத்து கிருபையையும் போக்கடித்தவராய், அவர் வாழ்க்கை முடிந்தது. இது இன்று, அநேகருக்கு ஒரு நல்ல பாடமாய் அமைந்துள்ளது. தேவ ஐக்கியத்தோடு, தேவ பிள்ளைகளோடு, வாழ்வின் எந்த ஒரு சூழ்நிலையிலும் நிலைத்திருப்போமானால், தேவ கிருபையும், ஐக்கியமும், பாதுகாப்பும் நமக்கு கிடைக்கும். ஆனால் அதை விட்டுவிட்டு, உலக ஆடம்பரங்களையும், அதன் பெருமைகளையும் கண்டு, அங்கு செல்வோமானால் இறுதியில் லோத்துவை போல் நமக்கு எதுவும் மிஞ்சாது. லோத்துவை போல இன்னும் பலரது வாழ்க்கை நமக்கு படிப்பினையாய் வேதத்தில் பதியப்பட்டுள்ளது, அதை நாம் வரும் பதிவுகளில் காணலாம். தேவன் தாமே நாம் அவருடைய பலத்த கரத்திற்குள் எப்பொழுதும், எந்நாளும் அடங்கியிருக்க கிருபை செய்வாராக, ஆமென், அல்லேலூயா.

## 117. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 2 (சவுல்)



இத்தியானத்தின் பாகம் ஒன்றில் நாம் எவ்வாறு லோத்து தனக்கு அளிக்கப்பட்ட கிருபையான தருணங்களையும், சூழ்நிலைகளையும், ஐக்கியத்தையும், உலக பிரகாரமான சம்பத்தையும், என யாவையும் இழந்தவராய், ஆண்டவர் அவர் வாழ்க்கையில் எத்தனை தரமோ இடைப்பட்டும், அவரைக் காப்பாற்ற நினைத்தும், அவை அனைத்தையும் போக்கடித்தவராய் நம் எல்லாருக்கும் ஒரு எச்சரிப்பின் செய்தியாய் தன் வாழ்க்கையை வாழ்ந்து முடித்தார் என்பதை தியானித்தோம். இப்பொழுது, இத்தியானத்தின், இரண்டாம் பாகத்தில் லோத்தை போல தனக்கு கொடுக்கப்பட்ட கிருபையை போக்கடித்தவரான சவுல் ராஜாவை குறித்து தியானிக்க போகிறோம்.

இஸ்ரவேலின் மூப்பர்கள், நியாயதிபதியும் தீர்க்கதரிசிமாய் இருந்த சாமுவேலிடம் வந்து சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி தங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்றார்கள். **“அப்பொழுது இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் கூட்டங்கூடி, ராமாவிலிருந்த சாமுவேலினிடத்தில் வந்து: இதோ, நீர் முதிர்வயதுள்ளவரானீர்; உம்முடைய குமாரர் உம்முடைய வழிகளில் நடக்கிறதில்லை; ஆகையால் சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி, எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு, ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்றார்கள்.“** ( 1 சாமு 8:4,5). இது சாமுவேலுக்கு தகாததாய் காணப்பட்ட படியினால் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார் (1 சாமு 8:6). **“அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி: ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள்; அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை**

**ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்.**“ (1 சாமு 8:7) என்றார். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலேயே மக்கள் கேட்டபடி, சவுல் இஸ்ரவேல் மக்களுக்கு ராஜாவாக கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்டார். தன் தகப்பனாருடைய கழுதைகளை தேடி வந்த அவருக்கு ராஜ மேன்மை எந்த சிரமமும் இன்றி எளிதாக கிடைத்தது. இது ஆரம்பத்தில் அவருக்கே ஏற்றுக் கொள்ள முடியாத அளவு ஆச்சரியமுடையதாய் இருந்தது. 1 சாமு 9:20,21 கூறுகிறது **“மூன்றுநாளைக்கு முன்னே காணாமற்போன கழுதைகளைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்; அவைகள் அகப்பட்டது; இதல்லாமல் சகல இஸ்ரவேலின் அபேட்சையும் யாரை நாடுகிறது? உன்னையும் உன் வீட்டார் அனைவரையும் அல்லவா? என்றான். அப்பொழுது சவுல் பிரதியுத்தரமாக: நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? பென்யமீன் கோத்திரத்துக் குடும்பங்களிலெல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா? நீர் இப்படிப்பட்ட வார்த்தையை என்னிடத்தில் சொல்வானேன் என்றான்.**“ ஆம் தான், தன் குடும்பம், தன் கோத்திரம் ஆகிய இவை இஸ்ரவேலில் எவ்வளவு சிறியது என்பதை அவர் அறிந்திருந்ததால் அதையே சாமுவேலிடம் அறிக்கை விட்டார். 1 சாமு 10:1 இல் **“அப்பொழுது சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து, அவனை முத்தஞ்செய்து: கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார் அல்லவா?**“ என்றார். மேலும் ஆண்டவர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான சில அடையாளங்களையும் கொடுத்தார் (1 சாமு 10:2-9).

ஆனால் சவுல் இதைப்பற்றி யாரிடமும் பேச கூட இல்லை. காரணம் இது தன் பலத்திற்கு மிஞ்சினது, தேவனுடைய சுத்த கிருபை என்பதை அவர் அறிந்திருந்தார். இதனால் ஆண்டவர் சகல இஸ்ரவேலருக்கும் முன்பாக முறைப்படி அவரை ராஜாவாக தேர்ந்தெடுத்த பொழுது கூட, அந்த இடத்திற்கு வராமல் தன்னை ஒளித்துக் கொண்டார். **“அவன் பென்யமீன் கோத்திரத்தை அதினுடைய குடும்பங்களின்படியே சேரப்பண்ணினபின்பு, மாத்திரி குடும்பத்தின்மேலும், அதிலே கீசின் குமாரனாகிய சவுலின்மேலும், சீட்டு விழுந்தது; அவனைத் தேடினபோது, அவன் அகப்படவில்லை. அவன் இனி இங்கே வருவானா என்று அவர்கள் திரும்பக் கர்த்தரிடத்தில் விசாரித்தபோது: இதோ, அவன் தளவாடங்களிருக்கிற இடத்திலே ஒளித்துக்கொண்டிருக்கிறான் என்று கர்த்தர் சொன்னார்.**“ (1 சாமு 10:21,22). ஆனால் ஆண்டவரோ அவரை விடவில்லை சகல ஜனங்களும் அவரை அங்கீகரிக்கும் படியாய் செய்தார், **“அப்பொழுது அவர்கள் ஓடி, அங்கேயிருந்து அவனை அழைத்துக்கொண்டுவந்தார்கள்; அவன் ஜனங்கள் நடுவே வந்து நின்றபோது, எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான். அப்பொழுது சாமுவேல் எல்லா**

**ஜனங்களையும் நோக்கி: கர்த்தர் தெரிந்துகொண்டவனைப் பாருங்கள், சமஸ்த ஜனங்களுக்குள்ளும் அவனுக்குச் சமானமானவன் இல்லை என்றான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஆர்ப்பரித்து: ராஜா வாழ்க என்றார்கள்.“** (1 சாமு 10:23,24). தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தம்மை சிலர் கேலி செய்த பொழுது கூட அவர் அதை பெரியதாக எண்ணவில்லை (1 சாமு 10:27). காரணம் தன்னுடைய தகுதி என்ன என்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆனால் இப்படி அற்புதமாக ஆரம்பித்த சவுலின் ராஜ்யபாரம், குறைந்த காலத்திற்குள்ளாகவே தடுமாற ஆரம்பித்தது. எந்த ராஜ்யபாரத்திற்கு தான் சற்றும் தகுதி உள்ளவன் அல்ல என்று தாழ்மையோடு எண்ணினாரோ, அந்த ராஜ்யபாரத்தை தக்க வைத்துக் கொள்ளவும், தான் ராஜ மேன்மையோடு, எல்லார் மத்தியிலும் புகழோடு வாழ வேண்டும் என்பதற்காக தேவனுக்கு விரோதமான காரியங்களை செய்ய தொடங்கினார். இஸ்ரவேலின் முதல் அரசனாக 40 வருடங்கள் அவர் ஆட்சி செய்தாலும், தேவன் மனஸ்தாபடும்படியான ஒரு வாழ்க்கையையே அவர் வாழ்ந்து முடித்தார். இது நம் எல்லாருக்கும் ஒரு எச்சரிப்பின் செய்தியாய் காணப்படுகிறது. இதை குறித்து நாம் இத்தியானத்தில் தொடர்ந்து காண்போம்.

அவர் இராஜ்யபாரம் பண்ணிய இரண்டாம் வருஷத்திலேயே அவர் வாழ்க்கை சரிவை சந்திக்க ஆரம்பித்தது (1 சாமு 13:1). சவுல் சாமுவேலுக்கு காத்திராமல் தானாக ஆண்டவருக்கு சர்வாங்கதகன பலி செலுத்திய போது, **“நீர் செய்தது என்ன என்று சாமுவேல் கேட்டதற்கு, சவுல்: ஜனங்கள் என்னைவிட்டுச் சிதறிப்போகிறதையும், குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததையும், பெலிஸ்தர் மிக்மாசிலே கூடிவந்திருக்கிறதையும், நான் கண்டபடியினாலே, கில்காலில் பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் வந்துவிடுவார்கள் என்றும், நான் இன்னும் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணவில்லை என்றும், எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன் என்றான்.“** (1 சாமு 13:11,12). ஆனால் **“சாமுவேல் சவுலைப் பார்த்து: புத்தியீனமாய்ச் செய்தீர்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர்; மற்றப்படி கர்த்தர் இஸ்ரவேலின்மேல் உம்முடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் ஸ்திரப்படுத்துவார். இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்; கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே என்று சொன்னான்.“** (1 சாமு 13:13,14). இங்கு சவுல் செய்தது ஏதோ தன் தேசத்தை காப்பதற்காக அவர் துணிந்து செயல்பட்டதை போல் கூறினாலும், அவர் எண்ணமெல்லாம் தன் பதவியை காப்பாற்றுவதிலேயே இருந்தது. இதை நாம் அடுத்த அடுத்த நிகழ்வுகளில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

அவர் எவ்வாறு தேவத்திட்டத்திற்கு, சித்தத்திற்கு எதிராக செயல்பட்டார் என்பதை 1 சாமுவேல் 15 ஆம் அதிகாரத்தில் நான் காணலாம். 1 சாமு 15:1-3 வசனங்கள் கூறுகிறது "பின்பு சாமுவேல் சவுலை நோக்கி: இஸ்ரவேலராகிய தம்முடைய ஜனங்கள்மேல் உம்மை ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினாரே; இப்போதும் கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேளும்: சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன். இப்போதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான்". 1 சாமு 15:13 கூறுகிறது "சாமுவேல் சவுலினிடத்தில் போனான்; சவுல் அவனை நோக்கி: நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்; கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்றான்."

ஆனால் "அதற்குச் சாமுவேல்: அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும், எனக்குக் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன என்றான். அதற்குச் சவுல்: அமலேக்கியரிடத்திலிருந்து அவைகளைக் கொண்டுவந்தார்கள்; ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள்; மற்றவைகளை முற்றிலும் அழித்துப்போட்டோம் என்றான். அப்பொழுது சாமுவேல்: அந்தப் பேச்சை விடும், கர்த்தர் இந்த இராத்திரியிலே எனக்குச் சொன்னதை உமக்கு அறிவிக்கிறேன் என்று சவுலோடே சொன்னான். அவன்: சொல்லும் என்றான். அப்பொழுது சாமுவேல்: நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்தபோது அல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்; கர்த்தர் உம்மை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தாரே. இப்போதும் கர்த்தர்: நீ போய் அமலேக்கியராகிய அந்தப் பாவிகளைச் சங்கரித்து, அவர்களை நிர்மூலமாக்கித் தீருமட்டும், அவர்களோடு யுத்தம்பண்ணு என்று சொல்லி, உம்மை அந்த வழியாய் அனுப்பினார். இப்படியிருக்க, நீர் கர்த்தருடைய சொல்லைக்கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்றான்." (1 சாமு 15:14-19). இதற்கு பிரதியுத்தரமக "சவுல் சாமுவேலை நோக்கி: நான் கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தர் என்னை அனுப்பின வழியாய்ப் போய், அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகைக் கொண்டுவந்து, அமலேக்கியரைச் சங்காரம் பண்ணினேன். ஜனங்களோ உம்முடைய தேவனாகிய

கர்த்தருக்குக் கில்காலிலே பலியிடுகிறதற்காக, கொள்ளையிலே சாபத்தீடாகும் ஆடுமாடுகளிலே பிரதானமானவைகளைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள் என்றான்." (1 சாமு 15:20,21). இங்கு மறுபடியும், மறுபடியும் ஆண்டவர் என்ன சொன்னார் என்பதை விட, தனக்கு கிடைத்த கொள்ளை பொருளை, ராஜ மேன்மையை அவர் பெரியதாக எண்ணினார். ஆனால் அதை மறைக்க அவர், மறுபடியும் மறுபடியும் ஆண்டவருக்காகவே அதை செய்ததாக கூறினார். "அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம். இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்." (1 சாமு 15:22,23).

இங்கு சாமுவேல் தெளிவாக கர்த்தருடைய வார்த்தையின் முக்கியத்துவத்தையும், அதை மீறியதால் ராஜ மேன்மையே பறிக்கப்பட்டு போகும் என்றும் கூறினார். இதை கேட்ட சவுல் "நான் கர்த்தருடைய கட்டளையையும் உம்முடைய வார்த்தைகளையும் மீறினதினாலே பாவஞ்செய்தேன்; நான் ஜனங்களுக்குப் பயந்து, அவர்கள் சொல்லைக் கேட்டேன். இப்போதும் நீர் என் பாவத்தை மன்னித்து, நான் கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பிவாரும் என்றான்." (1 சாமு 15:24,25). இங்கு அவர் தமது தவறுக்காக மனஸ்தாபப்படுவதைப் போல் கூறினாலும், அவர் உண்மையாக அதை கூறவில்லை என்பதை பின்வரும் வசனங்கள் நமக்கு காண்பிக்கிறது. "சாமுவேல் சவுலைப் பார்த்து: நான் உம்மோடேகூடத் திரும்பிவருவதில்லை; கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தீர்; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, கர்த்தர் உம்மையும் புறக்கணித்துத் தள்ளினார் என்றான். போகும்படி சாமுவேல் திரும்புகிறபோது, சவுல், அவன் சால்வையின் தொங்கலைப் பிடித்துக்கொண்டான், அது கிழிந்துபோயிற்று. அப்பொழுது சாமுவேல் அவனை நோக்கி: கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டு; உம்மைப்பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார். இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய்சொல்லுகிறதும் இல்லை; தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை; மனம்மாற அவர் மனுஷன் அல்ல என்றான்." (1 சாமு 15:26-29). இங்கு சாமுவேல் தெளிவாக ஆண்டவருடைய திட்டத்தை பற்றி கூறினார். ஆண்டவர் தமக்கு பிரியமான மற்றொருவரை

சவுலுக்கு பதிலாக தெரிந்தெடுப்பார் என்று. ஆனால் சவுல் அதை அப்பொழுது பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லை. காரணம் தான் இல்லாவிட்டால் தன் மகனாகிய யோனத்தான் தான் அடுத்தது ராஜாவாக வருவான் என்று எண்ணினார். **“அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில்: சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள்.“ (1 சாமு 18:7)** என்ற ஆர்பரிப்பை அவர் கேட்கும் வரை, அவர் தனக்கு எதிரி யாரும் இல்லை என்று எண்ணினார். இதனால் சாமுவேல் சொன்னதை குறித்து கவலைப்படாமல், **“அதற்கு அவன்: நான் பாவஞ்செய்தேன்; இப்போது என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும், இஸ்ரவேலுக்கு முன்பாகவும் நீர் என்னைக் கனம்பண்ணி, நான் உம்முடைய தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பிவாரும் என்றான். அப்பொழுது சாமுவேல் திரும்பிச் சவுலுக்குப் பின்சென்றான்; சவுல் கர்த்தரைப் பணிந்துகொண்டான்.” (1 சாமு 15:30,31)**. இங்கு என்னைக் கணம் பண்ணி என்னும் வார்த்தையில், அவர் தான் ராஜாவாக, தன்னுடைய கனத்தை சாமுவேலிடம் எதிர்பார்த்தார். சாமுவேலுக்கு முன்பாக, தான் ஒன்றும் அற்றவன் என்று அறிக்கை செய்த அதே சவுல், இன்று நீர் வந்து என்னை கனம் பண்ண வேண்டும் என்று கூறுவதில் இருந்து, அவர் ராஜமேன்மையை குறித்தும், அதிகாரத்தை குறித்தும், அதனால் கிடைக்கும் சுகபோகமான வாழ்வை குறித்தும் கவலைப்பட்டார் என்பது தெளிவுப்படுகிறது. **1 சாமு 15:35 கூறுகிறது “சவுல் மரணமடையும் நாள்மட்டும் சாமுவேல் அப்புறம் அவனைக் கண்டு பேசவில்லை; இஸ்ரவேலின்மேல் சவுலை ராஜாவாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டதினிமித்தம், சாமுவேல் சவுலுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.“**. ஆம், ஆண்டவர் எவ்வாறு **“மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது.“ (ஆதி 6:5,6)**. இங்கு எப்படி மனஸ்தாபப்பட்டு அனைவரையும் அழித்துவிட்டு, நோவாவை ஆண்டவர் காக்க நினைத்தாரோ, அதைப்போல் சவுலை அகற்றிவிட்டு, தாவீதை தெரிந்து கொள்ளும்படியான செயலையும் ஆண்டவர் உடனே தொடங்கினார்.

**“அப்பொழுது சாமுவேல்: தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான்; அந்நாள்முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்; சாமுவேல் எழுந்து ராமாவுக்குப் போய்விட்டான்.“ (1 சாமு 16:13).** கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து தங்கி இருந்தார் என்று சொல்லப்பட்ட வசனத்தின் அடுத்த வசனம் கூறுகிறது **“கர்த்தருடைய ஆவி**

சவுலை விட்டு நீங்கினார்; கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி அவனைக் கலங்கப்பண்ணிக்கொண்டிருந்தது." (1 சாமு 16:14). இதில் ஒரு அற்புதமான தேவ செயல் என்னவென்றால், சவுலை பொல்லாத ஆவியின் அலைக்கழிப்பிலிருந்து காப்பாற்ற, தேவன் நேரடியாக தாவீதையே அவரிடம் அனுப்பினார். இங்கு சவுலுக்கு அருமையான ஒரு தருணம் கொடுக்கப்படுகிறது, கர்த்தர் தாவீதோடு இருக்கிறார் என்பதை நேரடியாக சவுல் உணர்ந்து கொள்கிறார். எனவே பிற்காலத்தில் தனக்கு பின் தாவீதை ஆண்டவர் தெரிந்து கொண்டதை அவர் ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் அவருடைய பதவி ஆசை அவரை தேவனுக்கு எதிராக செயல்பட வைத்தது.

"அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில்: சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள். அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது; அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள்; இன்னும் ராஜாங்கமாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கிறது என்று சொல்லி, அந்நாள்முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான். தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் இறங்கிற்று; அவன் வீட்டிற்குள்ளே தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருந்தான்; அப்பொழுது தாவீது தினந்தோறும் செய்கிறபடி, தன் கையினால் சுரமண்டலத்தை வாசித்துக்கொண்டிருந்தான்; சவுலின் கையிலே ஈட்டியிருந்தது. அப்பொழுது சவுல் தாவீதைச் சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடுவேன் என்று ஈட்டியை அவன்மேல் எறிந்தான்; ஆனாலும் தாவீது விலகி இரண்டுதரம் அவனுக்குத் தப்பினான். கர்த்தர் தாவீதோடேகூட இருக்கிறார் என்றும் தன்னை விட்டு விலகிப்போனார் என்றும், சவுல் கண்டு, தாவீதுக்குப் பயந்து, அவனைத் தன்னைவிட்டு அப்புறப்படுத்தி, அவனை ஆயிரம்பேருக்கு அதிபதியாக வைத்தான்; அப்படியே அவன் ஜனத்திற்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருந்தான். தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்; கர்த்தர் அவனோடேகூட இருந்தார். அவன் மகா புத்திமானாய் நடக்கிறதைச் சவுல் கண்டு, அவனுக்குப் பயந்திருந்தான். இஸ்ரவேலரும் யூதா ஜனங்களுமாகிய யாவரும் தாவீதைச் சிநேகித்தார்கள்; அவர்களுக்கு முன்பாக அவன் போக்கும் வரத்துமாயிருந்தான்." (1 சாமு 18:7-16). இங்கு சவுல் தான் பெலிஸ்தியரை வென்றதைக் குறித்து சந்தோஷப்படுவதை பார்க்கிலும், தன்னைவிட தாவீது உயர்ந்து விடுவாரோ, தன்னுடைய ராஜ்ஜிய மேன்மை பறிக்கப்பட்டு போகுமோ என்றே கவலைப்பட்டார். "அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது; அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள்; இன்னும் ராஜாங்கமாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கிறது என்று சொல்லி, அந்நாள்முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான்." (வசனங்கள் 8,9) என்பது அவரின் மன நிலையை தெளிவாக

வெளிப்படுத்துகிறது. மேலும் தாவீதைக் கொல்ல நினைத்தும் அது முடியாமறபோனதும், **“கர்த்தர் தாவீதோடேகூட இருக்கிறார் என்றும்“ (வசனம் 12),** அவர் நிச்சயித்துக் கொண்டபடியினால், தேவத்திட்டத்திற்கு எதிராகவே செயல்பட தொடங்கினார். **“என் கை அல்ல, பெலிஸ்தரின் கையே அவன்மேல் விழட்டும் என்று சவுல் நினைத்துக்கொண்டு,” (1 சாமு 18:17),** அவர் செய்ய நினைத்ததெல்லாம் இறுதியில் அவருக்கு எதிராகவே முடிந்தது. **“கர்த்தர் தாவீதோடிருக்கிறார் என்று சவுல் கண்டறிந்துகொண்டான்; சவுலின் குமாரத்தியாகிய மீகாளும் அவனை நேசித்தாள். ஆகையால் சவுல் இன்னும் அதிகமாய்த் தாவீதுக்குப் பயந்து, தான் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்குச் சத்துருவாயிருந்தான்.“ (1 சாமு 18:28,29).** தன் மகள் மீகாள் தாவீதற்கு மனைவியானதும், தன் மகனாகிய யோனத்தான் தாவீதை தன் உயிரை போல சிநேகித்ததும், இஸ்ரவேலரும் யூதா ஜனங்களும் யாவரும் தாவீதை சிநேகித்ததும், எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தர் தாவீதோடு இருப்பதை அவர் தெரிந்திருந்தும், தான் என்ற எண்ணமும், ராஜமேன்மையும், அவரை தேவ திட்டத்திற்கு எதிராக செயல்பட தூண்டியது. தாவீதின் மூலமாய் தன் நாடு காக்கப்பட வேண்டும் என்பதை காட்டிலும், தாவீதை அழிப்பது மூலமாய் தன் அரச பதவி காக்கப்பட வேண்டும் என்பதே அவர் எண்ணமாய் இருந்தது. இதனால் எதிரிகளை அழித்து நாட்டை காப்பாற்றுவதை விட்டுவிட்டு, தாவீதை பின்தொடர்ந்து அவரை கொல்வதையே நோக்கமாக கொண்டிருந்ததால், இறுதியில் அவரும், அவர் தன்னுடைய அடுத்த வாரிசாக நினைத்த அவர் மகன் யோனத்தானும் ஒன்றாக போரில் மடிந்தனர். பின்வரும் தியானங்களில் சவுலை குறித்து தொடர்ந்து தியானிப்போமாக, ஆமென், அல்லேலூயா.

# 118. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 3 (சவுல் தொடர்ச்சி)



இத்தியானத்தின் முந்தின பகுதியில் (பாகம் 2 இல்), சவுல் எவ்வாறு தேவனால் எளிய நிலையில் இருந்து தெரிந்து கொள்ளப்பட்டு, எந்தவித சிரமமும் இன்றி நேரடியாக சமஸ்த இஸ்ரவேலின் மேலும் முதலாவது ராஜாவாக தெரிந்து கொள்ளப்பட்டதை கண்டோம். ஆனால் சவுலோ, தேவன் கிருபையாய் சாமுவேலின் மூலமாய் தன்னை ராஜாவாக அபிஷேகித்து ஏற்படுத்தின பொழுதும், தேவனுக்கோ, சாமுவேலிற்கோ கீழ்ப்படியாமல், தன் ராஜ்ஜிய மேன்மையையே அவர் பெரியதாக எண்ணினார். தேவனுடைய சித்தத்தை செயல்படுத்துவதை காட்டிலும் தன் பதவியை காப்பாற்றிக் கொள்வதையும், அதன் மூலம் உண்டாகும் சுகபோகத்தை அனுபவிக்கவுமே முற்பட்டார். இதனால் இறுதியில், தேவன் சவுலை ராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்படும்படியாய் செயல்பட்டார். சாமுவேலும் இதற்காக வேதனைப்பட்டார். ஆனால் ஆண்டவரோ சவுலை தள்ளி தாவீதை ராஜாவாக்க சித்தம் கொண்டு, சாமுவேலின் மூலமாகவே தாவீதையும் அபிஷேகித்தார். சவுல் இதை முதலாவது அறியவில்லை, ஆனால் சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது 14,000 என்ற ஆர்ப்பரிப்பை, அவர் எப்பொழுது கேட்டாரோ, அப்பொழுதே தேவ திட்டத்தை உணர்ந்து கொண்டார். ஆனால் அவருடைய பதவி ஆசை, சுகபோக வாழ்வு அவரை தேவத்திட்டத்திற்கு எதிராக செயல்பட வைத்தது. தாவீதை கொள்வதன் மூலம் தெய்வத்திட்டத்தை தடை செய்துவிடலாம் என்று முட்டாள்தனமாக எண்ணினார். அதனால் ஆண்டவர் தந்த இஸ்ரவேல் தேசத்தை, இராஜாவாக இருந்தது காப்பதை விட்டுவிட்டு, தாவீதை வேட்டையாடுவதிலேயே முனைப்பு காட்டினார். இறுதியில் அவருடைய முடிவு பரிதாபமாக இருந்தது.

இவை யாவும் நமக்கு எச்சரிப்பாய் வேத புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. இதனை நாம் இப்பாகத்தில் தொடர்ந்து தியானிப்போமாக.

1 சாமுவேல் 19:1 கூறுகிறது "**தாவீதைக் கொன்றுபோடும்படிக்கு, சவுல் தன் குமாரனாகிய யோனத்தானோடும் தன் ஊழியக்காரர் எல்லாரோடும் பேசினான்.**" என்று. ஆனால் 1 சாமு 19:4,5 வசனங்களில் "**அப்படியே யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலோடே தாவீதுக்காக நலமாய்ப் பேசி, ராஜா தம்முடைய அடியானாகிய தாவீதுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதிருப்பாராக; அவன் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்யவில்லை; அவன் செய்கைகள் உமக்கு மெத்த உபயோகமாயிருக்கிறதே. அவன் தன் பிராணனைத் தன் கையிலே வைத்துக்கொண்டு, அந்தப் பெலிஸ்தனைக் கொன்றதினாலே, கர்த்தர் இஸ்ரவேலுக்கெல்லாம் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டதை நீர் கண்டு, சந்தோஷப்பட்டீரே; இப்போதும் முகாந்தரமில்லாமல் தாவீதைக் கொல்லுகிறதினால், குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாக நீர் பாவஞ்செய்வானேன் என்றான்.**". இதனால் "**சவுல் யோனத்தானுடைய சொல்லைக் கேட்டு: அவன் கொலைசெய்யப்படுவதில்லை என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டான்.**" (1 சாமு 19:6). ஆனால் 1 சாமு 19:9,10 கூறுகிறது "**கர்த்தரால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் வந்தது; அவன் தன் வீட்டில் உட்கார்ந்து, தன் ஈட்டியைக் கையிலே பிடித்துக்கொண்டிருந்தான்; தாவீது தன் கையினாலே சுரமண்டலம் வாசித்தான். அப்பொழுது சவுல்: தாவீதை ஈட்டியினாலே சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடப் பார்த்தான்; ஆனாலும் இவன் சவுலுக்கு விலகினதினாலே, அவன் எறிந்த ஈட்டி சுவரிலே பட்டது; தாவீதோ அன்று இராத்திரி ஓடிப்போய், தன்னைத் தப்புவித்துக்கொண்டான்.**" மறுபடியும் மறுபடியும், பொல்லாத ஆவியின் பிடியில் அகப்பட்டு சவுல் தவறான காரியங்களையே செய்தார். 1 சாமு 20:30-34 வசனங்களில் "**அப்பொழுது சவுல் யோனத்தான்மேல் கோபமூண்டவனாகி, அவனைப் பார்த்து: இரண்டகமும் மாறுபாடுமுள்ளவளின் மகனே, நீ உனக்கு வெட்கமாகவும், உன் தாயின் மானத்திற்கு வெட்கமாகவும், ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்துகொண்டிருக்கிறதை நான் அறியேனோ? ஈசாயின் மகன் பூமியின்மேல் உயிரோடிருக்கும் நாள்வரையும் நீயானாலும் உன் ராஜ்யபாரமானாலும் நிலைப்படுவதில்லை; இப்போதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டுவா; அவன் சாகவேண்டும் என்றான். யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலுக்குப் பிரதியுத்தரமாக: அவன் ஏன் கொல்லப்படவேண்டும்? அவன் என்ன செய்தான் என்றான். அப்பொழுது சவுல்: அவனைக் குத்திப்போட அவன்மேல் ஈட்டியை எறிந்தான்; ஆகையால் தாவீதைக் கொன்றுபோடத் தன் தகப்பன் தீர்மானித்திருக்கிறான் என்பதை யோனத்தான் அறிந்துகொண்டு, கோபதாபமாய் பந்தியைவிட்டு எழுந்திருந்துபோய், அமாவாசியின் மறுநாளாகிய அன்றையதினம் போஜனம்பண்ணாதிருந்தான்; தன் தகப்பன் தாவீதை நிந்தித்துச் சொன்னது அவனுக்கு மனநோவாயிருந்தது.**"

மேற்கண்ட வசனங்களில் சவுலின் எண்ணம் தெளிவாக வெளிப்படுகிறது "ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்துகொண்டிருக்கிறதை நான் அறியேனோ? ஈசாயின் மகன் பூமியின்மேல் உயிரோடிருக்கும் நாள்வரையும் நீயானாலும் உன் ராஜ்யபாரமானாலும் நிலைப்படுவதில்லை; இப்போதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டுவா; அவன் சாகவேண்டும் என்றான் " (வசனம் 31) என்று கூறுவதில் இருந்து தன் ராஜ்யபாரத்தை காப்பாற்றவே அவர் தாவீதை கொல்ல நினைத்தார் என்று வெளிப்படுகிறது. இந்த கோபத்தின் உச்சகட்டமாக, எந்த மகனுக்காக அவர் தாவீதை அழிக்க நினைத்தாரோ அதே மகன் மேல் தன் ஈட்டியை எறிந்தது, எந்த அளவு அவர் கர்த்தரின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியேறி பிசாசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறார் என்பதை விளக்குகிறது. ஆனால் யோனத்தானுக்கோ தன் தகப்பன் தன் மீது ஈட்டியை எறிந்ததை காட்டிலும் தாவீதை நிந்தித்து சொன்னதே அவனுக்கு வேதனையாய் இருந்தது (வசனம் 34). சவுல் தாவீதை மட்டுமல்ல தன்னை சுற்றியுள்ள அனைவரையுமே பகைக்க ஆரம்பித்தார். தன் பிள்ளைகளே தனக்கு எதிராக இருப்பதாக நினைத்தார். இதன் உச்சகட்டமாக "பின்பு ராஜா தன்னண்டையிலே நிற்கிற சேவகரை நோக்கி: நீங்கள் போய், கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்லுங்கள்; அவர்கள் கையும் தாவீதோடே இருக்கிறது; அவன் ஓடிப்போகிறதை அவர்கள் அறிந்திருந்தும், அதை எனக்கு வெளிப்படுத்தவில்லை என்றான்; ராஜாவின் வேலைக்காரரோ, கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்லத் தங்கள் கைகளை நீட்ட சம்மதிக்கவில்லை. அப்பொழுது ராஜா தோவேக்கை நோக்கி: நீ போய் ஆசாரியர்களைக் கொன்றுபோடு என்றான்; ஏதோமியனாகிய தோவேக்கு ஆசாரியர்கள்மேல் விழுந்து, சணல்நூல் ஏபோத்தைத் தரித்திருக்கும் எண்பத்தைந்துபேரை அன்றையதினம் கொன்றான்." (1 சாமு 22:17,18). இங்கு கர்த்தருடைய ஆசாரியர்களையே கொலை செய்யும்படியாய் அவருடைய நிலைமை பரிதாபத்திற்குரியதாய் மாறிப்போனது. கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சாமுவேலினால் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டு நடத்தப்பட்ட சவுல், இன்று கர்த்தருடைய ஆசாரியர்களை கொல்லும் அளவிற்கு மாறிப் போனார். ஆனால் "தாவீது வனாந்தரத்திலுள்ள அரணான ஸ்தலங்களிலே தங்கி, சீப் என்னும் வனாந்தரத்திலிருக்கிற ஒரு மலையிலே தரித்திருந்தான்; சவுல் அநுதினமும் அவனைத் தேடியும், தேவன் அவனை அவன் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. " (1 சாமு 23:14). இங்கு நான் கவனிக்க வேண்டியது சவுல் அனுதினமும் தாவீதை தேடியும், தேவன் தாவீதை சவுல் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை என்பதாகும்.

மேலும் "அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய், தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தி: நீர் பயப்படவேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டு பிடிக்கமாட்டாது; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்; அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார் என்றான்." (1 சாமு 23:16,17). தேவன் தாவீதை ராஜாவாக்கவே தெரிந்து கொண்டார் என்பதை அறிந்திருந்தும், தேவத் திட்டத்திற்கு எதிராகவே

செயல்பட்டார். ஆனால் ஆண்டவரோ கிருபையாய் சவுலை காப்பாற்றினார். தாவீது சவுலை கொல்ல அருமையான தருணம் கிடைத்தும், அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ண பட்டவர் என்று, அவரைக் கொல்லாமல் **"கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம் விசாரித்து, கர்த்தர் தாமே என் காரியத்தில் உமக்கு நீதியைச் சரிக்கட்டுவாராக; உம்முடைய பேரில் நான் கைபோடுவதில்லை. முதியோர் மொழிப்படியே, ஆகாதவர்களிடத்திலே ஆகாமியம் பிறக்கும்; ஆகையால் உம்முடையபேரில் நான் கைபோடுவதில்லை. இஸ்ரவேலின் ராஜா யாரைத் தேடப் புறப்பட்டார்? ஒரு செத்த நாயையா, ஒரு தெள்ளுப்பூச்சியையா, நீர் யாரைப் பின்தொடருகிறீர்? கர்த்தர் நியாயாதிபதியாயிருந்து, எனக்கும் உமக்கும் நியாயந்தீர்த்து, எனக்காக வழக்காடி, நான் உம்முடைய கைக்குத் தப்ப என்னை விடுவிப்பாராக என்றான்."** (1 சாமு 24:12-15). அப்பொழுது சவுல் **"தாவீது இந்த வார்த்தைகளைச் சவுலோடே சொல்லி முடிந்தபின்பு, சவுல்: என் குமாரனாகிய தாவீதே, இது உன்னுடைய சத்தமல்லவா என்று சொல்லி, சத்தமிட்டு அழுது, தாவீதைப் பார்த்து: நீ என்னைப்பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; நானோ உனக்கு தீமை செய்தேன். நீ எனக்கு நன்மை செய்ததை இன்று விளங்கப்பண்ணினாய்; கர்த்தர் என்னை உன் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், நீ என்னைக் கொன்றுபோடவில்லை. ஒருவன் தன் மாற்றானைக் கண்டுபிடித்தால், அவனைச் சுகமே போகவிடுவானோ? இன்று நீ எனக்குச் செய்த நன்மைக்காகக் கர்த்தர் உனக்கு நன்மை செய்வாராக. நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன். இப்போதும் நீ எனக்குப் பின்னிருக்கும் என் சந்ததியை வேரறுப்பதில்லை என்றும், என் தகப்பன் வீட்டாரில் என் பெயரை அழித்துப்போடுவதில்லை என்றும் கர்த்தர்மேல் எனக்கு ஆணையிட்டுக் கொடு என்றான். அப்பொழுது தாவீது சவுலுக்கு ஆணையிட்டுக் கொடுத்தான்; பின்பு, சவுல் தன் வீட்டுக்குப் புறப்பட்டுப்போனான்; தாவீதும் அவன் மனுஷரும் அரணிப்பான இடத்திற்கு ஏறிப்போனார்கள்."** (1 சாமு 24:16-22). இங்கு வசனம் 20இல் **"நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன் "** என்று கூறுவதில் இருந்து அவரே சாட்சியாக தாவீதை குறித்த தேவ திட்டத்தை அறிக்கையிடுகிறார். மேலும் வசனம் 21இல், சவுலுக்குள் இருந்த வேறொரு பயமும் வெளிப்படுகிறது. அது தன்னை மட்டுமல்ல, தன் சந்ததியையும் தாவீது அழித்துப் போடுவானோ என்பதாகும். சவுலை கொல்ல வாய்ப்பு கிடைத்தும், அவரைக் கொல்லாமல் தாவீது தப்பவிட்டிருந்தும், சவுலுக்கோ வேண்டாத இப்படிப்பட்ட பயங்கள், அவர் விட்டு விலக தயாராக இராதிருந்த அரச பதவியின் மூலம் அவருக்கு உண்டானது. இவ்வாறாக தாவீது சவுலுக்கு ஆணையிட்டுக் கொடுத்த பிறகும், சவுல் தாவீதை பின்தொடர்ந்து கொல்ல நினைத்ததை கைவிடவில்லை.

இதே போன்று மற்றொரு சந்தர்ப்பத்திலும், ஆண்டவர் தாவீது சவுலை கொல்லாமல் தப்பவிட்டார். **"பின்பு சீப்ஊரார் கிபியாவிலிருக்கிற சவுலிடத்தில் வந்து: தாவீது எஷிமோனுக்கு எதிரான ஆகிலாமேட்டில் ஒளித்துக்கொண்டிருக்கிறான் என்றார்கள். அப்பொழுது சவுல்:**

**சீப்வனாந்தரத்திலே தாவீதைத் தேடும்படி எழுந்து, இஸ்ரவேலிலே தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம் பேரோடுங்கூட, சீப் வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப்போனான்.**“ (1 சாமு 26:1,2). இங்கு மற்றொரு முறை ஆண்டவர் தாவீதின் கைக்கு சவுலை தப்புவித்தார். இங்கு தாவீது வசனம் 1 சாமு 26:9 இல் “**தாவீது அபிசாயைப் பார்த்து: அவரைக் கொல்லாதே; கர்த்தர் அபிஷேகம் பண்ணுவித்தவர்மேல் தன் கையைப் போட்டு, குற்றமில்லாமற்போகிறவன் யார்? என்று சொன்னான்.**“ என்று கூறுவதிலிருந்து சவுலுக்கு கொடுக்கப்பட்ட அபிஷேகத்தின் மேன்மையை வெளிப்படுத்துகிறார். ஆனால் சவுலோ தனக்கு கிருபையாக கொடுக்கப்பட்ட இந்த ராஜ்ய மேன்மையின் அபிஷேகத்தை சற்றும் உணராமல் மாண்டு போனார்.

மேலும் “**தாவீது கடந்து, அந்தப் பக்கத்திற்குப் போய், தங்களுக்கும் அவர்களுக்கும் நடுவே போந்த இடமுண்டாக, தூரத்திலிருக்கிற மலையின் கொடுமுடியிலே, ஜனங்களுக்கும் நேரின் குமாரனாகிய அப்னேருக்கும் நேராக நின்று கூப்பிட்டு: அப்னேரே, உத்தரவு சொல்லமாட்டீரா என்றான்; அதற்கு அப்னேர்: ராஜாவுக்கு நேராகக் கூக்குரலிடுகிற நீ யார் என்றான். அப்பொழுது தாவீது அப்னேரை நோக்கி: நீர் வீரன் அல்லவா? இஸ்ரவேலில் உமக்குச் சரியானவன் யார்? பின்னை நீர் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் காக்காமற் போனதென்ன? ஜனத்தில் ஒருவன் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் கொல்லும்படி வந்திருந்தானே. நீர் செய்த இந்தக் காரியம் நல்லதல்ல; கர்த்தர் அபிஷேகம்பண்ணின உங்கள் ஆண்டவனை நீங்கள் காக்காமற் போனபடியினால், நீங்கள் மரணத்திற்குப் பாத்திரவான்கள்; இப்போதும் ராஜாவின் தலைமாட்டில் இருந்த அவருடைய ஈட்டியும் தண்ணீர்ச் செம்பும் எங்கே என்று பாரும் என்றான்.**“ (1 சாமு 26:13-16).

இங்கு அப்னேர் பதில் கூறுவதற்கு முன்பாகவே “**அப்பொழுது சவுல்: தாவீதின் சத்தத்தை அறிந்து, என் குமாரனாகிய தாவீதே, இது உன் சத்தமல்லவா என்றான். அதற்குத் தாவீது: ராஜாவாகிய என் ஆண்டவனே, இது என் சத்தந்தான் என்று சொல்லி,** “ (1 சாமு 26:17). “**அதற்குத் தாவீது: ராஜாவாகிய என் ஆண்டவனே, இது என் சத்தந்தான் என்று சொல்லி, பின்னும்: என் ஆண்டவனாகிய நீர் உம்முடைய அடியானை இப்படிப் பின்தொடருகிறது என்ன? நான் என்ன செய்தேன்? என்னிடத்தில் என்ன பொல்லாப்பு இருக்கிறது? இப்பொழுது ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய அடியானுடைய வார்த்தைகளைக் கேட்பாராக; கர்த்தர் உம்மை எனக்கு விரோதமாக எடுத்து விட்டதுண்டானால், அதற்கு அவர் காணிக்கையை ஏற்றுக்கொள்வாராக; மனுபுத்திரர் அதைச் செய்தார்களேயாகில், அவர்கள் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்படக்கடவர்கள்; அவர்கள்: நீ போய்; அந்நிய தேவர்களைச் சேவி என்று சொல்லி, அவர்கள் இன்று என்னைக் கர்த்தருடைய சுதந்தரத்திற்கு அடுத்தவனாயிராதபடிக்கு,**

துரத்திவிட்டார்களே. இப்போதும் கர்த்தருடைய சமுகத்தில் என் இரத்தம் தரையில் விழாதிருப்பதாக; மலைகளில் ஒரு கவுதாரியை வேட்டையாடுகிறதுபோல, இஸ்ரவேலின் ராஜா ஒரு தெள்ளுப்பூச்சியைத் தேடவந்தாரோ என்றான்." (1 சாமு 26:17-20). இங்கு தாவீது தெளிவாக, சவுல் தன்னை பின் தொடர்வதில் அர்த்தம் ஏதும் இல்லை என்பதை தெளிவுபடுத்தினார். அப்பொழுது சவுல், "அப்பொழுது சவுல்: நான் பாவஞ்செய்தேன்; என் குமாரனாகிய தாவீதே, திரும்பிவா; என் ஜீவன் இன்றையதினம் உன் பார்வைக்கு அருமையாயிருந்தபடியால், இனி உனக்கு ஒரு பொல்லாப்புஞ் செய்யேன்; இதோ, நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன் என்றான்." (1 சாமு 26:21). "அதற்குத் தாவீது: இதோ, ராஜாவின் ஈட்டி இங்கே இருக்கிறது; வாலிபரில் ஒருவன் இப்புறம் வந்து, அதை வாங்கிக் கொண்டுபோகட்டும். கர்த்தர் அவனவனுக்கு அவனவன் நீதிக்கும் உண்மைக்கும் தக்கதாகப் பலன் அளிப்பாராக; இன்று கர்த்தர் உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், கர்த்தர் அபிஷேகம்பண்ணினவர்மேல், என் கையை நீட்ட மனதில்லாதிருந்தேன். இதோ, உம்முடைய ஜீவன் இன்றையதினம் என் பார்வைக்கு எப்படி அருமையாயிருந்ததோ, அப்படியே என் ஜீவனும் கர்த்தரின் பார்வைக்கு அருமையாயிருப்பதினால், அவர் என்னை எல்லா உபத்திரவத்திற்கும் நீங்கலாக்கி விடுவாராக என்றான்." (1 சாமு 26:22-24). இங்கு தெளிவாக ஆண்டவர் சவுலுக்கு கொடுத்திருக்கும் கிருபையான தருணத்தை பற்றி கூறுகிறார்.

இறுதியாக "அப்பொழுது சவுல் தாவீதை நோக்கி: என் குமாரனாகிய தாவீதே, நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மேன்மேலும் பலப்படுவாய் என்றான்; அப்படியே தாவீது தன் வழியே போனான்; சவுலும் தன் ஸ்தானத்திற்குத் திரும்பினான்." (1 சாமு 26:25). இங்கு சவுல் தன் தவறை உணர்ந்தவராய் தாவீதை ஆசிர்வதித்து கூறும் காரியங்களை காணலாம். ஆனால் அவர் ஆண்டவரை விட்டு வெகு தூரமாய் சென்று விட்டார். இதனால் "பெலிஸ்தர் கூடிவந்து, சூநேமிலே பாளயமிறங்கினார்கள்; சவுலும் இஸ்ரவேலர் எல்லாரையும் கூட்டினான்; அவர்கள் கில்போவாவிலே பாளயமிறங்கினார்கள். சவுல் பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டபோது பயந்தான்; அவன் இருதயம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருந்தது. சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது, கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாவது, ஊரீமினாலாவது, தீர்க்கதரிசிகளினாலாவது மறுஉத்தரவு அருளவில்லை." (1 சாமு 28:4-6). இங்கு ஆண்டவர் சவுலுக்கு பிரதியுத்தரம் தராமல் இருந்த பொழுது, தன்னை தேவனிடத்தில் தாழ்த்தி, தன் பாவங்களை அறிக்கையிட்டு மனம் திரும்பாமல், அதற்கு எதிர் திசையில் பயணித்தார். "அப்பொழுது சவுல் தன் ஊழியக்காரரை நோக்கி: அஞ்சனம்பார்க்கிற ஒரு ஸ்திரீயைத்

**தேடுங்கள்; நான் அவளிடத்தில் போய் விசாரிப்பேன் என்றான்; அதற்கு அவனுடைய ஊழியக்காரர்: இதோ, எந்தோரில் அஞ்சனம்பார்க்கிற ஒரு ஸ்திரீ இருக்கிறாள் என்றார்கள். அப்பொழுது சவுல் வேஷம் மாறி, வேறு வஸ்திரம் தரித்துக்கொண்டு, அவனும் அவனோடேகூட இரண்டுபேரும் இராத்திரியிலே அந்த ஸ்திரீயினிடத்தில் போய்ச் சேர்ந்தார்கள்; அவளை அவன் நோக்கி: நீ அஞ்சனம்பார்த்து எனக்குக் குறிசொல்லி, நான் உன்னிடத்தில் சொல்லுகிறவனை எழும்பிவரச்செய் என்றான்.**" (1 சாமு 28:7,8). ஆனால் "**அதற்கு அந்த ஸ்திரீ: சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும், தேசத்தில் இராதபடிக்கு நிர்மூலமாக்கின செய்தியை நீர் அறிவீரே; என்னைக் கொன்றுபோடும்படி நீர் என் பிராணனுக்குக் கண்ணிவைக்கிறது என்ன என்றாள்.** " (1 சாமு 28:9). இங்கு தெளிவாக கர்த்தருடைய வார்த்தையின்படி அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிச்சொல்கிறவர்களையும் தன் தேசத்தில் இராதபடி நிர்மூலமாக்கினாரோ, அவரே இன்று கர்த்தர் தன்னுடன் பேசாதபடியால், பொல்லாத ஆவினால் பிடிக்கப்பட்ட அவர், பிசாசின் ஆவியிடமே சென்று தனக்கு என்ன நேரிடும் என்று விசாரிப்பது அவர் இஸ்ரவேலின் ராஜாவாக இருந்தும், பிசாசின் இராஜ்யத்திற்கு அடிமையாய் இருந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது.

இதனால் "**அதற்குச் சாமுவேல்: கர்த்தர் உன்னைவிட்டு விலகி, உனக்குச் சத்துருவாய் இருக்கும்போது, நீ என்னிடத்தில் கேட்பானேன்? கர்த்தர் என்னைக்கொண்டு சொன்னபடியே செய்து முடித்து, ராஜ்யத்தை உன் கையிலிருந்து பறித்து, அதை உன் தோழனாகிய தாவீதுக்குக் கொடுத்துவிட்டார். நீ கர்த்தருடைய சொற்கேளாமலும், அமலேக்கின்மேல் அவருக்கு இருந்த கோபத்தின் உக்கிரத்தைத் தீர்க்காமலும் போனபடியினால், கர்த்தர் இன்றையதினம் உனக்கு இந்தப்பிரகாரமாகச் செய்தார். கர்த்தர் உன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலரையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக் கொடுப்பார்; நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்; இஸ்ரவேலின் பாளயத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான்.**" (1 சாமு 28:16-19). இங்கு சாமுவேலின் ஆவி உண்மையோ அல்லது பிசாசின் தந்திரமோ என்பது நாம் தியானிக்க வேண்டிய ஒன்று. ஆனால் அந்த ஆவி கூறியதெல்லாம் நடந்தது குறிப்பாக வசனம் 16இல் "**அதற்குச் சாமுவேல்: கர்த்தர் உன்னைவிட்டு விலகி, உனக்குச் சத்துருவாய் இருக்கும்போது, நீ என்னிடத்தில் கேட்பானேன்?**.", ஆம் கர்த்தர் சவுலை விட்டு விலகினது மட்டுமின்றி, சவுல் ஆண்டவருக்கு பிரியம் இல்லாத சத்துருவாய் மாறிப் போனார். இங்கு ஆவியிலும், ஆத்மாவிலும் உண்டான பலவீனம் அவருடைய சரீரத்தையும் பலவீனப்படுத்து. "**அந்தக்ஷணமே சவுல் நெடிதாங்கிடையாய்த் தரையிலே விழுந்து, சாமுவேலின் வார்த்தைகளினாலே மிகவும் பயப்பட்டான்;**

**அவன் இராப்பகல் முழுதும் ஒன்றும் சாப்பிடாதிருந்தபடியினால், அவன் பலவீனமாயிருந்தான்.**“ (1 சாமு 28:20).

இதனால் இறுதியாக, 1 சாமு 31:1-6 வசனங்களில் “**பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள்; இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள். பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரரையும் நெருங்கித் தொடர்ந்து, சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசூகாவையும் வெட்டிப்போட்டார்கள். சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது; வில்வீரர் அவனைக் கண்டு நெருங்கினார்கள்; அப்பொழுது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டு, தன் ஆயுததாரியை நோக்கி: அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்றான்; அவனுடைய ஆயுததாரி மிகவும் பயப்பட்டதினால், அப்படிச் செய்யமாட்டேன் என்றான்; அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான். சவுல் செத்துப்போனதை அவன் ஆயுததாரி கண்டபோது, அவனும் தன் பட்டயத்தின்மேல் விழுந்து, அவனோடேகூடச் செத்துப்போனான். அப்படியே அன்றையதினம் சவுலும், அவன் மூன்று குமாரரும், அவன் ஆயுததாரியும், அவனுடைய எல்லா மனுஷரும் ஒருமிக்கச் செத்துப்போனார்கள்.**“. இங்கு சவுல், யோனத்தான் உள்பட, அவர் மூன்று குமாரரும் ஒருமிக்க மடிந்தார்கள். அதிலும் சவுலின் முடிவு பரிதாபமாய் இருந்தது. ஆம் அருமையாய் தன் ஓட்டத்தை ஆரம்பித்த சவுல், இறுதியில் அனைத்து கிருபைகளையும் இழந்தவராய், தேவனுக்கே சத்துருவாய் மாறி தன் வாழ்க்கை ஓட்டத்தை முடித்தார். இது நமக்கு ஒரு எச்சரிப்பின் செய்தியாய் உள்ளது. எந்தவித தகுதியும் இன்றி இருந்த அவரை ஆண்டவர் ராஜாவாய் தேர்ந்தெடுத்த பொழுது, அவருக்கு இருந்த மனநிலை, கொஞ்சம் கொஞ்சமாக மாறி, இறுதியில் தேவனுக்கு எதிராக திரும்புவதற்கு காரணம், அவர் தேவனை விட தேவன் தந்த ஆசீர்வாதங்களை (அரச பதவி) அதிகமாய் எண்ணியது, அந்த அரச பதவியை, தன் அதிகாரத்தை தக்க வைப்பதே அவர் குறிக்கோளாய் இருந்ததே தவிர, தேவ சித்தத்தை பற்றியோ, திட்டத்தைப் பற்றியோ அவர் கவலைப்படவில்லை. தேவன் அவரை சாமுவேல் மூலமாய் எச்சரித்தும், மனந்திரும்பாமல், செய்த தவற்றையே மறுபடியும் மறுபடியும் செய்து, இறுதியில், தேவனுக்கே சத்துருவாய் மாறிப் போனார். இதுவே தேவன் தந்த கிருபையை போக்கடித்தவராய், அவர் வாழ்வை முடிவிற்கு கொண்டு வந்தது. எனவே ஆண்டவர் தந்த ஆசிர்வாதங்கள், நன்மைகள், மேன்மைகள் என எல்லாவற்றைக் காட்டிலும் தேவனையே பெரியதாக எண்ணுவோமாக. தேவன் பலமுறை எச்சரித்தும், மற்ற மனிதர்கள் மூலம் இடைப்பட்டும், தொடர்ந்து சவுல் கடினப்பட்டு போனது

போல் நாம் வாழாதிருப்போமாக. தேவன் தாமே தம்முடைய மாறாத கிருபையை நமக்கு அருள்வாராக. ஆமென், அல்லேலூயா.

## 119. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 4 (யூதாஸ்காரியோத்து)



நாம் இதுவரை பார்த்த மூன்று பாகங்களில் லோத்துவின் வாழ்க்கையிலும், இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாக தேவனால் அபிஷேகிக்கப்பட்ட சவுலின் வாழ்க்கையிலும், ஆண்டவர் எத்தனையோ தருணங்களை கிருபையாய் கொடுத்திருந்தும், அதை சரியாக பயன்படுத்தாமல் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கிருபையை போக்கடித்தவர்களாய் பரிதாபமாக தங்கள் வாழ்க்கை ஓட்டத்தை முடித்தனர். ஆனால் இவ்விருவரை காட்டிலும், ஆண்டவரால் நேரடியாக அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைக்கப்பட்டு, ஆண்டவரோடு கிட்டத்தட்ட மூன்றரை வருடங்கள் ஒன்றாக உண்டு, உறங்கி, அவருடைய தெய்வீக கிருபை பொருத்தின வார்த்தைகளைக் கேட்டு, அவருடைய வல்லமையை கூடவே இருந்து அனுபவித்து, ஆண்டவர் நம்பி பணப்பையை ஒப்படைக்கும் அளவிற்கு அதிகமான கிருபையைப் பெற்றிருந்தும், அற்ப காசிற்கு ஆசைப்பட்டு தன் கிருபையை போக்கடித்தவர் யூதாஸ் காரியோத்து ஆகும். **1 யோவான் 1:1** இல், அப். யோவான் கூறுகிற அனுபவத்தின்படி, **"ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்."**, யூதாஸ்காரியோத்துக்கும் ஆண்டவரோடு கூட ஒரு தனிப்பட்ட ஐக்கியம் இருந்திருக்கும். அவரும் கூட பல வேளைகளில் ஆண்டவரோடு கூட தனியாக பல காரியங்களை உரையாடி இருக்க வேண்டும். **யோவான் 13:29 கூறுகிறது "யூதாஸ் பணப்பையை வைத்துக் கொண்டிருந்தபடியினால், அவன் போய், பண்டிகைக்குத் தேவையானவைகளைக்**

கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது, இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்தார்கள்.", என்ற வார்த்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு, யூதாஸ்காரியோத்து கொண்டிருந்த நெருக்கத்திற்கும், நம்பிக்கைக்கும் சான்றாகும்.

ஆனால் இப்படிப்பட்ட மேன்மையான அழைப்பிற்கு தன்னை அர்ப்பணித்து ஆண்டவரோடு சுற்றித்திரிந்து, அவரால் மாம்ச பிரகாரமாகவும் ஒவ்வொரு நாளும் போஷிக்கப்பட்டு, அவரோடு உண்டு உறங்கி வாழ்ந்திருந்தும், யூதாசுடைய வாழ்க்கை பாதை மாறி போனது. ஆண்டவர் செய்த பல அற்புதங்களை அவர் கண்ணார கண்டும், நித்திய ஜீவனுக்கு இட்டுச் செல்லும் ஆண்டவருடைய கிருபையுள்ள வார்த்தைகளை காதார கேட்டும், யூதாசின் மனநிலையோ நொடிப்பொழுதில் மாறிப்போனது. யோவான் 12: 1-8 வசனங்களில் "பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான். அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து: இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான். அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான். அப்பொழுது இயேசு: இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள். தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன் என்றார்." ஆண்டவர் தான் உயிரோடு எழுப்பிய லாசருவின் வீட்டில், தான் சிலுவைக்கு செல்வதற்கு சில நாட்களுக்கு முன்பாக இரா விருந்தில் பந்தியிருந்தார். மரியாள் தன் சகோதரனை மரித்தோரிலிருந்து எழுப்பின ஆண்டவருக்கு நன்றி கடனாக, விலையேறப்பெற்ற நளத தைலத்தை, அவருடைய பாதங்களில் பூசினாள். இங்கு அவள் நளத தைலத்தின் மதிப்பு எவ்வளவு பெரியதாக இருந்தாலும், ஆண்டவர் தங்கள் வாழ்வில் செய்த நன்மைக்கு முன்பாக அது ஒன்றுமில்லை என்பதை உணர்ந்தவளாய், அதை அவருடைய பாதத்தில் பூசி தன் நன்றியை வெளிப்படுத்தினாள்.

ஆனால் இதையெல்லாம் யூதாஸ் நேரில் பார்த்திருந்தும், அவர் கண்களுக்கு தைலத்தின் பணமதிப்பு தான் தெரிந்ததே ஒழிய, ஆண்டவரின் வல்லமை, கிருபை, பெரியதாக தெரியவில்லை. அதற்கான காரணத்தையும் வசனம் **யோவான் 12:6** கூறுகிறது, ஆம் அவர் இருதயத்தில் தரித்திரைக் குறித்து கரிசனை இல்லை. அவர் திருடன் என வசனமே சாட்சி கூறுகிறது. மேலும் **பணப்பை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனான படியினாலும்**, என்ற வார்த்தையானது யூதாஸ் ஒருவேளை தைலத்தின் மதிப்பான 300 பணம் ஆண்டவருக்கு காணிக்கையாக, தான் சுமக்கும் பணப்பைக்கு வந்திருந்தால் அதைக் குறித்து சந்தோஷப்பட்டிருப்பார். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் அது பூசப்பட்டது அவருக்கு சந்தோஷத்தை தரவில்லை. அவர் ஆண்டவரோடு இருந்த மூன்றரை வருடமும் எந்த மனநிலையில் இருந்திருப்பார் என்பதற்கு இந்நிகழ்வு ஒரு சான்றாகும். அவர் மனநிலை மாத்திரமல்ல, அவரே தம்மை காட்டிக் கொடுக்கப் போகிறவர் என்று ஆண்டவருக்கு தெரிந்திருந்தும், தொடர்ந்து அவரை பயன்படுத்தினார். ஆழ்மனதில் பண ஆசையும், அதை குறுக்கு வழியில் பெற நினைக்கும் திருட்டு வழியிலும், அவர் ஏற்கனவே நடந்து சென்ற படியால், ஆண்டவர் தம் கிருபையால் அவருக்கு பல தருணங்களை மூன்றரை ஆண்டுகளில் வழங்கியும், இறுதியில் அவர் தன் பழைய நிலைக்கே சென்றார். அதிலும் கொடூரமானது அந்த பணத்தைப் பெற அவர் ஆண்டவரையே காட்டிக் கொடுக்க நினைத்ததாகும். **மத்தேயு 26:14-16 வசனங்களில் "அப்பொழுது, பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்: நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள். அதுமுதல் அவன் அவரைக் காட்டிக்கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்."**. மேன்மையான ஒரு ஊழியத்திற்காக ஆண்டவர் தன்னை தெரிந்து கொண்டிருந்தும், ஆண்டவரே அவரோடு கூட இருந்தும், அவருக்கோ அற்ப வெள்ளிக் காசே பெரியதாக இருந்தது.

அதுவே அவரை ஆண்டவருக்கு துரோகியாக மாற்றியது. ஆம் **லூக்கா 6:16 அவரை "துரோகியான யூதாஸ்காரியோத்து"** என்றே அறிமுகப்படுத்துகிறது. இறுதியாக, மேல் வீட்டறையில் **"சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங்கூட அவர் பந்தியிருந்தார். அவர்கள் போஜனம்பண்ணுகையில், அவர்: உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது, அவர்கள் மிகவும் துக்கமடைந்து, அவரை நோக்கி: ஆண்டவரே, நானோ, நானோ? என்று ஒவ்வொருவராய்க் கேட்கத்தொடங்கினார்கள். அவர் பிரதியுத்தரமாக: என்னோடேகூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக்**

காட்டிக்கொடுப்பான். மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்." (மத்தேயு 26:20-24). இங்கு ஆண்டவர் வெளிப்படையாக என்ன நடக்கப் போகிறது என்பதையும், தன்னை காட்டிக் கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றும், இப்படிப்பட்ட மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாய் இருக்கும், என்று எச்சரிக்கையாக கூறிய பிறகும், அடுத்த வசனத்தில் "அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவரை நோக்கி: ரபீ, நானோ? என்றான்; அதற்கு அவர்: நீ சொன்னபடிதான் என்றார்." (மத்தேயு 26:25), இங்கு யூதாஸ் ரபீ, நானோ? என்று கேட்க துணிந்தது, அவர் எந்த அளவிற்கு தன் மனதை கடினப்படுத்தி பொருளாசைக்கு சாய்ந்து செயல்பட தொடங்கினார் என்பதை வெளிப்படுத்துகிறது.

மேலும் யோவான் 13:26-28 வசனங்களில், "இயேசு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார். அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை." ஆம் வசனம் 27 தெளிவாகக் கூறுகிறது சாத்தான் அவனுக்குள் புகுந்தான் என்று. அவர் இருக்கும் இடம், ஆண்டவரோடு இராபோஜனபந்தியில், ஆனால் அவர் தன் ஆத்துமாவையோ சாத்தானுக்கு அர்பணித்து விட்டார். அதனால் தான் ஆண்டவர் "நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்", உண்மையில் ஆண்டவர் சாத்தானைப் பார்த்துதான் உன்னால் முடிந்ததை சீக்கிரமாய் செய் என்றார். காரணம் சாத்தான் செய்ய நினைத்ததை செய்யும் கருவியாய் யூதாஸ் தன் சரீரத்தையும் கூட அர்ப்பணித்து விட்டார். ஆனால் இது ஆண்டவருக்கும், பிசாசிற்கும் தெரிந்ததே தவிர மற்றொருவரும் நடக்கப் போகிறதை சிந்தித்துக் கூட பார்க்கவில்லை.

கெத்செமனே தோட்டத்தில் மத்தேயு 26:45-50 வசனங்களில் "பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது. என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார். அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான்; அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும்

ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். உடனே, அவன் இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான். இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்றார். அப்பொழுது, அவர்கள் கிட்டவந்து, இயேசுவின்மேல் கைபோட்டு, அவரைப் பிடித்தார்கள்.“.

மேலும் மாற்கு 14:41-45 வசனங்களில் “அவர் மூன்றாந்தரம் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; போதும், வேளை வந்தது, இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார். என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார். உடனே, அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான்; அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள், பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டுபோங்கள் என்று அவர்களுக்குக் குறிப்புச் சொல்லியிருந்தான். அவன் வந்தவுடனே, அவரண்டையில் சேர்ந்து: ரபீ, ரபீ, என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான்.“. மேலும் லூக்கா 22:47,48 இல் “அவர் அப்படிப் பேசுகையில் ஜனங்கள் கூட்டமாய் வந்தார்கள். அவர்களுக்கு முன்னே பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் என்பவனும் வந்து, இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான். இயேசு அவனை நோக்கி: யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய் என்றார்.“.

இங்கு யூதாஸ், மாற்கு 14:44 இல் “அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டுபோங்கள் என்று அவர்களுக்குக் குறிப்புச் சொல்லியிருந்தான்.“ என்று கூறப்பட்டுள்ளபடி, மிகவும் நேர்த்தியாய் திட்டமிட்டு, சரியான சமயத்தில் ஆண்டவரை காட்டிக் கொடுத்தது மாத்திரமன்றி, அவரை பிடித்து பத்திரமாய் கொண்டு போங்கள் என்று கூறுவதில் இருந்து, இந்த தருணத்தை விட்டால் பிறகு அவரை இவ்வாறு கைது செய்வது கடினம் என்பது போல் நினைத்து அவரை பத்திரமாய் கொண்டு போகச் சொன்னார். ஆனால் ஆண்டவரோ ஆதி முதல் எல்லாவற்றையும் அறிந்திருந்தார், காரணம், யோவான் 2:24,25 வசனங்களில், “அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும்

**அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை.**“. ஆம் மனுஷர் உள்ளத்தில் இருப்பதை அவர் அறிகிறவர். அதனால்தான் இறுதி தருணமாக, தன்னை காட்டிக்கொடுக்கும் வேளையிலும், **மத்தேயு 26:50 இல் கூறப்பட்டுள்ளபடி “இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய்**“, என்று யூதாஸை நோக்கி கூறியது, நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று ஆண்டவர் கேட்பது போன்றதாகும். ஆதியில், ஆதாமே நீ எங்கு இருக்கிறாய் என்று, சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட ஆதாமை நோக்கி ஆண்டவர் கேட்டது போல் ஆகும்.

மேலும் **லூக்கா 22:48 இல் கூறப்பட்டுள்ளபடி, “இயேசு அவனை நோக்கி: யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய்**“, என்று கூறுவது, எப்படிப்பட்ட கல்நெஞ்சையும் உடைக்கக்கூடிய வார்த்தையாகும். யூதாஸின் மனமும் உடைய தொடங்கியது. **மத்தேயு 27:3,4 வசனங்களில் “அப்பொழுது, அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து: குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள்.**“. இங்கு யூதாஸ் மனஸ்தாப பட்டார் என்பது சரியான காரியம் ஆகும். 30 வெள்ளிக்காசை விட்டெறிந்து விட்டு, ஆண்டவரை மறுதலித்த பேதுரு மனம் கசந்து அழுதது போல், தானும் மனம் கசந்து அழுது ஆண்டவரிடம் வந்திருந்தால், ஒருவேளை, அவர் வாழ்க்கை வேறு விதமாக இருந்திருக்கக்கூடும். ஆனால் அவரோ, குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவம் செய்தேன் என்ற பாவ அறிக்கையை தவறான இடத்தில், தவறான மனிதர் முன்பு செய்தார்.

ஆனால் அவர்களோ அது உன் பாடு என்று கூறி சென்று விட்டனர். இப்பொழுது தான் செய்த பாவத்திற்கு தானே முழு காரணம் என்பதை உணர்ந்த யூதாஸ், தன் ஆவி, ஆத்துமா மற்றும், சரீரத்தை பிசாசிடம் இருந்து மீட்கக்கூடிய ஆண்டவரிடத்தில் வராமல், **“அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான்.“ (மத்தேயு 27:5)**. இங்கு அவருடைய முடிவு பரிதாபமாய் காணப்படுகிறது. ஆண்டவருக்காக செயல்பட்ட கையும், ஓடிய கால்களும், சாத்தானுக்கு இடம் கொடுத்ததால் அமைதியானது. ஆம், இந்நிகழ்வு ஏற்கனவே முன் குறிக்கப்பட்டிருந்தாலும், அதற்கு தன்னை கீழ்ப்படுத்தி, தவறான பாதையில் சென்று, இறுதியில்

பரிதாபமான முடிவை தேடிக்கொண்டது, யூதாஸ் தேவ கிருபையை எவ்வளவாய் போக்கடித்தார் என்பதற்கு ஒரு சான்றாகும்.

அப்போஸ்தலர் 1:15-26 வசனங்களில் "அந்நாட்களிலே, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று: சகோதரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக்குறித்துப் பரிசுத்தஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது. அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான். அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று. இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்தநிலம் என்று அர்த்தங்கொள்ளும் அக்கெல்தமா என்னப்பட்டிருக்கிறது. சங்கீத புஸ்தகத்திலே: அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பானாக என்றும்; அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது. ஆதலால், யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள்முதற்கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும், அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக்குறித்து, எங்களுடனேகூடச் சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றான். அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பும் மத்தியாவும் ஆகிய இவ்விரண்டுபேரையும் நிறுத்தி: எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக, இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்துகொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும் என்று ஜெபம்பண்ணி; பின்பு, அவர்களைக்குறித்துச் சீட்டுப்போட்டார்கள்; சீட்டு மத்தியாவின்பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக்கொள்ளப்பட்டான்.", மேற்கண்ட பேதுருவின் வார்த்தைகள், யூதாஸ் எப்படிப்பட்ட காரியத்திற்காக தெரிந்து கொள்ளப்பட்டார் என்று தெளிவாக விளக்குகிறது. யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும், என்ற வார்த்தையானது அவர் எவ்வளவு பெரிய மேன்மையை இழந்து போனார் என்பதை தெளிவாக கூறுகிறது. அநீதத்தின் கூலியினால் அவருக்கு ஏற்பட்ட முடிவும் வசனம் 1:18 இல் சாட்சியாக கூறப்பட்டுள்ளது. எனவே யூதாஸ்காரியோத்து, தனக்கு

கிருபையாக கொடுக்கப்பட்ட ஆண்டவருடைய ஊழியத்தையும், அப்போஸ்தல பட்டத்தையும், இழந்து போனது மிகவும் துக்கமான ஒன்றாகும்.

இது இன்று, ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறோம் என்று கூறிக்கொண்டு, பிசாசிற்கு ஊழியம் செய்வோருக்கு ஒரு எச்சரிக்கை செய்தியாக காணப்படுகிறது. வெளிப்புற தோற்றத்தில் அவர்கள் ஆண்டவரோடு இருப்பதை போன்று காணப்பட்டாலும், யூதாஸை போல் அவர்கள் ஆவி, ஆத்துமா யாருக்கு வேலை செய்து கொண்டிருக்கிறது என்பது மிக முக்கியமானதாகும். ஒருவேளை இருதயத்தில் அவர்கள் பிசாசுக்கு இடம் கொடுத்திருப்பார்களானால், ஒருநாள் வெளிப்படையாகவே பிசாசின் கிரியைகள், ஆண்டவருக்கு எதிரான செயல்கள், கட்டாயம் அவர்கள் மூலம் வெளிப்படும். அப்பொழுது அவர்கள் முடிவும் யூதாஸை போல் பரிதாபமானதாய் காணப்படும். 3 1/2 வருடம் ஆண்டவரோடு இருந்தும், முடிவு பரிதாபமாய் போனது போல், எத்தனையோ வருடங்கள், எவ்வளவோ ஊழியம் செய்தும், இப்படிப்பட்டவர்களின் முடிவு பரிதாபமாய் போகும். எனவே தேவன் நமக்கு அளிக்கும் கிருபையான வாழ்க்கையை, அருமையான தருணங்களை பயன்படுத்தி, தேவனுக்குள் நம்மை காத்துக் கொண்டு, அவர் தரும் பலன் மேல் நோக்கமாய் இருந்து, நித்திய ஜீவகரை சேர்வோமாக. ஆமென், அல்லேலூயா.

## 120. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 5 (சிம்சோன்)



**எபிரெயர் 11 ஆம்** அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள விசுவாச வீரர்கள் பட்டியலில், சிம்சோன் பெயரும் காணப்படுகின்றது (**எபிரெயர் 11:32**). இவ்வாறாக அவருடைய பெயர் விசுவாச வீரர்கள் பட்டியலில் காணப்பட்டாலும், நியாயாதிபதிகளின் புத்தகத்தில் அவருடைய பிறப்பின் அறிவிப்பு முதல், அவர் வாழ்க்கையின் பல்வேறு தருணங்களில் அவருக்கு கொடுக்கப்பட்ட கிருபையை அவர் சரியாக பயன்படுத்தி இருப்பாரானால், உண்மையில் அவர் தேவனுக்காக எவ்வளவோ பயன்பட்டிருக்க முடியும். ஆனால் அவர் தனக்கு கொடுக்கப்பட்ட கிருபையை போக்கடித்தபடியால், அவருடைய வாழ்க்கை பரிதாபகரமாய் முடிந்தது. எல்லாரும் கண்டு அஞ்சி நடுங்கத்தக்கதாய், தேவனுடைய வல்லமை வெளிப்படையாய் அவருடைய வாழ்வில் காணப்பட்ட பொழுதும், எந்த சரீரத்தின் பெலன், தேவ ஆவியினால் நிரப்பப்பட்டதோ, அதே சரீரத்தை பாவத்திற்கு ஒப்புக்கொடுத்து. தன் ஆவி, ஆத்துமா, மற்றும் சரீரம் ஆகிய மூன்றையும் கறைப்படுத்திக் கொண்டார். அவருடைய வாழ்க்கை நம் எல்லோருக்கும் ஒரு எச்சரிப்பின் செய்தியாய் காணப்படுகிறது. அதை குறித்து இத்தியானத்தில் நாம் தியானிப்போமாக.

புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு எப்படி தேவதூதனால், கன்னி மரியாளுக்கும், யோசேப்பிற்கும் முன்னறிவிக்கப்பட்டதோ, பிள்ளையைப் பற்றிய காரியங்கள் எப்படி

தீர்க்கதரிசனமாய் அவர்களுக்கு முன்னறிவிக்கப்பட்டதோ, அவ்வாறாக **நியாயாதிபதிகள் 13 ஆம்** அதிகாரத்தில் சிம்சோனின் தாயாருக்கும், அவருடைய தகப்பனார் மனோவாவிற்கும், ஒன்றிற்கு இரண்டு முறை, தேவதூதனானவர் தோன்றி, பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும், அதற்கு பெற்றோராகிய அவர்கள் எப்படிப்பட்ட ஒழுக்க நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்பதையும், பிள்ளையை குறித்த தேவத்திட்டமான தேவனுக்கென்று நசரேயனாய் இருப்பதைப் பற்றியும், இஸ்ரவேலை ஒடுக்கும் பெலிஸ்தரின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி ரட்சிக்க போவதை பற்றியும் கூறப்பட்டது (**நியாயாதிபதிகள் 13:5**). இவ்வளவு தெளிவாக, விரிவாக அவருடைய பிறப்பு கூறப்பட்டிருப்பதும், அதை அறிவிக்க வந்த தேவனுடைய தூதனானவர் தம் நாமம் அதிசயம் என்று கூறியதும், அவருடைய பிறப்பை பரலோகம் எவ்வளவு ஆவலாய் உற்று நோக்கியது என்பதை விளங்கச் செய்யும்.

**நியாயாதிபதிகள் 13:24,25** வசனங்களில் **“பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்தப் பிள்ளை வளர்ந்தது; கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். அவன் சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவிலுள்ள தாணின் பாளயத்தில் இருக்கையில் கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவத்துவக்கினார்.“** ஆம் கர்த்தர் அவரை ஆசீர்வதித்தார், மேலும் கர்த்தருடைய ஆவியானவர் தேவத்திட்டத்தை செயல்படுத்தும்படியாய் அவரை ஏவத்துவக்கினார். ஆனால் அவரோ விஷேச விதமாய் தன்னுள் விளங்கும் தேவ மகிமையை உணராமல், சாதாரண வாலிபனை போல சரீர இச்சைக்கு உட்பட்டு பெண்களின் பின்னே செல்ல ஆரம்பித்தார். அடுத்த அதிகாரத்திலேயே, அவர் வாலிப வயதை அடைந்த பொழுது, விருத்தசேதனம் இல்லாத, தன் ஜனத்தை ஒடுக்கும் பெலிஸ்தியரின் குமாரத்திகளில், ஒருவரை விவாகம் பண்ண விரும்பினார், அவர் பெற்றோர், அதை அவருக்கு எடுத்துக்கூறியும் , அவர் அவளை விவாகம் பண்ணக்கூறிய ஒரே காரணம், அவள் என் கண்ணுக்கு பிரியமானவள் என்பதாகும் (**நியாயாதிபதிகள் 14:3**). ஆனால் இதையம் ஆண்டவர் தம் சித்தம் நிறைவேற அனுமதித்தார் என்பதை **நியாயாதிபதிகள் 14:4** கூறுகிறது **“அவன் பெலிஸ்தரிடத்தில் குற்றம் பிடிக்க முகாந்தரம் உண்டாகும்படி, இது கர்த்தரின் செயல் என்று அவன் தாயும் தகப்பனும் அறியாதிருந்தார்கள்; அக்காலத்திலே பெலிஸ்தர் இஸ்ரவேலை ஆண்டார்கள்.“**. **நியாயாதிபதிகள் 14:5,6** வசனங்களில் **“அப்படியே சிம்சோனும் அவன் தாயும் தகப்பனும் திம்னாத்துக்குப் போகப் புறப்பட்டார்கள்; அவர்கள் திம்னாத் ஊர் திராட்சத்தோட்டங்கள்மட்டும் வந்தபோது, இதோ, கெர்ச்சிக்கிற பாலசிங்கம் ஒன்று அவனுக்கு எதிராக வந்தது. அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுகிறதுபோல் கிழித்துப்போட்டான்;**

**ஆனாலும் தான் செய்ததை அவன் தன் தாய் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை.“** இங்கு கர்த்தருடைய ஆவி அவர் மேல் பலமாய் இறங்கிய பொழுது அவருடைய சரீரத்தில் அதன் தாக்கம் காணப்படுகிறது.

ஆனால் இப்படிப்பட்ட பெலத்தைப் பற்றி, குறிப்பாக தன் தாய் தகப்பனுக்கு கூட அவர் அறிவிக்கவில்லை. அவர் விருப்பப்படி காரியங்கள் நடந்தேறிய பொழுதும், திரை மறைவில் தேவத்திட்டமே அவர் வாழ்க்கையில் செயல்பட்டு கொண்டிருந்தது. அதே நேரத்தில் **நியாயாதிபதிகள் 14:17 இல் “விருந்துண்கிற ஏழுநாளும் அவள் அவன் முன்பாக அழுதுகொண்டே இருந்தாள்; ஏழாம்நாளிலே அவள் அவனை அலட்டிக்கொண்டிருந்தபடியால், அதை அவளுக்கு விடுவித்தான்; அப்பொழுது அவள் தன் ஜனங்களுக்கு அந்த விடுகதையை விடுவித்தாள். “.** இங்கு அவரிடம் இருந்த மற்றொரு பலவீனத்தை நாம் காண்கிறோம். முதலாவது கண்களின் இச்சைக்கு முதலிடம் கொடுத்து அந்நிய பெண்ணை விவாகம் செய்ய துணிந்த அவர், இப்பொழுது தன் தாய் தகப்பனுக்கு கூட சொல்லாமல் மறைத்து வைத்து காப்பாற்றிய தேவ பெலனின் ரகசியத்தை, ஒரு பெண் செய்யும் சாதாரண அலட்டலை பொறுத்துக் கொள்ள முடியாமல், அதை அவளுக்கு வெளிப்படுத்தினார். இங்கு அவர் நடந்ததைச் சொல்லாமல் விடுகதைக்கான விடையை மட்டும் சொன்னாலும், இந்த பலவீனமே பின்னாளில், அவருடைய பெலத்தின் ரகசியம் என்னவென்பதையும், இவ்வாறு வெறும் ஒரு பெண்ணின் சிநேகத்திற்காக வெளிப்படையாய் சொல்ல வைத்தது. அவர் இவ்வாறு விடுகதையை விடுவித்ததன் விளைவு, அவர் எந்த கனவோடு அந்த பெண்ணை விவாகம் பண்ண நினைத்தாரோ, அது யாவும் சின்னாபின்னமாய் போய், இறுதியில் அவர் நேசித்த பெண்ணும் அவள் வீட்டாரும், அவளுடைய சொந்த ஜனங்களாலேயே கொல்லப்பட்டனர்.

தேவத் திட்டத்தின்படி பெலிஸ்தியரை பகைக்கவும், அவர்களை அழிக்கவும், இப்படிப்பட்ட காரியங்கள் அவர் வாழ்க்கையில் தேவனால் அனுமதிக்கப்பட்டது. **நியாயாதிபதிகள் 15:7,8** வசனங்களில் **“அப்பொழுது சிம்சோன் அவர்களை நோக்கி: நீங்கள் இப்படிச் செய்தபடியால் நான் உங்கள் கையிலே பழிவாங்கினாலொழிய இளைப்பாறேன் என்று சொல்லி, அவர்களைச் சின்னபின்னமாகச் சங்காரம்பண்ணி, பின்பு போய், ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திலே குடியிருந்தான்.“** இங்கு ஆண்டவர் சிம்சோன் வழி மாறி போனாலும், அதையும் தம் திட்டம் நிறைவேற பயன்படுத்தினார். இந்த சம்பவங்களின் தொடர்ச்சியாக, **நியாயாதிபதிகள் 15:11-17** வசனங்களில் **“அப்பொழுது யூதாவிலே மூவாயிரம்பேர் ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திற்குப் போய்: பெலிஸ்தர் நம்மை ஆளுகிறார்கள் என்று தெரியாதா? பின்னை ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய் என்று சிம்சோனிடத்தில் சொன்னார்கள். அதற்கு**

**அவன்: அவர்கள் எனக்குச் செய்தபடியே நானும் அவர்களுக்குச் செய்தேன் என்றான். அப்பொழுது அவர்கள்: உன்னைக் கட்டி, பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுக்க வந்திருக்கிறோம் என்றார்கள். அதற்குச் சிம்சோன்: நீங்களே என்மேல் விழுகிறதில்லை என்று எனக்கு ஆணையிடுங்கள் என்றான். அதற்கு அவர்கள்: நாங்கள் உன்னை இறுகக்கட்டி, அவர்கள் கையில் ஒப்புக்கொடுப்போமே அல்லாமல், உன்னைக் கொன்றுபோடமாட்டோம் என்று சொல்லி, இரண்டு புதுக் கயிறுகளாலே அவனைக் கட்டி, கன்மலையிலிருந்து கொண்டுபோனார்கள். அவன் லேகிவரைக்கும் வந்து சேர்ந்தபோது, பெலிஸ்தர் அவனுக்கு விரோதமாய் ஆரவாரம் பண்ணினார்கள்; அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு அறுந்துபோயிற்று. உடனே அவன் ஒரு கழுதையின் பச்சைத் தாடையெலும்பைக் கண்டு, தன் கையை நீட்டி அதை எடுத்து, அதினாலே ஆயிரம் பேரைக் கொன்றுபோட்டான். அப்பொழுது சிம்சோன்: கழுதையின் தாடையெலும்பினால் குவியல் குவியலாகப் பட்டுக்கிடக்கிறார்கள், கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம்பேரைக் கொன்றேன் என்றான். அப்படிச் சொல்லித் தீர்ந்தபின்பு, தன் கையில் இருந்த தாடையெலும்பை எறிந்துவிட்டு, அவ்விடத்திற்கு ராமாத்லேகி என்று பேரிட்டான்.“**

மேற்கண்ட வசனங்களில் மூலம், பெலிஸ்தியரின் கையில் இருந்து, இஸ்ரவேல் மக்களை விடுவிக்கும் இரட்சகனாய் சிம்சோனை, ஆண்டவர் தெரிந்து கொண்டார் என்பதை வெளிப்படுத்தினார். மேலும் **நியாயாதிபதிகள் 15:18,19** வசனங்களில் **“அவன் மிகவும் தாகமடைந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: தேவரீர் உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க, இப்பொழுது நான் தாகத்தினால் செத்து, விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையிலே விழவேண்டுமோ என்றான். அப்பொழுது தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணினார்; அதிலிருந்து தண்ணீர் ஓடிவந்தது; அவன் குடித்தபோது அவன் உயிர் திரும்ப வந்தது, அவன் பிழைத்தான்; ஆனபடியால் அதற்கு எந்நக்கோரி என்று பேரிட்டான்; அது இந்நாள்வரையும் லேகியில் இருக்கிறது.“**. இங்கு தன் திட்டத்தை நிறைவேற்றிய சிம்சோனின் வேண்டுதலுக்கு ஆண்டவர் செவி கொடுத்து, அற்புதம் செய்தார். இங்கு நாம் முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டியது, **“உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க“** என்ற வார்த்தையானது, அவரைக் குறித்த தேவத்திட்டத்தை அவர் உணர்ந்து கொண்டது மாத்திரமன்றி, அதற்காக செயலாற்றவும் அவர் தன்னை அர்ப்பணித்ததை காணலாம். மேலும்

தேவனோடு நேரடியாக பேசி, அவர் கரத்தின் மூலம் அற்புதத்தை பெற்றுக் கொள்ளும் அளவிற்கு தேவ உறவும் அவருக்கு கிடைத்தது. இதனால் இதற்கு அடுத்த வசனம் **நியாயாதிபதிகள் 15:20** கூறுகிறது **“அவன் பெலிஸ்தரின் நாட்களில் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தான்.“** என்று.

இப்படியாக ஆண்டவர் சிம்சோனின் வாழ்வில் பல்வேறு கிருபைகளை தந்து, அவரை குறித்த தேவ நோக்கத்தை வெளிப்படுத்தி, இஸ்ரவேலுக்கு இரட்சகனாகவும், நியாயாதிபதியாகவும் அவரை ஏற்படுத்தினார். ஒருவேளை அவர் இதை உணர்ந்து தன் வாழ்க்கையில் தேவ திட்டம் நிறைவேற, தன் பிறப்பிற்கு முன்பாகவே கூறப்பட்ட காரியங்கள் தன் வாழ்வில் நிறைவேற அனுமதித்திருப் பாரானால், அவர் வாழ்க்கை மகிமையான பராக்கிரமம் நிறைந்த ஒன்றாக மாறியிருக்கும். ஆனால் அவரோ தனக்கு கொடுக்கப்பட்ட கிருபையை போக்கடித்தவராய் தன் வழியை இன்னும் கெடுத்துக்கொண்டார். இதை பற்றி நாம் தொடர்ந்து அடுத்த பாகத்தில் தியானிப்போமாக, ஆமென், அல்லேலூயா.

## 121. கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 6 (சிம்சோன் தொடர்ச்சி)



இத்தியானத்தை வாசிப்பதற்கு முன்பாக, இதன் முந்திய பாகத்தை தியானிக்கும்படியாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தேவ தூதனானவர் மூலமாக, பிறப்பை பற்றியும், வாழவேண்டிய வாழ்க்கை தரத்தைப் பற்றியும், வாழ்க்கையை குறித்த தேவ திட்டம் என்பவென்பதையும், சிம்சோனின் பெற்றோருக்கு, அவர் பிறப்பதற்கு முன்பாகவே அறிவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட தேவ திட்டத்தோடு பிறந்த அவர், தேவ ஆவியானவரின் நிரப்புதலையும், அதன்மூலம் தன் ஆவி, ஆத்துமாவில் மாத்திரமல்ல, தன் சரீரத்திலும் தேவ வல்லமையை உணர்ந்தபொழுதும், அற்ப சரீர இச்சைகளுக்காக, தன்னை குறித்த தேவ திட்டத்தை மறந்து வழி விலகி போனார். ஆயினும், ஆண்டவர் தம் கிருபையை அவருக்கு அளித்து, இஸ்ரவேலின் நியாயாதிபதியாய் இருந்து, பெலிஸ்தியரின் கைக்கு தம் மக்களான இஸ்ரவேல் மக்களை காத்து இரட்சிக்க வேண்டும் என்ற தேவ திட்டத்தை வெளிப்படுத்தி, அவரை நியாயாதியாய் வைத்தார். ஆனாலும் சிம்சோன் இவ்வாறாக தேவனுக்காக மோசேயை போல, யோசுவாவை போல தனக்கு கொடுக்கபட்டிருக்கும் மேன்மையான ஊழியத்தை செய்யாமல், மறுபடியும் மறுபடியும், மாம்ச இச்சையில் வீழ்ந்து, தேவ கிருபையை போக்கடித்து போட்டார். அவற்றில் சில காரியங்களை நாம் முந்தின பாகத்தில் (பாகம் 5 இல்) கண்டோம். தொடர்ந்து எவ்வாறாக அவருடைய கீழ்படியாமை, இறுதியில் அவர் வாழ்க்கையை பரிதாபகரமாக முடிய செய்தது என்பதை இத்தியானத்தில் காண்போம்.

**நியாயாதிபதிகள் 15:20 இல் "அவன் பெலிஸ்தரின் நாட்களில் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தான்."**, இவ்வாறாக அந்த அதிகாரத்தின் இறுதியில் கூறப்பட்டிருக்க, அடுத்த அதிகாரத்தின் முதல் வசனமே கூறுகிறது **"பின்பு சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்." (நியாயாதிபதிகள் 16:1)** என்று. இது மிகவும் வேதனையான ஒன்றாகும். தேவ ஆவியினால் நிரப்பப்பட்டு, அதன் வல்லமையை தன் சரீரத்தில் உணர்கிற அவர், தன் சரீரத்தை கேட்டிற்கு ஒப்புக்கொடுத்தார். முதலாவது வெறும் கண்களின் இச்சையில் ஆரம்பித்த பலவீனம், இப்பொழுது அவரை முழுவதும் ஆட்கொண்டது. **நியாயாதிபதிகள் 16:4 கூறுகிறது "அதற்குப்பின்பு அவன் சோரேக் ஆற்றங்கரையில் இருக்கிற தெலீலாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான்."**. இது அவர் வாழ்வின் மிக மோசமான நிலையை காண்பிக்கிறது. இஸ்ரவேலின் நியாயதிபதியாய் இருக்கும் கிருபையை ஆண்டவர் தந்த பொழுதும், அவரோ கேடான வழியில் சென்று, தன் ஆவி, ஆத்மா, மற்றும் சரீரம் ஆகிய அனைத்தையும் கறை படுத்தினார். தேவத்திட்டம், தேவ உறவு ஆகிய இவைகளை விட்டு, வெறும் சரீர இச்சையை நிறைவேற்றிக் கொள்ள, தினம் தினம் துடித்த அவரை ஆண்டவர் காப்பாற்ற நினைத்தார். எந்த பெண்ணை நம்பி, அவள் சிநேகத்தின் மூலமாக, தன் இச்சையை நிறைவேற்றிக் கொள்ள நினைத்தாரோ, அவளையே பிசாசு அவரை அழிக்க பயன்படுத்தினான்.

**நியாயாதிபதிகள் 16:15-17 வசனங்களில் "அப்பொழுது அவள் அவனைப் பார்த்து: உன் இருதயம் என்னோடு இராதிருக்க, உன்னைச் சிநேகிக்கிறேன் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நீ இந்த மூன்றுவிசையும் என்னைப் பரியாசம்பண்ணினாய் அல்லவா, உன்னுடைய மகாபலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்று எனக்குச் சொல்லாமற்போனாயே என்று சொல்லி, இப்படி அவனைத் தினம்தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக் கொண்டிருக்கிறதினால், சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு, தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி: சவரகன் கத்தி என் தலையின்மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னை விட்டுப்போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப்போலும் ஆவேன் என்று அவளிடத்தில் சொன்னான்."**. இங்கு இறுதியாக, எந்த தேவ ரகசியத்தை அவர் பாதுகாக்க வேண்டுமோ, அதை அற்ப இச்சைக்காக வெளிப்படுத்தினார். இது அவர் தேவ ரகசியத்தை மறைத்து வைக்க முயற்சி செய்தும், இறுதியில் முன்பு ஒரு பெண்ணின் சாதாரண அலட்டலை தாங்க முடியாமல் எப்படி விடுகதையை விடுவித்தாரோ, அதை போல் இங்கு இந்த பெண்ணின் அலட்டலை தாங்க முடியாமல், **சாகத்தக்கதாய் தன்**

**ஆத்மாவில் விசனப்பட்டு** தேவ ரகசியத்தையே வெளிப்படுத்தினார். ஒருவேளை அவர் தன் வாழ்வில் கொடுக்கப்பட்டிருக்கும் தேவ கிருபையையும், தேவ உறவையும், இஸ்ரவேலின் நியாயாதிபதி என்னும் ஸ்தானத்தையும் நினைத்து பார்த்திருப்பாரனால், அவர் அந்த பெண்ணை விட்டு விலகிச் சென்றிருக்கலாம். ஆனால் தனக்கு கொடுக்கப்பட்ட கிருபையை, அற்ப இச்சைக்காக போக்கடித்துப் போட்டார். அதன் விளைவு அருமையான அவருடைய ஜீவனும் சில வெள்ளி காசுக்காக விற்கப்பட்டது.

**நியாயாதிபதிகள் 16:21 கூறுகிறது "பெலிஸ்தர் அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனைக் காசாவுக்குக் கொண்டுபோய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குபோட்டுச் சிறைச்சாலையிலே மாவரைத்துக்கொண்டிருக்க வைத்தார்கள்."**. தேவ திட்டத்தின்படி அவருடைய பிறப்பில் முன் அறிவிக்கப்பட்ட காரியங்கள் நிறைவேறுவதற்கு பதிலாக, இங்கு அவர் வாழ்க்கை பரிதாபகரமான ஒரு நிலைக்குள் தள்ளப்பட்டது. **நியாயாதிபதிகள் 16:23-25 வசனங்கள் கூறுகிறது "பெலிஸ்தரின் பிரபுக்கள்: நம்முடைய பகைஞனாகிய சிம்சோனை நம்முடைய தேவன் நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லி, தங்கள் தேவனாகிய தாகோனுக்கு ஒரு பெரிய பலிசெலுத்தவும், சந்தோஷம் கொண்டாடவும் கூடிவந்தார்கள். ஜனங்கள் அவனைக் கண்டவுடனே: நம்முடைய தேசத்தைப் பாழாக்கி, நம்மில் அநேகரைக் கொன்றுபோட்ட நம்முடைய பகைஞனை நம்முடைய தேவன் நமது கையில் ஒப்புக்கொடுத்தார் என்றுசொல்லி, தங்கள் தேவனைப் புகழ்ந்தார்கள். இப்படி அவர்கள் மனமகிழ்ச்சியாயிருக்கும்போது: நமக்கு முன்பாக வேடிக்கைகாட்டும்படிக்கு, சிம்சோனைக் கூட்டிக்கொண்டு வாருங்கள் என்றார்கள்; அப்பொழுது சிம்சோனைச் சிறைச்சாலையிலிருந்து கூட்டிக்கொண்டு வந்தார்கள், அவர்களுக்கு முன்பாக வேடிக்கை காட்டினான்; அவனைத் தூண்களுக்கு நடுவே நிறுத்தினார்கள்."**. இங்கு அவர் வாழ்வின் மிக பரிதாபகரமான சூழ்நிலை காணப்படுகிறது. பெலிஸ்தியர் தங்கள் நரகலான விக்கிரக தெய்வங்கள், தங்களை ரட்சித்தது என்று எண்ணி அவற்றை புகழவும், சிம்சோனை வேடிக்கையாகவும் நினைத்தனர்.

ஆனால் சிம்சோனுக்கு தெரியும் தன் தவற்றினால், பாவத்தினாலேயே, இங்கு இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது என்பது. இப்பொழுது அவர் தன் இருதயத்தில் தேவ கிருபையை எண்ணினார். இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஆண்டவரை நோக்கி கூப்பிட்டால், ஆண்டவர் தனக்கு செவிக்கொடுப்பார் என்பதை அவர் உணர்ந்தார். ஆனால் அதே வேளையில், அவர் வேண்டின ஒரு காரியம், இனிமேலும் அவர் பூமியில் இந்த பாவ சரீரத்தோடு இப்பூமியில் வாழ விரும்பவில்லை. எனவே தன் மரணத்தின் தருவாயிலாவது தேவநோக்கத்தை நிறைவேற்ற எண்ணி, **"அந்த வீடு**

**புருஷராலும் ஸ்திரீகளாலும் நிறைந்திருந்தது; அங்கே பெலிஸ்தரின் சகல பிரபுக்களும், வீட்டின்மேல் புருஷரும் ஸ்திரீகளுமாக ஏறக்குறைய மூவாயிரம்பேர், சிம்சோன் வேடிக்கை காட்டுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழிவாங்கும்படிக்கு, இந்த ஒருவிசைமாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே, பலப்படுத்தும் என்று சொல்லி, சிம்சோன் அந்த வீட்டைத் தாங்கி நிற்கிற இரண்டு நடுத்தூண்களில், ஒன்றைத் தன் வலதுகையினாலும், மற்றொன்றைத் தன் இடதுகையினாலும் பிடித்துக்கொண்டு, என் ஜீவன் பெலிஸ்தரோடே கூட மடியக்கடவது என்று சொல்லி, பலமாய்ச் சாய்க்க, அந்த வீடு அதில் இருந்த பிரபுக்கள்மேலும் எல்லா ஜனங்கள்மேலும் விழுந்தது; இவ்விதமாய் அவன் உயிரோடிருக்கையில் அவனால் கொல்லப்பட்டவர்களைப் பார்க்கிலும், அவன் சாகும்போது அவனால் கொல்லப்பட்டவர்கள் அதிகமாயிருந்தார்கள்.“ (நியாயாதிபதிகள் 16:27-30).** ஆம் அவர் உயிரோடு இருக்கையில், அவரால் கொல்லப்பட்டவர்களை பார்க்கிலும், அவர் மடியும் பொழுது அவரால் கொல்லப்பட்டவர்கள் அதிகம் என்பது, உயிரோடு இருந்து செய்ய முடியாததை, தன் சரீர அழிவின் (மரணம்) மூலமாக செய்து முடித்தார். ஆனால் அவரைக் குறித்து தேவத்திட்டம் இதுவல்ல. அவர் நியாதிபதியாய் இருந்து இஸ்ரவேலை பெலிஸ்தியரின் கையில் இருந்து ரட்சிக்க வேண்டும் என்பதே ஆகும். ஆனால் அவருடைய சரீர இச்சைக்கேற்ற பாவங்கள், அவரை தேவனுக்காக செயல்பட முடியாமல் செய்தது. மிகுதியான கிருபையை பெற்றிருந்தும், அதை செயல்படுத்த முடியாமல், தன் மரணத்தை தானே தேடிக்கொண்டார். ஆண்டவர் இதையும் இறுதியாக, அவர் வாழ்க்கையில் அனுமதித்தார். இங்கு அருமையாக ஆண்டவர் சிம்சோனுக்கு, ஒரு திட்டத்தை வைத்திருந்தும், அதை அவர் வாழ்க்கையில் செயல்படுத்த தொடங்கியும், அதற்கு ஏற்ப தன் ஆவி ஆத்துமா மற்றும் சரீரத்தை அவர் பணிக்கான ஒப்புக்கொடாமல், தன் சரீர இச்சைக்கு இடம் கொடுத்து தேவ கிருபையை போக்கடித்தார்.

இன்றும் கூட ஆண்டவர் சிம்சோனை போல எத்தனையோ வாலிபர்களுக்கு தம்முடைய அனாதி தீர்மானத்தின்படி, இந்த கடைசி காலங்களில், தம்முடைய வல்லமையை, கிருபையை, அளவில்லாமல் அவர்கள் மேல் பொழிந்து, அவர்களை தேவனுக்கென பிரகாசிக்க செய்ய, ஆண்டவர் செயல்படுகிறதை, நாம் கண்கூடாக இன்று, அநேக ஊடகங்களின் வாயிலாக காணலாம். இப்படிப்பட்ட கிருபையைப் பெற்ற வாலிபர்கள், தங்களுக்கு கொடுக்கப்பட்ட கிருபையை, சரியான விதத்தில் பயன்படுத்துவார்களானால், நிச்சயமாக இந்த பதினோராம் மணி நேரத்தில், வேலையை துரிதமாய் முடிக்க வேண்டிய இத்தருணத்தில், ஆண்டவருக்காக ஒரு பெரிய

அறுவடையை அவர்கள் அறுப்பார்கள். ஆனால் அதே நேரத்தில் பிசாசு, அன்று சிம்சோனை இடறப்பண்ணினது போல, இன்றும் அநேக கிருபை பெற்ற, தேவ ஊழியர்களின் சந்ததியில் வந்த வாலிபர்களை உலக மாயங்கள், இச்சைகள், கீழ்ப்படியாமை ஆகிய இவைகளுக்கு உள்ளாய் தள்ளி, அவர்கள் தேவனுக்கென செயலாற்ற முடியாதவாறு, மேலும் அவர்கள் தங்கள் வாழ்க்கையே அழித்துக் கொள்ளும் அளவிற்கு, அவர்கள் வாழ்வில் இடறல்களை கொண்டு வருகிறான்.

இதனால் இன்று அநேக வாலிபர்கள், ஆண்டவருக்காக எழும்பி இருந்தும், தேவன் நாமம் பரம்பி மகிமைப்பட முடியாமல் போகிறது. காரணம் அவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள கிருபையை சரியாக பயன்படுத்தாமல், சிம்சோனை போல அதை போக்கடித்து போடுகின்றனர். எனவே இப்படிப்பட்ட வாலிபர்களுக்காய் நாம் ஒவ்வொருவரும், ஆண்டவரிடம் மன்றாட வேண்டும். அவர்கள் மூலமாக தேவ திட்டம் வெளிப்பட, அவர்களோடு இணைந்து செயல்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒன்றையே ஆண்டவரும் எதிர்பார்க்கிறார். எனவே சிம்சோனை போல பரிதாபகரமாய் வாலிபர்களின் ஓட்டம் முடியாமல், அவர்கள் தேவனுக்காக எழும்பி பிரகாசிக்கும் ஒளி சுடர்களாய் காணப்பட, ஆண்டவர் தாமே கிருபை பாராட்டுவாராக. ஆமென், அல்லேலுயா.

## 122. காலடி தெரியாமல் போனாலும் கர்த்தர் என் முன்னே உண்டு



சில நாட்களுக்கு முன்பு, என் மகள் என்னிடத்தில் ஒரு குறிப்பிட்ட விளையாட்டுப் பொருள் வாங்கித் தரும்படியாய் கேட்டாள். நானும் வாங்கி தருவதாக கூறி அவளைக் கடை திறவுக்கு அழைத்துச் சென்றேன். ஆனால் நான் எந்த கடையில் அது கிடைக்கும் என நினைத்தேனோ அக்கடை மூடி இருந்தது. மேலும் அது ஒரு பண்டிகைக்கு முந்தின நாள் என்பதால், கடைத்தெரு முழுவதும் நடப்பதற்கு கூட வழியில்லாமல் வண்டிகளும், மக்கள் கூட்டமும் நிரம்பி வழிந்தது. என் கரம் பிடித்து நடந்து வந்த என் சிறிய மகளோ, கடை மூடப்பட்டு இருப்பதை கண்டு, நடப்பதற்கு கடினமாய் இருந்தாலும் அப்பா தான் கேட்ட விளையாட்டு பொருள் வாங்கித் தருவார், என்ற நம்பிக்கையோடு வந்த அவளுக்கு ஏமாற்றமாய் இருந்தது. ஆனால் நான் இன்னும் சிறிது தூரம் போனால் வேறொரு கடை உண்டு, அங்கு சென்று பார்க்கலாம் என்று எண்ணினேன். ஆனால் வாகன நெரிசல் காரணமாக, நடப்பதற்கு கடினமாய் இருந்ததால், சிறிய சந்து வழியாய் சுற்றிச் சென்று கடையை அடைய நினைத்தேன். ஆனால் அது எதுவும் அறியாத என் மகள், விளையாட்டு பொருள் கடையும் இல்லை, ஆனால் அப்பா தான் அறியாத பாதை வழியாய் தொடர்ந்து நடத்திச் செல்கிறாரே, இந்த சிறிய சந்து வழியான பாதையில் எந்த கடையும் இல்லையே, வெகு தூரம் நடக்கிறோமே என்று எதையும் நினைக்காமல், தொடர்ந்து என்னுடன் நடந்து வந்தாள். ஒருவேளை அவள் முகத்தில் கேள்விகள் இருந்தாலும், தொடர்ந்து என்னோடு நடந்து வந்தாள். என்ன ஆச்சரியம் நான் நினைத்த

கடைக்கு செல்லும் முன்பாகவே, பண்டிகை காலமானதால் தெருவோரமாய் ஒரு பெரிய விளையாட்டு கடையே போடப்பட்டிருந்தது. என் மகள் கேட்ட விளையாட்டு பொருள் கண்ணனுக்கு நேராய் படும்படியாய் அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. என் மகள் அதை கண்டவுடன் வெகு சந்தோசமாய் அந்த பொருளை வாங்கிக்கொண்டு, அதை வாங்கின சந்தோஷத்தில் எந்த களைப்பும் இன்றி மறுபடியும் வீட்டிற்கு என் கரம் பிடித்து நடந்து வந்தாள். இது எனக்கே வியப்பாய் இருந்தது. ஏனெனில் நான் என் மகளை அவ்வளவு தூரம் அழைத்துச் செல்லும் பொழுதும், அந்தப் பொருள் கிடைக்குமோ என்பது எனக்கே சந்தேகமாய் தான் இருந்தது. இவ்வளவு தூரம் அவள் கால் வலிக்க, இந்த நெரிசலில் நடத்தி வர வைத்து, இறுதியில் விளையாட்டுப் பொருள் இல்லை என்றால் அவள் வேதனைப்படுவாளே என்று நினைத்தேன். ஆனால் எல்லாம் நலமாக முடிந்தது.

நான் வீடு வந்து சேர்ந்து என் மகள் விளையாடுவதை பார்த்துக் கொண்டிருந்த பொழுது, ஆண்டவர் என்னிடம் சொன்னார், நானும் இப்படித்தான் உன்னை தினந்தோறும் உன்னுடைய பல்வேறு எதிர்பார்ப்புகள் மத்தியில் உன்னை நடத்தி செல்கிறேன் என்று. நம் வாழ்க்கையில் ஆண்டவர் சில நன்மைகளை செய்ய அதை எதிர்பார்த்து, அவர் சித்தப்படி அவரை நோக்கி வேண்டும் பொழுது, ஆண்டவரும் நம்மை அதை பெரும்படியாய் நடத்தி செல்வதை உணர்கிறோம். ஒரு நன்மையை பெற்றுக்கொள்ள நம்மை இவ்வழியாய் நடத்தி, இப்படிப்பட்ட மனிதர்கள் மூலமாக அல்லது சூழ்நிலை மூலமாக ஆண்டவர் ஆசீர்வதிப்பார் என்று நினைக்கும் பொழுது, எதிர்பாராத விதமாக நாம் எதுவெல்லாம் சாதகமாக இருக்கும் என்று நினைக்கிறோமோ, அதுவெல்லாம் நமக்கு எதிராக மாறி, நாம் அடைய வேண்டிய நன்மையை அடைய முடியாமல் போகிறது. எனவே நன்மை வருவதற்கு சாதகம் இல்லாத சூழ்நிலையில், ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம், அவர் கரத்தைப் பிடித்து தொடர்ந்து அவரை நம்பி நடந்து செல்வதை மட்டுமே. தொடர்ந்து நடக்கும் பாதை கடினமான பாதையாய் இருந்தாலும், நன்மை கிடைக்க வாய்ப்பே இல்லாத குறுகலான பாதையாக இருந்தாலும், என் தகப்பன் எனக்கு சொன்னதை நிச்சயம் செய்து நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையோடு அவர் கரம் பிடித்துச் செல்லும் பொழுது, ஆச்சரிய விதமாய் நாம் நினையாத விதத்தில், நாம் எதிர்பார்த்த நன்மையை, நாம் நினைப்பதற்கும், வேண்டிக் கொள்கிறதற்கு, அதிகமாய் அவர் செய்ய வல்லவர் என்பதை, என் மனம் உணர்ந்து பூரித்தது. ஆம் விளையாட்டுப் பொருள் கிடைக்குமா என்று எனக்கே தெரியாத பட்சத்திலும், என் மகள் என்னோடு வந்தாள். ஆனால் நாம் பரம தகப்பனோ அப்படி அல்ல, அவர் ஆதியும் அந்தமுமானவர், அல்பாவும் ஓமெகாவுமானவர், அவர் நடத்திச் சென்றால், அதற்கு முடிவு தெரியாமல் நடத்திச் செல்ல மாட்டார். எனவே பொல்லாதவர்களாகிய நாம், நம் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும் பொழுது, பரம பிதாவானவர் தம்மையே நம்பி

இருப்பர் வாழ்வில் நிச்சயம் அற்புதம் செய்வார். அதை ஏற்ற காலத்தில் செய்து முடிப்பார் என்ற சத்தியத்தை ஆண்டவர் எனது இருதயத்தில் உணர்த்தினார். ஆண்டவர் இந்த சின்ன சம்பவத்தின் மூலம், அவர் அன்பையும், அவருடைய கரம்பிடித்து நடந்து செல்வதின் மேன்மையையும் எண்ணி, அவரை உளமாற துதிக்கிறேன். ஆமென், அல்லேலூயா.

## 123. கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 1 - சகேயு




இதற்கு முன்பு தியானித்த தியானங்களில், கிருபையை போக்கடித்தவர்கள் பற்றி கண்டோம். இவர்கள் தேவன் தங்களுக்கு கிருபையாய் தந்தருளின மேன்மையான ஆசீர்வாதங்கள், நன்மைகள், இரட்சிப்பு, அதிகாரங்கள் ஆகியவற்றை அற்ப காரணங்களுக்காக இழந்து போனதை தியானிதோம். அதே வேளையில் தேவன் தங்கள் வாழ்வில் கொடுத்த ஒரு சிறு கிருபையை, அருமையாய் பயன்படுத்தி மேன்மையான காரியங்களை கண்டடைந்தவர்களும் உண்டு. அவர்களை பற்றி நாம் இப்பொழுது தியானிப்போம். தேவன் பல்வேறு விதங்களில் ஒரு தனி மனிதனின் வாழ்வில் இடைப்பட்டு, தமது கிருபையை அவனுக்கு வெளிப்படுத்தி காண்பிக்கிறார். அதை சரியாய் உணர்ந்து கொண்டவர்கள், பற்றி பிடித்துக் 222கொண்டவர்கள் தங்கள் வாழ்வில் அருமையான காரியங்களை இறைவனிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றனர். அவ்வாறாக பெற்றுக் கொண்டதன் மூலம், அவர்கள் வாழ்க்கையே தலைகீழாக மாறிவிடுகிறது. இருளின் அதிகாரத்தில் இருந்த அவர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் மாறிவிடுகின்றனர். அப்படிப்பட்டவர்களின் ஒருவர் தான் நாம் **லூக்கா 19** ஆம் அதிகாரத்தில் காணும் சகேயு ஆகும். சகேயுவை குறித்த சம்பவம் **லூக்கா 19:1-10** வசனங்களில் மிக சுருக்கமாய் கூறப்பட்டிருந்தாலும், ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவிடம் அவர் பெற்றுக் கொண்டது மிக மேன்மையான ஒன்றாகும். ஆம், **“இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.“ (லூக்கா 19:9,10)** என்று சகேயுவை குறித்து கூறினார்.

இதற்காக அவர் செய்தது என்ன என்பதை பின் வருமாறு தியானிப்போம். **லூக்கா 19:1** ஆம் வசனம் கூறுகிறது **"அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்துபோகையில்,"**. ஆம் இதே எரிகோவில் வாழ்ந்த, அந்நிய பெண்ணாகிய, வேசியாகிய ராகாபுக்கு, பழைய ஏற்பாட்டு காலத்தில், ஒரு சிறு கீழ்ப்படிதலின் மூலம் மிகப்பெரிய இரட்சிப்பு கிடைத்தது. அது மட்டுமல்லாமல் **மத்தேயு 1:5** இல் கூறப்பட்டுள்ள, ஆண்டவருடைய சந்ததியின் அட்டவணையில், அவளுடைய பெயரும் இடம் பெற்றது. இன்று அதே எரிகோவின் வழியாய் மற்றொரு முறை ஆண்டவர் கடந்து செல்கிறார். **லூக்கா 19:2** ஆம் வசனம் கூறுகிறது **"ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன்,"** என்று. ஆம் சகேயு யூதராய் இருந்தும், யூத மக்களின் வரிப்பணத்தை, அவர்களை ஆளும் ரோம அரசிடம் சேர்க்கும், வரி வசூலிக்கும் உத்தியோகத்தில் இருந்தபடியினால், அக்காலத்தில் யூதர்கள் இப்படியாக ரோமா அரசாங்கத்திற்காக வேலை செய்பவரை பாவிகளுக்கு நிகராகவே பார்த்தனர். காரணம் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகவே அவர்கள் செயல்பட்டதால்தான். அதிலும் சகேயு, அப்படிப்பட்ட ஆயக்காரர்களுக்கு எல்லாம் தலைவனாக வேறு இருந்தார். இதனால் அநியாய வரியின் மூலம், தேவனுக்கு காணிக்கையாக செல்ல வேண்டிய இஸ்ரவேலரின் செல்வங்களை, ரோம அரசாங்கத்திற்கு சென்று சேர்த்ததால் சகேயுவை அனைவரும் பகைத்தனர். ஆனால் இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்த சகேயுவோ, ஐஸ்வர்யவானாய், ரோம அரசாங்கத்தின் செல்வாக்கு பெற்றவராய் இருந்தார். எனவே சாதாரண யூதர்கள் இப்படிப்பட்டவர்களை பகைத்து, அவர்களுடைய வீடுகளுக்கு செல்வதை கூட தவிர்த்து வந்தனர். அதே நேரத்தில் இவை எதை குறித்தும் சகேயு கவலைப்படாமல், ஐஸ்வர்யத்தை குறித்தும், ரோம அரசாங்கத்தின் மூலம் தனக்கு கிடைத்த ஆயக்காரர்களுக்கு தலைவன் என்ற அதிகாரத்தைக் குறித்தும், திருப்தி அடைந்தவராய் வாழ்ந்து வந்தார். இப்படிப்பட்ட சூழ்நிலை மத்தியிலேயே இயேசு அவர் இருக்கும் ஊர் வழியாய் கடந்து சென்றார்.

**லூக்கா 19:3,4** வசனங்களில் **"இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்."**. ஆம், சகேயுவுக்கு ஒரு சின்ன ஆசை ஏற்படுகிறது. அவர், இயேசு எப்படிப்பட்டவரோ என்று காண விரும்பினார். இவ்வளவு காலம் தன் ஐஸ்வர்யம், அதிகாரம், ஆகியவற்றில் திருப்தி கொண்டு, தன் சொந்த மக்களை கூட ஒரு பொருட்டாக எண்ணாமல், தேவ நியமித்தற்கு எதிராக, வரி வசூல் செய்து அதை அந்நியர்களுக்கு (ரோமர்) கொண்டு சேர்த்து வந்த சகேயு, அவரைக் காண ஆசையாய், அவருக்கு முன்னதாக ஓடி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினார். இங்கு அவர் இயேசுவை தன் வீட்டிற்கு அழைக்கவோ அல்லது அவரிடம் இருந்து ஏதோ ஒரு நன்மையை பெறவோ விரும்பவில்லை. அவர் எண்ணியதெல்லாம், அவரை கண்ணார காண வேண்டும் அவ்வளவுதான். இங்கு அவர் இருதயத்தில் தோன்றிய இந்த நல்ல எண்ணமும், அதற்கு அவர் முயற்சித்து காட்டத்தி மரத்தில் ஏறியதும், அவர் வீட்டிற்கு இரட்சிப்பை கொண்டு வந்தது. ஆம் அவர் மற்றவர்களைப் போல இயேசுவை நோக்கி கூட கூப்பிடவில்லை. அவர் தன்னை காண

வேண்டும் என்று கூட அவர் நினைக்கவில்லை. தன் கண்கள் மட்டும் அவரைக் கண்டால் போதும் என்று எண்ணினார். ஆனால் உண்மையில் அவர் உள்ளத்தில் இருந்ததை தேவன் அறிந்தார்.

**லூக்கா** 19:5 கூறுகிறது **"இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்து பார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்."**, இங்கு இயேசு அண்ணாந்து பார்த்து என்ற வார்த்தை சகேயு அவர் கண்களுக்கு முன் வரவில்லை, ஆனால் ஆண்டவர் இயேசுவின் கண்கள் அவரை நோக்கிச் சென்றது. சென்றது மட்டுமல்லாமல் அவர் பெயரை சொல்லி கூப்பிட்டது, கூப்பிட்டது மட்டுமல்லாமல் நான் உன் வீட்டில் தங்க வேண்டும் என்றும் கூறியது. இந்த வார்த்தைகள் ஆண்டவர், சகேயுவின் இரட்சிப்பிற்கான இந்த நாளை குறித்து விட்டார் என்பது விளக்குகிறது. இந்த ஒரு சிறு தருணத்தை (கிருபையை) சகேயு பற்றி பிடித்துக்கொண்டார். **லூக்கா** 19:6 ஆம் வசனம் கூறுகிறது **"அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டுபோனான்."**. ஆம், ஆண்டவர் கூறியபடியே சீக்கிரமாய் இறங்கி வந்து அவரை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். ஆனால் **லூக்கா** 19:7 ஆம் வசனத்தில் **"அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்."**. இங்கு ஆண்டவரை பின்பற்றி வந்த மக்களிடமே முறுமுறுப்பு உண்டாகிறது. ஆம் அனைவராலும் பகைக்கப்பட்டு, ரோம அரசாங்கத்திற்காக வேலை செய்யும் சகேயு வீட்டிற்கு ஆண்டவர் ஏன் செல்ல வேண்டும் என்பது அனைவருக்கும் கேள்விக்குறியாக இருந்தது. ஆனால் ஆண்டவரோ அதற்கான பதிலை சகேயுவின் மூலமாகவே கூற செய்தார். **லூக்கா** 19:8 ஆம் வசனம் கூறுகிறது **"சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்."**.

ஆம் எந்த செல்வத்தின் மீது ஆசை வைத்து, தன் சொந்த சகோதரர்களான இஸ்ரவேலருக்கு எதிராக வாழ்ந்து வந்தாரோ, இன்று அதே செல்வத்தை தன் மக்களுக்கே கொடுக்க முன்வந்தார். மேலும் அந்த செல்வத்தை சேர்த்ததில் ஏதேனும் தவறு இருக்குமானால், அதையும் சரி செய்வேன் என்று கூறினார். இங்கு அவர் வேறு எதைக் குறித்தும் ஆண்டவரிடம் கூறவில்லை, அவர் ஒன்றை அறிந்து கொண்டார் தன்னிடம் உள்ள பண ஆசையே, தன் பாவம் என்பதை அறிக்கையிட்டு, அதை சரி செய்ய அவர் உடனே முன்வந்ததின் மூலம், நாம் ஏற்கனவே **லூக்கா** 19:9 ஆம் வசனத்தில் வாசித்தது போல **"இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே."**, என்றார். ஆண்டவர் இங்கு சகேயுவை மட்டும் மன்னிக்கவில்லை, அவன் வீட்டார் அனைவருக்கும் மன்னிப்பை கட்டளையிட்டு, இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்றார். மேலும் ஆபிரகாமிற்கு தேவனால் உண்டான ஆசீர்வாதத்திற்கு, சகேயுவும் பங்கு உரியவராயிருக்கிறார் என்பதையும் உறுதிப்படுத்தினார். மேலும் **லூக்கா** 19:10 ஆம் வசனத்தில் **"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்."**. ஆம்

காணாமல் போன ஆட்டைப் போலத்தான் சகேயுவும் இருந்தார். ஆனால், ஆண்டவர் அவரை தேடி வந்த போது, தன் மேய்ப்பன் சத்தம் கேட்டு, அவரிடம் ஓடி வந்து இரட்சிப்பை பெற்றார். ஒரு சில மணி நேரத்தில் அவருடைய வாழ்க்கை முழுவதும் மாறிற்று.

ஆண்டவர் சகேயுவிடம் ஐஸ்வர்யத்தை குறித்தோ, அவர் பாவியென்றோ கூட கூறவில்லை. ஆனால், அதற்கு பதிலாக நான் உன் வீட்டிலே தங்க வேண்டும் என்றே கூறினார். ஆனால் இப்படிப்பட்ட ஆண்டவர் தன் வீட்டில் தங்க வேண்டும் என்றால், தன் வீடு (வாழ்வு) எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை சகேயு உணர்ந்தார். அதை உணர்ந்தது மட்டுமல்ல, உடனே அதை ஆண்டவரிடம் அறிக்கையும் இட்டார். இப்படியாக தனக்கு கிடைத்த ஒரு சிறு தருணத்தை (கிருபையை) சரியாக பயன்படுத்தி, எந்த வீட்டில் ஆண்டவர் தங்க வேண்டும் என்றாரோ, அந்த வீட்டை இரட்சிப்பிற்கு ஏற்றதாய் மாற்றினார். இங்கு அவர் வாழ்க்கை மாத்திரமல்ல, அவருடைய வீட்டார் அனைவரின் வாழ்க்கையும் மாற்றமடைந்திருக்கும். அது மட்டுமல்ல யாருமே போக விரும்பாத அவர் வீட்டிற்கு, இயேசு வந்து இரட்சிப்பை வழங்கிய பின்பு, தேவ ஜனங்கள் அனைவரும் தங்கிச்செல்லும் இரட்சிப்பின் வீடாய், வானத்தின் வாசலாய் அது மாறி போயிற்று. எனவே இப்படிப்பட்ட ஒரு சிறிய கிருபையான தருணத்தை அருமையாக பயன்படுத்திக்கொண்ட சகேயு நம்மெல்லாருக்கும் ஒரு முன்மாதிரியாய் உள்ளார். நாமும் ஆண்டவர் நமக்கு தரும் இப்படிப்பட்ட தருணங்களை பயன்படுத்தி, விட வேண்டியவைகளை விட்டு, பெற வேண்டியவைகளை பெற்று, ஆண்டவர் மந்தையில் மகிழ்ந்திருப்போமாக. ஆமென், அல்லேலுயா.

## 124. கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 2 - சிறைச்சாலைக்காரன்



கிருபையை பற்றிக்கொண்டவர்கள் பாகம் ஒன்றில் **லூக்கா 19** ஆம் அதிகாரத்தில், ஆண்டவருடைய கிருபையின் அழைப்பை பற்றி பிடித்துக்கொண்ட சகேயு, எப்படி தானும் தன் வீட்டாரும் இரட்சிக்கப்பட காரணமாய் இருந்தார் என்பதை கண்டோம். இவ்விரண்டாம் பாகத்தில் அப்போஸ்தலர் நடபடிகள் பதினாறாம் அதிகாரத்தில், அப்போஸ்தலராகிய பவுலின் மூலம் வெளிப்பட்ட தேவ கிருபையை, எவ்வாறு ரோம அரசின் சிறைச்சாலைக்காரன் பற்றி பிடித்துக் கொண்டு, அதன் மூலம் தானும் தன் வீட்டாரும் இரட்சிக்கப்பட காரணமாயிருந்தான் என்பதை தியானிப்போம். அப்போஸ்தலராகிய பவுலின் மூலம் சுவிசேஷ வார்த்தையை ஒரு தடவை கூட கேட்டிராத நிலையில், பவுலின் மூலமாய் வெளிப்பட்ட தேவனின் பலத்த கிரியை கண்ட சிறைச்சாலைக்காரன், தான் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான் (அப் 16:30). ஒரே நாள் இரவில் நடந்த நிகழ்வுகள், சிறைச்சாலைக்காரன் மற்றும் அவன் வீட்டாரின் வாழ்வை முற்றிலும் மாற்றியதும் அல்லாமல், அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்தானம் பெற்றார்கள் (அப் 16:33). இவ்வளவு துரிதமாய் காரியங்கள் நடைபெற காரணமாய் அமைந்த நிகழ்வுகளை நாம் ஒவ்வொன்றாக தியானிப்போம். இதில் ஒரு சுவாரசியமான காரியம் என்னவென்றால், இறுதி வரை அந்த சிறைச்சாலைக்காரன் பெயர் கூட எங்கும் பதியப்படவில்லை. முதலாவது சிறைச்சாலைக்காரன் எப்படிப்பட்ட சூழலில் அப்போஸ்தலராகிய பவுலை சந்தித்தான் என்பதை காண்போம்.

அப் 16:12 கூறுகிறது “அங்கேயிருந்து மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானதும் ரோமர் குடியேறினதுமான பிலிப்பி பட்டணத்துக்கு வந்து, அந்தப் பட்டணத்திலே சிலநாள் தங்கியிருந்தோம்.“ பிலிப்பி பட்டணம் ரோமர்களால் நிறைந்திருந்தது என்பதை வேதம் வெளிப்படுத்துகிறது. மேலும் அப் 16:13-15 வசனங்களில் “ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம். அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்.“. இங்கு லீதியாள் என்னும் ஸ்திரீயும், அவள் வீட்டாரும், பவுலின் மூலமாய் கூறப்பட்ட சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்தானம் பெற்றனர் என்பதையும், பவுல் அங்கு தங்கி ஊழியம் செய்து வந்ததையும் நாம் காணலாம். இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒரு சிறிய வார்த்தை “பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார் “ என்பதாகும். ஆம் பவுலின் மூலமாய் கூறப்பட்ட வார்த்தைகளை கேட்கும்படி கர்த்தரே அவள் இருதயத்தை திறந்தருளினார். இதே தேவன், இதே பிலிப்பு பட்டணத்தில், தேவ வார்த்தையை கூறுவதற்கு முன்பே, பவுலின் மூலமாய் தமது வல்லமையை வெளிப்படுத்தி சிறைச்சாலைக்காரனை சந்தித்தார்.

அப் 16:16-18 வசனங்களில் “நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேகநாள் செய்துகொண்டுவந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று.“ இங்கு தேவன் தமது வல்லமையை, பவுலின் மூலமாய் விளங்க செய்து, குறிசொல்லுகிற பெண்ணை பிசாசின் பிடியிலிருந்து விடுவித்தார். இங்கு நாம் காண்கிற ஒவ்வொரு நிகழ்விலும், லீதியாள முதல் இந்த குறிசொல்லுகிற பெண் வரை அனேகர் ஆண்டவரிடத்தில் இருந்து பல்வேறு விதங்களில் விடுதலை பெற்றனர். ஆனால் இவற்றினால் அப்போஸ்தலராகிய பவுலுக்கு உண்டான நிலையோ எதிர்மறையானது.

அப் 16:19-21 வசனங்கள் கூறுகிறது “அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று கண்டு, பவுலையும்

**சீலாவையும் பிடித்து, சந்தைவெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு போனார்கள். அவர்களை அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து: யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி, ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள்.**". ஆம் அப்பெண் விடுதலை பெற்றதை காட்டிலும், அவள் பிசாசிற்கு அடிமைப்பட்டு குறிசொல்லுகிறவளாய் இருப்பதையே, குறிசொல்லுதலை ஆதாயத் தொழிலாக செய்து வந்த அப்பட்டிணத்தார் விரும்பினர். அற்ப காசுக்காக, மனிதர்களையே இப்படிப்பட்ட கேடயங்களாக அங்குள்ளவர்கள் பயன்படுத்தினர். ஆனால் அது அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தினால் தடை செய்யப்படுவதை கண்ட அவர்கள், அவரை ரோம அதிகாரிகளிடம் பொய்யான குற்றச்சாட்டை கூறி ஒப்படைத்தனர். உண்மையில், அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கூறினார், ஆனால் அதை உணராத அவர்கள், பவுல் யூதனாய் இருந்தபடியினால், அவர் யூதமுறைமைகளை பின்பற்ற கூறுவதாக பொய் சொல்லி, அவரை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர். இதன் மூலம் பவுலின் ஊழியத்தை தடை செய்து, தொடர்ந்து மக்கள் பிசாசின் பிடியில் இருப்பதையே இப்படிப்பட்ட எஜமான்கள் (வியாபாரிகள்) விரும்பினர். இப்படிப்பட்ட சூழ்நிலையிலேயே அப்போஸ்தலனாகிய பவுல் அதிகாரிகள் கையில் இருந்து சிறைச்சாலைக்காரன் வசம் ஒப்படைக்கப்பட்டார்.

அப் 16:22,23 கூறுகிறது "**அப்பொழுது ஜனங்கள் கூட்டங்கூடி, அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி; அவர்களை அநேக அடி அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள்.**". இங்கு சிறைச்சாலைக்காரன் அதிகாரிகளிடம் இருந்து பெற்ற உத்தரவு என்னவென்றால், பவுல் மற்றும் அவரோடு இருந்தவர்கள் வஸ்திரங்களைக் கிழித்து போட்டு, அவர்களை அநேக அடிகள் அடிக்க வேண்டும் என்பதாகும். அதாவது சரீர பிரகாரமாகவும், மனதின் பிரகாரமாகவும், அவர்களை அவமானப்படுத்தி துன்பப்படுத்துவதாகும். இதை கட்டாயமாக எந்தவித குறைவும் இன்றி சிறைச்சாலைக்காரன் நிறைவேற்றி இருப்பான். இதன் மூலம் அப்பட்டணத்தில் இருந்த ரோம மக்களின் வாழ்க்கை தரமும், எதையும் காசாக்க நினைக்கும் அதன் வியாபாரிகளின் பொருளாசை நிலையும், ஈவு இரக்கமில்லாத, நியாயம் நீதி என்று எதையும் விசாரிக்காமல், வியாபாரிகள் பேச்சைக் கேட்டு யூதர்கள் என்று கூறிய பொழுது, அவர்களை அவமானப்படுத்த துன்பப்படுத்த நினைத்த பொல்லாத அதிகாரிகளின் நிலையும் பரிதாபத்திற்குரியது. பவுலை சிறையில் அடைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்பது இவர்களின் எண்ணம். ஆனால் பவுலை சிறைக்கு அனுப்பினால், சிறைச்சாலையே மாறிவிடும் என்பதை அவர்கள் அப்பொழுது அறியவில்லை.

அப் 16:24,25 வசனங்களில் "**அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தான். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும்**

**ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.“**. இங்கு ரோம சிறைச்சாலை அதிகாரியாக அவன், அவனுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைப்படி, பவுலையும் சீலாவையும், கொடூரமாக அநேக அடிகள் அடித்து, அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்து, அவர்களை குற்றுயிராக சிறைச்சாலைக்குள் கொண்டு வந்து, அவர்கள் நகரக்கூட முடியாத அளவிற்கு, அவர்கள் கால்களை தொழு மரத்தில் மாட்டி வைத்து விட்டு உறங்கச் சென்றான். இங்கு சிறைச்சாலைக்காரன் பார்வையில், பவுலும் சீலாவும் சாதாரண குற்றவாளிகள், அதிலும் அவர்கள் யூதர்கள், இப்படிப்பட்ட எண்ணமே அவன் இருதயத்தில் இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்னும் சில மணி நேரங்களில் நடக்க இருக்கும் நிகழ்வுகள், எப்படி தன்னை மட்டுமல்ல, தன் குடும்பத்தையும் மொத்த சிறைச்சாலையையும் மாற்றப் போகிறது என்பதை, அவன் அறியவில்லை. சிறைச்சாலைக்கு வெளியே இருப்போரே இவ்வளவு கொடியோராய் இருந்தால், சிறைச்சாலைக்குள் இருக்கும் காவல் பண்ணப்பட்டவர்கள் எவ்வளவு கொடூரமானவர்களாய் இருப்பர். அவர்கள் மத்தியில் பவுலும் சீலாவும் அடிபட்டு, குற்றுயிராய் கிடக்கின்றனர். ஒருவேளை வலி தாங்காமல் பவுலும் சீலாவும், இரவு முழுவதும் முனங்கி கொண்டிருப்பார்கள் என்று தான் சிறைச்சாலையில் உள்ள அனைவரும் நினைத்திருப்பர். ஆனால் அதற்கு எதிர் மாறாக நடுராத்திரியிலே பவுலும் சீலாவும், ஜெபம் பண்ணி தேவனை துதித்து பாடினார்கள். இது உண்மையில் காவலில் வைக்கப்பட்டவர்களுக்கு ஆச்சரியத்தை தந்திருக்கும். தங்களுடைய சரீரத்திலும் மனதிலும் உள்ள வேதனையை, துன்பத்தை, வெளிக்காட்டாமல் அவர்கள் உற்சாகமாக தேவனை துதித்து பாடி ஜெபித்தது, அங்குள்ள எவரையும் தூங்கவிடாமல், பவுலையும் சீலாவையும் கவனிக்கச் செய்தது. ஆனால் இது எதையும் சிறைச்சாலைக்காரன் அறியவில்லை. அவன் தங்கும் வீடு சிறைச்சாலையோடு இணைக்கப் பட்டிருந்தபடியினால், வீட்டிற்குச் சென்று நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான்.

**அப் 16:26** கூறுகிறது **“சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாகப் பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று.“**. இங்கு யாரும் எதிர்பாராத வண்ணம் சடுதியிலே தேவ வல்லமை அனைவரும் உணரும்படியாய் சிறைச்சாலையின் அஸ்திவாரத்தையே அசைத்தது. இதை கண்ட அங்குள்ள அனைவரும் ஒரு நொடிப் பொழுது என்ன நடக்கிறது என்பதையே உணராதிருந்திருப்பர். ஆனால் அனைவருடைய கட்டுக்களும் கழன்று போன பொழுது, இது பவுலுக்காகவும் சீலாவுக்காகவும் தேவன் செய்யும் கிரியையே என்பதை அனைவரும் அறிந்தனர். ஆம், பிசாசு அவர்களை துன்புறுத்தி, தொழுமரத்தில் மாட்டி வைத்தால் எல்லாம் முடிந்து விடும் என்று நினைத்தான். ஆனால் அதன் மத்தியிலும் அவர்கள் தேவனுக்கு ஏறெடுத்த துதி, நொடிப்பொழுதில் அவர்கள் கட்டுக்களை அறுத்துப் போட்டது. இங்கு தேவ வல்லமையினால், இது நிகழ்ந்தது என்பதை உணர்ந்த சிறைக்குற்றவாளிகள் ஒருவரும், சிறையில் இருந்து தப்பிக்க நினைக்கவில்லை. அவர்கள் எண்ணமெல்லாம் அடுத்தது என்ன நிகழுமோ என்பதையே உற்றுநோக்க செய்தது. ஆனால் இதை எதையும்

அறியாமல் நன்றாக உறங்கிக் கொண்டிருந்த சிறைச்சாலைக்காரனோ, **"சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போனான்."** (அப் 16:27). இங்கு ரோம அரசாங்கத்தில் பணியாற்றும் தனக்கு, சட்டப்படி என்ன தண்டனை கிடைக்கும் என்பதை அறிந்திருந்த சிறைச்சாலைக்காரன், எதையும் விசாரிக்காமல் சிறைச்சாலை உள்ளே கூட நுழையாமல், இதனால் உண்டான பாதிப்பு தன்னோடு போகட்டும், தன் குடும்பத்திற்கோ, தன்னோடு பணியாற்றும் மற்றவர்களுக்கோ, தண்டனை வர வேண்டாம் என்று எண்ணி, முழு பொறுப்பையும் தான் ஏற்று, தன்னை மாய்த்துக் கொள்ளப் போனான். ஆனால் சிறைச்சாலைக்காரன் செய்ய இருப்பதை தன் ஆவியில் உணர்ந்த பவுலோ **"பவுல் மிகுந்த சத்தமிட்டு: நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான்."** (அப் 16:28). ஒருவேளை ஒரு சில மணித்துளிகள் தாமதித்திருந்தாலும், சிறைச்சாலைக்காரன் தன்னைத்தான் மாய்த்து கொண்டு இருப்பான். ஆனால் அதுவல்ல தேவ நோக்கம், அவனும் அவன் வீட்டார் அனைவரும் அன்று இரவே இரட்சிக்கப்பட்டு ஞானஸ்தானம் பெற வேண்டும் என்பதே தேவத்திட்டம்.

அப் 16:29,30 வசனங்களில் **"அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச்சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து, அவர்களை வெளியே அழைத்துவந்து: ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான்."**. இங்கு சிறைச்சாலைக்காரன் இருதயத்தை ஆண்டவர் திறந்தருளினார். எப்படி லீதியாள் எனும் ஸ்திரீயானவள் கர்த்தருடைய வசனங்களை கவனிக்கும்படியாய் அவள் இருதயத்தை திறந்தருளினாரோ, அப்படியே சிறைச்சாலைக்காரன் தான் அங்கு கண்ட காட்சியின் மூலம், பவுலையும் சீலாவையும் பற்றியும், அவர்களோடு கூட இருக்கும் தேவ வல்லமை பற்றியும், தான் அதற்கு கீழ்படிய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தையும் பெற்றான். அந்த குறிசொல்லுகிற பெண் கூறியபடி **"இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்"** (அப் 16:17) என்பதை சிறைச்சாலைக்காரன் உணர்ந்து கொண்டான். எனவே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று நேரடியாக கேட்டான். இதை சரியாக பயன்படுத்திக் கொண்ட பவுலும் சீலாவும், தங்களுடைய சரீர நிலையையும், சூழ்நிலையையும் பாராமல், **"அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்."** (அப் 16:31,32). யார் கையால் கொடூரமான அடியை சில மணி நேரத்திற்கு முன் வாங்கினோமோ, அதை சற்றும் நினையாமல், சோர்வடைந்திருந்த தங்களை காப்பாற்ற சொல்லி சிறைச்சாலைக்காரனிடம் கேட்காமல், அந்த சரீர வேதனைகள் மத்தியிலும் கர்த்தருடைய வசனத்தை போதித்தார்கள். இது சிறைச்சாலைக்காரனுக்கு மட்டுமின்றி, சிறையில் இருந்து தப்பிச் செல்லாமல் உறைந்து போன நிலையில் இருந்த மற்ற குற்றவாளிகளுக்கும், இதர சிறை காவலர்களுக்கும், அவன் வீட்டாருக்கும்,

புரிந்து கொள்ள முடியாத ஒரு அனுபவமாயிருந்தது. பவுல் சீலா, மூலமாய் கர்த்தருடைய வசனத்தை கேட்ட சிறைச்சாலைக்காரன் சற்றும் தாமதியாமல் **"மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்." (அப் 16:33).**

ஆம், தான் ஏற்படுத்தின காயங்களை தானே கழுவினது மட்டுமல்லாமல், கர்த்தருடைய வார்த்தைக்கு உடனே கீழ்படிந்து, அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்தானம் பெற்றார்கள். எப்படி சகேயு மனந்திரும்பின பொழுது, ஆண்டவர் இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்று கூறினாரோ **(லூக் 19:9)**, அதே போல் இங்கு சிறைச்சாலைக்காரன் வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. மற்ற குற்றவாளிகள், சிறைக்காவலர்கள் பற்றி எதுவும் பதியப்படாதிருந்தாலும், நிச்சயமாக இந்த நிகழ்வு அவர்கள் வாழ்க்கையிலும் ஏதோ ஒரு வித மாற்றத்தை கொண்டுவந்திருக்கும். அதற்கு காரணம் சிறை குற்றவாளிகளில் ஒருவரும் அங்கிருந்து தப்பிக்க முயலவில்லை. அதற்கு பதிலாக தேவ வல்லமையின் அனுபவத்தை அங்கிருந்து உணரவே விரும்பினர். **அப் 16:34** கூறுகிறது **"பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்குப் போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூடத் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்."**. இங்கு சிறைச்சாலைக்காரன் மற்றும் அவன் வீட்டார் அனைவரும், இரட்சிப்பை, ஞானஸ்தானத்தை பெற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், ஆண்டவரிடத்தில் விசுவாசமாயிருப்பதைப் பற்றியும், ஆண்டவருக்குள் மனமகிழ்ச்சியாக இருப்பதை பற்றியும் அறிந்து கொண்டனர். ஆண்டவர் பவுல், சீலா ஆகியோரது வேதனைகளையும் நீக்கி, அவர்களும் சிறைச்சாலைக்கு வெளியே தாங்கள் செய்த ஊழியத்தின் பலனை காட்டிலும், சிறைச்சாலைக்குள் அடிபட்டு, அவமானப்பட்டு, வேதனை மத்தியில் இருந்த நிலையில், வெளிப்பட்ட தேவ வல்லமை மூலம் பெரிதான பலன் கிடைத்ததை கண்டு, அவர்கள் சிறைச்சாலைக்காரன் வீட்டில் யோஜனம் அருந்தி, அவன் வீட்டாருக்கு தேவன் பாராட்டின கிருபைக்காக தேவனை ஸ்தோத்தரித்தனர். இவை யாவும் ஒரே நாள் இரவில் நடந்து முடிந்தது.

**அப் 16:35,36** கூறுகிறது **"பொழுது விடிந்தபின்பு: அந்த மனுஷரை விட்டுவிடுங்கள் என்று சொல்ல அதிகாரிகள் சேவகர்களை அனுப்பினார்கள். சிறைச்சாலைக்காரன் பவுலுக்கு இந்த வார்த்தைகளை அறிவித்து: உங்களை விடுதலையாக்கும்படிக்கு அதிகாரிகள் கட்டளை அனுப்பினார்கள்; ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்பட்டுச் சமாதானத்துடனே போங்கள் என்றான்."**. இங்கு பவுல், சீலா ஆகியோரிடம் எந்த குற்றத்தையும் காண முடியாத அதிகாரிகள், அவர்களை பயப்படுத்தி வேதனைப்படுத்தியதால், அவர்கள் பயந்து அவ்விடத்தை விட்டு சென்று விடுவர் என்று எண்ணி அவர்களை விட்டு விட சொன்னார்கள். ஆனால் உண்மையில் சிறைச்சாலையில் நடந்ததை அப்பொழுது அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆனால் **"அதற்குப் பவுல்: ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து,**

**சிறைச்சாலையிலே போட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து, எங்களை வெளியே அழைத்து அனுப்பி விடட்டும் என்றான்." (அப் 16:37).** இங்கு பவுல் தாங்கள் எந்த குற்றமும் செய்யாதவர்கள் என்பதை மனுஷர் முன்பாகவும் வெளிப்படுத்தி காண்பிக்கவும், ரோம சட்டத்தின்படியே, ரோம குடிமகனாகிய தான் விசாரிக்கப்படாமல் தண்டிக்கப்பட்டது தவறு என்பதையும் வெளிப்படுத்துகிறார். இதனால் **"சேவகர் இந்த வார்த்தைகளை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபொழுது பயந்துவந்து, அவர்களுடனே தயவாய்ப் பேசி, அவர்களை வெளியே அழைத்துக்கொண்டுபோய், பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப்போகும்படி கேட்டுக்கொண்டார்கள். அந்தப்படி அவர்கள் சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டு லீதியாளிடத்திற்குப்போய், சகோதரரைக் கண்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்லிப் போய்விட்டார்கள்." (அப் 16:38-40).** இங்கே குற்றச்சாட்டப்பட்டவராய், யூதர் என்ற அடையாளத்தோடு இருந்த பவுலை, தாங்கள் எந்த கேள்வியும் கேட்காமல் தண்டிக்கலாம் என்ற எண்ணத்தோடு இருந்தவர்கள், பவுலிடம் தயவாய் பேசி அவரை பட்டணத்தை விட்டு போகும் படி கேட்டுக் கொண்டனர். இங்கு முந்தின நாள் மாலை பொழுதில், அதிகாரிகளின் உத்தரவின் பேரில், தேவனைப் பற்றியோ, யூத மக்களைப் பற்றியோ, சுவிசேஷத்தை பற்றியோ, எந்த புரிதலும் இல்லாதிருந்த சிறைச்சாலைக்காரன், கொடூரமாய் அடித்து துன்பப்படுத்தி, வஸ்திரங்களை கிழித்து வேதனைப்படுத்தி, சிறைச்சாலைக்குள் கொண்டு வந்து, தொழுமரத்தில் மாட்டி வைத்த பவுலையும் சீலாவையும், விடியற்காலையில், தனக்கு தேவனுடைய சுவிசேஷத்தை அறிவித்து, ஞானஸ்தானம் கொடுத்து, தான் தேவனிடத்தில் விசுவாசம் உள்ளவனாகி மனமகிழ்ச்சியாக இருப்பதற்கு காரணமாய் இருந்த, ஆவிக்குரிய தகப்பன் மாராய் அவர்களை வழி விட்டு அனுப்பியிருப்பான்.

அதிகாரிகள் பவுலையும், சீலாவையும் அனுப்பி விட்டால் இனி சுவிசேஷம் அறிவிக்க யாரும் இல்லை, அதனால் பட்டணத்தில் தேவையில்லாமல் பிரச்சனை வராது என்று எண்ணியிருப்பர். ஆனால் பவுலும், சீலாவும் அவ்விடம் விட்டு வெளியேறும் முன்பு, பெயர் குறிப்பிடப்படாத அந்த சிறைச்சாலைக்காரனை, ஆண்டவருடைய சாட்சியாக நிறுத்திவிட்டே சென்றனர். அவன் மாத்திரமல்ல, இரவில் நடந்த காரியங்களை கண்ட மற்ற சிறைக்காவலர்களும், சிறைக்குற்றவாளிகளும் கூட மன மாறுதல் அடைந்திருப்பர். இப்படியாக ரோம குடிமகனாகிய, ரோம அரசாங்கத்திற்காக வேலை செய்யும் சிறைச்சாலைக்காரன், இனி தேவனுடைய ராஜ்ஜியத்தின் குடிமகனாய், தேவ இராஜ்ஜியத்திற்காக பணியாற்றும் நபராய் மாறிப்போனான். இவை அனைத்தும் ஒரே நாள் இரவில் அவன் வாழ்க்கையில் நடந்தது. எனவே சிறைச்சாலைக்காரன், அந்த நடு இரவில் தான் இருந்த இடமே அசையத்தக்கதாக, பவுலின் மூலமாக விளங்கிய தேவ வல்லமையின் கிருபையை, சரியாய் பற்றி கொண்டவனாய், தான் என்ன செய்ய வேண்டும் என்பதை சரியாக கேட்டறிந்து, அதன்படியே செய்ததால், அவனும் அவனுடைய அனைவரும் இரட்சிப்பை பெற்று, தேவனுக்கு சாட்சிகளாய் மாறினர். கொடூர சிறைச்சாலைக்காரனாய் இருந்த அவன், ஒரே நாள் இரவில் கிடைத்த கிருபையின் மூலமாய், தேவ ராஜ்யத்தின்

குடிமகனாய், சபையின் அங்கமாய் மாறிப்போனான். பவுலின் வாழ்க்கையில் எப்படி, சவுல் பவுலாய் மனம் திரும்பினாரோ, அவ்வாறே சிறைச்சாலைக்காரன் வாழ்வும், ஒரே நாள் இரவில் தலைகீழாய் மாறிப்போனது. நம் வாழ்விலும் தேவன் இப்படிப்பட்ட தருணங்களை தரும் பொழுது, அதை சரியாக பயன்படுத்தி, தேவனிடமிருந்து மேலான, நித்திய ஆசிர்வாதங்களை பெற்று, சிறைச்சாலைக்காரனை போல் ஆண்டவருக்கு சாட்சியாக வாழ்வோமாக. ஆமென், அல்லேலுயா.

## 125. கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 3 - சமாரிய ஸ்திரீ




கிருபையைப் பற்றிக் கொண்டவர்கள் பாகம் இரண்டில், நாம் எவ்வாறு ரோம சிறைச்சாலைக்காரன் பவுலின் மூலமாய் தேவ கிருபையைப் பெற்று இரட்சிக்கப்பட்டான் என்பதை கண்டோம். அதே வேளையில் முதலாம் பாகத்தில் ஆண்டவர் எப்படிப்பட்டவரோ என்று பார்க்க வந்த சகேயுவை, ஆண்டவர் எப்படி இரட்சித்தார் என்பதையும் கண்டோம். இப்பாகம் மூன்றில், சகேயுவை போல் ஆண்டவரை பற்றி எதுவும் கேள்விப்படாமல், அன்றாட வேலையான கிணற்றில் தண்ணீர் எடுக்க வந்த சமாரிய ஸ்திரீயை ஆண்டவர் சந்தித்து, அவளுடன் நேர்முகமாக உரையாடி, ஆண்டவர் அவளுக்கு அருளி இருக்கும் தேவ கிருபையை, ஈவை அவளுக்கு விளங்க காட்டி அவளை ரட்சித்தார். அவள் இரட்சிக்கப்பட்டது மட்டுமல்லாமல், உடனே தான் இருந்த ஊரில் உள்ள மக்கள் அனைவருக்கும் ஆண்டவரை பற்றி கூறி, அவர்களும் ஆண்டவரே, கிறிஸ்துவாகிய உலக ரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கும்படியாய் செய்தாள். இங்கு ஆண்டவர் அவளை சந்தித்தது ஏதோ தற்செயலாய் நடந்த சம்பவம் போல் தோன்றலாம், ஆனால் தேவ திட்டத்தில் எதுவும் தற்செயல் கிடையாது, யாவும் தேவ முன்குறித்தலின்படியே நடப்பவையாகும். சமாரிய ஸ்திரீக்கு ஆண்டவர் தன்னை சந்தித்தது ஏதோ தற்செயலான காரியம் போல தோன்றினாலும், அவளைக் கொண்டு, அவளுடைய ஊரில் உள்ளோரை இரட்சிப்பிற்குள் கொண்டு வருவது தேவத்திட்டமாய் இருந்தது. எனவே இப்படிப்பட்ட அற்புதமான ஒரு நிகழ்வை நாம் தொடர்ந்து தியானிப்போம்.

**யோவான் 4ஆம்** அதிகாரத்தில் இச்சம்பவம் விரிவாக கூறப்பட்டுள்ளது. **யோவான் 4:1,2** இல் **"யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங்கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது, யூதேயாவைவிட்டு மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார்."**. இங்கு இரட்சிப்பின் சுவிசேஷம் பரம்புகிறதை குறித்து பரிசேயர் கேள்விப்பட்டதை ஆண்டவர் அறிந்தபோது, அவர் யூதேயாவை விட்டு கலிலேயாவுக்கு போனார் என்று வேதம் கூறுகிறது. இங்கு பரிசேயர் கேள்விப்பட்டனர் என்பது, அவர்கள் இதைக்கேட்டு ஆண்டவருடைய ஊழியத்தை தடை செய்ய வேண்டும் என்று எண்ணம் கொண்டதையே கூறுகிறது. எனவே ஆண்டவர் கலிலேயாவிற்கு கடந்து செல்ல எண்ணினார். இதற்கான காரணத்தை ஆண்டவரே அறிவார். ஆனால் அதே நேரத்தில், யூதேயா மற்றும் கலிலேயா ஆகிய இடங்களுக்கு இடையே உள்ள சமாரிய மக்களையும் ஆண்டவர் சந்திக்க நினைத்தார். சமாரிய மக்களும் இஸ்ரவேலராக இருந்தபோதும், அசீரிய படையெடுப்பில் அவர்கள் புறஜாதியாரோடு கலந்தபடியால், யூதர்கள் அவர்களை அன்னியர்களாகவே கருதினர். எனவே யூதேயா மற்றும் கலிலேயா நடுவே இருந்த சமாரிய மக்கள், தனித்து விடப்பட்டிருந்தனர். ஆனால் ஆண்டவர் அவர்களை சந்திக்க, சித்தம் கொண்டு கடந்து சென்றார். அவர்களை சந்திக்க தான் உபயோகப்படுத்தும் கருவியாக சமாரிய பெண்ணை தெரிந்தெடுத்தார். அவளுக்கு சத்தியம் ஒவ்வொன்றையும் அருமையாக விளக்கி காட்டினார். அதன் மூலம், அவள் ஊர் முழுவதையுமே ஆண்டவர் சந்தித்தார்.

**யோவான் 4:4-7** உள்ள வசனங்களில் **"அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தபடியால், யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார். அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது; இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்; அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிருந்தது. அவருடைய சீஷர்கள் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள்."**. இங்கு ஆண்டவர் சீகாருக்கு வந்ததும், கலைப்படைந்தவராய் ஆறாமணி வேளையிலே கிணற்றின் அருகே உட்கார்ந்ததும், சீஷர்கள் ஊருக்குள்ளே சென்றதும் என நடந்தவை யாவும் ஒரு சாதாரண நிகழ்வாக நாம் காணலாம். குறிப்பாக ஆண்டவர் பிரயாணத்தினால் இளைப்படைந்தார் என்பது ஆறாம் மணி வேலையாகிய (பகல் 12 மணி) அவ்வேளையில், ஒருவேளை வெயிலின் உஷ்ணத்தில், காலை உணவு கூட உன்னாதவராய் அவர் சீஷர்களோடு நடந்து வந்திருக்கலாம். ஆனால் ஒருபுறம் ஆண்டவரின் சரீரம் இளைப்படைந்தாலும், அவருடைய ஆவிக்கு தெரியும் தாம் ஏன் இங்கு இருக்கிறோம் என்று.

**"அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத் தா என்றார்." (யோவான் 4:8)**. இளைப்படைந்து அமர்ந்து இருக்கும் ஒருவர் சாதாரணமாக கேட்பது போல் தாகத்துக்கு தா என்று ஆண்டவர் நேரடியாக சமாரிய ஸ்திரீயுடன் இடைப்பட ஆரம்பிக்கின்றார். ஆனால் அவளோ அவர் தாகமாய் இருப்பதை

காட்டிலும் தோற்றத்தில், பேச்சில் அவர் யூதர் என்பது வெளிப்படையாய் தெரிந்ததால், **"யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்." (யோவான் 4:9)**. இங்கு அவள் இவ்வாறு கேட்டவுடனே, ஆண்டவராகிய, **"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்." (யோவான் 4:10)**. இங்கு ஆண்டவர் உடனடியாக ஆவிக்குரிய காரியங்களை அவளுடனே பேச ஆரம்பிக்கிறார். மேலும் வேறு எவரிடமும் தம்மை குறித்த காரியங்களை நேரடியாக இவ்வாறு தனிப்பட்ட முறையில் ஆண்டவர் விரிவாக கூறாத பொழுது, இங்கு இப்பெண்ணிடம் கூறுவது, யூதர்களுக்கு அந்நியராய் காணப்படும் அவளும், அவளுடைய ஊராரும், தேவ கிருபையை, தேவ ஈவை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கே ஆகும். மேலும் ஜீவத்தண்ணீரான தேவ ஆவியானவரை பற்றியும் ஆண்டவர் கூறுகிறார்.

ஆனால் இதை புரிந்து கொள்ளாத அப்பெண், ஆண்டவர் மாம்ச ஜீவனை காப்பதற்கான தண்ணீரைப் பற்றிதான் கூறுகிறார் என்று நினைத்து, **"அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும். இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்." (யோவான் 4:11,12)**. உடனே ஆண்டவர் தமது சம்பாஷணையை ஆவிக்குரிய அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்கிறார். **"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்." (யோவான் 4:13,14)**. ஆனால் இங்கு ஆண்டவர் சரீர பிரகாரமான தண்ணீரைப் பற்றி பேசவில்லை என்பதை இன்னும் உணர்ந்து கொள்ளாத அப்பெண், **"அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்." (யோவான் 4:15)**. தான், ஆவிக்குரிய காரியங்களை கூறியும் அதை உணர்ந்து கொள்ள முடியாத, இஸ்ரவேலில் போதகனாயிருந்த நிக்கொதேமுவிடம், இதற்கு முன் **யோவான் 3ஆம்** அதிகாரத்தில், எவ்வாறு ஆவிக்குரிய காரியங்களை விளங்க காட்டினாரோ, அதேபோல் இச்சமாரிய பெண்ணிடமும் ஆண்டவர் வேறு விதத்தில் தமது சம்பாஷனையை தொடர்கிறார்.

**"இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்." (யோவான் 4:16)**. இங்கு ஆண்டவர், உடனடியாக அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் இடைபட ஆரம்பிக்கிறார். மேலும்

“அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்.“ (யோவான் 4:17,18). ஆண்டவர் அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் நிலை குறித்து விரிவாக அவளுக்கு கூறுகிறார். “அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்.“ (யோவான் 4:19) என்றாள். இப்பொழுது தான் இவ்வளவு நேரம் தான் பேசிக் கொண்டிருப்பது ஒரு சாதாரண யூத மனிதரோடு அல்ல, அவர் கூறிய காரியங்களும் மாம்சத்திற்குரியது அல்ல, என்பதை அவள் உணர்ந்து கொள்ள ஆரம்பிக்கிறாள்.

உடனே அவளும், தன்னுடைய சம்பாஷனையை ஆவிக்குரியவிதமாக மாற்றி, “எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டு வந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுது கொள்ளவேண்டும் என்கிறீர்களே என்றாள்.“ (யோவான் 4:20). இங்கு அந்த ஸ்திரீ, ஒரே ஆண்டவரை தொழுதாலும், யூதருக்கும் சமாரியர்க்கும் இடையே உள்ள காரியங்களை குறித்து ஆண்டவரிடம் வினவுகிறாள். உடனே ஆண்டவர் அதற்கான பதிலை விரிவாக யோவான் 4:21-24 வசனங்களில் “அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது. நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.“. இவ்வாறு அருமையாக ஆவிக்குரிய காரியங்களை பற்றி ஆண்டவர் கூறியவுடன், அந்த ஸ்திரீ ஆவிக்குரிய அடுத்த கட்டத்திற்கு சென்று யூதர்களைப் போல் தாங்களும் மேசியாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை ஆண்டவரிடம் கூறுகிறாள். “அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்.“ (யோவான் 4:25). உடனே ஆண்டவர், “அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.“ (யோவான் 4:26). இங்கு ஆண்டவர், ஒரு தனிப்பட்ட ஆத்மாவின் இரட்சிப்பிற்காக, தேவத்திட்டம் முழுவதையும், தான் யார் என்பதையும், வெளிப்படையாக அவளிடம் கூறுகிறார்.

இதற்கு இடையில், “அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப்பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீரென்றாவது, ஒருவனும் கேட்கவில்லை.“ (யோவான் 4:27). இங்கு யூதர்களாகிய சீஷர்களுக்கு,

ஆண்டவர் சமாரிய ஸ்திரீயுடன் பேசுவது ஆச்சரியமாக கண்டது. ஆனால் அன்று அவர்களுக்கு தெரிந்திருக்காது, ஒரு நாள் எருசலேம் சமாரியா மாத்திரமல்ல பூமியின் கடைசி பரியந்தம் வரைக்கும் உள்ள சகல ஜாதி மக்களுக்கும், மேசியாவாகிய கிறிஸ்து இயேசுவை பற்றி தாங்கள் கூற போகிறோம் என்று. **"அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி: நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள்." (யோவான் 4:28,29)**. இங்கு ஆண்டவருடைய பதிலை கேட்ட அந்த ஸ்திரீ, தான் எதற்காக (தண்ணீர் மொள்ள) இவ்வளவு தூரம் வந்தோமோ அதை மறந்து விட்டு, ஊருக்குள்ளே ஓடி ஆண்டவரை குறித்து சாட்சி கொடுத்து, தன்னை பற்றிய காரியங்களை ஆண்டவர் வெளிப்படுத்தியதை அடுத்து, அவர்தான் தாங்கள் எதிர்பார்த்திருக்கும் கிறிஸ்துவாகிய மேசியாவோ என்று பார்க்க அனைவரையும் அழைத்தாள். இங்கு ஆண்டவர் அந்த ஸ்திரீயின் தனிப்பட்ட வாழ்க்கையை குறித்து கூறியதே அவளை மிகவும் தொட்டது. இங்கு அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையை குறித்து குறிப்பாக, ஐந்து புருஷரை குறித்து பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டாலும், அதை காட்டிலும் மேசியாவின் வருகையை குறித்த அவளுடைய உள்ளத்தின் வாஞ்சையையே, ஆண்டவர் பெரியதாக எண்ணினார்.

**யோவான் 4:30** கூறுகிறது, **"அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்."**. இங்கு ஊரில் உள்ள அனைவரும் வர காரணம், அவள் அவரைக் குறித்து அறிவித்த விதமே. இதற்கு இடையில், **"இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, போஜனம்பண்ணும் என்று வேண்டிக்கொண்டார்கள்." (யோவான் 4:31)**. ஆனால் ஆண்டவரோ, **"அதற்கு அவர்: நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார்." (யோவான் 4:32)**. இதனால், **"அப்பொழுது சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்து: யாராவது அவருக்குப் போஜனம் கொண்டுவந்திருப்பானோ என்றார்கள்." (யோவான் 4:33)**. இங்கு ஆண்டவர் தமக்குரிய போஜனமாக எதை குறிப்பிடுகிறார் என்பதை அப்போஸ்தலர்களாகிய சீஷர்கள் கூட விளங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே ஆண்டவர், **"இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது." (யோவான் 4:34)** என்றார். மேலும், **"அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான். விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதினாலே விளங்குகிறது. நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள் என்றார்." (யோவான் 4:35-38)**. இங்கு ஆண்டவர் சுவிசேஷ ஊழியத்தின் மேன்மையை,

முக்கியத்துவத்தை பற்றி சீஷரிடம் கூறி, யூதர்களாகிய சீஷர்கள் புறஜாதி மக்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டியவர்கள் என்பதை சமாரிய ஸ்திரீயின் மூலம் வெளிப்படுத்துகிறார். **யோவான் 4:39,40** கூறுகிறது, **“நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள். சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்கவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; அவர் இரண்டுநாள் அங்கே தங்கினார்.“**. இங்கு, **சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம்** என்பது மிகவும் முக்கியமானது. அவளுடைய வார்த்தைகளே, சுவிசேஷ விதைகளை அவள் ஊர் மக்கள் இருதயத்தில் விதைத்தது. மேலும், **“அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து, அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.“ (யோவான் 4:41,42)**. இங்கு, **உன் சொல்லினிமித்தம் அல்ல** என்ற வார்த்தையானது, அவளால் கிரியை நடப்பிக்கப்படவில்லை என்று அர்த்தம் அல்ல. அவளுடைய வார்த்தையே அவர்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் அழைத்துச் சென்றது. ஆனால் ஆண்டவருடைய வார்த்தையே, அவரே கிறிஸ்துவாகிய உலக ரட்சகர் என்பதை அவர்கள் அறிந்து விசுவாசிக்கும்படியாய் செய்தது. எனவே நாம் செய்ய வேண்டிய காரியங்களை நாம் செய்தோமானால், மீதியானவற்றை தேவனே பொறுப்பேற்றுக் கொள்வார் என்பதை நாம் இங்கு அறிந்து கொள்ளலாம்.

எனவே, இங்கு சில நிமிடங்கள் ஆண்டவரோடு தனிப்பட்ட முறையில் உரையாடிய அந்த சமாரிய ஸ்திரீ, தனக்கு கொடுக்கப்பட்ட அந்த சிறிய தருணத்தை (கிருபையை) சரியாக பற்றிப்பிடித்துக்கொண்டு, தான் இரட்சிக்கப்பட்டது மட்டுமல்ல, தன் ஊராரின் இரட்சிப்புக்கும் அவள் காரணமானாள். இவ்வாறாக அனேக மக்களை, குறிப்பாக புற ஜாதி மக்களை ஆண்டவரிடம் கொண்டு வருவது, சீஷர்களுக்கும் ஒரு நல்ல பயிற்சியாய் அமைந்தது. ஆண்டவர் பறமேறி சென்ற பின்பு, தாங்களும் சமாரிய ஸ்திரீயை போல், ஒருநாள் புறஜாதிகள் மக்கள் மத்தியில் தங்கள் சாட்சியை கூறி அவர்களை ஆண்டவர் அண்டை அழைத்து வர வேண்டும் என்பதை, சீஷர்கள் உணர்ந்து கொள்ளும்படியாய் ஆண்டவர் சமாரிய ஸ்திரீயை பயன்படுத்தினார். இந்த ஸ்திரீயை குறித்து, இதற்கு பின் வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடபடாமல் இருந்தாலும், நிச்சயமாக அவள் தன்னுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்திருப்பாள். ஆண்டவரே கிறிஸ்துவாகிய உலகரட்சகர், அவரே மேசியா என்பதை அநேகருக்கு இந்த சம்பவத்தை கூறி அறிவித்திருப்பாள். நிச்சயமாக அநேகர் நித்திய ஜீவனை கண்டடைய, அவள் காரணமாய் இருந்திருப்பாள். இன்று மாம்சத்தின்படி யூதராய் இராத நமக்கும் அவள் ஒரு முன்னோடியாய் காணப்படுகிறாள். எனவே தனக்கு கொடுக்கப்பட்ட ஒரு சிறு கிருபையின் தருணத்தை பற்றி பிடித்துக்கொண்டு, எவ்வாறு ஆண்டவருக்கு மகிமையாக அவள் வாழ்ந்தாளோ, அப்படிப்பட்ட வாழ்வை நாமும் பெற்றுக்கொள்ள ஆண்டவர் நமக்கும் கிருபை பாராட்டுவாராக. ஆமென், அல்லேலூயா.

## 126. கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 4 - மனந்திரும்பின கள்ளன்




ஆண்டவர் எவ்வாறு தமது கிருபையை, பல்வேறு நேரங்களில், பலவிதங்களில், சில தனிப்பட்ட மக்களின் வாழ்க்கையில் அருளும் பொழுது, அதற்கு அவர்கள் கீழ்ப்படிந்து எவ்வாறு இரட்சிப்பை, மீட்பை, நித்திய ஜீவனை பெற்றார்கள் என்பதை நாம் கடந்த மூன்று பாகங்களில் கண்டோம். இந்த நான்காம் பாகத்திலும், மிகவும் முக்கியமான ஒரு தருணத்திலே, ஆண்டவர் சிலுவையில் தமது ரத்தத்தை, அனைத்து மக்களுக்காகவும் சிந்துகிற வேளையில், அவருடைய கிருபையை உணர்ந்து, அதை பற்றிப் பிடித்துக்கொண்டவன் தான், சிலுவையில் அவரோடு கூட அறையப்பட்ட கள்ளரில் ஒருவன். அவனுடைய பெயர் உள்பட, அவனைப் பற்றிய எந்த தகவலும் வேதாகமத்தில் பதியப்படவில்லை. வேதாகமத்தில் அவன் கள்ளன் / குற்றவாளி என்பது மட்டும்தான் பதியப்பட்டுள்ளது. ஆனாலும் யாருக்கும் கிடைக்காத பாக்கியத்தை, சிலுவையில் வேதனையோடு தொங்கிக்கொண்டிருந்தாலும், இன்னும் சில மணி நேரங்களில் ஆண்டவரோடு பரதீசில் பிரவேசிக்கும் பாக்கியத்தை இந்த கள்ளன் பெற்றான். அதை ஆண்டவரே அவனுக்கு வாக்குப் பண்ணினார் **(லூக்கா 23:43)**. ஆம், இந்த வார்த்தையை கேட்ட பின்பு நிச்சயமாக, அந்த கள்ளனின் உடல் சிலுவையில் வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தாலும், அவனுடைய ஆத்மா, ஆண்டவரே உம் கரத்தில் என் ஆவியை ஒப்பவிக்கிறேன் என்று கூறி, அவரோடு கூட பரதீசில் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கும். ஆம் ஒருபுறம், தான் வாழ்நாளெல்லாம் செய்த குற்றத்திற்கு தண்டனையை தன் உடல் அனுபவித்துக் கொண்டிருந்தாலும், அவனுடைய ஆவியோ, எப்போது நான் பரதீசில் பிரவேசிப்பேன் என ஆவலோடு காத்திருந்திருக்கும். அவனுடைய ஆவி அவன் சரீரத்தில் இருந்து பிரிந்த அவ்வேளையில், அவன் கள்ளன் என்ற, பாவி என்ற, குற்றவாளி என்ற நிலையில் இருந்து, மீட்கப்பட்டவன், இரட்சிப்பை கண்டடைந்தவன், பரதீசிக்கு உரியவன் என்ற நிலைக்கு

மாற்றப்பட்டான். இதற்கு காரணம், ஆண்டவர் அவனுக்கு கொடுத்த கிருபையின் தருணத்தை அவன் பற்றிக்கொண்டதே ஆகும்.

இங்கு விசேஷமான காரியம் என்னவென்றால், மற்றவர்களுடன் ஆண்டவர் இடைப்பட்டார், ஆனால் இங்கு ஆண்டவர் அவனிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை, ஆனால் சிலுவையில் அவர் தொங்கின காட்சி, அவருடைய முகரூபம், அவர் வாயில் இருந்து வெளிப்பட்ட வார்த்தைகள், அவர் தேவகுமாரன் என்பதை அந்த கள்ளன் உணர்ந்து கொள்ளும்படி செய்தது. ஆரம்பத்தில் மற்றவர்களைப் போல அவனும் அவரை நிந்தித்தான். ஆனால் நேரம் போக போக, அவன் சில காரியங்களை உணர்ந்து கொண்டான். அதனால் தன் வாழ்வின் மரண தருவாயில், அருமையான மீட்பை பெற்று, நேரடியாக பரதீசுக்கு ஆண்டவருடன் சென்றடைந்தான். அப்படிப்பட்ட காரியங்கள் என்னவென்பதை நாம் பின்வருமாறு தியானிப்போம்.

**லூக்கா 23:33** கூறுகிறது, **"கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவரையும், அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள்."** இதே நிகழ்வு **மத்தேயு 27:38**லும், **மாற்கு 15:27**லும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மத்தேயுவிலும், மாற்க்கு சுவிசேஷத்திலும் **"அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்." (மத்தேயு 27:44), மாற்கு 15:32** என்று பதியப்பட்டுள்ளது. ஆனால் அதன்பின் நடந்த இந்த அருமையான சிறு நிகழ்வை **லூக்கா 23:39-43** வசனங்கள் பின் வருமாறு பதிவு செய்கிறது, **"அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிற தில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்."**. இதில் மிகவும் அருமையான காரியம் என்னவென்றால், மொத்தம் உள்ள ஐந்து வசனங்களில், முதல் வசனம் மற்றொரு கள்ளன் பேசுவதை பதிவு செய்கிறது. இரண்டு மற்றும் மூன்றாம் வசனம் மனந்திரும்பின கள்ளன் மற்றொரு கள்ளனை பார்த்து பேசுவதை பதிவு செய்கிறது. **லூக்கா 23:42** வசனம் மட்டுமே மனந்திரும்பின கள்ளன் ஆண்டவரை பார்த்து பேசியது பதியப்பட்டுள்ளது. இறுதியில், **லூக்கா 23:43**இல் ஆண்டவர் அவனுக்கு கொடுத்த மறுமொழி பதியப்பட்டுள்ளது. நடந்த காரியங்கள், உரையாடல்கள், ஒரு சில மணித்துளி நேரமாயிருந்தாலும், அவனுக்கு அது நித்திய இரட்சிப்பை கொண்டு வந்தது. அதனை ஒவ்வொன்றாக தியானிப்போம்.

**லூக்கா 23:39** கூறுகிறது, **“அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்.“**, இங்கு இந்த கள்ளன் தான் செய்த குற்றத்திற்கு, தான் வேதனை அனுபவித்துக்கொண்டிருந்த வேளையிலும், அவனுடைய துர்குணம், இன்னும் மற்றவரை காயப்படுத்துவதிலேயே இருந்தது. ஆண்டவரை சுற்றி இருந்த பரிசேயர் மற்றும் யூதர்கள் அவரை இவ்வாறு இகழ்ந்த பொழுது, அவனும் அதே வார்த்தைகளை சொல்லி இகழுகிறான். மற்ற சுவிசேஷங்களில் பதியப்பட்டுள்ளபடி மனந்திரும்பின கள்ளனும் முதலில் ஆண்டவரை இழந்தாலும், நேரம் செல்ல செல்ல, அவர் சிலுவையில் சொல்லிய வார்த்தைகள் மற்றும், ஒருபுறம் பரிசேயர் மற்றும் அவர்களுடன் சேர்ந்தவர்கள் ஆண்டவரை இகழ்ந்தாலும், அவருக்காக கதறி அழும் மற்றவர்களையும் அவன் கண்டபோது, அவனுடைய இருதயத்தில் மாற்றம் உண்டானது. **லூக்கா 23:40** கூறுகிறது **“மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?“**, என்று. ஆம் முதலாவது தேவ பயம் அவனுக்குள்ளாய் உண்டானது. சிலுவையில் அறையப்பட்டது மனிதரால் மட்டும் உண்டான தண்டனை அல்ல, அது தேவனால் தங்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

மேலும், **லூக்கா 23:41** இல், **“நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு,“**. இங்கு தான் செய்தது தவறான செயல்கள் என்பதும், அதற்கேற்ற தண்டனையையே தான் அனுபவித்துக் கொண்டிருப்பதையும் அறிக்கையிடுகிறான். இங்கு இரண்டு காரியங்களை நாம் காணலாம், ஒன்று அவனுடைய இருதயத்தில் தேவ பயம் உண்டானது, இரண்டு அவன் தான் பாவி என்பதை உணர்ந்து கொண்டான். அதற்கான தண்டனையையும் அவன் மனதார ஏற்றுக்கொண்டான். அதே நேரத்தில், ஆண்டவர் படும் இவ்வேதனை அவருக்காக அல்ல என்பதை உணர்ந்து கொண்டான். அதுவே அவன் உணர்ந்து கொண்ட மிகப்பெரிய சத்தியமாகும். ஆண்டவர் சிலுவையில் தொங்குவது அவருக்கு கிடைக்க வேண்டியது அல்ல, அது தன்னைப் போன்ற பாவிகளுக்கு கிடைக்க வேண்டிய ஒன்று என்பதை உணர்ந்து கொண்டான். ஆனால் ஆண்டவர் சிலுவையை ஏற்றுக் கொண்டார் என்றால், நிச்சயமாக அவர் மீட்பராகிய கிறிஸ்துவாகத்தான், மேசியாவாகத்தான், இருக்க வேண்டும் என்பதை அவன் உள்ளம் உணர்ந்து கொண்டது. ஆம், ஆண்டவர் அவனுடன் தனிப்பட்ட முறையில் இடைபடா விட்டாலும், அவர் சிலுவையில் தொங்கிய காட்சியே அவனை இரட்சிப்பதற்கு போதுமானதாக இருந்தது.

இந்த கிருபையின் தருணத்தை சரியாக பற்றிப் பிடித்துக்கொண்ட இந்த கள்ளன், **லூக்கா 23:42** இல், **“இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.“**. மேசியாவாகிய கிறிஸ்து இயேசுவின் ராஜ்யத்தில், தன் ஆத்துமாவும் இளைப்பாற வேண்டும் என்ற வேண்டுதலை அவரிடம் வைக்கிறான். சிலுவையில் வேதனை மத்தியில் தொங்கிக் கொண்டிருந்த

அவ்வேளையிலும் ஆண்டவர் அவனுடைய இருதயத்தில் உண்டான மாற்றத்தை கண்டார். மூன்றரை வருட ஊழிய காலத்தில், அவன் ஆண்டவரை சந்திக்காமல் போனாலும், இந்த கடைசி மணித்துளியில் ஆண்டவர் அவனுக்கு மேன்மையான பரதீசை வாக்குப்பண்ணினார். **"இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்." (லூக்கா 23:43).** ஆம், நித்திய வாழ்வுக்கான மேன்மையை, அவன் தன் உலக வாழ்க்கையின் இறுதி மணித்துளிகளில் பெற்றான். அவனுக்கு கொடுக்கப்பட்ட இந்த சிறிய கிருபையின் தருணத்தை பற்றிப்பிடித்துக்கொண்டான். இச்சம்பவம் ஆண்டவர், எப்படிப்பட்ட மனிதனின் வாழ்வையும், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் மாற்ற முடியும் என்பதற்கு, நமக்கு ஒரு நம்பிக்கையின் சான்றாக உள்ளது. இப்படிப்பட்ட ஆண்டவருடைய கிருபைகளை, நாம் இவ்வுலகில் வாழும் வேளையிலேயே பெற்றுக்கொள்வோமாக. ஆண்டவர் அருளும் மீட்பை, இரட்சிப்பை, இம்மையிலும், மறுமையிலும் பெற்று அனுபவிக்க ஆண்டவர் கிருபை பாராட்டுவாராக. ஆமென், அல்லேலூயா.

# 127. ஏதாகிலும் செய்யக்கூடுமானால்



"அப்பொழுது ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஊமையான ஒரு ஆவி பிடித்த என் மகனை உம்மிடத்தில் கொண்டுவந்தேன். அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக்கழிக்கிறது; அப்பொழுது அவன் நுரைதள்ளி, பல்லைக்கடித்து, சோர்ந்துபோகிறான். அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரிடத்தில் கேட்டேன்; அவர்களால் கூடாமற்போயிற்று என்றான். அவர் பிரதியுத்தரமாக: விசுவாசமில்லாத சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார். அவனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவரைக் கண்டவுடனே, அந்த ஆவி அவனை அலைக்கழித்தது; அவன் தரையிலே விழுந்து, நுரைதள்ளிப் புரண்டான். அவர் அவனுடைய தகப்பனை நோக்கி: இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று என்று கேட்டார். அதற்கு அவன்: சிறுவயதுமுதற்கொண்டே உண்டாயிருக்கிறது; இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று. நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான். அப்பொழுது ஜனங்கள் கூட்டமாய் ஓடிவருகிறதை இயேசு கண்டு, அந்த அசுத்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப்

**புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார். அப்பொழுது அது சத்தமிட்டு, அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டுப்போயிற்று. அவன் செத்துப்போனான் என்று அநேகர் சொல்லத்தக்கதாகச் செத்தவன்போல் கிடந்தான். இயேசு அவன் கையைப்பிடித்து, அவனைத் தூக்கினார்; உடனே அவன் எழுந்திருந்தான்." (மாற்கு 9:17-27)**

மேற்கண்ட சம்பவத்தில் ஆண்டவர் மறுரூபமலையில் பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானுக்கு தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தி, அம்மலையில் இருந்து இறங்கி வந்த உடனே நடந்தவையாகும். ஆண்டவர் மற்ற அப்போஸ்தலர்களோடு இல்லாத நேரத்தில், அவர்கள் இந்த வாலிபனுக்குள் இருந்த அசுத்த ஆவியை துரத்த முயன்றும் அவர்களால் கூடாமல் போயிற்று. இதற்கான காரணத்தை ஆண்டவரே அவர்களுக்கு பின்னர் வெளிப்படுத்தினார். ஆனால் இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய வார்த்தை என்னவெனில், அந்த வாலிபனுடைய தகப்பன் கூறிய **"நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யவேண்டும்" (மாற்கு 9:22)** என்பதாகும். ஒருவேளை அந்த தகப்பன் ஆண்டவருடைய மறுரூப மலையின் அனுபவத்தை பெற்றிருப்பானாகில் இப்படி கூறியிருக்க மாட்டான். ஆனால் அவனோ ஆண்டவர் ஏதாவது செய்வார், என் மகனுக்கு விடுதலை தருவார் என்ற நம்பிக்கையோடு வந்து, அவர் இல்லாத காரணத்தினால் அவரது சீஷர்களான அப்போஸ்தலர்களிடத்தில் தன் மகனைக் கொண்டு வந்து விட்டபொழுதும், விடுதலை கிடைக்காத காரணத்தினால், சோர்வோடும், வேதனையோடும், அதே நேரத்தில் அந்த இடத்தை விட்டுச் செல்லாமல், ஆண்டவர் மலையில் இருந்து இறங்கி வரும் வரை அவருக்காக காத்திருந்தான். தன் மகன் தன் கண்முன் படும் வேதனையை தாங்க முடியாமல் தவித்த வேளையில், ஆண்டவரே தன் ஒரே நம்பிக்கை என்று அவருக்காக காத்திருந்தவன், அவரைக் கண்ட உடனே கூறிய வார்த்தையை தான் நாம் **(மாற்கு 9:22)** இல் கண்டோம்.

இங்கு தன் மகன் படும் வேதனையில் இருந்து எப்படியாவது விடுதலை பெற வேண்டும் என்ற உறுதியுடன், அதே நேரத்தில் அதை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதை அறியாதவனாய், ஆண்டவருடைய சீஷர்கள் முதற்கொண்டு உதவி செய்ய முடியாமல் போன சூழ்நிலையில், ஆண்டவரே தன் இறுதி நம்பிக்கை என்ற நிலையில், "**நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால்**" என்று சர்வ வல்லமையுள்ளவரிடத்திலேயே கேட்கிறான். ஆம், ஒருவேளை இந்த வெளிச்சம் அவனுக்கு இல்லாவிட்டாலும், ஆண்டவர் விசுவாசத்தை பற்றி கூறிய பொழுது "**விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்**" **(மாற்கு 9:24).** இங்கு என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கூறுவதில் இருந்து, அந்த விசுவாசத்திற்கு காரண கர்த்தா ஆண்டவர் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். மேலும் "**கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்**" என்பது அவனது இருதயத்தில் இருந்த வேதனையின் வெளிப்பாடாகும். இங்கு அந்த தகப்பன் ஆண்டவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்ற மறுரூப மலையின் வெளிப்பாட்டை பெறாவிட்டாலும், ஆண்டவர் ஏதாவது

செய்வார் என்ற விசுவாசத்துடன், ஆண்டவரிடத்தில் வந்தான். ஒருவேளை அந்த விசுவாசத்தில் ஏதாகிலும் குறை இருக்குமானால் அதையும் ஆண்டவரே நீக்கி அருள வேண்டும் என்று கூறுவதில் இருந்து, விசுவாசத்திற்கு அவரே காரண கர்த்தா என்பதை வெளிப்படுத்துகிறான். ஆண்டவர் அந்த தகப்பனுடைய வேதனையை கண்ணோக்கி பார்த்தார், அவன் மகனை பற்றி கனிவாய் விசாரித்தார், அவன் மகனை அலைக்கழித்த பிசாசை துரத்தினார். இறுதியில், செத்தவன் போல் தரையில் கிடந்த அந்த வாலிபனை, ஆண்டவராகிய இயேசுவே அவன் கையை பிடித்து, அவனை தூக்கிவிட்டு, தகப்பனிடத்தில் ஒப்படைத்தார். அந்த தகப்பன தன் மகனை அழைத்துக்கொண்டு எத்தனை மகிழ்ச்சியோடு, நன்றி உணர்வோடு, ஆண்டவரே மெய்யான தெய்வம் என்ற சத்திய தெளிவோடும் சென்றிருப்பான். ஆண்டவருடைய சிஷர்கள் கூட பெறாத அனுபவத்தை இந்த தகப்பன் பெற்றுக்கொண்டான். அதற்கு காரணம் "**நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால்**" என்ற அந்த கடுகு விதை அளவு விசுவாசமே ஆகும்.

ஆம், இன்று எத்தனையோ ஆண்டுகள் சபையில் அங்கத்தினராய் இருந்தும், பலவித ஊழியப் பாதைகளில் பங்கெடுத்தும், ஆண்டவரால் சிறு வயதிலிருந்தே வழிநடத்தப்படும் அனுபவத்தை பெற்றிருந்தும், இக்கட்டான சூழ்நிலையில் ஆண்டவர் ஏதாவது செய்வார் என்ற நம்பிக்கை அற்றவராய் அப்போஸ்தலர்கள் போல வாழ்வோரே பலர். அதனால் தான் 5 அப்பங்களை 5000 பேருக்கு பங்கிட்டபொழுதிலும், 7 அப்பங்களை 4000 பேருக்கு பங்கிட்ட பொழுதிலும், தங்களுக்கு அப்பங்கள் இல்லையே என்று எண்ண தோன்றின அப்போஸ்தலர் போல் இன்றும் பலர் உள்ளனர். ஆனால் அதே நேரத்தில் ஆண்டவரை குறித்து அதிகம் அறிந்திராதவராய், இருளுக்குள்ளாய், பிசாசின் பிடிக்குள்ளாய் வாழ்ந்து கொண்டிருப்போர், ஆண்டவரிடத்தில் வரும்போதும், அவர் ஏதாகிலும் செய்வார் என்று விசுவாசிக்கும் பொழுதும், மேன்மையான அனுபவத்தை, விடுதலையை பெற்றுக்கொள்கின்றனர். இப்படிப்பட்டவர்களே ஆண்டவருக்காய் வல்லமையாய் எழும்பி பிரகாசிக்கவும் செய்கின்றனர். இதனை நாம் இன்று ஆண்டவருக்காக வல்லமையாய் ஊழியம் செய்யும் பலரது அனுபவ சாட்சியாக கேட்கலாம்.

இதற்கு ஒரு சிறந்த உதாரணம் அப்போஸ்தலர் பவுல் ஆகும். ஆண்டவரோடு மூன்றரை வருடம் இருந்து அவர் மூலமாய் ஊழிய பாதையில் நடத்தப்பட்டு, அவர் பாடு மரணம் உயிர்த்தெழுதல் என அனைத்து அனுபவங்களையும் பெற்ற அப்போஸ்தலர்களை காட்டிலும், ஆண்டவருக்கு எதிராக இருந்து, ஆண்டவருடைய பிள்ளைகளை துன்பப்படுத்தி, கொலை செய்வதற்கு உறுதுணையாக இருந்த பவுலை, அப்போஸ்தலராக தேர்ந்தெடுத்து, அவரை புதிய ஏற்பாடு வேதாகமத்தில் பாதிக்கும் மேல் எழுதும்படியாய், தேவன் அவருக்கு கிருபை பாராட்டினார். ஆண்டவரோடு கூட இருந்த அப்போஸ்தலராகிய பேதுருவே, அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஆண்டவர் அளித்த வெளிப்பாட்டை புரிந்து கொள்ள அரிதாய் இருகிறது என்று கூறும் அளவிற்கு **(2 பேதுரு 3:15,16)**, அவரை ஊழிய பாதையில் உயர்த்தி வைத்தார். எனவே ஆண்டவர், நம்மிடத்திலும் எதிர்பார்ப்பது அந்த தகப்பனை போல, நம் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும், சிறிதானாலும், பெரிதானாலும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களானாலும், பூமிக்குரிய நன்மைகளானாலும், ஆண்டவர்

நமக்காக ஏதாவது செய்வார் என்ற சிறிய கடுகு விதை அளவு விசுவாசம் மட்டுமே, தகப்பன் தனக்காக ஏதாவது செய்வார் என்று விசுவாசிக்கிற சிறுபிள்ளை போல, நம் வாழ்க்கை இருக்குமானால், ஆண்டவர் நிச்சயம் நம்மையும் விசாரிப்பார், நம் அவிசுவாசம் நீங்க உதவி செய்வார், சூழ்நிலை எதுவானாலும், தேவை எதுவானாலும், நிச்சயம் நமக்கு விடுதலையை, வெற்றியை தருவார். ஆமென், அல்லேலூயா.

## 128. தேவனிடத்தில் ஐசுவரியம்

**தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங் களைச் சேர்த்துவைக்கிறவன் (லூக்கா 12:21)**




நாம் ஐசுவரியவான்களாய் இருப்பது தேவனுடைய சித்தம். ஆனால் எவற்றை நாம் ஐஸ்வர்யமாக கருதுகிறோம் என்பதே முக்கியம். மேற்கண்ட வேத வசனம் தெளிவாகக் கூறுகிறது நாம் தேவனிடத்தில் ஐசுவரியவான்களாய் இருக்க வேண்டும் என்று. **2 கொரிந்தியர் 8:9** கூறுகிறது **"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே."**. ஆம் இங்கு அவர் ஐஸ்வர்யம் உள்ளவராய் இருந்தார் என்றும், அந்த ஐஸ்வர்யத்தை நாம் பெறும்படியாய், நமது நிமித்தம் தரித்திரரானார் என்றும் வேத வசனம் தெளிவாகக் கூறுகிறது. இங்கு அவர் எவற்றில் எல்லாம் ஐஸ்வர்யவானாய் இருந்தாரோ, அவ்வற்றில்லெல்லாம் நாம் ஐஸ்வர்யவான்களாய் இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அதற்காகத்தான் அவர் தரித்திரத்தை ஏற்றுக் கொண்டார். பாவ சிலுவையை ஏற்றுக் கொண்டார். ஆம் அவர் ஐஸ்வர்யவானாய் இருந்தார் என்பது, அவர் தேவனிடத்தில் ஐஸ்வர்யம் உள்ளவராய் இருந்தார் என்பதாகும். முதலாவது அவர் தேவகுமாரனாய் தேவனுக்குரிய அனைத்திற்கும் உரிமையாளராய் இருந்தார். அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்க புத்திர சுவிகாரம் உடையவராய் இருந்தார். நாமும் அப்படிப்பட்ட ஈவை பெறும்படியாய், சர்வ வல்லமையுள்ள தேவனை அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்க புத்திர சுவிகாரம் உடையவர்களாய் மாறுவதற்காகவே அவர் தம்மைத் தாமை ஒப்புக்கொடுத்தார். எனவே நாம் பெறவேண்டிய முதல் மற்றும் மிக முக்கியமான ஐஸ்வர்யம், தேவப்பிள்ளை என்ற முத்திரையை ஆவியானவரின் மூலமாக பெறுவதே ஆகும். இவ்வுலக வாழ்விலும் நித்திய வாழ்விலும் நமக்கு ஐஸ்வர்யமாய் ஆதாரமாய் இருக்க வேண்டியது தேவபிள்ளை என்ற அங்கீகாரம்

மாத்திரமே. அந்த அங்கீகாரம் மற்ற அனைத்தையும் நமக்கு கூடப் பெற்றுத் தரும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவகுமாரனாய் எவற்றில் எல்லாம் ஐஸ்வர்யவானாய் இருந்தார் என்பதை நாம் பின்வருமாறு தியானிப்போம். அவ்வற்றில் நாமும் பெருகியிருந்தால் மாத்திரமே, நாமும் தேவனுடைய ஐஸ்வர்யத்தை உடைய தேவ பிள்ளைகள் என்ற அங்கீகாரத்தை பெறுவோம்.

**யோவான் 1: 14** கூறுகிறது **"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது."**. இங்கு அவர் தேவ வார்த்தையாகிய சத்தியத்தாலும், தேவ கிருபையினாலும், தேவ மகிமையினாலும் தம்மைத் தாமே தேவகுமாரனாய் வெளிப்படுத்தினார் என்பதை காணலாம். மேலும் **லூக்கா 8:46** இல் **"அதற்கு இயேசு: என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்."**. ஆம் அவர் தேவ வல்லமையால் நிறைந்திருந்தார். மேலும் **யோவான் 1:16** கூறுகிறது **"அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம்."** என்று. ஆம் அவரிலிருந்த பரிபூரணமான தேவ கிருபை, தேவ வல்லமை, தேவ வார்த்தை, தேவ மகிமை நம் எல்லோருக்கும் தேவ ஐஸ்வர்யமாய் கொடுக்கப்பட்டது. எனவே தேவனுடைய பார்வையில் பொக்கிஷமாக ஐஸ்வர்யமாக காணப்படுகிறவைகள் இப்படிப்பட்டவைகளே. அவருக்குரியவர்களாய் இருக்கும் நம்மிடத்திலும் தேவன் எதிர்பார்ப்பது இப்படிப்பட்ட ஐஸ்வர்யத்தை உடையவர்களாக இருப்பதே ஆகும்.

ஒருவேளை பூமிக்குரிய பார்வையில் தரித்திரராய் சிலர் காணப்பட்டாலும், குறைவுகள் உடையவர்களாக சிலர் காணப்பட்டாலும், அவர்களிடத்தில் தேவனுடைய ஐஸ்வர்யம் இருக்குமாகில் அவர்களே தேவனுடைய பார்வையில் ஐஸ்வர்யவான்கள். ஆனால் அதே நேரத்தில் ஆழிந்து போகும் பொன், வெள்ளி, மற்றும் மிகுதியான மற்ற செல்வங்களையும் இவ்வுலகில் ஒருவன் பெற்றிருந்தாலும், அதை தேவ திட்டத்தின்படி, தேவ ஐஸ்வர்யத்தோடு சேர்த்து, உலக ஐஸ்வர்யங்களை சரியாக பயன்படுத்தாவிட்டால், அவனது உலக ஐஸ்வர்யங்களால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அப்படிப்பட்டவர்களை ஆண்டவர் மதிகேடர் என்கிறார் **(லூக்கா 12:20)**. ஆம் தேவனிடத்தில் ஐஸ்வர்யவானாயிராமல், தனக்காகவே இவ்வுலக பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறவன் மதிகேடனாய் இருக்கிறான் **(லூக்கா 12:21)**. தேவன் தரும் ஆவிக்குரிய ஐஸ்வர்யங்களானாலும், பூமிக்குரிய ஐஸ்வர்யங்களானாலும், நாம் அதை நமக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனபடும்படியாக உபயோகிக்கும் பொழுது, அது தேவப்பார்வையில் நீதியாய் காணப்படுகிறது.

ஆம் ஆண்டவர் நமக்கும் தந்திருக்கும் அவருடைய கிருபை, வல்லமை, கனிகள், வரங்கள் என அனைத்தையும், நமக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனபடும்படியாய் உபயோகிக்க வேண்டும். இதையே நாம் ஐந்து தாலந்து, இரண்டு தாலந்து மட்டும் ஒரு தாலந்தை பெற்றவர்களின்

உவமையில் காண்கிறோம் (மத்தேயு 25:14-30). அதே நேரத்தில் இவ்வுலக ஆஸ்திகளையும், நாம் தேவையுள்ளோருக்கு பகிர்ந்து கொடுக்க ஆண்டவர் எதிர்பார்க்கிறார். சகேயுவின் வாழ்க்கையில் இதுவே நடந்தது. ஆண்டவர் இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்று கூறி, இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாய் இருக்கிறானே என்றார் (லூக்கா19:9). மேலும் தேவ ஆலயத்தில் காணிக்கைப் பெட்டியில் ஏழை விதவைப் போட்ட காணிக்கையையும் ஆண்டவர் இவ்வாறே பார்த்தார் (லூக்கா 21:1-4). தன்னை பின்பற்றும்படியாய் வந்த ஐஸ்வர்யவானாகிய வாலிபனிடத்திலும், இதையே எதிர் பார்த்தார். ஆனால் அவனோ, அதை செய்ய இயலாதவனாய் திரும்பி போனான்.

**லூக்கா 12:33,34** வசனங்கள் கூறுகிறது **"உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள், பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்."** என்று. ஆம் நாம் எதை பொக்கிஷமாக நினைக்கிறோமோ, அங்கு நம் இருதயமும் இருக்கும். ஆண்டவர் எதிர்பார்ப்பதெல்லாம் நம்முடைய இருதயம் அவருக்கேற்றதாய் இருக்க வேண்டும் என்பதே. அதனால் தான் ஆதி அப்போஸ்தல திருச்சபையில், **"விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்."** (அப்போஸ்தலர் 2:44,45). **"சீப்புருதீவானும் லேவியனும் அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர்பெற்றவனுமாகிய யோசே என்பவன், தனக்கு உண்டாயிருந்த நிலத்தைவிற்று, அதின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்."** (அப்போஸ்தலர் 4:36,37). ஆனால் அதே நேரத்தில் தேவ ஐஸ்வர்யத்தை பெற்றும், உலக ஐஸ்வரியத்தை விட முடியாமல் போன அனனியா மற்றும் சப்பீராளின் நிலைமை பரிதாபமாய் முடிந்தது (அப்போஸ்தலர் 5:1-10). ஆண்டவரை காட்டிக்கொடுத்த யூதாஸ் ஸ்காரியோத்தும், ஆண்டவர் தனக்கு தந்த அருமையான அப்போஸ்தலன் என்கிற ஆவிக்குரிய பொக்கிஷத்தை, வெறும் 30 வெள்ளி காசு எனும் இவ்வுலக ஐஸ்வரியத்துக்காக இழந்து போனான். **அப்போஸ்தலர் 1:24** கூறுகிறது **"எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும்"**. ஆம் அருமையான பொக்கிஷமாகிய அப்போஸ்தல பட்டத்தை, அவன் இழந்து போனான். இன்று வாழும் நமக்கு இது ஒரு பாடமாய் உள்ளது.

எனவே நாம் தேடி சேர்க்க வேண்டிய முதலாவது காரியம், தேவ ஐஸ்வர்யத்தையே. அதே நேரத்தில் அந்த ஐஸ்வரியத்தை நாம் தேவ நாம மகிமைக்காக பிரயோஜனப்படுத்தவும் வேண்டும். மேலும் உலக ஐஸ்வர்யத்தையும் ஆண்டவர் நமக்கு கொடுக்கும் பொழுது, அதையும் நாம்

அவர் நாம மகிமைக்காகவே பயன்படுத்தும் பொழுது, சகல நன்மையும், ஐஸ்வரியமும், நமக்கு சம்பூரணமாயிருக்கும். ஆமென், அல்லேலுயா.

## 129. நற்கிரியைகளைக் கண்டு

**புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். (1 பேதுரு 2:12)**




ஆண்டவர் கொடுத்த பிரதான கட்டளை **"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்." (மத்தேயு 28:19,20)** என்பதாகும். எனவே ஒரு தேவனுடைய பிள்ளையின் பிரதான பணி, ஆண்டவரைப் பற்றிய நற்செய்தியை எவ்விதத்திலாவது பிறருக்கு அறிவிப்பது ஆகும். மேலும் **1 பேதுரு 2:9** கூறுகிறது **"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."** என்று. **1 கொரிந்தியர் 9:16** இல், பவுல் கூறுகிறார், **"சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ."** என்று. எனவே சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டியது ஒவ்வொரு தேவப்பிள்ளையின் கடமையாகும். ஆனால் அப்படிப்பட்ட சுவிசேஷ வார்த்தை, அதைக் கேட்பவர்களின் இருதயத்தில் கிரியை செய்ய வேண்டுமானால், அதன் மூலம் அவர்கள்

தேவனுக்குரியவர்களாய் மாற வேண்டுமானால், நாம் மற்றொன்றையும் சேர்த்து செய்ய வேண்டியுள்ளது. அதை பற்றியே மேற்க்கண்ட 1 பேதுரு 2:12 கூறுகிறது.

ஆம் நம்முடைய நற்கிரியைகளே நம்மில் உள்ள கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிறது. 2 கொரிந்தியர் 2:14-16 வசனங்கள் கூறுகிறது **"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே மரணத்திற் கேதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம். இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?"**. ஆம் நம்முடைய வாயின் வார்த்தைகள் மட்டுமல்ல, நம்முடைய சுபாவம், கிரியைகள் ஆகியவையும் நம்மில் இருக்கும் கிறிஸ்துவின் நற்கந்தத்தை வெளிப்படுத்தும். அதுவே மற்றவர்கள் தேவனை மகிமைப்படுத்தி இரட்சிக்கப்படுவதற்கும், அல்லது கீழ்படியாமையினால் கெட்டுப்போய் நித்திய மரணமடைவதற்கும் காரணமாய் இருக்கிறது. இதனால் தான், பவுல் அகிரிப்பா ராஜாவிற்கு முன் நின்று, ஆண்டவரைப் பற்றி சாட்சி பகிர்ந்த பொழுது, **அப்போஸ்தலர்** 26:28,29 இல் **"அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான். அதற்குப் பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்."**.

ஆம் பவுலின் சுபாவம், மற்றும் அவருடைய சாட்சி உள்ள வாழ்க்கை மற்றவர்கள் பின்பற்றக்கூடிய முன்மாதிரியாய் இருந்தபடியால், என்னைப்போலாகும்படி என அவரால் தைரியமாய் கூற முடிந்தது. கிறிஸ்துவின் வாசனை, பவுலினிடத்திலிருந்து வெளிப்பட்டபடியால் அகிரிப்பா ராஜா இவ்வாறாக கூறினார். ஆம் மற்றவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாவதற்கு, சத்திய சுவிசேஷத்தை அறிவிப்பது மாத்திரமல்ல, அதன்படி வாழ்ந்து நற்கிரியைகளான கிறிஸ்துவின் நற்கந்தத்தை நம்மில் இருந்து வெளிப்படுத்த வேண்டும்.

ஏனெனில் பிலிப்பியர் 1:14-19 வசனங்களில் **"சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள். சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள். சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள். இதனாலென்ன? வஞ்சகத்தினாலாவது,**

**உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன். அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன். "**. இங்கு நாம் காண்கிறபடி, கிறிஸ்துவை பிரசங்கிப்போர் பலர் இருந்தனர். ஆனால் அவர்களில் சிலருடைய கிரியைகளோ, நற்கிரியைகளாயிராமல், துர்கிரியைகளாய் இருக்கின்றன. ஆம் சுத்தமனதோடு கிறிஸ்துவை அறிவியாமல் என்று பவுல் கூறுவதில் இருந்து, அவர்கள் உதட்டளவில் கிறிஸ்துவை பிரசங்கித்தனர். ஆனால் அவர்கள் பிரசங்கித்த வார்த்தைகள் அவர்களது மனதையே தொடவில்லை.

இன்று இப்படிப்பட்ட காரியங்களே காணப்படுகின்றன. ஒரு காலத்தில் கிறிஸ்துவை அறிவிப்பவர்கள் சிலராய் இருந்தனர். ஆனாலும் அவர்கள் ஊழியமும், அவர்களது வாழ்க்கையின் அர்பணிப்பும், அவர்கள் வெளிப்படுத்திய சுபாவ பண்புகளும், பலரை கிறிஸ்துவண்டை கூட்டி சேர்த்தது. எனவே உலகத்தில் எங்கெல்லாம் சுவிசேஷம் முதலாவது அறிவிக்கப்பட்டு, சபைகள் உருவான நேரத்தில், அந்த சபைகளின் ஆவிக்குரிய தரமும், அவற்றின் மூலம் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் நன்மைகளும் அதிகமாயிருந்தன. இன்று தேவனுக்கு மகிமையாக எழும்பி நிற்கும் ஆலயங்களும், பள்ளி கல்லூரி, மருத்துவமனைகளும் அதற்கு சாட்சி. இதனால்தான் பேதுரு, **1 பேதுரு 5:1-4** வசனங்களில் **"உங்களிலுள்ள மூப்பருக்கு உடன்மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்."** என்று கூறுகிறார்.

ஆம் மேற்கூறப்பட்டபடி அவலட்சணமான ஆதாயத்திற்காக ஊழியம் செய்யக்கூடாது. இப்படிப்பட்டவர்கள் தேவ பக்தியை ஆதாயத் தொழிலாக மாற்றி, மந்தை மேய்ப்பதற்கு பதிலாக மந்தையை மேய்ந்து போடுகிறவர்களாய் இருக்கின்றனர். இன்று ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறோம் என்று பலர் எழும்புகின்றனர். குறிப்பாக வாலிபர்கள் பலர், எங்கள் திறமையை, தாலந்தை ஆண்டவருக்காக பயன்படுத்த போகிறோம் என்று கூறி, சபை ஊழியம், சுவிசேஷ ஊழியம், பாடல் ஊழியம் என பலவிதங்களில் ஊழியம் செய்கின்றனர். ஆனால், அவற்றால் சமுதாயத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. காரணம், அவர்களின் ஊழியத்தின் மூலம் ஆண்டவர் மகிமைப்படுவதற்கு பதிலாக, அவர்கள் தங்கள் சுய மகிமையை தேடுகின்றனர். இன்னும் சிலர், ஊழியத்தை ஆதாயத் தொழிலாக மாற்றி விட்டனர். இவற்றையெல்லாம் விட சிலர், ஊழியம் என்ற போர்வையில் உலகத்தை சபைக்குள்ளாக கொண்டு வந்து விட்டனர். இதனால் இன்று சபையில் ஆராதனையில் கலந்து கொள்வதற்கும், உலகப்

பிரகாரமான இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விட்டது.

**அப்போஸ்தலர் 19:11-17** வசனங்களில் **“பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன. அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து: பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள். பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஒர் யூதனுடைய குமாரர் ஏழுபேர் இப்படிச் செய்தார்கள். பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி, பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள். இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபோது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது.“**.

இங்கு மேற்கண்ட வசனங்களில் பவுலினிடத்திலிருந்து வெளிப்பட்ட தேவ வல்லமையை, சரியாக புரிந்து கொள்ளாமல் அதை ஒரு மந்திர வித்தை போல் நினைத்து, அதைப்போல் செய்யு முற்பட்ட அந்த ஏழு வாலிபர்களின் நிலையை நாம் காணலாம். இன்று உள்ள வாலிபர்களும், ஊழியத்தின் மேன்மையை, தேவ வார்த்தையின் வல்லமையை, உணராமல் அதற்கு கீழ்படியாமல், ஏதோ ஒரு ஷோ (Show) செய்வது போல் நினைத்து, ஆண்டவருடைய ஊழியத்தை செய்வது வேதனைக்குறியது. அதனால் தேவ வல்லமை வெளிப்படாமல், பிசாசின் வல்லமையே வெளிப்படுகிறது. ஊழிய அழைப்பும், அர்ப்பணிப்பும் இல்லாமல் YouTube போன்ற சோசியல் மீடியாக்களில் பிரபலமடைவதற்கும், அதன் மூலம் வருமானம் சம்பாதிப்பதற்கும், இன்று ஊழியம் செய்யப்படுகிறது. இது மிகவும் வேதனைக்குரிய காரியமாகும்.

இன்று சத்துருவாகிய பிசாசானவன், அநேக இளைஞர்களை இப்படிப்பட்ட பாதையில் அழைத்துச் சென்று, அவர்களை வஞ்சிக்கிறான். இதனால் தேவ நாம மகிமைப்படுவதற்கு பதிலாக தூஷிக்கப்பட இவர்கள் காரணமாக இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில், **“ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.“ (யோவான் 12:26)** என்று ஆண்டவரே கூறியுள்ளார். ஆண்டவருக்கு உண்மையாய் ஊழியம் செய்தோர், பலவித துன்பங்களின் வழியாய் கடந்து போயிருந்தாலும், கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ணி, தங்களை அர்பணித்ததால், பிதாவாகிய தேவனால்

அவர்கள் கனப்படுத்தப்பட்டு, இன்றளவும் அவர்களுடைய பெயர் சபை சரித்திரத்தில் காணப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக பரமராஜ்யத்தை அவர்களும், அவர்களின் ஊழியத்தின் மூலமாக ஆண்டவரை அறிந்தவர்களும், சேர்ந்துள்ளனர். எனவே **1 பேதுரு 2:12** இல், நாம் கண்டபடி தேவ நாமம் மகிமைப்படும்படியாக, நல்நடக்கை உடையவர்களாக நாம் இருப்பது, நாம் செய்யும் ஊழியத்திற்கு உண்மையான பலனை தரும். ஆண்டவர் தாமே அப்படிப்பட்ட ஊழியத்தை செய்யும்படியாய், நம் ஒவ்வொருவருக்கும் கிருபை பாராட்டுவராக. ஆமென், அல்லேலூயா.

# 130. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 1



வேதாகமம் முழுவதும் தலைவனாக, அரசனாக, நியாதிபதியாக, தீர்க்கதரிசியாக இருந்து தேவ ஜனங்களை பல்வேறு சூழ்நிலைகளில் வழி நடத்தியவர்கள் பலர் உண்டு. ஆனால் தகப்பனாக இருந்து நடத்தியவர்கள் மிகச் சிலரே. அவர்களின் ஒருவர் தான், சர்வ இஸ்ரவேலையும் 40 ஆண்டு காலங்கள் எகிப்தில் இருந்து கானான் தேசம் வரை வழி நடத்தி வந்த மோசேயாகும். ஆம் தேவனால் நேரடியாக அழைக்கப்பட்டு, இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் ஒவ்வொரு நாளும் இஸ்ரவேலரை வழிநடத்தியவர் மோசேயாகும். வேதத்தின் முதல் ஐந்து ஆகமங்களான பஞ்சாகமங்களும், மோசேயினால் எழுதப்பட்டது என்பது யாவரும் அறிந்த ஒன்று. அவற்றில் உலக சிருஷ்டிப்பும் முற்பிதாக்களின் வரலாறும் முதல் ஆகமமான ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற நான்கு ஆகமங்களும் இஸ்ரவேலரின் பயணத்தை பற்றிய மற்றும் அதனை சார்ந்த விஷயங்களைப் பற்றியே கூறுகிறது. மோசே பிறந்த இக்கட்டான சூழ்நிலை பற்றியும், அவர் எவ்வாறு தேவனால் காக்கப்பட்டு பார்வோன் அரண்மனையில், பார்வோன் குமாரத்தியின் மகனாகவே வளர்க்கப்பட்டார் என்பது பற்றியும், அவர் எதற்காக எகிப்தை விட்டு ஓடி மீதியானில் தஞ்சம் அடைந்தார் என்பதையும், ஆக அவருடைய முதல் எண்பது ஆண்டு வாழ்க்கை முழுவதும் ஒரு சிறு அதிகாரத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆம் அவருடைய முதல் 80 ஆண்டு கால வாழ்க்கை முழுவதிலும் ஆண்டவர் அவர் வாழ்க்கையில் அமைதியாகவே செயல்பட்டார். அவர் அவ்வளவு காலம் எவ்வாறு தேவனை வழிபட்டார் என்பது கூட பதியப்படவில்லை. காரணம் தேவன் முற்பிதாக்களின் காலத்திற்கு பின்

ஏறக்குறைய 450 ஆண்டுகள் வரையிலும் யாருடனும் இடைபடவில்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அமைதியாக ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மோசேயை ஆண்டவர் அழைத்தார். அன்றிலிருந்து ஆரம்பித்த மீட்பின் பயணம், இன்று வரை சரீர பிரகாரமாகவும் (இஸ்ரவேலருக்கு), ஆவிக்குரிய பிரகாரமாகவும் (ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாகிய நமக்கு) தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. நாம் இருக்கும் இந்த கிபி 2025 ஆம் ஆண்டிலும், இஸ்ரவேலரும் (கானானுக்காக), ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாமும் (பரம கானானுக்காக) போராடிக் கொண்டுதான் இருக்கிறோம். அன்று மோசேயின் மூலம் விடுதலைப் பயணத்தை ஆரம்பித்த தேவன் இன்றும் அதை பலரைக் கொண்டு நம்மில் நடத்திக் கொண்டுதான் இருக்கிறார். குறிப்பாக மோசேயின் மூலமாக நடந்த அந்த முதலாவது விடுதலைப் பயணம், அவரது வாழ்க்கையின் இறுதி 40 ஆண்டுகளை பற்றி (80 - 120 வயது) நான்கு ஆகமங்களிலும் நமக்கு அறிய தருகிறது. அவர் எவ்வாறு தலைவனாக மாத்திரமல்ல, இஸ்ரேல் மக்களுக்கு ஆவிக்குரிய தகப்பனாகவும் இருந்து வழிநடத்தினார் என்பதை நாம் காணலாம். அப்படிப்பட்ட தலைவர்கள் (தகப்பன்மார்கள்) இந்த கடைசி காலத்தில், ஆவிக்குறிய இஸ்ரவேலராகிய நாம், பரம கானானைச் சென்றடைய மிகவும் தேவைப்படுகின்றனர். இப்பொழுது நாம் மோசே எவ்வாறு தலைவனாய் மாத்திரம் அல்ல, இஸ்ரவேலருக்கு தகப்பனாகவும் இருந்து வழிநடத்தினார் என்பதை பின்வருமாறு விரிவாக தியானிப்போம்,

**யாத்திராகமம் 3:1-4** வசனங்கள் கூறுகிறது **“மோசே மீதியான் தேசத்து ஆசாரியனாயிருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவந்தான். அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டி, தேவபர்வதமாகிய ஓரேப்மட்டும் வந்தான். அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப்பார்த்தான்; முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது. அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்துபோகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதகாட்சியைப் பார்ப்பேன் என்றான். அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான்.“**. இங்கு ஓரேப் பர்வதத்தில் அமைதியாக தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மோசே மேய்த்துக் கொண்டிருப்பதை காணலாம். தன்னுடைய முதல் 40 வருட வாழ்க்கையை முற்றிலும் மறந்தவராக, தன்னுடைய அடுத்த 40 வருட வாழ்க்கையை அவர் இவ்வாறாக ஆடுகளை மேய்ப்பதிலேயே கழித்தார். ஆகிலும் **யாத்திராகமம் 2:22** கூறுகிறபடி **“நான் அந்நிய தேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன் என்று சொல்லி, அவனுக்கு கெர்சோம் என்று பேரிட்டான்.“**, தான் இருக்கும் இந்த இடம் தனக்குரியது அல்ல என்பதை அவர் அறிந்திருந்தார் என்பது, கெர்சோம் என்று தன் மகனுக்கு பெயர் வைத்ததிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். தன் மக்கள் அனைவரும் (அவர் குடும்பம் உள்பட) எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தும், ஒன்றும் செய்ய இயலாதவராய் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். தன் வாழ்க்கையில் மூன்றில் இரண்டு பங்கு வாழ்க்கையை (எண்பது வருட

வாழ்க்கையை) வாழ்ந்து முடித்திருந்த அவர், இனி தன் வாழ்வில் ஏற்பட போகும் மாற்றத்தை குறித்து சற்றும் எதிர்பாராதவராய் இருந்தார். இங்கு ஆண்டவர் கர்த்தருடைய தூதரானாவராகவும், கர்த்தராகவும் ஆபிரகாமுக்கு தன்னை வெளிப்படுத்தியது போல, இங்கு மோசேக்கும் தரிசனம் ஆனார். முட்செடி நடுவில் இருந்து தேவன் அவரை நோக்கி மோசே என்று கூப்பிட்டார். இங்கு ஆண்டவர் கூப்பிட்ட மாத்திரத்தில், ஆண்டவரே நீர் யார் என்று கூட அவர் கேட்கவில்லை, உடனடியாக இதோ அடியேன் என்று சொல்லி தேவ சத்தத்திற்கு கீழ்ப்படிந்தார். தேவன் அவருக்கு தம்முடைய அனாதி திட்டத்தினை வெளிப்படுத்தி, தாம் ஆபிரகாமுக்கும், ஈசாக்கிற்கும், யாக்கோபிற்கும் வாக்குதத்தம் பண்ணின, பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு, இஸ்ரவேல் மக்களை வழிநடத்திச் செல்லும் தலைவனாக ஆண்டவர் மோசேயை அழைத்தார்.

ஆனால் அவரோ, **“அப்பொழுது மோசே தேவனை நோக்கி: பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும், நான் எம்மாத்திரம் என்றான்.“ (யாத்திராகமம் 3:11)**. ஆனாலும், அவரை அழைத்த தேவன் தம் நாமத்தை அவருக்கு வெளிப்படுத்தி, அடையாளங்களையும் அவர் கையில் கொடுத்தார். இருப்பினும் **“அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்குவல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன் என்றான்.“ (யாத்திராகமம் 4:10)**. ஆனால் ஆண்டவரோ, **“அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா? ஆதலால், நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்.“ (யாத்திராகமம் 4:11,12)**. ஆனால் மறுபடியும் மோசே **“அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான்.“ (யாத்திராகமம் 4:13)**. **“அப்பொழுது கர்த்தர் மோசேயின்மேல் கோபம்மூண்டவராகி: லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவா? அவன் நன்றாய்ப் பேசுகிறவன் என்று அறிவேன்; அவன் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டுவருகிறான்; உன்னைக் காணும்போது அவன் இருதயம் மகிழும். நீ அவனோடே பேசி, அவன் வாயில் வார்த்தைகளைப் போடு; நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்து, நீங்கள் செய்யவேண்டியதை உங்களுக்கு உணர்த்துவேன். அவன் உனக்குப் பதிலாக ஜனங்களோடே பேசுவான்; இவ்விதமாய் அவன் உனக்கு வாயாக இருப்பான்; நீ அவனுக்குத் தேவனாக இருப்பாய். இந்தக் கோலையும் உன் கையிலே பிடித்துக்கொண்டுபோ, இதனால் நீ அடையாளங்களைச் செய்வாய் என்றார்.“ (யாத்திராகமம் 4:14-17)**. இங்கு மிக நீண்ட சம்பாஷணைக்கு பிறகு, மோசே ஆண்டவருடைய வேலையை செய்ய தன்னை அர்பணித்தாலும், இங்கு ஆண்டவர் அழைத்தபடி, தன் மக்களுக்கென அவர் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த பின்பு, அவர் வாழ்நாளின் இறுதிவரை அந்த பணியை தொடர்ந்து செய்தார். பார்வோனின் மூலமாக, அன்னிய ஜனங்களின் மூலமாக, தன் சொந்த ஜனங்களின் மூலமாக, தன் வீட்டார் மூலமாகவும், எத்தனையோ இன்னல்களை,

எதிர்ப்புகளை அவர் சந்தித்த பொழுதும், ஆண்டவர் கொடுத்த இந்த பணியை விட்டு அவர் விலகவில்லை. ஆண்டவரே, இந்த ஜனங்களை விட்டுவிடு நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன், என்று கூறிய பொழுது கூட அவர் தன் ஜனங்களை வழிநடத்துவதை விட்டு விலகவில்லை. இதுவே அவர் தலைவனாக மாத்திரமல்ல, தன் ஜனங்களுக்கு தகப்பனாகவும் இருந்து அவர்களை நடத்தினார் என்பதற்கு சான்றாகும்.

ஆம் ஜனங்களை வெறுமனே நடத்திச் சென்றது மட்டுமல்ல, ஆண்டவரிடமிருந்து 10 கற்பனைகள் உட்பட அனைத்து நியாயப்பிரமாண முறைகளையும் பெற்று, அதை தன் ஜனங்களுக்கு தந்தார். செங்கடலை பிளந்து ஜனங்களை நடத்திச் சென்று, வான மன்னாவை தேவனிடத்தில் பெற்று தன் ஜனங்களை போஷித்தார். ஒவ்வொரு முறையும் சிறுபிள்ளைகளை போல, இஸ்ரவேல் ஜனங்கள் முறுமுறுத்த போதும் தகப்பனைப் போல அவர்கள் தேவையறிந்து, அதற்காக தேவனிடத்தில் மன்றாடி, அவர்களின் ஆவிக்குரிய தேவைகளையும், பூமிக்குரிய தேவைகளையும் ஒவ்வொரு நாளும் சந்தித்தார். அவர்களை கண்டிக்க வேண்டிய நேரத்தில் தகப்பனை போல அவர்களை கண்டித்து, அதே நேரத்தில் அவர்கள் செய்த தவற்றினால் உண்டான வேதனையை தாமும் சுமந்தார். ஆம் 40 வருடங்கள் ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களின் கீழ்ப்படியாமையால், அவர்களை வனாந்தரத்தில் நடத்தின பொழுது, அவர்களோடு சேர்ந்து மோசே வனாந்தரத்தில் இருந்தார். ஆண்டவர் ஆரோனையும் அவன் சந்ததியாரையும் ஆசாரிய பட்டத்திற்கு தேர்ந்தெடுத்த பொழுது, அவர் தனக்காகவோ தன் சந்ததியாருக்காகவோ எதையும் தேவனிடத்தில் வேண்டவில்லை. ஆவிக்குரிய காரியத்தில் ஜனங்களை நடத்த ஆரோன் அபிஷேக்க பட்டது போல, தனக்குபின் தன் ஜனங்களை தலைவனாக இருந்து நடத்த யோசுவாவையும், மோசே உருவாக்கினார். ஆண்டவர் அழைத்த அந்த ஒரு அழைப்பிற்காக தன்னையே அர்ப்பணித்த அவர், அந்த ஊழியத்திற்காக எப்படிப்பட்ட சூழ்நிலையையும் கடந்து செல்ல தயாராக இருந்தார். ஆனால் அதே நேரத்தில் ஊழியத்தின் மூலம் தனக்கென எவ்விதத்திலும் அவர் ஆதாயத்தை எதிர்பார்க்கவில்லை. தேவ ஜனங்களை தன் சொந்த பிள்ளைகளாக பாவித்து, தேவன் கொடுத்த ஊழியத்தை, ஒரு குடும்பத்தை, தகப்பனாக இருந்து நடத்துவதைப் போல, அவர் இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்தினார்.

அதனால் தான் ஆண்டவரே அவரைக் குறித்து சாட்சி கொடுத்தார். கர்த்தருடைய பர்வதத்தில் மகிமையான அனுபவங்களை பெற்று தேவ மகிமையை தன் சரீரத்தில் தாங்கினவராக, மற்றவர்கள் அந்த மகிமைக்கு முன்பு நிற்க முடியாததால், தன் முகத்தை முக்காட்டிட்டு மறைத்துக் கொண்டார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மறுரூப மலையில், மகிமையை அடைந்த பொழுது, அங்கும் அவரோடு காணப்பட்டார். ஆம் அவர் ஊழியம் புதிய ஏற்பாட்டிலும் தொடர்கிறது. வேத பண்டிதர்கள் கூற்றுப்படி, வெளிப்படுத்துன விசேஷத்தில் கூறப்பட்டுள்ள, மகா உபத்திரவக் காலத்தின் இரண்டு சாட்சிகளில் ஒருவராய் இருந்து, அவர் ஊழியத்தை நிறைவேற்றுவார். இவ்வாறு தன்னையே முற்றிலுமாய் அர்ப்பணித்த மோசேயின் மரணம் கூட மகிமையானதாக இருந்தது. ஆம் ஆண்டவர் மோசேயின் சரீரத்தை கூட யாரிடமும் கொடுக்கவில்லை.

**உபாகமம் 34:5,6** கூறுகிறது **“அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான்.“** ஆம், ஆண்டவர் எவ்வாறு அவர் சரீரத்தை அடக்கம் பண்ணினார் என்பதை ஒருவரும் அறியார். தனக்கென்று, தன் ஆவி, ஆத்துமா, சரீரம், வாழ்க்கை என அனைத்தையும் அர்ப்பணித்த மோசேயின் மண்ணான சரீரத்தைக் கூட, ஆண்டவர் பாதுகாத்தார். காரணம், அந்த மண்ணான சரீரத்திலே, தேவ மகிமை விளங்கும்படியாய் அவர் வாழ்ந்தார். அவர் செய்த ஊழியத்தின் காரியங்களை பின்வரும் பாகங்களில் விரிவாக காண்போம். ஆண்டவர் தாமே மோசேயை போல, நாமும் தேவனுக்கென வாழ்ந்திட, அவர் ஊழியம் செய்திட, அதை அவர் சித்தப்படியே செய்திட, தேவ மகிமையை சுமந்தவர்களாய், தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ள ஊழியனாகிய மோசேயை காட்டிலும், தேவனை அப்பா பிதாவே, என்று கூப்பிடத்தக்க புத்திர சுவிகாரத்தை உடையவர்களாய், அவருக்கென வாழ தேவன் கிருபை பாராட்டுவாராக. ஆமென், அல்லேலூயா.

# 131. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 2



தேவனாகிய கர்த்தர் மோசேயைக் கொண்டு, இஸ்ரவேல் மக்களை எகிப்தில் இருந்து மீட்டு இரட்சிப்பதற்காக எவ்வாறு அழைத்தார் என்பதையும், அந்த உன்னதமான பணிக்காக அவர் எவ்வாறு தன்னை அர்ப்பணித்தார் என்பதையும் பாகம் ஒன்றில் கண்டோம். இவ்விரண்டாம் பாகத்தில் அவர் இஸ்ரவேல் மக்களை தலைவனாகவும், தகப்பனாகவும் இருந்து எவ்வாறு வழிநடத்தினார் என்பதை காண்போம். இஸ்ரவேல் மக்களை பல்வேறு இன்னல்களுக்கு, வாதைகளுக்கு பிறகு, பஸ்கா ஆட்டுக்குட்டியை பலியிட்டு, கடினப்பட்டிருந்த பார்வோனின் இருதயத்தை உடைத்தெறிந்து, எகிப்தியரின் வெள்ளியையும் பொன்னையும் பெற்று, **"இஸ்ரவேல் புத்திரர் ராமசேசை விட்டுக் கால்நடையாய்ப் பிரயாணம்பண்ணி, சுக்கோத்துக்குப் போனார்கள்; அவர்கள், பிள்ளைகள்தவிர ஆறுலட்சம் புருஷராயிருந்தார்கள். அவர்களோடே கூடப் பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதும் அன்றி, மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருகஜீவன்களும் போயிற்று. எகிப்திலிருந்து அவர்கள் கொண்டு வந்த பிசைந்தமாவைப் புளிப்பில்லா அப்பங்களாகச் சுட்டார்கள்; அவர்கள் எகிப்தில் தரிக்கக்கூடாமல் துரத்திவிடப்பட்டதினால், அது புளியாதிருந்தது; அவர்கள் தங்களுக்கு வழிக்கென்று ஒன்றும் ஆயத்தம்பண்ணவில்லை. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் நானூற்றுமுப்பது வருஷம். நானூற்றுமுப்பது வருஷம் முடிந்த அன்றைத்தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது.", (யாத்திராகமம் 12:37-41).** இப்படி மிக அருமையாக, தேவ வழிநடத்துதலின்படி எகிப்தை விட்டு புறப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களை, **"அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார். பகலிலே**

**மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை." (யாத்திராகமம்** 13:21,22). இங்கு அருமையாக மோசேயின் தலைமையில் ஆண்டவர் இஸ்ரவேல் மக்களை மீட்டெடுத்து, அடிமையான எகிப்தில் இருந்து சுதந்திரமான பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்திற்கு வழி நடத்தினார். இங்கு அவர்கள் தொடர்ந்து ஆண்டவர் கூறியபடி, மோசேக்கு கீழ்ப்படிந்து நடந்திருப்பார்களானால், கானானை சில நாட்கள் அல்லது மாதங்களுக்குள்ளாக அடைந்திருக்கலாம். ஆனால் அவர்களோ தங்கள் முரட்டாட்டத்தினால், கீழ்ப்படியாமையினால் 40 வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்த பின்னரே கானானை அடைந்தனர். ஆகிலும் அந்த 40 வருட காலமும் ஆண்டவர் மோசேயை உபயோகித்தார். ஆம் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும், மோசே தன்னை ஒரு தலைவனாக, தகப்பனாக முன்னிறுத்தி, இஸ்ரவேல் மக்களை 40 வருட காலம் சிதறாமல், யார் கையிலும் அடிமைப்படாமல், அவர்கள் கர்த்தரை விட்டு விலகினாலும் அவர்களுக்காக மன்றாடி மறுபடியும் அவர்களை கர்த்தரிடம் திருப்பி, இவ்வாறு தலைவனாக, ஆசாரியனாக, தீர்க்கதரிசியாக எல்லாவற்றிற்கும் மேலாக தகப்பனாக இருந்து அவர்களை வழிநடத்தினார். அவற்றை ஒவ்வொன்றாக நாம் பின்வருமாறு காண்போம்.

முதலாவது, அவர்கள் விடுதலை பெற்று பிரயாணப்பட்ட சில மணி நேரங்களில், அவர்கள் சிவந்த சமுத்திர ஓரமாய் வருகையில் பார்வோன் தங்களை பின்தொடர்வதை கண்டு பயந்தார்கள். **"பார்வோன் சமீபித்து வருகிறபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு, மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்." (யாத்திராகமம்** 14:10). இங்கு இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை நோக்கி கூப்பிட்டாலும், **யாத்திராகமம் 14:11,12** வசனங்களில், **"அன்றியும் அவர்கள் மோசேயை நோக்கி: எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன? நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள்."**. நேற்று வரை அவர்கள் எகிப்தில் இருந்தாலும், அவர்கள் உயிருக்கு பாதிப்பில்லாதிருந்தது, ஆனால் இப்பொழுது தங்கள் உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்ற அச்சத்தில், எகிப்தில் பார்வோனும் எகிப்தியரும் கண்டு அச்சப்படும் விதத்தில், பத்து வித வாதைகளை நடத்தி தங்களை அருமையாக புறப்பட பண்ணின கர்த்தரின் செயல்களை இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து, மோசேயுடன் முறையிட்டனர்.

ஆனால் மோசேயோ கர்த்தரை பற்றிப் பிடித்துக் கொண்டவராக, **"அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக**

யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.“ (யாத்திராகமம் 14:13,14). “அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு. நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்.“ (யாத்திராகமம் 14:15,16), என்றார். “மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்க்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப்பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று.“ (யாத்திராகமம் 14:21). “இஸ்ரவேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையின் வழியாய் நடந்துபோனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து ரட்சித்தார்; கடற்கரையிலே எகிப்தியர் செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேலர் கண்டார்கள். கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்.“ (யாத்திராகமம் 14:29-31). இங்கு எகிப்தில் நடப்பித்த 10 வாதைகள் மட்டும் இல்லாமல், சிவந்த சமுத்திரத்தையே ஆண்டவர் பிளந்து மோசேயின் தலைமையில் அவர்களை நடத்தினார். இதனை கண்டு பிரமித்த இஸ்ரவேல் மக்கள் கர்த்தருக்கு பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயின்னிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள். ஆம் கர்த்தருடைய வல்லமையை அவர்கள் பிரத்தியட்சமாய் கண்டார்கள். அதனால் அவருக்கு பயந்தார்கள். மேலும் மோசே கர்த்தருடைய ஊழியக்காரன் என்பதையும் உணர்ந்து, இந்த பிரயாணத்தில் நிச்சயமாய் கர்த்தர் தங்களை மோசேயின் தலைமையில் வழி நடத்துவார் என்பதை விசுவாசித்தனர், கர்த்தரை புகழ்ந்து பாடினர்.

ஆனால் அவர்கள் விசுவாசம், பாடல் எல்லாம் சில நாட்கள் கூட நீடிக்கவில்லை, “பின்பு மோசே இஸ்ரவேல் ஜனங்களைச் சிவந்த சமுத்திரத்திலிருந்து பிரயாணப்படுத்தினான். அவர்கள் சூர்வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப்போய், மூன்றுநாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள். அவர்கள் மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் அதைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது; அதினால் அவ்விடத்துக்கு மாரா என்று பேரிடப்பட்டது.“(யாத்திராகமம் 15:22,23). இங்கு மறுபடியும் அவர்களுக்கு தேவை ஏற்பட்டது. சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரையே பிளந்த தேவன், தங்கள் தாகத்துக்கு தண்ணீர் தர மாட்டாரா என்ற எண்ணம் கூட இல்லாமல், “அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: என்னத்தைக் குடிப்போம் என்றார்கள்.“ (யாத்திராகமம் 15:24). இங்கு மறுபடியும் மோசே ஜனங்களின் முறுமுறுப்பிற்கு உள்ளானார். இங்கு அவர்கள் ஆண்டவரை நோக்கி முறையிடவில்லை, மோசேக்கு விரோதமாய் தான் முறுமுறுத்தனர். ஒருவேளை மோசே ஜனங்களிடம்,

என்னிடம் ஏன் முறையிடுகிறீர்கள், ஆண்டவரிடம் கேளுங்கள் என்று கூறி இருக்கலாம், ஆனால் அவரோ அந்த முறுமுறுப்பை ஒரு பிள்ளை தன் தகப்பனிடம் கேட்பதை போல் எண்ணி, **“மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று.“ (யாத்திராகமம் 15:25)**. இங்கு மறுபடியும் அற்புதமாய் தங்கள் தேவைகள் சந்திக்கப்பட்டு பகலில் மேகஸ்தம்பமும், இரவில் அக்னி ஸ்தம்பமும் தங்களை வழி நடத்தியும், சில மாத பிரயாணத்தில், **“இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் ஏலிமைவிட்டுப் பிரயாணம் பண்ணி, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே, ஏலிமுக்கும் சீனாய்க்கும் நடுவே இருக்கிற சீன்வனாந்தரத்தில் சேர்ந்தார்கள். அந்த வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப்போனோமானால் தாவிளை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களே என்று அவர்களிடத்தில் சொன்னார்கள்.“ (யாத்திராகமம் 16:1-3)**. இங்கு மறுபடியும் இஸ்ரவேல் மக்கள் மோசையை சேர்த்து ஆரோனுக்கு விரோதமாகவும் முறுமுறுக்க தொடங்கினார்.

**“அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன்; ஜனங்கள் போய், ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதினால் அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன். ஆறாம் நாளிலோ, அவர்கள் நாள்தோறும் சேர்க்கிறதைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்ச் சேர்த்து, அதை ஆயத்தம்பண்ணிவைக்கக்கடவர்கள் என்றார். அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரையும் நோக்கி: கர்த்தர் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர் என்பதைச் சாயங்காலத்தில் அறிவீர்கள்; விடியற்காலத்தில் கர்த்தருடைய மகிமையையும் காண்பீர்கள்; கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம் என்றார்கள். பின்னும் மோசே: சாயங்காலத்தில் நீங்கள் புசிக்கிறதற்குக் கர்த்தர் உங்களுக்கு இறைச்சியையும், விடியற்காலத்தில் நீங்கள் திர்ப்தியடைகிறதற்கு அப்பத்தையும் கொடுக்கையில் இது விளங்கும்; கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்த உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நாங்கள் எம்மாத்திரம்? உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோதமாய் இருக்கிறது என்றான்.“ (யாத்திராகமம் 16:4-8)**. இவ்வாறாக மறுபடியும், மோசே இஸ்ரவேல் மக்களின் முறுமுறுப்புகளை எதிர்கொண்டு, அதற்காக கோபப்படாமல், தன் தலைமை நிலையில் இருந்து விலகாமல், கர்த்தரை நோக்கி பார்த்து, இஸ்ரவேல்

மக்களுக்கு ஒரு தகப்பனாக இருந்து, அவர்களுக்கு வான மன்னாவை அற்புதமாய் பெற்று தந்தார். ஒவ்வொரு நாள் அதிகாலையிலும், அவர்கள் கர்த்தருடைய கிருபையை, போஷிப்பை, மன்னாவின் மூலமாய் காணும்படி செய்தார். மேலும் **"சாயங்காலத்தில் காடைகள் வந்து விழுந்து பாளயத்தை மூடிக்கொண்டது. விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றி பனி பெய்திருந்தது. பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின்மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின்மேல் கிடந்தது. இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பம்." (யாத்திராகமம் 16:13-15)** என்றார். ஆம் அவர்களுக்கு தேவையான யாவையும் மோசே தேவனிடமிருந்து பெற்று தந்தார். தகப்பன் பிள்ளையை போஷித்து, பாதுகாத்து நடத்துவதை போல், அவர்களை வழிநடத்தினார். ஆனால் அவர்களோ மோசேயின் மனநிலையை புரிந்து கொள்ளவே இல்லை.

காரணம், **"பின்பு இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் கர்த்தருடைய கட்டளையின்படியே சீன்வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு, பிரயாணம்பண்ணி, ரெவிதீமிலே வந்து பாளயமிறங்கினார்கள்; அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது. அப்பொழுது ஜனங்கள் மோசேயோடே வாதாடி: நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தரவேண்டும் என்றார்கள். அதற்கு மோசே: என்னோடே ஏன் வாதாடுகிறீர்கள், கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள் என்றான்." (யாத்திராகமம் 17:1,2).** இங்கு மோசே ஜனங்களிடம் தேவனிடம் தண்ணீருக்காக கேட்பதை விட்டுவிட்டு, ஏன் இவ்வாறு வாதாடுகிறீர்கள் என்று கேட்டார். ஆனால் அவர்களோ, **"ஜனங்கள் அவ்விடத்திலே தண்ணீர்த் தவனமாயிருந்தபடியால், அவர்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டுவந்தீர் என்றார்கள்." (யாத்திராகமம் 17:3).** இங்கு ஜனங்கள் மோசேயின் மீது தங்கள் சூழ்நிலை நிமித்தம் குற்றம் சாட்ட நினைத்தார்களே தவிர, தேவனுக்கு கீழ்ப்படிந்து, இம்மட்டுமாய் நடத்தி வந்த தேவன், ஒவ்வொரு நாளும் போஷிக்கிற தேவன், தங்கள் தேவையை சந்திக்க மாட்டாரா என்ற உணர்வு இல்லாமல், மறுபடியும் வாதாடியும் முறுமுறுத்தும், தங்கள் இரட்சிப்பையே உதாசீனப்படுத்தி, தாங்கள் எகிப்திலேயே இருந்திருந்தால் நலமாய் இருக்கும் என்றனர். இது அவர்களின் உச்சகட்ட அறியாமையை, கீழ்ப்படியாமையை காண்பிக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், **"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக்கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்; அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான்." (யாத்திராகமம் 17:5,6).** இங்கு மறுபடியும் மோசேயின்

கையினால், கர்த்தர் ஒரு அற்புதத்தை செய்து, மோசேயை அவர்கள் தங்கள் தலைவனாகவும், தகப்பனாகவும் காணும்படி செய்தார். மேலும் **யாத்திராகமம் 17:8-13** வசனங்களில் **“அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள். அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான். யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம்பண்ணினான். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள்; அவன் தன் கையைத் தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொண்டான். மோசேயின் கைகள் அசந்துபோயிற்று, அப்பொழுது அவர்கள் ஒரு கல்லைக் கொண்டுவந்து அவன் கீழே வைத்தார்கள்; அதின்மேல் உட்கார்ந்தான்; ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறு பக்கத்திலும் இருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள்; இவ்விதமாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்வரைக்கும் ஒரே நிலையாயிருந்தது. யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறிய அடித்தான்.“**. இங்கு யோசுவா அமலேக்கியருடன் போரிட்டாலும், மோசையின் கரம் தேவனை நோக்கி இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பது விளங்குகிறது.

மேலும், **“பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவிகேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்றார். மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யேகோவாநிசி என்று பேரிட்டு, அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்தபடியால், தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும் என்றான்.“ (யாத்திராகமம் 17:14-16)**. இங்கு மோசேயை, தொடர்ந்து ஆண்டவர் பல்வேறு விதங்களில் உபயோகிப்பதை காணலாம். எந்த கரங்களின் மூலம் ஆண்டவர் எகிப்தில் அற்புதங்களை செய்தாரோ, எந்த கரத்தை உபயோகித்து சிவந்த சமுத்திரத்தை பிறந்தாரோ, கன்மலையில் தண்ணீரை புறப்பட பண்ணினாரோ, அதே கரத்தை வைத்து நடக்கும் யாவையும் எழுதும்படியாக செய்தார். மேலும் மோசே பலிபீடத்தையும் தேவனுக்காக கட்டினார். இங்கு மோசே எவ்வாறு அயராது, இஸ்ரவேல் மக்களுக்காக காரியங்களை செய்தார் என்பதை காணலாம். ஆம், அந்த ஒரு மனிதனின் மீது தேவன் வைத்த நம்பிக்கையும், அந்த நம்பிக்கைக்கு பாத்திரமாய் மோசே நடந்து கொண்டதனாலும், இஸ்ரவேல் மக்களின் சகல காரியங்களும், அது ஆவிக்குரியதாக இருந்தாலும் சரீரத்திற்குரியதாக இருந்தாலும், மோசேயின் மூலமாகவே தேவன் நிறைவேற்றினார். அவர் எவ்வாறு தேவன் தன்னை நம்பி கொடுத்த எல்லா பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு, தன்னையே அதற்கென அர்ப்பணித்து, சற்றும் சோர்ந்து போகாமல் உழைத்தார் என்பதை, பின்வரும் சம்பவத்தில் காணலாம்.

“தேவன் மோசேக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த யாவையும், கர்த்தர் இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதையும், மீதியானில் ஆசாரியனாயிருந்த மோசேயின் மாமனாகிய எத்திரோ கேள்விப்பட்டபோது, மோசேயின் மாமனாகிய எத்திரோ, மோசேயினாலே திரும்பி அனுப்பிவிடப்பட்டிருந்த அவன் மனைவியாகிய சிப்போராளையும், அவளுடைய இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டு பிரயாணப்பட்டான். நான் அந்நிய தேசத்திலே பரதேசியானேன் என்று மோசே சொல்லி, ஒரு மகனுக்குக் கெர்சோம் என்று பேரிட்டிருந்தான். என் பிதாவின் தேவன் எனக்குத் துணைநின்று பார்வோனின் பட்டயத்துக்கு என்னைத் தப்புவித்தார் என்று சொல்லி, மற்றவனுக்கு எலியேசர் என்று பேரிட்டிருந்தான். மோசேயின் மாமனாகிய எத்திரோ மோசேயின் குமாரரோடும் அவன் மனைவியோடுங்கூட, அவன் பாளயமிறங்கியிருந்த தேவ பர்வதத்தினிடத்தில் வனாந்தரத்துக்கு வந்து: எத்திரோ என்னும் உம்முடைய மாமனாகிய நானும், உம்முடைய மனைவியும், அவளோடேகூட அவளுடைய இரண்டு குமாரரும் உம்மிடத்திற்கு வந்திருக்கிறோம் என்று மோசேக்குச் சொல்லியனுப்பினான்.“ (யாத்திராகமம் 18:1-6). இங்கு எவ்வாறு மோசே, தேவனுடைய பணியின் நிமித்தம் தன் சொந்த குடும்பத்தைக் கூட, தன் சுய வாழ்வை கூட தியாகம் செய்தார் என்பதை காணலாம். மேலும், யாத்திராகமம் 18:13-16 வசனங்களில், “மறுநாள் மோசே ஜனங்களை நியாயம் விசாரிக்க உட்கார்ந்தான்; ஜனங்கள் காலமே துவக்கிச் சாயங்காலமட்டும் மோசேக்கு முன்பாக நின்றார்கள். ஜனங்களுக்கு அவன் செய்த யாவையும் மோசேயின் மாமன் கண்டு: நீர் ஜனங்களுக்குச் செய்கிற இந்தக் காரியம் என்ன? நீர் ஒன்றியாய் உட்கார்ந்திருக்கவும், ஜனங்கள் எல்லாரும் காலமே துவக்கிச் சாயங்காலமட்டும் உமக்கு முன்பாக நிற்கவும் வேண்டியது என்ன என்றான். அப்பொழுது மோசே தன் மாமனை நோக்கி: தேவனிடத்தில் விசாரிக்கும்படி ஜனங்கள் என்னிடத்தில் வருகிறார்கள். அவர்களுக்கு யாதொரு காரியம் உண்டானால், என்னிடத்தில் வருகிறார்கள்; நான் அவர்களுக்குள்ள வழக்கைத் தீர்த்து, தேவகட்டளைகளையும் அவருடைய பிரமாணங்களையும் தெரிவிக்கிறேன் என்றான்.“. இங்கு பல்வேறு பொறுப்புகள் மத்தியிலும், தேவ சமூகத்தில் இஸ்ரவேல் மக்களுக்காக நிற்கிறது மட்டுமல்லாமல், காலமே தொடங்கி சாயங்காலம் மட்டும், அவர்களை நியாயம் விசாரிக்கிற நியாயதிபதியாகவும் மோசே இருந்தார். மோசே இவ்வளவாய் பிரயாசப்படுவது, இஸ்ரவேல் மக்களுக்கு புரியாவிட்டாலும், மோசேயின் மாமனுக்கு நன்றாக புரிந்தது. எனவே பாரமான இப்பணியை, எளிதாக்க வேண்டிய ஆலோசனைகளை கூறினார். மோசேயும் அதை ஏற்றுக் கொண்டார். ஆனால் அதே வேளையில் அவர் அமைதியாக உட்கார்ந்து விடவில்லை, தொடர்ந்து இஸ்ரேல் மக்களுக்காக ஓடினார். சீனாய் மலையில் ஆண்டவரோடு 40 நாட்கள் இரவும் பகலும் தரித்திருந்து, 10 கட்டளைகள் உள்பட தேவ நியாயப்பிரமாணத்தை பெற்று, அதனை ஜனங்களுக்கு கொடுத்தார். அவருடைய பணியை தொடர்ந்து நாம் அடுத்த பாகத்தில் தியானிப்போம். இவ்வாறாக மோசே, ஜனங்களுக்காக தன்னை அர்ப்பணித்து, தேவ பணியை ஒரு தலைவனாக, தகப்பனாக இருந்து

செய்தது போல, நாமும் தேவன் நமக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தை, பொறுப்புகளை அர்ப்பணிப்போடு செய்ய ஆண்டவர் கிருபை பாராட்டுவாராக. ஆமென், அல்லேலுயா.

## 132. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 3



கர்த்தராகிய ஆண்டவர் மோசேயை எவ்வாறு அவர் பிறப்பிலிருந்து தெரிந்து கொண்டு, அவர் மூலமாய் தாம் செய்ய நினைத்ததை நிறைவேற்றினார் என்பதையும், மோசே தேவனுக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் மக்களை ஒரு நல்ல தலைவனாகவும் தகப்பனாகவும் இருந்து எவ்வாறு வழிநடத்தினார் என்பதையும் முதல் இரண்டு பாகங்களில் கண்டோம். தொடர்ந்து அவர் எவ்வாறு நியாயப்பிரமாணத்தையும், தேவனுடைய கற்பனைகளையும் தேவனிடத்தில் இருந்து பெற்று அதை இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்தார் என்பதையும், அவர் எவ்வாறு தேவனுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாய் செயல்பட்டார் என்பதையும் பின்வருமாறு தியானிப்போம். **“மோசே தேவனிடத்திற்கு ஏறிப்போனான்; கர்த்தர் மலையிலிருந்து அவனைக் கூப்பிட்டு: நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார். மோசே வந்து ஜனங்களின் மூப்பரை அழைப்பித்து, கர்த்தர் தனக்குக் கற்பித்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்கு முன்பாகச் சொன்னான். அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தரிடத்தில் தெரிவித்தான்.“ (யாத்திராகமம் 19:3-8).** இங்கு மோசே கர்த்தர் தனக்கு கற்பித்த வார்த்தைகளை எல்லாம் இஸ்ரவேல்

மூப்பர்களுக்கு சொல்வதும், ஜனங்கள் கூறுவதை கர்த்தரிடத்தில் கூறுவதும், அவர் எவ்வாறு தேவனுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையே ஒரு நல்ல பாலமாக செயல்பட்டார் என்பதை விவரிக்கிறது.

மேலும், **யாத்திராகமம் 19:9-13** வசனங்களில் **"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன் என்றார். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தருக்குச் சொன்னான். பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஜனங்களிடத்தில் போய், இன்றைக்கும் நாளைக்கும் அவர்களைப் பரிசுத்தப்படுத்து; அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள்; மூன்றாம் நாளில் கர்த்தர் சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகச் சீனாய்மலையின்மேல் இறங்குவார். ஜனங்களுக்குச் சுற்றிலும் நீ ஒரு எல்லை குறித்து, அவர்கள் மலையில் ஏறாதபடிக்கும், அதின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும் எச்சரிக்கையாய் இருங்கள் என்று அவர்களுக்குச் சொல்; மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாகவே கொல்லப்படுவான். ஒரு கையும் அதைத் தொடலாகாது; தொட்டால், நிச்சயமாகக் கல்லெறியுண்டு, அல்லது ஊடுருவ எய்யுண்டு சாகவேண்டும்; மிருகமானாலும்சரி, மனிதனானாலும்சரி, உயிரோடே வைக்கப்படலாகாது; எக்காளம் நெடுந்தொனியாய்த் தொனிக்கையில், அவர்கள் மலையின் அடிவாரத்தில் வரக்கடவர்கள் என்றார்."** இங்கு **நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன்** என்பது மிகவும் அற்புதமான ஒன்றாகும். தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்த மோசேயை இஸ்ரவேல் மக்கள் விசுவாசிக்கும்படியாய், மோசே எவ்வளவு பெரிய தேவனோடு சஞ்சரிக்கிறார் என்பதை விளங்க காட்ட தேவன் தாமே இறங்கி வந்தார். மேலும், **யாத்திராகமம் 19:16-19** வசனங்களில் **"மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும் மின்னல்களும், மலையின்மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயிற்று; பாளயத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள். அப்பொழுது ஜனங்கள் தேவனுக்கு எதிர்கொண்டுபோக, மோசே அவர்களைப் பாளயத்திலிருந்து புறப்படப்பண்ணினான்; அவர்கள் மலையின் அடிவாரத்தில் நின்றார்கள். கர்த்தர் சீனாய்மலையின்மேல் அக்கினியில் இறங்கினபடியால், அது முழுவதும் புகைக்காடாய் இருந்தது; அந்தப் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது. எக்காளசத்தம் வரவர மிகவும் பலமாய்த் தொனித்தது; மோசே பேசினான்; தேவன் அவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்தார்."**. இங்கு தேவனுடைய பிரசன்னம், அவருடைய மகிமை, எவ்வளவு பெரியது என்பதையும், சாதாரண மனிதனால் அதை சற்றும் தாங்கிக் கொள்ள முடியாது என்பதையும், ஆனால் அதே நேரத்தில் அதே மகிமையின் மத்தியில் நின்று, **மோசே பேசினான்; தேவன் அவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்தார்** என்பது மோசேயுவுக்கும் மற்ற அனைவருக்கும் உள்ள வித்தியாசத்தை காண்பிக்கிறது.

மேலும் **யாத்திராகமம்** 19:20-22 வசனங்களில் **“கர்த்தர் சீனாய்மலையிலுள்ள கொடுமுடியில் இறங்கினபோது, கர்த்தர் மோசேயை மலையின் கொடுமுடியிலே வரவழைத்தார்; மோசே ஏறிப்போனான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: ஜனங்கள் பார்க்கிறதற்கு எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதபடிக்கும், அவர்களில் அநேகர் அழிந்து போகாதபடிக்கும், நீ இறங்கிப்போய், அவர்களை உறுதியாக எச்சரி. கர்த்தரின் சமுகத்தில் வருகிற ஆசாரியர்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம் பண்ணாதபடி, தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.“**, இங்கு, மோசேயுவுக்கும், மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் வெளிப்படையாக தெரிகிறது. கர்த்தர் சீனாய் மலையின் கொடுமுடியில் இறங்கினார். மோசே கொடுமுடிக்கு ஏறிப்போனார். இங்கு மோசே முழுவதுமாய் கர்த்தருடைய பிரசன்னத்திற்குள், மகிமைக்குள் இருக்கிறார். ஆனால் மற்றவர்களோ அதை தூரத்தில் இருந்து பார்ப்பதற்கு கூட பயந்தார்கள். அதற்காக தங்களை பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர். ஆனால் மோசேயோ அப்படியல்ல. மேலும் **யாத்திராகமம்** 19:23-25 வசனங்களில் **“அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: மலையைச் சுற்றிலும் எல்லை குறித்து, அதைப் பரிசுத்தப்படுத்துங்கள் என்று தேவரீர் எங்களை உறுதியாக எச்சரித்திருக்கிறீர்; ஆகையால், ஜனங்கள் சீனாய்மலையின்மேல் ஏறிவரமாட்டார்கள் என்றான். கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; பின்பு நீயும் ஆரோனும் கூடி ஏறிவாருங்கள்; ஆசாரியர்களும் ஜனங்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம்பண்ணாதபடிக்கு, எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதிருக்கக்கடவர்கள் என்றார். அப்படியே மோசே இறங்கி ஜனங்களிடத்தில் போய், அதை அவர்களுக்குச் சொன்னான்.“**.

இங்கு ஒரு பக்கம் மோசே கர்த்தருடைய மகிமையில் இருந்தாலும், மறுமுனையில் அவர் இஸ்ரேல் மக்களோடு தொடர்பிலிருந்து, அவர்கள் கர்த்தருடைய வார்த்தையின்படி செய்வார்கள் என்பதை, ஜனங்கள் சீனாய் மலையின் மேல் ஏறி வர மாட்டார்கள் என்று அவர் உறுதியாய் கூறுவதில் இருந்து காணலாம். இங்கு, அவர் இரண்டு விதமான சூழ்நிலையிலும், (ஒன்று தேவனோடு மகிமையில் சீனாய் மலையின் கொடுமுடியில், மற்றொன்று மலை அடிவாரத்தில் ஜனங்களோடு) மாறி மாறி இருந்து, ஒரு பக்கம் தேவனுக்கு நல்ல ஊழியக்காரனாய், மறுபக்கம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நல்ல தலைவனாய் இருந்து வழிநடத்தினார். அதே நேரத்தில் அவர்களுக்கு நல்ல தகப்பனாகவும் இருந்து அவர்கள் தேவைகள் யாவும் சந்தித்து அவர்களுக்கு தேவன் அருளிய சகல நன்மைகளையும் பெற்று தந்தார்.

**யாத்திராகமம்** 31:18 கூறுகிறது, **“சீனாய்மலையில் அவர் மோசேயோடே பேசி முடிந்தபின், தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார்.“**. இங்கு இவ்வாறு 40 நாட்கள் தேவ மகிமையிலேயே சஞ்சரித்து, தேவனுடைய விரலினாலேயே எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் பலகைகளை பெற்றுக் கொண்டவராக, அதை ஜனங்களிடம் சேர்க்க மலையில் இருந்து இறங்கினார். ஆனால் **“மோசே மலையிலிருந்து**

இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி, அவனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள். அதற்கு ஆரோன்: உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான். ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். ஆரோன் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான். மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்." (யாத்திராகமம் 32:1-6). இங்கு இஸ்ரேல் மக்களுக்காக 40 நாட்கள் தேவனிடத்தில் சஞ்சரித்து, கற்பனைகளை தன் கைகளில் ஏந்தி வரும் மோசே ஒரு புறம், தேவனுடைய மகிமையையும், வல்லமையையும் கண்ணாரக் கண்டும், எச்சரிக்கப்பட்டும், அத்தேவனுடைய மகிமையை கன்று குட்டிக்கு ஒப்பாக்கி, அதற்கு பலிபீடம் கட்டி, பலி செலுத்திய பொல்லாத இஸ்ரவேல் மக்கள் மறுபுறம். "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள்" (யாத்திராகமம் 32:7) என்றார்.

இங்கு ஆண்டவரே தனக்கு கீழ்ப்படிந்த மோசே ஒருவன் போதும், அவனை வைத்தே தன் சித்தத்தை நிறைவேற்ற கர்த்தர் இவ்வாறு கூறிய பொழுதும், "மோசே தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி: கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன? மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்குசெய்யும்பொருட்டே அவர்களைப் புறப்படப்பண்ணினார் என்று எகிப்தியர் சொல்லுவானேன்? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்குத் தீங்குசெய்யாதபடிக்கு, அவர்கள்மேல் பரிதாபங்கொள்ளும். உமது தாசராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரவேலையும் நினைத்தருளும்: உங்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, நான் சொன்ன இந்தத் தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றைக்கும் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு, அவர்களுக்குக் கொடுப்பேன் என்று உம்மைக்கொண்டே அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னீரே என்று கெஞ்சிப் பிரார்த்தித்தான்." (யாத்திராகமம் 32:11-13). இந்த மூன்று

வசனங்களில் மோசேயின் தகப்பனின் குணம் வெளிப்படுகிறது. ஆம் முதலாவது அவர், தேவன் எவ்வாறு வல்லமையாய் அவர்களை புறப்பட பண்ணினார் என்பதையும், அவர் தண்டிப்பதன் மூலம், அது எகிப்தியர் தேவனுடைய இரட்சிப்பையே, அவருடைய மீட்பையே குறை கூறுவதற்கு ஏதுவாகும் என்பதையும், அவர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களையும் தேவனுக்கு நினைபூட்டினார். இங்கு அவர்கள் மேல் பரிதாபங்கொள்ளும் என்று கெஞ்சி பிரார்த்தித்தது, அவருடைய தகப்பனுடைய மனதை வெளிப்படுத்துகிறது. ஆம் இஸ்ரவேல் மக்களின் பொல்லாத செய்கைகளும், அவர்களுடைய அவிசுவாசமும், பொறுமையற்ற முறுமுறுப்புகளும், செயல்களும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு கன்று குட்டியாகிய சொரூபத்தை உண்டு பண்ணி அதற்கு பலியிட்டு பணிந்ததை, ஆண்டவரே பொறுத்துக் கொள்ள முடியாமல், அவர்களை அழிக்க நினைத்தார். ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், சகலத்தையும் தாங்கிக் கொண்டு, அவர்களுக்கு பரிந்து பேசுவது உலகப் பிரகாரமான ஒரு தகப்பனுடைய இருதயத்திலும் மேலானதாகும்.

**யாத்திராகமம் 32:14** கூறுகிறது **"அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்."** என்று. **"பின்பு மோசே மலையிலிருந்து இறங்கினான்; சாட்சிப்பலகைகள் இரண்டும் அவன் கையில் இருந்தது; அந்தப் பலகைகள் இருபுறமும் எழுதப்பட்டிருந்தது, அவைகள் இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்துமாயிருந்தது." (யாத்திராகமம் 32:15,16)**. இங்கு, தன் கையில் தேவன் தாமே எழுதிக் கொடுத்த கட்டளையை 40 நாட்கள் காத்திருந்து பெற்றுக் கொண்ட மோசே அதை கையில் ஏந்தியவராய், அதற்கு நேர் எதிர் மாறாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்ரவேல் மக்களிடத்திற்கு இறங்கிப் போனார். **"ஜனங்கள் ஆரவாரம் பண்ணுகிறதை யோசுவா கேட்டு, மோசேயை நோக்கி: பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல் உண்டாயிருக்கிறது என்றான். அதற்கு மோசே: அது ஜெயதொனியாகிய சத்தமும் அல்ல, அபஜெயதொனியாகிய சத்தமும் அல்ல; பாடலின் சத்தம் எனக்குக் கேட்கிறது என்றான்." (யாத்திராகமம் 32:17,18)**. இங்கு மோசேக்கும், மக்களுக்கும் இடையே அமர்ந்திருந்து, மோசே மலையிலிருந்து இறங்கி வர பொறுமையாக காத்திருந்த யோசுவாவிற்கு மலையின் அடிவாரத்தில் என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. காரணம், அவர் மற்ற மக்களோடு இல்லை. அவர் தேவனோடு இருக்கும் மோசேயின் ஐக்கியத்தையே பெரியதாக எண்ணி அவருக்காகவே காத்திருந்தார். இதனாலேயே அவர் அடுத்த தலைமுறை தலைவரானார்.

**"அவன் பாளயத்துக்குச் சமீபித்து, அந்தக் கன்றுக்குட்டியையும் நடனத்தையும் கண்டபோது, மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போட்டு; அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான்."**

(யாத்திராகமம் 32:19,20). இங்கு நடந்ததை தன் கண்ணால் பார்த்த மோசே கோபமூண்டவராகி, எதற்காக 40 நாட்கள் மலையில் காத்திருந்தாரோ, தேவனுடைய கரத்தினால் செய்யப்பட்டு, அவராலே எழுதப்பட்ட அந்த பலகைகளை உடைத்துப் போட்டார். மேலும் பொன் கன்றுக்குட்டியை அக்கினியால் சுட்டெரித்து, அதை பொடியாக்கி அந்த பொடியை தண்ணீரில் கலந்து ஜனங்கள் குடிக்கும்படி செய்தார். இங்கு ஆண்டவர் எதற்காக அவ்வளவு கோபப்பட்டார் என்பது மோசேக்கு புரிந்திருக்கும். ஆனால் அதே நேரத்தில், அவர் தேவனிடத்தில் கெஞ்சி பிரார்த்திக்காதிருந்தால், அவர்களுடைய நிலைமை பரிதாபமாகப் போயிருக்கும். இங்கு ஒரு நல்ல தகப்பனாக இருந்து அவர்களை அழிவிலிருந்து விலகிக் காத்தார். ஆனால் அதே வேளையில், அருமையான கற்பலகைகளை, அவர் தமது கோபத்தினால் இழந்து போனார்.

**"பின்பு, மோசே ஆரோனை நோக்கி: நீ இந்த ஜனங்கள்மேல் இந்தப் பெரும்பாதகத்தைச் சுமத்துகிறதற்கு, இவர்கள் உனக்கு என்ன செய்தார்கள் என்றான். அதற்கு ஆரோன்: என் ஆண்டவனுக்குக் கோபம் மூளாதிருப்பதாக; இது பொல்லாத ஜனம் என்று நீர் அறிந்திருக்கிறீர். இவர்கள் என்னை நோக்கி: எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும்; எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம் என்றார்கள். அப்பொழுது நான்: பொன்னுடைமை உடையவர்கள் எவர்களோ அவர்கள் அதைக் கழற்றித் தரக்கடவர்கள் என்றேன்; அவர்கள் அப்படியே செய்தார்கள்; அதை அக்கினியிலே போட்டேன், அதிலிருந்து இந்தக் கன்றுக்குட்டி வந்தது என்றான்."** (யாத்திராகமம் 32:21-24). மேலும் **"ஜனங்கள் தங்கள் பகைவருக்குள் அவமானப்படத்தக்கதாக ஆரோன் அவர்களை நிர்வாணமாக்கியிருந்தான். அவர்கள் நிர்வாணமாயிருக்கிறதை மோசே கண்டு, பாளயத்தின் வாசலில் நின்று: கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்."** (யாத்திராகமம் 32:25,26). இங்கு மோசேக்கு அவர்களுடைய மோசமான நிலையை கண்ட பொழுது, அவர்களில் சர்வ சங்காரம் உண்டாகாதபடிக்கு, தண்டனை பெற வேண்டியவர்களை தண்டிக்க செயல்பட்டார். இங்கு வெறும் அன்பை, பரிவை மட்டும் வெளிப்படுத்தாமல், திருத்த வேண்டியவற்றை திருத்தவும், அவர் ஒரு நல்ல தலைவனாக, தகப்பனாக இருந்து செயல்பட்டார். **"அவன் அவர்களை நோக்கி: உங்களில் ஒவ்வொருவனும் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பாளயமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல் போய், ஒவ்வொருவனும் தன் தன் சகோதரனையும் ஒவ்வொருவனும் தன் தன் சிநேகிதனையும் ஒவ்வொருவனும் தன் தன் அயலானையும் கொன்றுபோடக்கடவன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். லேவியின் புத்திரர் மோசே சொன்னபடியே செய்தார்கள்; அந்நாளில் ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுந்தார்கள்."** (யாத்திராகமம் 32:27,28).

இப்படிப்பட்ட ஒரு பெரிய சங்காரத்திற்கு பிறகு, **"மறுநாளில் மோசே ஜனங்களை நோக்கி: நீங்கள் மகா பெரிய பாவஞ்செய்தீர்கள்; உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கூடுமோ என்று அறிய இப்பொழுது நான் கர்த்தரிடத்திற்கு ஏறிப்போகிறேன் என்றான்." (யாத்திராகமம் 32:30).** இங்கு இஸ்ரவேல் மக்களின் பொல்லாப்பினால் மேலும் வாதை உண்டாகாதபடிக்கு மறுபடியும் ஆண்டவரிடத்தில் பரிந்து பேச சென்றார். 40 நாட்கள் ஆண்டவரோடு சஞ்சரித்து பெற்ற கற்பனைகளை மக்களுக்கு சொல்லி, அவர்களை கர்த்தருக்கு கீழ் படிந்து நடக்க செய்ய நினைத்த மோசேயின் எதிர்பார்ப்பு வேதனையில் முடிந்தது. ஆனாலும் மோசே சோர்ந்து போகவில்லை. உடனடியாக மறுபடியும் மலையின் மேல் செல்கிறார். இது எவ்வாறு அவர் மக்களை நேசித்தார் என்பதை விளக்குகிறது. **"அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப்போய்: ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்." (யாத்திராகமம் 32:31,32).** இங்கு மறுபடியும் இஸ்ரேல் மக்கள் செய்த தவறுக்கான தண்டனையை தான் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருந்தார். தன்னுடைய பெயர் ஜீவ புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டு போனாலும் பரவாயில்லை, ஆனால் இஸ்ரவேல் மக்களுக்கு ஆண்டவர் மன்னித்தருள வேண்டும் என்று கெஞ்சினார். இங்கு மறுபடியும், மறுபடியும் அவர் ஒரு நல்ல தலைவனுக்கும் மேலாய், நல்ல தகப்பனைப் போல தன் ஜீவனையே தன் மக்களுக்காக கொடுக்க துணிந்தார். **"மோசே கூடாரத்தைப் பெயர்த்து, அதைப் பாளயத்துக்குப் புறம்பே தூரத்திலே போட்டு, அதற்கு ஆசரிப்புக் கூடாரம் என்று பேரிட்டான். கர்த்தரைத் தேடும் யாவரும் பாளயத்துக்குப் புறம்பான ஆசரிப்புக் கூடாரத்துக்குப் போவார்கள். மோசே கூடாரத்துக்குப் போகும்போது, ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தங்கள் கூடாரவாசலில் நின்றுகொண்டு, அவன் கூடாரத்துக்குள் பிரவேசிக்குமட்டும், அவன் பின்னே பார்த்துக்கொண்டிருந்தார்கள். மோசே கூடாரத்துக்குள் பிரவேசிக்கையில், மேகஸ்தம்பம் இறங்கி, கூடாரவாசலில் நின்றது; கர்த்தர் மோசேயோடே பேசினார். ஜனங்கள் எல்லாரும் மேகஸ்தம்பம் கூடாரவாசலில் நிற்கக்கண்டார்கள்; ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள்தங்கள் கூடாரவாசலில் பணிந்துகொண்டார்கள்." (யாத்திராகமம் 33:7-10).** இங்கு எவ்வாறு மோசே ஒரு ஆவிக்குரிய தகப்பனாய், தலைவனாய் இருக்கிறார் என்பதை காணலாம்.

மேலும், **யாத்திராகமம் 33:11** கூறுகிறது **"ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார்; பின்பு, அவன் பாளயத்துக்குத் திரும்பினான்; நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் அவனுடைய பணிவிடைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்தான்."**. மேலும், இது எவருக்கும் கிடைக்காத பாக்கியம் ஆகும். ஆண்டவருக்கு முன் மோசே ஒன்றுமில்லாத, அழிவுள்ள மாம்ச மனிதன். ஆனால் ஆண்டவரோ தம் சித்தம், எண்ணம், விருப்பம் யாவையும் மோசேயோடு பகிர்ந்து கொண்டார். ஆதாம் ஏவாளை

இப்படிப்பட்ட ஒரு உறவுக்குள்ளாகவே தேவன் வைத்திருக்க நினைத்தார். ஆனால் அவர்களோ அதற்கு கீழ்படியவில்லை. ஆனால் மோசே ஆண்டவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்தார். அவருடைய இருதயத்தின் வாஞ்சையை புரிந்து கொண்டார். இதனால் தேவன் அவரை தமது சிநேகிதன் என்றார். இப்படிப்பட்ட மோசே, தனக்கு அடுத்ததாக நூனின் குமாரனாகிய யோசுவாவையும் இவ்வாறாக ஆயத்தப்படுத்துவதை காணலாம். ஒருபுறம் லட்சகணக்கான மக்கள் எத்தனையோ அற்புதங்களை, நன்மைகளை பெற்றிருந்தும் நன்றிகெட்டவர்களாய், கன்றுக்குட்டியை தொழுது கொண்ட பொழுதும், ஆண்டவருக்காக தனி மனிதனாய் மோசே நிற்கிறார். இன்றும் ஆண்டவர் இப்படிப்பட்ட மக்கள் மூலமாகவே இவ்வுலகத்தில் கிரியை செய்து கொண்டிருக்கிறார்.

இவ்வாறு மோசேயை ஒரு சிநேகிதன் போல் என ஆண்டவரே கூறுவதற்கான காரணங்களை பின்வரும் சம்பவத்தில் காணலாம். **யாத்திராகமம் 33:12,13** வசனங்களில் **“மோசே கர்த்தரை நோக்கி: தேவரீர் இந்த ஜனங்களை அழைத்துக்கொண்டு போ என்று சொன்னீர்; ஆகிலும், என்னோடேகூட இன்னாரை அனுப்புவேன் என்பதை எனக்கு நீர் அறிவிக்கவில்லை; என்றாலும், உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றும், என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது என்றும், தேவரீர் சொன்னதுண்டே; உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் உம்மை அறிவதற்கும், உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைப்பதற்கும், உம்முடைய வழியை எனக்கு அறிவியும்; இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும் என்றான்.“**. இங்கு ஆண்டவரே சிநேகிதன் என்று சாட்சி கொடுத்த பின்னரும், இன்னும் நான் உம்மை பற்றி அறிய வேண்டும், உம்முடைய கிருபையை இன்னும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையை காணும்பொழுது, அவர் தேவ சமூகத்தை, உறவை, ஐக்கியத்தை எவ்வளவு மேன்மையாக எண்ணினார் என்பதை காணலாம். ஆண்டவரும் அவர் வேண்டுதலை கேட்டு, **“அதற்கு அவர்: என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்.“ (யாத்திராகமம் 33:14)**.

மேலும் **யாத்திராகமம் 33:15,16** வசனங்களில் **“அப்பொழுது அவன் அவரை நோக்கி: உம்முடைய சமுகம் என்னோடேகூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும். எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும்; நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? இப்படியே பூமியின்மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும் என்றான்.“**. இங்கு மோசே ஆண்டவரை ஒரு சிநேகிதன் தன்னோடு வர அழைப்பது போலவே அழைக்கிறார். அதற்கு ஆண்டவர், **“அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ சொன்ன இந்த வார்த்தையின்படியே செய்வேன்; என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது; உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றார்.“ (யாத்திராகமம் 33:17)**. இங்கு ஆண்டவருடைய கண்களில் மோசேக்கு கிருபை கிடைத்ததும், ஆண்டவர் மோசேயை பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்று

கூறுவதும், ஆண்டவர் மோசேயை ஆதியிலேயே, தம் திட்டத்திற்கென தெரிந்து கொண்டார் என்பதை தெளிவாக கூறுகிறது. மேற்கண்ட அனுபவத்திற்கெல்லாம் உச்சக்கட்டமாக, **"அப்பொழுது அவன்: உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்றான். அதற்கு அவர்: என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக் கூறுவேன்; எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன் என்று சொல்லி, நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது என்றார். பின்னும் கர்த்தர்: இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு; நீ அங்கே கன்மலையில் நில்லு. என் மகிமை கடந்துபோகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்; பின்பு, என் கரத்தை எடுப்பேன்; அப்பொழுது என் பின்பக்கத்தைக் காண்பாய்; என் முகமோ காணப்படாது என்றார்." (யாத்திராகமம் 33:18-23).**

மேற்கண்ட இப்படிப்பட்ட அனுபவத்தை, ஆண்டவர் மாம்சமான மனிதன் ஒருவனுக்கும் கொடுக்கவில்லை. ஆனால் ஆண்டவர் மோசேயின் மீது வைத்த கிருபையும், தயவும், அன்பும் அதற்கு பாத்திரமாய் மோசே வாழ்ந்ததும், இம்மாம்ச சரித்திரத்தில் இருந்து கொண்டே மகிமையான அனுபவங்களை பெற முடிந்தது. ஆனால் நாளொன்று வந்தது, இங்கு அவர் கேட்ட வார்த்தை மாம்சமாகி, மறுரூப மலையில் மகிமையால் நிறைந்திருந்த பொழுது, அங்கும் மோசே காணப்பட்டார். நாம்தான் மோசேயை பழைய ஏற்பாட்டு ஐந்து ஆகமங்களோடு முடிந்துவிட்டார் என்று நினைக்கிறோம். ஆனால் ஆண்டவரோ, தாம் செய்ய வேண்டிய பணியை பற்றி மோசேயோடு, புதிய ஏற்பாட்டிலும் உரையாடிக் கொண்டிருக்கிறார். மேலும் கடைசி காலத்தில் வரப்போகிற இரண்டு சாட்சிகளில் ஒருவராகவும், மோசே இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. தேவனே யாவற்றையும் அறிவார். இப்படிப்பட்ட மகிமையான ஒரு வாழ்க்கையை ஒவ்வொருவரும் வாழவே ஆண்டவர் எதிர்பார்க்கிறார். நாமும் இவ்வுலகில் நம் வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தாலும், நம்மை சூழ்ந்து இருப்போர் எப்படிப்பட்டவராய் இருந்தாலும், நாம் தேவ ஐக்கியத்தை, உறவை மாத்திரம் நடுவோமானால், எப்பேர்ப்பட்ட சூழ்நிலை நடுவிலும், தேவ வழி நடத்துதலையும், தேவ பாதுகாப்பையும், பராமரிப்பையும் பெற்று, எல்லாவற்றிற்கும் மேலாக இறுதியாக, பரம கானானையும் சென்றடைவோம். அப்படிப்பட்ட மேன்மையான அனுபவங்களின் ஊடாக ஆண்டவர் தாமே நம்மை நடத்துவராக. மோசேயை குறித்து மேலும் பின்வரும் பாகங்களில் தியானிப்போம். ஆண்டவருடைய மாறாத கிருபை, தயவு, பிரசன்னம் நம்மோடு இருப்பதாக. ஆமென், அல்லேலுயா.

## 133. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 4



ஆண்டவர் மோசேயை எவ்வாறு தெரிந்துகொண்டு, அவர் மூலமாய் இஸ்ரவேல் மக்களை எகிப்தில் இருந்து விடுவித்து, அற்புத விதமாய் நடத்தி வந்தார் என்பதையும், எவ்வாறு மோசே 40 நாட்கள் இரவும் பகலும் சீனாய் மலையில் ஆண்டவரோடு இருந்து, 10 கற்பனைகள் உட்பட நியாயப்பிரமாணம் அனைத்தையும் இஸ்ரவேல் மக்களுக்கு பெற்று தந்தார் என்பதையும், இவற்றில் ஒவ்வொரு நிகழ்வில் பொழுதும், மோசே எவ்வாறு இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு நல்ல தலைவனாக, தகப்பனாக இருந்து செயல்பட்டார் என்பதையும், கடந்த மூன்று பாகங்களிலும் கண்டோம். தொடர்ந்து எவ்வாறு மோசேயை கொண்டு ஆண்டவர் இஸ்ரவேல் மக்களை வழிநடத்தினார் என்பதை இந்த நாலாம் பாகத்திலும் காண்போம். மோசே இஸ்ரவேல் மக்களை வழிநடத்தி செல்கையில், பலவித இன்னல்கள் ஏற்பட்ட பொழுதும், பலமுறை இஸ்ரவேல் மக்கள் ஆண்டவருக்கு விரோதமாகவும், மோசேக்கு விரோதமாகவும் முறுமுறுத்தபொழுதும், பொன் கன்றுக்குட்டி சிலையை செய்து அதை வணங்கியது போன்ற பொல்லாத செயல்களில் ஈடுபட்ட பொழுதும், அதினிமித்தம் ஆண்டவரால் தண்டிக்கப்பட்ட பொழுதும், மோசே மாத்திரம் தொடர்ந்து இஸ்ரவேல் மக்களுக்கும், ஆண்டவருக்கும் இடையே பாலமாக இருந்து, இஸ்ரேல் மக்கள் அழிந்து போகாதபடி அவர்களை காத்து, அவர்களுக்காக ஒரு நல்ல தலைவனாக மட்டுமல்ல, ஒரு நல்ல தகப்பனாகவும் இருந்து வழிநடத்தினார். இதனை மேலும் உறுதிப்படும் விதமாக கீழ்க்காணும் வசனங்கள் உள்ளன. **“ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக்**

கிருபை கிடைத்ததானால், எங்கள் நடுவில் ஆண்டவர் எழுந்தருளவேண்டும்; இந்த ஜனங்கள் வணங்காக் கழுத்துள்ளவர்கள்; நீரோ, எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து, எங்களை உமக்குச் சுதந்தரமாக ஏற்றுக்கொள்ளும் என்றான். அதற்கு அவர்: இதோ, நான் ஒரு உடன்படிக்கைபண்ணுகிறேன்; பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன்; உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்; உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்." (யாத்திராகம் 34:9,10). உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும் என்று ஆண்டவரே கூறுவதிலிருந்து, எவ்வளவு வல்லமையாக ஆண்டவர் மோசேயை இஸ்ரவேல் மக்களிடத்தில் பயன்படுத்த விரும்புகிறார் என்பதை காணலாம். காரணம், மோசே தன்னை பற்றி எண்ணாமல் கர்த்தருடைய கிருபை, இஸ்ரவேல் சபை நடுவில் எழுந்தருள வேண்டும் என்றும், அவர்கள் பாவங்கள் அக்கிரமங்களை எல்லாம் ஆண்டவர் மன்னித்தருள வேண்டும் என்றும் வேண்டுவதிலிருந்து, அவருடைய தகப்பனுடைய மனதுள்ளம் வெளிப்படுகிறது.

மேலும் யாத்திராகமம் 34:29 இல் "மோசே சாட்சிப் பலகைகள் இரண்டையும் தன் கையில் எடுத்துக்கொண்டு, சீனாய்மலையிலிருந்து இறங்குகிறபோது, தன்னோடே அவர் பேசினதினாலே தன் முகம் பிரகாசித்திருப்பதை அவன் அறியாதிருந்தான்.". இங்கு மறுபடியும் சீனாய் மலைக்குச் சென்று பத்து கற்பனைகளை பெற்று திரும்புகையில், அவர் தொடர்ந்து தேவ சமூகத்திலேயே இருந்த காரணத்தினால், அவருடைய முகம் பிரகாசித்தது. இது ஒரு மேன்மையான அனுபவமாகும். தேவனுடைய வல்லமை, மகிமை மோசேயின் மாம்ச முகத்தில் பிரதிபலிப்பது, அவர் எவ்வளவு நெருக்கமாய் தேவனோடு இருந்தார் என்பதை விளக்குகிறது. அதை அவரே உணராதது, அவர் மலையில் இருந்து இறங்கி வந்த பின்பும் தன் மாம்ச சரித்திரத்தில் எவ்வித மாறுதலையும் காணாததே ஆகும். அவர் மாம்ச சரீரத்தில் இருந்தாலும் அவருக்கு தெரியாமலேயே, அவருடைய சரீரம் மறுரூபம் அடைய ஆரம்பித்தது. இதனால் தான் மோசேயின் மரித்த சடலத்தை கூட ஆண்டவரே எடுத்துக் கொண்டார்.

லேவியராகமம் 10:1-3 வசனங்களில் "பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள். அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி: என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு, சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன் என்று கர்த்தர் சொன்னது இதுதான் என்றான்; ஆரோன் பேசாதிருந்தான்.", இங்கு ஆரோனின் பிள்ளைகளான நாதாபும், அபியூவும் ஆசாரியப்பட்டத்துக்கு தெரிந்து கொள்ளபட்டவர்களாக இருந்தும், கர்த்தருக்கேற்ற பரிசுத்தம் இல்லாவிட்டால் மரணம் உடனே வரும்

என்பதை காணலாம். மோசேயும், இங்கு தன் சகோதரனின் குமாரர்களை காட்டிலும், கர்த்தருடைய பரிசுத்தமே முக்கியம் என்பதை அவர் கூறும் வார்த்தைகளில் இருந்து காணலாம். அவருடைய முகம் பிரகாசம் அடையும் விதமாக அவர் வாழ்ந்ததற்கு காரணம், அவர் கர்த்தருடைய சமூகத்தில் பரிசுத்தமாய் காணப்படுவதை மிக ஜாக்கிரதையாக எண்ணினார் என்பதே.

**எண்ணாகமம்** 11:1-3 வசனங்களில், **"பின்பு, ஜனங்கள் முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்; அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருந்தது; கர்த்தர் அதைக் கேட்டபோது, அவருடைய கோபம் மூண்டது; கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிந்து, பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரைப் பட்சித்தது. அப்பொழுது ஜனங்கள் மோசேயை நோக்கிக் கூப்பிட்டார்கள்; மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்; உடனே அக்கினி அவிந்துபோயிற்று. கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிந்ததினால், அவ்விடத்துக்குத் தபேரா என்று பேரிட்டான்."**. இங்கு மறுபடியும் மறுபடியும் அவர்கள் முறுமுறுப்பதையும், முறையிடுவதையும் காணலாம். ஆனால் தொடர்ந்து மோசே, ஒரு நல்ல தகப்பனாக அவர்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசி அவர்கள் அழியாதபடி காத்தார். **"பின்பு அவர்களுக்குள் இருந்த பலஜாதியான அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களானார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைப் புசிக்கக்கொடுப்பவர் யார்? நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப் பூண்டுகளையும் நினைக்கிறோம். இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது; இந்த மன்னாவைத் தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள். அந்த மன்னா கொத்துமல்லி விதையம்மாத்திரமும், அதின் நிறம் முத்துப்போலவும் இருந்தது. ஜனங்கள் போய் அதைப் பொறுக்கிக்கொண்டுவந்து, ஏந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது, பானைகளில் சமைப்பார்கள்; அதை அப்பங்களுமாகச் சுடுவார்கள்; அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோலிருந்தது. இரவிலே பாளயத்தின்மேல் பனிபெய்யும்போது, மன்னாவும் அதின்மேல் விழும். அந்தந்த வம்சங்களைச் சேர்ந்த ஜனங்கள் தங்கள் தங்கள் கூடாரவாசலில் நின்று அழுகிறதை மோசே கேட்டான்; கர்த்தருக்கு மிகவும் கோபம் மூண்டது; மோசேயின் பார்வைக்கும் அது பொல்லாப்பாயிருந்தது. அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: நீர் இந்த ஜனங்கள் எல்லாருடைய பாரத்தையும் என்மேல் சுமத்தினதினால், உமது அடியானுக்கு உபத்திரவம் வரப்பண்ணினதென்ன? உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடையாதே போனதென்ன? இவர்களுடைய பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்துக்கு நீ இவர்களை முலையுண்கிற பாலகனைத் தகப்பன் சுமந்துகொண்டுபோவதுபோல, உன் மார்பிலே அணைத்துக்கொண்டுபோ என்று நீர் என்னோடே சொல்லும்படி இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பந்தரித்தேனோ? இவர்களைப் பெற்றது நானோ? இந்த ஜனங்கள் எல்லாருக்கும் கொடுக்கிறதற்கு எனக்கு இறைச்சி எங்கேயிருந்து வரும்? எனக்கு**

**இறைச்சி கொடு என்று என்னைப் பார்த்து அழுகிறார்களே. இந்த ஜனங்களெல்லாரையும் நான் ஒருவனாய்த் தாங்கக்கூடாது; எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது. உம்முடைய கண்களிலே எனக்குக் கிருபை கிடைத்ததானால், இப்படி எனக்குச் செய்யாமல், என் உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு இப்பொழுதே என்னைக் கொன்றுபோடும் என்று வேண்டிக்கொண்டான்." (எண்ணாகமம் 11:4-15).**

இங்கு மறுபடியும் இஸ்ரேல் மக்கள் இறைச்சிக்காக முறையிட்டனர். அவர்கள் இறைச்சிக்காக அழுதது மாத்திரமின்றி, தாங்கள் அடிமைத்தனத்திலிருந்து மீண்டு வந்த எகிப்திலேயே தாங்கள் சுகமாய் வாழ்ந்ததாகவும், சுவையாய் உண்டதாகவும் அவர்கள் கூறுவது அவர்களின் அறியாமையை காண்பிக்கிறது. மேலும் ஒவ்வொரு நாளும் கிருபையாய் தேவன் அருளிய மன்னாவையும் அவர்கள் குறை கூறியது, தேவனுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. மோசேக்கும் அது பொல்லாப்பாயிருந்தது. இங்கு மறுபடியும் மோசே ஒரு தகப்பன் பிள்ளைகளுக்காக மன்றாடுவது போல் மன்றாடுகிறார். ஆனால் அதே நேரத்தில், தான் அதை தாங்க கூடாத பாரமாகவும் உணர்கிறார். உடனே ஆண்டவர் **"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக் கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடேகூட வந்து நிற்கும்படி செய். அப்பொழுது நான் இறங்கிவந்து, அங்கே உன்னோடே பேசி, நீ ஒருவன்மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல், உன்னோடேகூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைப்பேன்." (எண்ணாகமம் 11:16,17)** என்றார். இங்கு இஸ்ரவேல் மக்களின் பொல்லாப்பைக் கண்டு ஆண்டவர் கோபப்பட்டாலும், மோசேயின் ஜெபம் அதை மறக்க செய்து, அவர் மக்களை தொடர்ந்து வழி நடத்தும் படியாய், மோசேயின் பாரத்தை குறைப்பது பற்றி, தேவனை செயல்பட வைத்தது.

மேலும், **"நீ ஜனங்களை நோக்கி: நாளைக்காக உங்களைப் பரிசுத்தம்பண்ணுங்கள்; நீங்கள் இறைச்சி சாப்பிடுவீர்கள்; எங்களுக்கு இறைச்சி சாப்பிடக் கொடுப்பவர் யார் என்றும், எகிப்திலே எங்களுக்குச் சௌக்கியமாயிருந்தது என்றும், கர்த்தருடைய செவிகள் கேட்க அழுதீர்களே; ஆகையால், நீங்கள் சாப்பிடும்படி கர்த்தர் உங்களுக்கு இறைச்சி கொடுப்பார். நீங்கள் ஒருநாள், இரண்டுநாள், ஐந்துநாள், பத்துநாள், இருபதுநாள் மாத்திரமல்ல, ஒரு மாதம்வரைக்கும் புசிப்பீர்கள்; அது உங்கள் மூக்காலே புறப்பட்டு, உங்களுக்குத் தெவிட்டிப்போகுமட்டும் புசிப்பீர்கள்; உங்களுக்குள்ளே இருக்கிற கர்த்தரை அசட்டைபண்ணி, நாங்கள் ஏன் எகிப்திலிருந்து புறப்பட்டோம் என்று அவருக்கு முன்பாக அழுதீர்களே என்று சொல் என்றார்." (எண்ணாகமம் 11:18-20).** இங்கு ஒரு பக்கம் ஆண்டவர் இஸ்ரவேல் மக்கள் கேட்டதை அளவில்லாமல் கொடுத்ததை போல் இருந்தாலும், உண்மையில் அவர்கள் இச்சித்ததை, அவர்கள் வெறுத்துப் போகும்படியாய், தம்முடைய வல்லமையை அவர்கள் காணும்படியாய், இப்படிப்பட்ட மாம்ச இச்சைக்கேற்ற முறுமுறுப்பு அழிவையே கொண்டுவரும் என்பதை,

அவர்கள் உணர்வதற்காக இவ்வாறு செய்தார். **“அதற்கு மோசே: என்னோடிருக்கிற காலாட்கள் ஆறுலட்சம்பேர்; ஒரு மாதம் முழுவதும் புசிக்கும்படி அவர்களுக்கு இறைச்சி கொடுப்பேன் என்று சொன்னீரே. ஆடுமாடுகளை அவர்களுக்காக அடித்தாலும் அவர்களுக்குப் போதுமா? சமுத்திரத்து மச்சங்களையெல்லாம் அவர்களுக்காகச் சேர்த்தாலும் அவர்களுக்குப் போதுமா என்றான்.“ (எண்ணாகமம் 11:21,22).** மோசேக்கு கூட ஆண்டவர் எவ்வாறு இத்தனை பேருக்கு ஒரே நேரத்தில் இறைச்சி தருவார் என்பது சந்தேகமாய் இருந்தது. ஆனால் ஆண்டவரோ, **“அதற்குக் கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று, நீ இப்பொழுது காண்பாய் என்றார்.“ (எண்ணாகமம் 11:23).** மேலும், **“அப்பொழுது மோசே புறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்குச் சொல்லி, ஜனங்களின் மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்தினான். கர்த்தர் மேகத்தில் இறங்கி, அவனோடே பேசி, அவன்மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர்மேலும் வைத்தார்; அந்த ஆவி அவர்கள்மேல் வந்து தங்கினமாத்திரத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்; சொல்லி, பின்பு ஓய்ந்தார்கள். அப்பொழுது இரண்டுபேர் பாளயத்தில் இருந்துவிட்டார்கள்; ஒருவன்பேர் எல்தாத், மற்றவன்பேர் மேதாத்; அவர்களும் பேர்வழியில் எழுதப்பட்டிருந்தும், கூடாரத்துக்குப் போகப் புறப்படாதிருந்தார்கள்; அவர்கள்மேலும் ஆவி வந்து தங்கினதினால், பாளயத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். ஒரு பிள்ளையாண்டான் ஓடிவந்து, எல்தாதும் மேதாதும் பாளயத்தில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள் என்று மோசேக்கு அறிவித்தான். உடனே மோசேயினிடத்திலுள்ள வாலிபரில் ஒருவனும் அவனுடைய ஊழியக்காரனும் நூனின் குமாரனுமாகிய யோசுவா பிரதியுத்தரமாக: என் ஆண்டவனாகிய மோசேயே, அவர்களைத் தடைபண்ணும் என்றான். அதற்கு மோசே: நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே என்றான்.“(எண்ணாகமம் 11:24-29).** இங்கு ஆண்டவர் மோசேயின் மீது அக்கறை கொண்டு, அவர் மேல் இருக்கும் ஆவியை மற்றவருக்கு பகிர்ந்து கொடுப்பதும், அதே நேரத்தில் மோசேயோ, தன் மேல் உள்ள ஆவியும், தேவ பிரசன்னமும், தனக்கு மட்டுமல்ல தன் மக்கள் அனைவருக்கும் கிடைத்தால் நலமாய் இருக்குமே என்று அவர் கூறுவதும், இறைச்சிக்காக இச்சையோடும் முறுமுறுத்த மக்களின் மீது மோசே கொண்ட அன்பை வெளிப்படுத்துகிறது.

**எண்ணாகமம் 11:30-34** வசனங்களில் **“பின்பு, மோசேயும் இஸ்ரவேலின் மூப்பரும் பாளயத்திலே வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட ஒரு காற்று சமுத்திரத்திலிருந்து காடைகளை அடித்துக்கொண்டுவந்து, பாளயத்திலும் பாளயத்தைச் சுற்றிலும், இந்தப்பக்கம் ஒருநாள் பிரயாணமட்டும் அந்தப்பக்கம் ஒருநாள் பிரயாணமட்டும், தரையின்மேல் இரண்டுமுழ உயரம் விழுந்துகிடக்கச் செய்தது. அப்பொழுது ஜனங்கள் எழும்பி, அன்று பகல்முழுவதும், இராமுழுவதும், மறுநாள் முழுவதும் காடைகளைச்**

**சேர்த்தார்கள்; கொஞ்சமாய்ச் சேர்த்தவன் பத்து ஓமர் அளவு சேர்த்தான்; அவைகளைப் பாளயத்தைச் சுற்றிலும் தங்களுக்காகக் குவித்துவைத்தார்கள். தங்கள் பற்கள் நடுவே இருக்கும் இறைச்சியை அவர்கள் மென்று தின்னுமுன்னே கர்த்தருடைய கோபம் ஜனங்களுக்குள்ளே மூண்டது; கர்த்தர் ஜனங்களை மகா பெரிய வாதையால் வாதித்தார். இச்சித்த ஜனங்களை அங்கே அடக்கம்பண்ணினதினால், அந்த ஸ்தலத்துக்குக் கிப்ரோத் அத்தாவா என்று பேரிட்டான்.“**. இங்கு ஆண்டவர் அற்புத விதமாய் இஸ்ரவேல் மக்கள் இச்சித்தது போல், அவர்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு காடைகளை கொடுத்தாலும், அதை அவர்கள் விருப்பத்தோடு பெற்று, சமைத்து உண்டாலும், அவர்கள் சாப்பிடுகிற வேலையில் தானே கர்த்தருடைய கோபம் எழும்பி ஜனங்களை வாதித்தது. ஆம், ஒருவேளை அவர்கள் விரும்பினதை, அவர்கள் அழுது, முறுமுறுத்து என எப்படியோ பெற்றுக்கொண்டனர். ஆனால் அது அவர்களுக்கு ஆசீர்வாதத்தை அல்ல அழிவைத்தான் கொண்டு வந்தது. ஆம் ஆண்டவருடைய சித்தத்தை, திட்டத்தை அறியாமல், அல்லது அறிந்தும் அவ்வாறு வாழ விரும்பாமல், தங்கள் சுய சித்தத்தின்படியும், இச்சையின்படியும் வாழ வேண்டும் என நினைப்பவர்கள், ஆசிர்வாதம் என சிலவற்றை தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டாலும் அது அவர்களுக்கு அழிவையே கொண்டு வரும்.

**எண்ணாகமம்** 12:1-3 வசனங்களில், **“எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம்பண்ணியிருந்தபடியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம்பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசி: கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார். மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்.“**. இங்கு மோசேக்கு அவருடைய சொந்த சகோதர, சகோதரி மூலமாகவே எதிர்ப்பு வந்தது. மோசே பிறந்த பொழுது இந்த மிரியாம் மூலமாகவே ஆண்டவர் அவரைக் காத்தார். மிரியாம் மூலமாகத்தான் மோசேக்கு பார்வோனின் அரண்மனையில் வளரும் வாய்ப்பு கிடைத்தது. மேலும் ஆரோனையும் ஆண்டவரே மோசேக்கு உதவியாக தந்தார். ஆசாரியப்பட்டத்தையும் ஆரோனுக்கே கொடுத்தார். ஆண்டவர் எதற்காக மோசேயை தெரிந்து கொண்டார், மோசேயோடு இணைந்து செயல்பட ஆண்டவர் தங்களுக்கு என்னென்ன பணிகளை கொடுத்துள்ளார் என்பதை நன்றாக அறிந்த இவ்விருவரும், மோசேக்கு உறுதுணையாக இருக்க வேண்டிய இவ்விருவரும், மோசேக்கு விரோதமாக, அவர் ஒரு எத்தியோப்பிய தேசத்து ஸ்திரீயை விவாகம் பண்ணியிருந்தனிமித்தம், அவர் மனைவியை காரணம் காட்டி, அவர் ஏதோ தேவனுக்கு எதிராய் இப்படி திருமணம் செய்தது போல், எனவே தாங்கள்தான் உண்மையாக ஆண்டவருக்கு ஊழியம் செய்வது போல், இவ்விருவரும் **எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ** என்று கூறுவது, மற்ற இஸ்ரவேல் மக்களைப் போல அவர்களும் மோசேயை பார்க்க நினைத்ததும், மோசேயை காட்டிலும் தங்களை உயர்த்த நினைத்ததும் வெளிப்படுகிறது. ஆனால் உண்மையில் மோசே எப்படிப்பட்டவர் என்பதை அவர்கள் மறந்து போயிருந்தனர். மோசேயை ஆண்டவர் சினேகிதன் என்றார். அவர் மூலமாகவே அற்புதங்களை செய்தார்.

அவரிடமே பத்து கற்பனைகளையும், நியாயப்பிரமாணத்தையும், ஆசிரிப்பு கூடார வேலையும் கொடுத்தார். வான மன்னாவை பொழிந்தருள பண்ணினார். தேவ சமூகத்திலேயே இருந்த அவருடைய முகம், தேவனுடைய மகிமையை பிரகாசிப்பித்தது. இவற்றில் ஒன்றையும் பெறாத இவர்கள், ஏதோ குடும்ப பிரச்சினை காரணமாக, எத்தியோப்பிய தேசத்து ஸ்திரீயான மோசேயின் மனைவியை மட்டம் தட்ட நினைத்து, மோசேக்கு விரோதமாகவே அவர்கள் பேசினர். வசனம் 12:2 அருமையாக கூறுகிறது, **கர்த்தர் அதைக் கேட்டார்** என்று.

ஆம் ஆரோனும் மிரியாமும் இஸ்ரவேல் மக்கள் முன் மோசேயை, அவர் விவாகம் பண்ணின எத்தியோப்பிய ஸ்திரீயினிமித்தம் குற்றப்படுத்த நினைத்தனர். ஆனால் அது மக்களிடம் போய் சென்றதோ இல்லையோ, உடனடியாக தேவ சமூகத்தை எட்டினது. வசனம் 12:3 கூறுகிறது, **மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்** என்று. ஆம் ஒரு காலத்தில் கோபத்தால் ஒரு மனிதனைக் கொன்று போட்ட மோசே, இப்பொழுது முற்றிலும் தன்னை தேவப்பணிக்கென அர்பணித்தவராய், சகல மனிதரிலும் மிகுந்த சாந்தம் உள்ளவராய் இருந்தார். ஆம் இஸ்ரவேல் மக்கள் முறுமுறுத்த போது கோபப்படாமல், அவர்களுக்காக பரிந்து பேசிய மோசே, தன் சொந்த சகோதர, சகோதரிக்கு விரோதமாக ஒன்று பேசாமல் அமைதியாக இருந்தார். ஆனால் ஆண்டவர் அவருக்காக வழக்காட உடனே இறங்கினார். **எண்ணாகமம்** 12:4-9 வசனங்களில், **“சடுதியிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும் நோக்கி: நீங்கள் மூன்றுபேரும் ஆசரிப்புக் கூடாரத்துக்குப் புறப்பட்டுவாருங்கள் என்றார்; மூன்றுபேரும் போனார்கள். கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நின்று, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார்; அவர்கள் இருவரும் போனார்கள். அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார். கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது; அவர் போய்விட்டார்.“.**

இங்கு மோசேயை இஸ்ரவேல் ஜனங்கள் முன் வெட்கப்பட வைக்க வேண்டும், சிறுமைப்பட வைக்க வேண்டும் என்று ஆரோனும் மிரியாமும் நினைத்தனர். ஆனால் அவர்கள் பேசிய பேச்சு, பரலோக தேவனையே இறங்கி வர செய்து, மோசேக்கு ஆதரவாய் பேச வைத்தது. ஆம் இங்கு ஆண்டவர் மாத்திரமே மோசேயின் இருதயத்தை நன்றாக அறிந்திருந்தார். தான் கொடுத்த பணிக்காக மோசே எவ்வளவு தியாகம் செய்தார், எவ்வளவு கடினமான சூழ்நிலையை கடந்து வந்தார், தன்னைப் பற்றியோ தன் குடும்பத்தை பற்றியோ கவலைப்படாமல், இஸ்ரவேல் மக்களுக்காகவே

அவர் வாழ்ந்தார் என்பதை தேவன் அறிந்திருந்தார். எனவே மோசேக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை ஆண்டவரே கூறினார். மோசேயை தன் தாசன் என்றார். என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன் என்றார். மேலும் அவன் கர்த்தரின் சாயலை காண்கிறான் என்று கூறி, மோசேயின் மேலான ஆவிக்குரிய வாழ்வு குறித்து ஆண்டவரே சாட்சி கொடுத்து, இப்படிப்பட்ட மோசேக்கு விரோதமாய் பேச உங்களுக்கு பயமில்லாமல் போனது என்ன என்றார். இதைக் கேட்ட மோசேக்கு வேறு எதுவும் தேவையில்லை. ஆண்டவருக்கு உண்மையாய் வாழ்ந்த மோசேக்காக ஆண்டவரே வாதாடினார். வாதாடினது மட்டுமல்ல, **“மேகம் கூடாரத்தை விட்டு நீங்கிப்போயிற்று; மிரியாம் உறைந்த மழையின் வெண்மைபோன்ற குஷ்டரோகியானாள்; ஆரோன் மிரியாமைப் பார்த்தபோது, அவள் குஷ்டரோகியாயிருக்கக் கண்டான்.“ (எண்ணாகமம்** 12:10). ஆம், மிரியாமும், ஆரோனும் மோசேயை தள்ளிவிட்டு, தாங்கள் பெரியவர்களாக, தலைவர்களாக நினைத்தனர். ஆனால் ஆண்டவரோ மிரியாமை யார் நடுவிலும் குடியிருக்க முடியாதபடி குஷ்டரோகம் பிடிக்க செய்தார். அப்பொழுது, **“அப்பொழுது ஆரோன் மோசேயை நோக்கி: ஆ, என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள்மேல் சுமத்தாதிரும். தன் தாயின் கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகிச் செத்துவிழுந்த பிள்ளையைப்போல அவள் ஆகாதிருப்பாளாக என்றான்.“ (எண்ணாகமம்** 12:11,12). இப்பொழுதுதான் இவ்விருவருக்கும் புத்தி வந்தது. மறுபடியும் ஆரோன் மோசேயை நோக்கி கெஞ்ச தொடங்கினார். **“அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்.“ (எண்ணாகமம்** 12:13). இங்கு மோசே இஸ்ரேல் மக்களுக்காக, அவர்களை ஆண்டவர் மன்னிக்கும்படியாய் எப்படி கெஞ்சினாரோ, அப்படியே தன் சகோதரிக்காகவும் கெஞ்சினார். இங்கு ஒரு இடத்தில் கூட மிரியாமும், ஆரோனும் இப்படி பேசின பொழுதிலும், அவர் அவர்களுக்கு எதிராக ஒரு வார்த்தையும் கூறவில்லை. மக்களிடம் தான் யார் என்று நிரூபிக்க முற்படவில்லை. அல்லது தேவனிடம் முறையிடவில்லை. காரணம் அவர் இவை எவற்றையும் பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவர் எண்ணமெல்லாம் ஆண்டவருக்கு முன்பாக உண்மையாக வாழ்ந்து, அவர் பணி செய்ய வேண்டும் என்பதே. எனவே ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஒரு நல்ல தலைவனாக, நல்ல தகப்பனாக அவரால் செயல்பட முடிந்தது.

இங்கு மோசேயின் வேண்டுதலை கேட்ட ஆண்டவர், **“கர்த்தர் மோசேயை நோக்கி: அவள் தகப்பன் அவள் முகத்திலே காறித் துப்பினதுண்டானால், அவள் ஏழுநாள் வெட்கப்படவேண்டாமோ, அதுபோலவே அவள் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்து, பின்பு சேர்த்துக்கொள்ளப்படக்கடவள் என்றார். அப்படியே மிரியாம் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்தாள்; மிரியாம் சேர்த்துக்கொள்ளப்படுமட்டும் ஜனங்கள் பிரயாணம்பண்ணாதிருந்தார்கள். பின்பு, ஜனங்கள் ஆஸரோத்திலிருந்து புறப்பட்டு, பாரான் வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்.“ (எண்ணாகமம்** 12:14-16). இவ்வாறு மோசே பார்வோனின் மூலமாக, மற்ற புறஜாதிகள் மூலமாக, தன் சொந்த ஜனங்கள் மூலமாக, இறுதியாக தன் ஊழியத்தில் தன்னோடு தோள் கொடுத்து ஊழியம் செய்த தன் சொந்த சகோதர சகோதரி மூலமாகவும்,

முறுமுறுப்புகள் எதிர்ப்புகள் ஏற்பட்டாலும், அமைதியாக அவர் தேவப்பணி செய்வதனையை ஜாக்கிரதையாக கொண்டு இருந்தார். தேவனுக்கு முன்பாக எவ்வாறு பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக தேவ சமூகத்திலேயே தங்கி இருப்பதையே அவர் பாக்கியமாக எண்ணினார். தேவனுடைய சாயலையும், பிரசன்னத்தையும், வல்லமையுமே அவர் வாஞ்சித்தார். இவ்வாறாக அவர் தொடர்ந்து இஸ்ரவேல் மக்களை வழிநடத்தினார். அதனை தொடர்ந்து நாம் பின்வரும் பாகங்களில் தியானிப்போம். மோசேயை போல, தேவனிடமிருந்தே ஒரு நேரடியான சாட்சியை பெறும் வாழ்க்கையை வாழும் படியாய், நாமும் வாஞ்சிப்போமாக. இவ்வுலகத்தில் எதைக்காட்டிலும், ஆண்டவரின் சமூகத்தில் தங்கியிருப்பதையே நாடுவோமாக. அவர் நமக்காக என்ன சித்தம் / பணி வைத்திருக்கிறாரோ, அதனையே செய்ய ஜாக்கிரதையாக இருப்போமாக. தேவன் நம்மை குறித்தும் ஒருநாள் நிச்சயம் சாட்சி கொடுப்பார். ஆமென், அல்லேலூயா.

## 134. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 5



ஆண்டவர் மோசேயை தெரிந்து கொண்டு, அவர் மூலமாய் இஸ்ரவேல் மக்களை எகிப்தில் இருந்து மீட்டெடுத்து கானானுக்கு வழி நடத்தினார் என்பதையும், அப்படியாக வழி நடந்து வருகையில் இஸ்ரவேல் மக்கள் மூலமாகவும், அந்நிய மக்கள் மூலமாகவும், தன் சொந்த வீட்டார் மூலமாகவும் ஏற்பட்ட எத்தனையோ இன்னல்கள் மத்தியிலும், மோசே தேவனுடைய ஊழியத்தை ஒரு நல்ல தலைவனாக இருந்து எவ்வாறு வல்லமையாய் செய்தார் என்பதையும், ஆண்டவரே கோபப்பட்டு இஸ்ரவேல் மக்களை அழிக்க நினைத்தபொழுதும், அவர்களுக்காக ஒவ்வொரு முறையும் தேவனிடத்தில் பரிந்து பேசி, அவர்களின் ஒவ்வொரு முறுமுறுப்புகள் மத்தியிலும், அழுகுரல் மத்தியிலும், அதனை சகித்து ஒரு நல்ல தகப்பனாய் இருந்து, அவர்களுக்கு தேவையான ஒவ்வொன்றையும் (வான மன்னா உள்பட) தேவனிடத்திலிருந்து பெற்று தந்ததையும், தேவ சமூகத்தில் 40 நாட்கள் தரித்திருந்து தேவ கற்பனையைப் பெற்று தேவனோடு ஐக்கியப்பட்டு இருந்ததினிமித்தம், அவருடைய மாம்ச முகத்தில் தெய்வீக பிரகாசம் உண்டானதையும், எல்லாவற்றிற்கும் மேலாக இஸ்ரவேல் மக்கள், ஆரோன், மிரியாம் உள்பட மோசேக்கு விரோதமாய் பேசிய பொழுது, தேவனே அவருக்காக வழக்காட வந்து, மோசேக்கும், மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை கூறி, அவரை தம்முடைய தாசன் என்று அழைத்ததையும், நாம் முதல் நான்கு பாகங்களில் கண்டோம். தொடர்ந்து ஐந்தாம் பக்கத்திலும் மோசே எவ்வாறு ஒரு நல்ல தலைவனாய், தகப்பனாய் செயல்பட்டார் என்பதை தியானிப்போம்.

எகிப்தில் இருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் கானானை சுதந்திரிக்க வேண்டும் என்பதே தேவசித்தமாய், திட்டமாய் இருந்தது. அதற்காக, **“கர்த்தர் மோசேயை நோக்கி: நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான்தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; ஒவ்வொரு**

பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை அனுப்பவேண்டும் என்றார். மோசே கர்த்தருடைய வாக்கின்படியே அவர்களைப் பாரான் வனாந்தரத்திலிருந்து அனுப்பினான்; அந்த மனிதர் யாவரும் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள்." (எண்ணாகமம் 13:1-3). இங்கு 12 கோத்திரத்திற்கு 12 பேராக அனுப்பப்பட்டனர். அதில் முக்கியமாக, யூதா கோத்திரம் சார்பாக காலேபும், எப்பிராயீம் கோத்திரம் சார்பாக யோசுவாவும் அனுப்பப்பட்டனர். அவர்கள் எவ்வாறு தேசத்தை வேவு பார்க்க வேண்டும் என்பதையும் மோசே அந்த 12 தலைவர்களுக்கும் விளக்கினார். "அவர்களை மோசே கானான்தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி அனுப்புகையில், அவர்களை நோக்கி: நீங்கள் இப்படித் தெற்கே போய், மலையில் ஏறி, தேசம் எப்படிப்பட்டதென்றும், அங்கே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்களோ பலவீனர்களோ, கொஞ்சம்பேரோ அநேகம்பேரோ என்றும், அவர்கள் குடியிருக்கிற தேசம் எப்படிப்பட்டது, அது நல்லதோ கெட்டதோ என்றும், அவர்கள் பட்டணங்கள் எப்படிப்பட்டதென்றும், அவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்களோ கோட்டைகளில் குடியிருக்கிறவர்களோ என்றும், நிலம் எப்படிப்பட்டது, அது வளப்பமானதோ இளப்பமானதோ என்றும்; அதில் விருட்சங்கள் உண்டோ இல்லையோ என்றும் பாருங்கள்; தைரியங்கொண்டிருந்து, தேசத்தின் கனிகளிலே சிலவற்றைக் கொண்டுவாருங்கள் என்றான். அக்காலம் திராட்சச்செடி முதற்பழம் பழுக்கிற காலமாயிருந்தது." (எண்ணாகமம் 13:17-20).

இதன் பிறகு, "அவர்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்து, நாற்பதுநாள் சென்றபின்பு திரும்பினார்கள். அவர்கள் பாரான் வனாந்தரத்தில் இருக்கிற காதேசுக்கு வந்து, மோசே ஆரோன் என்பவர்களிடத்திலும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரிடத்திலும் சேர்ந்து, அவர்களுக்கும் சபையார் அனைவருக்கும் சமாசாரத்தை அறிவித்து, தேசத்தின் கனிகளை அவர்களுக்குக் காண்பித்தார்கள். அவர்கள் மோசேயை நோக்கி: நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி. ஆனாலும், அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்; பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது; அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம். அமலேக்கியர் தென்புறமான தேசத்தில் குடியிருக்கிறார்கள்; ஏத்தியரும், எபூசியரும், எமோரியரும் மலைநாட்டில் குடியிருக்கிறார்கள்; கானானியர் கடல் அருகேயும் யோர்தானண்டையிலும் குடியிருக்கிறார்கள் என்றார்கள். அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம் என்றான். அவனோடேகூடப் போய்வந்த மனிதரோ: நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள். நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்துவந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள். அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு

வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்தார்கள்." (எண்ணாகமம் 13:25-33). இங்கு காலேப் தைரியத்தோடு, ஆண்டவர் மேல் உள்ள விசுவாசத்தோடு, இம்மட்டும் நடத்தின ஆண்டவர், இனிமேலும் நடத்துவார் என்ற நம்பிக்கையுடன் தேசத்தை சுதந்தரிக்க ஆயத்தமானார். ஆனால் மற்றவர்களோ தங்கள் சுய பெலத்தை நம்பி தங்களால் எதுவும் செய்யக்கூடாது என்றனர். "அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டிருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம். நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டுவந்தது என்ன? எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ என்றார்கள். பின்பு அவர்கள்: நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்குத் திரும்பிப்போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்." (எண்ணாகமம் 14:1-4).

இங்கு காலேப், யோசுவா தவிர மற்ற 10 பேரும் கூறினதை கேட்ட மக்கள், ஆண்டவரையோ, மோசேயையோ அல்லது, காலேப், யோசுவா அவர்களின் வார்த்தைகளையோ நம்பாமல் / கேட்க மனதில்லாமல்,. துர் செய்தி சொன்னவர்கள் கூறியதே சரி என்று எண்ணி பேசுவது வேதனைக்குரியதாகும். அக்காலத்தில் வல்லரசாக இருந்த எகிப்தின் அரசனான பார்வோன் கையிலிருந்தே, அற்புத அடையாளங்கள் செய்து விடுவித்த தேவன், இவ் வனாந்தர யாத்திரையில் ஒரு குறைவும் இல்லாமல் அற்புத விதமாய் போஷித்து பாதுகாத்து வரும் தேவன், நிச்சயமாய் தாம் சொன்னபடியே கானானை சுதந்தரிக்கச் செய்வார் என்ற விசுவாசம் அவர்களிடத்தில் இல்லாதபடியினால் இவ்வாறு செயல்பட்டனர். இதில் முக்கியமாக, நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்குத் திரும்பிப்போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள் என்பது அவர்கள் ஆண்டவரை மாத்திரமல்ல, தங்களை இம்மட்டும் ஒரு நல்ல தலைவனாய், தகப்பனாய் இருந்து வழி நடத்திய மோசேயையும் புறக்கணித்தனர் என்பது வெளிப்படுகிறது. "அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்குமுன்பாகவும் முகங்குப்புற விழுந்தார்கள்." (எண்ணாகமம் 14:5). இங்கு இஸ்ரவேல் மக்கள் தவறான வழிக்கு சென்று விடக்கூடாது என்பதற்காக அவர் எவ்வளவாய் ஜனங்கள் முன் தன்னை தாழ்த்துகிறதை காணலாம். மேலும், "தேசத்தைச் சுற்றிப்பார்த்தவர்களில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையையும் நோக்கி: நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல

தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார். கர்த்தருக்கு விரோதமாகமாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள்; அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை என்றார்கள்." (எண்ணாகமம் 14:6-9). இங்கு மோசே, ஆரோன், காலேப், யோசுவா என்ற நால்வரும் ஒருபுறமும் மற்றவர்கள் மறுபுறமும் போராடுகையில், "அப்பொழுது அவர்கள்மேல் கல்லெறியவேண்டும் என்று சபையார் எல்லாரும் சொன்னார்கள்; உடனே கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாகக் காணப்பட்டது." (எண்ணாகமம் 14:10). இங்கு மறுபடியும் தேவன் மோசேக்கு ஆதரவாக அவருக்காக வழக்காட இறங்கினார். "கர்த்தர் மோசேயை நோக்கி: எதுவரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்? நான் அவர்களைக் கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்துக்குப் புறம்பாக்கிப்போட்டு, அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன் என்றார்." (எண்ணாகமம் 14:11,12).

இங்கு தேவனே இஸ்ரவேல் மக்களின் நடவடிக்கை கண்டு, அவர்களை அழித்து மோசேயை பெரிய ஜாதியாக்குவேன் என்று கூறிய பொழுதும், "மோசே கர்த்தரை நோக்கி: எகிப்தியர் இதைக் கேட்பார்கள், அவர்கள் நடுவிலிருந்து உம்முடைய வல்லமையினாலே இந்த ஜனங்களைக் கொண்டுவந்தீரே. கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய நீர் முகமுகமாய்த் தரிசனமாகிறதையும், உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறதையும், பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதையும் கேட்டிருக்கிறார்கள்; இந்த தேசத்தின் குடிகளுக்கும் சொல்லுவார்கள். ஒரே மனிதனைக் கொல்லுகிறதுபோல இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால், அப்பொழுது உம்முடைய கீர்த்தியைக் கேட்டிருக்கும் புறஜாதியார்: கர்த்தர் அந்த ஜனங்களுக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய் விடக்கூடாதேபோனபடியினால், அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோட்டார் என்பார்களே. ஆகையால் கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும், குற்றமுள்ளவர்களைக் குற்றமற்றவர்களாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்றும், நீர் சொல்லியிருக்கிறபடியே, என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக. உமது கிருபையினுடைய மகத்துவத்தின்படியேயும், எகிப்தை விட்டதுமுதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்துவந்ததின்படியேயும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும் என்றான்."

(எண்ணாகமம் 14:13-19). இங்கு மோசே ஒரு சாதாரண மாம்ச சரீரம் உள்ள மனிதனாய் இருந்தபொழுதிலும், சர்வ வல்லமையுள்ள தேவனிடத்தில் அவர் இவ்வாறு பேசி, இரக்கத்திற்காக மன்னிப்பிற்காக கெஞ்சி நிற்பது, அவர் எவ்வளவாய் தேவனோடு ஐக்கியத்தில் இருந்தார் என்பதையும், அதே நேரத்தில் பொல்லாத இஸ்ரவேல் மக்கள் தங்கள் அக்கிரமத்தினால் அழிந்து போகாதபடி, அவர்களை காக்கும் ஒரு நல்ல தலைவனாய், தகப்பனாய் இருப்பதையும் காணலாம். இவ்வாறு மோசேயின் இந்த அருமையான விண்ணப்பத்தை கேட்ட தேவன், "அப்பொழுது கர்த்தர்: உன் வார்த்தையின்படியே மன்னித்தேன்." (எண்ணாகமம் 14:20) என்றார்.

ஆனால் அதே நேரத்தில், "பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன். நீ அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்னபிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார். இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும். எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை. கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டைப்பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள். உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும். அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள். நீங்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள். கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்; எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடின இந்தப் பொல்லாத சபையார் யாவருக்கும் இப்படியே செய்வேன்; இந்த வனாந்தரத்திலே அழிவார்கள், இங்கே சாவார்கள் என்று சொல் என்றார்." (எண்ணாகமம் 14:26-35). மேலும், "அந்த தேசத்தைச் சோதித்துப்பார்க்கும்படி மோசேயால் அனுப்பப்பட்டுத் திரும்பி, அந்த தேசத்தைக்குறித்துத் துர்ச்செய்தி கொண்டுவந்து, சபையார் எல்லாரும் அவனுக்கு விரோதமாய் முறுமுறுக்கும்படி அந்தத் துர்ச்செய்தியைச் சொன்னவர்களாகிய அந்த மனிதர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்தார்கள். தேசத்தைச் சுற்றிப்பார்க்கப்போன அந்த மனிதரில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும்மாத்திரம் உயிரோடிருந்தார்கள். மோசே இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னபோது,

**ஜனங்கள் மிகவும் துக்கித்தார்கள். அதிகாலமே அவர்கள் எழுந்திருந்து: நாங்கள் பாவஞ்செய்தோம், கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின இடத்துக்கு நாங்கள் போவோம் என்று சொல்லி மலையின் உச்சியில் ஏறத்துணிந்தார்கள். மோசே அவர்களை நோக்கி: நீங்கள் இப்படி கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன? அது உங்களுக்கு வாய்க்காது. நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படாதபடிக்கு ஏறிப்போகாதிருங்கள்; கர்த்தர் உங்கள் நடுவில் இரார். அமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்குமுன்னே இருக்கிறார்கள்; பட்டயத்தினால் விழுவீர்கள்; நீங்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கினபடியால், கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார் என்றான். ஆனாலும் அவர்கள் மலையின் உச்சியில் ஏறத் துணிந்தார்கள்; கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டியும் மோசேயும் பாளயத்தை விட்டுப் போகவில்லை. அப்பொழுது அமலேக்கியரும் கானானியரும் அந்த மலையிலே இருந்து இறங்கிவந்து, அவர்களை முறிய அடித்து, அவர்களை ஓர்மாமட்டும் துரத்தினார்கள்." (எண்ணாகமம் 14:36-45).**

இங்கு இஸ்ரவேல் மக்களின் முரட்டாட்டமான, முட்டாள்தனமான செய்கையை நாம் காணலாம். தேவன் முன் செல்ல சொன்ன போது முன் செல்லாமல், பிறகு தேவன் அவர்களோடு தான் முன்செல்ல இருக்கப் போவதில்லை என்று கூறின பொழுது அவர்கள் முன் செல்வதும், அவர்கள் முழுக்க முழுக்க தங்கள் சுய பெலனையே நம்பி செயல்பட்டனர் என்பதை வெளிப்படுத்துகிறது. ஆனால் மோசேயோ ஞானவானாக, சாந்தமுள்ளவராக இஸ்ரவேல் மக்கள் அழிந்து போகாதபடி காத்தார். தேவன் அவரைப் பெரிய ஜாதியாக்குவேன் என்று கூறின பொழுதும், தன் நலனையோ தன் சந்ததியாரின் நலனையோ பாராமல், இஸ்ரவேல் மக்களின் நலனையே அவர் சிந்தித்து செயல்பட்டது, அவர் எவ்வளவு நல்ல தலைவனாய் தகப்பனாய் இருந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. **"லேவிக்குப் பிறந்த கோகாத்தின் குமாரனாகிய இத்சேயாரின் மகன் கோராகு என்பவன் ரூபன் வம்சத்திலுள்ள எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபிராமையும் பேலேத்தின் குமாரனாகிய ஓனையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரில் சபைக்குத் தலைவர்களும் சங்கத்துக்கு அழைக்கப்பட்டவர்களும் பிரபலமானவர்களுமாகிய இருநூற்று ஐம்பது பேர்களோடும் கூட மோசேக்குமுன்பாக எழும்பி, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி: நீங்கள் மிஞ்சிப்போகிறீர்கள்; சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படியிருக்க, கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்றார்கள்." (எண்ணாகமம் 16:1-3).** இங்கு மறுபடியும் கோராகு மற்றும் அவனோடு இருந்தவர்கள் மூலமாக பிரச்சனை உண்டான பொழுது, மோசேயை தள்ளிவிட்டு தாங்கள் தலைவராக வேண்டும் என்ற நினைப்பில் இவ்வாறாக பேசினர். **"மோசே அதைக் கேட்டபோது, முகங்குப்புற விழுந்தான். பின்பு அவன் கோராகையும் அவனுடைய எல்லாக் கூட்டத்தையும் நோக்கி: நாளைக்குக் கர்த்தர் தம்முடையவன் இன்னான் என்றும், தம்மண்டையிலே சேரத் தாம் கட்டளையிட்ட பரிசுத்தவான் இன்னான் என்றும் காண்பிப்பார்; அப்பொழுது எவனைத் தெரிந்துகொள்வாரோ, அவனைத் தம்மிடத்தில் சேரக் கட்டளையிடுவார். ஒன்று செய்யுங்கள்;**

கோராகே, கோராகின் கூட்டத்தார்களே, நீங்கள் எல்லாரும் தூபகலசங்களை எடுத்துக்கொண்டு, நாளைக்கு அவைகளில் அக்கினிபோட்டு, கர்த்தருடைய சந்நிதியில் தூபவர்க்கம் இடுங்கள்; அப்பொழுது கர்த்தர் எவனைத் தெரிந்துகொள்வாரோ, அவன் பரிசுத்தவானாயிருப்பான்; லேவியின் புத்திரராகிய நீங்களே மிஞ்சிப்போகிறீர்கள் என்றான். பின்னும் மோசே கோராகை நோக்கி: லேவியின் புத்திரரே, கேளுங்கள்; கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யவும், சபையாரின் முன்நின்று அவர்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யவும், உங்களைத் தம்மண்டையிலே சேரப்பண்ணும்படி இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேல் சபையாரிலிருந்து உங்களைப் பிரித்தெடுத்ததும், அவர் உன்னையும் உன்னோடேகூட லேவியின் புத்திரராகிய உன்னுடைய எல்லாச் சகோதரரையும் சேரப்பண்ணினதும், உங்களுக்கு அற்பகாரியமோ? இப்பொழுது ஆசாரியப்பட்டத்தையும் தேடுகிறீர்களோ? இதற்காக நீயும் உன் கூட்டத்தார் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாகவே கூட்டங்கூடினீர்கள்; ஆரோனுக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுக்கிறதற்கு அவன் எம்மாத்திரம் என்றான்." (எண்ணாகமம் 16:4-11). இங்கு மோசே இவர்களோடு வழக்காடுவதிலிருந்து, அவர்கள் மோசேயின் தலைவன் பட்டதை மட்டுமல்ல, ஆரோனின் ஆசாரியப் பட்டத்தையும் பறித்து, தாங்களும் தங்கள் சந்ததியும் ஜனங்கள் முன்பாக மேன்மையடைய வேண்டும் என்று எண்ணினார்.

"பின்பு மோசே எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபிராமையும் அழைத்தனுப்பினான். அவர்கள்: நாங்கள் வருகிறதில்லை; இந்த வனாந்தரத்தில் எங்களைக் கொன்றுபோடும்படி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து எங்களைக் கொண்டுவந்தது அற்பகாரியமோ, எங்கள்மேல் துரைத்தனமும் பண்ணப்பார்க்கிறாயோ? மேலும் நீ எங்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குக் கொண்டுவந்ததும் இல்லை, எங்களுக்கு வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும் சுதந்தரமாகக் கொடுத்ததும் இல்லை; இந்த மனிதருடைய கண்களைப் பிடுங்கப்பார்க்கிறாயோ? நாங்கள் வருகிறதில்லை என்றார்கள்." (எண்ணாகமம் 16:12-14). இங்கு மோசே அவர்கள் செய்கிற தவற்றை சுட்டிக்காட்டி அவர்களை நல்வழிப்படுத்த நினைத்தார். ஆனால் அவர்களது மறுமொழியோ, அவர்களை மேலும் மேலும் கேடான பாதைக்கு வழி நடத்திச் சென்றது. "அப்பொழுது மோசேக்குக் கடுங்கோபம் மூண்டது; அவன் கர்த்தரை நோக்கி: அவர்கள் செலுத்துங் காணிக்கையை அங்கிகரியாதிருப்பீராக; நான் அவர்களிடத்தில் ஒரு கழுதையை முதலாய் எடுத்துக்கொள்ளவில்லை; அவர்களில் ஒருவனுக்கும் யாதொரு பொல்லாப்பு செய்யவும் இல்லை என்றான். பின்பு மோசே கோராகை நோக்கி: நீயும் உன் கூட்டத்தார் யாவரும் நாளைக்குக் கர்த்தருடைய சந்நிதியில் வாருங்கள்; நீயும் அவர்களும் ஆரோனும் வந்திருங்கள். உங்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் தூபவர்க்கத்தைப் போட்டு, தங்கள் தங்கள் தூபகலசங்களாகிய இருநூற்று ஐம்பது தூபகலசங்களையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரவேண்டும்; நீயும் ஆரோனும் தன் தன் தூபகலசத்தைக் கொண்டுவாருங்கள்

என்றான். அப்படியே அவரவர் தங்கள் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் அக்கினியையும் தூபவர்க்கத்தையும் போட்டு, ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக வந்து நின்றார்கள்; மோசேயும் ஆரோனும் அங்கே நின்றார்கள். அவர்களுக்கு விரோதமாகக் கோராகு சபையையெல்லாம் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாகக் கூடிவரும்படி செய்தான்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்பட்டது." (எண்ணாகமம் 16:15-19). தன் மீது எவ்வளவோ வீண்பழி சுமத்தப்பட்ட பொழுதும், அப்பொழுதெல்லாம் கோபம் கொள்ளாமல் பொறுமையாக இருந்த மோசே, இங்கு பரிசுத்த ஆசாரிய ஊழியத்தை கைப்பற்ற, இந்த பொல்லாதவர்கள் நினைத்தபொழுது கோபம் கொண்டார். யார் உண்மையாக தேவ சமூகத்தில் பணி செய்ய தகுதியுள்ளவர் என்பதை நிரூபிக்க முயன்றார். ஒருபுறம் கோராகு சபை மக்களை எல்லாம் ஒன்று திரட்டிய பொழுதிலும், ஆண்டவர் மோசேக்காக மறுபடியும் சபை நடுவில் இறங்கினார். "கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி: இந்தச் சபையைவிட்டுப் பிரிந்துபோங்கள்; ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார். அப்பொழுது அவர்கள் முகங்குப்புற விழுந்து: தேவனே, மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே, ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார்மேலும் கடுங்கோபங்கொள்வீரோ என்றார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: கோராகு தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப்போங்கள் என்று சபையாருக்குச் சொல் என்றார்." (எண்ணாகமம் 16:20-24).

இங்கு தேவ கோபம் இஸ்ரவேல் மக்களை முழுவதும் அழிக்காமல், பொல்லாத கோராகின் கூட்டத்தை மட்டும் அழிக்கும்படியாய், "உடனே மோசே எழுந்திருந்து, தாத்தான் அபிராம் என்பவர்களிடத்தில் போனான்; இஸ்ரவேலின் மூப்பரும் அவனைப் பின்சென்று போனார்கள். அவன் சபையாரை நோக்கி: இந்தத் துஷ்டமனிதரின் சகல பாவங்களிலும் நீங்கள் வாரிக்கொள்ளப்படாதபடிக்கு, அவர்கள் கூடாரங்களை விட்டு விலகி, அவர்களுக்கு உண்டானவைகளில் ஒன்றையும் தொடாதிருங்கள் என்றான். அப்படியே அவர்கள் கோராகு தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப்போனார்கள்; தாத்தானும் அபிராமும் வெளியே வந்து, தங்கள் பெண்ஜாதிகள் பிள்ளைகள் குழந்தைகளோடும் தங்கள் கூடாரவாசலிலே நின்றார்கள். அப்பொழுது மோசே: இந்தக் கிரியைகளையெல்லாம் செய்கிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினார் என்றும், அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்லை என்றும், நீங்கள் எதினாலே அறிவீர்களென்றால், சகல மனிதரும் சாகிறபடி இவர்கள் செத்து, சகல மனிதருக்கும் நேரிடுகிறதுபோல இவர்களுக்கும் நேரிட்டால், கர்த்தர் என்னை அனுப்பவில்லை என்று அறிவீர்கள். கர்த்தர் ஒரு புதிய காரியத்தை நேரிடச்செய்வதால், பூமி தன் வாயைத் திறந்து, இவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கத்தக்கதாக இவர்களையும் இவர்களுக்கு உண்டான யாவையும் விழுங்கிப்போட்டதேயானால், இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள் என்றான். அவன் இந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லி முடித்தவுடனே, அவர்கள் நின்றிருந்த நிலம் பிளந்தது; பூமி தன் வாயைத்

திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது. அவர்கள் தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்கினார்கள்; பூமி அவர்களை மூடிக்கொண்டது; இப்படிச் சபையின் நடுவிலிருந்து அழிந்துபோனார்கள். அவர்களைச் சுற்றிலும் இருந்த இஸ்ரவேலர் யாவரும் அவர்கள் கூக்குரலைக்கேட்டு, பூமி நம்மையும் விழுங்கிப்போடும் என்று சொல்லி ஓடினார்கள். அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பேரையும் பட்சித்துப்போட்டது." (எண்ணாகமம் 16:25-35). இங்கு மோசே இவ்வாறு பொல்லாப்பு மொத்த இஸ்ரேல் மக்களையும் அழிக்காதபடி காத்தாலும், "மறுநாளில் இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் கர்த்தரின் ஜனங்களைக் கொன்றுபோட்டீர்கள் என்றார்கள். சபையார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூடி ஆசரிப்புக் கூடாரத்துக்கு நேரே பார்க்கிறபோது, மேகம் அதை மூடினது, கர்த்தரின் மகிமை காணப்பட்டது. மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக வந்தார்கள்." (எண்ணாகமம் 16:41-43).

இங்கு பொல்லாத கோராகின் கூட்டத்தை கர்த்தரே அற்புதவிதமாய் அழித்த பொழுது, அதை கண்டு மனம் திரும்ப வேண்டியவர்கள், கர்த்தரின் ஜனங்களைக் கொன்றுபோட்டீர்கள் என்று மோசேயையும் ஆரோனையும் பார்த்து கூறுவது, அவர்களின் அறியாமையின் உச்சத்தை காண்பிக்கிறது. இங்கு மறுபடியும், "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி:இந்தச் சபையாரை விட்டு விலகிப்போங்கள்; ஒரு நிமிஷத்தில் அவர்களை அதமாக்குவேன் என்றார். அவர்கள் முகங்குப்புற விழுந்தார்கள்." (எண்ணாகமம் 16:44,45). ஆனால் இந்த முறை கர்த்தரிடத்திலிருந்து வாதை தொடங்கியது என்பதை உணர்ந்த மோசே, "மோசே ஆரோனை நோக்கி: நீ தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின்மேல் தூபவர்க்கம் இட்டு, சீக்கிரமாய்ச் சபையினிடத்தில் போய், அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்; கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது, வாதை தொடங்கிற்று என்றான். மோசே சொன்னபடி ஆரோன் அதை எடுத்துக்கொண்டு சபையின் நடுவில் ஓடினான்; ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருந்தது; அவன் தூபவர்க்கம் போட்டு, ஜனங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்து, செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான்; அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது. கோராகின் காரியத்தினிமித்தம் செத்தவர்கள் தவிர, அந்த வாதையினால் செத்துப்போனவர்கள் பதினாலாயிரத்து எழுநூறுபேர். வாதை நிறுத்தப்பட்டது; அப்பொழுது ஆரோன் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு மோசேயினிடத்தில் திரும்பிவந்தான்." (எண்ணாகமம் 16:46-50). இங்கு மறுபடியும், மறுபடியும் இஸ்ரவேல் மக்கள் முழுவதும் அழிந்து போகாதபடி, கர்த்தருடைய சமூகத்தில் அவர்களுக்காக கெஞ்சிப் பிராத்தித்து, அவர்களுக்காக பாவ நிவர்த்தி செய்து, அவர்களில் உண்டான வாதையை, அழிவை தடுத்து நிறுத்தினார். இவ்வாறு ஆண்டவரே அவர்களை மன்னிக்க மனதில்லாமல், அழிக்க நினைத்தும், தேவனுடைய எச்சரிப்பை உணராமல், மறுபடியும்

மறுபடியும் இஸ்ரேல் மக்கள் முரட்டாட்டம் செய்தும், பொறுமையாய் யாவற்றையும் சகித்து, அவர்களுக்காக கெஞ்சி மன்றாடி, பாவ நிவர்த்தி செய்து, ஆவியிலும் ஆத்தூமாவிலும், சரீரத்திலும் சோர்வடையாமல், தன் நலனையோ, தன் சொந்த குடும்பத்தாரின் நலனையோ, சந்ததியாரின் நலனையோ பாராமல், தொடர்ந்து ஒரு நல்ல தலைவனாய், தகப்பனாய் இருந்து இஸ்ரவேல் மக்களை மோசே வழிநடத்தினார். இப்படிப்பட்ட அர்ப்பணிப்பையே இன்று ஆண்டவருக்காய் வாழும் நம்மிடம் ஆண்டவர் எதிர்பார்க்கிறார். இவ்வுலகம் முழுவதும் பொல்லாபிற்குள் கிடந்தாலும், எல்லாரும் ஆண்டவருடைய வழியை விட்டு வழி விலகிப் போனாலும், அதன் மத்தியிலும் ஆண்டவருடைய அன்பை, திட்டத்தை, பரம கானானை (பரலோக ராஜ்யத்தை) பற்றி கூறி, அதனை நோக்கி தானும் நடந்து, மற்றவர்களையும் வழி நடத்துகிற மோசேக்களையே ஆண்டவர் இன்றும் தேடுகிறார். மோசேயைப் போல, ஆண்டவருக்காக ஊழியம் செய்ய நம்மை இவ்வேளையிலும் அர்ப்பணிப்போமாக. தொடர்ந்து மோசேயை குறித்து வரும் பாகங்களிலும் தியானிப்போம். என்றும் மாறாத கர்த்தர், நம்மை வழிநடத்துவாராக. ஆமென், அல்லேலூயா.

## 135. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 6



கடந்த ஐந்து பாகங்களிலும், ஆண்டவர் மோசேயை எவ்வாறு தெரிந்து கொண்டார், தலைவனாக்கினார், தமது நியாய பிரமாணத்தை கொடுத்தார், எவ்வாறு தமது மகிமையினால் நிரப்பினார், அவரைக் கொண்டு எகிப்த்திலும், வழி பிரயாணத்திலும் எவ்வாறு வல்லமையான காரியங்களை செய்தார் என்பதையும், அதே நேரத்தில் இவை எல்லாவற்றின் மத்தியிலும், இஸ்ரவேல் மக்களின் கீழ்படியாமையையும், முறுமுறுப்புகளையும், பாவங்களையும், ஆண்டவருக்கு மற்றும் மோசேக்கு விரோதமான செயல்களையும், அவிசுவாசத்தையும், நன்மைக்கு தீமை செய்ததையும், மோசேயின் சொந்த சகோதர, சகோதரியே அவருக்கு விரோதமாய் எழும்பினதையும், இவை எல்லாவற்றின் மத்தியிலும், ஆண்டவரே கோபப்பட்டு இஸ்ரவேல் மக்களை அழிக்க நினைத்த வேளையிலும், தன் பேரை ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கி போட்டாலும் பரவாயில்லை, இஸ்ரவேல் மக்கள் அழிவிலிருந்து காக்கப்பட வேண்டும் என்பதற்காக, ஒரு பக்கம் தேவன் தந்த மகிமையான அனுபவங்கள் ஊடாக நல்ல தலைவனாய் செயல்பட்டும், மறுபக்கம் இஸ்ரேல் மக்களை ஒரு தகப்பன் வழிநடத்துவது போல, எத்தீங்கும் அவர்களை அழித்துப்போடாத படி அவர்களுக்காக திறப்பின் வாயிலில் எப்பொழுதும் நின்றதை இதுவரையிலும் கண்டோம். ஆம் ஒரு பக்கம் ஆண்டவருக்கு நல்லதாசனாய், சிநேகிதனாய், நல்ல ஊழியனாய் இருந்து, தன் வாழ்வை அவர் பணிக்கென அர்ப்பணித்தார். அதே நேரத்தில் தன் சொந்த குடும்பத்தாருக்காக, தன் பிள்ளைகளுக்காக என எதையும் எதிர்பாராமல், தேவ ஜனங்களை வழிநடத்துவதிலேயே நோக்கமாய் இருந்தார். இஸ்ரவேல் மக்கள் செய்த பாவத்தினால் உண்டான குறைவுகளையும், அலைச்சல்களையும், மனம் உவந்து ஏற்றுக் கொண்டார். ஒரு நொடிப் பொழுது கூட ஏன் தனக்கு இவ்வளவு பெரிய பாரமான பணி என்று எண்ணாமல், வேதம் கூறுகிறபடி மோசே தேவனுடைய வீட்டில் எங்கும்

உண்மையுள்ளவராய் இருந்தார். இந்த ஆறாம் பாகத்திலும் இதை நாம் தொடர்ந்து தியானிப்போம்.

**எண்ணாகமம் 20:1** கூறுகிறது, **"இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் முதலாம் மாதத்தில் சீன்வனாந்தரத்திலே சேர்ந்து, ஜனங்கள் காதேசிலே தங்கியிருக்கையில், மிரியாம் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்பட்டாள்."**, இங்கு மிரியாமின் மரணத்தை காண்கிறோம். **யாத்திராகமம் 2:1-4** வசனங்கள் கூறுகிறது, **"லேவியின் குடும்பத்தாரில் ஒருவன் லேவியின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணினான். அந்த ஸ்திரீ கர்ப்பவதியாகி, ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, அது அழகுள்ளது என்று கண்டு, அதை மூன்றுமாதம் ஒளித்துவைத்தாள். அவள் அதை அப்புறம் ஒளித்துவைக்கக்கூடாமல், ஒரு நாணற்பெட்டியை எடுத்து, அதற்குப் பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். அதற்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி அதின் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருந்தாள்."**. இங்கு மோசே பிறந்த பொழுது அவருடைய தாய் தகப்பன்மார்கூட மோசேயை காப்பாற்ற முடியாமல், நாணற் பெட்டியில் வைத்து சென்றபோதும், மிரியாம் அவ்விடத்தை விட்டு செல்லாமல், என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். அப்படி நின்ற மிரியாமையே தேவன் பயன்படுத்தினார். பார்வோனின் குமாரத்தி பிள்ளையின் மேல் இரக்கமுற்றதை கண்ட மிரியாம், தைரியத்துடன் பார்வோனின் குமாரத்தி முன் சென்று, மோசே அழிக்கப்படாமல், பார்வோனின் அரண்மனையில் வளர, அதுவும் மோசேயின் சொந்த தாயின் மூலமாகவே வளர, மிரியாம் செய்த புத்தியான செயல்கள் மோசேயை இப்பொழுது இப்படிப்பட்ட தலைவனாய் நிறுத்தியது.

**எபிரேயர் 11:23-26** வசனங்களில், **"மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள். விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்."**. ஆம் மோசே வளரும் பொழுது எகிப்தியனாய் பார்வோனின் குமாரத்தின் மகன் என்று வளர்ந்தாலும், அவன் ஒரு எபிரேயன் என்பதை அவன் அறிந்து கொள்ளும்படியாகவே, மிரியாமால் மோசே என் தாயின் மூலமாக வளர்க்கப்பட்டார். மேலும் **வசனம் 26** கூறுகிறபடி, இனிவரும் பலனாகிய நித்திய ஜீவனை (பரம கானானை), அவர் அறிந்திருந்து, கிறிஸ்துவினிமித்தம் (தேவப்பிள்ளையாய் வாழ்வதினிமித்தம்) வரும் நிந்தையை அதிக பாக்கியம் என்று எண்ணினார். **அப்போஸ்தலர் 7:22-25** வசனங்கள் கூறுகிறது, **"மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும்**

வல்லவனானான். அவனுக்கு நாற்பது வயதானபோது, இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று. அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு, அவனுக்குத் துணைநின்று, எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயஞ்செய்தான். தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்துகொள்வார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறியவில்லை.". இங்கு மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களில் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவராய் இருந்தார். இதற்கு காரணம் ஆண்டவர் மிரியாமை பயன்படுத்தியதே. மேலும் தன் ஜனங்களைப் போய் பார்க்க வேண்டும், அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் மோசேக்கு தன்னுடைய இளமைப்பருவத்திலேயே உண்டாயிற்று. இதற்கு காரணம் மோசே தன் சொந்த தாயின் மூலமாகவே வளர்க்கப்பட்டது ஆகும். ஆம், மோசே இஸ்ரவேல் மக்களை குறித்து பாரப்பட, தான் சுகமாக இருக்கிறோம் தன் சொந்த குடும்பமோ, மக்களோ அடிமைத்தனத்தில் பாடுபடுகிறார்களே என்பதை மிரியாம் மூலமாகவே மோசே அறிந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட தன் மூத்த சகோதரியாகிய மிரியாமும் தேவத் திட்டத்தில் இருக்கும் படியாய், தன் வாழ்வில் இறுதி ஓட்டத்தை சமாதானத்தோடு முடிக்கும்படியாய் மோசே மிரியாமை இறுதிவரை பாதுகாத்தார்.

எண்ணாகமம் 20:2-5 வசனங்களில், "ஜனங்களுக்குத் தண்ணீர் இல்லாதிருந்தது; அப்பொழுது அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடினார்கள். ஜனங்கள் மோசேயோடே வாக்குவாதம்பண்ணி: எங்கள் சகோதரர் கர்த்தருடைய சந்நிதியில் மாண்டபோது நாங்களும் மாண்டுபோயிருந்தால் நலமாயிருக்கும். நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகும்படி, நீங்கள் கர்த்தரின் சபையை இந்த வனாந்தரத்திலே கொண்டுவந்தது என்ன; விதைப்பும், அத்திமரமும், திராட்சச்செடியும், மாதளஞ்செடியும், குடிக்கத்தண்ணீரும் இல்லாத இந்தக் கெட்ட இடத்தில் எங்களைக் கொண்டுவரும்படி, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினது என்ன என்றார்கள்.". இங்கு மறுபடியும் இஸ்ரவேல் மக்கள் எப்பொழுதும் போல் முறுமுறுக்க தொடங்கினர். தாங்கள் செய்த பாவத்தையோ, கீழ்ப்படியாமையையோ, அவிசுவாசத்தையோ பற்றி நினையாமல், எகிப்தை குறித்த நினைவுகளே அவர்களிடம் இருந்தது. ஆண்டவர் எத்தனையோ அற்புதங்களை அவர்கள் முன்பாக பிரத்தியட்சமாய் செய்த பொழுதிலும், அவர்களோ தொடர்ந்து ஆண்டவரையும், மோசேயையும் குறை கூறினர்.

எண்ணாகமம் 20:6-8 வசனங்களில், "அப்பொழுது மோசேயும் ஆரோனும் சபையாரைவிட்டு, ஆசரிப்புக் கூடாரவாசலில் போய், முகங்குப்புற விழுந்தார்கள்; கர்த்தருடைய மகிமை அவர்களுக்குக் காணப்பட்டது. கர்த்தர் மோசேயை நோக்கி: நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச்செய்து, அவர்கள் கண்களுக்குமுன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ

அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார்.“. இங்கு மறுபடியும் மோசேயும், ஆரோனும் தேவ சமூகத்தில் முகங்குப்புற இந்த ஜனத்திற்காக விழுந்தார்கள். தேவன் முன்பு போலவே செயல்பட மோசேயிடம் கூறினார். எண்ணாகமம் 20:9-11 வசனங்களில், “அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுத்தான். மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச்செய்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான்; உடனே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது, சபையார் குடித்தார்கள்; அவர்கள் மிருகங்களும் குடித்தது.“. இங்கு மறுபடியும் அற்புதம் நிகழ்ந்தது. இஸ்ரவேல் மக்களின் தேவை சந்திக்கப்பட்டது. ஆனால் இங்கு முதன்முறையாக மோசே ஜனங்களின் முரட்டாட்டத்தை கண்டு கோபமடைந்தவராய், கன்மலையை பார்த்து பேசுவதற்கு பதிலாக அதை அடித்தார். இதனால், “பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்.“ (எண்ணாகமம் 20:12). இங்கு ஆண்டவர் முதல் முறையாக மோசே மற்றும் ஆரோனின் அவிசுவாச கிரியை பற்றியும், அதன் நிமித்தம் அவர்களும் கானானை சென்றடையப்போவதில்லை என்றும் கூறினார். இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று, மோசேயோ ஆரோனோ இதற்காக ஒரு வார்த்தை கூட பிரதியுத்திரம் கூறவில்லை. தங்களை மன்னித்து தாங்களும் கானான் செல்ல அனுமதிக்கும்படியாய் கேட்கவில்லை. ஆம் அவர்கள் ஆண்டவர் என்ன தீர்ப்பு செய்தாரோ அது நியாயமானது என்று எண்ணினர். இத்தனை வருடம் கானானுக்குள் செல்லவே பிரயாணப்பட்டு வருகிறோமே, இந்த கடைசி நேரத்தில் தங்களால் பிரவேசிக்க முடியாமல் போகிறதே என்று எண்ணவில்லை. அதற்கு பதிலாக தாங்கள் இல்லாவிட்டாலும் மற்ற யார் மூலமாவது இஸ்ரவேல் மக்கள் கானானை சென்று சேர்வார்கள் என்று தேவ தீர்ப்பை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து தேவ பணி செய்ய தங்களை அர்ப்பணித்தனர்.

எண்ணாகமம் 20:14-17 வசனங்களில், “பின்பு மோசே காதேசிலிருந்து ஏதோமின் ராஜாவினிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: எங்கள் பிதாக்கள் எகிப்துக்குப் போனதும், நாங்கள் எகிப்திலே நெடுநாள் வாசம்பண்ணினதும், எகிப்தியர் எங்களையும் எங்கள் பிதாக்களையும் உபத்திரவப்படுத்தினதும், இவைகளினால் எங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தமும் உமக்குத் தெரிந்திருக்கிறது. கர்த்தரை நோக்கி நாங்கள் மன்றாடினோம்; அவர் எங்களுக்குச் செவிகொடுத்து, ஒரு தூதனை அனுப்பி, எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; இப்பொழுது நாங்கள் உமது எல்லைக்கு உட்பட்ட காதேஸ் ஊரில் வந்திருக்கிறோம். நாங்கள் உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோகும்படி உத்தரவு

கொடுக்கவேண்டும்; வயல்வெளிகள் வழியாகவும், திராட்சத்தோட்டங்கள் வழியாகவும் நாங்கள் போகாமலும், துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும், ராஜபாதையாகவே நடந்து, உமது எல்லையைக் கடந்துபோகுமட்டும், வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்போம் என்று, உமது சகோதரனாகிய இஸ்ரவேல் சொல்லி அனுப்புகிறான் என்று சொல்லச்சொன்னான்.“. இங்கு ஏசாவின் வம்சத்தாரான ஏதோமியர், தங்களுக்கான ஒரு ராஜ்ஜியத்தை ஏற்படுத்தி ஆண்டு கொண்டு இருந்தனர். ஆனால் இஸ்ரேல் மக்களோ தங்கள் முரட்டாட்டத்தினிமித்தம் இன்னும் கானான் தேசத்தை சுதந்தரிக்கவில்லை. இங்கு மோசே மிகுந்த பணிவோடு, அதே நேரத்தில் இஸ்ரவேல் ஏதோமின் சகோதரன் என்பதை நினைவுபடுத்தி, தாங்கள் சமாதானத்தோடு செல்ல ஏதோமின் ராஜாவை வேண்டுகிறார். ஆனால், “அதற்கு ஏதோம்: நீ என் தேசத்தின் வழியாய்க் கடந்துபோகக்கூடாது; போனால் பட்டயத்தோடே உன்னை எதிர்க்கப் புறப்படுவேன் என்று அவனுக்குச் சொல்லச்சொன்னான்.“ (எண்ணாகமம் 20:18). “அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் அவனை நோக்கி: நடப்பான பாதையின் வழியாய்ப் போவோம்; நாங்களும் எங்கள் மிருகங்களும் உன் தண்ணீரைக் குடித்தால், அதற்குக் கிரயங்கொடுப்போம்; வேறொன்றும் செய்யாமல், கால்நடையாய் மாத்திரம் கடந்துபோவோம் என்றார்கள். அதற்கு அவன்: நீ கடந்துபோகக்கூடாது என்று சொல்லி, வெகு ஜனங்களோடும் பலத்த கையோடும் அவர்களை எதிர்க்கப் புறப்பட்டான். இப்படி ஏதோம் தன் எல்லைவழியாய்க் கடந்துபோகும்படி இஸ்ரவேலருக்கு உத்தரவு கொடுக்கவில்லை; ஆகையால் இஸ்ரவேலர் அவனை விட்டு விலகிப்போனார்கள்.“ (எண்ணாகமம் 20:19-21). இங்கு ஏதோமின் ராஜா, தன் சொந்த இனத்தாரான இஸ்ரவேல் மக்களுக்கு உதவாமல் அவர்களை எதிர்க்க புறப்பட்டான். இங்கு தேவ சத்தத்திற்கு கீழ்ப்படிந்து ஏதோமை எதிர்க்காமல், அவனை விட்டுவிலகி வேறு வழியாய் இஸ்ரேல் மக்களை வழிநடத்தினார் மோசே. மற்ற ராஜாக்களை எதிர்த்தது போல் ஏதோமை எதிர்த்திருக்கலாம். ஆனால் அது தேவத்திட்டம் அல்ல என்பதை உணர்ந்திருந்த மோசே ஏதோமை தொடாமல் விலகிச் சென்றார்.

எண்ணாகமம் 20:22-26 வசனங்களில், “இஸ்ரவேல் புத்திரரான சபையார் எல்லாரும் காதேசை விட்டுப் பிரயாணப்பட்டு, ஓர் என்னும் மலைக்குப் போனார்கள். ஏதோம் தேசத்தின் எல்லைக்கு அருகான ஓர் என்னும் மலையிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: ஆரோன் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான். மேரிபாவின் தண்ணீரைப்பற்றிய காரியத்தில் நீங்கள் என் வாக்குக்குக் கீழ்ப்படியாமற்போனபடியினால், நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கிற தேசத்தில் அவன் பிரவேசிப்பதில்லை. நீ ஆரோனையும் அவன் குமாரனாகிய எலெயாசாரையும் கூட்டிக்கொண்டு, அவர்களை ஓர் என்னும் மலையில் ஏறப்பண்ணி, ஆரோன் உடுத்திருக்கிற வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்துவாயாக; ஆரோன் அங்கே மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான் என்றார்.“. எப்படி மிரியாமை ஆண்டவர் எடுத்துக் கொண்டாரோ, அதேபோல் மோசேயோடு தொடர்ந்து இஸ்ரவேல் மக்களை நடத்தி, குறிப்பாக கனமான ஆசாரிய ஊழியத்தை செய்த ஆரோனையும் ஆண்டவர் எடுத்துக்

கொள்வதை காணலாம். ஆனால் அதற்கு முன்பாக அவனுடைய இடத்திற்கு அவனுடைய குமாரனாகிய எலெயாசாரை பிரதிஷ்டை செய்ய ஆண்டவர் கூறினார். **எண்ணாகமம் 20:27-29** வசனங்களில், **"கர்த்தர் கட்டளையிட்டபடியே மோசே செய்தான்; சபையார் எல்லாரும் பார்க்க, அவர்கள் ஓர் என்னும் மலையில் ஏறினார்கள். அங்கே ஆரோன் உடுத்திருந்த வஸ்திரங்களை மோசே கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்தினான்; அப்பொழுது ஆரோன் அங்கே மலையின் உச்சியிலே மரித்தான்; பின்பு மோசேயும் எலெயாசாரும் மலையிலிருந்து இறங்கினார்கள். ஆரோன் ஜீவித்துப்போனான் என்பதைச் சபையார் எல்லாரும் கண்டபோது, இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் ஆரோனுக்காக முப்பது நாள் துக்கங்கொண்டாடினார்கள்."**. மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய பரிபூரணமான சித்தத்திற்கு, திட்டத்திற்கு தங்களை அர்ப்பணிப்பதை காணலாம். குறிப்பாக **கர்த்தர் கட்டளையிட்டபடியே மோசே செய்தான்** என்ற வாக்கியம், எந்தவித சுயசித்தமோ, மாற்றமோ இல்லாமல் கர்த்தர் கட்டளையிட்டபடியே எல்லாவற்றையும் மோசே செய்வது, அவர் எவ்வளவாய் தேவனுக்கு கீழ்ப்படிந்து இருந்தார் என்பதற்கு ஆதாரம். இங்கு தன் மூத்த சகோதர, சகோதரியை இழந்தவராய், தன் வாழ்வின் ஆரம்பத்திலிருந்து தற்பொழுது வரை, பல்வேறு சூழ்நிலைகளில் தனக்கு உறுதுணையாய் இருந்தவர்களை, இழந்த பின்னரும், தொடர்ந்து தேவ ஊழியத்தை அடுத்த தலைமுறையுடன் சேர்ந்து செய்ய தொடங்கினார். **மீகா 6:4** கூறுகிறது, **"நான் உன்னை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி, அடிமைத்தன வீட்டிலிருந்த உன்னை மீட்டுக்கொண்டு, மோசே ஆரோன் மீரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்."**, என்று.

**எண்ணாகமம் 21:4,5** வசனங்களில், **"அவர்கள் ஏதோம் தேசத்தைச் சுற்றிப்போகும்படிக்கு, ஓர் என்னும் மலையைவிட்டு, சிவந்த சமுத்திரத்தின் வழியாய்ப் பிரயாணம்பண்ணினார்கள்; வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்தார்கள். ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்."**. இங்கு மறுபடியும் நெடுந்தூர, நீண்ட கால பிரயாணத்தினிமித்தம், இஸ்ரவேல் மக்கள் மனமடிவடைந்தார்கள். மேலும் தேவன் அனுதினமும் அருளிய, வான மன்னாவையும் அவர்கள் அற்பமாக எண்ணினர். வசனம் ஐந்து கூறுகிறது **ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி** என்று. இதனால், **"அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள்." (எண்ணாகமம் 21:6)**. இங்கு தேவனுடைய கோபத்தையும், அவரால் உண்டான வாதையையும் கண்ட இஸ்ரவேல் ஜனங்கள், **"அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம்; சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள்; மோசே ஜனங்களுக்காக**

**விண்ணப்பம்பண்ணினான்.“ (எண்ணாகமம் 21:7).** இங்கு மறுபடியும் மோசே ஒரு நல்ல தகப்பனாய் இருந்து, ஜனங்களுக்காக தேவனிடம் வேண்டுதல் செய்தார். **“அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை; கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார். அப்படியே மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான்; சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப்பார்த்துப் பிழைப்பான்.“ (எண்ணாகமம் 21:8,9).** ஆரம்பத்தில் மோசேயை கொண்டு பஸ்கா ஆட்டுக்குட்டியை பலியிட்டது முதல், இங்கு ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி, அது ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வைத்தது வரை, மோசே செய்த ஒவ்வொரு செயலும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாய் காணப்படுகிறது.

**எண்ணாகமம் 22 முதல் 24** அதிகாரங்களில் மோவாப்பின் ராஜாவான சிப்போரின் குமாரனாகிய பாலாக், தேவ ஜனங்களான இஸ்ரவேல் மக்களை நேரடியாக எதிர்க்க முடியாது என்பதை அறிந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாம் மூலமாக அவர்களை சபிக்கப்பட்டவர்களாக்க நினைத்தான். ஆனால், ஆண்டவரோ அதற்கு இடம் கொடுக்கவில்லை. அவர்களை சபிப்பதற்கு பதிலாக, பிலேயாம் அவர்களை ஆசிர்வதிக்கவே தேவன் கட்டளையிட்டார். இவை ஒன்றையும் மோசேயோ, இஸ்ரவேல் மக்களோ அறிந்திருக்கவில்லை. இதனால் பிலேயாமின் ஆலோசனையின்படி, மீதியான் தேசத்து ராஜாவாகிய பாலாக் அவர்களை வேறு விதத்தில் வீழ்த்த நினைத்தான். **மீகா 6:5** கூறுகிறது, **“என் ஜனமே, மோவாபின் ராஜாவாகிய பாலாக் பண்ணின யோசனை இன்னதென்றும், பேயோரின் குமாரனான பிலேயாம் அவனுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னது இன்னதென்றும், சித்தீம் தொடங்கி கில்கால்மட்டும் நடந்தது இன்னதென்றும், நீ கர்த்தருடைய நீதிகளை அறிந்துகொள்ளும்படி நினைத்துக்கொள்.“**, என்று. **எண்ணாகமம் 25:1-3** வசனங்களில், **“இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத்தொடங்கினார்கள். அவர்கள் தங்கள் தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்ணும்படி ஜனங்களை அழைத்தார்கள்; ஜனங்கள் போய்ப் புசித்து, அவர்கள் தேவர்களைப் பணிந்துகொண்டார்கள். இப்படி இஸ்ரவேலர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்டார்கள்; அதனால் இஸ்ரவேலர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது.“**. இங்கு தேவ ஜனங்களை போரிட்டு வீழ்த்த முடியாமல், அவர்களை ஆவிக்குரிய நிலையிலே சபிக்கவும் முடியாமல் போனாலும், அவர்களில் இருந்த மாம்ச பலவீனத்தை கண்டு, அதன் மூலம் அவர்களை தேவ பாதுகாப்பிலிருந்து பிரிக்க பாலாக் திட்டம் போட்டான். அவன் திட்டமிட்டபடியே இஸ்ரவேல் மக்களும் பாவத்தில் விழுந்து போயினர்.

**“கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலைவிட்டு நீங்கும்படி நீ ஜனங்களின் தலைவர் எல்லாரையும் கூட்டிக்கொண்டு, அப்படிச் செய்தவர்களைச் சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப்போடும்படி செய் என்றார்.**

அப்படியே மோசே இஸ்ரவேலின் நியாயாதிபதிகளை நோக்கி: நீங்கள் அவரவர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்ட உங்கள் மனிதரைக் கொன்றுபோடுங்கள் என்றான்.“ (எண்ணாகமம் 25:4,5). இங்கு சர்வ இஸ்ரவேலும் அழிந்து போகாதபடி காக்கப்பட, பாவம் செய்தவர்களை கொன்று அழிப்பதே ஒரே வழி என்ற தேவ நியாயத்தீர்ப்பை மோசே சற்றும் தயக்கம் இன்றி செயல்படுத்தினார். எண்ணாகமம் 25:6-9 வசனங்களில், “அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் அனைவரும் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக அழுதுகொண்டு நிற்கையில், அவர்கள் கண்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் ஒரு மீதியானிய ஸ்திரீயைத் தன் சகோதரரிடத்திலே அழைத்துக்கொண்டுவந்தான். அதை ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் கண்டபோது, அவன் நடுச்சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து, இஸ்ரவேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம்பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய், இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப்போட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்றுபோயிற்று. அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்துநாலாயிரம்பேர்.“. இங்கு தேவ தீர்ப்பை நிறைவேற்ற, மோசேக்கு உதவியாக, ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் செயல்பட்டான். அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்துநாலாயிரம்பேர் என்ற வசனம், இஸ்ரேல் மக்களில் மாம்ச இச்சையுள்ளவர்களாய் எத்தனை பேர் இருந்தனர் என்பதை தெள்ளத் தெளிவாக காண்பிக்கிறது. அதிலும் அதை அவர்கள் எவ்வித பயமும் இன்றி வெளிப்படையாகவே செய்தது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். ஆகிலும் இப்படிப்பட்ட மக்களையும் பொறுமையோடு மோசே வழி நடத்தினார். எண்ணாகமம் 25:10-13 வசனங்களில், “கர்த்தர் மோசேயை நோக்கி: நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்திவைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர்மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான். ஆகையால், இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன். அவன் தன் தேவனுக்காக பக்திவைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால், அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்.“. இங்கு ஆண்டவர், மோசே ஆரோன் என்பவர்களுக்கு அடுத்தபடியாக ஜனங்களை வழிநடத்த தலைவர்களை உருவாக்கி வருவதை காணலாம். அதை மோசேயும் நன்கு உணர்ந்திருந்தார். தன்னுடைய ஊழியம் முடிவு பெற போகிறது என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

எண்ணாகமம் 27:12-14 வசனங்களில், “பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இந்த அபாரீம் மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப் பார். நீ அதைப் பார்த்தபின்பு, உன் சகோதரனாகிய

ஆரோன் சேர்க்கப்பட்டதுபோல, நீயும் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்; சபையார் வாக்குவாதம்பண்ணின சீன் வனாந்தரத்தில் தண்ணீருக்கடுத்த விஷயத்தில் அவர்கள் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணவேண்டிய நீங்கள் என் கட்டளையை மீறினீர்களே என்றார். இது சீன் வனாந்தரத்தில் காதேஸ் ஊர்அருகே உண்டான மேரிபாவின் தண்ணீருக்கடுத்த காரியமே.". இங்கு ஆண்டவர் இறுதியாக, மோசேயின் மிக நீண்ட ஊழியத்தை முடிவு பெற செய்கிறார். சீன் வனாந்தரத்தில் அந்த ஒரு விஷயத்தில் மோசே கோபப்பட்டு கன்மலையை அடித்ததினால், அவரால் கானானை சென்றடைய முடியவில்லை. ஆகிலும் தேவன் மோசேக்கு இதை ஒரு தண்டனையாக கொடாமல், தமது அனாதி தீர்மானத்தின்படியே அவரது ஓட்டத்தை முடிவுக்கு கொண்டு வருகிறார். ஆகிலும் மோசே தமக்கு பிரியமான தாசரானதால், அபாரீம் மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப் பார் என்றார். இங்கு இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசம் என்று ஆண்டவர் கூறுவதில் இருந்து, ஆண்டவருடைய அனாதி தீர்மானத்தின்படி அது அவர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டு விட்டது. அவர்கள்தான் அதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு சுதந்தரிக்க வேண்டும். இதை மோசேயும் நன்கு உணர்ந்திருந்தார். எனவே தான் கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லையே என்று அவர் கவலைப்படாமல், தனக்கு பின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு இஸ்ரவேல் மக்களை வழிநடத்த, தன்னைப்போன்ற தலைவன் ஒருவன் வேண்டுமே என நினைத்தார். இதனால், "அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: கர்த்தருடைய சபை மேய்ப்பன் இல்லாத மந்தையைப்போல் இராதபடிக்கு, அந்தச் சபைக்கு முன்பாகப் போக்கும் வரத்துமாய் இருக்கும்படிக்கும், அவர்களைப் போகவும் வரவும் பண்ணும்படிக்கும், மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள்மேல் அதிகாரியாக ஏற்படுத்தவேண்டும் என்றான்." (எண்ணாகமம் 27:15-17). இங்கு மோசே தனக்குபின், தன்னைப்போல ஒரு நல்ல தலைவனாய், தகப்பனாய் இருந்து இஸ்ரவேல் மக்களை வழிநடத்த ஒருவர் வேண்டுமே என்று நினைத்த அவர், ஆரோனுக்கு பதிலாக அவன் குமாரர் ஆசாரிய பட்டத்தை பெற்றது போல், தனக்குப் பின் தன் குமாரரில் ஒருவன் தலைவனாய் வரவேண்டும் என்று எண்ணாமல், இவ்வளவு காலம் தேவ ஜனங்களை வழிநடத்தியதற்கு ஆண்டவர் தன் பிள்ளைகளுக்கு ஏதாவது தர வேண்டும் என்று எண்ணாமல், தன்னை தமது அனாதி தீர்மானத்தின்படி அழைத்த தேவன், அப்படிப்பட்ட தேவ திட்டத்தில் உள்ள ஒருவரை அடுத்து தலைவராக்க வேண்டும் என்ற நினைத்தார். இங்கு அவர் சற்றும் சுயநலமின்றி செயல்படுவதை நாம் காணலாம்.

"கர்த்தர் மோசேயை நோக்கி: ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு, அவன்மேல் உன் கையை வைத்து, அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்குக் கட்டளைகொடுத்து, இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு, உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்குக் கொடு. அவன் ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக நிற்கக்கடவன்; அவனிமித்தம் அந்த ஆசாரியன் கர்த்தருடைய

**சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்கக்கடவன்; அவருடைய கட்டளையின்படியே, அவனும் அவனோடேகூட இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் போகவும் அவருடைய கட்டளையின்படியே வரவும் வேண்டியது என்றார்.", (எண்ணாகமம்** 27:18-21). இங்கு ஆண்டவர் தம்முடைய பார்வைக்கு உகந்த, ஆசரிப்பு கூடாரத்தையும் மோசேயையும் விட்டு பிரியாத, கானான் தேசத்தை நிச்சயமாக தேவன் நமக்கு தருவார் என்ற விசுவாசமுள்ள, தேவ ஆவியை பெற்றிருக்கிற யோசுவாவை மோசேக்கு காண்பிக்கிறார். அதே நேரத்தில் மோசே இஸ்ரவேல் மக்களுக்கு முன்பாக யோசுவாவை அடுத்த தலைவனாய் நிறுத்த வேண்டும் என்பதையும் கட்டளையிடுகிறார். இங்கு **20ஆம் வசனம்** மிகவும் அற்புதமான ஒரு வசனம் ஆகும். தேவ ஜனங்களுக்கு முன்பாக ஆண்டவர் மோசேக்கு கனத்தை கொடுத்து, அனைவரும் அவருக்கு கீழ்ப்படித்திருக்க செய்தது போல, சர்வ இஸ்ரவேலும் யோசுவாவிற்கும் கீழ்ப்படிய, மோசே தன் கனத்தில் கொஞ்சம் யோசுவாவிற்கு கொடுக்கக் கூறினார். இங்கு ஆண்டவர் நேரடியாக செயல்படாமல், மோசேயின் மூலமாக செயல்படுவதை காணலாம். ஆம் மோசே தேவன் தனக்கு கொடுத்த மிகப்பெரிய கனத்திலிருந்து, கொஞ்ச கனத்தை மோசே கொடுக்கக் கூறுவது, ஆண்டவர் மோசே பெற்றிருந்த அதே ஆவியின் வைராக்கியம், யோசுவாவிற்குள்ளும் மோசே மூலமாகவே கடந்து செல்ல வேண்டும் என்று நினைத்ததால் தான்.

**"மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே யோசுவாவை அழைத்துக்கொண்டுபோய், அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவன்மேல் தன் கைகளை வைத்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே அவனுக்குக் கட்டளைகொடுத்தான்." (எண்ணாகமம்** 27:22,23). இங்கு மோசேயும் ஆண்டவர் கூறியபடியே யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்து, தன்னில் இருந்த தேவ அபிஷேகத்தை யோசுவாவிற்குள் கடத்தினார். இவ்வாறாக அடுத்த தலைமுறை தலைவர்களை, தன் ஓட்டத்தை முடிப்பதற்கு முன்னரே ஏற்படுத்தி வைத்ததும், மோசே எவ்வாறு ஒரு நல்ல தலைவனாய் இருந்தார் என்பதற்கு சான்றாகும். மேலும் மிரியாம், ஆரோனை போல தன் ஓட்டமும் முடிவு பெற போகிறது என்பதை அவர் நன்கு உணர்ந்து கொண்டார். இவ்வாறு எவ்வித பிரதிபலனையும் தனக்கோ, தன் சந்ததியாருக்கோ எதிர்பாராமல், தேவ சித்தம், திட்டம் ஒன்றையே நிறைவேற்றி, ஓட்டத்தை சமாதானத்துடன் முடிக்க எண்ணிய மோசே, மெய்யாகவே ஒரு தேவதாசன் தான். ஒரு சிநேகிதனுடன் பேசுவது போல், சர்வ வல்லமையுள்ள ஆண்டவரிடம் பேசும் பாக்கியத்தை அவர் பெற்றிருந்தார். தொடர்ந்து மோசேயின் இறுதி கால பணியையும், அவரது ஓட்டத்தின் முடிவையும் வருகிற தியானங்களில் தியானிப்போம். நாமும் மோசேயை போல தேவனுடைய தாசர்களாய், அவருக்கு உற்ற சிநேகிதராய், எல்லாவற்றிற்கும் மேலாக அவரை அப்பா பிதாவே என்று கூப்பிடுகிற தேவபிள்ளைகளாய், வனாந்தர பிரயாணமாம் இவ்வுலகில், நாம் இருக்கும் வரை, தேவ சித்தம் ஒன்றையே நம் வாழ்வில் செய்து, நமது ஓட்டத்தையும் வெற்றியோடு முடிப்போமாக. ஜீவ கிரீடத்தை பெறுவோமாக. ஆமென், அல்லேலுயா.

## 136. தலைவ(தகப்ப)னாகிய மோசே - பாகம் 7




கடந்த ஆறு பாகங்களிலும், மோசே எவ்வாறு சிறு வயதிலேயே தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டார், எவ்வாறு ஆண்டவரால் உருவாக்கப்பட்டார், ஊழியத்திற்கு என அழைக்கப்பட்டார், எகிப்தில் பார்வோனின் முன்பும், வனாந்தரத்தில் இஸ்ரவேலர் மத்தியிலும் அற்புத அடையாளங்களை செய்து எவ்வாறு தன்னை ஒரு நல்ல தலைவனாகவும், தகப்பனாகவும் வெளிப்படுத்தினார் என்பதை கண்டோம். ஆம், இஸ்ரவேல் மக்களை வனாந்தரத்தில் நடத்தினது மட்டுமல்லாமல், அவர்களுக்கு தேவனிடமிருந்து நியாயப்பிரமாணத்தை பெற்று தந்தார். மேலும் அவர்களுக்கு வான மன்னாவையும், கன்மலையிலிருந்து தண்ணீரையும் பெற்று தந்தார். எத்தனையோ தடவை இஸ்ரவேல் மக்கள் முறுமுறுத்த பொழுதும், ஆண்டவருக்கும் மோசேக்கும் எதிராய் பேசிய பொழுதும், தேவகோபம் அவர்கள் மேல் வராதபடி, அவர்களுக்காக எத்தனையோ முறை தேவ சமூகத்தில் மன்றாடி, அழிவில் இருந்து அவர்களை காப்பாற்றினார். மேலும் தேவ சமூகத்தில் தரித்திருந்து, தேவனோடு சஞ்சரித்து, ஆண்டவர் மோசேயை தன்னுடைய தாசன் என்றும், தான் ஒரு சினேகிதனுடன் பேசுவது போல் மோசேயிடம் பேசியதாகவும் ஆண்டவராலேயே சாட்சி பெற்றார். ஒரு கட்டத்தில் அவரோடு கூட இருந்து தேவ ஊழியத்தை நிறைவேற்றிய ஆரோனும், மிரியாமும் கூட மோசேக்கு எதிரியாய் பேசிய பொழுதும், அதற்காக தேவன் அவர்களை தண்டித்த பொழுதும் கூட, அவர்களுக்காகவும் அவர் பரிந்து பேசினார். இஸ்ரவேல் மக்களை எதிர்த்து புறஜாதி மக்களும், ராஜாக்களும் வந்தபொழுதும் அவர்களையும் வெற்றி கொண்டார். ஆரோனுக்கு பிறகு அவனுடைய மகன் எலெயாசரையும், தனக்குபின் தன் ஸ்தானத்தில் தலைவனாய் இருந்து இஸ்ரவேல் மக்களை வழிநடத்த யோசுவாவையும் ஏற்படுத்தினார். இவை எதிலும் அவர் சுயநலம் உள்ளவராய் நடவாமல், தனக்கும் தன்

பிள்ளைகளுக்கும் எதையும் தேவனிடமோ மனிதரிடமோ எதிர்பாராமல், தேவ ஊழியத்தை இறுதிவரை உண்மையாய் செய்தார். ஒருமுறை கன்மலையை பார்த்து ஆண்டவர் பேச சொன்ன பொழுது, இஸ்ரவேல் மக்களின் முறுமுறுப்பினால் கோபம் கொண்டு கன்மலையை அடித்து அதனிடமிருந்து தண்ணீர் புறப்படும்படியாய் செய்தார். இதனால் தேவ கோபத்திற்கு ஆளாகி, கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை இழந்த பொழுதும், பொறுமையாய் தேவனின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டார். இவ்வாறாக தன் வாழ்நாள் முழுவதும் தேவ பணிக்கான தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்த, மோசேயின் இறுதி கால ஊழியத்தை பற்றியும், அவரது அற்புதமான மரணத்தை பற்றியும் நாம் இந்த ஏழாம் பாகத்தில் தியானிப்போம்.

**எண்ணாகமம் 32:33** இல் **“அப்பொழுது மோசே காத் புத்திரருக்கும், ரூபன் புத்திரருக்கும், யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருக்கும், எமோரியருடைய ராஜாவாகிய சீகோனின் ராஜ்யத்தையும், பாசானுடைய ராஜாவாகிய ஓகின் ராஜ்யத்தையும், அவைகளைச் சேர்ந்த தேசங்களையும் அவைகளின் எல்லையைச் சுற்றிலுமுள்ள பட்டணங்களையும் கொடுத்தான்.“**. இங்கு மோசே இஸ்ரவேல் மக்களில் ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதி கோத்திரத்தாருக்கு, அவர்கள் யோர்தானை கடக்கும் முன்பாகவே அவர்களுக்கு தாங்கள் அதுவரை பிடித்திருந்த இடங்களை பங்கிட்டு தருவதை காணலாம். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் தங்கள் சகோதரருக்கு, கானான் தேசத்தை சுதந்தரிக்க யுத்தசன்னதராய் புறப்பட்டு வந்து உதவ வேண்டும் என்பதையும் கட்டளையிடுகிறார் (**எண்ணாகமம் 32:28-32**). இவ்வாறாக இஸ்ரவேல் ஜனத்திற்காக எல்லாவற்றையும் திட்டமிட்டு ஒரு நல்ல தலைவனாய் தகப்பனாய் இருந்து வழிநடத்திய மோசே தனக்கென ஒன்றை மட்டும் தேவனிடத்தில் வேண்டினார்.

**“அக்காலத்திலே நான் கர்த்தரை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவரே, நீர் உமது அடியேனுக்கு உமது மகத்துவத்தையும் உமது வல்லமையுள்ள கரத்தையும் காண்பிக்கத் தொடங்கினீர்; வானத்திலும் பூமியிலும் உம்முடைய கிரியைகளுக்கும் உம்முடைய வல்லமைகளுக்கும் ஒப்பாகச் செய்யத்தக்க தேவன் யார்? நான் கடந்துபோய் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும் என்று வேண்டிக்கொண்டேன். கர்த்தரோ உங்கள் நிமித்தம் என்மேல் கோபங்கொண்டு, எனக்குச் செவிகொடாமல், என்னை நோக்கி: போதும், இனி இந்தக் காரியத்தைக்குறித்து என்னோடே பேசவேண்டாம். நீ பிஸ்காவின் கொடுமுடியில் ஏறி, உன் கண்களை மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் ஏறெடுத்து, உன் கண்களினாலே அதைப் பார்; இந்த யோர்தானை நீ கடந்துபோவதில்லை. நீ யோசுவாவுக்குக் கட்டளை கொடுத்து, அவனைத் திடப்படுத்திப் பலப்படுத்து; அவன் இந்த ஜனங்களுக்கு முன்பாகக் கடந்துபோய், அவனே நீ காணும் தேசத்தை அவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுப்பான் என்றார்.“ (உபாகமம் 3:23-28)**. இங்கு அவருடைய விருப்பம் எல்லாம் கானானுக்குள் சென்று பார்க்க வேண்டும் என்பதாகவே இருப்பதை

காணலாம். ஆகிலும் தேவ நியாயத்திற்கு கீழ்ப்படிந்து, தேவனுடைய தீர்ப்பை அவர் முழு மனதோடு ஏற்றுக்கொள்கிறார். மேலும் ஆண்டவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றியும் மோசேக்கு வெளிப்படுத்தினார். **உபாகமம் 18:17-19** வசனங்களில், **"அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: அவர்கள் சொன்னது சரியே. உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்."**. இங்கு **உன்னைப்போல** என்ற தேவனுடைய வார்த்தையானது, மோசேயை தேவன் எவ்வளவாய் கனப்படுத்தி, கிறிஸ்துவின் ஊழியத்திற்கு நிகராய் ஆண்டவர் கூறுகிறார் என்பதை காணலாம். மேலும் புதிய ஏற்பாட்டிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இதனை நினைவுபடுத்துவதை காணலாம் **(யோவான் 5:46)**. மேலும் மறுரூப மலையில் மோசே ஆண்டவரோடு பேசுவதும் **(மத்தேயு 17:3)**, மோசேயின் ஊழியம் புதிய ஏற்பாட்டிலும் தொடர்வதை காணலாம். மேலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் ஊழியத்தில் பலமுறை மோசேயை மேற்கோள் காட்டி பேசுவதை நாம் சுவிசேஷ புத்தகங்களில் காணலாம். இவ்வாறாக தன் ஊழியத்தின் இறுதி காலத்தை உணர்ந்த மோசே, இஸ்ரவேல் மக்களிடம் தனது இறுதிக்கால செய்தியை உரைப்பதை பின்வருமாறு காணலாம்.

**உபாகமம் 31:1-6** வசனங்களில் **"பின்னும் மோசே போய் இஸ்ரவேலர் யாவரையும் நோக்கி: இன்று நான் நூற்றிருபது வயதுள்ளவன்; இனி நான் போக்கும் வரத்துமாயிருக்கக்கூடாது; இந்த யோர்தானை நீ கடந்துபோவதில்லை என்று கர்த்தர் என்னோடே சொல்லியிருக்கிறார். உன் தேவனாகிய கர்த்தர்தாமே உனக்கு முன்பாகக் கடந்துபோவார், அவரே உனக்கு முன்னின்று, அந்த தேசத்தாரை அழிப்பார்; நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பாய்; கர்த்தர் சொன்னபடியே யோசுவா உனக்கு முன்பாகக் கடந்துபோவான். கர்த்தர் அழித்த எமோரியரின் ராஜாக்களாகிய சீகோனுக்கும், ஓகுக்கும், அவர்கள் தேசத்திற்கும் செய்ததுபோலவே அவர்களுக்கும் செய்வார். நான் உங்களுக்கு விதித்த கட்டளைகளின்படி அவர்களுக்குச் செய்வதற்கு கர்த்தர் அவர்களை உங்களுக்கு ஒப்புக்கொடுப்பார். நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று சொன்னான்."**. இங்கு மோசே சகலத்தையும் திட்டமும் தெளிவுமாக உணர்ந்தவராக, இஸ்ரவேல் மக்களுக்கு நடக்க போகிறவற்றை பற்றி கூறியுள்ளார். **வசனம் இரண்டில்**, இனி தான் அவர்களோடு வரப்போவதில்லை என்பதையும், யோர்தானை கடந்து அவர்கள் மாத்திரமே போகப் போகிறார்கள் என்பதையும், அதே நேரத்தில் **வசனம் மூன்றில்**, கர்த்தர்தாமே அவர்களுக்கு துணை நின்று அவர்களை தொடர்ந்து வழி நடத்துவார் என்பதையும், தன் ஸ்தானத்தில் தனக்கு பதிலாக யோசுவா இருப்பார் என்பதையும் தீர்க்கமாக கூறுகிறார். மேலும் **வசனம் 4-6 இல்** நிச்சயமாக ஆண்டவர் அவர்களுக்கு முன்பாக புறஜாதி மக்களை துரத்தி,

கானானை சுதந்தரிக்க செய்வார் என்பதையும் கூறுகிறார். மேலும், உபாகமம் 31:7,8 வசனங்களில், "பின்பு மோசே யோசுவாவை அழைத்து, இஸ்ரவேலர் எல்லாரும் பார்த்திருக்க, அவனை நோக்கி: பலங்கொண்டு திடமனதாயிரு; கர்த்தர் இவர்களுக்குக் கொடுப்பேன் என்று இவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்துக்கு நீ இந்த ஜனத்தை அழைத்துக்கொண்டுபோய், அதை இவர்கள் சுதந்தரிக்கும்படி செய்வாய். கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.". இங்கு இஸ்ரவேல் மக்களுக்கு வரும் காரியங்களை அறிவித்தது போல், யோசுவாவிற்கும் என்ன நடக்கும், அதற்கு அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை கூறுகிறார். இவ்வாறாக மோசே எல்லாவற்றையும் கூறின, "பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதோ, நீ மரிக்குங்காலம் சமீபித்திருக்கிறது; நான் யோசுவாவுக்குக் கட்டளை கொடுக்கும்படி, அவனை அழைத்துக்கொண்டு, ஆசரிப்புக் கூடாரத்தில் வந்து நில்லுங்கள் என்றார்; அப்படியே மோசேயும் யோசுவாவும் போய், ஆசரிப்புக் கூடாரத்தில் நின்றார்கள். கர்த்தர் கூடாரத்திலே மேகஸ்தம்பத்தில் தரிசனமானார்; மேகஸ்தம்பம் கூடார வாசல்மேல் நின்றது." (உபாகமம் 31:14,15).

உபாகமம் 31:24-30 வசனங்களில், "மோசே இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் முழுவதையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி முடித்தபின்பு, மோசே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவியரை நோக்கி: நீங்கள் இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தை எடுத்து, அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வையுங்கள்; அங்கே அது உனக்கு விரோதமான சாட்சியாயிருக்கும். நான் உன் கலகக்குணத்தையும் உன் கடினக் கழுத்தையும் அறிந்திருக்கிறேன்; இன்று நான் இன்னும் உங்களுடன் உயிரோடிருக்கையில், கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினீர்களே; என் மரணத்திற்குப்பின்பு எவ்வளவு அதிகமாய்க் கலகம்பண்ணுவீர்கள்! உங்கள் கோத்திரங்களிலுள்ள மூப்பர் உங்கள் அதிபதிகள் எல்லாருடைய காதுகளும் கேட்கத்தக்கதாக நான் இந்த வார்த்தைகளைச் சொல்லவும், அவர்களுக்கு விரோதமாக வானத்தையும் பூமியையும் சாட்சிவைக்கவும் அவர்களை என்னிடத்தில் கூடிவரச்செய்யுங்கள். என் மரணத்திற்குப்பின்பு நீங்கள் நிச்சயமாய் உங்களைக் கெடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட வழியை விட்டு விலகுவீர்கள்; ஆகையால், கடைசி நாட்களில் தீங்கு உங்களுக்கு நேரிடும்; உங்கள் கைக்கிரியைகளினாலே கர்த்தரைக் கோபப்படுத்தும்படிக்கு, அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வீர்கள் என்பதை அறிவேன் என்று சொல்லி, இஸ்ரவேல் சபையார் எல்லாரும் கேட்க மோசே இந்தப் பாட்டின் வார்த்தைகளை முடியும்வரையும் சொன்னான்.". இங்கு மோசே இம்மட்டும் தான் தன் வாயால் கூறின நியாயப்பிரமாண சட்டங்களை புத்தகமாக எழுதி, லேவியராகிய தேவ ஊழியத்தை செய்பவர்களிடம் கொடுத்து, அதை கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியின் பக்கத்தில் வைக்க சொல்கிறார். மேலும் வசனம் 27 இல் நான் உன் கலகக்குணத்தையும் உன் கடினக்

**கழுத்தையும் அறிந்திருக்கிறேன்; இன்று நான் இன்னும் உங்களுடன் உயிரோடிருக்கையில், கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினீர்களே; என் மரணத்திற்குப்பின்பு எவ்வளவு அதிகமாய்க் கலகம்பண்ணுவீர்கள்!**. இங்கு அவர் இஸ்ரவேல் மக்களை குறை கூறுவதைப் போல் காணப்பட்டாலும், உண்மையில் அவருடைய தகப்பனுடைய உள்ளம் இங்கு வெளிப்படுகிறது. ஒருபுறம் தெளிவாக இஸ்ரவேல் மக்கள் வருங்காலங்களிலும் தேவனை விட்டு விலகிப் போவார்கள் என்பதை அறிந்திருந்தார். அதே நேரத்தில் அவர்களுக்காக பரிந்து பேசி அவர்களை நடத்த, தான் இனி இருக்கப் போவதில்லையே என்று அங்கலாய்பே, அவரை இவ்வாறு பேச செய்தது. அவர் கூறியவாறே, அவருக்கு பிறகு யோசுவாவின் காலத்திலும், நியாயாதிபதிகள் மற்றும் ராஜாக்களின் காலத்திலும், மக்கள் ஆண்டவரை விட்டு போனதை நாம் வேதத்தில் காணலாம். மோசே அவர்களை ஒரு நல்ல தலைவனாகவும் தகப்பனாகவும் இருந்து வழிநடத்தியது போல் பிறகு யாரும் எழும்பவில்லை என்பதையும் வேதத்தில் காணலாம்.

**உபாகமம் 32:45-47** வசனங்களில், **“மோசே இந்த வார்த்தைகளையெல்லாம் இஸ்ரவேலர் யாவருக்கும் சொல்லி முடித்தபின்பு, அவர்களை நோக்கி: இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் உங்கள் பிள்ளைகள் செய்யும்படி கவனமாயிருக்க, நீங்கள் அவர்களுக்குக் கற்பிக்கும்படி, நான் இன்று உங்களுக்குச் சாட்சியாய் ஒப்புவிக்கிற வார்த்தைகளையெல்லாம் உங்கள் மனதிலே வையுங்கள். இது உங்களுக்கு வியர்த்தமான காரியம் அல்லவே; இது உங்கள் ஜீவனாயிருக்கிறது, நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி யோர்தானைக் கடந்துபோய்ச் சேரும் தேசத்தில் இதினால் உங்கள் நாட்களை நீடிக்கப்பண்ணுவீர்கள் என்றான்.“**. இங்கு மறுபடியும், மறுபடியும் இஸ்ரவேலர், தேவனின் நியாயப்பிரமாண கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும், அதை அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் கூற வேண்டும். மேலும் அதுவே அவர்களுக்கு அவர்கள் சுதந்தரிக்கப் போகும் கானான் தேசத்தில் நன்மையை தரும் என்பதை, இறுதியாக உறுதியாக கூறி அவர்களை எச்சரிக்கிறார். **உபாகமம் 32:48-52** வசனங்களில், **“அந்த நாளிலேதானே கர்த்தர் மோசேயை நோக்கி: நீ எரிகோவுக்கு எதிரான மோவாப் தேசத்திலுள்ள இந்த அபாரீம் என்னும் மலைகளிலிருக்கிற நேபோ பர்வதத்தில் ஏறி, நான் இஸ்ரவேல் சந்ததியாருக்குக் காணியாட்சியாகக் கொடுக்கும் கானான் தேசத்தைப் பார்; நீங்கள் சீன் வனாந்தரத்திலுள்ள காதேசிலே மேரிபாவின் தண்ணீர் சமீபத்தில் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே என்னைப் பரிசுத்தம்பண்ணாமல், அவர்கள் நடுவே என் கட்டளைகளை மீறினதினாலே, உன் சகோதரனாகிய ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரித்து, தன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்பட்டதுபோல நீயும் ஏறப்போகிற மலையிலே மரித்து, உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய். நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்போகிற எதிரேயிருக்கிற தேசத்தை நீ பார்ப்பாய்; ஆனாலும் அதற்குள் நீ பிரவேசிப்பதில்லை என்றார்.“**. இங்கு ஏற்கனவே ஆண்டவர் கூறியபடி மோசேயின் மரணத்திற்கு முன்னர், அவர் அபாரீம் மலையில் ஏறி, நேபோ பர்வதத்தில் இருந்து கானான் தேசத்தை பார்க்கவும், அத்தோடு அவருடைய சரீர பிரகாரமான ஓட்டம் முடியவும்

செய்யும் என்பதை கூறுகிறார். **“தேவனுடைய மனுஷனாகிய மோசே தான் மரணமடையுமுன்னே இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்த ஆசீர்வாதமாவது:“ (உபாகமம் 33:1)**. **ஆதியாகமம் 49 ஆம்** அதிகாரத்தில் இஸ்ரவேலரின் 12 கோத்திரத்தை குறித்து எப்படி யாக்கோபு தீர்க்க தரிசனம் உரைத்தாரோ அதேபோல மோசேயும் இஸ்ரவேல் மக்களை குறித்து உரைத்த தீர்க்க தரிசனத்தை **உபாகமும் 33 ஆம்** அதிகாரத்தில் காணலாம்.

இறுதியாக, **“பின்பு மோசே மோவாபின் சமனான வெளிகளிலிருந்து எரிகோவுக்கு எதிரான நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறினான்; அப்பொழுது கர்த்தர் அவனுக்கு, தாண்மட்டுமுள்ள கீலேயாத் தேசம் அனைத்தையும், நப்தலி தேசம் அனைத்தையும், எப்பிராயீம் மனாசே என்பவர்களின் தேசத்தையும், கடைசிச் சமுத்திரம்வரைக்குமுள்ள யூதா தேசம் அனைத்தையும், தென்புறத்தையும், சோவார் வரைக்குமுள்ள பேரீச்சமரங்களின் பட்டணம் என்னும் ஊர்முதற்கொண்டு எரிகோவின் பள்ளத்தாக்காகிய சமனான பூமியையும் காண்பித்தார். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இதுதான், இதை உன் கண் காணும்படி செய்தேன்; ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்துபோவதில்லை என்றார்.“ (உபாகமம் 34:1-4)**. மோசே ஒரு சிறந்த ஊழியத்தை செய்த பொழுதும், ஒரு சிறு தவற்றால் அவரால் கானான் தேசத்திற்குள் செல்ல முடியாவிட்டாலும், அதை அவர் தன் மாம்ச கண்களால் கண்ணார காண தேவன் வழி செய்தார். மோசே அதை கண்டு களிகூர்ந்தார். **“அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான்.“ (உபாகமம் 34:5,6)**. இவ்வாறாக ஒரு அற்புதமான ஊழியத்தை செய்த மோசேயின் ஊழியம் ஓர் முடிவிற்கு வந்தது. இங்கு அற்புதமான காரியம் என்னவென்றால் அவருடைய மாம்ச சரீரத்தை கூட தேவனே எடுத்துக்கொண்டார். ஒரு சிநேகிதன் மற்றொரு சிநேகிதனுடன் பேசுவது போல, மோசே தன் மாம்ச சரீரத்தில் இருந்த பொழுதே தேவனோடு உறவாடினார். தேவனுடைய மகிமை பிரத்தியட்சமாய் அவருடைய முகத்தில் பிரகாசித்தது. இப்படிப்பட்ட மகிமையான அனுபவங்களை, தன் மாம்சரீரத்தில் இருந்த பொழுதே பெற்ற மோசேயின் சரீரத்தை தேவனே பாதுகாத்தார். **உபாகமம் 34:7** கூறுகிறது, **“மோசே மரிக்கிறபோது நூற்றிருபது வயதாயிருந்தான்; அவன் கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை.“**. ஆம், தேவனுடைய மகிமை தங்கிய மோசேயின் மாம்ச சரீரத்தின் பெலன் கூட குறையாமல் ஆண்டவர் பார்த்துக் கொண்டார். தன் வாழ்வின் இறுதிவரை முழு பெலத்தோடு ஊழியத்தை செய்தார். **உபாகமம் 34:8** இல், **“இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமனான வெளிகளில் மோசேக்காக முப்பது நாள் அழுதுகொண்டிருந்தார்கள்; மோசேக்காக அழுது துக்கங்கொண்டாடின நாட்கள் முடிந்தது.“**. இங்கு மோசே மரித்துப்போனதை அறிந்த அவர்கள் அவருக்காக 30 நாள் துக்கம் கொண்டாடினர். **உபாகமம் 34:9** கூறுகிறது, **“மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை**

**வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்; இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.“**. இங்கு மோசேயின் மேலிருந்த அபிஷேகம் யோசுவாவிற்குள் கடந்து வந்ததை கண்ட மக்கள், மோசே கூறியபடியே யோசுவாவிற்கு கீழ்ப்படிகிறதை காணலாம்.

இறுதியாக, **உபாகமம் 34:10-12** வசனங்களில், **“மோசே எகிப்துதேசத்திலே பார்வோனுக்கும், அவனுடைய எல்லா ஊழியக்காரருக்கும், அவனுடைய தேசம் அனைத்திற்கும் செய்யும்படி கர்த்தர் அவனை அனுப்பிச் செய்வித்த சகல அடையாளங்களையும் அற்புதங்களையும், அவன் இஸ்ரவேலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாய்ச் செய்த சகல வல்லமையான கிரியைகளையும், மகா பயங்கரமான செய்கைகளையும் பார்த்தால், கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல, ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும்.“**. இங்கு மோசேயின் ஊழியத்திற்கான முடிவுரையை வேதமே மேற்கண்ட வசனங்களில் அருமையாக தருகிறது. ஆம் எகிப்தில் பார்வோன் முன்பாக ஆரம்பித்த அவருடைய ஊழியம் 40 வருட காலமாக, இஸ்ரவேல் மக்கள் மத்தியில் தொடர்ந்தது. இந்த 40 வருட காலத்தில், தேவனின் மூலமாக அவருடைய கட்டளையின்படியே அவர் செய்த அற்புதங்களும், வல்லமையான செயல்கள் யாவும், இஸ்ரவேல் மக்களின் விடுதலைக்காகவும், அவர்கள் கானான் சென்று சேர்வதற்காகவுமே நடத்தப்பட்டது. ஆம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பாவ உலகாகிய இவ்எகிப்தில் இருந்து நம்மை விடுவித்து, இவ்வனாந்தர பாதையான, இவ்வுலக வாழ்க்கையின் வழியாய் நம்மை பரம கானானான பரலோக ராஜ்யத்தில் சேர்க்கவே வந்தார். இறுதியாக வசனம் 12 இல் **கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல** என்ற வார்த்தை மிகவும் அற்புதமானது. மனிதர்கள் யாருக்கும் கிடைக்காத பாக்கியத்தை மோசே பெற்றிருந்ததை இது குறிப்பிடுகிறது. **எபிரெயர் 3:5,6** வசனங்களில், **“சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்;“**. ஆம் உண்மையில் இஸ்ரவேல் மக்களுக்கு மோசேயை காட்டிலும் சிறந்த தலைவன் பழைய ஏற்பாட்டு காலத்தில் கிடைக்கவில்லை. ஆனால், நமக்கோ மோசேயை காட்டிலும் பெரியவரான கிறிஸ்துவே, தேவனுடைய குமாரனாக, நம்மையும் தேவனுடைய பிள்ளைகளாக, பரலோக ராஜ்ஜியத்திற்கு கூட்டி சேர்க்கிறவராக கிடைத்துள்ளார். மோசே ஒரு நல்ல தலைவனாக, தகப்பனாக, தீர்க்கதரிசியாக, ஆசாரியனாக, பரிந்து பேசுகிறவராக, இஸ்ரேல் மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்தார். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் இன்று நம் அனைவருக்கும் அப்படியே இருக்கிறார். இப்படியாக கிறிஸ்துவுக்கு நிழலாக பழைய ஏற்பாட்டில், இஸ்ரேல் மக்களை வழிநடத்திய மோசேக்காக ஆண்டவரை துதிப்போமாக. மோசேயை காட்டிலும் மேலானவரான கிறிஸ்துவையே நமக்காக தந்ததற்காகவும் ஆண்டவரை துதிப்போமாக. ஆமென், அல்லேலூயா.

## 137. இழந்துபோனதைத் தேடவும்

**இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார். (லூக்கா 19:10)**




மேற்க்காண்கிற இவ்வசனம், ஆண்டவராலேயே ஆயக்காரனாகிய சகேயுவின் வீட்டில் தங்கியிருக்கும் பொழுது கூறப்பட்டது. இங்கு முக்கியமாக, நாம் கவனிக்க வேண்டியது **இழந்துபோனதை** என்ற வார்த்தையாகும். ஆம், முன்னர் அது ஆண்டவருக்கு உரியதாய்தான் இருந்தது. ஆனால் இடையில் மனிதனின் பாவத்தினால், அவனே ஆண்டவரை விட்டு தூரம் போய், தொலைந்து போனான். ஆண்டவரை மறந்தும் போனான். ஆதாம் ஏவாள் முதல், பூமியில் உள்ள ஒவ்வொரு ஜீவராசியும் ஆண்டவரின் படைப்பே. வேதம் கூறுகிறது, **"சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது;"** (ரோமர் 11:36). ஆம் சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கே சகலமும் உரியது. ஆனால் மந்தையை விட்டு பிரிந்து, தொலைந்து போன நிலையில் மனிதன் உள்ளான். பாவம், சாபம், மரணம் ஆகியவை இல்லாதவனாகத்தான் ஆண்டவர் மனிதனை சிருஷ்டித்தார். ஆனால் மனிதன் தனது தவற்றின் மூலம் இவற்றை உடையவனானான். தேவனுடைய அனாதித் திட்டத்தில் (முந்தின நித்தியம் - ஆதியாகமம், பிந்தின நித்தியம் - வெளிப்படுத்தின

விசேஷம்) இவை இல்லை. இந்த பாவ, சாப, மரணத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டெடுக்கவே அவர்தம் ஜீவனை தந்தார். இழந்து போன அனைத்தையும் திருப்பிக் கொள்ளவே அவர் விரும்புகிறார். அதற்காகவே இழந்து போனவைகளை, காணாமல் போனவைகளை, அவரே தேடி வந்தார். ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தருமாகிய அவர் தாமே, மனிதனைத் தேடி வந்தார்.

வேதம் தெளிவாக கூறுகிறது **"அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." (லூக்கா 15:7)**. என்று. **"இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்றார்." (மாற்கு 2:17)** என்று. ஆம் பாவத்தில் மூழ்கியிருக்கும் மனுக்குலம் அவரை தேடவில்லை, அறியவில்லை. சிலர் கல்லும் மண்ணும் தங்களை காக்கும் என்று அதை தெய்வமாக்கினர். பலர் பாவம், சாபம், மரணம், நித்திய வாழ்வு என்பதை பற்றிய உணர்வு அற்றவர்களாக உள்ளனர். எனவே காணாமல் போன ஒரு ஆட்டை, காணாமல் போன ஒரு வெள்ளி காசை, தேடித் திரிவது போல் ஆண்டவர் ஒவ்வொருவரையும் தேடி வருகிறார். ஒவ்வொரு தனி மனித இரட்சிப்பையும் குறித்து ஆண்டவர் கரிசனையுள்ளவராய் இருக்கிறார். பூமியின் இந்த நொடி வரை, மனுக்குலத்திற்கு வாய்ப்பு கொடுத்து, அவர்கள் கண்டுபிடிக்கப்பட (இரட்சிக்கப்பட) பொறுமையாய் கிரியை செய்கிறார்.

நாம் இங்கு **லூக்கா 19ஆம்** அதிகாரத்தில், சகேயு, சகமனிதரால் கூட, ஆயக்காரனாய் இருந்தபடியால், பாவியான மனுஷன் என்று அழைக்கப்பட்டான் **(லூக்கா 19:7)**. அப்படிப்பட்டவனை பார்த்து, **"இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்து பார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்." (லூக்கா 19:5)**, என்று ஆண்டவரே அவனைத் தேடிப் போவது, மனிதராகிய நம்மால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகும். மகா பரிசுத்தமுள்ள ஆண்டவர், பாவியாகிய மனிதனை தானாகவே தேடிச்சென்று அவன் தன்னுடையவனாக வேண்டும் என்று முயல்வது ஆச்சரியமான ஒன்றாகும். ஆம் **"அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்." (லூக்கா 19:7)**. ஆனால் சகேயுவோ, **"சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்." (லூக்கா 19:8)**. இங்கு சகேயு தன்னுடைய பாவத்தை உணர்ந்து கொண்டான். அதை சரி செய்ய என்ன செய்ய வேண்டும் என்பதையும் உணர்ந்து, அதை அறிக்கையிடுகிறான்.

அப்பொழுது ஆண்டவராகிய, **“இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. “ (லூக்கா 19:9)** என்றார். ஆம் பாவியான மனுஷனிடத்தில் தங்க போனார் என்று முறுமுறுத்தவர்கள்தான், தாங்களும் பாவிகளே என்ற உணர்வை அற்றவர்களாய் உள்ளனர். **லூக்கா 19:3,4 வசனங்களில்** சகேயு **“இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்.“**. ஆம், அவன் உள்ளத்தின் வாஞ்சையை அவர் அறிந்தார். தாமே தேடிவந்து மீட்டார். சமாரிய ஸ்திரீ ஆனாலும் சரி, பாவியாகிய ஸ்திரீ ஆனாலும் சரி, ஏழு பிசாசுகள் பிடித்திருந்த மகதலேனா மரியாள் ஆனாலும் சரி, விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிக்கப்பட்ட ஸ்திரீ ஆனாலும் சரி, சிலுவையில் ஆண்டவருடனே கூட அறியப்பட்ட கள்ளன் ஆனாலும் சரி, யாரானாலும் எப்படிப்பட்ட சூழ்நிலையானாலும், அவர்களை தேடி வந்த இரட்சித்தவர் நம் ஆண்டவர் ஒருவரே. ஆம் நாம் செய்யவேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான், அவர் நம்மை தேடி வந்தார், நம்மை இரட்சிக்க வந்தார் என்பதை மாத்திரம் விசுவாசித்து, அதற்கு கீழ்படிந்து, இனி பாவம் செய்யாதே, என்னை விட்டு தூரம் போகாதே என்று ஆண்டவர் தரும் எச்சரிப்பை பெற்று, ஆண்டவர் கொடுத்த இரட்சிப்பை இழந்து போகாமல் அதை காத்துக் கொண்டு, நித்திய ஜீவனை, புதிய எருசலேமாகிய பரலோக வாழ்வை பெற்றுக் கொள்வதே, நம் ஒவ்வொருவர் பற்றியும் ஆண்டவருடைய திட்டமாகும். எனவே தான் வேதம் கூறுகிறது, **“நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. “ (1 யோவான் 4:10)**. இப்படிப்பட்ட அன்பை, கிருபையை தயவை பற்றி கொண்டவர்களை பற்றி (சகேயு, சமாரிய ஸ்திரீ, சிலுவையில் அறையப்பட்ட கள்ளன்) நாம் **கிருபையைப் பற்றிக் கொண்டவர்கள் - பாகம் 1 முதல் 4 வரை** உள்ள தியானங்களில் தியானத்துள்ளோம். தயவு கூர்ந்து அவற்றை தியானிக்கவும். இவ்வாறாக தொலைந்து போன நம்மை தேடி வந்து இரட்சித்த, ஆண்டவரை தாமே நாம் உறுதியாக பற்றி கொள்வோமாக. அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவது போல், **“கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக் கிறோமே.“ (ரோமர் 8:36,37)** என்ற தீர்மானத்தோடு, விசுவாசத்தோடு, அவரையே சார்ந்து வாழ்வோமாக. நம்மை தேடி வந்த அவர், அவரோடு என்றென்றும் இருக்க நம்மை சேர்த்துக் கொள்ளவும் வருகிறார், ஆயத்தமாய் காத்திருப்போம். ஆமென், அல்லேலுயா.

## 138. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை

## நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். (1 கொரி 12:27)




அப்போஸ்தலராகிய பவுல் **எபேசியர் 5:23** இல் **"கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல"** என்று குறிப்பிடுகிறார். ஆம் சபையாகிய சரீரத்திற்கு தலை கிறிஸ்துவே. அப்படிப்பட்ட சரீரமாகிய சபை எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் என்பதையே அப்போஸ்தலனாகிய பவுல் **1 கொரிந்தியர் 12 ஆம் அதிகாரத்தில்** விளக்கியுள்ளார். அவற்றை நாம் ஒவ்வொன்றாய் தியானிப்போமாக.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கங்களாய் (அவயவங்களாய்) இருக்கிற ஒவ்வொருவர் பற்றியும் ஆண்டவருக்கு ஓர் திட்டம் உண்டு. ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் அருளிய கிருபைகளும், வரங்களும், அழைப்பும், வித்தியாசமானது. இங்கு பவுல் கொரிந்து சபையை பற்றி மட்டும் கூறவில்லை. உலகளாவிய கிறிஸ்துவின் சபையை பற்றியே பேசுகிறார். **1 கொரிந்தியர் 12:13** கூறுகிறது **"நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். "**. இப்படியாக, இவ்வுலக பிரகாரமாகவே பல்வேறு கண்டங்களில், பல்வேறு நாடுகளில், பல்வேறு கலாச்சார பிண்ணணியில், வாழ்க்கை முறையில், பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் கூட்டமானாலும், அவர்கள் அனைவரும் தலையாகிய கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாய் உள்ளனர். இவ்வுலகில் அவர்கள் வாழும் வாழ்க்கை சூழ்நிலைகள் வித்தியாசமாய் இருந்தாலும், அனைவரும் கிறிஸ்துவின் சிந்தை உடையவர்களாகவே உள்ளனர். ஆம் தலையாகிய கிறிஸ்து எதை சிந்திக்கிறாரோ அதை செயல்படுத்தும் கருவிகளாக (அங்கங்களாகவே) சபையாகிய நாம் ஒவ்வொருவரும் உள்ளோம்.

**1 கொரிந்தியர் 12:12** கூறுகிறது, **“எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.“**. இங்கு அவயவங்கள் அனேகமாக இருந்தாலும், அவற்றின் செயல்பாடு, உருவம், வித்தியாசமாய் இருந்தாலும், அவையெல்லாம் சேர்ந்து ஒரே சரீரமாக பார்க்கப்படும் பொழுது, ஒன்றாக ஒரே வேலையை இசைந்து செய்யக்கூடியதாய் உள்ளது. ஒவ்வொரு அவயவமும் தான் எதற்காக சரீரத்தின் அவயவமாய் இருக்கிறதோ, அதற்கான வேலையை செய்வதுபோல், சபையின் ஒவ்வொரு அங்கமும், தன்னை பற்றிய தேவ திட்டத்தை உணர்ந்து, சபையில் தான் செய்ய வேண்டிய வேலையை பொறுப்புடன் செய்ய வேண்டும். **1 கொரிந்தியர் 12:14** கூறுகிறது, **“சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது.“**. ஆம் சரீரத்திற்கு எவ்வாறு பல்வேறு அங்கங்கள் தேவைப்படுகிறதோ, சபைக்கு பல்வேறு ஊழியங்களை நிறைவேற்ற, பல்வேறு வரங்களை பெற்றவர்கள் தேவைப்படுகின்றனர். **1 கொரிந்தியர் 12:18** கூறுகிறது, **“தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.“**. தேவன் தமது சித்தத்தின்படியே அவயவங்கள் ஒவ்வொன்றையும், எவ்வாறு சரீரத்தில் ஒவ்வொரு பணிக்கென வைத்திருக்கிறாரோ, அதைப்போலவே சபையாகிய சரீரத்திலும், அவயவங்களான நம் ஒவ்வொருவரையும் பிரத்தியேகப் பணிக்கென நியமித்திருக்கிறார். எனவே இப்படிப்பட்டதான சபை எப்படி இருக்க வேண்டும் என்பதையும் கீழ்காணும் வசனங்கள் நமக்கு தெரிவிக்கின்றன.

### (1) தனக்கு கொடுக்கப்பட்ட பணியை ஏற்றுக்கொள்ள வேண்டும்:

**“காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ?“, (1 கொரிந்தியர் 12:15,16)**, போன்ற வார்த்தையானது சபையின் அங்கமாய் இருக்கக்கூடிய எவரும், தான் எந்த நிலையில் அழைக்கப்பட்டிருக்கிறாறோ, அதை தேவ சித்தமாக, திட்டமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை விட்டு, அதைவிட மற்றது தான் பெரியது என்று எண்ணாமல், தான் எப்படிப்பட்ட அவயவமாய் சரீரத்தில் இருந்தாலும், எந்த வேலையை செய்ய அது சரீரத்தில் இருக்கிறதோ, அதை செய்ய வேண்டும். ஆனால் இன்றோ பலர், பிரபலமாய் இருப்பதையும், அனேக மக்கள் நடுவில் ஊழியம் செய்வதையுமே, பெரியதாக எண்ணுகின்றனர். நமது ஆண்டவரோ, மக்கள் ஒருவரை ஒருவர் மிதிக்கத்தக்கதாய், கூட்டமாய் வந்தவரிடமும் பிரசிங்கத்தார், அற்புதம் செய்தார். அதே நேரத்தில் அவர் தனி நபர்களையும் தேடிச்சென்று இரட்சித்து, விடுதலை ஆக்கினார். உதாரணமாக, சகேயு, யவீருவின் மகள், நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன், லாசரு, சமாரிய ஸ்திரீ என்று வேதாகமத்தில் பல தனி நபர்களுக்காகவும் ஆண்டவர் செயல்பட்டார். மேலும் சரீரத்தில் அங்கமாய் இருப்பதை மேன்மையாக எண்ணி வாழ்வோர், நிச்சயமாக தாம் எப்படிப்பட்ட அங்கமாக இருந்தாலும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வர்.

(2) உயர்வு தாழ்வு பாராமல் இணைந்து பணி செய்தல் வேண்டும்:

1 கொரிந்தியர் 12:21 கூறுகிறது, **“கண்ணானது கையைப்பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும்; தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது.“**. ஆம் சபையில் உள்ள எந்த ஊழியமும், ஏற்றத்தாழ்வின்றி, இணைந்து செயல்பட வேண்டும். அதை விட்டு, தான் செய்யும் செயல் தான் பெரியது என்று எண்ணி மற்றவற்றை தாழ்வாக நினைத்தால் கூடாது. 1 கொரிந்தியர் 12:22 கூறுகிறது, **“சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது.“**. ஆம் பார்ப்பதற்கு சிலர் செய்யும் காரியம் சிறியதாக தோன்றலாம், ஆனால் அவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக உள்ளது. மேலும் ஆண்டவர் தமது பணியினை செய்வோரின் உள்ளத்தை பார்க்கிறாரேயொழிய, அவர்கள் செய்யும் அளவை அல்ல. அதனால்தான் ஏழை விதவை காணிக்கை பெட்டியில் போட்ட இரண்டு காசை ஆண்டவர் மேன்மையாக எண்ணினார்.

3. ஒருவருக்கொருவர் அக்கறை கொள்ள வேண்டும்:

1 கொரிந்தியர் 12:25 கூறுகிறது, **“சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார்.“**. இங்கு ஆண்டவர் விரும்புவதெல்லாம், சரீரத்தில் எந்தவித பிரிவினை இருக்கக் கூடாது என்பதே. ஆம் ஆண்டவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலர்களுக்காக, பிதாவிடம் வேண்டிக் கொண்ட பொழுது கூட, அவர்கள் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதையே விரும்பினார். இன்று சபையிலும் அப்படியே இருக்க ஆண்டவர் விரும்புகிறார். **ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு,** என்பது அவரவர் அவருடைய வேலையை பார்ப்பதல்ல, தேவனுடைய அனாதித் திட்டத்தின் பணி எவ்வித தடையும் இல்லாமல் நடைபெறும் படியாய், ஏதாவது ஒரு அங்கம் / பணி பாதிக்கப்படும் பொழுது, மற்ற அங்கங்கள் அந்த தடைப்பட்ட பணி தொடர்ந்து நடைபெற உதவ வேண்டும். உதாரணமாக சுவிசேஷப் பணிகள் தங்கு தடையின்றி நடைபெற சபை ஊழியங்கள் அவற்றை தாங்க வேண்டும். ஏனெனில் சுவிசேஷ ஊழியம் தடைப்பட்டால் அது சபையின் வளர்ச்சியை பாதிக்கும்.

மேலும் 1 கொரிந்தியர் 12:26 கூறுகிறது, **“ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.”**. ஆம், கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்கள் ஒவ்வொன்றும், பாடுகளானாலும் சரி, மகிமையானாலும் சரி, அவற்றை இணைந்தே அனுபவிக்க அழைக்கப்பட்டது. ஆனால் ஆதி அப்போஸ்த காலத்தில் இருந்தே சபையில் வேற்றுமைகள் இருந்தன. அவற்றை சரி செய்வதை, நாம் பவுலின் நிருபங்களிலும் மற்றும் மற்ற அப்போஸ்தலர்களின் நிருபங்களிலும் காணலாம். இன்றும் இப்படிப்பட்ட காரியங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சரி செய்யப்பட வேண்டும். அன்று வறுமையில், பஞ்சத்தில்

இருந்த சபைகளுக்கு உதவ, அப்போஸ்தலராகிய பவுலே பிற சபைகளில் இருந்து தரும பணத்தை சேகரித்து, அதை தேவைப்படும் சபைகளுக்கு அனுப்பினார். இப்படியாக ஒருவரை குறித்து மற்றொருவர் அக்கறைப்படவும், அதற்கான காரியங்களை செயல்படுத்தவும் ஆண்டவர் விரும்புகிறார்.

**அப்போஸ்தலர் 2:44,45** இல், **"விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்."**. ஆதி அப்போஸ்தல காலத்திலிருந்தே, சரீரமாகிய சபையானது சகலத்தையும் பொதுவாக வைத்து அனைவரும் பயன்பெறும் படியாய் செயல்பட்டது. அதனால் தான் அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் வாழ முடிந்தது (**அப்போஸ்தலர் 2:46**). அந்த ஒரு மனம் கிறிஸ்துவின் சிந்தையை பிரதிபலித்தது. இன்றும் ஆண்டவர் இப்படிப்பட்ட சபையையே தம் வருகையில் எதிர்பார்த்து கொண்டிருக்கிறார். எனவே கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாய் உள்ள நாம் ஒவ்வொருவரும், மேற்கண்ட வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடி, அதே நேரத்தில் சக அங்கங்களாயிருக்கிற மற்றவர் மீதும் அக்கறை உள்ளவர்களாய், அவர்கள் குறைச்சலில் உதவி, அவர்கள் தேவைகளை சந்தித்து, அவர்களும் கிறிஸ்துவின் சித்தத்தை / திட்டத்தை நிறைவேற்ற உறுதுணையாய் இருந்து, ஒரே சரீரமாய் கிறிஸ்துவாகிய தலையோடு என்றென்றும் ஒரே சிந்தையாய் இணைந்திருப்போமாக. ஆமென், அல்லேலூயா.